டாக்டர் தங்கராஜன்

இந்திய குடும்பச் சட்டம் II

Family Law in India - II

ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ்

இந்திய குடும்பச் சட்டம் II

Family Law in India II

பி.ஆர்.ஜெயராஜன்

M.L., M.B.A., P.G.Dip.in A.D.R.

வழக்குரைஞர்

மற்றும் சட்டக்கல்வியாளர்.

வெற்றிகரமான எட்டாம் பதிப்பில்.....

ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ்,

69/42 - சி, மீனாட்சி நகர், அஸ்தம்பட்டி,

சேலம் 636007.

பொருளடக்கம்

பகுதி - I
இந்துச் சட்டம்
[Hindu Law]

1. இந்து கூட்டுக் குடும்பமும் பங்குரிமை அமைப்பும் [Hindu Joint Family and Coparcenary] 3

- இந்து கூட்டுக் குடும்பமும் பங்குரிமை அமைப்பும் 3
  - இந்து கூட்டுக் குடும்பம் - தோற்றம் 4
  - மிதாக்ஷரா சட்டம் கூறும் பங்குரிமை 5
  - பங்குரிமையர்களைக் காட்டும் வரைபடம் 5
  - பங்குரிமைக்குள் பங்குரிமை - வரைபட விளக்கம் 6
- கூட்டுக் குடும்பச் சொத்து (அல்லது) பங்குரிமைச் சொத்து மற்றும் தனிச் சொத்து (அல்லது) சுய சம்பாத்தியச் சொத்து 7
  - கூட்டுக் குடும்பச் சொத்து (அல்லது) பங்குரிமைச் சொத்து 4
  - தனிச் சொத்து (அல்லது) சுய சம்பாத்தியச் சொத்து 8
  - கூட்டுக் குடும்பம், பங்குரிமை - வேறுபாடுகள் 9
  - பங்குரிமைச் சொத்தில் பங்குரிமையர் ஒருவருக்குள்ள உரிமைகள் 10
- பரம்பரைச் சொத்து 10
- தடையற்ற மற்றும் தடையுள்ள மரபுரிமை 11
- 1930-ன் இந்து கல்விப் பயன்கள் சட்டம் 13
- கர்த்தா 15
  - கர்த்தா (அல்லது) நிருவாகி 17
  - யார் கர்த்தவாக இருக்க முடியும்? 17
  - கர்த்தாவின் பணிகள் 18
  - கர்த்தாவிற்கு வருமானத்தில் உள்ள உரிமை 18
  - பணம் கடன் பெறுவதில் கர்த்தாவின் பங்கு 18
  - கர்த்தாவின் அதிகாரங்கள் 19
  - கூட்டுக் குடும்ப கணக்கு வழக்கில் கர்த்தாவின் கடமை 22

2. கூட்டுக் குடும்பத்தில் கடனும் மாற்றாக்கமும் [Debts and Alienation in Joint Family] 23

- மதக் கடமை 23

- மதக் கடமையின்படி கட்டும் கடன் அல்லது அறக் கடப்பாடு 24
- மகனின் பொறுப்பு நிலை 25
- மதக் கடமையின்படி கட்டும் கடனால் ஏற்படும் விளைவுகள் 26

- அவ்வியவகாரிகா கடன் 17

- முன்கடன் 17

3. பாகப்பிரிவினை [Partition] 23

- பாகப்பிரிவினை என்பதன் பொருள் 29
- பாகப்பிரிவினை எப்பொழுது ஏற்படுகிறது? 30
- பாகப்பிரிவினையை ஏற்படும் பல்வேறு முறைகள் 30
- பாகப்பிரிவினை என்பதன் பொருள் 29
- தாயின் கருவில் இருக்கும் மகனும் பாகப்பிரிவினையும் 32
- பாகப்பிரிவினையின் விளைவுகள் 33
- மீண்டும் சேருதல் 34
- பாகப்பிரிவினையை மீண்டும் கிளறுதல் 36
- பிரிக்க முடியாத சொத்து 37

4. சமய மற்றும் அறப்பயனுக்கான அறக்கட்டளை [Religious and Charitable Endowments] 39

5. இந்து மரபுமுறை இறங்குரிமைச் சட்டம் [The Hindu Law of Inheritance] 41

- அ. 1956-ஆம் ஆண்டில் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு இருந்த இந்து மரபுமுறை இறங்குரிமையின் நிலை [தொகுக்கப்படாத (பழைய) சட்டம்] **41**

- இந்து மரபுமுறை இறங்குரிமையின் முந்தய நிலை 41

- அடிப்படைக் கோட்பாடு 42
- "சபிண்டா" - மிதாக்ஷரா மற்றும் தாயபாகா முறையின் மாறுபட்ட விளக்கம் 42
- மிதாக்ஷரா முறையில் பங்கு பெறும் வாரிசுகள் 43
- சபிண்டர்கள் மத்தியில் உரிமை இறக்கம் 44
- சமநோடகாக்கள் மத்தியில் உரிமை இறக்கம் 48

- பங்குக்கள் மத்தியில் உரிமை இறக்கம் 49
- தாயபாக முறை வாரிசுரிமை இறக்கம் 50
- இறங்குரிமையில் மிதாக்ஷரா முறைக்கும், தாயபாக முறைக்கும் உள்ள வேறுபாடுகள் 52
- இறங்குரிமைக் கோட்பாடுகள் குறித்த இன்றைய நிலை 54

- ஆ. 1956-ஆம் ஆண்டில் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு இந்துக்களின் மரபுமுறை இறங்குரிமை [தொகுக்கப்பட்ட சட்டம்] 55

- 1956-ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டம் - பொதுவாகத் தெரிந்து கொள்ள வேண்டியவை 55
- தமிழக அரசின் சட்டத் திருத்தம் 58
- இந்து இறங்குரிமையின் பொதுக் கோட்பாடுகள் 60
- 1956-ன் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் சிறப்பம்சங்கள் 65
- இந்துக்களின் வாரிசுரிமையில், 1956-ன் இந்து இறங்குரிமைச் சட்டம் கொண்டு வந்த மாற்றங்கள் 68
- பிரிவு 6-ன் கீழ் மிதாக்ஷரா பங்குரிமைச் சொத்தின் இறங்குரிமை 72
- அலிய சந்தானச் சட்டம் 74
- மருமக்கட்தாயச் சட்டம் 75
- உயில் எழுதாமல் இறக்கும் இந்து ஆண் ஒருவரின் வாரிசுரிமை இறக்கம் குறித்த பொது விதிகள் 77
  - முதல் வகுப்பு வாரிசுகள் 78
  - இரண்டாம் வகுப்பு வாரிசுகள் 80
  - தாயாதிகள் 81
  - பெண் வழி உறவினர் 81
- சொத்தை பங்கிடும் முறை 81
  - முதல் வகுப்பு வாரிசுகளுள் 81
  - இரண்டாம் வகுப்பு வாரிசுகளுள் 82

- தாயாதிகள் மற்றும் பெண் வழி உறவினர் மத்தியில் 82
- தலைமுறையைக் கணக்கிடுதல் 83

- சீதனம் 89

- 1937-ஆம் ஆண்டின் இந்து பெண்கள் சொத்துரிமைச் சட்டம் (அல்லது) விதவையின் சொத்து 96

- இந்து மகளிர் சொத்து 98

- உயிலின்றி இறந்து போன ஒரு இந்துப் பெண்ணின் சொத்து பிரிக்கப்படும் விதம் 102

- 1956-ல் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு மகளின் நிலை 106

- தாயின் கருப்பையில் உள்ள குழந்தையின் உரிமை 109

- ஒரே நேர இறப்புகளில் அனுமானம் 110

- சொத்தை அடைவதில் முதல் நிலை உரிமை 111

- குடியிருக்கும் வீட்டைப் பொறுத்த சிறப்பு வகைமுறை 112

- இறங்குரிமையிலிருந்து விலக்கி வைக்கப்படுதல் (அல்லது) இறங்குரிமை பெறத் தகுதியின்மைகள் 115
  - 1956-ல் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு 115
  - 1956-ல் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்ட பின்பு 117

- அரசுடைப் பொருள் 118

- பிரிவு 30-ன் கீழ் பங்குரிமைச் சொத்தை உயில்வழி எழுதி வைக்கும் உரிமை 119

– **பின்னிணைப்புப் பட்டியல் [Schedule]** 121

- **வாரிசுகள்** 121
  - முதல் வகுப்பு வாரிசுகள் 121
  - இரண்டாம் வகுப்பு வாரிசுகள் 122

பகுதி-II
இசுலாமியர் சட்டம்
[Muslim Law]

1. கொடை (அல்லது) ஹிபா
[Gift (or) Hiba] 125

- வரையறை 125
- ஆக்கக் கூறுகள் 125
- கொடையை இரத்து செய்ய முடியுமா? 128
- பல்வேறு வகையான கொடைகள் 130
- ஆயுள் சொத்துரிமை (அல்லது) அம்ரீ 132
- முசா 134

2. உயில் (அல்லது) வசிய்யத்
[Will (or) Vassiyath] 137

- விளக்கம் 137
- உயிலுக்கும் கொடைக்குமுள்ள வேறுபாடு 138
- செல்லுபடியாகும் உயிலுக்கான தேவைகள் 138
- உயில் எழுதி வைப்பதில் இரண்டு முக்கிய கட்டுப்பாடுகள் 139
- உயில் அழிவு (அல்லது) உயிலை இரத்து செய்தல் 132
- மரணப்படுக்கை கொடை 141

3. வக்பு
[Wakf] 143

- வரையறை 143
- வக்பின் கூறுகள் 144
- வக்பு அளிப்பவர் அல்லது 'வகிப்' 147
- வக்பு ஏற்படுத்துவதன் நோக்கம் 147
- வக்பு - அலல் - அவுலாது 148
- 1913-ஆம் ஆண்டின் வக்பு செல்லுடைமையாக்கும் சட்டத்தின் முக்கிய சட்டப் பிரிவுகள் 150
- 1930-ஆம் ஆண்டின் இசுலாமியர்கள் வக்பு செல்லுடைமையாக்கும் சட்டம் 152
- 1954-ஆம் ஆண்டின் வக்பு சட்டம் 152
- சுன்னீ வக்பு மற்றும் ஷீயா வக்பு - வேறுபாடுகள் 153
- தனியார் வக்பு மற்றும் பொது வக்பு - வேறுபாடுகள் 153
- சீப்ரோ கொள்கை அல்லது இயன்ற அளவுக் கோட்பாடு 154
- முத்தாவல்லி 155

4. சொத்து நிருவாகம்
[Administration of Estate] **160**

- விளக்கம் 160
- சொத்தை நிருவகிக்கும் முறை 160

5. அண்டைச் சொத்தில் முற்படு விலை கொள் உரிமை (அல்லது) ஷுஃபா
[Pre-emption (or) Shufaa] **163**

- விளக்கம் 163
- யார் யார் இவ்வுரிமை பெறத் தகுதியுடையவர்கள் 164

6. இசுலாமியர்களின் மரபுமுறை இறங்குரிமைச் சட்டம்
[The Mohammedan Law of Inheritance] **166**

- **அ. மரபுரிமை குறித்த பொது விதிகள்** **166**
  - பொது விதிகள் 166
  - இறங்குரிமை பெறத் தகுதியின்மைகள் 169
- **ஆ. ஹனபி சட்டத்தில் மரபுரிமை இறக்கம் (அல்லது) சுன்னீ சட்டத்தில் மரபுரிமை இறக்கம்** **170**
  - முன்று முக்கிய பிரிவினர் 171
    - பங்குதாரர்கள் 171
      - பிரச்சனைகள் 176
    - எச்சதாரர்கள் 184
      - பிரச்சனைகள் 186
    - தூரத்து உறவினர்கள் 189
  - மேற்கண்ட வாரிசுகள் யாருமே இல்லாத நிலையில் சொத்துயீாமை இறக்கம் 191
  - ஏற்ற விதிக் கொள்கை அல்லது 'அவுல்' 192
    - பிரச்சனைகள் 193
  - இறக்க விதிக் கொள்கை அல்லது 'ரத்' 194
    - பிரச்சனைகள் 194
  - இறங்குரிமையிலிருந்து தள்ளப்படுதல் 196
- **இ. ஷீயா சட்டத்தில் மரபுரிமை இறக்கம்** **199**
  - ஷீயா சட்டப்படியிலான வாரிசுகள் 199
    - பிரச்சனைகள் 201
  - ஏற்ற விதிக் கொள்கை 203
  - இறக்க விதிக் கொள்கை 204

பகுதி-III
இந்திய வாரிசுரிமைச் சட்டம், 1925
[Indian Succession Act, 1925]

1. வாழ்வகம் (அல்லது) உறைவிடம் [Domicile] 208

- பொருள் 208
- இரு முலக் கூறுகள் 208
- முக்கியத்துவம் 209
- வகைகள் 210
- வாழ்வகத்தைப் பெறும் வழிகள் 212
- இந்தியாவில் வாழ்வகத்தைப் பெறுவதற்கான சிறப்பு முறைகள் 213

2. உயில் இல்வழி வாரிசுரிமை [Intestate Succession] 214

- வாரிசுரிமை - இரண்டு வகை 214
- உயில் இல்வழி வாரிசுரிமை - யாது? 214
- இந்தியக் கிறுத்தவர்களுக்கான உயில் இல்வழி வாரிசுரிமை 215

3. உயில் வழி வாரிசுரிமை (அல்லது) உயில் [Testamentary Succession (or) Will] 217

- உயில் - வரையறை 217
- உயிலின் நோக்கம் 217
- உயிலின் இயல்புகள் 218
- உயிலின் அமைப்பு 218
- உயிலின் மொழி 219
- உயில் உருவாக்கத் (எழுதத்) தகுதியுடையவர் 219
- உயில் உருவாக்கத் (எழுதத்) தகுதியற்றவர் 219
- உயிலினைப்பு 220
- உயிலின் பொருள் விளக்க விதிகள் 221
  - சாய்வு நாற்காலி விதி 221
- உயிலின் வகைகள் 226
  - தனிச் சலுகையற்ற உயில் - பிரிவு 63 226
  - தனிச் சலுகை உயில் - பிரிவு 65 227
    - தனிச் சலுகை உயிலை உருவாக்கும் முறைகள் 227

தனிச் சலுகை மற்றும் தனிச் சலுகையற்ற உயில் - வேறுபாடுகள் 229

- உயிலை இரத்து செய்தல் 230
- முதல் நிலை உயிலைத் தழுவி இரத்துச் செய்யும் தத்துவம் 231

4. உயில் வழிக் கொடை [Bequest] 232

- இல்லாநிலை உயில்வழிக் கொடை 232
- உலகளாவிய கொடை பெறுநர் 235
- வருநிகழ்வுக் கொடை 235
- நிபந்தனைக் கொடைகள் 236
- சுமை சேர்ந்த உயில் வழிக் கொடைகள் 237
- உரிமை விரைவுத் தத்துவம் 238
- வரையறுத்துக் குறிக்கப்பட்ட உயில்வழிக் கொடை 239
- சுட்டிக் காட்டும் உயில்வழிக் கொடை 242
- கொடைகளை வறிதாக்கல் 244
- தேர்ந்து கொளல் வரைவுக் கோட்பாடு 244
- இறக்குந் தறுவாயில் செய்யப்பட்ட கொடை 245

5. இறந்தவரின் சொத்தைப் பாதுகாத்தல் [Protection of Property of the Deceased] 247

6. இறந்தவரின் சொத்தை நிருவகித்தல் [Administration of Assests of the Deceased] 248

- [i] உயில் மெய்ப்பிதழ் 249

- விளக்கம் 249
- உயில் மெய்ப்பிதழை யாருக்கு வழங்கலாம்? 249
- உயில் மெய்ப்பிதழை யாருக்கு வழங்கக் கூடாது? 251
- உயில் மெய்ப்பிதழின் விளைவு 251
- தான் தோன்றி நிறைவேற்றாளர் 252

- [ii] நிருவாக உரிமைப் பத்திரம் 249

- யாருக்கு வழங்கப்படலாம்? 253
- யாருக்கு வழங்கக் கூடாது? 255
- இரத்து செய்யப்படும் சூழ்நிலைகள் 256

- [iii] நிறைவேற்றாளர் மற்றும் நிருவாகியின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் 258

- நிறைவேற்றாளர், நிருவாகி - வேறுபாடுகள் 251

7. உரிமை இறக்கச் சான்றிதழ் (வாரிசுரிமைச் சான்றிதழ்) [Succession Certificate] 262

பகுதி-IV
கிறுத்தவ மரபுமுறை இறங்குரிமைச் சட்டம்
[Christian Law of Inheritance]

– உயிலின்றி இறந்து போன இந்தியக் கிறுத்தவ ஆணின் சொத்தில் யார் யார் எவ்வளவு பங்கினைப் பெறுவர்? 267

- விதவை 267
- நேர்வழித் தோன்றல்கள் 267
- தந்தை 269
- தாய் 269
- சகோதரர்கள், சகோதரிகள் மற்றும் அவரது குழந்தைகள் 269
- வழித்தோன்றலன்றி ஏனைய நெருங்கிய இரத்த உறவினர் 270
- சொத்துக்களை ஒன்றாகச் சேர்த்தல் கிடையாது 270

– உயிலின்றி இறந்து போன ஒரு இந்திய கிறுத்தவப் பெண்ணின் சொத்து பிரிக்கப்படும் விதம் **270**

– இந்தியக் கிறுத்தவர் அல்லாத பிற கிறுத்தவர்களைப் பொறுத்தவரை சொத்து பிரிக்கப்படும் விதம் **271**

பகுதி-V
பிரச்சனைகளும் தீர்வுகளும்
[Problems and Solutions]

[i] இந்து மரபு முறை இறங்குரிமைச் சட்டம் **275**

- உயிலின்றி இறந்து போன ஒரு இந்து ஆண் விட்டுச் சென்ற சொத்திற்கு வாரிசுரிமை - 1 முதல் 15 275
- உயிலின்றி இறந்து போன ஒரு இந்து பெண் விட்டுச் சென்ற சொத்திற்கு வாரிசுரிமை - 16 முதல் 21 286

[ii] இசுலாமிய மரபுமுறை இறங்குரிமைச் சட்டம் **291**

- சுன்னீ (அல்லது) ஹனபி பிரிவு இசுலாமியர்கள் விட்டுச் சென்ற சொத்தைப் பொறுத்து பங்கீடு - 22 முதல் 28 291

[iii] கிறுத்தவ மரபுமுறை இறங்குரிமைச் சட்டம் **300**

- 22 முதல் 28 300

பகுதி - VI
முனைவர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழக வினாத்தாள்கள் [Question Papers]

– மூன்றாண்டு சட்டக் கல்வி 315

மே 2010, நவம்பர் 2010, ஜூன் 2011, நவம்பர் 2011, மே 2011, நவம்பர் 2012, மே 2013, நவம்பர் 2013, மே 2014, நவம்பர் 2014, மே 2015, நவம்பர் 2015, மே 2016, நவம்பர் 2016, மே 2017, நவம்பர் 2017 ஆகிய வினாத்தாள்கள் 315 முதல் 351 வரையிலான பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

– அய்ந்தாண்டு சட்டக் கல்வி 352

மே 2011, நவம்பர் 2011, ஜூன் 2012, நவம்பர் 2012, மே 2013, நவம்பர் 2013, மே 2014, நவம்பர் 2014, மே 2015, நவம்பர் 2015, மே 2016, நவம்பர் 2016, மே 2017, நவம்பர் 2017, மே 2017, நவம்பர் 2017 ஆகிய வினாத்தாள்கள் 352 முதல் 389 வரையிலான பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

சிறு குறிப்புகள் [Short Notes]

1. பரம்பரைச் சொத்து [Ancestral Property] 10
2. தடையற்ற மரபுரிமை [Unobstructed Heritage] 11
3. தடையுள்ள மரபுரிமை [Obstructed Heritage] 11
4. அப்பராத்திபந்த தாயா [Apratibandha Daya] 11
5. சப்ரதிபந்த தாயா [Sapratibandha Daya] 11
6. இந்து கல்விப் பயன்கள் சட்டம், 1930 [Hindu Gains of Learning Act, 1930] 13
7. கர்த்தா [Karta] 16
8. மதக் கடமை [Pious obligation] 23
9. அவ்வியவகாரிகா கடன் [Avyavakarika debt] 27
10. முன் கடன் [Antecedent debt] 27
11. மீண்டும் ஒன்று சேர்தல் [Re-union] 34
12. பாகப்பிரிவினையை மீண்டும் கிளறுதல் [Re-opening the partition] 36
13. பிரிக்க முடியாத சொத்து [Impartible Estate] 37
14. நெருங்கிய தொடர் வாரிசுகள் [Compact series of heirs] 43
15. சபிண்டா உறவு முறை [Sapinda relationship] 50

43

16.	எஞ்சுநர் உரிமை [Survivourship]	51
17.	எஞ்சுநர் விதி [Rule of Survivourship]	51
18.	அலிய சந்தானச் சட்டம் [Aliyasantana Law]	74
19.	மருமக்கட்தாயச் சட்டம் [Marumakkattayam Law]	74
20.	தந்தை வழியர் [Agnate]	85
21.	பெண் வழியர் [Cognate]	85
22.	1937–ஆம் ஆண்டின் இந்து பெண்கள் சொத்துரிமைச் சட்டம் [Hindu Women's Right to Property Act, 1937]	96
23.	விதவையின் சொத்து [Widow's Estate]	96
24.	இந்து சட்டத்தில் வாங்கு முன்னுரிமை [Pre-emption in Hindu Law]	111
25.	குடியிருக்கும் வீடுகளைப் பொறுத்த சிறப்பு வகைமுறை [Special provision respecting dwelling-houses]	112
26.	ஹிபா [Hiba]	125
27.	ஆயுள் சொத்துரிமைக் கொடை [Life Estate]	132
28.	அம்ரீ [Amree]	132
29.	மூசா கோட்பாடு [Doctrine of Mushaa]	134
30.	மரணப் படுக்கையில் கொடை [Death bed gift]	141
31.	மார்ஸ் – உல் – மாவ்த் [*Marz - ul - Maut*]	141
32.	வக்பு [Wakf]	143
33.	சீப்ரோ கொள்கை [Doctrine of Cypres]	154
34.	முத்தாவல்லி [Mutawalli]	155
35.	முத்தாவல்லியின் அதிகாரங்கள் [Powers of Mutawalli]	155
36.	வாங்கு முன்னுரிமை [Pre-emption]	163
37.	ஏற்றவிதிக் கோட்பாடு [Doctrine of Aul]	192
38.	மீட்டளிப்புக் கோட்பாடு [Doctrine of Radd]	192
39.	வாழ்வகம் [Domicile]	208
40.	உயில் இல்வழி வாரிசுரிமை [Intestate Succession]	214
41.	உயிலிணைப்பு [Codicil]	220
42.	சாய்வு நாற்காலி விதி [Arm chair rule]	220
43.	தனிச் சலுகை உயில் [Privileged will]	226
44.	உயிலை இரத்து செய்தல் [Revocation of will]	230
45.	முதல்நிலை உயிலைத் தழுவி இரத்து செய்யும் தத்துவம் [Doctrine of Dependent Relative Revocation]	231
46.	இல்லாநிலை உயில் வழிக் கொடை [Void Bequest]	232

47. உலகளாவிய கொடை பெறுநர் [Universal Legatee] 235
48. வருநிகழ்வுக் கொடை [Contingent Bequest] 235
49. நிபந்தனைக் கொடைகள் [Conditional Bequests] 236
50. சுமை சேர்ந்த உயில் வழிக் கொடைகள் [Onerous Bequests] 237
51. உரிமை விரைவுத் தத்துவம் [Doctrine of Acceleration] 238
52. கொடைகளை வறிதாக்கல் [Ademption of Legacies] 244
53. தேர்ந்து கொளல் வரைவுக் கோட்பாடு [Doctrine of Election] 244
54. இறக்குந் தறுவாயில் செய்யப்பட்ட கொடை [*Donatio Mortis Causa*] 245
55. இறந்தவரின் சொத்தைப் பாதுகாத்தல் [Protection of Property of the Deceased] 247
56. உயில் மெய்ப்பிதழ் வழங்குதல் [Grant of Probate] 249
57. உயில் மெய்ப்பிதழ் [Probath] 249
58. தான் தோன்றி நிறைவேற்றாளர் [*Executor-de-son-tort*] 252
59. நிருவாக உரிமைப் பத்திரம் [Letters of Administration] 253
60. உயிலை நிறைவேற்றுபவரின் கடமைகள் [Duties of an Executor of a Will] 258
61. வாரிசுரிமைச் சான்றிதழ் [Succession Certificate] 262

வேறுபாடுகள் [Distinctions]

1. கூட்டுக் குடும்பம் மற்றும் பங்குரிமை [Joint Family and Coparcenary] 9
2. இறங்குரிமை குறித்து மிதாக்ஷர மற்றும் தாயாபாக முறை [Mitakshara and Dayabagha Schools regarding Succession] 51
3. பயன் பெறும் கொடை மற்றும் பயன் விரும்பும் கொடை [*Hiba-bil-iwaz* and *Hiba-ba-shart-ul-iwaz*] 130
4. சுன்னீ வக்பு மற்றும் ஷீயா வக்பு [Sunni Wakf and Shia Wakf] 153
5. தனியார் வக்பு மற்றும் பொது வக்பு [Private Wakf and Public Wakf] 153
6. ஷீயா மற்றும் சுன்னீ சட்ட மரபுரிமை இறக்கம் [Shia and Sunni Law of Inheritance] 199
1. தனிச் சலுகை உயில் மற்றும் தனிச் சலுகையற்ற உயில் [Privileged and Unprivileged Will] 228

பகுதி - I

இந்துச் சட்டம்

[Hindu Law]

- இந்துக் கூட்டுக் குடும்பமும் பங்குரிமை அமைப்பும்
  - இந்துக் கூட்டுக் குடும்பமும் பங்குரிமை அமைப்பும்
  - கூட்டுக் குடும்பச் சொத்து (அல்லது) பங்குரிமைச் சொத்து மற்றும் தனிச் சொத்து (அல்லது) சுய சம்பாத்தியச் சொத்து
  - பரம்பரைச் சொத்து
  - தடையற்ற மற்றும் தடையுள்ள மரபுரிமை
  - 1930–ஆம் ஆண்டின் கல்விப் பயன்கள் சட்டம்
  - கர்த்தா
- கூட்டுக் குடும்பத்தில் கடனும் மாற்றக்கமும்
  - மதக் கடமை
  - அவ்வியவகாரிகா கடன்
  - முன்கடன்
- பாகப்பிரிவினை
- சமயம் மற்றும் அறப்பயனுக்கான அறக்கட்டளை
- இந்து மரபுமுறை இறங்குரிமைச் சட்டம்

1 இந்து கூட்டுக் குடும்பமும் பங்குரிமை அமைப்பும் [Hindu Joint Family and Coparcenary]

[i] இந்து கூட்டுக் குடும்பமும், பங்குரிமை அமைப்பும் [Hindu Joint Family and Coparcenary]

1.Examine the historical evolution of the Hindu Joint family. (இந்துக் கூட்டுக் குடும்பத்தின் தோற்ற வரலாற்றை ஆராய்க.)

(அல்லது)

" The joint and undivided family is the normal condition of Hindu society". Mullah. Discuss. ("ஒரு கூட்டு மற்றும் பிரிக்கப் படாத குடும்பம் இந்து சமுதாயத்தில் இயல்பான நிலையது" – முல்லா. விவாதி)

(அல்லது)

" A joint family consists of all persons lineally descended from a common ancestor and includes their wives and un married daughters". Explain the statement with illustrations. ("பொது மூதாதையர் ஒருவரின் நேர்மரபு வழி வந்தவர்கள் அனைவரும் அவர்களின் மனைவிமார்களும், மணமாகாத மகள்களும் உடனமைந்ததே ஒரு கூட்டுக் குடும்பம் ஆகிறது". இக்கூற்றினை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.)

(அல்லது)

State the essential features of the Hindu joint family and of the Mitakshara Coparcenary and distinguish between them. (இந்து கூட்டுக் குடும்பம், மிதாக்ஷரப் பங்குரிமை ஆகியவற்றின் முக்கிய அம்சங்களைத் தெரிவித்து அவற்றிற்கிடையேயான வேறுபாடுகளையும் கூறுக.)

(அல்லது)

What is Joint Hindu Family? Distinquish Joint Hindu Family and Hindu Coparcenary? (இந்து கூட்டுக் குடும்பம் என்றால் என்ன? ஒரு இந்து கூட்டுக் குடும்பத்தையும் மற்றும் பங்குரிமையமைப்பையும் வேறுபடுத்திக் காட்டுக.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

இந்து கூட்டுக் குடும்பம்
இந்து கூட்டுக் குடும்பமும், கூட்டுக் குடும்பச் சொத்தும்
இந்து கூட்டுக் குடும்பமும், இந்து பங்குரிமை அமைப்பும்
மிதாக்ஷரா சட்டம் கூறும் பங்குரிமை
பங்குரிமையர்களைக் காட்டும் வரைபடம்
பங்குரிமைக்குள் பங்குரிமை - வரைபட விளக்கம்

இந்து கூட்டுக் குடும்பம் – தோற்றம் :

இந்து ஒருவரின் ஆரம்பமே கூட்டுக் குடும்பத்திலிருந்துதான் என்று சொன்னால் அது மிகையல்ல. இந்துக்களைப் பொறுத்தவரை ஒரு குடும்பந்தான் சமுதாயத்தின் அலகே (Unit of society) தவிர, தனிமனிதன் அல்ல. இரத்த பந்தத்தினாலும், பாசத்தினாலும் பிணைக்கப்பட்டு இயற்கையாக எழுவதே கூட்டுக் குடும்பமாகும். இன்னும் நுணுகிக் கூறுவதானால், பொது மூதாதையர் ஒருவரின் நேர்மரபு வழி வந்தவர்கள் அனைவரும், அவர்களின் மனைவிமார்களும், மணமாகாத மகள்களும் உடனமைந்ததே ஒரு கூட்டுக் குடும்பம் ஆகிறது. மேற்படியார்கள் வாழ்தல் (live), தொழுதல் (worship) மற்றும் சமைத்தலை (mess) ஒரே இடத்தில் ஒற்றுமையாக செய்து கொண்டு ஒரு குடும்பமாக இருத்த லாகும். ஒரு கூட்டுக் குடும்பத்தில் உள்ள மணமாகாத மகள், திருமணமானவுடன் தனது கணவனது குடும்பத்தைச் சார்ந்த உறுப்பினராகிறாள்.

இந்து கூட்டுக் குடும்பமும், கூட்டுக் குடும்பச் சொத்தும்:

கூட்டுக் குடும்பம் எனில், அதற்கு கூட்டுக் குடும்பச் சொத்தொன்று (joint family property) இருக்க வேண்டிய அவசியமில்லை. கூட்டுக் குடும்பம் இரத்தத் தொடர்பால் உண்டாவதே தவிர, கூட்டுச் சொத்தால் அல்ல. இந்து ஒருவன், கூட்டுக் குடும்ப உறுப்பினர் எனும் அந்தஸ்த்தை பிறப்பினாலேயே அடைந்து விடுகிறான். ஆகவே ஒரு கூட்டுக் குடும்பத்திற்கு சொத்தொன்று இருந்தால், அது ஒரு அதிகப்படியான விஷயமே தவிர, வேறொன்றுமில்லை.

இந்து கூட்டுக் குடும்பமும், இந்து பங்குரிமை அமைப்பும் (Hindu Joint family and Hindu Coparcenary):

ஒரு இந்து கூட்டுக் குடும்பத்தின் எல்லை பரந்தது. ஆனால் பங்குரிமை அமைப்பு (corparcenary) ஒன்றின் எல்லை, அதனைக் காட்டிலும் குறுகியது. ஒரு இந்து கூட்டுக் குடும்பத்திற்கு சொத்தென்று ஒன்று இருந்து, அது பிரிவினையாகாமல் இருக்கும்பொழுது, அதில் பிறப்பினடிப்படையில் பிரிவினை

கோரும் உரிமைக்கே, 'பங்குரிமை' (corparcenary) என்று பெயர். மேற்படி கூட்டுக் குடும்பச் சொத்தில் பங்குரிமை பெறுபவர் 'பங்குரிமையர்' (corparcenar) ஆகிறார். பங்குரிமையராக ஆண் மக்களே வருவர். ஆனால் ஒரு இந்து கூட்டுக் குடும்பத்தைப் பொறுத்த வரையில், அக்குடும்பத்தின் அனைத்து ஆண்–பெண் மக்களும், அதன் உறுப்பினர்களாக கருதப்படுவர்.

மிதாக்ஷரா சட்டம் கூறும் பங்குரிமை (Coparcenary under the Mitakshara Law) :

ஒரு பொது மூதாதையரிடமிருந்து மூன்று தலைமுறை வரை உள்ளவர்கள் (மொத்தம் 4 தலைமுறையினர்) பங்குரிமையர் ஆவார்கள். தந்தை, மகன், பேரன், கொள்ளுப் பேரன் மட்டுமே கூட்டுக் குடும்பச் சொத்தில் பங்குரிமை பெற முடியும். மதச் சடங்குகளை இம்மூன்று தலைமுறையினர் மட்டுமே செய்ய முடியுமாதலால், இந்த வரையறை பங்குரிமைக்கும் உரியதாயிற்று. இப் பங்குரிமையில் பெண்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. ஆண்களுக்கு மட்டுமே உரிமை உண்டு. இருப்பினும் பாகப் பிரிவினையின்போது இந்து கூட்டுக் குடும்பத்தில் உள்ள பெண்களுக்கும் சொத்து தரத் தடை இல்லை.

பங்குரிமையர்களைக் காட்டும் வரைபடம்:

ஒரு இந்து கூட்டுக் குடும்பத்தை நிருவகிக்கும் மூத்த ஆண் மகன், அக் குடும்பத்தின் 'கர்த்தாவாகிறார்' (Karta). அக்குடும்பத்தின் கூட்டுச் சொத்தில் பங்கு கோர உரிமையுள்ள ஏனைய ஆண் மக்கள் அனைவரும் 'பங்குரிமையர்கள்' (Corparcenars) ஆவார்கள். இப்பங்குரிமை அமைப்பானது கூட்டுக் குடும்பத்தின் முதல் தலைமுறையையும் சேர்த்து 4 தலைமுறை உள்ள ஆண் மக்களைத்தாம் குறிக்கும். இதனை பின்வரும் ஒரு எளிய வரைபடம் விளக்குகிறது.



எனினும், மேற்படி வரைபடத்தில் முதல் தலைமுறை இடத்தைப் பெற்றுள்ள கொள்ளுப் பாட்டன் (A) இறந்துவிட்டால், அதற்கெடுத்து, இரண்டாவது தலைமுறையில் உள்ள 'பாட்டன்' (B) முதல் தலைமுறை ஸ்தானத்தில் வந்து விடுவார். ஆகவே, 5வது தலைமுறையாகவுள்ள 'மகனின் மகன்' (E), 4–வது தலைமுறை இடத்தைப் பெற்று அவரும் ஒரு பங்குரிமையர் ஆகிவிடுவார். சுருங்கக் கூறின், உயிரோடு இருப்பவர்களில் அடுத்தடுத்து உள்ள நான்கு தலைமுறையினர் பங்குரிமையர்கள் ஆகின்றனர்.

பங்குரிமைக்குள் பங்குரிமை - வரைபட விளக்கம் (Coparcenary within a Coparcenary):

கூட்டுக் குடும்பச் சொத்தில் பங்குரிமையுடையவர்கள், அச்சொத்தை தங்களுக்குள் அடைய உரிமை பெற்றவர்கள். ஆனால் அப்பங்குரிமையர்கள் எவரேனும் ஒருவருக்கு தனிப்பட்ட சொத்து (Self-acquired propery) ஏதேனும் இருக்குமானால், அது கூட்டுக் குடும்பத்தின் பொதுச் சொத்துடன் சேராது. அத்தனிச் சொத்தானது, அதற்கு உரிமையுடையவரின் வாரிசுகளுக்கே போய்ச் சேரும். இவ்வாரிசானவர் தனது மூதாதையரின் (கொள்ளுப் பாட்டன்) சொத்தில் பங்கு பெறுவதோடு மட்டுமல்லாமல் தனது பாட்டனின் தனிப்பட்ட சொத்திலும் பங்கு பெறுவார். இவ்விதமாக ஒரு பங்குரிமையர் இரண்டு வித்தங்களில் சொத்தை அடைதலே "பங்குரிமைக்குள் பங்குரிமை" எனப்படுகின்றது. இதனை பின்வரும் வரைபடம் எளிதாக விளக்கும்.



மேற்படி வரைபடத்தில் உள்ள A-வின் (கொள்ளுப் பாட்டன்) சொத்தை 4–வது தலைமுறையில் உள்ள G எனும் பங்குரிமையர் (மகன்), கூட்டுக் குடும்பச்

சொத்தின் பங்குரிமையர்களில் ஒருவர் என்ற முறையில், தனக்குரிய பங்கைப் பெறுவார். அதே சமயத்தில் D எனும் பங்குரிமையர் (பாட்டன்) தேடிய தனிச் சொத்திலும், G எனும் பங்குரிமையர் பங்கு பெறுவார். இவ்விதமாக, A-வின் சொத்திலும் D-யின் தனிச் சொத்திலும் G பங்கு பெறுகிறார். இது ஒரு சிறிய பங்குரிமையாக, அதாவது பங்குரிமைக்குள் பங்குரிமையாக கருதப்படுகின்றது.

[ii] கூட்டுக் குடும்பச் சொத்து (அல்லது) பங்குரிமைச் சொத்து மற்றும் தனிச் சொத்து (அல்லது) சுய சம்பாத்தியச் சொத்து [Joint Family Property (or) Coparcenary Property and Separate Property (or) Self-acquired Property]

2. What do you understand by the terms 'Coparcenary property' and 'Separate property'? What are their incidents?
(பங்குரிமைச் சொத்து மற்றும் 'தனிச் சொத்து' என்ற சொற்களால் நீர் அறிவது என்ன? அவற்றின் சிறப்புப் பண்புகள் யாவை?)

நினைவுக் குறிப்புகள் [Hints]

சொத்துக்கள் - இரண்டு வகை
கூட்டுக் குடும்பச் சொத்து அல்லது பங்குரிமைச் சொத்து
பங்குரிமைச் (கூட்டுக் குடும்பச்) சொத்தின் சிறப்புப் பண்புகள்
தனிச் சொத்து (அல்லது) சுய சம்பாத்தியச் சொத்தின் சிறப்புப் பண்புகள்

சொத்துக்கள் - இரண்டு வகை :

இந்துச் சட்டப்படி சொத்தானது இரண்டு பெரும் பிரிவாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அவை (1) கூட்டுக் குடும்பச் சொத்து (Joint family property) அல்லது பங்குரிமைச் சொத்து (Coparcenary property); (2) தனிச் சொத்து (Separate property) அல்லது சுய சம்பாத்தியச் சொத்து (Self acquired property).

கூட்டுக் குடும்பச் சொத்து அல்லது பங்குரிமைச் சொத்து (Coparcenary Property) :

மேற்படி பங்குரிமைச் சொத்தானது அவை எவ்வகையில் பெறப் படுகின்றது என்பதைப் பொறுத்து மேலும் இரண்டு வகையாகப் பிரிகின்றது. அவை (a) பரம்பரைச் சொத்து (Ancestral property); (b) பரம்பரை வழி வராத பங்குரிமையரின் தனிச் சொத்து (Separate property of coparceners).

பரம்பரைச் சொத்தின் வருமானத்திலிருந்து, அல்லது அதை விற்ற இலாபத்திலிருந்து, அல்லது அதன் வழியாக வரும் சொத்து யாவும் கூட்டுக் குடும்பத்தையே சாரும். அதாவது கூட்டுக் குடும்ப உறுப்பினர்களால் பரம்பரைச் சொத்தின் உதவியைக் கொண்டு சேர்க்கப்படும் சொத்து, கூட்டுக் குடும்பச் சொத்து அல்லது பங்குரிமைச் சொத்து எனப்படும்.

கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது கூட்டு முயற்சியால், பரம்பரைச் சொத்தின் உதவியின்றி சேர்க்கும் சொத்தும் கூட்டுக் குடும்பச் சொத்தாகவே கருதப்படும். ஆனால் அந்த கூட்டு முயற்சியில் சிலர் மட்டுமே சேர்ந்து சிலர் சேராது இருந்தால் அவ்வாறு கருத முடியாது. மேலும், கூட்டுக் குடும்பச் சொத்தாகக் கருதும் நோக்கம் சம்பந்தப்பட்டவர்களுக்கு இருக்க வேண்டும்.

பங்குரிமைச் (கூட்டுக் குடும்பச்) சொத்தின் சிறப்புப் பண்புகள் (Incidents of Coparcenary Property):

(i) பங்குரிமைச் சொத்தில் ஒவ்வொரு பங்குரிமையருக்கும் கூட்டு அனுபவ பாத்தியதையும் (Joint possession), அக்கறையும் (Interest) உண்டு; (ii) இச்சொத்து எஞ்சுநர் உரிமையின் (Survivorship) அடிப்படையில் மற்றவர்களை சென்றடைகிறது. அதாவது ஒரு பங்குரிமையர் இறந்துவிட்டால்; அவரது பங்குச் சொத்தானது மற்ற எஞ்சியிருக்கும் பங்குரிமையர்களுக்கு பிரித்தளிக்கப்படும். மாறாக, இறந்தவரின் வாரிசுகளுக்கு பிரித்தளிக்கப்பட மாட்டாது (not by succession). (ஆனால் இது பின்னர் 1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டப்படி மாற்றப்பட்டுவிட்டது); (iii) பங்குரிமைச் சொத்தில், ஒரு ஆண் மகன் பிறப்பினாலேயே பங்குக்குரியவனாகின்றான்; (iv) ஒவ்வொரு பங்குரிமையரும் சொத்தில் பாகப்பிரிவினை கோர உரிமை பெற்றுள்ளார்; (v) கூட்டுக் குடும்ப சொத்தை நிருவகிப்பவர் 'கர்த்தா' எனப்படுவார்.

தனிச் தொத்து அல்லது சுய சம்பாத்திய சொத்தின் சிறப்பு பண்புகள் (Incidents of Separate or Self-acquired property):

(i) இந்து ஒருவன் தானே சுயமாக சம்பாதித்த சொத்து (பரம்பரை சொத்தாக அல்லது கூட்டு முயற்சியால் சம்பாதித்த சொத்தாக இல்லாதது), தனிச் சொத்து எனப்படுகின்றது; (ii) இது முற்றிலும் அவனுக்கே உரித்ததாகும். இதில் மகனோ அல்லது பேரனோ அல்லது கொள்ளுப் பேரனோ தமக்கு பிறப்பினால் சொத்தில் பங்குண்டு எனக் கோரிட முடியாது; (iii) இச்சொத்தை அவன், தாம் விரும்பும் யாருக்கு வேண்டுமானாலும் விற்கலாம் அல்லது உயில் மூலம் கொடுக்கலாம்; (iv) இச்சொத்தில் பாகப்பிரிவினை கோர முடியாது; (v) தனிச் சொத்தின் உரிமையாளர் உயில் எதுவும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டால்,

அச்சொத்தானது வாரிசுரிமையின் அடிப்படையில் இறந்தவரின் வாரிசுதாரர்களை சென்றடையும்; எஞ்சுநர் உரிமையின் அடிப்படையில் சொத்து சென்றடைதல் எனும் பேச்சுக்கே இங்கு இடமில்லை.

3. Distinguish between joint family and coparcenary. What are the rights of a coparcenar in the coparcenary property? (கூட்டுக் குடும்பம், பங்குரிமை இவற்றில் ஒன்றுக்கொன்றுக்கிடையே உள்ள வேறுபாடுகளைக் கூறுக. பங்குரிமைச் சொத்தில் பங்குரிமையர் ஒருவருக்குள்ள உரிமைகள் யாவை?)

கூட்டுக் குடும்பம், பங்குரிமை - வேறுபாடுகள் :

ஒரு இந்து கூட்டுக் குடும்பத்தின் எல்லை பரந்தது. ஆனால் பங்குரிமை அமைப்பு (Coparcenary) ஒன்றின் எல்லை, அதனைக் காட்டிலும் குறுகியது. ஒரு இந்து கூட்டுக் குடும்பத்திற்கு சொத்தொன்று ஒன்று இருந்து, அது பிரிவினையாகாமல் இருக்கும்பொழுது, அதில் பிறப்பினடிப்படையில் பிரிவினை கோரும் உரிமைக்கே பங்குரிமை (Coparcenary) என்று பெயர். மேற்படி கூட்டுக் குடும்பச் சொத்தில் பங்குரிமை பெறுபவர் 'பங்குரிமையர்' (Coparcenar) ஆகிறார். பங்குரிமையராக ஆண் மக்களே வருவர். ஆனால் ஒரு இந்து கூட்டுக் குடும்பத்தைப் பொறுத்தவரையில் அக்குடும்பத்தின் அனைத்து ஆண், பெண் மக்களும் அதன் உறுப்பினர்களாக கருதப்படுவர். (மேலும் விளக்கமாக அறிந்து கொள்ள வேண்டுமெனில் வினா எண். 1–அய்க் காண்க.)

பங்குரிமைச் சொத்தில் பங்குரிமையர் ஒருவருக்குள்ள உரிமைகள் (Rights of a Coparcenar):

1. கூட்டுக் குடும்பத்தில் பிறக்கும் பிறப்பு ஒன்றினால் மட்டுமே ஓர் ஆண் மகனுக்குப் பங்குரிமைச் சொத்தில் உரிமை ஏற்பட்டுவிடும். தந்தைக்குப் பின்னால்தான் மகன் என்ற நியதி இதில் கிடையாது. ஆனால் ஒருவன் தனது உயிருடன் உள்ள மூதாதையரிடமிருந்து மூன்று தலைமுறை தள்ளிப் போயிருந்தால் (அதாவது மொத்தம் நான்கு தலைமுறைக்குள் இருக்க வேண்டும்), அப்போது பங்குரிமையில் உரிமை கொண்டாட முடியாது.

2. ஒரு பங்குரிமையர் ஆண் குழந்தை இல்லாமல் இறந்துவிட்டால், சொத்தில் அவனுக்கு இருக்கும் உரிமை அவனுடைய வாரிசுகளுக்குச் செல்லாது. மாறாக எஞ்சுநர் உரிமை விதிப்படி (Rule of Survivorship) மற்ற பங்குரிமையர்கள் அடைவார்கள். (இந்நிலை 1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தால் நீக்கப்பட்டுவிட்டது)

3. ஒவ்வொரு பங்குரிமையருக்கும் பாகப்பிரிவினை கோரும் உரிமை உண்டு.

4. கூட்டுக் குடும்பத்தில் எல்லாப் பங்குரிமையரும் எல்லாச் சொத்தையும் கூட்டாக அனுபவிக்கலாம் (Joint enjoyment). ஒவ்வொரு பங்குரிமையரின் மனைவியும், குழந்தைகளும் கூட்டுக் குடும்பச் சொத்திலிருந்து பராமரிக்கப்பட வேண்டும். இன்னாருக்கு இவ்வளவு பங்கு என்ற பாகுபாடு இல்லாததால் அத்தனை பேரும் சமமாகவே பராமரிக்கப்படுவர்.

5. ஒரு பங்குரிமையர் சட்டத்திற்குப் புறம்பான, முறையற்ற, சொத்துக்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய செயலைச் செய்வாரானால், மற்றப் பங்குரிமையர்கள் நீதிமன்றத்தை அணுகி அதைத் தடுக்கலாம். ஆனால் பல பங்குரிமையர்கள் இருக்கும் குடும்பத்தில் ஒருவர் செய்யும் அதிகாரபூர்வமற்ற செயலைத் தடுக்க இன்னொருவர் தன் அளவில் மட்டும் வழக்குப் போட முடியாது. மற்றவர்களுக் காகவும் சேர்ந்துதான் வழக்கு தொடுக்க முடியும்.

6. கூட்டுக் குடும்பத்தின் கர்த்தாவோ (நிருவாகியோ), தந்தையோ, வேறு பங்குரிமையரோ அதிகாரபூர்வமற்ற சொத்து மாற்றாக்கம் (Transfer of Property) செய்தால், பிற பங்குரிமையர் நீதிமன்றத்தை அணுகலாம். எனினும் எல்லோரும் இசைந்து மாற்றாக்கம் செய்யலாம்.

7. ஒவ்வொரு பங்குரிமையரும் தன் முயற்சியால் சொத்து சேர்த்துக் தனியாக வைத்துக் கொள்ளலாம். கிளை வழி உரிமை இறக்கத்தின் (Collateral Succession) மூலம் ஒருவனுக்குக் கிடைக்கும் சொத்து அவனுடைய தனிச் சொத்தாகும். தனிச் சொத்தில் அவனுக்கு இருக்கும் உரிமை முழு உரிமையாகும்.

[iii] பரம்பரைச் சொத்து [Ancestral Property]

4. Ancestral property – Write short notes. (பரம்பரைச் சொத்து – சிறு குறிப்பு வரைக.)

பரம்பரைச் சொத்து எனப்படுவது தந்தைவழி கொள்ளுப்பாட்டன், பாட்டன், தந்தை ஆகியவர்களிடமிருந்து முறையே மகன், பேரன், கொள்ளுப் பேரன் ஆகிய வழித்தோன்றல்கள் பெறுவதாகும். இது தவிர, வேறு உறவு முறைகளின் வாயிலாக பெறப்படும் சொத்துக்கள் பரம்பரைச் சொத்துக்களாகாது. மாறாக பெறுபவரின் தனிச் சொத்தாகிவிடும்.

இந்துச் சட்டத்தில் மிதாக்ஷரா முறைப்படி (Mitakshara School) பிறப்பினாலேயே மகன்கள், பேரன்கள், கொள்ளுப் பேரன்கள் ஆகியோர் பரம்பரைச் சொத்தில் உரிமையுடையவர்களாகிவிடுகின்றார். அதாவது பிறப்பினாலேயே உரிமை உண்டாகி விடுகிறது. உதாரணமாக, A என்பவர், தனது பாட்டனிடமிருந்து, தந்தையிடமிருந்தோ சொத்தைப் பெற்றால், அது தனக்குப் பிறக்கும் ஆண் குழந்தைகளைப் பொறுத்தமட்டில் பரம்பரைச் சொத்தாகும். ஒருவேளை A-க்கு ஆண் குழந்தைகள் ஏதும் பிறக்கவில்லையென்றால், A-யின் மற்ற உறவினர்களுக்கு அச்சொத்தில் A-யின் வாழ்நாளில் எவ்வித உரிமையும்

கிடையாது. (ஆண் குழந்தைகள் இருந்திருப்பின், அவர்கள் A-யின் வாழ் நாளிலேயே, மேற்படி சொத்தில் பாகப்பிரிவினை கோர உரிமையுண்டு). ஆனால் தாயபாக முறையில் **(Dayabhaga School)** மேற்கண்டவாறு கிடையாது.

தாய்வழிப் பாட்டனின் சொத்து:

இச்சொத்து குறித்து நீதிமன்றங்களிடையே பல்வேறு குழப்பமான முடிவுகள் நிலவி வந்தன. ஆனால், **Muhammed Hussain Khan v. Babu Kishva Nandhan Sahai**[1] என்ற வழக்கில் தாய்வழிப் பாட்டன் மூலம் கிடைக்கும் சொத்து, ஒருவனின் தனிச் சொத்தாகும். அது பரம்பரைச் சொத்தாகாது. அச்சொத்தில் மகனுக்கோ, பேரனுக்கோ, கொள்ளுப் பேரனுக்கோ உரிமை இல்லையெனப் பிரிவி கவுன்சில் தீர்ப்புக் கூறியது.

தந்தைவழிப் பாட்டனின் சொத்து:

மூன்று தலைமுறைக்கு அப்பால் உள்ள தந்தைவழிப் பாட்டன் மூலம் வரும் சொத்து ஒருவனின் தனிச் சொத்தேயாகும்.

5. Discuss the incidents of self-acquired property and ancestral property and bring out the distinction between the two. (தானே முயன்று பெற்ற சொத்து, மூதாதையர் வழி வந்த சொத்து இவைகளின் தனிச் சிறப்பு பண்புகளைக் கூர்ந்து ஆராய்ந்து அவைகளிடையே உள்ள வேறுபாட்டைத் தெளிவாக்குக.)

(வினா எண்கள். 2 மற்றும் 4–ன் விடைகளைத் தொடர்படுத்தி எழுதுக)

[iv] தடையற்ற மற்றும் தடையுள்ள மரபுரிமை [Unobstructed and Obstructed Heritage]

6. Write short notes on:

(a) Unobstructed heritage (b) Obstructed heritage

சிறு குறிப்பு வரைக

(அ) தடையற்ற மரபுரிமை (ஆ) தடையுள்ள மரபுரிமை

(அல்லது)

Apratibandha Daya - Write short notes. (அப்பராத்திபந்த தாயா – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Sapratibandha Daya - Write short notes. (சப்ரதிபந்த தாயா – சிறு குறிப்பு வரைக.)

(a) தடையற்ற மரபுரிமை (Unobstructed heritage):

1. (1937) 64 I.A. 250 : (1937) All. 655

மிதாக்ஷர முறையில் கூட்டுக் குடும்பத்தில் பிறப்பு ஒன்றினாலேயே ஒருவன் சொத்தில் பங்கு பெறும் உரிமைக்கு **தடையற்ற மரபுரிமை** அல்லது **'அப்பராத்திபந்த தாயா'** என்று பெயர். ஏனெனில் இதில் சொத்துரிமையைப் பெற கூட்டுக் குடும்பத்தின் பங்குரிமையருக்கு எத்தடையும் கிடையாது. பரம்பரைச் சொத்தை (ancestral property) இதற்கு உதாரணமாகக் கூறலாம். இதில் பங்குரிமையைர் ஒருவர் உரிமை பெற அவருக்கு எவ்விதத் தடையுமில்லை. பின்வரும் வழக்கிலும் இவ்வாறே கூறப்பட்டுள்ளது.

(1) **Masit Ullah v. Damodar Prasad**[1] – இவ்வழக்கில் ஒரு கூட்டுக் குடும்பத்தில் ஒரு பங்காளி தந்தையிடமிருந்தோ, தந்தையின் தந்தையிடமிருந்தோ அல்லது தந்தையின் தந்தையின் தந்தையிடமிருந்தோ சொத்தை அடைந்தால், அச்சொத்து மூதாதையர் சொத்து எனப்படும்; இதுவே தடையற்ற மரபு வழி இறக்குரிமையில் பெறும் சொத்தாகும் என்று கூறப்பட்டது.

கூட்டுக் குடும்பத்தில் பிறந்த ஒருவருக்கு அவருடைய தந்தை உயிரோடிருந்தாலும் கூட்டுக் குடும்பச் சொத்தில் பாகப்பிரிவினை கோரும் உரிமை பெற்றுள்ளார். பரம்பரைச் சொத்தின் உதவியால் அடைந்த சொத்து ஆகியவை தடையற்ற மரபு வழி இறங்குரிமையில் அடங்கும். தடையற்ற மரபு வழிச் சொத்து எஞ்சுநர் உரிமைப்படி செல்லும். தந்தையினுடைய தனிப்பட்ட சொத்து அல்லது அவரது சுய சும்பாத்தியச் சொத்து அவருடைய மகனுக்கு எஞ்சுநர் உரிமைப்படி செல்லுமா அல்லது மரபு முறை இறங்குரிமைப்படி செல்லுமா என்ற வினாவிற்கு நீதிமன்றங்கள் மாறுபட்ட தீர்ப்பை வழங்கி உள்ளன.

(b) தடையுள்ள மரபுரிமை (Obstructed heritage):

மரபுரிமை ஏற்படுவதற்கு ஏதேனும் தடைகள் இருந்தால், அது **தடையுள்ள மரபுரிமை** அல்லது **'சப்ரதிபந்த தாயா'** எனப்படும். பிறப்பினால் அல்லாமல் சொத்துக்கு உரியவரான நபர் இறந்த பின் மற்றொரு நபர் அடையும் சொத்து, தடையுள்ள மரபு வழிச் சொத்து எனப்படும். இதில் ஒரு நபர் உயிரோடு இருப்பது, மற்றொரு நபர் சொத்தை அடையத் தடையாக இருக்கிறது. உதாரணமாக ஒரு நபர் குழந்தை இல்லாமல் இருந்தால், அவர் இறந்த பிறகே அவருடைய சொத்து பிற வாரிசுகளுக்குச் செல்வது தடையுள்ள மரபு வழிச் சொத்தாகும். தனிப்பட்ட சொத்தையும் (separate property) தடையுள்ள மரபுரிமைச் சொத்து எனக் கூறலாம்.

(1) **Sivaramakrishnan v. Kaveri Ammal**[2] – இவ்வழக்கில் தனிப் பட்ட சொத்து தடையுள்ள மரபுரிமைச் சொத்தாகும் என்றும், தனிப்பட்ட சொத்தின் மீதான உரிமை குறித்து பின்வரும் விளக்கங்களும் கூறப்பட்டது.

1. தனிப்பட்ட சொத்தின் மீதான உரிமை, அந்தச் சொத்தின் உரிமை யாளருக்கு மட்டுமே உண்டு. அவர் மகனுக்கு கூட அச்சொத்தில் உரிமை இல்லை.

1. (1926) 53 I.A. 204
2. I.L.R. (1956) Mad. 649

2. தனிப்பட்ட சொத்தின் உரிமையாளர் தன் விருப்பப்படி அச்சொத்தை பயன் படுத்தலாம். 3. தனிப்பட்ட சொத்தில் வாரிசுரிமைதான் ஏற்படுமேயன்றி, எஞ்சுநர் உரிமை ஏற்படாது.

[v] 1930–ன் இந்து கல்விப் பயன்கள் சட்டம் [Hindu Gains of Learning Act, 1930]

7. In what different ways can a Hindu acquire seprate property? What are the main feature of the Hindu Gains of Learing Act,1930? (ஒரு இந்து தனிச் சொத்தை எந்தெந்த வழிகளில் அடையலாம்? 1930–ஆம் ஆண்டின் இந்து கல்விப் பயன்கள் சட்டத்தின் முக்கிய கூறுகள் யாவை?)

(அல்லது)

Hindu Gains of Learning Act,1930 - Write short notes. (இந்து கல்விப் பயன்கள் சட்டம், 1930 – சிறு குறிப்பு வரைக.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

தனிச் சொத்து குறித்து யாஞ்ஞவல்கியம் கூறுவதாவது
ஒரு இந்துவுக்கு தனிச் சொத்து கிடைக்கும் பல்வேறு வழிகள்
இந்து கல்விப் பயன்கள் சட்டம், 1930

தனிச் சொத்து குறித்து யாஞ்ஞவல்கியம் கூறுவதாவது:

கூட்டுக் குடும்பத்தில் பங்குரிமையராக இருக்கும் ஒருவன் தனியாகவும் சொத்து வைத்துக் கொள்ள முடியும். "தந்தையின் நிலச் சொத்துக்குக் குந்தகம் ஏற்படாத வகையில், நண்பனிடமிருந்தோ, திருமணத்தின்போது கொடையாகவோ ஒருவன் பெறும் சொத்து மற்ற வாரிசுரிமை உடையவர்களுக்கு உரியதன்று; அது அவனின் தனிச் சொத்து", என்று யாஞ்ஞவல்கியம் கூறுகிறது. தனிச் சொத்தை ஒருவன் தன் விருப்பம் போல மற்றவர்களுக்கு கொடுக்கலாம்; பயன்படுத்தலாம் அதில் பிற பங்குரிமையருக்கு உரிமை கிடையாது.

ஒரு இந்துவுக்கு தனிச் சொத்து கிடைக்கும் பல்வேறு வழிகள்:

1. பிறப்பால் கிடைக்கும் சொத்து: தந்தை வழியில் 3 தலைமுறைக்கு அப்பாற்பட்டவரிடமிருந்து ஒருவருக்குக் கிடைக்கும் சொத்து, தனிச் சொத்தாகும்.

2. தடையுள்ள மரபுரிமையால் கிடைக்கும் சொத்து: ஒருவருக்குச் அவரது பிறப்பினால் சொத்து கிடைக்காமல்; ஆண் வாரிசின்றி இறந்து போகும்

உறவினர்களின் சொத்து அல்லது தாய் வழியில் வரும் சொத்து, அவரது தனிச் சொத்தாகும்.

3. கொடை வழி பெறும் சொத்து : ஒருவருக்குக் தனது தந்தையிட மிருந்து அல்லது அவர் வழி உறவினரிடமிருந்து அல்லது பிற உறவினர்களிடமிருந்து கொடையாகக் கிடைக்கும் சொத்தும், தனிச் சொத்தாகும். திருமணத்தின் பொழுது பெண் வீட்டாரிடமிருந்தும், ஏனைய நண்பர்களிடமிருந்தும் கிடைக்கும் அன்பளிப்பும் தனிச் சொத்தேயாகும்.

4. இழந்த சொத்தை மீட்டல் : கூட்டுக் குடும்பத்திற்குச் சொந்தமான சொத்து, சில சமயங்களில் ஏதேனும் ஒரு வழியில், அக்கூட்டுக் குடும்பத்தின் உடைமையிலிருந்து மற்றொருவருக்கு மாறிச் சென்றிருக்கலாம்.அப்படிப்பட்ட சூழலில் பங்குரிமையுடைய ஒருவன் மற்ற பங்குரிமையரின் துணையின்றி இழந்த சொத்தை மீட்டால், தனது இச்செயலுக்காக அச்சொத்தில் கால் பகுதியை (1/4) எடுத்துக் கொள்ளலாம். இவ்விதம் கிடைத்த சொத்தும், அவரின் தனிச் சொத்தேயாகும்.

5. கூட்டுக் குடும்பச் சொத்துக்குப் பாதகம் இன்றிச் சொத்துக் சேர்த்தல்: கூட்டுக் குடும்பச் சொத்திற்கு எந்த வகையிலும் பாதகம் ஏற்படாமலும், கூட்டுக் குடும்பச் சொத்தின் உதவி இல்லாமலும் ஒருவர் சேர்க்கும் சொத்தும், அவரது தனிச் சொத்தாகும். பிறரிடம் கடன் பெற்று வாங்கும் சொத்து, விபத்தில் இறந்ததினால் கிடைக்கும் இழப்பீட்டுத் தொகை, ஈட்டுறுதிப் பணம், வருங்காலச் சேமநல நிதி ஆகியவை இதில் அடங்கும்.

6. தனிச் சொத்தின் வருமானம் : ஒருவன் தனது வருமானத்தில் இருந்து வாங்கிய தனிப்பட்ட சொத்தில் இருந்து கிடைக்கும் வருமானமும் (வீட்டு வாடகை போன்று), அவரின் தனிச் சொத்தே ஆகும்.

7. அரசு அளிக்கும் கொடை : கூட்டுக் குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு அரசு ஏதேனும் சொத்தை கொடையாக அளித்தால், அது அவரின் தனிச் சொத்தாகும்.

8. பாகப்பிரிவினை மூலம் : பாகப்பிரிவினையால் கிடைக்கும் சொத்தும் தனிப்பட்ட சொத்தாகும்.

9. அறிவால் பெரும் சொத்து (Hindu Gains of Learning): ஒரு இந்து கூட்டுக் குடும்பத்தின் பங்குரிமையரில் ஒருவர், கூட்டுக் குடும்பச் சொத்தில் இருந்து செலவழிக்கப்பட்டு, அதன் பயனால் அவர் ஏதேனும் தனி வேலை பெற்று, அதன் மூலம் பெறும் வருமானமோ அல்லது வேறு வகையில் அவருக்கு வரும் வருமானமோ, கூட்டுக் குடும்பத்தையே சாரும் என்பது மிதாக்ஷரா முறையாகும். இது குறித்து அடுத்து வரும் இரு வழக்குகளைக் கவனிப்போமா?

Methram v. Rewachand[1] - இவ்வழக்கில் ஒருவர் தனது கூட்டுக் குடும்பத்தின் மூலம் சாதாரணக் கல்வியே பெற்றார். பின் அவர் வியாபாரியாகி, தரகராகிப் பெரும் பொருள் சேர்த்தார். அது அவருக்கு கூட்டுக் குடும்பம் தந்த கல்வியின் பயனால் கிடைத்த சொத்து அல்ல; அவர் பெற்ற கல்வியும் அவ்வளவு சிறப்பானது அன்று; தனது மனத்திட்பத்தாலும், திறமையாலும், தனி முயற்சியாலும் அச்சொத்தினைச் சேர்த்தார். எனவே இது அவரின் தனிப்பட்ட சொத்தேயாகும். என பிரிவி கவுன்சில் தீர்ப்பளித்தது. அடுத்த வழக்கில் இதற்கு முரணாக தீர்ப்பளிக்கப்பட்டது.

Gokul chand v. Hukum Chand-Nath Mal[2] - இவ்வழக்கில் ஒருவர் I.C.S. அதிகாரி. அவர் கூட்டுக் குடும்பச் சொத்தில் இருந்து செலவழிக்கப் பட்டு இலண்டன் சென்று படித்தவர். அப்படிப்பினால் அவர் பெற்ற வருமானம் தனிச் சொத்தா அல்லது கூட்டுக் குடும்பச் சொத்தா என்ற பிரச்சனை எழுந்த போது, அவ்வருமானம் கூட்டுக் குடும்பதையே சாரும் எனப் பிரிவி கவுன்சில் தீர்ப்பளித்தது.

இந்து கல்விப் பயன்கள் சட்டம், 1930

மேற்கண்ட முரண்பட்ட நிலைகளைக் களைய, **1930–ஆம் ஆண்டில் இந்து கல்விப் பயன்கள் சட்டம் (Hindu Gains of Learning Act, 1930)** எனும் ஒரு சட்டம் இயற்றப்பட்டது.

இச்சட்டத்தின்படி ஒருவன் (a) குடும்பத்தின் முழுச் செலவிலிருந்தோ அல்லது அதன் ஒரு பகுதிச் செலவிலிருந்தோ கல்வி பெற்றான் என்பதற்காகவோ; அல்லது (b) அவனும் அவனுடைய குடும்பமும், கூட்டுக் குடும்பத்தால் அவன் படிக்கும் காலத்தில் பராமரிக்கப்பட்டனர் என்பதற்காகவோ, அவனுடைய சொத்து கூட்டுக் குடும்பச் சொத்தாக இருக்க வேண்டியதில்லை, என்று மேற்படி சட்டம் குழப்பங்களை களைந்தது.

கல்வியினால், அது ஆரம்ப நிலையாகவோ, தொழில் நுட்பம் சார்ந்த தாகவோ அல்லது அறிவியல் தொடர்பானதாகவோ இருந்தாலும் அல்லது அக்கல்வி சிறப்பானதொன்றாகவோ அல்லது பொதுவானதாகவோ இருந்தாலும் (education wheather elementary, technical or scientific, special or general) அதன் பயனால் பெறப்படும் சொத்துக்கள் அனைத்தும் கல்வியால் பெற்ற பயனாகவே **(Gains of leanring)** கருதப்படும்.

[vi] கர்த்தா [Karta]

8. Examine the powers and functions of a Karta in a Hindu

1. (1918) 45 I.A. 41, 45.
2. (1921) 48 I.A. 162.

Family. Can a female be its Karta? (ஓர் இந்து கூட்டுக் குடும்பத்தின் கர்த்தா ஒருவரின் அதிகாரங்களையும் பணிகளையும் ஆராய்க. அதன் கர்த்தாவாக ஒரு பெண்மணி இருக்க இயலுமா?)

(அல்லது)

What are the reasons for which a Karta can alienate the joint family property? When father is the Karta, what are his Special Powers? (எந்தெந்த காரணங்களுக்காக கூட்டு குடும்பச் சொத்தினை கர்த்தாவானவர் உரிமை மாற்றம் செய்யலாம்? தந்தை கர்த்தாவாக இருக்கும் போது, அவருடைய தனிப்பட்ட அதிகாரங்கள் யாவை?)

(அல்லது)

Explain the postion and powers of a manager of joint Hindu family to construct debts and to alienate joint family propety. (கடன் செய்வதற்கும் மற்றும் கூட்டுக் குடும்பச் சொத்தை விற்பதற்கும் இந்து கூட்டுக் குடும்பத்தின் மேலாளரின் நிலையையும் மற்றும் உரிமைமையும் விளக்குக.)

(அல்லது)

State the duties and the powers of Karta. (கர்த்தாவின் கடமை களையும் அதிகாரங்களையும் கூறுக.)

(அல்லது)

Karta - Write short notes. (கர்த்தா– சிறு குறிப்பு வரைக.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

இந்து கூட்டுக் குடும்பம்
கர்த்தா அல்லது நிருவாகி - விளக்கம்
யார் கர்த்தாவாக இருக்க முடியும்?
கர்த்தாவின் பணிகள்
கர்த்தாவிற்கு வருமானத்தில் உள்ள உரிமை
பணம் பெறுவதில் கர்த்தாவின் பங்கு
கடனுறுதிச் சீட்டு எழுதிக் கொடுத்து கடன் பெறுவதில் கர்த்தாவின் உரிமை
கர்த்தாவின் அதிகாரங்கள்

இந்து கூட்டுக் குடும்பம் (Hindu Joint Family):

ஒரு இந்துக் கூட்டுக் குடும்பம் என்றால் அதில் கூட்டு வாழ்க்கை

இருப்பது-நிச்சயம். இக்கூட்டு வாழ்க்கையானது எவ்வித ஒப்பந்தத்தின் அடிப் படையிலும் ஏற்படாமல், இயற்கையாக, இரத்த பந்தத்தினாலும், பாசத்தினாலும் பிணைக்கப்பட்டு ஏற்படுவதாகும். சொல்லப்போனால், பொது மூதாதையர் ஒருவரின் நேர் மரபு வழி வந்தவர்கள் அனைவரும் அவர்களின் மனைவிமார்களும், மணமாகாத மகள்களும் உடனமைந்ததே ஒரு கூட்டுக் குடும்பம் ஆகிறது. இக்கூட்டுக் குடும்பத்தின் தலைவரே 'கர்த்தா' **(Karta)** ஆவார். இவர் நிருவாகி **(Manager)** என்றும் அழைக்கப்படுகிறார்.

கர்த்தா அல்லது நிருவாகி (Karta):

கர்த்தா (தந்தை அல்லது குடும்பத்தின் மூத்த ஆண் மகன்), இந்துக் கூட்டுக் குடும்பத்தில் உள்ள ஏனைய உறுப்பினர்களுக்கு உணவளித்தல், பராமரிப்புச் செய்தல், மதச் சடங்குகளை நிறைவேற்றுதல், குடும்பத்திற்காக வெளிக் காரியங்களில் ஈடுபடுதல் ஆகிய செயல்களைச் செய்யக் கூடியவர். கர்த்தா ஒரு இந்துக் கூட்டுக் குடும்பத்தில் பங்குதாரரும் அல்லர்; முகவரும் **(Agent)** அல்லர்; அவர் ஒரு பாதுகாவலரே **(Trustee). கர்த்தா பொறுப்பு களற்ற ஓர் முடிசூடா மன்னராவார் (Uncrowned King without liability).** இந்துக் கூட்டுக் குடும்பத்தின் மூத்த தலைமகனே கர்த்தா ஆவார். கூட்டுக் குடும்பச் சொத்தை நிருவகிப்பவர் கர்த்தா ஆவார். கர்த்தாவிற்குப் பின் அக்குடும்பத்தின் மூத்த ஆண் மகன் கர்த்தா ஆவார். மூத்த தலைமகன் கர்த்தா வாக ஆக இயலாத நிலைமையில் இருந்தால், அதற்கு அடுத்த ஆண்மகன் கர்த்தா ஆவார்.

யார் கர்த்தாவாக இருக்க முடியும் ?

1. தந்தைதான் ஒரு இந்துக் கூட்டுக் குடும்பத்தின் கர்த்தா ஆவார்.

2. தந்தைக்கு அடுத்து மூத்த தலைமகன் கர்த்தா ஆவார்.

3. அப்படிப்பட்ட மூத்த தலைமகன், மன உடல்நலக் கோளாரால் பாதிக்கப்பட்டிருந்தால், இளையவர் மற்ற சக பங்குரிமையர்களின் அனுமதியுடன் கர்த்தாவாகப் பொறுப்பேற்கலாம்.

4. மகன் இளவராக (Minor) இருந்தால் தனது பாதுகாவலர் வழியாகக் கர்த்தாவாகச் செயல்படுவார்.

5. இளவருக்குப் பாதுகாவலராக உள்ளவர் உண்மையான கர்த்தாவுக்கு உள்ள அதிகாரங்களைச் செலுத்த இயலாது.

6. ஒரு தாய் கர்த்தாவாகச் செயல்படமுடியாது. ஏனெனில் அவர் கூட்டுக் குடும்பத்தின் பங்குரிமையர் அல்ல.

Commissioner of Income Tax v. Govindan Sugar Mills[1]– இவ்வழக்கில் இந்துக் கூட்டுக் குடும்பத்தின் கர்த்தாவாகப் பங்குரிமையர்களில் ஒருவர்தான் செயல்பட முடியும். பெண் இந்துக் கூட்டுக் குடும்பத்தின் பங்குரிமையரல்ல. எனவே விதவையோ அல்லது தாயோ கர்த்தாவாகச் செயல்பட முடியாது எனத் தீர்ப்புக் கூறப்பட்டது.

கர்த்தாவின் பணிகள் :

ஒரு இந்துக் கூட்டுக் குடும்பத்தின் கர்த்தா, அக்குடும்பத்தில் உள்ள ஏனைய உறுப்பினர்களுக்கு உணவளித்தல் பராமரிப்புச் செய்தல், மதச் சடங்குகளை நிறைவேற்றுதல், குடும்பத்திற்காக வெளிக்காரியங்களில் தலையிட்டுச் செயல்படுதல் ஆகிய பணிகளைச் செய்ய வேண்டியவர்.

கர்த்தாவிற்கு வருமானத்தில் உள்ள உரிமை :

வருமானத்தைப் பெறவும், அதனைச் செலவழிக்கவும் கர்த்தாவுக்கு **அதிகாரம் உண்டு.** ஆனால் கர்த்தாவால் செலவழிக்கப்படும் அத்தொகை, கூட்டுக் குடும்பத்தின் நலனுக்காவும் கூட்டுக் குடும்பத்தின் தேவைக்காவும் இருக்க வேண்டும்.

கர்த்தாதான், கூட்டுக் குடும்பச் சொத்தின் பொறுப்பாளர் ஆவார். அவர் வருமானத்தை மீறி அனாவசியமாகச் செலவு செய்து, அது பங்குரிமையர்களின் அனுமதியின்றிச் செய்யப்பட்ட செலவாக இருந்தால், அதற்கு கர்த்தாதான் பொறுப்பாவார். அந்நிலையில் பங்குரிமையர்கள் பாகப்பிரிவினை கோரலாம் அல்லது அதிகப்படியான அச்செலவிற்குக் கர்த்தாவே பொறுப்பேற்று அதைத் திரும்ப செலுத்த வேண்டும். பங்குரிமையர்களிடமிருந்து பாகப்பிரிவினை கோரி செய்யப் படும் அறிவிப்பு கிடைக்கப் பெற்ற பின் கர்த்தா எச்செலவும் செய்தல் கூடாது.

பணம் கடன் பெறுவதில் கர்த்தாவின் பங்கு:

கர்த்தா தனது கடமைகளான கூட்டுக் குடும்ப உறுப்பினர்களுக்கு உணவளித்தல், பராமரிப்புச் செய்தல், மதச் சடங்குகளை நிறைவேற்றுதல், குடும்பத்திற்காக வெளிக் காரியங்களில் தலையிட்டுச் செயல்படுதல் ஆகிய பணிகளுக்காக பிறரிடமிருந்து கடன் பெறலாம். அவ்வாறாக அவர் (கர்த்தா) பெற்ற பணத்திற்கு ஏனைய பங்குரிமையர் பொறுப்பாவார்கள். பாகப்பிரிவினைக்கு முன் வாங்கிய எல்லாக் கடனுமே பங்குரிமையர் அனைவரையும் கட்டுப்படுத்தும்.

Ramanathan Chettiar v. Muthuraman Naidu and others[2] - இவ்வழக்கில் கர்த்தா ஒருவர் மட்டுமே இருந்து, அங்கு பிற ஆண்

1. (1966) A. SC. 24
2. (1941) 2 M.L.J. 816

பங்குரிமையர் இல்லாமல் இருந்தாலும், கர்த்தா வாங்கிய கடன் கூட்டுக் குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களையும் கட்டுப்படுத்தும் எனப்பட்டது.

கடனுறுதிச் சீட்டு (Promissory Note) எழுதிக் கொடுத்துக் கடன் பெறுவதில் கர்த்தாவின் உரிமை :

கூட்டுக் குடும்ப நலனுக்காகவும், தேவைகளுக்காகவும் கர்த்தா கடனுறுதிச் சீட்டில் கையெழுத்திட்டுப் பணம் வாங்கியிருந்தால் அது ஏனைய பங்குரிமையர்களையும் கட்டுப்படுத்தும். பங்குரிமையர்களுக்கு அவரின் மூதாதையர்களின் சொத்தில் இருந்து எவ்வளவு பங்குத் தொகை கிடைக்கிறதோ, அந்த அளவே கர்த்தா வாங்கிய கடனில் பங்குரிமையர்களுக்குப் பொறுப்புண்டு. பங்குரிமையர்களின் தனிப்பட்ட சொத்தில் (separate share) இருந்து, கர்த்தா வாங்கிய கடனை வசூலிக்க முடியாது.

கர்த்தாவின் அதிகாரங்கள்:

(a) கர்த்தா பிறருக்குக் கொடுத்த கடனைத் திரும்பக் பெற்ற பின் கடன் பெற்றவருக்கு அக்கடனிலிருந்து விடுவிப்பு (Discharge) அளிக்க உரிமை உண்டு.

(b) கடனுக்கு வட்டி கொடுக்கவும் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கவும் அதிகாரம் உண்டு.

(c) காலாவதியான கடனை (Time barred debt) மீண்டும் புதுப்பிக்க கர்த்தா கையெழுத்திடக் கூடாது. அப்படிச் செய்தால் கர்த்தாதான் அதற்குப் பொறுப்பு என **Thakar Das v. Mst. Putli**[1] என்ற வழக்கில் தீர்ப்புரைக்கப்பட்டது.

(d) கூட்டுக் குடும்பத்திற்கு வரவேண்டிய கடனை கர்த்தா தன் விருப்பப்படி வஜா (தள்ளுபடி) செய்யக்கூடாது என **Dasarath Rama v. Narasa**[2] என்ற வழக்கில் தீர்ப்பு கூறப்பட்டது.

(e) கர்த்தாவிற்குச் சொத்தை விற்பனை செய்யும் (Alienation) அதிகாரம் : பொதுவாக இந்துக் கூட்டுக் குடும்பத்தின் கர்த்தா ஏனைய பங்குரிமையர்களின் அனுமதியின்றி அசையாச் சொத்துக்களை விற்பனை செய்ய இயலாது. ஆனால் **கூட்டுக் குடும்பத்தின் நலனுக்காகவும், சட்டப்படியான தேவைக்காகவும்** ஏனைய பங்குரிமையர்களின் அனுமதியின்றிக் கூட்டுக் குடும்பச் சொத்தை விற்கலாம். மிதாக்ஷர முறையில் **மத சம்பந்தப்பட்ட கடமைகளை (Plous Obligation)** நிறைவேற்றுவதாக பங்குரிமையர்களோ அல்லது குடும்பத்தில் உள்ள ஏதாவதொரு உறுப்பினரோ அசையாச் சொத்தைத் தானமாக வழங்கலாம். அடைமானம் வைக்கலாம் அல்லது விற்கலாம். இதற்கு யாருடைய முன் அனுமதியும் தேவையில்லை.

1. (1924) 5 Lah. 317.
2. (1928) 51 Mad. 484.

கர்த்தா வாங்கிய கடன் குடும்ப நலனுக்காவும் குடும்பத் தேவைக்காவும் வாங்கியிருந்தால், அது இளவராக இருந்தாலும் வயது வந்தோராக இருந்தாலும் அவர்கள் அனைவரையும் அக்கடன் கட்டுப்படுத்தும்.

Hanooman Prasad v. Mussumat Babooee[1] - இவ்வழக்கில் ஒரு இந்துக் கணவன் தன் மனைவியையும், மகன் ஒருவனையும் விட்டு விட்டு இறந்து விடுகிறான். அவனுடைய விதவை அந்த மகனுக்கும், அவனது சொத்திற்கும் பாது காவலராகிறாள். தன் கணவரின் கடனைத் தீர்ப்பதற்காக அவ்விதவைத் தாய் மகனுடைய பாதுகாவலர் என்ற நிலையில், மகனின் சொத்துக்களை அடைமானம் வைக்கிறாள். எவ்விதக் கெட்ட எண்ணமுமின்றி (dishonest intention) அடைமானப் பத்திரத்தில் கணவனின் சொத்தைத் தன்னுடையது எனக் குறிப்பிடுகின்றாள். கீழ் நீதிமன்றத்தில் மிதாக்ஷர முறைப்படி விதவைக்கு வரையறுக்கப்பட் உரிமைதான் (limited estate) உண்டு; அவளுக்குச் சொத்தை மாற்றாக்கம் (alienation) செய்ய உரிமை இல்லை. எனவே விதவை வைத்த அடைமானம் இளவராகிய மகனைக் கட்டுப்படுத்தாது எனத் தீர்ப்புக் கூறப்பட்டது. ஆனால் பிரிவி கவுன்சில் இந்துச் சட்டப்படி விதவைக்குத் தனது கணவனின் சொத்தை மாற்றாக்கம் செய்ய உரிமை இல்லையென்றாலும், விதவைத் தாய் இளவரின் மேலாளர் (Manager) என்ற முறையில் இளவரின் தேவைக்காக, அவள் தனது கணவனின் சொத்தை மாற்றாக்கம் செய்யலாம் எனத் தீர்ப்புக் கூறியது.

மேலும் இத்தகைய மாற்றாக்கத்தில் சொத்தை யார் வாங்குகிறார்களோ அவர், அச்சொத்து அக்குடும்ப நன்மைக்காவும் இளவரின் தேவைக்காகவும்தான் மாற்றாக்கம் செய்யப்பட்டது என்பதை, தான் விசாரித்து நம்பியபின்தான் வாங்கினார் என்பதை அவர் (வாங்குபவர்) நிரூபிக்க வேண்டுமெனக் கூறப்பட்டது.

குடும்ப நலனுக்காகவும் மற்றும் சட்டப்படியான தேவைக்குமான (Family Benefits and Legal Necessity) செலவினங்கள் எவை? (அல்லது) எந்தெந்த காரணங்களுக்காக கூட்டுக் குடும்பச் சொத்தினை கர்த்தாவானவர் உரிமை மாற்றம் செய்யலாம்?

குடும்ப நலனுக்காகவும் சட்டப்படியான தேவைக்காகவும் செலவிடப்படும் செலவினங்கள் பின்வருபவையாக அமைகின்றது. இதற்காக கர்த்தா கூட்டுக் குடும்பச் சொத்தை விற்பனை செய்யலாம்.

1. அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகள்.

2. பங்குரிமையர்களையும், ஏனைய குடும்ப அங்கத்தினர்களையும் பராமரித்தலுக்கு ஆகும் செலவு.

3. பங்குரிமையர்கள் மற்றும் அவர்களது குழந்தைகள் ஆகியோரின் திருமணச் செலவிற்காக வாங்கும் பணம்.

1. 6 M.I.A. 393.

4. இறந்தவரின் ஈமக்கிரியைகளை நிறைவேற்றவும், குடும்பத்தின் மத சம்பந்தமான சடங்குகளை நிறைவேற்றவும் பெறப்படும் தொகை.

5. வழக்கு சம்பந்தமாக எழும் செலவினங்கள்

6. கர்த்தா அல்லது கூட்டுக் குடும்ப உறுப்பினர் எவரேனும் குற்றவியல் நடவடிக்கைக்கு ஆளானால், அதிலிருந்து அவரைக் காப்பாற்ற ஆகும் செலவு.

7. குடும்பத்திற்காக வாங்கிய கடன்.

8. மேலும் ஏனைய பங்குரிமையர்களினால் ஒத்துக் கொள்ளப்பட்டு, அது நியாயமான செலவாக இல்லாமல் இருந்தாலும் அது மற்றைய பங்குரிமையர் களையும் கட்டுப்படுத்தும்.

9. அளவுக்கு அதிகமாகச் செலவு செய்ய, அது பங்குரிமையர்களின் அனுமதிக்கு உட்பட்டோ, அனுமதி இல்லாமலோ செய்யப்பட்டிருந்தாலும் அது தவிர்தகு (Voidable) கடனாகும்.

(f) தானம் அளிப்பதில் கர்த்தாவின் அதிகாரம் : பொதுவாக அசையா சொத்தை கர்த்தா தானம் கொடுக்கக் கூடாது. ஆனால் குடும்ப நலனுக்காகவும், சட்டத் தேவைகளுக்காகவும், மதக் கடமைகளுக்காகவும் அசையாச் சொத்தைக் தானம் கொடுக்கலாம். கர்த்தா முழுச் சொத்தையும் தானம் கொடுக்கக் கூடாது அல்லது ஒரு மகனுக்கு மட்டுமே கொடுக்கவும் கூடாது.

(g) கர்த்தா புதிய தொழிலில் ஈடுபடுதல் கூடாது (No new business): ஒரு இந்துக் கூட்டுக் குடும்பத்தின் கர்த்தா புதிய தொழில் எதையும் தொடங்கக் கூடாது. ஆனால் குடும்ப நலனுக்காகவும் குடும்பத்தின் சட்டப்படியான தேவைக்காவும் புதிய தொழிலைத் தொடங்கலாம். அப்படிப் புதிய தொழில் தொடங்கும் பொழுது குடும்பத்தின் ஏனைய வயது வந்த பங்குரிமையர்களிடமும் அனுமதி பெற வேண்டும் என **Benares Bank v. Hari Narain**[1] – எனும் வழக்கில் பிரிவி கவுன்சில் தீர்ப்புரைத்தது.

(h) கர்த்தா கூட்டாளியாகச் செயல்படல் (Partnership) : ஒரு இந்துக் கூட்டுக் குடும்பத்தின் கர்த்தர் பிற வெளி ஆட்களுடன் கூட்டாளியாகச் சேர்ந்து ஒரு புதிய தொழிலை தொடங்கக் கூடாது. இத்தொழிலால் இலாபம் வந்தால், அதில் அக்குடும்பத்தின் ஏனைய பங்குரிமையர்களுக்கும் பங்குண்டு. ஆனால் நட்டம் வந்தால் அது கர்த்தாவை மட்டுமே சாரும் என்று **Commissioner of Income Tax v. Kalu Babu**[2] என்ற வழக்கில் கூறப்பட்டது.

(i) கர்த்தாவிற்கு இசைவுத் தீர்ப்பு (Arbitration) அளிக்கும் அதிகாரம் : கர்த்தா ஒரு இந்துக் குடும்பத்தில் வரும் சிக்கல்களைத் தீர்த்து

1. (1932) 54 All. 564
2. (1959) A.S.C. 1289

வைக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார். அவரது முடிவே இறுதியானது. அவரது குடும்பத்திற்கும் மற்றொரு குடும்பத்திற்கும் இடையே எழும் பிரச்சனைகளில் கர்த்தா எடுக்கும் முடிவே அவரது குடும்பத்தில் ஏனைய உறுப்பினர்களையும் கட்டுப்படுத்தும்.

(j) கர்த்தாவிற்கு உள்ள வழக்குத் தொடரும் அதிகாரம் : ஒரு இந்துக் கூட்டுக் குடும்பத்தின் கர்த்தா தனது குடும்பத்தின் சார்பாக வழக்குத் தொடரலாம். அப்படித் தொடரப்படும் வழக்கு, தனது குடும்பத்தில் உள்ள வயது வந்த பிற உறுப்பினர்களின் அனுமதியுடன்தான் தொடர்ந்துள்ளார் என்றும், இளவர்களைப் பொறுத்தவரை அவர்களது நலனுக்காவும் கர்த்தா வழக்குத் தொடர்ந்துள்ளார் என்றும் பொருள் கொள்ளப்படும். தனிப்பட்ட முறையில் (personally) கர்த்தா விற்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் தீர்ப்புக் கூறப்பட்டு, அத்தீர்ப்பு செயல் படுத்தப்படும் பொழுது அது கர்த்தாவிற்குச் சேர வேண்டிய சொத்தின் பங்கை மட்டுமே கட்டுப்படுத்துமே தவிர, ஏனைய பங்குரிமையர்களின் சொத்தை அத்தீர்ப்பாணை (Decree) கட்டுப்படுத்தாது.

(k) சமாதானம் செய்வதில் கர்த்தாவின் நிலை (Compromise): இந்துக் கூட்டுக் குடும்பத்தின் கர்த்தா செய்து கொள்ளும் சமாதானம், குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களையும் கட்டுப்படுத்தும். ஆனால் நீதிமன்றத்தில் உள்ள வழக்கில், தானாகச் (கர்த்தா) செய்து கொள்ளும் சமாதானத்தை நீதிமன்றம் நிராகரிக்கலாம் அல்லது ஏற்றுக் கொள்ளவும் செய்யலாம்.

கூட்டுக் குடும்பக் கணக்கு வழக்கில் கர்த்தாவின் கடமை:

(a) கர்த்தா கூட்டுக் குடும்பத்தில் ஆகும் செலவுகளுக்கு வரவு – செலவு கணக்கு வைத்திருக்க தேவையில்லை.

(b) வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள குடும்பமாக இருந்தால், அங்கு கர்த்தா வரவு – செலவு கணக்கு வைத்திருக்க வேண்டும்.

(c) பங்குரிமையர்களில் ஒருவர் பாகப்பிரிவினை கோரி அறிவிப்புக் கொடுத்தால் அன்றைய தேதியிலிருந்து கர்த்தா வரவு செலவுக் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும்.

ஆனால் தயாபாக முறையில் பாகப்பிரிவினை கேட்காவிட்டாலும் கர்த்தா வரவு – செலவுக் கணக்கை வைத்திருக்க வேண்டும், எனக் கூட்டுக் குடும்பத்தின் பங்குரிமையர்கள் கோராலாம். அவ்வாறு செய்ய கர்த்தா மறுத்தால் நீதிமன்றம் வழியாக கணக்கு வழக்குகளை வைத்து வரும்படிக் கோரலாம். இவ்வாறாக இந்துக் கூட்டுக் குடும்பத்தின் கர்த்தாவானவர் ஒரு முடிசூடா மன்னராகச் செயல்பட்டாலும், அவருக்குப் பொறுப்புகளும் இருக்கவே செய்கின்றன எனத் தெரிகிறது.

2 கூட்டுக் குடும்பத்தில் கடனும் மாற்றாக்கமும் [Debts and Alienation in Joint Family]

[i] மதக் கடமை [Pious Obligation]

1. Pious obligation – Write short notes. (மதக் கடமை – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Write an essay about the pious obligation of the son to discharge the liablities of the father. (தந்தை பட்ட கடனை அடைக்க வேண்டிய மகனின் அறக் கடப்பாடு பற்றி ஒரு கட்டுரை வரைக.)

(அல்லது)

Explain the nature and extent of son's pious obligation to pay the debts of the father. Is the son liable to pay the post - partition debts of his father? (தந்தையின் கடன்களைத் தீர்க்க மகனுக்குள்ள மதக் கடமையின் தன்மையினையும், அளவினையும் விளக்குக. பாகப்பிரிவினைக்குப் பின் தந்தை பட்ட கடன்களைத் தீர்க்க மகன் கடப்பாடு உடையவரா?)

(அல்லது)

Examine the scope and extent of the doctrine of pious obligation in Hindu law. What are the debts left outside the scope of pious obligation? (இந்துச் சட்டத்தில் மதக்கடமை கோட்பாட்டின் எல்லையையும் அளவினையும் ஆராய்க. மதக் கடமை கோட்பாடு எல்லைக்கு அப்பாற்பட்ட கடன்கள் யாவை?)

(அல்லது)

"Under the Hindu Law the liablity of the son to pay the debts of his father depends upon the nature of the debt and not upon the nature of the estate". (இந்து சட்டத்தின் கீழ் தந்தை பட்ட கடனை மகன் திருப்பி செலுத்த வேண்டிய பொறுப்பு நிலை அந்தக் கடனின் இயல்பைப் பொறுத்து உள்ளதே தவிர, அவன் பெறும் சொத்தின் இயல்பைப் பொறுத்தது அல்ல". தெளிவாக்குக)

முன்னுரை :

ஒரு இந்து கூட்டுக் குடும்பத்தின் கர்த்தா வாங்கும் கடன்கள் இரு வகைப் படும். அவை 1. கூட்டுக் குடும்ப நலனுக்காவும் சட்டப்பூர்வமான தேவைக்காகவும் வாங்கப்பட்ட கடன். 2. கர்த்தா தனது தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக வாங்கப்பட்ட கடன். இவற்றை பின்வருமாறு சற்று விரிவாகக் காண்போமா?

1. கூட்டுக் குடும்ப நலன் மற்றும் சட்டப்பூர்வமான தேவைக்காக வாங்கப்பட்ட கடன் (Debts for Legal Necessity and Family Benefits):

(a) அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகள்; (b) பங்குரிமையர்களையும், ஏனைய குடும்ப அங்கத்தினர்களையும் பராமரித்தலுக்கு ஆகும் செலவு; (c) பங்குரிமையாளர்கள் மற்றும் அவர்களது குழந்தைகள் ஆகியோரின் திருமணச் செலவிற்காக வாங்கப்பட்ட கடன்; (d) இறந்தவரின் ஈமக்கிரியைகளை நிறைவேற்றவும், குடும்பத்தில் மத சம்பந்தமான சடங்குகளை நிறைவேற்றவும் பெறப்படும் தொகை; (e) வழக்கு சம்பந்தமான செலவினங்கள்; (f) கர்த்தாவோ அல்லது கூட்டுக் குடும்பத்தின் எந்த ஒரு நபரோ கிரிமினல் நடவடிகைக்கு உள்ளானால் அதிலிருந்து அவரைக் காப்பாற்ற ஆகும் செலவு; (g) குடும்பத்திற் காக வாங்கிய கடன்.

2. கர்த்தா தனது தனிப்பட்ட தேவைக்காக வாங்கும் கடன்:

கர்த்தா தனது தனிப்பட்ட சொந்தச் செலவிற்காக வாங்கிய கடனை (குதிரைப் பந்தயத்திற்கு, மது அருந்துவதற்கு, கற்பு நெறி தவறிய பெண்களின் சகவாசத்திற்கு), கர்த்தாவின் தனிப்பட்ட சொத்து இருந்தால் (Separate Propety) அதன் மூலம் அக்கடனைத் தீர்க்கலாம். கர்த்தா தனிப்பட்ட முறையில் வாங்கிய கடனுக்குக் கர்த்தாவே பொறுப்பு. ஆனால், அக்கடனைக் கட்டும் முன்பே கர்த்தா இறந்துவிட்டால் அவரது மகனுக்கு தனது தகப்பனாரான கர்த்தாவின் தனிச் சொத்து போய்ச் சேர்ந்திருந்தால், அந்த மகனுக்கு எவ்வளவு சொத்து தந்தையிடமிருந்து வருகிறதோ, அந்த அளவிற்குத்தான் தகப்பனாரின் கடனைத் தீர்க்க மகன் கடமைப்பட்டவராவார். தகப்பனார் பட்ட தனிப்பட்ட கடனைத் தீர்க்க மகன் தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க இயலாது.

மதக் கடமையின்படி கட்டும் கடன் அல்லது அறக் கடப்பாடு (Pious obligation):

தந்தை, பாட்டன், பாட்டனின் தந்தை ஆகியோர் வாங்கிய கடனை அடைக்க வேண்டியது, மகன், பேரன், கொள்ளுப் பேரன் ஆகியோரின் கடமை.

இந்தக் கடமை **மதக் கடமை** எனப்படுகிறது. ஆனால் வாங்கப்பட்ட கடனானது நற்காரியத்திற்காக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அதனை அடைக்க வேண்டிய கடமை ஏற்படுகின்றது. மாறாக, அறக்கோட்பாடுகளுக்கு முரணாக பெற்ற கடனை மகன் கட்டத் தேவையில்லை (அவ்வியவகாரிகா கடன்)

பெற்றோர் அல்லது பாட்டன்கள் பெற்ற கடனை அடைக்க வேண்டும் என்று சாத்திரங்கள் கூறுவதில் மதரீதியாக அர்த்தம் உண்டு. கடன் என்பது பெரிய பாவம். ஆகவே, மகனோ, பேரனோ, கொள்ளுப் பேரனோ அதை அடைக்க வேண்டும்; இல்லையென்றால், கடன்பட்டவருக்கு விமோசனம் கிடைக்காது. இறந்து போன தந்தைக்கு, பாட்டனுக்கு, கொள்ளுப் பாட்டனுக்கு விமோசனம் கிடைப்பதில் உதவ வேண்டியது மகனின், பேரனின், கொள்ளுப் பேரனின் கடமையாகும். மகனாகப் பிறந்தவன், தந்தை நரகத்திற்குச் செல்லாமல் இருக்க உதவுவது அவருடைய தலையாய கடமையாகும்.

"தந்தையின் கடன்களை யார் அடைக்கவில்லையோ அவன் கடன் காரனின் (creditor) வீட்டில் அடிமையாக, வேலைக்காரனாக அல்லது பெண்ணாக அல்லது நான்கு கால் பிராணியாக மறுபடியும் பிறப்பான்" என்று **பிரகஸ்பதி** கூறுகிறார்.

Ramasami v. Ulaganatha[1] – இவ்வழக்கில் இந்து தருமப்படி தகப்பன்பட்ட கடனுக்கு தார்மீகப் பொறுப்பேற்றுத் திரும்பக் கொடுக்காவிட்டால், அத்தகப்பனின் ஆவி, மேல் உலகில் வேதனை அடையும்; அவரது ஆன்மா நிம்மதி இல்லாமல் இந்த உலகத்தையே சுற்றிக் கொண்டிருக்கும்; மறு உலகிற்குப் போகாது. ஆகவே தகப்பன்பட்ட கடனை மகன் தார்மீகப் பொறுப்பேற்றுக் கட்ட வேண்டும் என கருத்துரைக்கப்பட்டது.

மகனின் பொறுப்பு நிலை (Liability) :

Masit Ullah v. Damodar Prasad[2] - இவ்வழக்கில் மகனின் பொறுப்பு நிலை பற்றி **நீதிபதி வாடியா** பின்வருமாறு கூறுகிறார். "எப்படி இருந்தாலும் மகனின் பொறுப்பு நிலை என்பது, தனிப்பட்ட பொறுப்பு நிலை அன்று. அது தந்தையோடு கூட்டாக இருக்கும் மகன்களுக்கும், அவர்களுடைய பங்குரிமைச் சொத்திலுள்ள பாத்தியதைக்கும் பொறுப்பு நிலை உரியது. தந்தையின் பொறுப்பு நிலை இருக்கும் வரை, மகனின் பொறுப்பு நிலை இருக்கும். கடனானது தந்தையைப் பொறுத்த அளவில் காலாவதியாகி விட்டால், மகனின் பொறுப்பு நிலையும் தீர்ந்துவிடும். ஆங்கிலச் சட்டத்தினைப் போன்று, இது கூட்டு அல்லது தனித்தனியான பொறுப்பு (Joint and Several Liablity) அல்ல".

1. (1899) 22 Mad. 49-63
2. (1926) 53 I.A. 204.

பாகப்பிரிவினைக்குப் பின் தந்தை பட்ட கடன் (Post Partition debt):

பாகப்பிரிவினைக்குப் பின்னால் தந்தை வாங்கிய கடனுக்கு மகன் பொறுப்பாளியல்ல. ஆனால், தந்தை பாகப்பிரிவினைக்கு முன்னால் கடன் வாங்கியிருந்தால், பாகப்பிரிவினைக்குப் பின் மகன் எவ்வளவு சொத்தை அடைந்தானோ அவ்வளவுக்கும் பொறுப்பாளி. பாகப்பிரிவினைக்குப் பின் தந்தை மீது மட்டுமே வழக்கு தொடர்ந்து தீர்ப்பாணை பெற்றிருந்தால், அதை மகனுக்கு எதிராக நிறைவேற்ற முடியாது.

மதக் கடமையின்படி கட்டும் கடனால் ஏற்படும் விளைவுகள்:

1. மதக் கடமையின்படி கட்டும் கடன் என்ற கோட்பாடு இருப்பதால் தான், தந்தை தன் மகனுக்கு சொத்தை விட்டுச் செல்கிறார். 2. இ ம் மு ை ற நடைமுறையில் உள்ளதால்தான் கடன் கொடுப்பவரும் கடன் கொடுக்கிறார். 3. மகன் உயிருடன் உள்ளவரை தன் தகப்பன் (நற்காரியங்களுக்காக) பட்ட கடனைத் திருப்பிச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளான். 4. தகப்பன் உயிருடன் இருந்தாலோ அல்லது இறந்துவிட்டாலோ அவர் பட்ட கடனை மகன் கட்டவேண்டும். 5. பாகப் பிரிவினைக்குப் பின்னும் தந்தை ஒரு கடனுக்குப் பொறுப்புறுதி (Surety) கொடுத்திருந்தாலும் அக்கடனையும் மகனே கட்டவேண்டும். 6. காலம் கடந்த கடனுக்கு (Time barred Debt) மகன் பொறுப்பேற்கத் தேவையில்லை.

அவ்வியவகாரிகா கடன் (Avyavakarika Debt):

நற்காரியங்களுக்காக மூதாதையரால் வாங்கப்படும் கடனைக் கட்டவே மகனுக்கு மதக் கடமை உண்டு. ஆனால் "நல்லொழுக்கத்திற்கு எதிரான காரியங்களுக்காக வாங்கப்படும் கடன்களுக்கு" மதக் கடமை கிடையாது. அத்தகைய கடனை மகனோ, பேரனோ, கொள்ளுப் பேரனோ அடைக்க வேண்டிய அவசியமில்லை. அத்தகு நல்லொழுக்கத்திற்கு எதிரான காரியங்கள் வருமாறு:

1. போதை தரக்கூடிய மதுபானத்திற்காக வாங்கப்பட்ட கடன்; 2. சூதாட் டத்திற்காக வாங்கப்பட்ட கடன். 3. பணமே வாங்காமல் ஏற்பட்ட கடன் (Debt without consideration). 4.பிறருக்குப் பொறுப்பேற்று அந்த ஈட்டுறுதியால் (surety) ஏற்பட்ட கடன்; 5. பெண்ணின் மோகத்தால் அந்த மதிமயக்கத்தில் பெறப்பட்ட கையெழுத்தை வைத்து ஏற்பட்ட கடன்; 6. அபராதங்கள்; 7. வரிகள்; 8.வணிகக் கடன் (Commercial Debt)

பழைய மற்றும் புதிய கோட்பாடுகளின் வேற்றுமைகள் (Difference betwen Old and New Theory):

1. தகப்பன் சொத்தை மகனுக்காக விட்டுச் சென்றாலும், செல்லா

விட்டாலும் தகப்பன் பட்ட கடனை மகன் கட்டவேண்டும், என்பது பழைய கோட்பாடு. ஆனால் புதிய கோட்பாட்டில் தகப்பன் மகனுக்குச் சொத்தை விட்டுச் சென்றிருந்தால்தான் தகப்பன் பட்ட கடனை மகன் கட்டவேண்டும்.

2. பழைய கோட்பாட்டின்படி தகப்பனார் இறந்தபின்தான் அவர்பட்ட கடனை மகன் அடைக்கவேண்டும். ஆனால் புதிய கோட்பாட்டில் தகப்பனார் உயிருடன் உள்ள போதே தகப்பன், மகன் இருவரின் சொத்துமே தகப்பன் பட்ட கடனுக்கு கட்டுப்பட்டதாகும்.

3. பழைய கோட்பாட்டில் இளவருக்கு கடப்பாடு இல்லை. ஆனால் புதியதில் இளவருக்கு தந்தையின் சொத்தில் எந்த அளவுக்கு உரிமை உள்ளதோ அதே அளவுக்கு பொறுப்பும் உண்டு.

[ii] அவ்வியவகாரிகா கடன் [Avyavakarika Debt]

2. Avyavakarika debt – Write short notes. (அவ்வியவகாரிகா கடன் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

What are Avyavaharikha debts? On what grounds can such debts be challenged and by whom? (அவ்யவஹாரிகக் கடன்கள் என்றால் என்ன? என்ன காரணங்களால் அத்தகைய கடன்கள் யாரால் எதிர்க்கப்படலாம்?)

(முந்தய வினாவின் விடையில் இறுதியிலும் அடுத்து வரும் வினாவிலும் காண்க)

[iii] முன்கடன் [Antecedent Debt]

3. Explain the nature of 'antecedent debt'. Mention the essential conditions for making such a debt binding on a son in respect of an alienation made by the father. (முன்கடனின் இயல்பினை விளக்குக. தந்தையால் ஏற்படுத்தப்பட்ட உடைமை மாற்றம் குறித்த கடன் மகனைக் கட்டுப்படுத்துவதற்கான முக்கிய நிபந்தனைகளை எடுத்துரைக்க.)

(அல்லது)

Antecedent debt - Write short notes. (முன் கடன் – சிறு குறிப்பு வரைக.)

முன்கடன் – விளக்கம் :

'முன்கடன்' என்றால் முன்னதாகப் பெற்ற கடனாகும். அதாவது காலத்திலும்

விஷயத்திலும் வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள பிரச்சனைக்கு முன்னதாக அக்கடன் இருக்க வேண்டும். வழக்கிலுள்ள பிரச்சனையின் ஒரு பகுதியாக அக்கடன் இராமல், அதற்கு முந்தியதாக, தனியானதாக இருக்க வேண்டும்.

Madusudan v. Bhagavan[1]–எனும் வழக்கில் ஒரு கூட்டுக் குடும்பத்தின் தந்தை, A என்பவரிடமிருந்து ரூ. 2,000/– கடன் வாங்குகிறார். இத்தொகையை அவர் தனது சொந்த பயன்பாட்டிற்காக வாங்குகிறார். பின்னர் கூட்டுக் குடும்பச் சொத்தை அக்கடனுக்கு பிணையாக (security) அவர் A–யிடம் அடைமானம் வைக்கிறார். கடன் வாங்கிய தொகையை தகாத காரியங்களுக்காக அல்லாமல் (not used to immoral purpose) நற்பணிக்கே, அத் தந்தை செலவு செய்கிறார். இங்கு அந்த அடைமானம், தந்தையை மட்டுமல்லாது, அவரது மகன்கள் இருவரையும் கட்டுப்படுத்தக் கூடியதே. இங்கு அந்தக் கடன் முன்கடனாகும். காலத்தாலும் விஷயத்தாலும் அது அடைமானத்திற்கு முந்தியது. சுருங்கக்கூறின் ஏற்கனவே உள்ள ஒரு கடனைத் தீர்க்கும் பொருட்டு கூட்டுக் குடும்பச் சொத்தை அடைமானம் வைப்பது அல்லது விற்பது முன் கடனாகும்.

தந்தையால் செய்யப்படும் சொத்து மாற்றம் குறித்த கடன் மகனைக் கட்டுப்படுத்துவதற்கான முக்கிய நிபந்தனைகள்:

ஒரு கூட்டுக் குடும்பத்தின் தந்தையானவர் தன்னால் தன் சொந்த நலனுக்காக வாங்கப்பட்ட கடனை தீர்க்கும் பொருட்டு, கூட்டு குடும்பச் சொத்தை, அதில் தனது மகனுக்கு இருக்கும் உரிமையுடன் விற்கலாம் அல்லது அடைமானம் வைக்கலாம். ஆனால் அது தனது மகனை கட்டுப்படுத்த வேண்டுமெனில் பின்வரும் இரண்டு முக்கிய நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவேண்டும்.

(a) வாங்கப்பட்ட கடனானது சொத்து மாற்றத்திற்கு முந்தியதாக இருக்க வேண்டும் (the debt was antecedent to the alienation).

(b) வாங்கப்பட்ட கடனானது தகாத காரியங்களுக்காக அல்லாமல் நற்பணிக்கே செலவு செய்யப்பட்டிருக்க வேண்டும். (the debt was not incurred for an immoral purpose)

நிரூபிக்கும் பொறுப்பு (Burden of Proof):

மகனை பொறுப்புக்குள்ளாக்க வேண்டுமெனில் முன் கடன் இருந்தது என்பதை சொத்து மாற்றம் பெறுபவரே (Alienee) நிரூபிக்கவேண்டும். அதுபோல், தந்தை (ஒழுங்கான) நற்காரியங்களுக்காக கடன் வாங்கவில்லை என்பதை மகன்தான் நிரூபிக்கவேண்டும். தந்தை ஒழுக்கக்குறைவான வாழ்வு வாழ்ந்தார் என்று மட்டும் மகன் நிரூபித்தால் போதாது. அந்த ஒழுக்கக் குறைவான வாழ்விற்கும், வாங்கிய கடனுக்கும் நேரடியான தொடர்பு உண்டு என்பதையும் நிரூபிக்க வேண்டும்.

1. (1929) 53 Bom. 444

3 பாகப்பிரிவினை [Partition]

1. Explain what is meant by 'Partition' and state the different modes of effecting Partition amongst the Coparceners. (பாகப் பிரிவினை என்பதன் பொருளை விளக்கி பங்குரிமையர்களுக்கிடையே பாகப் பிரிவினையை ஏற்படுத்தும் பல்வேறு முறைகளை குறிப்பிடுக.)

(அல்லது)

What is meant by Partiton? How is a partiton effected? What are the effects of a Partition? (பாகப்பிரிவினை என்பதன் பொருள் யாது? எவ்வாறு ஒரு பாகப்பிரிவினை செயல்படுத்தப்படுகிறது? பாகப் பிரிவினை ஒன்றின் விளைவுகள் யாவை?)

(அல்லது)

Explain Partition, its kinds and consequences.(பாகப் பிரிவினையும், அதன் வகைகளையும் மற்றும் விளைவுகளையும் விளக்குக.)

(அல்லது)

Explain the different modes of effecting Partition and examine the effects of Partition. (பாகப்பிரிவினையை ஏற்படுத்தும் வெவ்வேறு விதிமுறைகளை விவரித்தும் பாகப்பிரிவினையின் விளைவுகளையும் ஆராய்க)

நினைவுக் குறிப்புகள் [Hints]

பாகப்பிரிவினை என்பதன் பொருள்
பாகப்பிரிவினை எப்பொழுது ஏற்படுகிறது?
பாகப்பிரிவினை ஏற்படுத்தும் பல்வேறு முறைகள்
தாயின் வயிற்றில் இருக்கும் குழந்தையும் பாகப்பிரிவினையும்
பாகப்பிரிவினையின் விளைவுகள்

பாகப்பிரிவினை என்பதன் பொருள் :

மனிதன் ஆதிகாலத்தில் சிறு சிறு கூட்டங்களாக வசித்து வந்தான். அப்பொழுது அவர்களிடையே குடும்பம் என்ற உணர்வு இருந்ததில்லை. ஆனால் நாளடைவில் அச்சிறு கூட்டம் வளர்ந்து பெரியதாகிய பின்னர், மனிதர்களுக் கிடையில் பகை மனப்பான்மை தோன்றியது. 'எனது' என்ற எண்ணம் வளர்ந்தது இதனால் 'குடும்ப உணர்வு' அவர்களிடையே தலை தூக்கியது. 'கூட்டம்' போய் 'குடும்பம்' என்ற நிலை தோன்ற ஆரம்பித்தது. மேலும் மனிதர்கள் சற்று நாகரிகம்

அடைந்து சமுதாய வாழ்விலும் சில ஒழுங்கு முறைகளை மேற்கொண்டதும், குடும்ப அமைப்பு சமுதாயத்தின் முக்கிய அங்கமாகி ஆல் போல் தழைத்து அருகு போல் வேரூன்றியது. இதனால், ஒருவன் மற்றவனை விடக் கெட்டிக்காரனாகவும், திறமை உள்ளவனாகவும், பல்வேறு வகையில் உழைத்துச் சொத்துச் சேர்க்கத் தெரிந்தவனாகவும் இருக்கவே, தான் சம்பாதித்ததைத், தானும் தன்னுடைய குடும்பம் மட்டிலும் அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் அவனிடம் எழுந்தது. மற்ற பங்குரிமையர்களிடமிருந்து தனது பங்கு சொத்தை பிரித்துக் கொள்ள வேண்டும் எனும் எண்ணம் தோன்றியது. இவ்வாறு தனிமனிதத்துவம் கூட்டுக் குடும்பத்தில் ஏற்படவே படிப்படியாக பங்குரிமைச் சொத்தில் பாகம் பிரித்துக் கொள்ளும் நிலையும் ஏற்பட்டது. சுருங்கக்கூறின் பங்குரிமைச் சொத்தில் ஒரு பங்குரிமையர் தனது பாகத்தை பிரித்துக் கொள்ளும் முறைக்கு அல்லது தனது பாகத்தை கோரும் முறைக்கு 'பாகப்பிரிவினை ' எனப்பொருள் கொள்ளலாம்.

பாகப்பிரிவினை எப்பொழுது ஏற்படுகிறது?

இந்தியாவில் பெரும் பகுதியில் பின்பற்றப்படும் **மிதாக்ஷர சட்டத்தில்** கூறப்பட்டிருக்கும் பங்குரிமையில் ஒவ்வொரு பங்குரிமையருக்கும் இவ்வளவு பங்கு என்ற வரையறை கிடையாது. பங்குரிமை இருக்கும் வரை அவர்கள் சொத்தைக் கூட்டாகவே அனுபவிக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சொத்து உரியது என்ற பங்கோ அல்லது பாகுபாடோ கிடையாது. ஆனால் பாகப்பிரிவினை, ஒவ்வொருவருக்கும் உரிய பங்கு என்ன என்பதைத் திட்டவட்டமாகத் தீர்மானிக் கிறது. எனினும் ஒவ்வொன்றையும் அளந்து பங்கு போட்டு, அவற்றை தனியாக சுவாதீனம் செய்து கொடுக்க வேண்டும் எனும் அவசியம் இங்கு இல்லை. பங்குரிமையருக்கு உள்ள பங்கு என்ன என்பதைத் தீர்மானித்து விட்டாலோ, சொத்து, கூட்டானது என்ற கண்ணோட்டம் மறைந்து விடும். அதாவது பாகப் பிரிவினை 'கூட்டு' என்ற அந்தஸ்தை அறுத்து விடும். பாகப்பிரிவினை கோருவது பங்குரிமையரின் மறுக்க முடியாத உரிமை. மற்றப் பங்குரிமையர்கள் விரும்புகிறார் களா இல்லையா என்பது முக்கியமில்லை. ஒருவன் பாகப்பிரிவினை வேண்டும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டால் அதை நடத்தியே தீரவேண்டும். பாகப் பிரிவினை கேட்பதற்குரிய காரணங்கள் என்னவாக இருந்தாலும், உரிமை வயது அடையாதவர் குடும்பத்தில் இருந்தாலும் பாகப்பிரிவினை நடந்தாக வேண்டும்.

பாகப்பிரிவினையை ஏற்படுத்தும் பல்வேறு முறைகள் (The different modes of effecting Partition) :

1. **தந்தை செய்யும் பாகப்பிரிவினை:** தந்தையே தான் உயிரோடு இருக்கும்போது குடும்பத்தில் பாகப்பிரிவினை செய்யலாம்; அது அத்தனை மகன்களையும் கட்டுப்படுத்தும்; எனினும் இது மகன்கள் பாகப்பிரிவினைக்கு ஒப்புதல் அளிக்கிறார்கள் என்பதால் அன்று. தனக்குள்ள தந்தை என்ற தகுதியின்

அடிப்படையில் தந்தை பாகப்பிரிவினை செய்யலாம். தனக்கும் மற்றவர்களுக்கும் தந்தை சொத்தை சமமாக பிரிப்பதென்றால், அவர் யாருடைய சம்மதத்தையும் பெற வேண்டியதில்லை. ஆனால் அன்னியன் ஒருவனுக்கு சொத்து சம்பந்தமான தகராறை தீர்த்து கொள்வதற்கு ஏதாவது கொடுக்கவேண்டுமென்றால் அல்லது ஒரு மகனுக்குக் கூட கொடுக்க வேண்டுமென்றால் மற்ற மகன்களின் ஒப்புதலைப் பெற வேண்டியது அவசியம். இந்த பாகப்பிரிவினை செய்யும் உரிமை தந்தைக்கே உள்ள தனி உரிமை. தன்னுடைய தனிச் சொத்தைத் தந்தை எப்படி வேண்டு மானலும் கொடுக்கலாம். ஒரு மகனுக்கு கொடுத்து விட்டு இன்னொரு மகனுக்கு கொடுக்காமலும் இருக்கலாம். அது அவரது விருப்பம்

2. **தானே கோரும் பாகப்பிரிவினை:** பங்குரிமையில் (Coparcenary) ஒரு பங்குரிமையருக்குப் பாகப்பிரிவினை கோரும் உரிமை எப்போதும் உண்டு. மற்றப் பங்குரிமையர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், விரும்பும் பங்குரிமையர் பாகப்பிரிவினை கேட்கலாம். அப்படி ஒருவன் திட்டவட்டமாக கேட்டு அவன் பங்கு எவ்வளவு என்பதை நிர்ணயம் செய்து விட்டாலே, பாகப்பிரிவினை ஆகிவிட்ட தாகத்தான் பொருள். சொத்தை அளந்து வரையறை செய்ய வேண்டும் என்ற அவசியமில்லை. அதற்குப் பின்னர் ஒன்றாக ஒரே வீட்டிலே இருந்தாலும் கூட்டுக் குடும்பம் என்ற அந்தஸ்து இருக்காது.

Raghavamma v. Chenchamma[1] – ஒரு பங்குரிமையர் பாகப் பிரிவினையை விரும்புகிறார் என்பதையோ அல்லது வேண்டும் என்பதையோ தெரிந்து கொள்வதில் சிற்சில சமயங்களில் சிரமம் ஏற்படுவதுண்டு. இது சம்பந்த மாகப் பல வழக்குகள் ஏற்பட்டதுண்டு. மேற்படி வழக்கில் உச்ச நீதிமன்றம் இப் பிரச்சினையை ஆய்ந்து, சில கோட்பாடுகளை வகுத்துக் கொடுத்தது. அதன்படி,

(1) கூட்டுக் குடும்பத்தில் பாகப்பிரிவினை வேண்டும் என்று விரும்புகிறவர், பாகப்பிரிவினை வேண்டும் என்பதை குடும்பத்தில் யார் யாருக்கு சொல்ல வேண்டுமோ அவரவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். (2) இவ்வாறு தனது பாகப்பிரிவினை கோரும் விருப்பத்தை ஒருவன் தெரியப்படுத்தும் முறை சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாறுபடலாம். ஆனால் மற்றவர்கள், அவன் பாகப் பிரிவினையை விரும்புகிறான் என்பதை தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம். (3) பாகப்பிரிவினையை ஒருவன் விரும்புகிறான் என்பது சம்பந்தப்பட்ட மற்றவர்களின் கவனத்திற்கு வந்த பின்னர், பாகப்பிரிவினை அவன் வேண்டும் என்று விரும்பிய நாளிலிருந்தே தொடங்கிவிட்டதாகப் பொருள். (4) பாகப் பிரிவினை ஏற்பட்டுவிட்டதாக பொருள் கொண்டாலும், பாகப்பிரிவினை வேண்டும் எனும் எண்ணம் தோன்றிய காலத்திற்கும், மற்றவர்கள் அதைப்பற்றி தெரிந்து கொண்ட காலத்திற்கும் இடையே உள்ள காலத்தில் கூட்டுச் சொத்தில் சேர்ந்த மற்றவர்களின் உரிமை பாதிக்கப்படமாட்டாது.

1. A.I.R. 1964 S.C. 136.

3. இசைவுத் தீர்ப்பு முறையில் பாகப்பிரிவினை: கூட்டுக் குடும்பத்தை சேர்ந்தவர்கள் இசைவு தீர்ப்பு முறைக்கு (Arbitration) உட்பட்டு பாகப்பிரிவினை செய்து கொள்ளலாம். இசைவுத் தீர்ப்பு முறைக்கு உட்படுவதே அனைவரும் பாகப்பிரிவினையை விரும்புகிறார்கள் என்பதற்கு ஆதாரம். இசைவுத் தீர்ப்பாளர் முடிவு சொல்லவேண்டும் என்ற அவசியமில்லை. இசைவுத் தீர்ப்பிற்கு உட்பட்டதுமே கூட்டு குடும்ப அந்தஸ்து அற்றுப் போய்விடும்.

4. வழக்கு மூலம் பாகப்பிரிவினை: ஒரு பங்குரிமையர் பாகப்பிரிவினை கேட்டு வழக்குப் தொடர்ந்து விட்டாலே, அது மற்றவர்களுக்குத் தன் எண்ணத்தைத் தெரிவித்து விட்டதாகப் பொருள். அது மட்டுமல்ல, வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து கூட்டுக் குடும்பத்திலிருந்து பிரிந்து விட்டதாகவும் கொள்ளப்படும். இதனால் மற்றப் பங்குரிமையர் பிரிந்து விட்டதாக எண்ண வேண்டியதில்லை அவர்கள் தம்முடன் இணைந்து இருக்கிறார்களா என்பதை அவர்களுடைய நடத்தையிலிருந்தே தீர்மானிக்க வேண்டும். ஒரு வயது வந்த பங்குரிமையர் பாகப் பிரிவினை கோரி வழக்கு தொடர்ந்தால், நீதிமன்றம் அதை நிராகரிக்க முடியாது. அவர் தீங்கு செய்யும் எண்ணம் உடையவர்களின் தூண்டுதல் பேரில் வழக்காடலாம். அது நீதிமன்றத்திற்கு சம்பந்தமில்லாத விஷயமாகப் போய்விடும். ஆனால் உரிமை வயது அடையாதவன் ஒருவன் பாகப்பிரிவினை கோரி வழக்கு தொடர்ந்தால், வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து கூட்டு குடும்பத் திலிருந்து பிரிந்துவிட்டதாக எண்ணக்கூடாது. இவ்வாறு உரிமை வயது அடைந்தவர் விஷயத்தில்தான் கொள்ளப்படும். உரிமை வயது அடையாதவன் பிரிவினை கேட்கும் போது, அதனால் அவனுக்கு நன்மை உண்டா என்பதை நீதிமன்றம் ஆய்ந்து பார்க்கும். நன்மை உண்டு என்றால் கேட்டவாறு தீர்ப்பாணை வழங்கும்; நன்மை இருக்காது என்றால் தீர்ப்பாணை வழங்காது.

5. மத மாற்றத்தால் பாகப்பிரிவினை : பங்குரிமையர் ஒருவன் இந்து மதத்தைவிட்டு வேற்று மதத்திற்கு மாறிவிட்டால், கூட்டு குடும்பத்தில் அவனுடைய உறவு அறுந்து விடும். மத மாற்றம் நிகழ்ந்த தேதியிலிருந்து பாகப்பிரிவினை தொடங்கியதாக கொள்ளப்படும். எனினும் இவ்வாறு மதம் மாறியவனை விட்டுவிட்டு, மற்றவர்கள் தொடர்ந்து கூட்டுக் குடும்பம் நடத்தலாம்.

வேறுமுறைகள் : மேலே கண்ட முறைகள் அல்லாமல் வேறு முறையிலும் பாகப்பிரிவினை ஏற்படலாம். பாகப்பிரிவினை ஏற்படுவதற்கு அடிப்படையான தேவை, பங்குரிமையர் பாகப்பிரிவினை வேண்டும் என்பதை திட்டவட்டமாக அறிவிப்பதுதான்.

தாயின் கருவில் இருக்கும் மகனும் பாகப்பிரிவினையும்:

பாகப்பிரிவினை நடக்கும்போது தாயின் கருவில் இருக்கும் மகன், பிறந்து விட்ட மகனுக்குச் சமம். எனவே அவன் பாகப்பிரிவினைக்குப் பிறகு பிறந்தாலும்,

தந்தைக்கும் மற்றவர்களுக்குடையே நடந்த பாகப்பிரிவினையை மீண்டும் கிளறி எதிர்க்கலாம். பாகப்பிரிவினை நடக்கும் போது தாயின் கருவில் இல்லாமல் அதற்கு பிறகு கருத்தரித்து பிறந்த மகன், தன்னுடைய தந்தைக்கு சொத்தில் ஒரு பங்கு இருக்கிறதா இல்லையா என்பதைப் பொறுத்தே பழைய பாகப்பிரிவினையை எதிர்த்து வழக்காட முடியும். தந்தை தனக்கொரு பங்கு வைத்திருந்தால் நடந்து முடிந்த பாகப்பிரிவினையை மீண்டும் கிளற முடியாது. ஆனால், தந்தை தனக்கொரு பங்கும் வைத்துக் கொள்ளவில்லை என்றால் அவன் நீதிமன்றத்தை அணுகலாம்.

பாகப்பிரிவினையின் விளைவுகள் (Effects of Partition):

பாகப்பிரிவினை ஏற்பட்டதும் பங்குரிமை கலைக்கப்பட்டு விடுகிறது. ஒவ்வொருவரும் தத்தம் பங்கை தனித்தனியே பிரித்துக் கொள்வர். ஒருவரின் மரணத்திற்குப் பின், அவருக்கு பாகப்பிரிவினை மூலம் வந்தடைந்த சொத்து, அவரது வாரிசுதாரர்களுக்குச் செல்லும். ஒரு பங்குரிமையர் பங்குரிமையை விட்டுவிட்ட பின், தன் ஆண்வழித் தோன்றல்களுடன் சொத்தை வைத்துக் கொள்வாரேயானால், அவருக்கும் அவர் ஆண் வழித் தோன்றல்களுக்குமிடையே பங்குரிமை இருப்பதாகக் கொள்ளலாம். பாகப்பிரிவினை ஏற்பட்டதும் கூட்டுக் குடும்பத்தின் வணிகமும் முடிந்து விட்டதாகக் கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு கூட்டாண்மைச் சட்டத்தின் விதிகளே (Partnership Act) பொருந்தி வரும். ஒரு தந்தை பாகப்பிரிவினைக்குப் பின்னர் தன் மகன்களை தான் செய்யும் ஒப்பந்தங்களில் பிணைக்க முடியாது. பாகப்பிரிவினைக்கு முன் வாங்கிய கடனுக்காக பாகப்பிரிவினைக்குப் பின், ஒரு கடன்காரர் பாகப்பிரிவினை நடந்ததைத் தெரிந்து கொண்டே கடனுறுதிச் சீட்டு (promissory note) எழுதி வாங்கிக் கொண்டு கடன் தருவாரேயானால், அது மகன்களைக் கட்டுப்படுத்தாது. அதைப்போலவே கூட்டுக் குடும்ப நிருவாகி, பாகப்பிரிவினைக்குப் பின் காலாவதியாக வேண்டிய கடனின் காலத்தை எவ்வகையிலும் நீட்டிக்க முடியாது என்று **Rangasamy Ayyangar v. Sivaprakasam Pillai and others**[1] எனும் வழக்கில் கூறப்பட்டது.

2. Raghavamma v. Chenchamma A.I.R 1964 S.C. 136 - Write short notes.

(முந்தைய வினாவின் விடையில் காண்க)

3. a) What are the modes of partition under the Hindu Law?

b) Is there any provision for the reunion of separated members after partition?

அ) இந்துச் சட்டப்படி பாகப்பிரிவினை முறைகளைக் கூறுக

1. (1942) Mad. 251

ஆ) பாகப்பிரிவினைக்குப் பின்னர், பிரிந்த அங்கத்தினர்கள் ஒன்று சேர வழி உண்டா?

(அல்லது)

Reunion - Write short notes. (மீண்டும் ஒன்று சேர்தல் – குறிப்பு எழுதுக)

(அல்லது)

Explain the meaning of 'reunion' Who are the persons entitled to reunion under Hindu Law? (மீண்டும் ஒருங்கிணைதலின் பொருளை விளக்கு. இந்துச் சட்டத்தின் கீழ் யார் யார் மீண்டும் ஒருங்கிணையத் தகுதி பெற்றவர்கள்?)

(அ) பாகப்பிரிவினைக்கான பல்வேறு முறைகள்:

(வினா எண். 1–ன் விடையில் விரிவாகக் கண்டுள்ளோம்.)

(ஆ) மீண்டும் சேருதல் (Reunion):

பாகப்பிரிவினைக்குப் பின்னர், பிரிந்த அங்கத்தினர்கள் மீண்டும் ஒன்று சேரலாம் என்று பிரகஸ்பதி கூறுகிறார். பொதுவாக பாகப்பிரிவினை ஏற்பட்ட பின்னர், பாகம் பிரிந்த பங்குரிமையர், கூட்டுக் குடும்ப சொத்து மற்றும் அந்தஸ்திலிருந்து பிரிந்து விடுவதாக பொருளாகும். எனினும் அவ்வாறு பிரிந்தவர் மீண்டும் சேரலாம் என பிரகஸ்பதியின் நூலில் கூறப்பட்டுள்ளது.

தந்தை, சகோதரன், தந்தையின் சகோதரர்கள் ஆகியோரிடமிருந்து பிரிந்து சென்றவன், அன்பால் மீண்டும் ஒன்றுபட்டால் அதை 'மீண்டும் சேருதல்' (Reunion) என்று சொல்ல வேண்டும், என்பது பிரகஸ்பதியின் மொழியாகும். ஆகவே, பாகம் பிரித்துக் கொண்டு தனியே சென்றவர்கள் மீண்டும் பொங்கிவரும் பாச உணர்ச்சியால் ஒன்று சேர்ந்து பழையபடி வாழலாம்.

மீண்டும் சேருதலுக்கு எழுத்து மூலமாக ஏற்பாடு செய்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. வாய்ச் சொற்களே போதுமானது. ஆனால் சம்பந்தப் பட்ட தரப்பினரிடையே மீண்டும் சேரும் விருப்பம் இருக்கவேண்டும். ஒன்றாக இருந்து, ஒன்றாக வியாபாரம் செய்வது மீண்டும் சேருதலுக்கு ஒப்பாகாது என **Bhubathi v. Muralidhar**[1] என்ற வழக்கில் கூறப்பட்டது.

பொதுவான நிபந்தனைகள் :

கூட்டுக் குடும்பத்திலிருந்து பாகப்பிரிவினை செய்து கொண்டு பிரிந்து சென்றவர் மீண்டும் சேர பின்வரும் பொதுவான நிபந்தனைகள் உள்ளன. அவை

1. இந்துக் கூட்டுக் குடும்பத்தை விட்டுப் பிரிந்து சென்ற மகனின் மனநிலை உண்மையாகவே மாறி, மீண்டும் உண்மையாகவே தன் குடும்பத்துடன்

1. 1943 ALJ 328 PC.

சேர வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் வரவேண்டும். அப்படிச் சேரும் பொழுது, அவனது தனித்துவம் மறைந்துவிடுகிறது. எனவே, அவன் கூட்டுக் குடும்பத்தின் ஒரு அங்கத்தினராக மீண்டும் ஆகிவிடுகிறான்.

2. கூட்டுக் குடும்பத்தில் இருந்து பிரிந்து சென்ற மகன் பிரிந்து செல்லும் போது கூட்டுக் குடும்பத்தில் இருந்து பாகப்பிரிவினையின் போது பெற்றுச் சென்ற சொத்துடன் திரும்பி வர வேண்டும் எனும் கட்டாயம் ஏதுமில்லை.

3. அம்மகன் பிற பங்குரிமையர்களைப் போல் அனைத்து உரிமை களையும், கூட்டுக் குடும்பத்துடன் இணைவதால் மீண்டும் பெறுகிறான்.

4. அவ்வாறு பிரிந்து சென்ற நாட்களில் அவன் தனிப்பட்ட முறையில் சம்பாதித்த சொத்தை செலவழிக்காமல் வைத்திருந்தால் அதையும் கூட்டுக் குடும்பச் சொத்துடன் சேர்க்க வேண்டும்.

5. பிரிவினைக்குப் பின் பேரன், தன் பாட்டனோடு சேர முடியாது. பிரகஸ்பதியின் கூற்றுப்படி பிரிந்தவன் மீண்டும் தகப்பன் சகோதரர், தந்தையின் சகோதரர்கள் ஆகியோர்களுடன் மட்டும்தான் சேர முடியும்.

Balabux v. Rukmabai[1] - இவ்வழக்கில் பிரியும்போது ஒருவன் யாருடன் இருக்கும் பொழுது பிரிந்தானோ, அவர்களிடம்தான் மீண்டும் போய்ச் சேர வேண்டும் எனத் தீர்ப்புக் கூறப்பட்டது.

Bhagwan Dayal v. Reoti Devi[2] – இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம், பிரிந்த ஒருவன் மீண்டும் சேரும் போது பின்வரும் நிபந்தனைகள் இருக்க வேண்டும் எனக் கூறியது. அவை:–

1. உண்மையிலேயே மனம் மாறி மீண்டும் கூட்டுக் குடும்பத்தில் இணைய வேண்டும் என்ற எண்ணம் பிரிந்து சென்றவருக்கு இருக்கவேண்டும்.

2. அந்த இணைவு ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைய வேண்டும்.

3. அவ்வொப்பந்தத்தின் ஷரத்துகள் உட்கிடையாகவோ அல்லது வெளிப்படையாகவோ இருக்கலாம்.

4. கூட்டுக் குடும்பத்தில் மீண்டும் சேருபவர்தான், அவ்வாறு சேருவதை நிரூபிக்க வேண்டும்.

5. பாகப்பிரிவினை செய்தபின் ஒரே இடத்தில் தங்கி வாழ்வதோ அல்லது ஒரே தொழிலைச் செய்வதோ திரும்பச் சேர்வதாகப் பொருளாகாது.

6. பிரிந்து போகும்போது கொண்டு போன சொத்தை மீண்டும் கொண்டு வரவேண்டும் என்ற கண்டிப்பு இல்லை.

1. (1903) 30 I.A. 130-137
2. (1962) S.C.J. 348

4. Enumerate and discuss the grounds in which a partition may be reopened. (பாகப்பிரிவினை மறுபடியும் செயல்படுவதற்கான காரணங்களைக் கூறி விவாதிக்க.)

(அல்லது)

"Once only a partition is made" - Elucidate ("ஒரு தரம்தான் பாகப்பிரிவினை செய்யப்படுகிறது" – தெளிவுபடுத்துக.)

(அல்லது)

Reopening the partition - Write short notes. (பாகப்பிரிவினையை மீண்டும் கிளறுதல் - சிறு குறிப்பு வரைக.)

ஒரு முறை செய்யப்பட்ட பாகப்பிரிவினையை மீண்டும் கிளற முடியாது அல்லது ஒருமுறைதான் பாகப்பிரிவினை செய்யப்படுகிறது **(Once is the partition)** என மனு **(Manu)** கூறுகிறது. ஆனால் இந்துச் சட்டம் சில சூழல்களில் நடந்து முடிந்த பாகப்பிரிவினையை மீண்டும் கிளறலாம் என்று கூறுகிறது.

நடந்து முடிந்துவிட்ட பாகப்பிரிவினையை மீண்டும் கிளற வேண்டிய அவசியம் சிற்சில சமயங்களில் ஏற்படலாம். ஒரு பங்குரிமையருக்கு கொடுக்கப் பட்ட சொத்தில் ஓர் அன்னியருக்குப் **பிணை (Charge)** இருப்பது தெரியவந்தால், அல்லது அந்தச் சொத்தே வேறொருவருக்குச் சொந்தமானது என்று கண்டு பிடிக்கப்பட்டு, சொத்தை இழக்க நேர்ந்தால், பாதிக்கப்பட்டவன் பாகப் பிரிவினையை கிளறலாம்.

ஒரு பங்குரிமையர் இன்னொரு பங்குரிமையரை **மோசடி (fraud)** செய்து தனக்கு இலாபம் தேடிக் கொண்டிருந்தாலும், பாதிக்கப்பட்ட பங்குரிமையர் நீதிமன்றத்தை அணுகலாம். தனக்கு நேர்ந்து விட்ட இழப்பிற்கு மற்றவர் சொத்திலிருந்து நட்டஈடு பெறவும் உரிமை அவனுக்கு உண்டு.

ஒரு பிரச்சனையில் பாகப்பிரிவினையை கிளற வேண்டுமா அல்லது நட்டஈடு போதுமானதா என்பது அப்பிரச்சனையின் விஷயத்தை பொறுத்தாகும். பாகப்பிரிவினையின்போது ஏதேனுமொரு சொத்து தவறுதலாக அல்லது மோசடியாக விடப்பட்டிருந்தால், அதை மட்டும் மீண்டும் பாகப்பிரிவினை செய்து கொள்ளலாம். **பாகப்பிரிவினை ஆவணத்திலோ அல்லது தீர்ப்பாணையிலோ ஏதேனும் தவறுதல்** நேர்ந்திருந்தால் அதை திருத்திக் கொள்ள உரிமையியல் நடைமுறைச் சட்டத்தில் **(Civil Procedure Code)** வகை செய்யப்பட்டுள்ளது.

பாகப்பிரிவினைக்கு பிறகு பிறந்த மகன், தந்தை அவருக்காக ஒரு பங்கை வைத்துக் கொள்ளாதிருந்தால் பாகப்பிரிவினையை மீண்டும் கிளறலாம். அதைப்போலவே தாய் வயிற்றில் இருக்கும் பொழுது செய்யப்பட்ட பாகப் பிரிவினையில் அவன் நலன்களுக்கு ஏதேனும் விரோதமாயிருந்தால் பாகப்பிரிவினையை மீண்டும் பரிசீலனைக்கு உள்ளாக்கலாம்.

கூட்டுக் குடும்பத்தில் பாகப்பிரிவினை ஏற்படும் பொழுது, பங்குரிமையர் களுக்கு உரிமை வயது வராத மகன்கள் இருந்தால், அவர்களின் தந்தையர் அவர்களின் பிரதிநிதியாக இருந்து பாகப்பிரிவினை செய்து கொண்ட பின்னர், மோசடி நடந்திருப்பதாக ஆதாரம் இருந்தாலொழிய வேறு காரணங்களுக்காக, உரிமை வயது வராத மகன்கள் நடந்து முடிந்து விட்ட பாகப்பிரிவினையை மீண்டும் கிளற முடியாது.

5. Impartible Estate - Write short notes. (பிரிக்க முடியாத சொத்து– சிறு குறிப்பு எழுதுக.)

பிரிக்க முடியாத சொத்து – விளக்கம் :

சொத்து பெரும்பாலும் பிரிக்கக் கூடியதேயாகும். ஆனால் சில வகைச் சொத்து பிரிக்க இயலாத தன்மையைப் பெற்றிருக்கும். பாகப்பிரிவினைக்கு உட்படாத சொத்துரிமை, பிரிக்க முடியாத சொத்துரிமை ஆகும். இது ஒரு கூட்டுக் குடும்பத்தின் வழக்கப்படியோ, அரசு மானியத்தாலோ ஏற்படலாம். இது மூதாதையரின் சொத்தாக இல்லாமல் சுயசம்பாத்திய சொத்தாகக் கூட இருக்கலாம். மானியத்தின் வழியாய்ப் பிரிக்க முடியாத சொத்துரிமையை உருவாக்கும் தனி உரிமை அரசுக்கின்றி வேறு யாருக்கும் இல்லை. பிரிக்க முடியாத சொத்து, கூட்டுக் குடும்பச் சொத்தாக இருந்தாலும் அதை பங்காளிகளுக்குள் பங்கிட முடியாது. சில சொத்துக்களை பிரிக்கக் கூடாதென ஒரு குடும்பத்தின் உறுப்பினர்கள் உடன்பாடு செய்து கொள்வதுண்டு. குடும்பத்தில் ஏற்பட்ட அவ்வுடன்பாடு தொடர்ந்து தலைமுறை தலைமுறையாக வந்திருக்க வேண்டும். குடும்பத்தில் ஒருவரே, அதிலும் பெரும்பாலும் மூத்தவரே, அச்சொத்துக்களை தம் வசத்திலும் பராமரிப்பிலும் வைத்திருப்பார்.

பிரிக்க முடியாத சொத்தில் உரிமை இறக்கம் :

பிரிக்க முடியாத சொத்து, கூட்டுக் குடும்பச் சொத்தாக இருந்தாலும் அது பங்குரிமைச் சொத்தாக கருதப்பட மாட்டாது. ஏனெனில் அதில் பிரிவினை கோரவோ, கூட்டாக அதை அனுபவிக்கவோ வழியில்லை. ஆகவே பிரிக்க முடியாத சொத்துரிமையை வைத்திருப்பவர் அப்போதைக்கு மாற்றாக்கம் (Alienation) செய்வதைப் பங்குரிமையர் யாரும் தடுக்கவோ அவரிடம் பராமரிப்புக் கோரவோ இயலாது என **Petambur v. Hurish Chunder**[1] எனும் வழக்கில் கூறப்பட்டது.

Sartaj Kuari v. Deorej Kuari[2] - இவ்வழக்கில் தந்தை தனது சொத்தை வேறொருவருக்கு நன்கொடையாக வழங்கினார். அதற்கு மகன் எதிர்ப்பு தெரிவித்து வழக்கிட்டார். ஆனால் வழக்கை விசாரித்த பிரிவி கவுன்சில், மகனுக்கு பிரிக்கமுடியாத சொத்தில் உரிமை கொண்டாட தகுதியில்லை எனக் கூறியது.

1 (1871) 15 W.R. 200

2 (1888) 10 All 272, 287.

அப்பிரிக்க முடியாத சொத்தை வைத்திருப்பவர்களுக்குப் பின்னர், அதை யார் அடைவது என்ற பிரச்சனை எழும் போது அது பங்குரிமை சொத்தாக கருதப்பட்டு எஞ்சுநர் உரிமைப்படி செல்லும்.

பிரிக்க முடியாத சொத்து மூத்த மகன் பொறுப்பிலேயே இருக்கும். அச்சொத்து பரம்பரைச் சொத்தாக இருந்து, ஆனால் அதன் உரிமையாளர் அக்குடும்பத்தில் சேர்ந்து வாழாமல், வெளியே தனியாக வாழ்ந்து வந்தால், அங்கு பிரிக்கக்கூடிய சொத்துக்குள்ள முறை, நடைமுறைப்படுத்தப்படும். பிரிக்க முடியாத சொத்து ஒருவரின் தனிச் சொத்தாக இருந்தால், அச்சொத்து தனிச் சொத்தில் உரிமை இறக்கம் எவ்வாறு செல்லுமோ அவ்வாறே செல்லும். ஆனால் இந்தப் பிரிக்க முடியாத சொத்துரிமை என்பது **1956–ம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தால் ஒழிக்கப்பட்டுவிட்டது.**

பிரிக்க முடியாத சொத்துரிமையை நிரூபிக்கும் பொறுப்பு:

Martand Rao v. Malhar Rao[1] எனும் முக்கிய முந்தய வழக்கில் பிரிவி கவுன்சில் பிரிக்க முடியாத சொத்துரிமையை நிரூபிக்கும் பொறுப்பு பற்றிச் சில கோட்பாடுகளைத் தெளிவாக விளக்கியுள்ளது. ஒரு குறிப்பிட்ட சொத்து பிரிக்கக் கூடியதா அல்லது பிரிக்க முடியாததா என்று வினா எழும்போது, பிரிக்க முடியாதது என்று சொல்பவரே, அவ்வாறு அச்சொத்தை வைத்துக் கொள்ள அனுமதிக்கும் வழக்கம் இருக்கிறது என்பதையும், அதன்படி அச்சொத்துரிமை தனியொருவரின் கையிலேயே இருக்கும் என்பதையும், அது பாகப்பிரிவினைக்கு உட்படாதது என்பதையும் நிரூபிக்கவேண்டும்.

வீட்டில் உள்ள நடைபாதை, புனித விக்ரகங்கள் முதலியவை பாகப் பிரிவினை செய்ய முடியாதவையாகும். ஆனால் பிரிக்கப்படக் கூடிய சொத்து பிரிக்கப் படாமல் நீண்ட நாள் இருப்பது சாத்தியம் என்றாலும், ஒரு ஜமீன் முழுவதும் நீண்ட காலம் அப்படியே பிரிக்கப்படாமல் இருப்பது உரிமை இறக்கம் பற்றிய சாதாரண நடைமுறைச் சட்டம் அங்கு செயல்படவில்லை என்பதையே காட்டுவதாகும்.

6. What is meant by 'partition' according to the Mitrakshara law? Explain how a partition is effected and state when can partition be reopened? (மிதாக்ஷரா சட்டப்படி பாகப்பிரிவினை என்றால் என்ன? பாகப்பிரிவினை எவ்வாறு செய்யப்படுகிறது என்பதை விளக்கி அதை எப்பொழுது மீண்டும் திறக்க முடியும் என்பதைக் கூறுக.)

(இதற்கான விடையை வினா எண். 1–ன் இரண்டாவது பத்தியிலும், வினா எண். 4–லும் காண்க. மிதாக்ஷரா சட்டப்படி குடும்பச் சொத்தை அளந்து அவரவர் பாகத்தைத் தனியாக கொடுக்க வேண்டுமென்ற அவசியமில்லை. பங்குகளை நிர்ணம் செய்து விட்டாலே, போதுமானது. ஆனால் தாயபாக சட்டத்தின்படி, சொத்தை அளந்து அவரவர் பங்கை கொடுத்துவிட வேண்டும்.)

1. (1928) 55 I.A. 45, 55

4 சமய மற்றும் அறப்பயனுக்கான அறக்கட்டளை [Religious and Charitable Endowments]

Explain the conditions for the valid dedication of property for Hindu religious and charitable purpose. (இந்து மதம் மற்றும் அறப்பயனுக்காக செய்யப்படும் செல்லத்தக்க சொத்து அர்ப்பணத்தின் நிபந்தனைகளை விளக்குக.)

நினைவுக் குறிப்புகள் [Hints]

முன்னுரை
சமய மற்றும் அறப்பயனுக்கான அறக்கட்டளை
மேற்கண்ட அறக்கட்டளையை யார் அமைக்கலாம்?
செல்லத்தக்க சொத்து அர்ப்பணத்தின் நிபந்தனைகள்

முன்னுரை :

சொத்துக்கள் சமய நோக்கிற்காகவும் அறப்பயனுக்காகவும் அர்ப்பணிக் கப்படுவதுண்டு. சமய நோக்கு எனும் பொழுது அது இந்து சமயம் சார்ந்த, இந்துக் கடவுளுக்கு செய்யப்படும் அர்ப்பணமாக இருக்கலாம். ஒரு சொத்து முழுமையாக ஒரு கடவுளுக்கு அர்ப்பணிக்கப்படும் பொழுது, அச்சொத்தின் நிருவாகம் மற்றும் உடைமை, அக்கடவுள் உள்ள கோவிலைச் சார்ந்தது. இவ்வாறு அர்ப்பணிக்கப் படும் சொத்துக்களை எவ்வித பாராதீனமும் செய்ய முடியாது. அதாவது விற்றல், அடைமானம் வைத்தல் ஆகியவைகளைச் செய்ய முடியாது. விரிவாக வருமாறு.

சமய மற்றும் அறப்பயனுக்கான அறக்கட்டளை (Religious and Chartibale Endowments) :

சமய மற்றும் அறப்பயனுக்காக அறக்கட்டளை என்பது ஒரு இந்து தனது சொத்தை சமய மற்றும் அறப்பயன் நோக்கங்களுக்காக அர்ப்பணிப்பதாகும்.

மேற்கண்ட அறக்கட்டளையை யார் அமைக்கலாம்?

இளவர் அல்லாத திட சித்தமுடைய (sound mind) ஒரு இந்து, கொடை யளிப்பதன் மூலமாகவோ அல்லது உயில் மூலமாகவோ தனது சொத்தை சமய

மற்றும் அறநோக்கங்களுக்காக எழுதி வைக்கலாம். அத்தகு நோக்கங்களுக்கு சில எடுத்துக்காட்டுகள் வருமாறு:

1. கோயிலை உருவாக்கி கடவுளை வணங்குதல்
2. ஏழை எளியோர்களுக்கும் பிராமணர்களுக்கும் உணவளித்தல்
3. சமயச்சடங்குகளை நிறைவேற்றல்.
4. இலவச மருத்துவமனை அல்லது கல்லூரி கட்டுதல்

செல்லத்தக்க சொத்து அர்ப்பணத்தின் நிபந்தனைகள்:

1. சொத்து அர்ப்பணம் ஒரு இந்துவால் செய்யப்பட வேண்டும்.
2. அவர் இளவராக இருக்கக் கூடாது.
3. திட சித்தமுடையவராக இருக்க வேண்டும்.
4. அர்ப்பணம், கொடை மூலம் செய்யப்படலாம் அல்லது உயில் மூலமும் எழுதி வைக்கப்படலாம்.
5. சமய மற்றும் அறப்பயன் குறித்த நோக்கம் தெளிவாக வரையறுக் கப்பட்டிருத்தல் வேண்டும்.
6. சொத்தின் அர்ப்பணம் முழுமையாக (absolute) இருத்தல் வேண்டும்.
7. ஒரு முறை செய்யப்பட்ட அர்ப்பணத்தை இரத்து செய்யவியலாது.

-oOo-

5 இந்து மரபுமுறை இறங்குரிமைச் சட்டம் [The Hindu Law of Inheritance]

அ. 1956-ஆம் ஆண்டில் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு இருந்த இந்து மரபுமுறை இறங்குரிமையின் நிலை [தொகுக்கப்படாத (பழைய) சட்டம்]

A. The Hindu Law of Inheritance prior to the enactment of the Hindu Succession Act in the year 1956 [Uncodified law]

[i] இந்து மரபுமுறை இறங்குரிமையின் முந்தய நிலை

1. "To the nearest Sapinda the inheritance next belongs." (Manu) Elucidate this text. ("நெருங்கிய சபிண்டாக்களுக்கு இறங்குரிமை அடுத்து சென்றடைகிறது" (மனு). இவ்வுரையை விளக்குக.)

(அல்லது)

"Propinquity is the test of heirship under the Mitakshara Law" - Comment. ("மிதாக்ஷரா சட்டத்தின் கீழ் இரத்த சம்பந்தத்திலான நெருங்கிய உறவு வாரிசுரிமையின் தேர்வாக அமைகிறது" – விமர்சிக்க.)

(அல்லது)

"Under the Mitakshara Law there is not inheritance, but merely partition and under the Dayabhaga Law there is no partition, but inheritance only." - Elucidate. ("மிதாக்ஷரா சட்டத்தின் கீழ் மரபுரிமை இல்லை, பாகப்பிரிவினைதான் இருக்கிறது. தாயபாகா சட்டத்தின் கீழ் பாகப்பிரிவினை இல்லை, மரபுரிமைதான் இருக்கிறது" – விளக்குக.)

(அல்லது)

"The right of inheritance according to Hindu Law is wholly regulated with reference to the spritual benefits to be conferred on the propositus" - Examine. ("இந்துச் சட்டப்படி மரபு முறை இறங்குரிமை முழுவதும் கொடிவழி முன்னவருக்கு அளிக்கப்படும் ஆன்மீக பயன்களை கருத்தில் கொண்டு ஒழுங்குபடுத்தப்படுகிறது". ஆராய்க.)

இந்து மரபு முறை இறங்குரிமையின் அடிப்படைக் கோட்பாடு:

1956–ஆம் ஆண்டில் இந்து வாரிசுரிமைச் சட்டம் (The Hindu Succession Act of 1956) இயற்றப்படுவதற்கு முன்னர், இந்துக்களின் மரபுமுறை இறங்குரிமைக்கு (Inheritance) **இந்துச் சட்டத்தின் ஆரம்ப ஆசிரியரான மனு (Manu)** கூறிய கோட்பாடுதான் அடிப்படையாக விளங்கியது. அதாவது, **"மகன்கள் சொத்தை எடுத்துக் கொள்வார்கள்; அவர்களுக்குப் பிறகு அவர்களுடைய நெருங்கிய சபிண்டாக்கள் சொத்துக்கு உரியவர்களாகவார்கள்" (Sons take the property; to the nearest SAPINDAS the inheritance next belongs ...).** இக்கோட்பாடு, மேற்படி 1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்படும் வரை பின்பற்றப்பட்டு வந்தது.

"சபிண்டா" – மிதாக்ஷரா மற்றும் தாயபாகா முறையின் மாறுபட்ட விளக்கம்:

நாம் சென்ற பத்தியில் கண்ட கோட்பாட்டில் 'சபிண்டா' என்ற சொல் இடம் பெற்றுள்ளது. இதற்குப் பொருள் கொள்வதில் ஏற்பட்ட கருத்து மாறுபாடுதான், மிதாக்ஷரா முறைக்கும் (Mitakshara) தாயபாகா முறைக்கும் (Dayabhaga) உள்ள வேறுபாடு என்று கூறலாம். அஃதாவது,

மிதாக்ஷரத்தின் ஆசிரியர் விஞ்ஞானேஸ்வரர் சபிண்டா உறவு (Sapinda relationship) என்பதற்கு, **"இரத்த சம்பந்தமானது அல்லது ஒரே பிண்டத்தைச் சேர்ந்தது"** என்று பொருள் கூறுகிறார். ஆனால் **தாயபாகத்தின் ஆசிரியர் ஜிமுதவாகனர் "ஈமச் சடங்கு செய்யும் பாத்தியதை உடைய உறவு" (Community in the offering of funeral obligation)** என்று பொருள் கூறுகிறார். ஆகவே **மிதாக்ஷராத்தில்** உறவின் நெருக்கத்தை ஒட்டி வாரிசுகள் அமைவர். **தாயபாகத்தில்** இறந்து போனவரின் ஆன்ம விமோசனத்திற்குச் சடங்குகள் செய்யத் தகுதி உள்ளதைப் பொறுத்து வாரிசுகள் அமைவர். இதை **ஆன்மாவிற்கும் பயனளிக்கும் கோட்பாடு (Doctrine of Spiritual benefit)** எனக் கூறலாம்.

எனவே, மிதாக்ஷரத்தின் ஆசிரியர் ஏற்கனவே கூறியபடி, **"இரத்த சம்பந்தமுடையவர்கள்"** இங்கு இறங்குரிமை பெறுகின்றனர். ஆகவே ஒருவன் பிறந்தவுடனேயே அவன் கூட்டுக் குடும்பச் சொத்தின் பங்குரிமையராகி விடுகிறான். ஏனெனில் கூட்டுக் குடும்ப ஆண் உறுப்பினர்கள் ஒரே இரத்த சம்பந்தமுடையவர்கள். அவர்கள் கூட்டுக் குடும்பச் சொத்தில் பிறப்பினாலேயே **பாகப்பிரிவினை (Partition) கோரும் உரிமை** படைத்தவர்களாகிறார்கள். எனவே, இங்கு வாரிசு மரபுரிமை கிடையாது. (கூட்டுக் குடும்பச் சொத்தைப் பொறுத்த வரை). எனவே, மிதாக்ஷரத்தைப் பொறுத்தவரை இரத்த சம்பந்தத்திலான நெருங்கிய உறவு, வாரிசு முறையை கண்டறியும் தேர்வாக அமைந்திருந்தது எனில் அது மிகையன்று. (Propinquity is the test of heirship under the Mitakshara Law).

ஆனால், தாயபாக முறையில் ஈமச் சடங்கு செய்யப் பாத்தியதை உடைய உறவு வகையினர் மட்டுமே சொத்துரிமை பெற முடியும். இங்கு பிறப்பினாலேயே ஒருவன் எவ்வித சொத்துரிமையும் அடைவதில்லை. ஆகவே அவன் எவ்வித பாகப்பிரிவினையும் கோர வழியில்லை. ஈமச்சடங்கு செய்ய உரிமை படைத்திருந்தால் மட்டுமே அவனுக்கு சொத்துரிமை கிடைக்கும். எனவே இங்கு பாகப்பிரிவினை கிடையாது. மாறாக மரபுரிமைதான் உண்டு. (மேலும் விரிவாக அடுத்து வரும் வினாக்களில் காண்க.)

2. Discuss the Law of Inheritance under the Mitakshara System. (மிதாக்ஷரா முறையின் கீழான மரபுமுறை இறங்குரிமை பற்றி விவாதிக்க.)

(அல்லது)

Write short notes on the compact series of heirs. (நெருங்கிய தொடர் வாரிசுகளைப் பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை :

ஒருவனுக்கு எந்தச் சொத்தில் முழு உரிமை இருக்கிறதோ, அவனுடைய அந்தச் சொத்துக்குத்தான் மரபுமுறை இறங்குரிமை அமலாகும். எஞ்சுநர் உரிமைக்கு உட்பட்ட சொத்து இருக்குமானால், அதற்கு மரபுமுறை இறங்குரிமை அமலாகாது. உதாரணமாக, மிதாக்ஷரா கூட்டுக் குடும்பத்தில் எஞ்சுநர் உரிமைதான் உண்டு. எனவே, அதுதான் அங்கு அமலாகும். ஒருவனுக்குத் தனிச் சொத்து இருக்குமானால், அதில் மட்டும் மரபுமுறை இறங்குரிமையே அமலாகும். ஒருவன் தானே சுயமாகச் சம்பாதித்த சொத்து (Self-acquired property), பங்குரிமை அமைப்பில் ஒரே ஆளாக இருக்கும் எஞ்சுநரின் சொத்து (the property of only survivor), பங்குரிமை அமைப்பை விட்டுப் பாகம் பிரித்துக் கொண்டு வெளியேறித் தனியாக வைத்துக் கொண்டிருக்கும் சொத்து ஆகியவற்றிற்கும் மரபுமுறை இறங்குரிமையே அமலாகும்.

மிதாக்ஷரத்தில் தாயபாகம் போல் அல்லாது இரத்த உறவின் நெருக்கமே (Propinquity) வாரிசாக இருக்கத் தகுதி என்பதை நாம் முன்னரே கண்டுள்ளோம்.

மிதாக்ஷரா முறையில் பங்கு பெறும் வாரிசுகள் :

மிதாக்ஷரா மரபுமுறை இறங்குரிமையில் சபிண்டா உறவு (இரத்த சம்பந்த உறவு) முக்கிய இடம் வகிக்கிறது. சபிண்டா உறவு முறையில் இரண்டு வகை உண்டு. ஒன்று **சமான கோத்திர சபிண்டா (Samana Gotra Sapinda).** மற்றொன்று **பின்ன கோத்திர சபிண்டா (Bhinna Gotra Sapinda).** ஒரே கோத்திரத்தில் உள்ளவர்களின் இரத்த சம்பந்தமான உறவினர்கள் சமான கோத்திர சபிண்டர்களாவார்கள் (அதாவது ஆண் வழி உறவினர்). இன்னொரு

கோத்திரத்தின் வழியாக வரும் இரத்த சம்பந்தமான உறவினர்கள் (அதாவது பெண்கள் வழியாக ஏற்படும் உறவு) பின்ன கோத்திர சபிண்டர்கள் ஆவார்கள். இவ்வழி வரும் வாரிசுகள் **"பந்துக்கள்" (Bandhus)** எனப்படுவர்.

மேற்படி சமான கோத்திர சபிண்டர்களை **கோத்திரஜ சபிண்டர்கள் (Gotraja Sapinda)** என்றும் அழைப்பார்கள். முன் கூறியபடி, இந்த சபிண்டர்கள் இறந்தவனுடன் ஆண் வழியாக உறவு உள்ளவர்கள். சமான கோத்திரத்தில் இரண்டு பிரிவுகள் உண்டு. ஒன்று சபிண்டர்கள் அடங்கியது. மற்றொன்று **சமநோடகாக்கள் (Samanodakas)** அடங்கியது.

மேற்கண்டவற்றின்படி, மிதாக்ஷரத்தில் வாரிசுரிமை உடையவர்களை, 1. சபிண்டர்கள் 2. சமநோடகாக்கள் 3. பந்துக்கள் என்று வரிசைப்படுத்தலாம். வாரிசுரிமையில் சபிண்டர்களுக்குத்தான் முதல் இடம். சபிண்டர்கள் யாரும் இல்லையென்றால் சமநோடகாக்களுக்கு அடுத்த இடம் கிடைக்கும். இந்த இரு பிரிவு வாரிசுகளுமே இல்லையென்றால் பந்துக்களுக்கு அதற்கு அடுத்த இடம் கிடைக்கும்.

வரைபட விளக்கம்:



சபிண்டர்கள் மத்தியில் உரிமை இறக்கம் :

யாரிடமிருந்து சபிண்டா உறவு முறையைக் கணக்கிடத் தொடங்குகிறோமோ அவரைக் **'கொடிவழி முன்னவர்' (Propositus)** என்று சொல்வர். கொடிவழி முன்னவரிடமிருந்து சபிண்டா உறவினைக் கணக்கிடும் போது, சபிண்டர்கள் மொத்தம் 57 பேர். அவர்கள் யார் யார் என்பது வருமாறு:

1.	கொடிவழி முன்னவரிடமிருந்து ஆண்வழியில் வரும் 6 ஆண் வழித் தோன்றல்கள் (இறங்கு முறை உறவினர்) (Descendants)		=	6
2.	கொடிவழி முன்னவரிடமிருந்து ஆண் வழியில் வரும் 6 ஆண் ஏறுமுறை உறவினர் (Ascendants)		=	6
3.	மேற்சொன்ன 6 ஏறுமுறை உறவினரின் மனைவிகள்		=	6
4.	6 ஆண் ஏறுமுறை உறவினரின் ஒவ்வொரு கிளைவழி வரும் 6 ஆண் இறங்குமுறை உறவினர்கள்	6X6	=	36
5.	விதவை, மகள், மகளின் மகன்		=	3
	மொத்தம்		=	57

இதில் மகளின் மகன் (= மகள் வழிப் பேரன்) பின்ன கோத்திர சபிண்டர் பட்டியலில் வர வேண்டியவன். ஏனென்றால் அவன் கொடிவழி முன்னவருக்குப் பெண் வழியாக உறவாகின்றான். ஆனால் அவனை இப்பட்டியலில் சேர்த்திருப்பதிலிருந்து அவனுக்கு குடும்பத்தில் உள்ள முக்கிய இடம் புலனாகும். ஆனால் நெருங்கிய சபிண்டர், தூரத்து உறவு உடைய சபிண்டர்கள் மத்தியில் மிதாக்ஷரத்தைப் பொறுத்தவரை வாரிசுகளின் வரிசை பின்வருமாறு அமையும்.

I. சபிண்டர்கள் மத்தியில் மிதாக்ஷரா வாரிசுகளின் வரிசை:

இந்து ஒருவன் இறந்ததும் மிதாக்ஷரா முறைப்படி, அவனுடைய வாரிசுகள் பின்வரும் வரிசைப்படி உரிமை இறக்கம் பெறுவார்கள்.

1. மகன், 2. பேரன், 3. கொள்ளுப் பேரன் :

ஒருவன் இறந்ததும், அவனுடைய மகன்களுக்கு அவனுடைய சொத்து செல்லும். மகன்கள் மூன்று பேர் இருந்து அதில் இரண்டு பேர் இறந்து போயிருந்தால் இறந்து போன மகன்களின் மகன்கள் (பேரன்கள்) வாரிசாவார்கள். பேரன்களும் இறந்து போயிருந்தால், கொள்ளுப்பேரன்கள் வாரிசாவார்கள். அதாவது முன்பு பார்த்த பிரதிநிதித்துவக் கொள்கைப்படி பேரனும், கொள்ளுப் பேரனும் தத்தம் தந்தையின் பிரதிநிதியாகச் சொத்தை அடைவார்கள். எனவே மகன், பேரன், கொள்ளுப் பேரன் ஆகியோர், சொத்தைக் கிளை விதிப்படி (ஒவ்வொரு மகனும் ஒவ்வொரு கிளை) பெறுவார்கள்; தலைவிகிதப்படி அன்று.

நெருங்கிய தொடர் வாரிசுகள் (Compact Series of Heirs) :

யஞ்ஞனவல்கிய ஸ்மிருதி மகன்களோ, பேரன்களோ அல்லது கொள்ளுப் பேரன்களோ இறந்தவனுக்கு இல்லாமலிருக்கும் பொழுது பின்வரும் (4 முதல் 11 வரையிலான) நெருங்கிய வாரிசுகள் தங்கள் வரிசைப்படி சொத்தை அடைவார்கள் என்று கூறுகிறது. இவ்வுரிமையில் ஒருவர், தனக்கு அடுத்த வரிசையிலுள்ள வாரிசை சொத்துரிமை பெறுவதிலிருந்து தள்ளி விடுவார். மேற்படி மிதாக்ஷரா வாரிசுமுறை வரிசையும் இதனடிப்படையிலேயே அமைந்தது. இனி தொடர்ந்து காண்போம்.

4. விதவை:

மகன், பேரன், கொள்ளுப் பேரன் யாருமே இல்லையென்றால் இறந்தவனின் மனைவி (விதவை) சொத்தை அடைவாள். விதவையினுடைய சொத்துரிமை முழு உரிமை அன்று. அது, வரையறுக்கப்பட்ட உரிமையே (limited interest). எனவே, அந்த விதவையின் மறைவிற்குப் பின்னர், சொத்து அவளுடைய கணவரின் நெருங்கிய வாரிசுகளுக்குச் செல்லுமே தவிர அவளுடைய வாரிசுகளுக்கு செல்லாது. அவள் தனது வாழ்நாளில் வரையறுக்கப்பட்ட இவ்வுரிமையை வேறு யாருக்கும் மாற்றித்தர முடியாது. மேலும் ஒரு விதவை தன்னுடைய கணவனின் சொத்தில் உரிமை கொண்டாடுவது, அவளுடைய கற்பை பொறுத்து உள்ளது. அவளுடைய மறுமணம் அவளின் சொத்துரிமையைப் பறித்து விடும். ஒன்றுக்கு மேற்பட்ட விதவைகள் இருக்கும் பொழுது பங்குரிமையர்களைப் போல் எஞ்சுநர் உரிமையை அவர்கள் பெறுவர். **(ஆனால் 1956–ல் இயற்றப் பட்ட இந்து வாரிசுரிமைச் சட்டம், வரையறுக்கப்பட்ட உரிமையை மாற்றி விதவைக்கு முழு உரிமையைத் தந்துள்ளது.)**

5. மகள் :

விதவை இறந்து விட்டாலோ அல்லது மறுமணம் செய்து கொண்டாலோ மகளுக்குச் சொத்துரிமை வரும். ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட விதவைகள் இருக்கும் பொழுது, அனைத்து விதவைகளும் இறந்த பின், மகளுக்கு சொத்துரிமை கிடைக்கும். மகள்களுக்குள் திருமணமாகாத மகள், திருமணமாகி ஏழையாய் உள்ள மகள், திருமணமாகி வசதியாக உள்ள மகள் ஆகியோர் முறையே சொத்துரிமையைப் பெறுவர். விதவையைப் போலவே மகளும் வரையறுக்கப்பட்ட சொத்துரிமையை பெறுவாள். ஒரே நிலையில் உள்ள (same degree) ஒன்றுக்கு மேற்பட்ட மகள்கள் இருக்கும் பொழுது எஞ்சுநர் உரிமைப்படி சொத்துரிமை பெறுவர். முறையிலா மணப்பிறப்பில் பிறந்த மகள் (illegtimate daughter), தந்தை சொத்தில் எவ்விதப் பங்கையும் பெற இயலாது. இவ்வாறு மகனோ, மகனின் மகனோ அல்லது விதவையோ இல்லாத பொழுது மகளானவள் மட்டுமே தந்தையின் சொத்தில் பங்கு பெற முடியும். **(ஆனால் 1956–ம் ஆண்டு இயற்றப்பட்ட இந்து**

வாரிசுரிமைச் சட்டத்தின் 6–வது மற்றும் 8–வது பிரிவுகள் மகனுக்கும் மகளுக்கும் சொத்தில் சம உரிமையை அளிக்கிறது.)

6. மகளின் மகன் (- மகள் வழிப் பேரன்) (பந்து) :

இறந்தவரின் மகளின் மகன் பின்ன கோத்திர சபிண்டர் பட்டியலில் அதாவது பந்துவாக (Bandhu) வரவேண்டியவன். ஏனென்றால், அவன் கொடிவழி முன்னவருக்கு பெண் வழியாக உறவாகின்றான். இதை நாம் முன்சென்ற பத்தியில் கண்டோம். ஆனால், அவன் இங்கு இறந்தவரின் வாரிசாக, தந்தை வரும் வரிசைக்கு முன்பாகவே பங்குரிமை பெறுகின்றான். இவ்வாறு சிறப்பானதொரு இடத்தை மகளின் மகனுக்கு இந்துச் சட்டம் கொடுத்துள்ளது. மகளுக்கு, ஒன்றுக்கு மேற்பட்ட மகன்கள் இருந்தார்களேயானால், அவர்கள் பொதுப் பங்குரிமையர்களைப் போல சொத்தைத் தங்களுக்குள் பிரித்துக் கொள்வர். **(1956–ம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்திலும் மகளின் மகனுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, முதல் வகுப்பு வாரிசுதாரர்களுள் (Class I heris) ஒருவராக வந்து, அவன் தனது முன்னதாக இறந்து விட்ட தாய்க்குச் சேர வேண்டிய பங்கைப் பெறுகின்றான்.)**

7. தாய்:

மேற்குறிப்பிட்ட மகளின் மகனும் இல்லையென்றால் அடுத்த வாரிசு தாய்தான். விதவை அல்லது மகளைப் போலவே, தாயும் இறந்தவரின் சொத்தில் வரையறுக்கப்பட்ட உரிமையே பெறுகிறாள். தாய் என்பது தத்தெடுத்துக் கொண்ட தாயையும் குறிக்கும். ஆனால் வளர்ப்புத் தாயைக் குறிக்காது. விதவையைப் போல் அல்லாமல் கற்பு நிலையும், மறுமணமும் இவருடைய சொத்துரிமையை பாதிக்காது. **(1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டப்படி தாயானவள் இறந்தவரின் சொத்தில் முழு உரிமையையும், மகன், விதவை, மகள் ஆகியோருடன் சேர்ந்தே பெறுகிறாள்.)**

8. தந்தை :

தந்தை என்பவர் பெற்ற தந்தையை மட்டுமல்லால் தத்தெடுத்துக் கொண்ட தந்தையையும் குறிக்கும். தாயிற்குப் பின் இவர் சொத்தில் உரிமை பெறுவார். **(1956–ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டப்படி தாய் முதல் வகுப்பிலும், அம்முதல் வகுப்பு வாரிசுதாரர்கள் எவரும் இல்லாத பொழுது, தந்தை இரண்டாம் வகுப்பிலுமாக இருந்து சொத்துரிமையைப் பெறுவர்.)**

9. சகோதரர் :

தந்தை இல்லாத பொழுது, சகோதரன் சொத்தில் உரிமை பெறுவான். ஒன்றுக்கு மேற்பட்ட சகோதரர்கள் இருந்தால் அனைவரும் பொது நிலச் சொத்துரிமையாளர்கள் (Tenants-in-common) எனும் நிலையில் இருப்பர்.

முழு சகோதரன், அரைச் சகோதரனை சொத்துரிமை பெறுவதிலிருந்து தள்ளி விடுவான். **(1956–ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்து வாரிசுரிமைச் சட்டப்படி சகோதரன் இரண்டாம் வகுப்பில் இருந்து வாரிசுரிமை பெறுகிறான்.)**

10. சகோதரனின் மகன்:

சகோதரனுக்கு அடுத்து சகோதரனின் மகன் உரிமை பெறுகிறான். சகோதரனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சகோதரனின் மகன்கள் இருந்தால், அவர்கள் தலை விகித இறக்கப்படி (per capita) சொத்துரிமையை பெறுவர். **(1956–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்து வாரிசுரிமைச் சட்டப்படி சகோதரனின் மகன் இரண்டாம் வகுப்பில் இருந்து உரிமை பெறுகிறான்.)**

11. சகோதரனின் மகனின் மகன்:

முன் கூறிய அனைத்து உறவினர்களும் இல்லாத நிலையில், சகோதரனின் மகனின் மகன் இவர், இறந்தவரின் சொத்தில் உரிமை பெறுவார்.

II. சமநோடகாக்கள் மத்தியில் உரிமை இறக்கம் (Samanodakas) :

சபிண்டாக்களுக்கு பிறகு சமநோடகாக்கள் வாரிசுரிமை உடையவர்கள். ஒருவரின் சமநோடகாக்கள் மொத்தம் 147 பேர். அவர்கள் யார் யார் என்பது வருமாறு.

1.	ஆண் வழியில் 7 முதல் 13 தலைமுறை வரை உள்ள ஆண் இறங்கு முறை உறவினர்கள்		=	7
2.	ஆண் வழியில் 7 முதல் 13 தலைமுறை உள்ள ஆண் ஏறுமுறை உறவினர்கள்		=	7
3.	7 முதல் 13 தலைமுறை வரை உள்ள ஒவ்வோர் ஆண் ஏறுமுறை உறவினரின் 6 தலைமுறை உள்ள ஆண் இறங்குமுறை உறவினர்கள்	6X7	=	42
4.	எண் 2–ல் சொல்லப்பட்டிருப்பவர்களின் கிளைவழியில் 13 தலைமுறை வரை உள்ள ஆண் இறங்குமுறை உறவினர்கள்	7X13	=	91
	மொத்தம்		=	147

இதில் சொல்லப்பட்டிருக்கும் வாரிசுகளில் பலர் வாரிசுப் பிரச்சனை எழும் காலத்தில் உயிரோடு இருப்பது சற்றும் சாத்தியமன்று என்றாலும் கணக்கிடுவதற் காகச் சொல்லப்பட்டுள்ளது. இவர்கள் மத்தியில் உரிமை இறக்கம் ஏற்படும்போது எட்ட உறவு முறையினரை விடக் கிட்ட உறவு முறையினரே உரிமை பெறுவர்.

III. பந்துக்கள் மத்தியில் உரிமை இறக்கம் (Bandhus) :

பந்துக்கள் என்பவர்கள் கொடிவழி முன்னவருக்குப் பெண்கள் வழியாக உறவாவார்கள். இந்தப் பந்துக்கள் நேரடியாக அல்லது தந்தை அல்லது தாய் வழியிலோ உள்ள மூதாதையரின் மூலமாக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பெண்கள் வழியாகக் கொடிவழி முன்னவருக்கு (= இறந்தவர்) உறவாவார்கள். இவர்கள் பெண்வழி உறவாதலால் சபிண்டர்களுக்கும், சமநோடகாக்களுக்கும் பிறகே வாரிசுப் பட்டியலில் இடம் பெறுவார்கள்.

பந்துக்களில் மூன்று பிரிவினர் உண்டு.

1. ஆத்ம பந்துக்கள் :

i) தந்தையின் சகோதரி மகன்.
ii) தாயின் சகோதரி மகன்.
iii) தாயின் சகோதரர் மகன்.

2. பித்ரு பந்துக்கள் :

i) தந்தை வழிப்பாட்டனின் சகோதரி மகன்.
ii) தந்தை வழிப்பாட்டியின் சகோதரி மகன்.
iii) தந்தை வழிப்பாட்டியின் சகோதரர் மகன்.

3. மாத்ரு பந்துக்கள் :

i) தாய் வழிப்பாட்டனின் சகோதரி மகன்.
ii) தாய் வழிப்பாட்டியின் சகோதரி மகன்.
iii) தாய் வழிப்பாட்டியின் சகோதரர் மகன்.

மேலே கொடுக்கப்பட்டிருக்கும் பந்துக்களின் பட்டியல் விரிவானதல்ல. சில உறவுகளைச் சுலபத்தில் புரிந்து கொள்வதற்காகக் காட்டப்பட்டிருக்கும் மாதிரிகளே.

முடிவுரை :

1956–ஆம் ஆண்டில் இந்து வாரிசுரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்ட பிறகு மேற்படி சபிண்டர்கள், சமநோடகாக்கள், பந்துக்கள் போன்ற உறவு முறைகள் ஒழிக்கப்பட்டு சீரான வாரிசு முறைகள் ஏற்படுத்தப்பட்டன. (பின்வரும் வினாக்களில் விரிவாகக் காண உள்ளோம்.)

3. Sapinda relationship – Write Short notes. (சபிண்டா உறவுமுறை – சிறு குறிப்பு வரைக.)

(முந்தைய இரண்டு வினாக்களிலும் காண்க)

4. Explain the Dayabagha system of inheritance. (தாயபாக முறை வாரிசுரிமை இறக்கத்தை விளக்குக.)

முன்னுரை :

தாயபாக முறையில் இறந்தவனின் ஆன்மிக நலனுக்கு (Spititual benefit) சடங்குகள் செய்ய ஒருவனுக்கு உள்ள பாத்தியத்தைப் பொறுத்தே வாரிசுரிமை தீர்மானிக்கப்படுகிறது. எனினும் ஆன்மிகச் சடங்கு எனும் கோட்பாட்டை அமல் செய்ய முடியாத நிலைமைகளில், உறவின் நெருக்கம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

மூன்று வகையான வாரிசுகள் :

தாயபாகத்தில் வாரிசுகள் மூவகையினர். அவர்கள், **(1) சபிண்டர்கள்; (2) சாகுலியர்கள் (Sakulyas); (3) சமநோடகாக்கள் (Samanodhakas).** 'பார்வண சிரார்த்தம்' என்னும் சடங்கு செய்ய ஒருவருக்குள்ள உறவின் உரிமையைப் பொறுத்தே இப்பிரிவுகள் தோன்றின. வாரிசுப் பட்டியலில் சபிண்டர்கள் முதலிலும், சாகுலியர்கள் இரண்டாவதும், சமநோடகாக்கள் மூன்றாவதாகவும் இடம் பெறுவார்கள்.

சில பொதுக் கோட்பாடுகள் :

தாயபாக முறை வாரிசுரிமை இறக்கத்தில் பின்வரும் சில பொதுக் கோட்பாடுகள் பின்பற்றப்படும்.

1. இறந்தவனுடைய பிண்டத்தைக் (முழு உணவு உருண்டை) கொடுப்பவர்கள், அவனிடமிருந்து பெறுபவர்களை விட முதல் உரிமை பெறுவார்கள். அதாவது மகன், பேரன், கொள்ளுப் பேரன் ஆகியோர் தந்தை, பாட்டன், கொள்ளுப் பாட்டன் ஆகியோரை விட முதல் உரிமை பெறுவார்கள்.

2. தந்தை வழி மூதாதையர், தாய் வழி மூதாதையர் ஆகிய இருவழி மூதாதையருக்கும் 'படைக்கும்' (கடவுளுக்கு படைத்தல் போன்று) உரிமை பெற்றவர்கள், தந்தை வழி மூதாதையருக்கு மட்டும் படைக்கும் உரிமை பெற்றவர்களைவிட முதல் உரிமை பெறுவார்கள். அதாவது அரை இரத்தச் சகோதரனை விட முழு இரத்தச் சகோதரனின் உரிமை, முதல் உரிமையாகும்.

3. தாய்வழி மூதாதையருக்குப் படைக்கும் உரிமை பெற்றவர்களை விடத் தந்தை வழி மூதாதையருக்குப் படைக்கும் உரிமை பெற்றவர்கள், முதல் உரிமை பெறுவார்கள்.

4. படைப்பில் அதிக எண்ணிக்கையில் உணவு உருண்டை படைக்க உரிமை உள்ளவர்கள், குறைந்த எண்ணிக்கையில் உணவு உருண்டை படைக்க உரிமை உள்ளவர்களைவிட முதல் உரிமை பெறுவார்கள்.

5. இரண்டு பேர் சம அளவில் உணவு உருண்டை படைப்பவர்களாக இருந்தால், அவர்களுள் எட்ட மூதாதையருக்குப் படைப்பவரை விடக் கிட்ட மூதாதையருக்குப் படைப்பவர் முதல் உரிமை பெறுவார்.

முடிவுரை :

இவ்வாறு இறந்தவனின் ஆன்மிக நலனுக்கு சடங்குகள் செய்பவனுக்கு சொத்துரிமை என்பதால், இங்கு பிறப்பினாலேயே சொத்துரிமை என்பதோ அல்லது எஞ்சுநர் உரிமையின் அடிப்படையில் சொத்துரிமையோ கிடைக்காது. மரபுமுறை வாரிசுரிமை (Succession) மேற்சொன்ன பொதுக் கோட்பாடுகளுக்கு, உட்பட்டுதான் சொத்துரிமை செல்லும்.

5. Enumerate the salient features of the Mitakshara and Dayabagha Schools of Succession. Point out the present position. (மிதாக்ஷரா மற்றும் தாயபாகா ஆகிய இறங்குரிமைக் கொள்கை முறையின் சிறப்பான அம்சங்களைக் கணக்கிடுக. இன்றைய நிலையினைப் பற்றி குறிப்பிடவும்)

(அல்லது)

Survivorship - Write short notes. (எஞ்சுநர் உரிமை – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Rule of Survivorship - Write short notes. (எஞ்சுநர் விதி – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Differentiate between Mitakshara and Dayabagha with regard to inheritance. (இறங்குரிமையைப் பொறுத்து மிதாக்ஷரா மற்றும் தாயபாக முறையை வேறுபடுத்துக.)

(அல்லது)

State the differences between the Mitakshara and the Dayabagha schools regarding succession (இறங்குரிமை குறித்து மிதாக்ஷர மற்றும் தாயபாக குழாமிற்கிடையேயான வேறுபாடுகளை எடுத்துரைக்கவும்.)

முன்னுரை :

[வினா எண் (1)–ன் விடையில் முதல் மூன்று பத்திகளை எழுதவும்.]

மிதாக்ஷரா முறை கூறும் இறங்குரிமை (Mitakshara School of Succession):

மிதாக்ஷரா முறை இரண்டு விதமான இறங்குரிமைகளை அங்கீகரிக் கிறது. அவை, (i) எஞ்சுநர் உரிமை (Survivorship); (ii) வாரிசு உரிமை (Succession). மேற்கண்டவற்றில், **எஞ்சுநர் உரிமையானது** கூட்டுக் குடும்பச் சொத்திற்கு (Joint family property) மட்டும் பொருந்தும். அதாவது, ஒருவன் கூட்டுக் குடும்பச் சொத்தை விட்டு விட்டு இறந்தால், அது எஞ்சுநர் உரிமையின் அடிப்படையில், குடும்பத்தில் எஞ்சியுள்ள பிற ஆண் உறுப்பினர்களை சென்றடைந்தது. **வாரிசுரிமையானது,** குடும்ப உறுப்பினரின் சுய சம்பாத்திய அல்லது தனிச் சொத்திற்கு (Separate property) மட்டுமே பொருந்தும். அதாவது, ஒருவன் தனது சுயசம்பாத்தியச் சொத்தை விட்டுவிட்டு இறந்து விட்டால், அது பிறகு அவனது வாரிசுதாரர்களை வாரிசுரிமையின் அடிப்படையில் சென்றடைந்தது.

தாயபாக முறை கூறும் இறங்குரிமை (Dayabagha School of Succession): :

தாயபாக முறையில் ஒரு விதத்தில் மட்டுமே இறங்குரிமை அமைந்திருந்தது. அது வாரிசுரிமை (Succession) ஆகும். இது எஞ்சுநர் உரிமையை (Survivorship) அங்கீகரிக்கவில்லை. (கூட்டு குடும்பச் சொத்தாக இருப்பினும்). ஏனெனில் இங்கு கூட்டுக் குடும்ப சொத்துக்கும், தனிச் சொத்துக்கும் (சுய சம்பாத்தியச் சொத்துக்கும்) வேறுபாடு காட்டப்படுவதில்லை.

இறங்குரிமையில் மிதாக்ஷரா முறைக்கும், தாயபாக முறைக்கும் உள்ள வேறுபாடுகள் :

	மிதாக்ஷரா முறை	தாயபாக முறை
1.	நெருங்கிய இரத்த உறவு முறை உள்ளவர்களே, 'சபிண்டா' என்று இம்முறை கூறுகிறது.	இங்கு இறந்தவருக்கு ஈமக் கிரியைகள் செய்ய உரிமை உள்ளவர்களே, 'சபிண்டா' என்று இம்முறை கூறுகிறது.
2.	இங்கு பிறப்பினால் ஒருவனுக்குச் சொத்துரிமை ஏற்படுகிறது (By Birth).	இறந்தவருக்கு ஈமக்கிரியைகள் செய்பவருக்குதான் சொத்தில் உரிமை ஏற்படுகிறது.
3.	இம்முறையில் பெண்களுக்குப் பங்குரிமை (Coparcener) வழங்கப்படவில்லை.	இதில் பெண்களுக்கு சொத்துரிமை வழங்கப்பட்டது.

4. தந்தை உயிருடன் உள்ள பொழுதே மகன் சொத்தில் உரிமை கோர இயலும்.	இறந்தவருக்கு ஈமக்கிரியை செய்த பின்தான் ஒருவருக்குச் சொத்தில் உரிமை ஏற்படும்.
5. பாகப்பிரிவினைக்கு முன் இந்துக் கூட்டு குடும்பத்தில் சொத்தின் பங்களவைக் (Share) கணக்கிட முடியாது.	இதில் சொத்தின் பங்களவைக் கணக்கிட முடியும்.
6. இம்முறையில் கூட்டுக் குடும்ப சொத்தும், சுயசம்பாத்தியச் சொத்தும் தனித்தனியான முறையில் பிரிக்கப்பட்டது. அதாவது, கூட்டுக் குடும்ப சொத்து (Joint family property) எஞ்சுநர் உரிமைப்படியும் (Survivorship), சுய சம்பாத்தியச் சொத்தானது (Self-acquired Property) மரபு முறை வாரிசுரிமைப்படியும் (Succession) பிரிக்கப்பட்டது.	இம்முறையில் கூட்டுக் குடும்ப சொத்தும், சுயசம்பாத்தியச் சொத்தும் ஒரே விதமாகவே கருதப்பட்டு, மரபு முறை வாரிசுமைப்படி மட்டுமே பிரிக்கப் பட்டது.
7. பெண்ணுக்குச் சீதன உரிமை அளிக்கப்பட்டிருந்தது.	
8. மணமான பெண்ணுக்குச் சொத்தில் எவ்வுரிமையும் இல்லை.	
9. விதவைக்குச் சொத்தில் வரையறுக்கப்பட்ட உரிமையே (Limited Right) அளிக்கப்பட்டிருந்தது.	
10. தாய் வழியில் 5 தலை முறையும் தந்தை வழியில் 7 தலைமுறையும் கொண்ட எல்லைக்குள் வருபவர்களே, சபிண்டாக்கள் ஆவர்.	இதில் 5 தலைமுறையினரும் பந்துக்களும் சபிண்டாக்கள் ஆவர்.
11. சமநோடகாக்கள் (Samanodakas)- இவர்கள் 8–வது தலைமுறையிலிருந்து 14 தலைமுறைக்குப் பின்னும் வரும் சபிண்டாக்கள் ஆவர்.	இங்கு சமநோடகாக்கள், 8–வது தலைமுறையிலிருந்து 14–வது தலை முறைக்குள் வருபவர்கள் மட்டுமே சபிண்டாக்கள் ஆவர்.

12. சபிண்டாக்களும் அல்லது சமநோடகாக்களும் இல்லாத பொழுது பந்துக்கள் மரபு முறை இறங்குரிமைப்படி சொத்து உரிமை பெறுவர். ஆனால் மகளுடைய மகன் பந்துவாக இருந்தாலும், சபிண்டாக்களுடன் பங்குரிமை பெறுவான்.	இதில் பந்துக்கள் தந்தை வழிப் பங்குரிமையர்களுடன் (agnates) சேர்த்துக் கொள்ளப்படுவதால், இவர்கள் சபிண்டாக்களுடன் சேர்த்து பங்கு பெறுவர்.

இறங்குரிமைக் கோட்பாடுகள் குறித்த இன்றைய நிலை:

1956 – ஆம் ஆண்டில் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு, வாரிசுரிமையில் ஒரு பொதுவான முறையை பிரிவு 8 புகுத்தியது. இதனால் மேற்கூறிய மிதாக்ஷர மற்றும் தாயபாக முறை இறங்குரிமைகள் நீக்கப்பட்டன. (மேலும் விபரங்களுக்கு அடுத்துவரும் வினாக்களின் விடைகளில் காணலாம்.)

[ii] மரபுரிமை இறக்கம் பெறுவதிலிருந்து விலக்கி வைக்கப்பட்டவர்கள் அல்லது மரபுரிமை இறக்கம் பெறத் தகுதியற்றவர்கள் [Exclusion from Inheritance]

1956–ஆம் ஆண்டில் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன் குறிப்பிட்ட சிலரை இந்துச் சட்டம் வாரிசுரிமை பெறுவதிலிருந்து விலக்கி வைத்திருந்தது. பின்னர் இது மேற்படி சட்டத்தால் மாற்றியமைக்கப்பட்டுள்ளதால் பழைய மற்றும் புதிய இந்துச் சட்டங்களை கலந்து படிக்க வேண்டியுள்ளது. ஆகவே, மேற்படி தலைப்பின் கீழான வினா, பகுதி 'ஆ'–வில் வினா எண். 29 ஆக கொடுக்கப்பட்டுள்ளது. எனவே அங்கே காணவும்.

[iii] சீதனமும், மகளிர் சொத்துரிமையும் [Stridhana and Women's Estate]

1956–ஆம் ஆண்டில் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு சீதனமும் மகளிர் சொத்துரிமையும் இருந்தது. ஆனால் அதற்குப் பின்பு மேற்படி சட்டம் அவற்றை நீக்கிவிட்டது. ஆகவே பழைய மற்றும் புதிய இந்துச் சட்டங்களை கலந்து படிக்க வேண்டியிருப்பதால், மேற்படி தலைப்பின் கீழான வினாக்களும் பகுதி 'ஆ'–விலேயே வினா எண்கள். 19, 20 & 21 ஆக கொடுக்கப்பட்டுள்ளன. எனவே அங்கே காணவும்.

ஆ. 1956-ஆம் ஆண்டில் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு இந்துக்களின் மரபுமுறை இறங்குரிமை [தொகுக்கப்பட்ட சட்டம்]

B. The Hindu Law of Inheritance after the enactment of the Hindu Succession Act in the year 1956 [Codified law]

1956-ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டம் - பொதுவாகத் தெரிந்து கொள்ள வேண்டியவை [The Hindu Succession Act, 1956]

பழைய இந்து வாரிசுரிமைச் சட்டமானது, தொகுக்கப்படாத (Uncodified) மனு நீதி மற்றும் இந்து தரும சாத்திரங்களால் வழி நடத்தப்பட்டது. இச்சாத்திரங்கள், இந்துச் சட்டத்தின் அடிப்படையை வகுத்துக் கொடுத்தது என்னவோ உண்மைதான். ஆனால் அவற்றில் மரபுமுறை இறங்குரிமையில் சொத்தை அடைவது குறித்து சரியான விளக்கங்கள் காணப்படவில்லை. இருந்த விளக்கங்களிலும், தெளிவு இல்லை. இதனால் சொத்தை அடைவதில் குழப்பங்கள் நிலவி வந்தன. வேகமான கால வளர்ச்சியில் ஆணுக்குப் பெண் சமம் என்ற கருத்தும் வேகமாக வளர்ந்தது. இதனால் மரபு முறை இறங்குரிமையில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்ட வேண்டியது மிகவும் இன்றியமையாததாகியது. எனவே, இந்து வாரிசுரிமை குறித்த தொகுக்கப்படாத வகைமுறைகளை, முறையானதொரு சட்டமாக தொகுக்க வேண்டிய (Codified Law) அவசியமேற்பட்டது. இதன் விளைவாக 17-6-1956-ஆம் தேதி இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்டது. இது பல்வேறு முன்னேற்றமான மாறுதல்களைக் கொண்டு வந்தது. இதனால் வாரிசுரிமையிலும், வாரிசுகளின் வரிசையிலும் இருந்த குழப்பங்கள் நீங்கியது.

மேற்படி சட்டத்தில் மொத்தம் **31 சட்டப் பிரிவுகள்** உள்ளன. அதில் பிரிவு 31 நீக்கப்பட்டுவிட்டது. மேலும் நமது தமிழக அரசு 1989-ஆம் ஆண்டில் இச்சட்டத்தின் 29-வது பிரிவை, 29-A, 29-B, 29-C எனும் மூன்று பிரிவுகளாகப் பிரித்துத் திருத்தம் செய்துள்ளது. அத்திருத்தம் 25-3-1989-ஆம் தேதி முதல் அமுலுக்கு வந்துள்ளது. இனி 1956-ன் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவுகளைச் சுருக்கமாகக் காண்போம்.

இந்து வாரிசுரிமைச் சட்டம், 1956

பிரிவு 1 : இச்சட்டம் சம்மு - காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியா முழுவதையும் கட்டுப்படுத்தும்.

பிரிவு 2 : இச்சட்டம் இந்து மதத்தினருக்கு மட்டுமே பொருந்தும்.

பிரிவு 3 : தாயாதி (Agnate), தாய் வழி உறவினர் (Cognate) போன்ற பல பதங்களுக்கு இப்பிரிவு வரையறை தருகிறது.

பிரிவு 4 : இப்பிரிவு, இச்சட்டத்தின் மேலோங்கு செல்திறம் (Overriding effect of the Act) பற்றிக் கூறுகிறது. அதாவது இச்சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்பு இருந்த விதிகள் மற்றும் சட்டத்தின் பொருள் விளக்கங்கள், வழக்கங்கள் ஆகியவை, இச்சட்டம் வந்த பிறகு செயலிழந்து போகும். மேலும் இச்சட்டத்தின் பிரிவுகளுக்கு முரணாக ஏதேனும் சட்டங்கள் இருப்பின், அது இச்சட்டம் வந்த பிறகு செயலிழந்து போகும் என மேற்படி பிரிவு 4 கூறுகிறது. இது மறைமுகமாக அலியசந்தானச் சட்டம், மருமக்கள் தாயச் சட்டம் ஆகியவற்றை நீக்குகிறது. இச்சட்டம் இயற்றப்பட்ட பிறகு நடக்கும் நிகழ்வுகளுக்கே, இச்சட்டத்தின் வகைமுறைகள் பொருந்தி வருகிறது. அதற்கு முன்னால் நடந்தவைகளுக்கு அது முக்கியத்துவம் அளிப்பதில்லை.

பிரிவு 5 : இச்சட்டம் சிறப்புத் திருமணம் புரிந்தவர்களின் சொத்தையும், இந்திய அரசுடன் உடன்பாடு செய்து கொண்ட குறுநில மன்னர்களின் சொத்தையும், கொச்சி அரசின் சொத்தையும் கட்டுப்படுத்தாது.

பிரிவு 6 : இப்பிரிவு பழைய மிதாக்ஷர முறைப்படி எஞ்சுநர் உரிமைப் படியே சொத்து பிரிக்கப்படும் என்றும், அதைத் தற்போதைய இந்து வாரிசுரிமைச் சட்டம் கட்டுப்படுத்தாது என்றும் கூறுகிறது. ஆனால், அதே சமயத்தில் இங்கே இறந்தவருக்கு முதலாவது வகுப்பில் (Class I) கூறப்பட்ட பெண் வாரிசுகளோ அல்லது அவர்கள் மூலம் ஆண் வாரிசுகளோ யாரும் இருக்கக் கூடாது என்றும், அப்போதுதான் பழைய எஞ்சுநர் முறை செல்லும் என்றும் கூறுகிறது. ஆனால் பொதுவாக இறந்தவருக்கு முதலாவது வகுப்பில் (Class I) பெண் வாரிசுகளோ அல்லது அவர்கள் மூலம் ஆண் வாரிசுகளோ இல்லாமல் போவதற்கு வாய்ப்பில்லை. அப்படிப்பட்ட வாரிசுகள் யாரேனும் இருப்பின், வாரிசு முறை இச் சட்டத்தின்படிதான் செல்லும். எனவே, இப்பிரிவு மறைமுகமாக பெண்களை பங்குரிமையர்களாக்குகிறது.

பிரிவு 7 : மருமக்கள் தாயச் சட்டம், நம்பூதிரிச் சட்டம் ஆகியவற்றை இப்பிரிவு நீக்குகிறது.

பிரிவு 8 : உயில் எழுதாமல் இறக்கும் ஒரு இந்து ஆணிற்கு வாரிசு தாரர்கள் யார் என்பது குறித்த பொதுவான விதிகளை இப்பிரிவு தருகிறது.

பிரிவு 9 : இச்சட்டத்தின் அட்டவணையில் (Schedule) கொடுக்கப் பட்ட வாரிசுதாரர்களுள் சொத்து எப்படிப் பிரிக்கப்படும் என்று கூறுகிறது.

பிரிவு 10 : அட்டவணையின் முதல் வகுப்பிலுள்ள (Class I of the Schedule) வாரிசுதாரர்களுள் சொத்து எப்படிப் பிரிக்கப்படும் என்று கூறுகிறது.

பிரிவு 11 : அட்டவணையின் இரண்டாவது வகுப்பிலுள்ள (Class II of the Schedule) வாரிசுதாரர்களுள் சொத்து எவ்வாறு பிரிக்கப்படும் என்று கூறுகிறது.

பிரிவு 12 : தாயாதிகள் (Agnates) மற்றும் பெண் வழி உறவினர்களுள் (Cognates) சொத்து எவ்வாறு பிரிக்கப்படும் என்று கூறுகிறது.

பிரிவு 13 : தலைமுறையை எவ்வாறு கணக்கிடுவது (Computation of degrees) என்று கூறுகிறது.

பிரிவு 14 : பெண்ணிற்குச் சொத்தில் முழு உரிமை கொடுப்பது பற்றிக் கூறுகிறது.

பிரிவு 15 : உயில் எழுதாமல் இறந்துபோன பெண்ணின் சொத்தை எப்படிப் பிரிப்பது என்பதற்கான பொது விதிகளை இப்பிரிவு கூறுகிறது.

பிரிவு 16 : உயில் எழுதாமல் இறந்துபோன பெண்ணின் சொத்து யார் யாருக்கு எம்முறையில் செல்லும் என்பதைக் கூறுகிறது.

பிரிவு 17 : மருமக்கள் தாயச் சட்டம் மற்றும் அலிய சந்தானச் சட்டம் ஆகியவை கூறும் வாரிசுதாரர்கள் இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் எவ்வாறு சொத்து பெறுகிறார்கள் என்று கூறுகிறது.

பிரிவு 18 : முழு இரத்த வாரிசுரிமையினர் (Full blood heirs), அரை இரத்த வாரிசுரிமையினர் (Half blood heirs) பற்றிக் கூறுகிறது.

பிரிவு 19 : இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வாரிசுதாரர்கள் ஒன்றாக ஒரு சொத்தை அடையும் பொழுது தலைவிகித இறக்கம் (Per capita) பின்பற்றப்படும் என்றும், கிளைவிகித இறக்கம் (Per stripes) பின்பற்றப்படாது என்றும் இப்பிரிவு கூறுகிறது. அதுபோல் அவர்கள் பொது நிலச் சொத்துரிமையராக (Tenants-in-common) இருப்பார்களே, தவிர கூட்டு நிலச் சொத்துரிமையராக (Joint tenants) அவர்கள் இருக்கமாட்டார்கள்.

பிரிவு 20: கருவில் வளரும் குழந்தையின் உரிமையைப் பற்றிக் கூறுகின்றது.

பிரிவு 21 : ஒரே நேரத்தில் இறந்தவர்களின் சொத்தின் வாரிசுரிமை குறித்த அனுமானத்தைப் பற்றி இப்பிரிவு கூறுகிறது.

பிரிவு 22: முதல் நிலை உரிமைகள் (Preferential right to acquire property) எப்படிக் கிடைக்கும் என்று கூறுகிறது. இது முற்படு விலை கொள் உரிமை (Pre-emption) எனப்படும்.

பிரிவு 23 : குடியிருக்கும் வீட்டைப் (dwelling house) பாகப்பிரிவினை செய்வது பற்றியும், அதில் ஆண் வாரிசுகளுக்கும் பெண் வாரிசுகளுக்கும் இருக்கும் உரிமை பற்றியும் கூறுகிறது.

பிரிவு 24: சில விதவைகள் மறுமணம் செய்வதால் எப்படிச் சொத்தைப் பெற முடியாது என்பதை இப்பிரிவு கூறுகிறது.

பிரிவு 25: கொலையாளி, எவ்வாறு தன்னால் கொலை செய்யப் பட்டவனின் சொத்தில் வாரிசுரிமை பெறுவதிலிருந்து தள்ளப்படுகிறான் என்பதைப் பற்றி இப்பிரிவு கூறுகிறது.

பிரிவு 26: இந்து மதத்தை விட்டு வேறு மதத்திற்கு மாறியவர்கள் சொத்தில் உரிமை பெறுவது பற்றிக் கூறுகிறது.

பிரிவு 27: மேற்கண்டவாறு சொத்துரிமை பெறுவதிலிருந்து தள்ளப் பட்டவர்கள், சொத்தைப் பங்கிடும் நாளில் இறந்தவர்களாகவே கருதப்பட வேண்டும் என்று இப்பிரிவு கூறுகிறது.

பிரிவு 28: இப்பிரிவு பிணியுற்றவர்களையும், உடல் ஊனமுடையவர் களையும், குறைபாடுடையவர்களையும், பழைய இந்துச் சட்டம் போல் அல்லாது சொத்தில் உரிமை பெற அனுமதிக்கிறது.

பிரிவு 29: மேற்கூறிய எந்த வாரிசுதாரரும் இல்லாத நிலையில் இறந்தவரின் சொத்து அரசைச் சென்றடையும் என்று இப்பிரிவு கூறுகிறது (Escheat).

தமிழக அரசின் சட்டத் திருத்தம் (Amendment)

தமிழக அரசு தனது 1990–வது ஆண்டின் 1–வது சட்டத்தின் மூலம் (Act 1 of 1990) 25–3–89–ஆம் தேதியில் பிரிவு 29–ல் திருத்தம் செய்ததன் விளைவாக பின்வரும் 29-A, 29-B, 29-C ஆகிய மூன்று பிரிவுகளைச் சேர்த்தது.

பிரிவு 29-A(i): இப்பிரிவு பங்குரிமைச் சொத்தில் மகளுக்குச் சமபங்கு கொடுக்க வேண்டும் எனக் கூறுகிறது. (Equal rights to Daughter in Coparcenary property). அதாவது, இந்து கூட்டுக் குடும்பத்தில் மிதாக்ஷர முறையில் மகன் எவ்வாறு பிறந்தவுடனேயே பங்குரிமையர் ஆவானோ, அவ்வாறே மகளும் பிறந்தவுடன் பங்குரிமையர் ஆகிவிடுகின்றாள். மகனுக்கு உள்ள அனைத்து பொறுப்புகளும், தகுதியின்மைகளும் (liabilities and disabilities) மகளுக்கும் உண்டு.

(ii) மகனுக்குச் சொத்தில் எவ்வளவு பங்கு கிடைக்கிறதோ அதே அளவு பங்கு மகளுக்கும் கிடைக்கும். மகள் இறந்து விட்டால், அவளது வாரிசுகளுக்கு அவள் பங்கு சென்றடையும்.

(iii) மகளுக்குக் கிடைத்த பங்கினை அவள் தன்னுடைய விருப்பம் போல் யாருக்கு வேண்டுமானாலும் உயில் மூலமோ அல்லது மற்ற ஆவணங்களின் மூலமோ கொடுக்கலாம்.

(iv) 25–3–1989–ஆம் தேதிக்கு முன் திருமணமான மகளுக்கு இந்தச் சட்டத் திருத்தத்தால் எப்பலனும் கிடைக்காது.

(v) 25–3–1989–ஆம் தேதிக்கு முன் நடைபெற்ற எப்பாகப்பிரிவினைக்கும் இச்சட்டத் திருத்தம் பொருந்தாது.

பிரிவு 29-B : 25–3–1989–ஆம் தேதிக்குப்பின் ஒரு பெண் இறந்து விட்டால், அவளுடைய சொத்து உயிருடன் உள்ள மற்றைய எஞ்சுநர்களுக்குப் (Survivors) போய்ச் சேரும். ஆனால் அவள் இறக்கும்பொழுது அவளுடைய குழந்தையோ அல்லது குழந்தையின் குழந்தையோ இருந்தால் 1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது போல் அவளின் சொத்து சென்றடையுமே தவிர, எஞ்சுநர் முறைப்படி (Survivorship) சொத்து சென்றடையாது.

பிரிவு 29-C : சில நேர்வுகளில் சொத்தை அடைவதற்கான முதல் நிலை உரிமையானது (Preferential right to acquire property is certain cases), மேலே கூறிய பிரிவுகள் 29-A மற்றும் 29-B-யின்படி 25–3–1989–ஆம் தேதிக்குப்பின், ஒன்றுக்கு மேற்பட்ட பெண் வாரிசுகளோ அல்லது பெண் வாரிசுகளின் வாரிசுகளோ இருந்தால், அவர்களுக்கு அசையும் சொத்தோ அல்லது செய்யும் தொழிலில் பங்கோ மொத்தமாகவோ (solely) அல்லது கூட்டாகவோ (jointly) கிடைக்கும் பொழுது அவர்களில் யாராவது ஒருவர் தங்களுடைய பங்கினை விற்க விரும்பினால் மற்றவர்கள் (Co-shares) அவரின் சொத்தினை வாங்கும் முன்னுரிமை பெற்றவர்கள் ஆவர். [இது அண்டைச் சொத்தில் முற்படுவிலை கொள் உரிமையைப் (Right of Pre-emption) போன்றதாகும்.]

பிரிவு 29-C (2): அவ்வாறு அச்சொத்தை வாங்க விரும்புபவர்கள் அதற்கு உண்டான தொகையைக் கொடுக்க வேண்டும். இதில் ஏதேனும் சிக்கல் எழுந்தால் நீதிமன்றத் தீர்ப்பே முடிவானதாகும்.

பிரிவு 29-C (3): ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட உடன் பங்குரிமையர்கள் (Co-shares) இருக்கும்பொழுது அதில் ஒருவர் தனது பங்கை விற்க விரும்பினால் மீதி உள்ள பங்குரிமையர்களில் யார் அதிகத் தொகை கொடுக்க உடன்படுகிறார்களோ, அவர்களுக்குத்தான் அப்பங்கை விற்க வேண்டும்.

பிரிவு 30 : இப்பிரிவின்படி, ஒரு மிதாக்ஷரா பங்குரிமையர் பிரிக்கப்படாத சொத்தில் தனக்கிருக்கும் பங்கு குறித்து உயில் எழுதி வைக்கலாம். (விரிவாக வினா எண். 31–ல் காண்க.)

பிரிவு 31: 1929–ஆம் ஆண்டின் இந்து மரபுமுறை இறங்குரிமைச் சட்டமும், 1937–ஆம் ஆண்டின் மகளிர் சொத்துரிமைச் சட்டமும் இப்பிரிவால் நீக்கப்பட்டது. ஆனால் 1960–ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட திருத்தச் சட்டத்தால் மேற்படி 31–வது பிரிவும் நீக்கப்பட்டுவிட்டது.

6. Discuss the general principles of Hindu Law of inheritance before the passing of Hindu Succession Act, 1956. (1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பிருந்த இறங்குரிமைச் சட்டத்தின் பொதுக் கோட்பாடுகளை விவாதிக்க.)

முன்னுரை :

பின்வரும் பத்து பொதுக் கோட்பாடுகள் 1956–ஆம் ஆண்டிற்கு முன்பிருந்த இந்து இறங்குரிமைச் சட்டத்திற்கு பொருந்தக் கூடியதாகும். ஆனால் 1956–ஆம் ஆண்டில் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு, இக் கோட்பாடுகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. அவற்றைப் பின்னர் தனி வினாவில் காண உள்ளோம். (மேற்படி வினா தேர்விற்கு அவ்வளவு முக்கியமானதென்று கூற முடியாது போனாலும், பின்வரும் கோட்பாடுகளை ஒவ்வொரு சட்ட மாணவரும் தெரிந்து கொள்வது மிக்க அவசியமாகும். சில சமயங்களில் இதிலிருந்து சிறுகுறிப்புகள் (Short Notes) கேட்கப்படுவதுண்டு.)

1. இறங்குரிமையை நிறுத்தி வைக்க முடியாது (Inheritance is never in abeyance) :

ஒருவன் இறந்தவுடனேயே அவனுடைய சொத்துரிமை அவனுடைய வாரிசுகளுக்குச் சென்றுவிடும். இறங்குரிமையை நிறுத்தி வைத்தல் என்ற நிலைமைக்கே இடம் கிடையாது. சொத்துரிமையாளர் இறக்கும்பொழுது கருவில் இல்லாத ஒரு வாரிசின் பிறப்பினை எதிர்பார்த்து, இறங்குரிமையை கரு உண்டாகும் வரை தள்ளிப் போட முடியாது.

ஆனால் இதற்கு இரு விதிவிலக்குகள் உண்டு அதாவது (1) கருவில் உள்ள குழந்தை (Child in utero), அதாவது இறந்தவனுக்குப் பின்னர் சொத்தை அடைய வேண்டிய வாரிசு தாயின் வயிற்றில் இருந்தால் அவன் பிறக்கும் வரை இறங்குரிமையை நிறுத்திவைக்கும் நிலை ஏற்படும். ஒருவன் இறந்து, அவன் இறக்கும் காலத்தில் இருந்த நெருங்கிய வாரிசுக்குச் சொத்து சென்ற பின்னர், அவளை விட அதிகப் பாத்தியதை உள்ள வாரிசு பிற்காலத்தில் பிறந்தாலும் சொத்தை அடைந்தவனின் உரிமை பாதிக்கப்படாது. ஆனால் சொத்து அவனைச் சென்றடையும் காலத்தில் அதிக பாத்தியத்தை உள்ளவன் தாயின் வயிற்றில் இருந்தால் அவனுக்குள்ள உரிமையும் பறிபோய் விடாது. இறந்தவனின் சொத்தில் கருவில் இருக்கும் குழந்தைக்கும் உரிமையுண்டு. (2) மற்றுமொரு விதிவிலக்கு, பின்னாளில் செய்து கொள்ளப்பட்ட தத்தெடுப்பாகும் (Subsequent adoption).

2. இறங்குரிமையை எந்த ஒரு ஒப்பந்தத்தாலும் மாற்றியமைக்க முடியாது (Inheritance cannot be overriden by agreement):

இறங்குரிமை குறித்து கூறப்பட்டுள்ள சட்ட விதிமுறைகளை தரப்பினர் களின் ஒப்பந்தத்தின் மூலம் மாற்றியமைக்க முடியாது. எவ்வாறு சொத்துரிமை கூறப்பட்டுள்ளதோ, அதன் வழிவே அது உரியவர்களை அடையும்.

3. எதிர்நோக்கு இறங்குரிமை அங்கீகரிக்கப்படவில்லை (Spes Succession not recognised) :

எதிர்நோக்கு இறங்குரிமை என்பது ஒருவனுக்கு இன்னொருவனுடைய சொத்தை அடைய இருக்கும் வாய்ப்பு மட்டுமேயாகும் (mere chance). இந்த வாய்ப்புக் கிடைக்காமல் போவதற்கும் வழி உண்டு. எனவே, ஒருவன் எதிர்நோக்கு இறங்குரிமையை மாற்றாக்கம் செய்ய முடியாது. அது செல்லத்தக்கதல்ல.

4. ஆண்கள் முழுமையாகவும், பெண்கள் வரம்புடைய சொத்தையும் எடுத்துக் கொள்வார்கள் (Male take absolutely; while female take limited estate) :

இறந்துபோன ஆண் அல்லது பெண்ணிலிருந்து இறங்குரிமையின் அடிப்படையில் சொத்தைப் பெறும் ஆண் உறுப்பினர்கள் (Male), அதனை முழு உரிமையுடன் (absolute) பெறுவார்கள். அதாவது அவர்கள் அச்சொத்தை எல்லா விதமான மாற்றாக்கமும் செய்யலாம். ஆனால் இவ்வாறு சொத்தைப் பெறும் பெண் உறுப்பினர்கள் (Female) அச்சொத்தில் வரம்புடைய உரிமையை (Limited interest) மட்டும் பெறுவார்கள். அதாவது பெண் உறுப்பினர்கள் அச்சொத்தை பராதீனம் செய்யவிலாது. அதை அனுபவிக்கும் உரிமை மட்டுமே உண்டு. அவள் இறந்த பின் அச்சொத்து யாரிடமிருந்து வந்ததோ, அவருடைய வாரிசுதாரர்களுக்குச் சென்றடையும். இதுவே மகளிர் சொத்துரிமை (Women's Estate) எனப்பட்டது. ஆனால் 1956–ஆம் ஆண்டில் இந்த வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு, இந்நிலை நீக்கப்பட்டு, பெண்களுக்குச் சொத்தில் முழு உரிமை அளிக்கப்பட்டது. ஆண்,பெண் இரு பாலரும் முழு உரிமையை அடைவார்கள்.

5. இறங்குரிமையில் புதிய தொடக்கம் (Fresh Stock of descent) :

சொத்திற்கு இறுதியாக இருந்த முழு உரிமையாளர் (Last full owner) இறந்து விட்டால், அவரிடமிருந்து இறங்குரிமையில் ஒரு புதிய தொடக்கம் துவங்கி, சொத்தானது அவரது வாரிசுகளைச் சென்றடைகிறது. ஆனால், இவ்வாறு இறங்குரிமையில் புதிய தொடக்கம் ஆரம்பிப்பதற்கு, சொத்திற்கு சம்பந்தப்பட்டவர் முழு உரிமையாளராக (full owner) இருக்க வேண்டும். ஒரு பெண்ணிற்கு இறங்குரிமையில் கிடைக்கும் சொத்தில் அவளுக்கு வரம்பிற்குட்பட்ட உரிமைதான் (limited interest) உள்ளது (சீதனச் சொத்தைத் தவிர). ஆகவே இங்கு அவர் இறந்தால், இறங்குரிமையில் ஒரு புதிய தொடக்கம் ஆரம்பமாகாது. மாறாக,

சொத்தை யாரிடமிருந்து அவள் அடைந்தாளோ, அவரது வாரிசுதாரர்களுக்கே அது சென்றடையும். ஆனால், இந்நிலை 1956–ஆம் ஆண்டுச் சட்டத்தால் நீக்கப்பட்டு விட்டது. இச்சட்டத்தின் 15 மற்றும் 16–வது பிரிவின்படி ஒரு பெண் இறந்துவிட்டால் அது அவளது வாரிசுதாரர்களுக்குத்தான் செல்லும். ஏனெனில் இச்சட்டம், பெண்களை சொத்துக்கு முழு உரிமையாளராக்குகிறது. எனவே, அவளிடமிருந்து இறங்குரிமையில் ஒரு புதிய தொடக்கம் ஆரம்பமாகிறது.

6. பிரதிநிதித்துவ கோட்பாடு (Doctrine of representation) :

பொதுவாக அருகிலுள்ள வாரிசுதாரர், இறந்தவரின் சொத்தைப் பெறுவார். ஏனெனில் இறந்தவரின் அருகிலுள்ள உறவினர் இறந்தவருக்கு தூரத்திலுள்ள உறவினரைத் தள்ளி விடுவார். ஆனால் சில வேளைகளில் தூரத்து உறவினர் இறந்தவரின் நெருங்கிய உறவினருடன் ஒரே நிலையில் (same degree) இருக்கும் பொழுது சொத்தில் உரிமை பெறுவார். இதுவே பிரதிநிதித் துவக் கோட்பாடாகும்.



மேற்கண்ட வரைபடத்தில் 'X' என்பவருக்கு A,B,C, என்ற மூன்று மகன்கள் உள்ளனர். 'X' இறந்து விடுகிறார். பின் 'B'-யும் 'G','H' என்ற இரு மகன்களையும் விட்டுவிட்டு இறந்து விடுகிறார். 'C' என்பவர் 'D'என்ற மகனை விட்டுவிட்டு இறந்து விடுகிறார். 'D'-யும் தனது 'E','F' என்ற இரு மகன்களையும் விட்டுவிட்டு இறந்து விடுகிறார். இந்நிலையில் 'A' மட்டுமே உயிருடன் இருப்ப தால் 'X' னுடைய சொத்தை மூன்று பங்காக பிரித்து (1/3, 1/3, 1/3) ஒரு பங்கை (1/3) 'A'-யும், இன்னொரு பங்கை (1/3) 'B'-யின் மகன்களாகிய 'G'–யும் 'H'-ம், மற்றொரு பங்கை (1/3) 'D'–யினுடைய மகன்களான 'E'யும் 'F' ம் பெறுவர். இதில் 'G'–யும் 'H'–ம் தனித்தனியே 1/6 பங்கை பெறுவர். அதேபோல 'E'–யும் 'F'-ம் தனித்தனியே 1/6 பெறுவர். பங்குகள் கணக்கீடு பின்வருமாறு அமைகிறது.

$$A + GH + EF = 1/3 + 1/6 + 1/6 + 1/6 = \frac{2+1+1+1+1}{6} = 6/6 = 1$$

இக்கோட்பாட்டை இந்துச் சட்டம் பின்பற்றுகிறது. ஆனால் முகம்மதியச் சட்டம் பின்பற்றுவதில்லை.

7. கூட்டு நிலச் சொத்துரிமையர் மற்றும் பொது நிலச் சொத்துரிமையர் (Joint and Tenants-in-common) :

மரபுமுறை இறங்குரிமையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டோர், சொத்தை அடைந்தால், அவர்கள் பொதுநிலச் சொத்துரிமையராக இருப்பர்; கூட்டு நிலச் சொத்துரிமையராக அல்ல. இது இந்துச் சட்டம் கூறும் பொது விதியாகும்.

கூட்டு நிலச் சொத்துரிமை (Joint tenants) என்பது குடும்ப உறுப்பினர்கள் சொத்தை கூட்டாகக் கொண்டிருக்கும் சொத்தில், ஒவ்வொரு உறுப்பினருக்கும் அதில் அனுபவ பாத்தியதை உண்டு. அது மட்டுமில்லாமல், அதில் அவர்களுக்கு ஒரு நிச்சயமான பங்கும் (a definite share) உண்டு. எனவே, அவ்வுறுப்பினர்கள் தங்களுக்குரிய பங்களவிற்கு மட்டுமே பொறுப்புடையவர்கள் ஆவார்கள். ஒரு உறுப்பினரின் இறப்பு அல்லது பிறப்பு பங்குகளைக் கட்டுப்படுத்தாது.

பொதுநிலச் சொத்துரிமை (Tenants-in-common) என்பது, பிரிக்கப் படாத பங்குரிமையில், குடும்ப உறுப்பினர்களுக்கு ஒரு குறிப்பிட்ட நிச்சயமான பங்கு (no defined share) இல்லையென்றாலும், உறுப்பினர்களின் பங்கு ஒரு பங்குரிமையரின் இறப்பு மற்றும் பிறப்பினால் கூடினாலும் அல்லது குறைந்தாலும், அது பொது நிலச் சொத்துரிமையாக கருதப்படுகிறது. அதாவது இது எஞ்சுநர் உரிமையினடிப்படையில் செயலுறுகிறது.

8. தலைவிகித மற்றும் கிளைவிகித இறக்கம் (Division Per Capita and Per Stripes) :

[i] தலைவிகித இறக்கம் (Division Per Capita) :



மேலே உள்ள வரைபடத்தில் 'X' என்பவருக்கு 'A','B','C' என்ற மூன்று மகன்கள் உள்ளனர். இதில் 'X' என்ற தந்தை இறந்தபின் அவரின் சொத்தை A,B,C எனும் அவரது மூன்று மகன்களும் சமமாகப் பெறுவர். (ஒவ்வொருவருக்கும் சொத்தில் 1/3 பாகம் பங்காக பெறுவர்). இதுவே தலைவிகித இறக்கம் எனப்படும்.

$$1/3 + 1/3 + 1/3 = 1+1+1 = \frac{3/3}{6} = 1$$

[ii] கிளை விகித இறக்கம் (Division Per Stripes) :



மேற்கண்ட வரைபடத்தில் 'X'-னுடைய சொத்தை A,B எனும் இரு மகன்களும் சமமாகப் (1/2 ÷ 1/2) பெறுவர். 'A'யினுடைய 1/2 பங்கை அவருடைய மகன்களான C,D,E-யும் சமபங்காகப் (1/3 X 1/2 = 1/6) பெறுவர். அதேபோல் 'B' யினுடைய 1/2 பங்கை அவருடைய F,G எனும் இரு மகன்களும் சமமாகப் (1/2 X 1/2 = 1/4) பெறுவர். இதுவே கிளைவிகித இறக்கம் எனப்படும்.

9. முழு இரத்த உறவிற்கு அடுத்ததாக அரை இரத்த உறவு (Whole blood to be preferred to half-blood):

இந்துச் சட்டத்தில் ஒருவருக்கு முழு இரத்த சம்பந்தமுடைய வாரிசுதாரர்களும், அரை இரத்த சம்பந்தமுடைய வாரிசுதாரர்களும் இருந்தால், முழு இரத்த சம்பந்தமுடைய வாரிசுதாரர்களுக்கு உடனே அடுத்தபடியாக அரை இரத்த வாரிசுதாரர்கள் சொத்தில் உரிமை பெறுவர்.

10. நெருங்கிய உறவும் மதக்கோட்பாட்டின் பயனும் (Propinquity and Religious efficacy) :

மிதாக்ஷரா முறையைப் பொறுத்த வரையில், இறங்குரிமையானது. ஒரே இரத்த உறவின் அடிப்படையில் அமைகிறது. ஆனால் தாயமாக முறையில் ஒருவன் தனது இறந்த முன்னோர்களுக்கு மதக்கோட்பாட்டின் பயன்களை, அதாவது அவர்கள் ஆன்மா சாந்தியடையும் வகையில் (பிண்டம் அளித்தல்) சமர்ப்பிக்கும் தகுதியைப் பொறுத்து இறங்குரிமை அமைகின்றது. (இதை முன்னரே வினா எண். 1–ன் விடையில் கண்டுள்ளதால் இங்கே விரிவாகக் கொடுக்கப்படவில்லை.)

மேற்படி நெருங்கிய உறவு மற்றும் மதக் கோட்பாட்டின் பயனால் ஏற்படும் இறங்குரிமையை 1956–ன் இந்து வாரிசுரிமைச் சட்டம் நீக்கிவிட்டது. இது பிரிவு 8–ன் வாயிலாக, அன்பு மற்றும் பாசத்தை (love and affection) அடிப்படையாக கொண்டு வாரிசுகளை வகைப்படுத்தியுள்ளது.

7. 'Inheritance is never in abeyance'. Discuss. ("இறங்குரிமையை நிறுத்தி வைக்க முடியாது" – விவாதி.)

(முந்தைய வினாவின் விடையில் காண்க.)

8. Discuss the main features of the Hindu Succession Act.1956. (1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் முக்கிய கூறுகளை விவாதிக்க.)

(அல்லது)

Describe the changes brought about by modern Legislation regarding inheritance. (இறங்குரிமையில் அண்மைக்கால சட்ட மாற்றங்கள் குறித்து விவரிக்க.)

1. 1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டம் அனைத்து இந்துக்களையும், புத்த மதத்தினரையும், ஜைனர்களையும், சீக்கியர்களையும் கட்டுப் படுத்தும். ஆனால் இச்சட்டம் முகமதியர்களுக்கும், கிறுத்தவர்களுக்கும், பார்ஸியர்களுக்கும், யூதர்களுக்கும் பொருந்தாது. எனினும் பெற்றோர்களில் யாரேனும் ஒருவர் இந்துவாகவோ, புத்த மதத்தினராகவோ, ஜைனராகவோ அல்லது சீக்கியராகவோ இருந்தால், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் (முறைமணப் பிறப்பு அல்லது முறைமணப்பிறப்பல்லாத) இந்துவாகவே கருதப்பட்டு, அவர்களுக்கும் இச்சட்டம் பொருந்தும். **(பிரிவு2).**

2. இச்சட்டம் பிரிக்க இயலாச் சொத்து என்பதை நீக்கியது **(பிரிவு 4).**

3. 1954 –ஆம் ஆண்டின் சிறப்புத் திருமணச் சட்டப்படி திருமணம் செய்து கொண்டவர்களின் சொத்துக்கு இச்சட்டம் பொருந்தாது **(பிரிவு 5).**

4. இச்சட்டத்தின் **6வது பிரிவு** பழைய மிதாக்ஷரா முறைப்படி எஞ்சுநர் உரிமைப்படியே சொத்து பிரிக்கப்படும் என்றும், அதை மேற்படி இந்து வாரிசுரிமைச் சட்டம் கட்டுப்படுத்தாது என்றும் கூறுகிறது. ஆனால் அதே வேளையில் இங்கே இறந்தவருக்கு முதல் வகுப்பில் (Class I) கூறப்பட்ட பெண் உறவினர்களோ அல்லது அவர்கள் மூலம் ஆண்களோ யாரும் இருக்கக்கூடாது என்றும் கூறுகிறது. அப்படி யாரேனும் இருப்பின், மேற்படி 1956–ன் இந்து வாரிசுரிமைச் சட்டம் கூறும் வாரிசுமைப்படி சொத்துக்கள் பிரிக்கப்படும் என்றும் கூறுகிறது. ஆனால் பொதுவாக முதல் வகுப்பில், பெண் வாரிசுகளோ அல்லது அவர்கள் மூலம் ஆண் சந்நதியினரோ இல்லாமல் போவதற்கு வாய்ப்பில்லை. எனவே, இது மறைமுகமாக, இறந்தவரின் சொத்தில் பெண்களையும் பங்குரிமையர்களாக்குகிறது.

5. இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள வாரிசுரிமை முறையானது **அன்பையும், பாசத்தையும் (Love and affection)** பொருந்தே அமைக்கப்பட்டுள்ளது. இறந்தவருக்கு யார் பிண்டம் (Pinda) இடுகின்றார்களோ, அவர்களுக்கே வாரிசுரிமையில் முன்னுரிமை என்ற கோட்பாட்டையோ (Doctrine of Spiritual benefit) அல்லது இரத்த நெருக்க உறவு விதியையோ (Rule of Propinquity of blood) இச்சட்டம் அங்கீகரிக்கவில்லை. அவற்றை நீக்கி விட்டது.

6. ஆண் வாரிசுகளையும் பெண் வாரிசுகளையும் இச்சட்டம் வேறுபடுத்த வில்லை. இருவருக்கும் சொத்தில் சமபங்கு அளிக்கும் முறையை ஏற்படுத்தியது.

7. இச்சட்டம் தென் இந்தியாவில் அதுவும் குறிப்பாக கேரளம் பகுதியில் நிலவி வந்த தாய் வழி வாரிசுரிமை முறையை (Matriarchal System) நீக்கியது.

8. ஒரு இந்து ஆண் உயில் எழுதாமல் இறந்துவிட்டால், அதற்கு ஒரே சீரான வாரிசுரிமை முறையை (uniform order of succession) ஏற்படுத்தியது. வாரிசுரிமை தொடர்பாக மருமக்கள் தாயச் சட்டம் (Marumakkatattayam) மற்றும் அலிய சந்தானச் சட்டம் (Aliyasantant laws) ஆகியவற்றைப் பின்பற்றியவர்களுக்குச் சில விதிவிலக்குகளை அளித்துள்ளது. **(பிரிவு 8 & 17)**

9. வாரிசுரிமை பற்றி மிதாக்ஷரா, தாயபாக முறைகள் கூறிய கருத்துக்களை இச்சட்டம் முற்றிலும் நீக்கிவிட்டது.

10. இச்சட்டத்திற்கு முன்பு, சீதனச் சொத்தைத் தவிர, பிற சொத்துக்களில் பெண்களுக்கு வரையறுக்கப்பட்ட உரிமை (Limited Interest) மட்டுமே இருந்தது. இச்சட்டம், அதை நீக்கி, பெண்களை சொத்துக்கு முழு உரிமையாளர்களாக்கியது. **(பிரிவு 14).**

11. உயில் எழுதாமல் இறந்து போன பெண்ணின் சொத்திற்கு ஒழுங்கு படுத்தப்பட்ட வாரிசுமுறையை (Uniform order of succession) இச்சட்டம் ஏற்படுத்தியது. ஏனெனில் இறந்துபோன பெண்ணின் வாரிசுதாரர்களாக முதலில் வருபவர்கள், அவளின் குழந்தைகளே. அக்குழந்தைகளுக்குப் பின்தான் அவள் கணவனும் பெற்றோரும் அவள் சொத்தில் உரிமை பெறுவார்கள். குழந்தைகள் இல்லாதபொழுது, அவளின் சொத்து தந்தை வழியில் வந்ததாக இருந்தால் அது தந்தைக்கும் அவரது வாரிசுகளுக்குமே செல்லும். ஆனால் அவளுக்குக் கணவனிடமிருந்தோ அல்லது அவளின் மாமனாரிடமிருந்தோ கிடைத்த சொத்தானது, அவளுக்கு குழந்தைகள் இல்லாத நிலையில் கணவனின் வாரிசுகளுக்கே செல்லும். **(பிரிவுகள் 15, 16 & 17)**

12. வாரிசுரிமையில் ஒரே நிலையில் இருக்கும்போது முழு இரத்த வாரிசுரிமையினர், அரை இரத்த வாரிசுரிமையினரை சொத்துரிமை பெறுவதில் இருந்து தள்ளி விடுவார்கள். **(பிரிவு 18).**

13. ஒன்றுக்கு மேற்பட்ட வாரிசுதாரர்கள் ஒரே நிலையில் இருக்கும் பொழுது, அவர்கள் சொத்தில் தங்களது பங்கை தலைவிகித இறக்கப்படியே (Per capita) பெறுவார்களேயன்றி, கிளைவிகித இறக்கப்படி (Per strips) பெற மாட்டார்கள். மேலும் இவர்கள் பொது நிலச் சொத்துரிமையாளர்கள் (Tenants-in-common) ஆவார்களேயன்றிக் கூட்டு நிலச் சொத்துரிமையாளர்களாக (Joint Tenants) மாட்டார்கள்.

14. உயில் எழுதாமல் ஒருவர் இறக்கும்பொழுது தாயின் கருவில் வளரும் குழந்தையானது, பின் உயிருடன் பிறந்தால், இறந்தவரின் சொத்தில் அது பங்குரிமை பெறும் **(பிரிவு 20).**

15. இச்சட்டம் அண்டைச் சொத்தில் முற்படு விலைகொள் உரிமையை (Pre-emption) ஏற்றுக் கொண்டது. (முகமதியச் சட்டத்தில் இவ்வுரிமை பற்றியதான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளதைக் காண்க.) **(பிரிவு 22).**

16. இச்சட்டம் திருமணமாகாத பெண்ணிற்கும், விதவைக்கும், கணவனால் கைவிடப்பட்ட (deserted) பெண்ணிற்கும், கணவனிடமிருந்து பிரிந்து வாழும் பெண்ணிற்கும் தங்களின் தந்தையின் வீட்டிலேயே தங்கி வாழும் உரிமையை அளிக்கிறது **(பிரிவு 23).**

17. கொலையாளிக்கு கொலை செய்யப்பட்டவரின் சொத்தில் பங்கு இல்லையென்றும், மறுமணம் செய்து கொண்ட சில விதவைகளுக்கும் தன்னுடைய கணவனின் சொத்தில் இருந்து பங்கு பெற இயலாது என்றும் இச்சட்டம் கூறுகிறது. **(பிரிவு 24 மற்றும் 25).**

18. மதம் மாறியவர்களின் வழித்தோன்றல்கள் இந்து உறவினர்களின் சொத்தில் இருந்து பங்கு பெற இயலாது என இச்சட்டம் கூறுகின்றது. ஆனால் அக்குழந்தைகள் இறந்தவரின் சொத்து பிரிக்கப்படும் பொழுது, மீண்டும் இந்துவாக மாறியிருந்தால், அந்நிலையில் அவர்கள் தங்கள் இந்து உறவினர்களிடமிருந்து சொத்துரிமை பெறுவார்கள் என இச்சட்டம் கூறுகிறது. **(பிரிவு 26).**

19. முன்னர் கூறிய தகுதியின்மையானவர்களை (கொலையாளி, மறுமணம் செய்து கொண்ட சில விதவைகள், மதம் மாறியவர்கள் போன்றோர்) சொத்து பிரிக்கப்படும் பொழுது இறந்தவர்களாகவே கருதவேண்டும் என இச்சட்டத்தின் **பிரிவு 27** கூறுகின்றது.

20. இச்சட்டம் பிணியுற்றோர்களையும் (disease), அங்கக் குறைபாடு உடையவர்களையும் (defect), உடல் ஊனமுற்றோர்களையும் (deformity) சொத்தில் பங்கு பெறுவதில் இருந்து விலக்கவில்லை. **(பிரிவு 28).**

21. மிதாக்ஷர முறையில் உள்ள பங்குரிமையருக்குத் தனது பங்கினைப் பிறருக்கு உயில் மூலம் கொடுக்கும் உரிமையை இச்சட்டம் வழங்கி உள்ளது. **(பிரிவு 30).**

9. Are the decendants of a convert entitled to succeed to his interests? Is the rule with respect to this matter under the Hindu Succession Act, 1956 retrospective? (மதம் மாறியவரின் வழித் தோன்றல்கள் முன்னவரின் உரிமைகளுக்கு வாரிசுதாரர்களா? இப்பொருள் தொடர்பான விதி 1956–ம் ஆண்டு இந்து வாரிசுரிமை சட்டத்தில் கடந்த காலத்திலிருந்து அமுல்படுத்தப்படுகிறதா?)

(முந்தைய வினாவின் விடையில் 18–வது எண் கொண்ட பத்தியைப் (பிரிவு 26) பார்க்கவும்.)

10. What important changes in the law of Succession among Hindu have been introduced by the Hindu Succession Act, 1956? Discuss them in detail. (1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தினால் இந்துக்களின் வாரிசுரிமைச் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட முக்கிய மாற்றங்கள் யாவை? அவற்றை விரிவாக விவாதி.)

1. பொதுவான தன்மை (Uniformity of application): இச்சட்டம் இந்துக்களின் வாரிசுரிமையில் ஒரு பொதுவான தன்மையைக் கொண்டு வந்தது. இது மிதாக்ஷரா மற்றும் தாயபாக முறை சார்ந்தவர்களுக்கும், மருமக்கட்தாயம், அலியசந்தானம், நம்பூதிரி போன்ற தென் இந்திய வாரிசுரிமை முறை சார்ந்தவர்களுக்கும் ஒரே மாதிரியாக பொதுவாக பொருந்தியது. இந்துக்களில் அவரவர்களுக்கென்று தனித்தனியாக இருந்த வாரிசுரிமையை இச்சட்டம் நீக்கிவிட்டது.

2. பங்குரிமைச் சொத்தில் உரிமை மாற்றம் (Devolution of interest in coparcenary property): இச்சட்டத்தின் **6–வது பிரிவானது** மிதாக்ஷரா பங்குரிமையில் ஒரு முக்கியமான மாற்றத்தைக் கொண்டு வந்தது. இதனால் பெண்களும், ஆண்களுக்குச் சமமாக பங்குரிமையர்கள் ஆனார்கள். (முந்தைய வினாவில் பத்தி எண் 4–ஐக் காண்க)

3. தனிச் சொத்தில் இறங்குரிமை (Inheritance to separate property): மிதாக்ஷரா மற்றும் தாயபாக முறையின் கீழ் உயில் எழுதாமல் இறக்கும் ஒரு இந்து ஆணின் தனிச் சொத்திற்கு இருந்து வந்த இறங்குரிமையை இச்சட்டம் நீக்கியது. அதற்குப் பதிலாக, ஒரு சீரான வாரிசுரிமையை **பிரிவு 8–ன்** வாயிலாக கொண்டு வந்தது.

4. வாரிசுகளின் பிரிவு (Classes of heirs): இச்சட்டம் வருவதற்கு முன்பு மிதாக்ஷரா முறையானது பின்வரும் மூன்று பிரிவினரை வாரிசுகளாக அங்கீகரித்தது. அவர்கள் (a) கோத்ராஜா சபிண்டர்கள்; (b) சமநோடகாக்கள்; (c) பந்துக்கள். அவ்வாறே தாயபாக முறையில் (a) சபிண்டாக்கள்; (b) சாகுலியர்கள் (Sakulyas); (c) பந்துக்கள்.

இச்சட்டம், மேற்கண்ட வாரிசுகளின் பிரிவுமுறை நீக்கிவிட்டது. அதற்கு மாறாக, பின்வரும் நான்கு வகுப்பினரை மேற்படி சட்டம் அறிமுகப்படுத்தியது. அவர்கள் (a) முதல் வகுப்பு வாரிசுதாரர்கள் (Heirs of class I); (b) இரண்டாம் வகுப்பு வாரிசுதாரர்கள் (Heirs of class II); (c) தாயாதிகள் (Agnates); (d) பெண்வழி உறவினர் (Cognates). **(இவர்களைப் பற்றி விரிவாக பின்னிணைப்புப் பட்டியலில் காண்க.)**

5. இந்துப் பெண்ணின் வரம்புடைய சொத்து (Limited Estate of Hindu Women): இச்சட்டம் பெண்ணின் வரம்புடைய சொத்துரிமையை நீக்கி, அவர்களை சொத்திற்கு முழு உரிமையாளர்களாக்கியது. **(பிரிவு 14).**

6. பெண்களின் சொத்திற்கு வாரிசுரிமை (Succession to property of a female died intestate): இச்சட்டம் வருவதற்கு முன்பு பெண்களின் சீதனச் சொத்தில், அவர்கள் திருமணம் ஆனவர்களா அல்லது திருமணம் ஆகாதவர்களா, அல்லது அப்படி திருமணம் ஆகியிருப்பின் அத்திருமணத்தின் வகை ஆகியவற்றைப் பொறுத்து வாரிசுரிமை அமைந்தது. மேலும் அது அவர்கள் சார்ந்திருக்கும் முறையைப் (Schools) பொறுத்தும் மாறியது. ஆனால் இச்சட்டம் இவற்றையெல்லாம் நீக்கிவிட்டு, **பிரிவு 15–ன்** வாயிலாக உயில் எழுதாமல் இறக்கும் பெண்களின் சொத்திற்கு ஒரே சீரான வாரிசுரிமையை அறிமுகப்படுத்தியது.

7. பிரிக்கமுடியாத சொத்து என்பதை நீக்கியது (Abolition of impartible estate).

8. முற்படு விலைகொள் உரிமை (Pre-emption (or) Preferential right to acquire property): ஒரு சொத்தானது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வாரிசுகளை இறங்குரிமையில் அடைந்து, அவர்களில் ஒருவர் தனது பங்கை விற்க முனைந்தால், அதை வாங்க மற்ற வாரிசுகளுக்கு இச்சட்டம் முன்னுரிமை அளித்துள்ளது. அவர்கள் வாங்காது விடுத்தால்தான் அதை வெளியார்களுக்கு விற்க வேண்டும். இதுவே முற்படு விலைகொள் உரிமை எனப்படுகிறது. இது **பிரிவு22–ன்** மூலம் இந்துக்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

9. வாரிசுகளின் தகுதியின்மை (Disqualification of heirs): பழைய சட்டத்தின்படி பிணியுடையோர்கள், குறைபாடுடையவர்கள், ஊனமுற்றோர்கள், வாரிசுரிமை பெறுவதிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர். இது மேற்படி சட்டத்தின் **28–வது** பிரிவின் வாயிலாக நீக்கப்பட்டுவிட்டது.

10. பங்குரிமைச் சொத்தை உயில் மூலம் எழுதி வைத்தல் (Disposal of coparcenary interest by will): பழைய சட்டத்தின்படி மிதாக்ஷரா முறையின் கீழ், பங்குரிமையர் எவரும் பிரிக்கப்படாத சொத்தில் தனது பங்கு குறித்து உயில் எதுவும் எழுதி வைக்க முடியாது. ஏனெனில் மிதாக்ஷரா பங்குரிமை அமைப்பு எஞ்சுநர் முறைப்படி செல்கிறது; ஒரு பங்குரிமையரின் பிறப்பு மற்றும் இறப்பு, பங்கின் அளவைக் குறைக்கும் அல்லது கூட்டும். ஆனால், மேற்படி புதிய சட்டத்தின் **30–வது பிரிவின்படி,** ஒரு மிதாக்ஷரா பங்குரிமையர் தனக்கு பிரிக்கப்படாத சொத்தில் இருக்கும் பங்கு குறித்து உயில் எழுதி வைக்கலாம். இது ஒரு பெரிய மாறுதல் ஆகும்.

தமிழ்நாடு அரசு கொண்டு வந்த சட்டத் திருத்தம் (State Amendment):

வாரிசுரிமை குறித்து பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வந்த மேற்படி

1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்திலும் மேலும் மாற்றங்கள் கொண்டுவர, தமிழ்நாடு அரசு மேற்படி சட்டத்தில் **29–A, 29–B, 29–C** எனும் மூன்று சட்டப் பிரிவுகளை தனது சட்டத் திருத்தத்தின் வாயிலாக **(T.N. Act I of 1990 w.e.f 25-3-89)** புகுத்தியது. இதனால் மகனைப் போல மகளும் பிறப்பினாலேயே சொத்தை அடையும் பங்குரிமை பெற்றாள். இது மிக மிக முன்னேற்றமான மாறுதல் ஆகும். (மேற்படி திருத்தச் சட்டப் பிரிவுகள் குறித்து நாம் ஏற்கனவே விரிவாகக் கண்டுள்ளோம்.)

11. Can a member of a Hindu Joint family execute a will of his interest in the joint family properties? (ஒரு கூட்டுக் குடும்பத்தின் அங்கத்தினர் ஒருவர் தனக்கு கூட்டுக் குடும்ப சொத்துக்களில் உள்ள உரிமையை உயில் எழுதி வைக்க முடியுமா?)

(முடியும். வினா எண் 10–ல் 10–வது எண் கொண்ட பத்தியை பார்க்கவும்)

12. " The Hindu Succession Act retionalises the list of heirs (on intestate succession) on the love and affection theory" - Discuss. [" இந்து வாரிசுரிமைச் சட்டமானது வாரிசுகளின் பட்டியலை (உயில் இல்வழி) அன்பு மற்றும் பாசம் எனும் கோட்பாட்டின் அடிப்படையில் பகுத்துள்ளது" – விவாதி.]

இந்து வாரிசுரிமை - முந்தய நிலை:

1956–ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட இந்து வாரிசுரிமைச் சட்டமானது உயில் இல்வழி இறங்குரிமை குறித்து பல்வேறு மாறுதல்களைச் செய்துள்ளது.

இச்சட்டம், இந்து வாரிசுரிமை குறித்த முந்தய முறைகளான மிதாக்ஷரா மற்றும் தாயபாக ஆகியவற்றை முற்றிலும் மாற்றியமைத்தது. அதாவது இச்சட்டம் வாரிசுரிமைப் பெறுவதில் மேற்படி சட்டம் வருவதற்கு முன்பிருந்த சபிண்டாக்கள் (Sapindas), சமநோடகாக்கள் (Samanodakas), பந்துக்கள் (Bandus) ஆகிய நெருங்கிய இரத்த உறவு முறைகளை நீக்கியது. மேலும், யார் இறந்தவருக்கு பிண்ட உணவு (அரிசி சாதத்தால் செய்யப்பட்ட உருண்டை) படைக்கும் உரிமை பெற்றுள்ளாரோ, அவரே இறந்தவரின் சொத்திலும் வாரிசுரிமை பெற தகுதியுடையவர் என்ற கோட்பாட்டை மேற்படி சட்டம் ஒழித்தது. பிண்டம் இடுபவர்கள் தந்தை வழி உறவினர்களாகவும் (சபிண்டாக்கள்), தாய்வழி உறவினர்களாகவும் (பந்துக்கள்) முன்பு கருதப்பட்டு அதனடிப்படையில் வாரிசுரிமை அமைந்து இருந்தது. சுருங்கக் கூறின் முன்பிருந்த வாரிசுரிமை மிதாக்ஷரத்தை பொறுத்தவரையில் நெருங்கிய இரத்த உறவின் (Propinquity) அடிப்படையிலும், தாயபாகத்தைப் பொறுத்தவரையில் ஆன்மிக வழியிலும் (spirtual) அமைந்திருந்தது.

இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்ட பிறகான நிலை:

1956–ல் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு மேற்கூறியபடி சபிண்டாக்கள் மற்றும் பந்துக்கள் உறவு முறை நீக்கப்பட்டது. அதற்கு பதிலாக **தாயாதி (Agnates)** மற்றும் **பெண்வழி உறவினர் (Cognates)** என்ற உறவு முறை புகுத்தப்பட்டது. மேலும் வாரிசுரிமை பெறுவதில் புதிய முறைகளை ஏற்படுத்தியது. இது உறவின் நெருக்கம், அன்பு மற்றும் பாசப்பிணைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருந்தது. சற்று விரிவாக வருமாறு.

வாரிசுரிமைக்கு அன்பும் பாசமுமே முக்கிய அடிப்படை:

மேற்படி சட்டத்தின் 8–வது பிரிவானது வாரிசுகளை அன்பு மற்றும் பாசக் கோட்பாட்டின் அடிப்படையில் (1) முதல் வகுப்பு வாரிசுகள்; (2) இரண்டாம் வகுப்பு வாரிசுகள்; (3) தாயாதிகள் (Agnates) மற்றும் (4) பெண்வழி உறவினர் (Cognates) என்று பிரித்துள்ளது. இவ்வாரிசுகளின் நிலையும் தெளிவாக வரிசைப் படுத்தப்பட்டுள்ளது. முதல் வகுப்பைப் பொறுத்த வரை இறந்தவரிடம் இயற்கை யாகவே அன்பு செலுத்தக்கூடிய உறவுகளான மகன், மகள், விதவை, தாயார் ஆகியோர்களுக்கு வாரிசுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. இதில் இவ்வாறு மொத்தம் 12 வாரிசுதாரர்கள் உள்ளனர். (கிளைவழியாக வாரிசுரிமை பெறுபவரும் இதில் அடக்கம். உதாரணமாக முன்னதாக இறந்து விட்ட மகனின் மகன்). இவர்கள் அனைவரும் ஏககாலத்தில் இறந்தவரின் சொத்தில் சம உரிமை பெறுவார்கள் (Simultaneous heirship). முதல் வகுப்பு வாரிசுதாரர்களான 12 பேர்களில் யாருமே இல்லையென்றால்தான், இரண்டாம் வகுப்பு வாரிசுதாரர்கள் சொத்தில் பாத்தியம் பெற உரிமை படைத்தவர்களாகிறார்கள். அவர்கள் இறந்தவரிடம் அடுத்தபடியாக அன்பும் பாசமும் கொள்ளக்கூடியவர்களான தந்தை, பேரன் மற்றும் பேத்தியின் மகள், சகோதரன் மற்றும் சகோதரி, பாட்டன், பாட்டி ஆகிய 9 வாரிசுதாரர்கள் ஆவர்.

மேற்கண்ட முதல் இரண்டு வகுப்பிலும் வாரிசுதாரர்கள் யாருமே இல்லையெனில், தாயாதிகள் (Agnates) (இறந்தவரின் இரத்த சம்பந்த உறவினன்) சொத்தைப் பெறுவார்கள்.

தாயாதிகளும் இல்லையெனில், பெண்வரி உறவினர் (இறந்தவரின் இரத்த சம்பந்தமில்லா உறவினன்–பொதுவாக தாய்வழி உறவினர்) (Cognates) சொத்தைப் பெறுவார்கள்.

முடிவுரை:

இவ்வாறு அன்பு மற்றும் பாசத்தின் அடிப்படையில் படிப்படியான வாரிசுரிமையை 1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டம் உருவாக்கி உள்ளது. எனவே பிண்டம் அளிப்பவனுக்கே சொத்தில் இறங்குரிமை போன்ற ஆன்மிக கோட்பாடுகள் எல்லாம் மறைந்துவிட்டன.

13. What is the scope and impact of the special provision regarding devolution of interest in coparcenary property as provided in section 6 of the Hindu Succession Act? (இந்து உரிமை இறக்கச் சட்டத்தின் பிரிவு 6ல் கொடுக்கப்பட்டுள்ள பங்குரிமைச் சொத்தின், இறங்குரிமை தொடர்பான சிறப்பு வகைமுறைகளின் நோக்கெல்லை மற்றும் விளைவு யாவை?)

(அல்லது)

How will the interest of a male Hindu in a Mitakshara coparcenary property devolve under the provisions of the Hindu Succession Act, 1956? Explain. (1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்ட வகைமுறைகளின் கீழ் ஒரு மிதாக்ஷரா பங்குரிமைச் சொத்தில் இந்து ஆண் ஒருவரின் சொத்துரிமை எப்படி சென்றடையும்? விளக்குக.)

(அல்லது)

Show how far the coparcenary is affected by the Hindu Successions Act. (இந்து வாரிசுரிமைச் சட்டத்தால் பங்குரிமை எந்த அளவு பாதிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவி.)

(அல்லது)

How does the interest in a Mitakshara Coparcenary property devolve under the Hindu Succession Act. 1956? (மிதாக்ஷர பங்குரிமை சொத்திலுள்ள உரிமை 1956–ம் ஆண்டு இந்து வாரிசுரிமை சட்டத்தின்படி எப்படி போகிறது?)

முன்னுரை :

1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் 6–வது பிரிவில், ஒரு பங்குரிமையர் இறந்ததும் அவருடைய சொத்துரிமை எப்படிச் செல்லும் என்பது கூறப்பட்டுள்ளது. அதாவது இப்பிரிவு **பங்குரிமைச் சொத்தின் இறங்குரிமை (Devolution of interest in coparcenary property)** குறித்து கூறுகிறது.

நோக்கெல்லை (Scope):

1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டம் வந்ததற்குப் பிறகு மிதாக்ஷராப் பங்குரிமைச் சொத்தில், இறக்கும் காலத்தில் உரிமையுள்ள ஒருவர் இறந்து போனால், சொத்திலுள்ள அவனுடைய உரிமை எஞ்சுநர் உரிமைப்படி (Survivorship) உயிரோடு இருக்கும் பிற பங்குரிமையருக்குச் செல்லும். அதாவது இச்சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் விதிகளின்படி செல்லாது.

உதாரணமாக A, B ஆகிய இருவரும், சகோதரர்கள் என வைத்துக் கொள்வோம். அவர்களில் A இறந்ததுவிட்டால், அவருடைய பங்குக்குரிய சொத்து எஞ்சுநர் உரிமைப்படி B-யைத்தான் அடையும். மற்றவர்களை அடையாது.

இருப்பினும் (proviso) இறந்துபோன பங்குரிமையர் பின்னிணைப்பு பட்டியலில் முதல் வகுப்பில் (Class I of the Schedule) சொல்லப்பட்டிருக்கும் பெண் உறவினரையோ அல்லது அதே வகுப்பில் சொல்லப்பட்டிருக்கும் பெண் உறவினர் வழியாக உரிமை கொண்டாடும் ஆண்களையோ விட்டுவிட்டு இறந்திருந்தால், மிதாக்ஷராப் பங்குரிமையில் அவருக்கு இருக்கும் உரிமை, உயில் எழுதியிருந்தால் அதன்படி அல்லது உயில் எழுதாது இருந்தால் (intestate) உயில் இல்லாத நிலையில் உரிமை இறக்கம் எவ்வாறு செல்லுமோ அவ்வாறு இச்சட்டத்தின் கீழ் செல்லும். மாறாக எஞ்சுநர் உரிமைப்படி செல்லாது. பொதுவாக, இறந்துபோன பங்குரிமையருக்கு முதல் வகுப்பு வாரிசுதாரர்களில் பெண் உறவினர்கள் இல்லாமல் போவதற்கு வாய்ப்பில்லை.ஆகவே பங்குரிமைச் சொத்தின் உரிமை இறக்கம் இச்சட்டத்தின்படியே செல்லும் என்று திடமாகக் கூறலாம்.

பிரிவு 6-க்கு விளக்கம் 1 (Explanation 1):

மேற்படி மிதாக்ஷராப் பங்குரிமையர் இறப்பதற்கு முன்னர் உடனடியாக ஒரு பாகப்பிரிவினை ஏற்பட்டிருந்தால் அந்தப் பாகப்பிரிவினையில், அவருக்கு என்ன பங்கு ஒதுக்கப்பட்டிருக்குமோ அதை அவருடைய பங்காகக் கொள்ள வேண்டும்.

பிரிவு 6-க்கு விளக்கம் 2 (Explanation 2):

பங்குரிமையர் இறப்பதற்கு முன்பு ஒருவர் பங்குரிமை அமைப்பை (கூட்டுக் குடும்பத்தை) விட்டுத் தனியாகப் போயிருந்தால், அவரோ அல்லது அவரது வாரிசுதாரர்களோ, அப்பங்குரிமையர் உயில் எழுதாது இறக்கும் காலத்தில் அவருடைய சொத்தில் பங்கு கேட்க முடியாது.

விளைவு (Impact) :

மேற்படி 6-வது பிரிவானது மிதாக்ஷரா முறைப்படி எஞ்சுநர் உரிமைப் படியே சொத்து பிரிக்கப்படும் என்றும், அதை தற்போதைய இந்து வாரிசுரிமைச் சட்டம் கட்டுப்படுத்தாது என்றும் கூறுகிறது. அதே வேளையில், இங்கே இறந்தவருக்கு முதல் வகுப்பில் (Class I heirs) கூறப்பட்ட பெண் உறவினர்கள் யாரும் இருக்கக்கூடாது என்றும், அப்போதுதான் பழைய எஞ்சுநர் முறை (Survivorship) செல்லும் என்றும் கூறுகிறது. அப்படி யாரேனும் பெண் அல்லது பெண் வழி உறவினர்கள் இருப்பின், 1956-ன் இந்து வாரிசுரிமைச் சட்டப்படியே, சொத்துரிமை இறக்கம் அமையும் என்றும் கூறுகிறது. பொதுவாக, மேற்படி பெண் உறவினர்கள் பங்குரிமையர் இறக்கும் காலத்தில் இல்லாமல் போவதற்கு

வாய்ப்பில்லை. எனவே, பங்குரிமையர் சொத்தில் பெண்களும் பங்கு அடைய மேற்படி பிரிவு 6 வழி வகுத்துளளது எனில் அது மிகையன்று.

14. Aliyasantana Law - Write short notes. (அலிய சந்தானச் சட்டம் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Marumakkattayam Law – Write short notes. (மருமக்கட்தாயச் சட்டம் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

What are the innovations made by the Hindu Succession Act in 'Marumakkattayam and Aliyasantana Law'? (இந்து வாரிசுரிமைச் சட்டம் "மருமக்கள் தாயம் மற்றும் அலிய சந்தானச் சட்டத்தில்" ஏற்படுத்திய மாற்றங்கள் யாவை?)

அலிய சந்தானச் சட்டம் (Aliyasantana Law):

1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு **3(1)(b)**–ஆனது அலியசந்தானச் சட்டத்திற்கு பின்வருமாறு வரையறை தருகிறது. அதன்படி, 1956–ஆம் ஆண்டில் இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் செய்யப்பட்டுள்ள வகைமுறையின்படியிலான விஷயங்களுக்கு, இச்சட்டம் இயற்றப்படாதிருப்பின், யாருக்கு 1949–ஆம் ஆண்டின் சென்னை அலியசந்தானச் சட்டம் பொருந்துமோ அல்லது யாருக்கு வழக்க நெறியிலான அலியசந்தானச் சட்டம் பொருந்துமோ அந்த நபர்களுக்குரிய ஒரு சட்ட முறை என்று பொருளாகும்.

மருமக்கட்தாயச் சட்டம் (Marumakkattayam Law):

1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு **3(1)(h)**–ஆனது மருமக்கட்தாயச் சட்டத்திற்கு பின்வருமாறு வரையறை தருகிறது. அதன்படி,

(a) 1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் செய்யப்பட்டுள்ள வகைமுறையின்படியிலான விஷயங்களுக்கு, இச்சட்டம் இயற்றப்படாதிருப்பின், யாருக்கு 1932–ஆம் ஆண்டின் சென்னை மருமக்கட்தாயச் சட்டம், திருவாங்கூர் நாயர் சட்டம், திருவாங்கூர் ஈழவர் சட்டம், திருவாங்கூர் நாஞ்சில்நாடு வெள்ளாளர் சட்டம், திருவாங்கூர் சத்திரியர் சட்டம், திருவாங்கூர் கிருஷ்ணன்வாகா மருமக்கட்தாயி சட்டம், கொச்சின் மருமக்கட்தாயம் சட்டம், அல்லது கொச்சின் நாயர் சட்டம் பொருந்துமோ, அந்த நபர்களுக்குரிய ஒரு சட்ட முறை என்று பொருளாகும்.

(b) 1–11–1956–ஆம் தேதிக்கு உடனடி முன்பு இருந்த திருவாங்கூர் – கொச்சி அல்லது சென்னை மாநிலத்தில் அதிகமாக வசித்து வந்த சமுதாய

உறுப்பினர்கள், மற்றும் எந்த சமுதாயத்தையும் சார்ந்தவருக்கு பொருந்தக் கூடிய ஒரு சட்ட முறை மற்றும் 1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்படாதிருப்பின், இச்சட்டத்தில் செய்யப்பட்டுள்ள வகைமுறையின் படியிலான விஷயங்கள் குறித்து பெண்வழித் தோன்றல்களின் மரபுரிமையை கண்டறியத்தக்க முறை எதுவும் பொருந்தக் கூடிய நபர்களுக்குரிய ஒரு சட்டமுறை என்று பொருள்.

ஆனால் அலிய சந்தானச் சட்டம் யாருக்குப் பொருந்துமோ, அவர்களுக்கு மருமக்கட்தாயச் சட்டம் பொருந்தாது.

1956–ஆம் ஆண்டில் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப் பட்ட பிறகு மேற்கண்ட இரு சட்டங்களில் ஏற்பட்ட மாற்றங்கள்:

மருமக்கள் தாயச் சட்டம் பெரும்பாலும் கேரள மாநிலத்திலேயே பின்பற்றப்பட்டு வந்தது. இச்சட்டப்படி இறந்தவரின் சொத்து அவரின் குழந்தைகளுக்கு சென்றடையாமல், அவரின் சகோதரியின் குழந்தைகளுக்கே செல்லும். அதுபோல் இறந்தவரின் குழந்தைகளுக்கு அவருடைய மனைவியின் சகோதரனின் சொத்து வந்து சேரும். இதுவே மருமக்கள் தாயச் சட்டம் எனப் பட்டது. தற்பொழுது, இந்த அலிய சந்தானச் சட்டத்தையும் மருமக்கள் தாயச் சட்டத்தையும் யார் யார் பின்பற்றி வந்தார்களோ அவர்களுக்கு 1956–ம் ஆண்டு இயற்றப்பட்ட இந்து வாரிசுரிமைச் சட்டம் பொருந்துகிறது.

வேறு விதத்தில் கூறுவதானால், அலிய சந்தானச் சட்டமும், மருமக்கள் தாயச் சட்டமும், அச்சட்டம் முன்னதாக பொருந்தி வந்த நபர்களுக்கு பொருந்தாது என்று 1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் **7–வது பிரிவு** கூறுகிறது. அச்சட்டங்கள் பொருந்தி வந்த ஒரு இந்து ஆண் விட்டுச் சென்ற சொத்தினை எவ்வாறு பிரித்துக் கொள்வது என்பது குறித்து மேற்படி சட்டத்தின் **8–வது பிரிவும்**, ஒரு இந்து பெண்ணின் சொத்தைப் பொறுத்து **பிரிவு 15–ம்** வகை செய்கிறது. எனினும் **17–வது பிரிவு** மருமக்கள் தாயச் சட்டம், அலிய சந்தானச் சட்டம் ஆகியவற்றை பின்பற்றியவர்களுக்கு சில சிறப்பு வகைமுறைகளை (Special Provisions) ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அவை வருமாறு.

இறந்து போன ஒரு ஆணைப் பொறுத்த மாற்றம்:

அலிய சந்தானச் சட்டத்தாலும், மருமக்கள் தாயச் சட்டத்தாலும் கட்டுப் படுத்தப்பட்டவர்களுக்கு, 1956–ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் **17(i)–வது பிரிவு**, இறந்துபோன ஒரு இந்து ஆணின் சொத்து முதலில் முதல் வகுப்பினருக்கும் (Class I), இரண்டாவதாக இரண்டாம் வகுப்பினருக்கும் (Class II), மூன்றாவதாக மேற்கண்ட இரண்டு வகுப்பு வாரிசுகளில் எவரும்

இல்லையெனில், அவரது சொத்து **'உறவினர்களுக்கும்' (Relatives)** செல்லும் என்று கூறுகிறது. அவர்கள் தயாதிகளாகவோ (agnates) அல்லது பெண்வழி உறவினர்களாகவோ (cognates) இருக்கலாம். மேற்கண்ட இரு சட்டங்களும் பொருந்தாத ஒரு இந்து ஆணிற்கு சாதாரணமாக மேற்கண்ட இந்து வாரிசுரிமைச் சட்டத்தின்படி முதலிரண்டு வகுப்பு வாரிசுகளும் இல்லாத நிலையில், அவரது சொத்து மூன்றாவதாக தாயாதிகளுக்கும், இவர்களும் இல்லாதபட்சத்தில் பெண்வழி உறவினர்களுக்கும் செல்லும். (பிரிவு 8). ஆனால் மேற்கண்ட இரு சட்டங்களில் ஏதேனும் ஒன்று பொருந்தக் கூடிய ஒரு இந்து ஆண் இறந்துவிட்டால் மேற்படி பிரிவு 17–ன்படி, முதலிரண்டு வகுப்பு வாரிசுகளும் இல்லாத நிலையில், மூன்றாவதாக 'உறவினர்கள்' அவரது சொத்தை அடைவர். உறவினர் எனும் பதத்தில் தாயாதிகளும், பெண்வழி உறவினர்களும் அடங்குவர். இங்கு இத்தகு இரு வகுப்பினரும் ஏககாலத்தில் இறந்தவரின் சொத்தை வாரிசுரிமையில் அடைகின்றனர்.

இறந்து போன ஒரு பெண்ணைப் பொறுத்த மாற்றம்:

மேற்கண்ட சட்டங்களில் ஏதேனும் ஒன்று பொருந்தக் கூடிய ஒரு இந்துப் பெண் உயில் எழுதாமல் சொத்தை விட்டு இறந்து விட்ட நிலையில், பின்வருபவர்கள் அச்சொத்தைப் பிரித்து கொள்வர் என்று **பிரிவு 17(ii)** கூறுகிறது. அவர்கள் பின்வருமாறு:

1. முதலில் மகன்கள், மகள்கள், முன்னதாக இறந்துபோன மகனின் – மகளின் குழந்தைகள் மற்றும் தாய்.
2. இரண்டாவதாக, தந்தை மற்றும் கணவன்.
3. மூன்றாவதாக, தாயின் வாரிசுகள்.
4. நான்காவதாக, தந்தையின் வாரிசுகள்.
5. இறுதியாக, கணவனின் வாரிசுகள்.

15. What are the principles to be followed in dividing the property of a Hindu dying intestate among the heirs in Class I of the Schedule to the Hindu Succession Act? (இந்து உரிமை இறக்கச் சட்டத்தின் இணைப்புப் பட்டியலிலுள்ள முதலாம் பிரிவு வாரிசு தாரர்களுக்குள் உயில் எழுதாமல் இறக்கிற ஒரு இந்துவினுடைய சொத்தை, பிரிவினை செய்வதில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் யாவை?)

(அல்லது)

State the rules of succession applicable to the property of a Male Hindu dying intestate under the Hindu Succession Act, 1956. (1956 ஆம் ஆண்டு இந்து இறங்குரிமைச் சட்டத்தின் கீழ் ஒரு இந்து

ஆண் உயில் எழுதாமல் இறந்தால் அவரது சொத்தின் இறங்குரிமை குறித்த விதிகளை கூறுக.)

(அல்லது)

(a) State the general rules of Succession in the case of Hindu males.

(b) How is the property distributed among heirs in class I of the Schedule to the Hindu Succession Act, 1956?

(அ) இந்து ஆண்களின் வாரிசுரிமை இறக்கப் பொது விதிகளைக் கூறுக.

(ஆ) இந்து வாரிசுரிமை இறக்கச் சட்டம் 1956, பின்னிணைப்புப் பட்டியலில் உள்ள முதல் வகுப்பு வாரிசுகளிடையே சொத்துக்களை எவ்வாறு வினியோகிப்பது?

முன்னுரை :

1956–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்து வாரிசுரிமைச் சட்டம் பின்வரும் இரு வகையான வாரிசுரிமைகளைப் பற்றிக் கூறுகிறது. ஒன்று, இச்சட்டத்தின் 8 முதல் 13 வரை உள்ள பிரிவுகள் ஒரு இந்து ஆண் உயில் எழுதாமல் (intesate) இறந்து போனால் அவனது சொத்தை எவ்வாறு பிரிப்பது என்றும், மற்றொன்று 15 மற்றும் 16–வது பிரிவுகள் உயில் எழுதாமல் இறந்து போன பெண்ணின் சொத்தை எவ்வாறு பிரிப்பது என்பதைப் பற்றியும் கூறுகிறது.

உயில் எழுதாமல் இறக்கும் இந்து ஆண் ஒருவரின் வாரிசுரிமை இறக்கம் குறித்த பொது விதிகள்:

1956–ன் இந்து வாரிசுரிமைச் சட்டம் பிரிவு 8–ஆனது, உயில் எழுதாமல் இறந்துவிட்ட ஓர் இந்து ஆணின் சொத்திற்கு யார் யார் வாரிசாக வர முடியும் என்பதற்குண்டான பொது விதிகளைக் கூறுகிறது. அதன்படி.

(a) முதலில் அந்த இந்து ஆணின் சொத்து, பின்னிணைப்பு பட்டியலில் (Schedule) முதல் வகுப்பில் (Class I) கூறப்பட்டிருக்கும் உறவினர்களுக்குச் செல்லும்.

(b) முதல் வகுப்பில் கூறப்பட்டிருக்கும் வாரிசுதாரர்கள் யாருமே இல்லை எனில் இரண்டாவது வகுப்பில் (Class II) கூறப்பட்டிருக்கும் உறவினர்களுக்குச் செல்லும்.

(c) முதல் வகுப்பு மற்றும் இரண்டாம் வகுப்பு ஆகிய இரண்டிலும் கூறப் பட்டிருக்கும் வாரிசுதாரர்கள் யாருமே இல்லை என்றால், இறந்தவனின் தாயாதிகளுக்குச் (Agnates) செல்லும்.

(d) தாயாதியும் இல்லை என்றால், இறந்தவனின் பெண் வழி உறவினருக்கு (Cognates) செல்லும்.

மேற்படி 8–வது பிரிவு, பழைய இந்துச் சட்டத்தில், அது மிதாக்ஷரா முறையாயினும் சரி, தாயபாக முறையாயினும் சரி, பல அடிப்படை மாறுதல்களைக் செய்து உறவின் நெருக்கம், பாசப்பிணைப்பு இவற்றின் அடிப்படையில் வாரிசுகளைத் திட்டவட்டமாக நிர்ணயித்திருக்கிறது. மேற்கண்ட 8–வது பிரிவுப்படி வாரிசுகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம். நாம் முன்சென்ற பத்தியில் கண்டது போல்,–

(1) பின்னிணைப்பு பட்டியலின் முதல் வகுப்பு வாரிசுகள்.
(2) பின்னிணைப்பு பட்டியலின் இரண்டாம் வகுப்பு வாரிசுகள்.
(3) தாயாதிகள் (தந்தை வழி உறவினர்கள்) (Agnates)
(4) பெண்வழி உறவினர்கள் (Cognates)

இவ்வாரிசுகளின் நிலையும் தெளிவாக வரிசைப்படுத்தப்பட்டிருக்கிறது. முன்னதாக உள்ள வகுப்பில் எந்த வாரிசுமே இல்லையென்றால்தான், அடுத்து வரும் வகுப்பிலுள்ள வாரிசு சொத்துரிமை பெற முடியும்.

முதல் வகுப்பு வாரிசுகள் (Class I heirs) – யார்?

முதல் வகுப்பு வாரிசு தாரர்கள் பின்வருமாறு :

(1) மகன்
(2) மகள்
(3) விதவை
(4) தாயார்
(5) முன்னதாக இறந்து விட்ட மகனின் மகன்
(6) முன்னதாக இறந்து விட்ட மகனின் மகள்
(7) முன்னதாக இறந்து விட்ட மகளின் மகன்
(8) முன்னதாக இறந்து விட்ட மகளின் மகள்
(9) முன்னதாக இறந்து விட்ட மகனின் விதவை
(10) முன்னதாக இறந்து விட்ட மகனுடைய முன்னதாக இறந்து விட்ட மகனின் மகன் (Son of a pre-deceased son of a pre-deceased son).
(11) முன்னதாக இறந்து விட்ட மகனுடைய முன்னதாக இறந்துவிட்ட மகனின் மகள் (Daughter of a pre-deceased son of a pre-deceased son).
(12) முன்னதாக இறந்து விட்ட மகனுடைய முன்னதாக இறந்துவிட்ட மகனின் விதவை (Window of a pre-deceased son of a pre-deceased son).

இந்த முதல் வகுப்பில் சொல்லப்பட்டிருக்கும் வாரிசுதாரர்கள் அனைவரும் சொத்தை ஒரே சமயத்தில் சம பங்குடன் அடைபவர்கள். ஆனால் பேரன்கள், பேத்திகள், கொள்ளுப்பேரன்கள் ஆகியோர் பிரதிநிதித்துவ முறைப்படி சொத்தை அடைபவர்கள். ஆகையால் அவர்கள், தங்களுடைய பெற்றோர்கள் உயிரோடு இருக்கும் காலத்தில் சொத்தை அடைய வாய்ப்பில்லை. எனவே முதல் வகுப்பில் சொல்லப்பட்டிருக்கும் 12 வாரிசுதாரர்களும் ஒரு சொத்தை ஒரே நேரத்தில் அடைவது சாத்தியமல்ல.

முதல் வகுப்பு வாரிசுதாரர்களைக் காட்டும் வரைபடம் (Class I heirs):



இரண்டாம் வகுப்பு வாரிசுகள் (Class - II heirs) - யார்?

முதல் வகுப்பு வாரிசுதாரர்கள் யாரும் இல்லாதபொழுது, பின்வரும் இரண்டாம் வகுப்பு வாரிசுகள் சொத்தில் பங்கு பெறுவர். அவர்கள்,–

I. தந்தை

II. (1) மகனின் மகளின் மகன்
(2) மகனின் மகளின் மகள்
(3) சகோதரன்
(4) சகோதரி

III. (1) மகளின் மகனின் மகன்
(2) மகளின் மகனின் மகள்
(3) மகளின் மகளின் மகன்
(4) மகளின் மகளின் மகள்

IV. (1) சகோதரனின் மகன்
(2) சகோதரியின் மகன்
(3) சகோதரனின் மகள்
(4) சகோதரியின் மகள்

V. (1) தந்தையின் தந்தை
(2) தந்தையின் தாய்

VI (1) தந்தையின் விதவை
(2) சகோதரனின் சகோதரி

VII. (1) தந்தையின் சகோதரன்
(2) தந்தையின் சகோதரி

VIII. (1) தாயின் தந்தை
(2) தாயின் தாய்

XI. (1) தாயின் சகோதரன்
(2) தாயின் சகோதரி

தாயாதிகள் (Agnates):

மேற்கண்ட முதல் வகுப்பு மற்றும் இரண்டாம் வகுப்பு வாரிசுதாரர்கள் யாருமே இல்லையென்றால், இறந்தவரின் தாயாதிகள் (Agnates) வாரிசுரிமை பெறுவர். தாயாதி என்பவன் இறந்தவனின் இரத்த சம்பந்தத்தால் ஆண்கள் வழியில் உறவாக வருபவன். அதாவது தந்தை வழி உறவினர் எனக் கூறலாம்.

பெண்வழி உறவினர் (Cognates):

மேற்கண்ட முதல் வகுப்பு இரண்டாம் வகுப்பு வாரிசுதாரர்கள் மற்றும் தாயாதிகள் ஆகிய யாவருமே இல்லாத நிலையில் இறந்தவனின் பெண் வழி உறவினர்கள் சொத்தில் பங்கு பெறுவர். இவர்களை தாய் வழி உறவினர் எனக் கூறலாம்.

சொத்து செல்லும் முறை (Order of Succession) (பிரிவு 9):

இச்சட்டத்தின் 9–வது பிரிவு, மேற்படி 8–வது பிரிவில் கூறப்பட்டிருக்கும் வாரிசுதாரர்கள் சொத்தை அடையும் முறையைப் பற்றிக் கூறுகிறது. முதல் வகுப்பு வாரிசுதாரர்கள் (Class - I heirs) அனைவரும் மற்ற வாரிசுதாரர்களை நீக்கி விட்டு ஒரே சமயத்தில் வாரிசுரிமை பெறுவர் (Simultaneous Succession). ஆனால் இரண்டாவது வகுப்பில் (Class II) கூறப்பட்டிருக்கும் வாரிசுதாரர்கள் ஒரே சமயத்தில் வாரிசுரிமை பெற முடியாது. இதுதான் முதல் வகுப்பு வாரிசுகளுக்கும் இரண்டாவது வகுப்பு வாரிசுகளுக்கும் உள்ள முக்கிய வேறுபாடு. இரண்டாவது வகுப்பு வாரிசுதாரர்கள் வரிசைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அதில் மொத்தம் 9 வரிசைகள் (Entry) இருக்கின்றன. முதலில் முதல் வரிசையினர் (First entry) சொத்தை அடைவர். அவர்கள் இல்லாது போனால் பின்னர், இரண்டாவது வரிசையினர் (Second entry) சொத்தை அடைவர். இவ்வாறு வரிசைப்படி வாரிசுரிமை அமையும்.

சொத்தைப் பங்கிடும் முறை (Distribution of Property):

முதல் வகுப்பு வாரிசுதாரர்கள் சொத்தை பெறும் விதம் (Distribution of property among heirs in Class I of the Schedule) (பிரிவு 10) :

விதி 1–ன்படி : உயில் எழுதாமல் இறந்தவனின் விதவை ஒரு பங்கு பெறுவாள். ஒன்றுக்கு மேற்பட்ட விதவைகள் இருந்தால் அத்தனை விதவைகளும் சேர்ந்து ஒரு பங்கு பெறுவார்கள்.

விதி 2–ன்படி : உயிரோடு இருக்கும் மகன்கள், மகள்கள், தாயார் ஆகியோர் ஒவ்வொருவரும் தலா ஒரு பங்கு பெறுவார்கள்.

விதி 3–ன்படி : ஒரு மகன் தன்னுடைய வாரிசுகளை விட்டுவிட்டு முன்னதாக இறந்து விட்டால் அவன் வழி வாரிசுகள் அனைவரும் சேர்ந்து

அவனுக்குரிய ஒரு பங்கைப் பெறுவார்கள். அதைப் போலவே ஒரு மகள் தன்னுடைய வாரிசுகளை விட்டுவிட்டு முன்னதாக இறந்துவிட்டால் அவளுடைய வழி வாரிசுகள் அனைவரும் சேர்ந்து அவளுக்குரிய ஒரு பங்கைப் பெறுவார்கள்.

விதி 4–ன்படி: மேற்படி விதி 3–ல் கூறப்பட்டிருக்கும் ஒரு பங்கு பிரிக்கப் படும் விதம் வருமாறு:

(i) முன்னதாக இறந்து விட்ட மகனின் கிளை வழி வரும் வாரிசுகளான விதவை (அல்லது விதவைகள் அனைவரும் சேர்ந்து), உயிருடன் உள்ள மகன்கள், மகள்கள் ஆகியோர் அவனுடைய ஒரு பங்கை சம பாகங்களாக (equal portions) பெறுவார்கள். இறந்து விட்ட மகனின் மகன்களுள் ஒருவன் முன்னதாக இறந்து போயிருந்தால், அம்மகனுடைய கிளை வாரிசுகள் அவனுடைய பாகத்தைப் பெறுவார்கள்.

(ii) முன்னதாக இறந்து விட்ட மகளின் கிளை வழி வரும் வாரிசுகளான உயிருடன் உள்ள அவளது மகன்களும், மகள்களும் அவளுடைய ஒரு பங்கை சம பாகங்களாக பெறுவார்கள்.

இரண்டாம் வகுப்பு வாரிசுதாரர்கள் சொத்தை பெறும் விதம் (Distribution of property among heirs in Class II of the Schedule) (பிரிவு 11) :

இரண்டாம் வகுப்பு வாரிசுதாரர்கள் மொத்தம் 9 பிரிவுகளாக வரிசைப் படுத்தப்பட்டுள்ளனர் (Entry). உயில் எழுதாது இறக்கும் ஆண் ஒருவரின் சொத்தை இரண்டாம் வகுப்பு வாரிசுதாரர்களில் முதல் வரிசையில் (First Entry) உள்ளவர் முதலில் அடைவர். அதை அவர்கள் சமமாகப் பிரித்து கொள்வார்கள். முதல் வரிசையினர் இல்லாவிட்டால், அதன் பின் இரண்டாவது வரிசையினர் அடைவர். இப்படியாக 9–வது வரிசை வரை செல்லலாம். அதாவது இவ் வரிசையினர் ஒன்றன்பின் ஒன்றாகத்தான் வாரிசுரிமை பெறுவார்கள். அத்துடன் ஒரு வரிசையிலுள்ள வாரிசுகள் ஒரே சமயத்தில் சமபங்கு பெறுவார்கள். **உதாரணமாக,** இரண்டாவது வரிசையில், மகனின் மகளின் மகன், மகனின் மகளின் மகள், சகோதரன், சகோதரி ஆகியோர் உள்ளனர். இவர்கள் அனைவரும் இறந்தவரின் சொத்தில் சமபங்கு பாகங்களை பெறுவார்கள். அதுபோல், இவர்கள் யாருமே இல்லையென்றால்தான், அடுத்ததாக மூன்றாவது வரிசை வாரிசுகளைப் பார்க்க வேண்டும். ஆனால், அதே சமயத்தில் முதல் வகுப்பில் உள்ள வாரிசுகள் யாருமே இல்லை என்றால்தான், இரண்டாவது வகுப்பில் உள்ள வாரிசுகளுக்கு உரிமை கிடைக்கும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

தாயாதிகள் மற்றும் பெண்வழி உறவினர் மத்தியில் வாரிசுரிமை முறை (Order of Succession among Agnates and Cognates) (பிரிவு 12):

இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் **12–வது பிரிவு,** தாயாதிகள், பெண் வழி உறவினர் மத்தியில் உள்ள வாரிசுரிமை முறையைப் பற்றிக் கூறுகிறது. இதில் முதல் உரிமை பெண் வழி உறவினரை விட தாயாதிகளுக்கே உண்டு என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். தாயாதிகள் மத்தியிலும், பெண் வழி உறவினர் மத்தியிலும் எந்தத் தாயாதிக்கு அல்லது எந்த பெண் வழி உறவினருக்கு முதலிடம் கொடுப்பது என்பதை நிர்ணயிப்பதில் சில விதிமுறைகள் உள்ளன. அவை வருமாறு.

விதி 1–ன்படி : இரண்டு வாரிசுகள் இருந்தால், அதில் எந்த வாரிசுக்கு ஏறுமுறைத் (ascent) தலைமுறை இல்லையோ அல்லது குறைவாக இருக்கிறதோ அந்த வாரிசு முதலிடம் பெறுவான்.

விதி 2–ன்படி : இரண்டு பேருக்குமே ஏறுமுறைத் தலைமுறைகள் ஒன்றாகவோ அல்லது இல்லாமலோ இருந்தால் இறங்குமுறைத் (descent) தலைமுறை குறைவாக உள்ள அல்லது இல்லாத வாரிசு முதலிடம் பெறுவான்.

விதி 3–ன்படி : மேலே உள்ள இரு விதிகளின்படியும் யாருக்கு முதலிடம் தருவது என்பதை நிர்ணயிக்க முடியவில்லை என்றால், இருவருமே ஒரே சமயத்தில் சொத்தை அடைவார்கள்.

ஏறுமுறைத் தலைமுறை (ascent) என்பது தந்தை, தந்தையின் தந்தை ஆகியோரைக் குறிப்பிடுவதாகும். அதுபோல் இறங்குமுறைத் தலைமுறை (descent) என்பது மகன், மகனின் மகன் ஆகியோரைக் குறிப்பிடுவதாகும். தலை முறையைக் கணக்கிடுதல் குறித்து அடுத்து வரும் 13–வது பிரிவு பின்வருமாறு கூறுகிறது.

தலைமுறையைக் கணக்கிடுதல் (Computation of degrees) (பிரிவு 13):

தலைமுறையை எவ்வாறு கணக்கிடுவது என்பது குறித்து **பிரிவு 13** விளக்குகிறது.

(1) தாயாதிகள், பெண் வழி உறவினர் மத்தியில் வாரிசுரிமை இறக்க முறையைத் தீர்மானிக்கும் விஷயத்தில், உறவு முறையானது உயில் எழுதாமல் இறந்தவனிடமிருந்து அவனது வாரிசுகள் வரை ஏறுமுறைத் தலைமுறை அல்லது இறங்கு தலைமுறை அல்லது இவை இரண்டிலும் கணக்கிடப்படும்.

(2) அப்படிக் கணக்கிடப்படும் போது, உயில் எழுதாமல் இறந்தவர் ஒரு தலைமுறையாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்.

(3) ஏறுமுறையிலும், இறங்கு முறையிலும் ஒவ்வொரு தலைமுறையும் தனித் தலைமுறையாகக் கொள்ளப்பட வேண்டும். அடுத்து வரும் **வரைபடம்** இதைத் தெளிவாக்கும்.



P	- இறந்து போனவர்	SS	- மகனின் மகன்
F	- தந்தை	SSS	- மகனின் மகனின் மகன்
FF	- தந்தையின் தந்தை	1	- 1-வது தலைமுறை
FFF	- தந்தையின் தந்தையின் தந்தை	2	- 2-வது தலைமுறை
S	- மகன்	3	- 3-வது தலைமுறை

முடிவுரை :

1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டம் புதிய பிரச்சனைகளுக்கு வழிவகுக்காத, குழப்பமற்ற வாரிசுரிமையை ஆண்கள் வாரிசுரிமை இறக்கத்தில் ஏற்படுத்தியுள்ளதை மேற்கண்ட சட்ட வகை முறைகளிலிருந்து தெளிவாக அறிந்து கொள்ளலாம். மிதாக்ஷரத்தில் உள்ளது போல் சபிண்டர்கள், சமநோடகாக்கள், பந்துக்கள் போன்ற வாரிசுரிமையோ அல்லது தாயபாகத்தில் உள்ளது போல் இறந்தவனுக்கு பிண்டமளிப்பவர்கள் முதலில் வாரிசுரிமை பெறுவர் போன்ற கோட்பாட்டையோ இச்சட்டம் அங்கீகரிக்கவில்லை. அவற்றையெல்லாம் நீக்கிவிட்டு, வாரிசுரிமை விஷயத்தில் தெளிந்த நீரோடை போல மேற்படி சட்டம் செல்கிறது எனில் அது மிகையாகாது.

16. Who are agnates? State the rules regarding the order of succession among agnates under the Hindu Succession Act, 1956. (தந்தை வழியினர் என்பவர்கள் யார்? 1956–ம் ஆண்டு இறங்குரிமைச் சட்டத்தின் கீழ் தந்தை வழியினர்களுள் இறங்குரிமை குறித்த விதி முறைகளைப் பற்றி குறிப்பிடுக)

(அல்லது)

Agnate - Write short notes. (தந்தை வழியர்– சிறு குறிப்பு வரைக.)

தாயாதிகள் அல்லது தந்தை வழியினர் (Agnates):

1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 3(1) (a) – ஆனது 'தாயாதி' அல்லது 'தந்தை வழியினர்' எனும் பதத்திற்கு வரையறை தருகிறது. அதன்படி, முற்றிலும் ஆண்கள் வழியிலான (wholly through males) இரத்த உறவு அல்லது தத்தெடுப்பு மூலம் இரண்டு நபர்கள் ஒருவருக்கொருவர் உறவினராக இருப்பின், அவர்களில் ஒருவர் மற்றொருவரின் 'தாயாதி' அல்லது 'தந்தை வழியினர்' எனப்படுவார்.

சுருங்கக் கூறின், தாயாதி என்பவன் இறந்தவனின் இரத்த சம்பந்தத்தால் ஆண்கள் வழியில் உறவாக வருபவன். எனவே இவர்களை 'தந்தை வழியினர்' என்றும் 'பங்காளி' என்றும் கூறுகிறோம்.

தாயாதிகள் வாரிசுரிமை பெறும் முறை குறித்த விதிகள்:

(முந்தைய வினாவின் விடையில் பிரிவு 12–ன் கீழ்க் காண்க.)

17. Who are Cognates? State the rules regarding the order of succession among cognates under the Hindu Succession Act, 1956. (பெண் வழி உறவினர் என்பவர்கள் யார்? 1956–ம் ஆண்டு இறங்குரிமைச் சட்டத்தின் கீழ் பெண் வழி உறவினர்களுள் இறங்குரிமை குறித்த விதிமுறைகளைப் பற்றி குறிப்பிடுக)

(அல்லது)

Cognate - Write short notes. (பெண் வழியர்– சிறு குறிப்பு வரைக.)

பெண் வழி உறவினர் (Cognates):

1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 3(1) (c) – ஆனது 'பெண் வழி உறவினர்' எனும் பதத்திற்கு வரையறை தருகிறது. அதன்படி, முற்றிலும் ஆண்கள் வழி அல்லாத (not wholly through males) இரத்த உறவு அல்லது தத்தெடுப்பு மூலம் இரண்டு நபர்கள் ஒருவருக்கொருவர் உறவினராக இருப்பின், அவர்களில் ஒருவர் மற்றொருவரின் 'பெண்வழி உறவினர்'

எனப்படுவார். சுருங்கக் கூறின் இவர்கள், தாய் வழியாக ஏற்படும் உறவினர்கள் ஆவர். எனவே இவர்களை 'தாய் வழி உறவினர்' என்றும் அழைக்கலாம்.

பெண்வழி உறவினர் வாரிசுரிமை பெறும் முறை குறித்த விதிகள்:

(முந்தைய வினாவின் விடையில் பிரிவு 12–ன் கீழ்க் காண்க)

18. Who are Class I heirs under the Hindu Succession Act 1956? In what respects does the Act make a change in the right of a) the son b) the daughter c) the widow d) Mother of the deceased? (1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் கீழ் முதல் வகுப்பு வாரிசுகள் யார்? இச்சட்டம் பின்வருவோர்களின் உரிமையில் எவ்வகையில் மாற்றத்தை கொண்டு வந்தது? அ) இறந்தவரின் மகள் ஆ) மகள் இ) விதவை ஈ) தாய்.)

(அல்லது)

Who are Class I heirs under the Hindu Succession Act 1956? In what respects does the Act make changes in the rights of (a) widow and (b) daughter of the deceased. (இந்து உரிமையிறக்கச் சட்டம் 1956–ன் கீழ் முதல் வகுப்பு வாரிசுகள் யாவர்? இந்த சட்டத்தின் கீழ் இறந்து போனவரின் (a) விதவை, (b) மகள் ஆகியவர்களின் உரிமைகளில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் யாவை?)

முதல் வகுப்பு வாரிசுகள் (Class -I heirs) :

(வினா எண் 15–ல் காண்க)

இச்சட்டம் பின்வருவோரின் உரிமையில் ஏற்படுத்திய மாற்றங்கள் :

(a) மகன் :

முதல் வகுப்பில் வரும், 'மகன்' என்பவனுக்கு இச்சட்டம் வரையறை (Define) ஏதும் கொடுக்கவில்லை. ஆகவே 'மகன்' என்பதற்கு 1956–ஆம் ஆண்டின் இந்துத் தத்தெடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டத்தில் (The Hindu Adoptions and Maintenance Act, 1956) கூறப்பட்டுள்ளவற்றை இங்கு எடுத்துக் கொள்ளவேண்டும். இதன்படி, சொந்த மகனும், தத்தெடுக்கப்பட்ட மகனும் ஒரே நிலையிலேயே உள்ளனர்.

மேற்படி சட்டத்தின் **20–வது பிரிவு** தந்தை இறக்கும் போது தாயின் கருவில் வளரும் குழந்தையைப் பற்றிக் கூறுகிறது. அக்குழந்தை உயிருடன்

பிறந்தால் தந்தையின் சொத்தில் பங்கு பெறும். பாகப்பிரிவினைக்குப் பின்னர் பிறந்த மகனுக்கும் சொத்தில் உரிமை உண்டு. முந்தய இந்துச் சட்டத்தின்படி முறைமணப் பிறப்பில் பிறக்காத மகனுக்கு (illegtimate son) சில வரம்பு களுக்குட்பட்டு சொத்தில் உரிமை இருந்தது. ஆனால் 1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின்படி, தற்பொழுது முறைமணப் பிறப்பில் பிறக்காத மகனுக்கு சொத்தில் எவ்வித வாரிசுரிமையும் இல்லை. ஏனெனில் அச்சட்டத்தின் **பிரிவு 3(1)(j)–ஆனது** 'உறவு' என்றால் 'சட்ட முறைப்படியான மண உறவினால் ஏற்பட்ட சுற்றம்' ('related' means related by legitimate kinship) என்று கூறுகிறது. எனவே இறந்து போன தந்தையின் சொத்தில் உறவு கொண்டாட விழையும் மகன், முறையான திருமணத்தின் வாயிலாகப் பிறந்தவனாக இருக்க வேண்டும்.

(b) மகள்:

பழைய இந்துச் சட்டத்தில் மகளுக்குச் சொத்தில் வரையறுக்கப்பட்ட உரிமையே வழங்கப்பட்டிருந்தது. அவ்வுரிமையையும் அவள் இறந்தவனின் மகனுக்கும், விதவைக்கும் அடுத்தே பெறுவாள். மகள் இறந்தபின் அவளின் சொத்து அவளது வாரிசுகளுக்கு செல்லாமல், அவள் யாரிடமிருந்து அச்சொத்தை பெற்றாளோ அவர்களின் ஆண் வாரிசிற்கே சென்றடையும். ஆனால் 1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 8–ன்படி இறந்து போன ஓர் இந்து ஆணின் மகன் மற்றும் விதவை எவ்வாறு அவனது சொத்தில் வாரிசுரிமை பெறுவார்களோ அவ்வாறே, மகளும் அவனது சொத்தில் உரிமை பெறுவாள். மகள் இறந்துவிட்டால், அவளின் வாரிசுகள் அவளது சொத்தைப் பெறுவார்கள். அவளுடைய சொத்திற்கு அவளே முழு உரிமை பெற்றவளாவாள். 1956–க்கு முன்னால் மகள் வரையறுக்கப்பட்ட சொத்தை பெற்றிருந்தாலும், இந்த 1956–ம் ஆண்டு சட்டம் வந்த பின், அவள், தான் பெற்ற சொத்தில் முழு உரிமை பெற்றவள் ஆகிறாள். அதற்கும் ஒருபடி மேலாகத் தமிழக அரசு 1956–ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டம் பிரிவு 29–அய்த் திருத்தி அமைந்தது. அதன்படி மகளும் மகனைப் போலவே சொத்தில் பங்குரிமையராகும் உரிமையைப் பெறுகிறாள்.

1956–ஆம் ஆண்டு சட்டத்தால் மகளுக்கு ஏற்பட்ட தீமைகள்: பழைய இந்து சட்டத்தில் மகள் தன்னுடைய சகோதரியின் குழந்தைகளை, சொத்துரிமை பெறுவதில் இருந்து தள்ளிவிட முடியும். ஆனால் 1956–ஆம் ஆண்டு சட்டப்படி மகள் தனது சகோதரியின் குழந்தைகளுடன் சேர்ந்துதான் சொத்தில் பங்கு பெறுவாள்.

முந்தய இந்துச் சட்டப்படி மகள், இறந்தவரின் தாயை சொத்தில் உரிமை பெறுவதில் இருந்து தள்ளிவிட முடியும். ஆனால் 1956–ஆம் ஆண்டுச் சட்டப்படி அம்மகள் இறந்தவரின் தாயுடன் சேர்த்துதான் சொத்தில் பங்கு பெற முடியும்.

இக்குறைபாடுகள் இருந்தாலும் 1956–ஆம் ஆண்டுச் சட்டப்படி, இந்து

மகளின் நிலை வாரிசுரிமைப் பெறுவதில் மகனுக்கு சமமாக உயர்ந்துள்ளது எனில் அது மிகையன்று.

(c) விதவை:

முற்காலத்தில் இந்து விதவை தன் கணவனின் சொத்தில் வாரிசுரிமை கொண்டாட இயலாதவளாக இருந்தாள். பின்னாளில் வந்த **பிரகஸ்பதி,** விதவைக்கு கணவனின் சொத்தில் உரிமை உண்டு எனக் கூறினார். **யக்ஞவல்கிய ஸ்மிருதியில்** இறந்தவனின் சொத்திற்குரிய வாரிசுதாரர்களில் விதவை முதலிடத்தைப் பெறுவாள் எனக் கூறப்பட்டுள்ளது. இருப்பினும் அவள் பெறும் சொத்தில் அவளுக்கு வரையறுக்கப்பட்ட உரிமையே வழங்கப்பட்டது. மிதாக்ஷர முறையில் சீதனச் சொத்தில் விதவைக்கு முழு உரிமை வழங்கப் பட்டிருந்தது. ஆனால் தாயபாக முறையில் விதவை இறந்தவுடன் அவளின் சொத்து அவள் எந்த ஆணிடமிருந்து அச்சொத்தைப் பெற்றாளோ, அந்த ஆணின் வாரிசுகளுக்கே அச்சொத்து சென்றடையும் எனக் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில், 1937–ஆம் ஆண்டில் இந்து மகளிர் சொத்துரிமை சட்டம் (Hindu Women's Right to Property Act, 1937) இயற்றப்பட்டது. அதன்படி, ஒரு விதவை, மகனுடன் சேர்ந்தே இறந்தவனின் சொத்தில் பங்கு பெறுவாள் என்று கூறப்பட்டது. எனினும், அச்சொத்தில் அவளுக்கு வரையறுக்கப்பட்ட உரிமையையே அச்சட்டம் வழங்கியிருந்தது.

ஆனால் 1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் **16–வது பிரிவின்படி,** விதவைக்குப் சொத்தில் வழங்கப்பட்டிருந்த வரையறுக்கப்பட்ட உரிமை (limited interest) நீக்கப்பட்டது. இறந்தவனின் சொத்தை பெறும் விதவையின் உரிமையை, மகன் தள்ளிவிட முடியாது. அவ்விதவை, மகனுடன் சேர்ந்தே சொத்தில் முழு உரிமையுடன் பங்கு பெறுவாள்.

எனினும், 1956–ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டம் **பிரிவு 24–ன்படி,** மூன்று வகையான விதவைகள் (முன்னதாக இறந்து விட்ட மகனின் விதவை, முன்னதாக இறந்து விட்ட மகனின் முன்னதாக இறந்துவிட்ட மகனின் விதவை, சகோதரரின் விதவை) மறுமணம் செய்திருந்தால், அவர்கள் இறந்தவனின் சொத்தில் பங்கு பெற முடியாது. முன் உள்ள இந்துச் சட்டத்தில் கூறப்பட்டிருந்த கற்பு நிலை தவறிய விதவை, இறந்தவனின் சொத்தில் உரிமை பெற முடியாது என்றிருந்த நிலையை, இச்சட்டத்தின் **பிரிவு 8** நீக்கி விட்டது. மேலும் இறந்தவனின் சொத்தில், மதம் மாறிய விதவை பங்கு பெற முடியாது என்று முன்பிருந்த நிலையை இச்சட்டத்தின் **பிரிவு 26** நீக்கிவிட்டது.

(d) தாய் :

'தாய்' எனும் சொல் பெற்ற தாயையும், தத்தெடுத்துக் கொண்ட தாயை மட்டுமே குறிக்கும். எனவே ஒரு மாற்றாந் (வளர்ப்புத்) தாயை, தாயாகக் கொள்ள

முடியாது. தாயானவள் மகனுடன், விதவையுடன், மகளுடன் மற்றும் பிரிவு 1-ல் வரும் அனைத்து வாரிசுதாரர்களுடன் சேர்ந்தே இறந்தவனின் சொத்தில் பங்கு பெறுவாள்.

ஆனால் பழைய இந்துச் சட்டத்தில் தாயானவள் மகன், மகனின் மகன், மகனின் மகனின் மகன், இறந்தவனின் விதவை மற்றும் இறந்தவனின் பேரன், மகள், மகளின் மகன், இவர்கள் யாரும் இல்லாத பொழுதுதான், இறந்தவனின் சொத்தில் பங்கு பெற முடியும்.

தாயிற்குப் பழைய சட்டத்தில் கொடுக்கப்பட்டிருந்த வரையறுக்கப்பட்ட சொத்துரிமையை 1956-ஆம் ஆண்டுச் சட்டம் நீக்கி, அவளுக்கு சொத்தில் முழு உரிமையை அளித்தது. மேலும் இச்சட்டப்படி தாய் மறுமணம் புரிந்தாலோ அல்லது கற்பு நிலை தவறினாலோ, அவள் இறந்தவனின் சொத்தைப் பெறுவதிலிருந்து விலக்கப்படமாட்டாள்.

19. Define 'Stridhana' and explain the legal principles applicable to the following catagories of 'Stridhana' before the Hindu Succession Act.

(i) Property acquired by mechanical art.
(ii) Property obtained by compromise.
(iii) Property obtained by adverse possession.

'சீதனம்' என்பதை வரையறு. இந்து வாரிசுரிமைச் சட்டத்திற்கு முன்பு சீதனத்தின் பின்வரும் வகைகளுக்கு பொருந்தக்கூடிய சட்டக் கொள்கைகளை விளக்குக.

(அ) சுய உழைப்பினாலும், கைத்திறனாலும் கிடைத்த சொத்து.
(ஆ) சமரசத்தின் மூலம் கிடைத்த சொத்து.
(இ) எதிர்நிலை உடைமையின் மூலம் கிடைத்த சொத்து.

முன்னுரை :

ஆதிகாலத்தில் ஆண்களுக்குச் சமமாகப் பெண்கள் உரிமை பெற்றிருக்கவில்லை. பெண்களுக்கு எவ்விதமான சுதந்திரமும் வழங்கப்பட்டிருக்கவில்லை. உதாரணமாக, கணவனை விடுத்து மதச் சடங்குகள் செய்யும் உரிமை கூடப் பெண்களுக்குக் கொடுக்கப்படவில்லை. பெண்ணுடைய சம்பாத்தியமும், சொத்தும் அவளை மணந்து கொண்டவனுக்கே சொந்தம். அதைக் கணவன் தன் சொத்தாகக் கருதி, தனது விருப்பம் போல் யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம். ஒருத்திக்கு பாகப்பிரிவினையின் மூலமோ அல்லது அவளது கணவன் இறந்து போய் அவளது சொத்துக்கள் இறங்குரிமை மூலமோ அவளை வந்தடைந்திருந்தாலும், அதை அவள் முழு உரிமையுடன் (absolute right) அனுபவிக்க இயலாது. அவளது மரணத்திற்குப்பின் அச்சொத்துக்கள் யாரிடமிருந்து வந்ததோ, அவரது

வாரிசுகளுக்குச் சென்றடைந்து விடும். இவ்வாறு மகளிர் சொத்துரிமை (Women's Estate) வரம்புடைய சொத்துரிமையாக (Limited Estate) இருந்தது.

எனினும், மனுஸ்மிருதியும், யஞ்ஞவல்கிய ஸ்மிருதியும் சில சொத்துக்கள் மனைவிக்கே தனியாக உரியவை என்று அங்கீரித்திருக்கின்றன. அவைதான் சீதனமாகும். மற்றவை சீதனமல்லாச் சொத்தாகும். அவற்றில் முன் கூறியபடி, மனைவிக்கு வரம்புடைய சொத்துரிமையே இருந்தது.

சீதனம் (Stridhana) - விளக்கம் :

சீதனத்தை = ஸ்ரீ (ஸ்திரி) + தனம் என்று பிரிக்கலாம், 'ஸ்ரீ' என்றால் பெண். 'தனம்' என்றால் சொத்து. ஆகவே சீதனம் என்றால் பெண்ணின் சொத்து எனக் கூறலாம்.

1956-ஆம் ஆண்டு வாரிசுரிமைச் சட்டத்திற்கு முன்பு (பழைய சட்டத்தின்படி) இருந்த நிலை:

பழைய சட்டத்தின்படி பெண்ணின் சொத்தானது 'சீதனச் சொத்து' எனவும், 'சீதனமல்லாச் சொத்து' எனவும் இருவகைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சீதனச் சொத்தில் பெண்ணிற்கு முழு உரிமையும், சீதனமல்லாச் சொத்தில் வரையறுக்கப்பட்ட உரிமையும் அவளுக்கு வழங்கப்பட்டிருந்தது. இதனை முன்னுரையிலேயே கண்டோம். இனி மனு, விஷ்ணு மற்றும் விஞ்ஞானேஸ்வரர் கூற்றுப்படி சீதனச் சொத்துக்கள் எந்நிலையில் கிடைக்கிறது என பின்வருமாறு காண்போம்.

'மனு'வின் (Manu) கூற்றுப்படி சீதனச் சொத்து (பழைய சட்டம் - பிரிவு 113) - 6 நிலைகள்:

1. திருமணத்தில் புனிதத் தீ (nuptial fire) வளர்க்கப்படும் பொழுது கொடுக்கப்படுபவை (adhyagni).
2. மணப்பெண்ணை அழைத்து வரும்பொழுது (bride procession) கொடுக்கப்படுபவை (adhyavahamika).
3. அன்பின் அடையாளமாக மாமனார், மாமியார் தருவது (Pritidatta) மற்றும் பெரியோர்கள் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கும் பொழுது தரப்படுபவை (Padavandanika).
4. தந்தை வழங்கும் சொத்து.
5. தாயார் வழங்கும் சொத்து.
6. சகோதரன் தரும் சொத்து.

விஷ்ணு (Vishnu) என்பவர் கூற்றுப்படி :

மேற்கண்ட ஆறு நிலைகளில் ஒரு பெண்ணிற்கு தரப்படும் சொத்துக்களைத் தவிர, பின்வரும் நான்கு நிலைகளில் கொடுக்கப்படும் சொத்துக்களும் சீதனமே என **விஷ்ணு** எனும் ரிஷி கூறுகிறார்.

1. கணவன் மற்றொரு மனைவியை மணம் புரிந்து கொள்ளும் பொழுது அவனால் மூத்த மனைவிக்கு கொடுக்கப்படுபவை (adhivedanika)
2. திருமணத்திற்கு பிறகு தனது கணவனின் உறவினர்களாலோ அல்லது தனது பெற்றோரின் உறவினர்களாலோ கொடுக்கப்படும் சொத்து (anwadheyaka) .
3. சுல்க்கா (sulka) – இது பெண் வீட்டார் – மாப்பிள்ளை வீட்டார் இடமிருந்து பெற்றுக் கொள்ளும் பொருளாகும். இதில் ஒரு பாதி பெண்ணின் தந்தைக்கும், இன்னொரு பாதி பெண்ணுக்கும் செல்லும். பெண்ணுக்கு செல்லும் பொருள் அவளுடைய சீதனமாகும்.
4. மகன் மற்றும் மற்ற உறவினர்களால் கொடுக்கப்படும் வெகுமதிகள் சீதனமாகும்.

விஞ்ஞானேஸ்வரர் (Vijnaneshwara) கூற்றுப்படி (பழைய சட்டம் – பிரிவு 115):

மிதாக்ஷரத்தில் உள்ள இவர், தன்னுடைய உரையில் பெண்களின் சீதனச் சொத்துக்குரிய எல்லையை விரிவாக்கினார். இவர் மேற்கண்ட இரண்டு ரிஷிகள் (ஸ்மிருதிகளின் ஆசிரியர்கள்) கூறியவற்றுடன் பின்வரும் அய்ந்து நிலைகளில் கிடைக்கக் கூடிய சொத்துக்களும் சீதனமேயாகும் என்று கூறுகிறார். அவை.

1. ஒரு பெண்ணுக்கு இறங்குரிமையின்படி கிடைக்கும் சொத்து (Inheritance).
2. அவள் விலைக்கு வாங்கும் சொத்து (Purchase).
3. பாகப்பிரிவினையில் பெறும் சொத்து (Partition).
4. எதிர்நிலை உடைமையால் பெறும் சொத்து (Adverse possession).
5. புதையல் அல்லது கண்டெடுக்கும் சொத்து (Finding).

ஆனால் இப்படிப்பட்ட சீதனச் சொத்துக்களை பாராதீனம் செய்வதில் சில கட்டுப்பாடுகளை மிதாக்ஷரா முறை கூறுகிறது. அவற்றை இவ்வினாவின் விடையில் பின்பகுதியில் காண்போம்.

சீதனச் சொத்து குறித்து மிதாக்ஷர மற்றும் தாயபாக முறையில் வேறுபாடு (பிரிவுகள் 116 - 121) :

மிதாக்ஷரத்தில் உள்ள விஞ்ஞானேஸ்வரரின் இந்த விளக்கத்தை மாயுக முறையும் (Mayukha or Bombay School), காசி முறையும் (Banares School) ஒப்புக் கொள்கின்றன. மேலும் சென்னை உயர்நீதிமன்றமும் **Salemma v. Lutchmana**[1], எனும் வழக்கில் சென்னை பகுதியில் பின்பற்றப்படும் நூல் களிடையே முரண்பாடுகள் காணப்பட்டால், மிதாக்ஷரத்தை அனுசரித்தே சீதனச் சொத்து எது என்றும், அவைகளின் உரிமை இறக்கம் எப்படி இறங்குகின்றன என்றும் தீர்ப்பளித்தது. ஆனால் மிதிலை முறையும், தாயபாக முறையும் அந்த விளக்கத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அவை, ஸ்மிருதிகளில் (மனு, விஷ்ணு) சீதனச் சொத்து எவையெனக் கூறப்பட்டுள்ளனவோ அவற்றை மட்டுமே அங்கீகரிக்கின்றன. பிரிவி கவுன்சிலும் **Sheo Shankar v. Debi Sahai**[2] எனும் வழக்கில் மனுஸ்மிருதியின் விளக்கத்தையே ஏற்றுக் கொண்டுள்ளது.

பொதுக் கூற்றுகளின் (Propositions) அடிப்படையில் மிதாக்ஷரா மற்றும் தாயபாக முறையில் சீதனச் சொத்து குறித்த வேறுபாடுகள் :

மிதாக்ஷரா கூறும் பொதுக் கூற்றுகள் :

மிதாக்ஷரா முறையில் உள்ள விஞ்ஞானேஸ்வரர், சீதனச் சொத்தின் எல்லையை விரிவாக்கிக் கூறினார். மேலும் இதனை, மிதாக்ஷரத்தின் உட்பிரிவுகளான மாயூக முறையும் (பம்பாய்), காசி முறையும் ஏற்றுக் கொள்கின்றன. இவற்றை முன்னரே கண்டோம். தற்பொழுது மிதாக்ஷர கூறும் சீதனச் சொத்துக்களை அதன் தன்மையின் அடிப்படையில் இரண்டு பொதுக் கூற்றுக்களாக (Propossitions) பிரிக்கலாம். இவற்றை மிதாக்ஷரத்தில் அனைத்து உட்பிரிவுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. அவை,

(a) ஒரு பெண் தன்னுடைய மரணத்திற்கு பிறகு தனது வாரிசுகளுக்கு சென்றையக் கூடிய விதத்தில் பெற்றிருக்கக்கூடிய சொத்துக்கள் (சீதனங்கள்);

(b) ஆனால் அப்படிப்பட்ட சீதனங்கள் அனைத்தையும் அவர் தன் விருப்பப்படி பாராதீனம் செய்து விட முடியாது.

ஒருவள், தன்னுடைய கணவனது அனுமதியில்லாமல் பாராதீனம் செய்யக்கூடிய ஒரே சீதனச் சொத்து யாதெனில், அது உறவினர்களிடமிருந்து பெறக்கூடிய வெகுமதிகள் மட்டுமே ஆகும். அவள், வெளியார்களிடமிருந்து பெற்ற

1. (1898) 21 Mad. 100
2. (1903) 25 All. 468

வெகுமதிகள், தனது கைவினைத்திறத்தால் (mechanical art) அடைந்த சொத்துக்கள் ஆகிய சீதனச் சொத்துக்களை தனது கணவனின் அனுமதியின்றி பாராதீனம் செய்ய முடியாது.

தாயபாக கூறும் சீதனச் சொத்து:

தாயபாக முறைப்படி ஜுமுதவாகனர் என்பவர், மிதாக்ஷர முறை (விஞ்ஞானேஸ்வரர்) கூறிய கருத்தை மறுத்து, கணவரின் கட்டுப்பாடின்றி ஒரு பெண் சுதந்திரமாக எந்தச் சொத்தைப் பிறருக்குக் கொடுக்கவோ, விற்கவோ அல்லது பயன்படுத்தவோ முடிகிறதோ, அந்தச் சொத்தே சீதனமாகும் என்று கூறுகிறார். இதே கருத்துதான் மனுவிலும் கூறப்பட்டுள்ளது. அதாவது.

தாயபாக முறைப்படி பின்வருபவை சீதனங்கள் ஆகும்.

தன்னுடைய கணவனால் அளிக்கப்பட்ட அசையா சொத்து (immovable) தவிர, உறவினர்களால் கொடுக்கப்படும் பிற அனைத்துச் சொத்துக்களும் சீதனமாகும். அதுபோல் திருமணத்தின் பொழுது புனிதத் தீயின் முன்பாக அல்லது மணப்பெண்ணை அழைத்து வரும் பொழுது வெளியார்களால் (strangers) கொடுக்கப்படும் அனைத்து சொத்துக்களும் சீதனங்களாகும்.

பின்வருபவை சீதனங்கள் ஆகாது:

(a) ஒரு பெண்ணிற்கு இறங்குரிமையின்படி கிடைக்கும் சொத்து.

(b) பாகப்பிரிவினையின் மூலம் கிடைக்கும் சொத்து.

(c) புனிதத் தீயின் முன்பு அல்லது மணப்பெண் அழைப்பின் பொழுது தவிர பிற சமயங்களில் வெளியாரால் கொடுக்கப்படும் சொத்துக்கள்.

(d) தனது கைவினைத்திறத்தால் (mechanical art) ஒரு பெண் அடைந்த சொத்து.

பழைய சட்டத்தின்படி, ஒரு பெண் சீதனம் பெறும் முறைகள் (1956-ஆம் ஆண்டில் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு):

ஒரு இந்துப் பெண் சட்டப்படியான பல்வேறு வழிகளில் சீதனச் சொத்தை அடையலாம். அவை பழைய இந்துச் சட்டத்தின்படி பின்வருமாறு.

1. உறவினர்களிடமிருந்து பெறும் கொடைகள் (Gifts and bequests from relations) (பழைய சட்டம் - பிரிவு 126): ஒரு பெண் தன்னுடைய கன்னிப்பருவத்திலும் (Maidenhood), கணவனுடன் வாழும் பொழுதும் (Coverture) மற்றும் விதவையான பொழுதும் (Widowhood) அவளுடைய பெற்றோர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள், அது போல்

அவளுடைய கணவன் மற்றும் அவரது உறவினர்கள் மூலம் கொடையாக பெறும் அனைத்து சொத்துக்களும் சீதனங்களாகும். இது தாயபாக முறை தவிர அனைத்து முறைகளாலும் (Schools) ஒத்துக் கொள்ளப்படுகிறது. தாயபாக முறையில் கணவனால் கொடையாக அளிக்கப்படும் **அசையா சொத்து** (immovable property) சீதனமாகாது. **(Venkata v. Venkata[1])**

2. வெளியார்களிடமிருந்து பெறும் கொடைகள் (Gifts and bequests from strangers) (பிரிவு 127): உறவினரல்லாத வெளியார் ஒருவரிடமிருந்து பெறும் கொடைகளும் சீதனமாகும். ஆனால் இது குறித்து மிதாக்ஷரா மற்றும் தாயபாக முறையில் மாறுபட்ட கருத்து நிலவுகிறது. (முன்னர் காண்க).

3. பாகப்பிரிவினையின் பொழுது கிடைக்கும் பங்கு (Share on partition) (பிரிவு 128): தாயபாக முறைப்படி ஒரு தாய் அல்லது தந்தையின் தாயிற்கு கூட்டுக் குடும்பச் சொத்தில் இருந்து பாகப்பிரிவினையின் மூலம் கிடைக்கும் சொத்து, அவளுடைய வாழ்க்கைப்படிக்கு (Maintenance) மட்டும்தான் செல்லும்; அது அவளுடைய சீதனமாகாது எனக் கூறப்பட்டுள்ளது. இதையே மிதாக்ஷரா முறையும் வலியுறுத்துகிறது. பிரிவி கவுன்சிலும் **Debi Mangal Prasad v. Mahadeo Prasad[2]** எனும் வழக்கில் தீர்ப்பாகக் கூறியுள்ளது.

4. வாழ்க்கைப்படிக்கு பதிலாக கொடுக்கப்படும் சொத்து (Property given in lieu of maintenance) (பிரிவு 129): இது அப்பெண்ணின் சீதனமாகும். **Doorga v. Teja[3]** – எனும் வழக்கில் மகன் தனது தாய்க்கு வாழ்க்கைப்படியாக கொடுத்த பணம், சீதனமாகும் என்று கூறப்பட்டது.

5. இறங்குரிமையின் மூலம் கிடைக்கும் சொத்து (Property acquired by inheritance) (பிரிவு 130): மிதிலை மற்றும் சென்னை முறைப்படி ஒரு பெண் இறங்குரிமையின் மூலம் சொத்துக்களை அடைந்தால், அது அவளது சீதனச் சொத்தாகாது. அதில் அவளுக்கு வரம்புடைய உரிமை (Limited interest) மட்டுமே உண்டு. அவளது மரணத்திற்கு பின், அச்சொத்து யாரிடமிருந்து வந்ததோ, அவரது வாரிசுகளுக்கே சென்றடையும். ஆனால் மயூகா முறைப்படி அச்சொத்து அவளது சீதனச் சொத்தாகும். அதனை அவளது விருப்பப்படி பாராதீனம் செய்யலாம்.

6. கைவினைத்திறத்தால் பெற்ற சொத்து (Property acquired by mechanical arts) (பிரிவு 131): அனைத்து முறைகளின்படியும் (all the Schools) ஒரு இந்து பெண், தான் கன்னிப் பருவத்தில் இருக்கும்

1. (1877) 1 Mad. 281, 286, 287.
2. (1912) 34 All. 234.
3. (1866) W.R. Mis. 53.

பொழுதும், விதவையாக இருக்கும்பொழுது, தன்னுடைய சொந்த உழைப்பினாலும், கைவினைத்திறத்தாலும் சம்பாதித்த சொத்துக்கள் சீதனங்கள் ஆகும்.

ஆனால், மாயூக, காசி மற்றும் சென்னை முறைப்படி ஒரு பெண் தன்னுடைய கணவனுடன் வாழும் பொழுது (during coverture) தன்னுடைய சொந்த உழைப்பினாலும், கைவினைத் திறத்தாலும் சம்பாதித்த சொத்துக்கள் மட்டுமே சீதனங்கள் ஆகும். இது மிதிலை மற்றும் தாயபாக முறைக்குப் பொருந்தாது. கைவினைத்திறம் (mechnical) என்பதில் நூல் நூற்றல், வண்ணம் தீட்டுதல் போன்றவை அடங்கும்.

7. சமரசத்தால் பெற்ற சொத்து (Property obtained by compromise) (பிரிவு 132): பெண் சமரசத்தின் மூலமோ அல்லது குடும்ப ஏற்பாட்டின் வாயிலாகவோ பெறும் சொத்துக்கள் சீதனங்களே ஆகும். ஆனால் இது சமரச உடன்பாட்டில் கூறப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டது.

8. எதிர்நிலை உடமையால் கிடைக்கும் சொத்து (Property obtained by adverse possession) (பிரிவு 133): இவ்வகைச் சொத்து சீதனமேயாகும். (அனைத்து முறைகளின்படியும்).

9. சீதனத்தால் வாங்கப்பட்ட சொத்து (Property purchased with Stridhana) (பிரிவு 134): சீதனத்திலிருந்து பெற்ற வருமானத்தின் மூலம் ஒரு பெண் சொத்தை வாங்கினால், அதுவும் சீதனச் சொத்தேயாகும். (அனைத்து முறைகளின் படியும்.)

10. வழக்கப்படியிலான சீதனம் (Stridhana by custom) (பிரிவு 136): ஆண் குழந்தை இல்லாமல் இறக்கும் இந்து ஒருவரின் விதவை, அவரது சொத்தை வழக்கத்தின்படி இறங்குரிமையில் பெறலாம். இது சீதனம் ஆகும்.

11. ஒழுக்கம் தவறிய பெண் (Unchastity) (பிரிவு 139): ஒரு பெண் கற்பு நெறி தவறியவள் என்ற காரணத்தினால் அவளுக்கு சீதனச் சொத்தை அடைவதற்கு தகுதியில்லை என்று கூறிவிட முடியாது. அவளும் சீதனச் சொத்தை அடையலாம். **(Angammal v. Venkata[1])**

1956-ஆம் ஆண்டில் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு சீதனச் சொத்துக்களின் நிலை:

ஒரு பெண்ணுக்கு சீதனச் சொத்தில் வரம்பிலா முழு உரிமை (absolute right) உண்டென்றும், மற்ற சொத்துக்களில் (ஆண் மற்றும் பெண்களிடமிருந்து இறங்குரிம்மையில் வரும் சொத்துக்கள் போன்று) வரம்புடைய சொத்துரிமையே (Limited interest) உண்டென்றும் நாம் ஏற்கனவே கண்டோம். ஆனால் 1956-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்து வாரிசுரிமைச் சட்டப்படி, சீதனச் சொத்திற்கும்,

1. (1903) 26 Mad. 509.

மகளிர் சொத்துக்கும் (Women's Estate) இடையே இருந்த வேறுபாடு நீக்கப் பட்டது. அச் சட்டத்தின் 14–வது பிரிவானது. ஒரு இந்து பெண்ணுக்கு சொத்துக்கள் ஏதேனும் கிடைத்தால் அதில் அவளுக்கு முழு உரிமை உண்டென்றும், அதைப் பாராதீனம் செய்ய எவ்வித கட்டுப்பாடும், தடையும் கிடையாது என்றும் விளம்பியது.

20. Hindu Women's Right to Property Act, 1937 - Write short notes. (1937–ஆம் ஆண்டின் இந்து பெண்கள் சொத்துரிமைச் சட்டம் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Widow's Estate - Write short notes. (விதவையின் சொத்து – சிறு குறிப்பு வரைக.)

இந்து கூட்டுக் குடும்ப பெண்களின் பாரம்பரியத்தில் முதன் முதலில் ஒரு சட்டம் குறுக்கிட்டது என்று கூறினால், அது "இந்து பெண்கள் சொத்துரிமைச் சட்டமாகத்தான்' இருக்க வேண்டும். இச்சட்டம் 1937–ஆம் ஆண்டு இயற்றப் பட்டது. முந்தய இந்துச் சட்டத்தின்படி, பெண்களுக்கு சீதனச் சொத்தில் மட்டுமே உரிமையிருந்தது. ஆனால் மேற்படி சட்டம், பிற சொத்துக்களிலும் பெண்களுக்கும் சொத்துரிமை வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியது. இச்சட்டத்தின்படி, ஒரு கூட்டுக் குடும்பத்தில் பங்குரிமையர் ஒருவன் இறந்து போனால், அவனது சொத்தை அவனது விதவை மனைவி அடைவாள். மேலும் அவள் இறந்து போன கணவனின் சொத்துகளிலிருந்து பாகம் பிரித்துத் தரும்படி பாகப்பிரிவினையும் கோரலாம். ஆனால் இவ்வாறு பெறும் சொத்துரிமை, வரம்புடைய உரிமைதான். அவளுக்கு அச்சொத்தில் முழு உரிமை எதையும் அச்சட்டம் அளிக்கவில்லை. அவளது இறப்பிற்குப் பிறகு, அச்சொத்து, யாரிடமிருந்து அவளுக்கு வந்ததோ, அவரது வாரிசுகளுக்கே திரும்பச் சென்று விடும்.

Lakshmi Perumallu v. Krishnavenmma[1] - எனும் வழக்கில் ஒரு கூட்டுக் குடும்பத்தில் நான்கு பங்குரிமையர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவன் மேற்படி சட்டம் இயற்றப்பட்ட பிறகு 1938–ஆம் ஆண்டில் இறந்து போனான். அவனது விதவை, அவன் விட்டுச் சென்ற சொத்தில் 1950–ஆம் ஆண்டில் பாகப்பிரிவினை கோரி வழக்கிட்டாள். ஆனால் இதற்கிடையில், மேற்படி பங்குரிமையர்களில் மேலும் இருவர் இறந்துவிட்டனர். எனவே அச்சமயத்தில் உயிருடன் இருப்பவர்கள் என்று எடுத்துக் கொண்டால் எஞ்சியிருக்கும் ஒரு பங்குரிமையரும், இறந்து போன பங்குரிமையரின் விதவை மட்டுமேயாகும். எனவே அச்சொத்தில் மேற்படி விதவைக்கு மேற்படி 1937–ஆம் ஆண்டு சட்டப்படி பாதிபாகம் (1/2) உள்ளது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது. இங்கு பங்குரிமையர்களுக்கிடையே உள்ள எஞ்சுநர் உரிமையானது, இறந்து போன பங்குரிமையரின் விதவை மனைவிக்கும் பொருந்தக் கூடியதாக்கப்பட்டது என்பது

1. AIR 1965 SC 825

கவனிக்கத் தக்கது. அதாவது இறந்து போன பங்குரிமையரின் இடத்தில் அவனது விதவை மனைவி மேற்படி சட்டத்தால் வைக்கப்படுகிறாள்.

இதனால் அவளையும் ஒரு 'பங்குரிமையர்' (Coparcener) என அழைக்கலாமா எனும் வினா **Satrughun v. Saupari**[1] -எனும் வழக்கில் எழுந்தது. ஆனால் மேற்கண்டவாறு சொத்தைப் பெறுவதால் மட்டுமே அவளை ஒரு பங்குரிமையர் என்று கூறிவிட முடியாது என்றும், ஏனெனில், அவ்விதவை இறந்து போன பிறகு அவளை வந்தடைந்த சொத்து மீண்டும் பங்குரிமைச் சொத்தாகவே மாறிவிடுகிறது என்றும், யாரிடமிருந்து (கணவன்) அவள் அச்சொத்தை அடைந்தாளோ அவரது வாரிசுகளுக்கே (மகன் அல்லது மகள்) மீண்டும் அச்சொத்து சென்று விடுகிறது என்றும், எனவே அவளுக்கு மேற்படி சொத்தில் வரையறுக்கப்பட்ட உரிமையே (limited interest) உள்ளது என்றும், உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

ஆனால் பெண்களுக்கு, அவர்கள் அடையும் சொத்தில் முழு உரிமை (absolute right) தரும் பொருட்டு, 1956–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்து வாரிசுரிமைச் சட்டம், மேற்படி 1937–ஆம் ஆண்டுச் சட்டத்தை நீக்கம் செய்து விட்டது. இச்சட்டத்திற்குப் பிறகு விதவைகள், மகள்கள் ஆகியோர் தங்களை அடைந்த சொத்துக்களில் முழு உரிமை பெற்றனர்; விருப்பப்படி பாராதீனம் செய்தனர். (மேலும் விரிவாக அடுத்த வினாவின் விடையில் காண உள்ளோம்.).

21. "The Hindu Succession Act abolishes the distinction between Stridhana and Hindu Women's Estate and makes Hindu Woman full owner of all the property possessed by her" - Explain. ("இந்து வாரிசுரிமைச் சட்டமானது சீதனம் மற்றும் இந்து மகளிர் சொத்துக்கு இடையே இருந்த வேறுபாட்டை ஒழித்து இந்து பெண்ணுக்கு சொந்தமான சொத்துக்களில் அவளை முழு உரிமையாளராக்கு கிறது.". விளக்குக.)

(அல்லது)

"The Hindu Succession Act 1956 makes a Hindu female a full owner of property"- Discuss. ("1956–ம் ஆண்டு இந்து இறங்குரிமைச் சட்டம் ஒரு இந்துப் பெண்ணை சொத்தின் முழு உரிமையாளராக ஆக்குகிறது." – விவாதிக்க.)

(அல்லது)

"Any property possessed by a female Hindu, acquired before or after the Hindu Succession Act, 1956 shall be held by her as full owner thereof" - Discuss. ("ஒரு இந்து பெண்ணின் உடமையில்

1. AIR 1967 SC 272

உள்ள எந்த சொத்தும் 1956–ம் ஆண்டு இந்து இறங்குரிமை சட்டம் வருவதற்கு முன்பு அல்லது வந்த பிறகு ஈட்டப்பட்டிருந்தால் மேற்படி சொத்தை அவள் முழு உரிமையாளராக வைத்துக் கொள்ளலாம்" – விவாதி.)

சீதனச் சொத்து (Stridhana):

ஒரு பெண்ணுக்கு சீதனமாக கிடைக்கும் சொத்துக்களில் அவளுக்கு முழு உரிமை (absolute interest) உண்டு. அச்சொத்தை அவள் சகலவிதமான பாராதீனங்களுக்கும் (dispose of) உட்படுத்தலாம். [ஆனால் சில முறைகளில் (Schools) முரண்பட்ட கருத்து நிலவியது.].[மேலும் விரிவாக வினா எண். 18–ல் காண்க].

இந்து மகளிர் சொத்து (Hindu Women's Estate):

பொதுவாக மகளிர் சொத்தில் ஒரு பெண்ணுடைய அனைத்து சொத்துக்களும் அடங்கும். ஆனால் இந்துச் (பழைய) சட்டத்தைப் பொறுத்த வரை மகளிர் சொத்து என்பது அதன் பரந்த பொருளில் விளக்கப்படவில்லை. பொதுவாக ஒரு இந்து பெண்ணுக்கு இறங்குரிமையின் வாயிலாக, அதாவது அவளது கணவன் இறந்து அதன் மூலமாக சொத்துக்கள் கிடைக்கலாம். இச்சொத்துக்கள், சீதனச் சொத்தாகாது. (ஆனால் பம்பாய் முறையில், சீதனச் சொத்தாகும்.) இப்படி அவளுக்கு கிடைக்கும் சொத்து அவளுடைய மரணத்திற்கு பிறகு, அவள் யாரிடமிருந்து சொத்தை அடைந்தாளோ அவளுடைய வாரிசுகளுக்கு சென்று விடும். ஏனெனில் சீதனச் சொத்தைப் போல், இதில் அவளுக்கு முழு உரிமை கிடையாது. வரம்புடைய உரிமைதான் (limited interest) உள்ளது. இது, 'இந்து மகளிர் சொத்து' என அழைக்கப்பட்டது. 1937–ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்துப் பெண்கள் சொத்துரிமைச் சட்டமும் மகளிர் சொத்து குறித்து மேற்கண்டவாறே கூறுகிறது. ஆனால் மேற்படி சீதனமும், மகளிர் சொத்தும், இந்து வாரிசுரிமைச் சட்டம், 1956–ஆம் ஆண்டில் இயற்றப்படுவதற்கு முன்பு பழைய சட்டத்தின்படி இருந்த நிலையாகும். மேற்படி 1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தினால் மேற்படி நிலை நீக்கப்பட்டுவிட்டது. இச்சட்டத்தினால் சீதனச் சொத்துக்கும், மகளிர் சொத்துக்கும் இடையே இருந்த வேறுபாடு ஒழிக்கப்பட்டு, பொதுவாக பெண்கள் அவர்களுடைய சொத்துக்கு முழு உரிமையாளர்களாக்கப் பட்டனர். அது எவ்வாறு என்பதை பின்வரும் பத்திகள் விளக்குகின்றன.

1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டம் கூறுவதாவது:

1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் 14–வது பிரிவானது, சீதனம் மற்றும் மகளிர் சொத்து ஆகிய இவையிரண்டிற்குமிடையே இருந்த வேறுபாட்டைக் களைந்து, பெண்களை சொத்துக்கு முழு உரிமையாளராக்

கியது. அதாவது, ஒரு பெண்ணிற்கு இறந்தவரின் சொத்தில் மற்றும் வேறு விதங்களில் கிடைக்கும் சொத்தில், மேற்படி சட்டம் முழு உரிமையை அளித்தது. இதனை பின்வரும் சட்டப்பிரிவுகளின் வாயிலாக சற்று விரிவாகக் காண்போமா?

மேற்படி சட்டத்தின் 14(1)–வது பிரிவின்படி ஒரு இந்துப் பெண்ணுக்கு சொந்தமாக இருந்து வரும் எந்த ஒரு **சொத்தும் (Property) அந்தச் சொத்தானது இந்தச் சட்டம் தொடங்குவதற்கு முன்பு சேர்க்கப்பட்டதாக இருந்தாலும் சரி அல்லது பிறகு சேர்க்கப்பட்டதாக இருந்தாலும் சரி (Possessed by her before or after the Act) அச்சொத்திற்கு அவளை வரையறைக்குட்பட்ட ஒரு உரிமையாளராக (Limited ownership) வைத்திராமல், முழு உரிமையாளராக்கிறது (full ownership).**

'சொத்து' என்ற பதத்தில் அடங்கும் சொத்துக்களாவன: மேற்படி பிரிவில் **'சொத்து'(Property)** என்ற பதத்தில் இறங்குரிமையின் மூலமாகவோ அல்லது ஏதேனும் பத்திரத்தின் மூலமாகவோ அல்லது ஒரு பாகப்பிரிவினையிலோ, அல்லது ஜீவனாம்ச பாக்கிக்காகவோ அல்லது அவளுடைய திருமணத்துக்கு முன்னால், திருமணத்தில் அல்லது திருமணத்திற்கு பிறகு எந்த ஒரு நபரிடமிருந்தும், அவர் உறவினரானாலும் சரி, உறவினரல்லாவிட்டாலும் சரி, கொடையாகவோ, சொந்த உழைப்பினாலோ அல்லது முயற்சியினாலோ அல்லது விலை கொடுத்து வாங்கியோ அல்லது உறுதி செய்தபடியோ அல்லது வேறு எந்த வழியிலோ சேர்க்கப்பட்ட அசையும், அசையாச் சொத்துக்களும் அல்லது இந்தச் சட்டம் தொடங்குவதற்கு உடனடியாக முன்னால் அந்தப் பெண்ணால் **சீதனமாக** வைத்துக் கொள்ளப்பட்டு வந்த சொத்து ஏதாகிலும் இருந்தால், அந்தச் சொத்தும் அடங்கியதாகும்.

மேற்படி பிரிவு 14(1)-க்கு முன் நிகழ்வு அதிகாரம் (Retrospective effect) உள்ளதா?

மேற்படி பிரிவு 14(1)–க்கு முன் நிகழ்வு அதிகாரம் உள்ளது. இதை மேற்படி பிரிவைக் கண்டாலோ புரியும். அதன்படி "ஒரு இந்துப் பெண்ணுக்கு சொந்தமாக இருந்து வரும் எந்த ஒரு சொத்தும், அந்தச் சொத்தானது **இந்தச் சட்டம் தொடங்கியதற்கு முன் சேர்க்கப்பட்டதாக இருந்தாலும் சரி ... ... அவளை முழு உரிமையாளராக்குகிறது**". அதாவது 1956–ஆம் ஆண்டில் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்டது. அதற்கு முன்பாக இந்துப் பெண் ஒருத்திக்கு வரையறைக்குட்பட்ட உரிமை மட்டும் (Limited ownership) கொண்ட சொத்து கிடைத்திருந்தாலும், அது மேற்படி 1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டம் வந்த பிறகு, பிரிவு 14(1)–ன்படி அவளுக்கே உரித்த சொத்தாகியது. அதில் அவளுக்கு முழு உரிமை உண்டு. இதன் மூலம் மேற்படி பிரிவு 14(1)–க்கு முன் நிகழ்வு அதிகாரம் உள்ளது என்பதையும், மேலும் இதனால் இந்துப் பெண்களுக்கு

முன்பு கிடைத்த வரையறைக்குட்பட்ட சொத்துக்கள் அனைத்தும், வரம்பிலா முழு உரிமை கொண்ட சொத்துக்களாகியது என்பதையும் நாம் அறியலாம். இது, சீதனச் சொத்துக்கும் (முழு உரிமை கொண்ட சொத்துக்கள்) மற்றும் மகளிர் சொத்துரிமைக்கும் (வரையறுக்கப்பட்ட சொத்துக்கள்) உள்ள வேறுபாட்டை களைத்ததை மறைமுகமாக சுட்டிக் காட்டுகிறது.

மேற்படி பிரிவு 14(1)-ல் கூறப்பட்டிருக்கும் சொத்துக்களின் மீதும் ஏதேனும் வரம்புகள் (Restrictions) விதிக்க முடியுமா?

பொதுவாக, மேற்படி, பிரிவு 14(1)–ன்படி, ஒரு இந்துப் பெண்ணுக்கு கிடைக்கும் சொத்தில் அவளுக்கு முழு உரிமையுண்டு. ஆனால், அவளுக்கு சொத்து வரும் முறையைப் பொறுத்து, அதில் வரம்புகள், கட்டுப்பாடுகள் விதிக்கலாம். இது குறித்து **பிரிவு 14(2)** பின்வருமாறு கூறுகிறது. அதன்படி,

ஒரு இந்துப் பெண்ணுக்கு ஏதேனும் ஒரு சொத்து கொடையாகவோ அல்லது உயில் அல்லது வேறுவிதமான பத்திரத்தின் மூலமாகவோ அல்லது ஒரு உரிமையியல் நீதிமன்றத்தின் தீர்ப்பாணை அல்லது உத்திரவின் கீழோ அல்லது நீதிசார்ந்த முடிவின் (Award) மூலமோ கிடைத்ததாக இருந்து அந்தக் கொடை, உயில் அல்லது வேறுவிதமான பத்திரம் அல்லது தீப்பாணை, உத்திரவு, நீதிசார்ந்த முடிவில் அந்தச் சொத்து குறித்து ஏதேனும் வரம்புகள் விதிக்கப்பட்டிருப்பின், அந்த வரம்பிற்குட்பட்டுதான் அச்சொத்தை மேற்படி இந்துப் பெண் அனுபவிக்க வேண்டும். இவ்வாறு வரம்புகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை எனில், அச்சொத்திற்கு அப்பெண்ணே முழு உரிமையாளராவார்.

முடிவுரை:

முடிவாக 1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டம் இந்துப் பெண் சொத்துக்கள் விஷயத்தில் கொண்டு வந்த மற்றொரு மாற்றத்தையும் இங்கு காண வேண்டியது அவசியமாகும். அதாவது சீதனச் சொத்தைப் பொறுத்தவரை முன்பிருந்த சட்டத்தின்படி உயில் எழுதி வைக்கப்படாத (intestate) இறங்குரிமையில் திருமணமான மற்றும் திருமணமாகாத பெண்ணைப் பொறுத்த பாகத்தில் மாறுதல்கள் இருந்தன. மேலும் சீதனம் பெற்ற பெண்ணின் திருமணம் அங்கீகரிக்கப்பட்டதா (approved) அல்லது அங்கீகரிக்கப்படாததா என்பதைப் பொறுத்தும், சீதனச் சொத்தின் இறங்குரிமையில் மாற்றங்கள் இருந்தன. மேலும் இவை ஒரு முறைக்கும் (school) மற்றொரு முறைக்கும் வித்தியாசமாக இருந்தன. ஆனால் இவையெல்லாம், 1956–ஆம் ஆண்டில் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு, உயிலில்லாமல் இறக்கும் இந்துப் பெண்களின் சொத்துக்கு இறங்குரிமை குறித்து, பிரிவு 15 மற்றும் 16–ன் வாயிலாக பொது விதிகள் கொண்டு வரப்பட்டன. இதனால் இந்துப் பெண்களின் இறங்குரிமை குறித்த விஷயத்தில் ஒரே சீரான முறை ஏற்பட்டது. சீதனச் சொத்து, மகளிர் சொத்து ஆகியவற்றின்

இறங்குரிமையில் இருந்த வேறுபாடுகள் ஒழிந்தன. இவையெல்லாம் பெண்ணிற்கு மேற்படி பிரிவு 14–ன்படி சொத்திற்கு முழு உரிமை கிடைத்ததின் விளைவாகும் என்பதில்அய்யமில்லை. முழு உரிமை கிடைத்ததினால் சீதனச் சொத்து, மகளிர் சொத்து என்ற வகையெல்லாம் மறைந்து விட்டது.

22. Discuss the rights of a female relating to the property of deceased under the Hindu Succession Act, 1956. (1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டப்படி ஒரு பெண்ணிற்கு இறந்தவரின் சொத்தில் உள்ள உரிமைகளை விளக்குக.)

(முன்கண்ட வினாவில் "1956 ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டம் கூறுவதாவது" என்ற தலைப்பிலிருந்து ஆரம்பிக்கவும்.

23. Define Stridhana. Explain the rules of Succession the properties of a female Hindu undr the Hindu Succession Act. (சீதனச் சொத்துக்கு இலக்கணம் கூறுக. ஒரு இந்து பெண்ணின் சொத்துக்கள் எவ்வாறு உரிமை இறக்கம் செய்யப்படுகிறது என்பதை இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் கீழ் விளக்குக.)

(அல்லது)

State the rules relating to the Succession of the property of a Hindu Female who died intestate under the Hindu Succession Act, 1956. (1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் கீழ் உயில் எழுதி வைக்காமல் இறக்கும் இந்துப் பெண்மணி ஒருவரின் சொத்திற்கு இறங்குரிமை தொடர்பான விதிகளை குறிப்பிடுக.)

(அல்லது)

State the rules of succession applicable to the property of married Hindu female dying intestate under the Act of 1956. (1956–ஆம் ஆண்டு இந்து இறங்குரிமைச் சட்டத்தின் கீழ் திருமணமான ஒரு இந்துப் பெண் விருப்பாவணம் எழுதாமல் இறந்தால் அதற்குரிய இறங்குரிமை விதிகள் யாவை?)

(அல்லது)

What are the general rules of succession in the case of a female dying intestate under the Hindu Succession Act? (இந்து இறங்குரிமைச் சட்டத்தின் கீழ் விருப்புறுதி செய்யாமல் இறந்த ஒரு பெண்ணின் சொத்திற்கான வாரிசுரிமை குறித்த பொது விதிகள் யாவை?)

(அல்லது)

Explain the rules of succession of property among the legal

heirs of a female Hindu under the Hindu Succession Act 1956.
(1956ம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் கீழ் ஒரு இந்து பெண்ணின் வாரிசுகளிடையே சொத்து இறங்குரிமைக்கான விதிகளை விளக்குக.)

முன்னுரை (அல்லது) சீதனச் சொத்தின் விளக்கம்:

ஒரு இந்து பெண்ணுக்கு திருமணத்தின் பொழுது புனிதத் தீயின் முன்பாக அல்லது மணமகள் ஊர்வலத்தின் போது தாய்–தந்தையரால், மாமனார் மாமியாரால், உறவினர்களால் அளிக்கப்படும் சொத்து சீதனச் சொத்து எனப்படும். மேலும் சீதனச் சொத்து தவிர 1937–ஆம் ஆண்டின் இந்துப் பெண்கள் சொத்துரிமைச் சட்டத்தின்படி, மகளிர் சொத்து (Women's Estate) என்ற ஒன்றும் இருந்தது. சீதனச் சொத்தில் பெண்களுக்கு முழு சொத்துரிமையும் மகளிர் சொத்தில் வரம்பிற்குட்பட்ட சொத்துரிமையும் இருந்தது. மேலும் அச்சொத்தின் இறங்குரிமையில் பல சிக்கல்கள் இருந்தன. சீதனச் சொத்தைப் பொறுத்தவரையில், உயில் எழுதி வைக்கப்படாத இறங்குரிமையில் திருமணமான மற்றும் திருமணமாகாத பெண்களைப் பொறுத்து பாகத்தில் மாறுதல்கள் இருந்தன. அதுபோல் சீதனம் பெற்ற பெண்ணின் திருமணம் அங்கீகரிப்பட்டதா (approved) அல்லது அங்கீகரிக்கப்படாததா என்பதை பொறுத்தும் இறங்குரிமையில் மாறுதல்கள் இருந்தன. மேலும் இவை ஒரு முறைக்கும் (School) மற்றொரு முறைக்கும் வித்தியாசமாக இருந்தன. அவ்வாறே மகளிர் சொத்துரிமையில் ஒரு பெண் உயில் எழுதி வைக்காமல் இறந்து விட்டால், அவளது சொத்து, யாரிடமிருந்து வந்ததோ அவரது வாரிசுகளுக்கு (பின்னுரிமையர்களுக்கு) சென்றுவிடும். ஏனெனில் அது வரம்பிற்குட்பட்ட சொத்தாகும்.

ஆனால், 1956–ல் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு, மேற்படி நிலையெல்லாம் ஒழிக்கப்பட்டுவிட்டது. அச்சட்டம் சொத்திற்கு பெண்களை முழு உரிமையாளராக்கியது **(பிரிவு 14).** அதுபோல் உயில் எழுதி வைக்காமல் ஒரு இந்துப் பெண், மேற்படி இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு, இறந்துபோனால் அவளது சொத்துக்கள், எவரெவருக்கு இறங்குரிமையில் செல்ல வேண்டும் என அச்சட்டத்தின் **15 மற்றும் 16–வது பிரிவுகள் பொது விதிகளை (General Rules)** வகுத்துள்ளன. அவற்றை பின்வருமாறு காண்போமா?

பிரிவு 15 கூறுவதாவது:

பிரிவு 15(1): உயிலின்றி இறந்துபோன ஒரு இந்துப் பெண்ணின் சொத்து பிரிவு 16–ல் கூறப்பட்டுள்ளது போல பிரிக்கப்பட வேண்டும் என்றும், அது பின்வரும் வரிசைப்படி (Entry) இருக்க வேண்டுமென்றும் பிரிவு 15(1) கூறுகிறது.

(a) முதலில், மகன்கள், மகள்கள் (முன்னதாக இறந்துபோன மகனின்/மகளின் குழந்தைகள் உள்ளடங்கலாக) மற்றும் கணவனும்.

(b) இரண்டாவதாக, கணவனின் வாரிசுகள்.

(c) மூன்றாவதாக, தாய், தந்தை

(d) நான்காவதாக, தந்தையின் வாரிசுகள்.

(e) இறுதியாக, தாயின் வாரிசுகள்.

பிரிவு 15(2): முன்னர் கூறியுள்ள வாரிசுதாரர்களுக்கு இரு விதிவிலக்கு களைப் **பிரிவு 15(2)(a)–யும் மற்றும் 15(2)(b)–யும்** கூறுகின்றன.

பிரிவு 15(2)(a)–யின்படி, உயிலின்றி இறந்துபோன ஒரு இந்துப் பெண்ணிற்குத் தன் தந்தை அல்லது தாய் வழியாக இறங்குரிமையில் (inheritance) சொத்துக் கிடைத்திருந்து, அச்சொத்திற்கு வாரிசாக அவளுக்கு மகன் அல்லது மகள் (முன்னதாக இறந்துவிட்ட மகன் அல்லது மகளின் குழந்தைகள் உள்ளடங்கலாக) யாரும் இல்லாத போது, அச்சொத்து தந்தையின் வாரிசுகளுக்குப் போய்ச் சேருமேயன்றி, பிரிவு 15(1)–ல் கூறப்பட்டுள்ள வரிசையிலுள்ள வாரிசுதாரர்களுக்கு போய்ச் சேராது.

பிரிவு 15(2)(b)–யின்படி, உயிலின்றி இறந்துபோன ஒரு இந்துப் பெண்ணிற்குத் தன் கணவன் மூலமோ அல்லது கணவனின் தந்தை (Father-in-law) மூலமோ இறங்குரிமையில் சொத்து கிடைத்திருந்து, அச்சொத்திற்கு வாரிசாக அவளுக்கு மகன் அல்லது மகள் (முன்னதாக இறந்துவிட்ட மகன் அல்லது மகளின் குழந்தைகள் உள்ளடங்கலாக) யாரும் இல்லாத போது, அச்சொத்து கணவனின் வாரிசுகளுக்குப் போய் சேருமேயன்றி, பிரிவு 15(1)–ல் கூறப்பட்டுள்ள வரிசையிலுள்ள வாரிசுதாரர்களுக்குப் போய்ச் சேராது.

இப்பிரிவில் கூறப்பட்டுள்ள மகன் என்பது பெற்ற மகன் (Natural son), தத்தெடுத்த மகன் (adopted son) ஆகிய இருவரையும் குறிக்கும். வளர்ப்பு மகனோ, மகளோ (Step son/daughter) உயிலின்றி இறந்துவிட்ட இந்துப் பெண்ணின் சொத்தில் பங்கு பெற முடியாது. ஆனால் வளர்ப்பு மகனோ, மகளோ தந்தையின் வாரிசு என்ற முறையில் அவளுடைய சொத்தில் பங்கு பெற முடியும். முறையில்லா மணப்பிறப்பில் பிறந்தவனின் வழித்தோன்றல்கள் அல்லது முறையில்லா மணப்பிறப்பில் பிறந்து முன்னதாக இறந்துவிட்ட மகனின் அல்லது மகளின் வழித் தோன்றல்கள் (Illegitimale descendants or illegitimate predeceased son or daugher) அவளுடைய சொத்தில் பங்கு பெற முடியாது. இங்கு தாய்–தந்தை எனக் குறிப்பிடப்படுவோர், வளர்ப்புத் தாயையோ, வளர்ப்புத் தந்தையையோ (Step-mother, Step-father) குறிக்காது.

உயிலின்றி இறந்து போன பெண்ணின் சொத்தின் உரிமை இறக்கத்தில் அச்சொத்தை பங்கிடும் முறையும் அதனுடைய வரிசை முறையும் (Order of Succession

and manner of distribution among heirs of a female Hindu dying intestate):

பிரிவு 16 கூறுவதாவது:

உயிலின்றி இறந்துபோன ஒரு இந்துப் பெண்ணின் சொத்தை பிரிவு 15(1) மற்றும் பிரிவு 15(2)–ன்படி பிரிக்க வேண்டும். இப்பிரிவுகளின் முதல் வரிசையில் (first entry) உள்ளவர்கள், அவர்களை அடுத்துள்ள வரிசையில் உள்ளவர்களைச் சொத்துப் பெறுவதிலிருந்து தள்ளிவிடுவார்கள். இதையே பிரிவு 16–ம் அதன் மூன்று விதிகளும் (Rules) சற்று விளக்கமாகக் கூறுகின்றன.

பிரிவு 16–ன் முதல் விதி (Rule 1): முதல் வரிசை வாரிசுதாரர்கள் அவர்களை அடுத்துள்ள வாரிசுதாரர்கள் அனைவரையும், உயிலின்றி இறந்து போன இந்துப் பெண்ணின் சொத்தில் பங்கு பெறுவதில் இருந்து தள்ளி (exclusion) விடுவார்கள் என்று கூறுகிறது. மேலும் முதல் வரிசை வாரிசு தாரர்கள், அச்சொத்தை ஒரே நேரத்தில் சமமாகப் பிரித்துக் கொள்வார்கள் என்றும் கூறுகிறது.

பிரிவு 16–ன் இரண்டாம் விதி (Rule 2): உயிலின்றி இறந்துபோன இந்துப் பெண் ஒருத்தி இறந்து போவதற்கு முன்னதாக அவளது மகன் அல்லது மகன், அவள் இறக்கும் பொழுது, அவர்களது சொந்தக் குழந்தைகளை உயிருடன் விட்டுவிட்டு (முன்னதாக) இறந்து போயிருப்பின், அத்தகு மகன் அல்லது மகளின் குழந்தைகள், உயிலின்றி இறந்து போன அப்பெண்ணின் இறப்பின் பொழுது அத்தகு மகனும் மகளும் உயிருடன் இருந்திருந்தால் என்ன பங்கை அடைந்திருப்பார்களோ அப்பங்கை தங்களுக்குள் அடைவார்கள்.

மேற்படி பிரிவு சற்று குழப்பமான மொழி நடையில் உள்ளதால், அதன் விளக்கம் வருமாறு. அதாவது உயிலின்றி இறந்து போன இந்துப் பெண்ணின் சொத்தில் அவளது மகன் அல்லது மகளும், முன்னதாக இறந்துபோன மகன் அல்லது மகளின் குழந்தைகளும், பங்கு பெறுவார்கள். ஆனால் முன்னதாக இறந்து போன மகன் அல்லது மகளின் குழந்தைகள் தங்கள் தாய் அல்லது தந்தைக்கு சேர வேண்டிய பங்கினை தங்களுக்குள் கிளைவிகித இறக்கப்படி (per-strips) பெறுவார்களேயன்றி, தலை விகித இறக்கப்படி (per-capita) பெற மாட்டார்கள்.

பிரிவு 16–ன் மூன்றாம் விதி (Rule 3): உயிலின்றி இறந்துபோன இந்து பெண்ணின் சொத்தைப் பிரிவு 15(1)–ன் (b),(d),(e) ஆகிய உட்கூறுகளில் கண்ட மற்றும் பிரிவு 15(2)–ல் கண்ட வாசுரிகளுக்காக பிரிக்கும் பொழுது, அப்பெண்ணின் கணவனோ, தந்தையோ, தாயோ அவள் உயில் எழுதாமல் இறந்து போன பிறகு இறந்திருந்தால், அவர்களுடைய (கணவன், தந்தை, தாய்) வாரிசுகள் முறையே அவர்களுடைய சொத்தை எவ்விதிகளின்படி பங்கு பிரித்துக் கொள்வனரோ அதே விதிகளின்படி, அவளது சொத்தையும் பிரித்துக் கொள்ள வேண்டும்.

எடுத்துக்காட்டு: ஒரு இந்துப் பெண் தன் கணவனிடமிருந்து உரிமை இறக்கத்தால் (inheritance) ஒரு சொத்தினைப் பெற்றிருந்து, அச்சொத்திற்கு உயில் எழுதி வைக்காமல் இறந்து போயிருந்தால், அச்சொத்தினை அவளுடைய கணவன் உயிருடன் இருந்தாலும் அவள் இறந்தவுடன் அவளுடைய கணவனும் இறந்து விட்டதாகக் கருதி, அவனுடைய (கணவனின்) சொத்தினை அவனது வாரிசுகள் எங்ஙனம் பங்கிட்டுக் கொள்வார்களோ, அப்படியே அப்பெண்ணின் சொத்தினையும் பிரிக்க வேண்டும்.

முடிவுரை:

மேலும் பெண்களின் சொத்தைப் பற்றிக் கூறும் பொழுது, மருமக்கட் தாயம் மற்றும் அலிய சந்தானச் சட்டம் (Marnumakkatayam and Aliyasanthana laws) ஆகியவற்றில் கூறப்பட்டிருந்தவை, 1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் 17–வது பிரிவால் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாகத் தமிழ்நாடு அரசால் 25–3–1989 அன்று அமுல்படுத்தப்பட்ட திருத்தச் சட்டம் பெண்களுக்கு சொத்தில் பங்குரிமையையே (coparcenary right) கொடுத்துள்ளது என்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். சுருங்கக் கூறின், 1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் பொதுவாகப் பெண்ணிற்குச் சொத்துரிமையில் நல்ல நிலை கொடுக்கப்பட்டுள்ளது எனில் அது மிகையன்று.

24. "The Hindu Succession Act has made profound changes in the position of daughter in Hindu Law" - Elucidate. ("இந்து இறங்குரிமை சட்டமானது, இந்து சட்டத்தில் மகளின் நிலையில் மிக ஆழமான மாறுதல்களை ஏற்படுத்தியிருக்கிறது." – என்கிற கூற்றினை விளக்குக.)

முன்னுரை :

"1956–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்து இறங்குரிமைச் சட்டமானது இந்துச் சட்டத்தில் மகளின் நிலையில் மிகப் பெரிய மாறுதல்களை ஏற்படுத்தியிருக் கிறது" என்ற கூற்று முற்றிலும் உண்மையே. இதைத் தெரிந்து கொள்ள வேண்டுமெனில், மேற்படி இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு ஒரு மகளின் நிலை எவ்வாறு இருந்தது என்பதை அறிதல் அவசியம். அதைப் பின்வருமாறு காண்போம்.

1956-ல் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு (பழைய சட்டத்தின்படி) மகளின் நிலை :

யஞ்ஞனவல்கியர் எழுதிய உரையின்படி, இறங்குரிமையைப் பொறுத்த வரை (Inheritance) வாரிசுரிமையைப் பெறுபவர்களில் மகளும் ஒரு வாரிசுதாரர் ஆவார். ஒருவன் இறந்ததும், அவனுடைய சொத்துக்கள் அவனுடைய மகன் களுக்குப் போகும். மகன்களும் இறந்துவிட்டிருந்தால் பேரன்களுக்கு செல்லும்.

இவ்வாறு மகன்களோ, பேரன்களோ அல்லது கொள்ளுப் பேரன்களோ இல்லாதவிடத்து, இறந்தவனுடைய சொத்து அவளது விதவைக்குச் செல்லும். மேற்படி விதவையும் இல்லாதவிடத்து, அதாவது விதவை இறந்துவிட்டால் அல்லது மறுமணம் புரிந்து கொண்டால், அடுத்து சொத்தை அடையக்கூடிய வாரிசாக 'மகள்' இருப்பாள். அவ்வாறு இறந்தவரின் சொத்தில் மகள் சொத்துரிமை அடைந்தாலும் அது முழு உரிமை கொண்டதன்று; வரையறைக்குட் பட்ட உரிமையேயாகும். எனவே, அவளுடைய மரணத்திற்குப்பின், அவளது தந்தையின் (இறந்தவரின்) பிற வாரிசுகளுக்கே (பின்னுரிமையர்கள்) சொத்து செல்லும். சுருங்கக்கூறின், மகள் இறந்தவரின் சொத்தை அடையலாம். எப்பொழுது என்று கேட்டால், அங்கு இறந்தவருக்கு மகன்களோ, அவர்களது குழந்தைகளோ அல்லது விதவையோ இருக்கக்கூடாது. அதாவது இறந்தவரின் சொத்தில் மகள் நேரடியான வாரிசுரிமையைப் பெறுவதில்லை. இதுவே பழைய இந்துச் சட்டத்தின்படி ஒரு மகளின் நிலையாகும்.

1956-ல் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு மகளின் நிலை :

1956-ல் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு, மகளின் நிலையில் பெரும் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவை வருமாறு :

(1) பழைய சட்டத்தின்படி இறந்தவருக்கு மகனோ அல்லது விதவையோ இருப்பின், மகளுக்கு இறங்குரிமையின் அடிப்படையில் சொத்து கிடைக்காது. ஆனால் 1956-ன் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின்படி மேற்படி நிலை ஒழிக்கப் பட்டது. இச்சட்டத்தின்படி, மகளுக்கும் இறந்தவரின் சொத்தில் சம உரிமை அளிக்கப்பட்டது. அவள், இறந்தவனின் மகன், விதவை மற்றும் தாயுடன் சொத்தில் சம பங்கினைப் பெற தற்பொழுது உரிமையுடையவள் **[பிரிவு 8]**.

(2) முன்னதாக இறந்து போய்விட்ட மகளின் (Predeceased daughter) குழந்தைகள், இறந்தவரின் சொத்தில் மகள் என்ன பாகத்தைப் பெறுவாளோ அந்த பாகத்தை அவர்கள் தங்களுக்குள் சமமாகப் பிரித்துக் கொள்ளலாம். பழைய சட்டத்தின்படி இதற்கு உரிமை கிடையாது.

(3) பழைய சட்டத்தின்படி மகள் பெறும் சொத்து வரையறைக்குட் பட்டதாகும் (Limited Interest). மகளின் மரணத்திற்கு பிறகு, அது அவளுடைய தந்தையின் பிற வாரிசுகளுக்கு சென்றடைந்துவிடும். ஆனால் மேற்படி 1956-ஆம் ஆண்டின் சட்டப்படி, மகளுக்கு இறங்குரிமையில் வரும் சொத்தில், அவளுக்கு முழு உரிமையுண்டு. அது அவளுடைய மரணத்திற்குப் பிறகு, அவளுடைய வாரிசுகளுக்குத்தான் செல்லும். **[பிரிவுகள் 15 மற்றும் 16]**. மாறாக மேற்கண்ட பழைய சட்டத்தின்படி செல்லாது.

(4) மேற்படி 1956-ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டம்

வருவதற்கு முன்பு அம்மகள் வரையறைக்குட்பட்ட சொத்துக்கள் ஏதேனும் பெற்றிருந்து, மேற்படி சட்டம் வரும்பொழுது அச்சொத்து அவளது உடைமையில் இருந்தால் (in her possession), வரையறைக்குட்பட்ட சொத்துரிமை மறைந்து, அச்சொத்திற்கு அவளே முழு உரிமையாளராகி விடுவாள். (absolute ownership) **[பிரிவு 14].**

(5) 1956–ல் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னர் கூட்டு குடும்பச் சொத்தின் பங்குரிமையர் ஒருவர் இறந்துவிட்டால், அவருக்குரிய பங்கை பிற பங்குரிமையர்கள் (Coparceners) அடைந்து கொள்வார்கள். இப்பங்குரிமையர்கள், இறந்தவரின் சகோதரர்களாகவோ அல்லது சிற்றப்பா, பெரியப்பாமார்களாகவோ இருப்பார்கள். இவர்கள் இறந்தவரின் மகளை சொத்துரிமை பெறுவதிலிருந்து தள்ளி விடுகிறார்கள் (exclude). அதாவது, இறந்தவரின் சொத்துக்களை பங்குரிமையர்கள், எஞ்சுநர் (Survivorship) அடிப்படையில் அடைகின்றனர். ஆனால், 1956–ல் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்டபிறகு, பங்குரிமைச் சொத்தில் மகளுக்கும் உரிமை வந்துவிட்டது. இதன்படி, இறந்துபோன தந்தையாரின் சொத்துக்களை மகளும், ஒரு பங்குரிமையரைப் போலவே அடையலாம். இது **பிரிவு 6–ல்** விளக்கப்பட்டுள்ளது. இது ஒரு புரட்சிகரமான முன்னேற்றம் ஆகும்.

தமிழக அரசின் சட்ட திருத்தம் (Amendment Act) :

தமிழக அரசு தனது 1990–வது ஆண்டின் 1–வது சட்டத்தின் மூலம் (Act 1 of 1990) 25–3–89–ஆம் தேதியில் மேற்படி 1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 29–ல் திருத்தம் செய்ததன் விளைவாக பின்வரும் 29-A, 29-B, 29-C ஆகிய மூன்று பிரிவுகளைச் சேர்த்தது.

பிரிவு 29-A(i): இப்பிரிவு பங்குரிமைச் சொத்தில் மகளுக்குச் சமபங்கு கொடுக்க வேண்டும் எனக் கூறுகிறது. (Equal rights to Daughter in Coparcenary property). அதாவது, இந்து கூட்டுக் குடும்பத்தில் மிதாக்ஷர முறையில் மகன் எவ்வாறு பிறந்தவுடனேயே பங்குரிமையர் ஆவானோ, அவ்வாறே மகளும் பிறந்தவுடன் பங்குரிமையர் ஆகிவிடுகின்றாள். மகனுக்கு உள்ள அனைத்து பொறுப்புகளும், தகுதியின்மைகளும் (liabilities and disabilities) மகளுக்கும் உண்டு.

(ii) மகனுக்குச் சொத்தில் எவ்வளவு பங்கு கிடைக்கிறதோ அதே அளவு பங்கு மகளுக்கும் கிடைக்கும். மகள் இறந்து விட்டால், அவளது வாரிசுகளுக்கு அவள் பங்கு சென்றடையும்.

(iii) மகளுக்குக் கிடைத்த பங்கினை அவள் தன்னுடைய விருப்பம் போல் யாருக்கு வேண்டுமானாலும் உயில் மூலமோ அல்லது மற்ற ஆவணங்களின் மூலமோ கொடுக்கலாம்.

(iv) 25–3–1989–ஆம் தேதிக்கு முன் திருமணமான மகளுக்கு இந்தச் சட்டத் திருத்தத்தால் எப்பலனும் கிடைக்காது.

(v) 25–3–1989–ஆம் தேதிக்கு முன் நடைபெற்ற எப்பாகப்பிரிவினைக்கும் இச்சட்டத் திருத்தம் பொருந்தாது.

பிரிவு 29-B : 25–3–1989–ஆம் தேதிக்குப்பின் ஒரு பெண் இறந்து விட்டால், அவளுடைய சொத்து உயிருடன் உள்ள மற்றைய எஞ்சுநர்களுக்குப் (Survivors) போய்ச் சேரும். ஆனால் அவள் இறக்கும்பொழுது அவளுடைய குழந்தையோ அல்லது குழந்தையின் குழந்தையோ இருந்தால் 1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது போல் அவளின் சொத்து சென்றடையுமே தவிர, எஞ்சுநர் முறைப்படி (Survivorship) சொத்து சென்றடையாது.

பிரிவு 29-C : சில நேர்வுகளில் சொத்தை அடைவதற்கான முதல் நிலை உரிமையானது (Preferential right to acquire property is certain cases), மேலே கூறிய பிரிவுகள் 29-A மற்றும் 29-B-யின்படி 25–3–1989–ஆம் தேதிக்குப்பின், ஒன்றுக்கு மேற்பட்ட பெண் வாரிசுகளோ அல்லது பெண் வாரிசுகளின் வாரிசுகளோ இருந்தால், அவர்களுக்கு அசையும் சொத்தோ அல்லது செய்யும் தொழிலில் பங்கோ மொத்தமாகவோ (solely) அல்லது கூட்டாகவோ (jointly) கிடைக்கும் பொழுது அவர்களில் யாராவது ஒருவர் தங்களுடைய பங்கினை விற்க விரும்பினால் மற்றவர்கள் (Co-shares) அவரின் சொத்தினை வாங்கும் முன்னுரிமை பெற்றவர்கள் ஆவர். [இது அண்டைச் சொத்தில் முற்படுவிலை கொள் உரிமையைப் (Right of Pre-emption) போன்றதாகும்.]

பிரிவு 29-C (2): அவ்வாறு அச்சொத்தை வாங்க விரும்புபவர்கள் அதற்கு உண்டான தொகையைக் கொடுக்க வேண்டும். இதில் ஏதேனும் சிக்கல் எழுந்தால் நீதிமன்றத் தீர்ப்பே முடிவானதாகும்.

பிரிவு 29-C (3): ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட உடன் பங்குரிமையர்கள் (Co-shares) இருக்கும்பொழுது அதில் ஒருவர் தனது பங்கை விற்க விரும்பினால் மீதி உள்ள பங்குரிமையர்களில் யார் அதிகத் தொகை கொடுக்க உடன்படுகிறார்களோ, அவர்களுக்குத்தான் அப்பங்கை விற்க வேண்டும்.

முடிவுரை:

1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு, மகளின் சொத்துரிமை நிலையில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

25. Discuss:

(a) The rights of a child in the Mother's Womb.

(b) Presumption in case of simultaneous deaths.

விவாதி:

(a) தாயின் கருப்பையில் உள்ள சிசுவின் உரிமைகள்

(b) உடனிகழ்வான இறப்புக்களில் அனுமானம்.

முன்னுரை:

1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் **20–வது பிரிவு** தாயின் கருவில் உள்ள குழந்தையின் வாரிசுரிமை குறித்தும், **21–வது பிரிவு** ஒரே நேர (உடனிகழ்வான) இறப்புகளில் அனுமானம் குறித்தும் விளக்குகிறது.

(a) தாயின் கருப்பையில் உள்ள குழந்தையின் உரிமை:

மேற்படி சட்டத்தின் 20–வது பிரிவின்படி, உயில் எழுதாமல் இறந்து போன இந்து ஒருவரின் குழந்தை, அவரது இறப்பின் பொழுது, தாயின் கருப்பையில் இருந்து, அது பின்னிட்டு உயிருடன் பிறந்தால், அக்குழந்தை (ஆண் அல்லது பெண்) உயில் எழுதாமல் இறந்து போனவர் உயிருடன் உள்ள பொழுது அவரது சொத்தில் இறங்குரிமை பெற எத்தகு உரிமையைக் கொண்டிருக்குமோ, அதே உரிமையைக் கொண்டிருக்கும். மேலும் அந்த இறங்குரிமை அவர் இறந்த தேதியிலிருந்து செயல் விளைவு பெற்று அக்குழந்தையை சேர்ந்தடைந்ததாகக் கருதப்படுதல் வேண்டும்.

மேற்கண்ட பிரிவின்படி, கருப்பையில் உள்ள ஒரு குழந்தையும், அது உயிருடன் பிறந்த பிறகு, அவரது தந்தையின் சொத்தில் பங்குரிமை பெற உரிமை படைத்ததே என்பது தெளிவாகிறது. அக்குழந்தை மகனாக இருக்கலாம் அல்லது மகளாக இருக்கலாம். மேலும் குழந்தை பிறப்பதற்கு முன்னர் (ஆனால் கருப்பையில் உருவான பின்னர்) இறந்து போனவரின் சொத்துக்கள் பாகப்பிரிவினை செய்யப்பட்டிருப்பின், அக்குழந்தை தனக்குரிய பாகத்தைக் கோரி வழக்கிட உரிமை படைத்தது.

சில பொதுவான நிபந்தனைகள்:

1. தந்தை உயில் எழுதாமல் இறக்கும் பொழுது, அவரது குழந்தை அவரது மனைவியின் கருப்பையில் உருவாகியிருக்க வேண்டும்.

2. அது தந்தை இறந்த பிறகு உயிருடன் பிறந்திருக்க வேண்டும். எனினும் உயிருடன் பிறந்த பிறகு இறந்திருக்கலாம். ஆனால் இறந்தே பிறந்திருக்கக் கூடாது.

3. மேற்படி பிரிவு, இறந்து போனவருக்கு முன்னதாக இறந்து போன வாரிசுகளின் (மருமகள், மகன்) போனவர்களின் குழந்தைகளுக்கும் பொருந்தும்.

(a) ஒரே நேர இறப்புகளில் அனுமானம்:

மேற்படி சட்டத்தின் 21–வது பிரிவின்படி, இருவர் இறந்திருந்து அவர்கள் இருவருள் யார் மற்றவரைவிடப் பிந்தி இறந்தவர் என்று காண இயலாத சூழ்நிலையில், சொத்தின் வாரிசுரிமை குறித்து அனைத்து நோக்கங்களுக்கும், மாற்றுக்கருத்து நிரூபிக்கப்படும் வரையில், இறந்தவரில் மூத்தவரை விட இளையவரே பிந்தி இறந்தார் என்று அனுமானித்தல் வேண்டும்.

மேற்படி 21–வது பிரிவின் முக்கியத்துவம்:

தற்பொழுது வேகமான இயந்திர உலகில் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் சாலை விபத்துகள் பல நடக்கின்றன. அங்காங்கே குண்டு வெடிப்புகள் நடக்கின்றன. அதுபோல் இன்று புதிதுபுதிதாக பல வியாதிகள் தோன்றியுள்ளன. இவற்றினால் மக்கள் ஒரே சமயத்தில் கூட்டம் கூட்டமாக இறக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. துரதிர்ஷ்டவசமாக அவ்வாறே இறந்தும் போகின்றனர். இச்சூழ்நிலைகளில் வாரிசுரிமையை நிருணயிக்க மேற்கண்ட 21–வது பிரிவே பெரிதும் உதவுகிறது என்று சொன்னால் அது மிகையன்று. ஒரு விபத்தில் அல்லது அசம்பவத்தில் கணவன்–மனைவி அல்லது தாய்–மகன் சிக்கி ஒரே சமயத்தில் இறக்க நேரிடலாம். எனவே இயற்கை நியதிப்படி இறந்தவர்களில் மூத்தவரே, முதலில் இறந்தவர் என்று அனுமானம் செய்வதே உகந்தது. இதைத்தான் மேற்படி 21–வது பிரிவின் வழியாக இந்து வாரிசுரிமைச் சட்டம் கூறுகிறது. எனினும் இவ்வாறு அனுமானம் கொள்வதை எதிர்த்துரைக்கலாம். அதாவது இறந்தவர்களில் வயதில் இளையவரே முதலில் இறந்தார் என்று எதிர்க்கலாம். ஆனால் இவ்வாறு எதிர்த்துரைப்பவர் யாரோ, அவரே அதை நிரூபிக்கவும் வேண்டும். எனவே இப்பிரிவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது என்று சொன்னால் அது மிகையன்று.

இந்த அனுமானம், யாருக்கெல்லாம் பொருந்தும்?

1. உயில் எழுதி வைத்து இறந்தவர்களுக்கும் மேற்கண்ட அனுமானம் பொருந்தும்.

2. இறந்து போனவர்கள் கணவன்–மனைவியாக இருக்கும் பொழுது, கணவனை விட மனைவி இளையவர் என்றும் அனுமானிக்க இயலாது. அதாவது வயதைப் பொறுத்துத்தான் அனுமானமே தவிர, நபர்களின் தகுநிலையைப் (Status) பொறுத்து அல்ல.

3. யார் மற்றவரைவிடப் பிந்தி இறந்தவர் என்று காண இயலாத சூழ்நிலையில்தான் மேற்படி அனுமானம் பொருந்தும்.

26. "The Hindu Succession Act has been described as the Magna Carta of Hindu Women in India." Critically examine

this view, by referring to the changesin law brought about by the Act. ("இந்து வாரிசுரிமைச் சட்டம் இந்திய இந்துப் பெண்மணிகளின் பேருரிமைச் சாசனமாக வர்ணிக்கப்படுகிறது." இக்கண்ணோட்டத்தை இந்தச் சட்டத்தால் கொண்டு வரப்பட்ட மாற்றங்களை குறிப்பிட்டு ஆய்க.)

(அல்லது)

"The rights of a female Hindu are enlarged under the Hindu Succession Act, 1956" - Discuss. ("ஒரு இந்துப் பெண்ணின் உரிமைகள் 1956–ம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டத்தால் விரிவாக்கப் பட்டுள்ளது" - விளக்குக.)

[முந்தைய மூன்று வினாக்களை தொகுத்து எழுதுக.]

27. Pre-emption in Hindu law - Write short notes. (இந்து சட்டத்தில் வாங்கு முன்னுரிமை – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

What are the circumstances in which a preferential right (right of pre-emption) exists to acquire property under the Hindu Succession Act? (இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் கீழ் சொத்தை அடைவதற்கான முன் உரிமை நிலவும் சூழ்நிலைகள் யாவை?)

முன்னுரை:

"சொத்தை அடைவதில் முதல் நிலை உரிமை" **(Preferential right to acquire property)** என்பது இசுலாமியர் சட்டத்தில் உள்ள 'வாங்கு முன்னுரிமைக்கு' **(Pre-emption)** சமமானதாகும். அதாவது ஒரு இந்து வாரிசு அசையாச் சொத்தில் அல்லது வியாபாரத்தில் தனக்குள்ள பற்றினை விற்க முற்படுங்கால், அதை வாங்க மற்ற சகவாரிசுகளுக்கு முன்னுரிமை உண்டு. அதாவது வெளியார்களுக்கு விற்பதற்கு முன், தனக்கே விற்க வேண்டும் என சகவாரிசுதாரர் (Co-heir) ஒருவர் உரிமை கோரலாம். இது குறித்து 1956–ன் இந்து வாரிசுரிமை சட்டத்தின் 22–வது பிரிவு கூறுகிறது. அதன்படி, இது போன்ற விஷயத்தில் முதல்நிலை உரிமை பெற எட்டு நிபந்தனைகள் முக்கியமானவை ஆகும். அவை வருமாறு.

பிரிவு 22–ன் கீழான முக்கியமான எட்டு நிபந்தனைகள்:

1. சொத்து அசையாச் சொத்தாகவோ அல்லது வியாபாரமாகவோ இருக்க வேண்டும்.
2. வாரிசுகள் பின்னிணைப்பு பட்டியலின் முதல் வகுப்பில் (Class I heris) உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

3. அந்த வாரிசுகளில் ஒருவர், அச்சொத்தில் அல்லது வியாபாரத்தில் உள்ள தனது பற்றினை (interest) அல்லது உரிமையினை விற்க முன் வர வேண்டும்.
4. வாங்க விரும்பும் வாரிசின் உரிமை, முதல் நிலை உரிமையே தவிர முழு உரிமை அன்று.
5. விற்பனை செய்வதற்கு நிர்ணயிக்கப்படும் விலையைச் சம்பந்தப் பட்டவர்களே முடிவு செய்து கொள்ளலாம். முடியவில்லையென்றால் நீதிமன்றத்தால் முடிவு செய்யப்படும்.
6. அதற்காக வாங்க விரும்புபவன் நீதிமன்றத்திடம் விண்ணப்பம் (Application) செய்து கொள்ள வேண்டும்.
7. நீதிமன்றம் நிர்ணயிக்கும் விலையை வாங்க விரும்பும் வாரிசு ஒப்புக் கொள்ள மறுத்தால், விண்ணப்பத்தின் செலவுத் தொகையை (cost of the Application) விற்க விழையும் வாரிசுக்கு கொடுக்க வேண்டும்.
8. ஒன்றுக்கு மேற்பட்ட வாரிசுகள் வாங்குவதற்கு போட்டியிட்டால், அதிக விலை தருபவனுக்கே, அதிலும் முதல் உரிமை கிடைக்கும்.

28. Explain the special provision with respect to dwelling house in the Hindu Succession Act, 1956. (இந்து வாரிசுரிமைச் சட்டம், 1956–ன்படி குடியிருக்கும் வீட்டிற்குள்ள தனிப்பிரிவை விளக்குக.)

(அல்லது)

State the special provision relating to dwelling house in the Hindu Succession Act. (இந்து இறங்குரிமைச் சட்டத்தில் குடியிருக்கும் வீடு குறித்து கூறப்பட்டுள்ள சிறப்பு வகை முறையினை கூறுக.)

(அல்லது)

Special provision respecting dwelling-houses - Write short notes. (குடியிருக்கும் வீடுகளைப் பொறுத்த சிறப்பு வகைமுறை – சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை :

1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் **23–வது** பிரிவு குடியிருக்கும் வீட்டைப் (dwelling house) பாகம் பிரித்துக் கொள்வது சம்பந்தமாகவும், அதில் ஆண் வாரிசுகளுக்கும் பெண் வாரிசுகளுக்கும் இருக்கும் உரிமை சம்பந்தமாகவும் கூறுகிறது. அப்பிரிவு வருமாறு.

பிரிவு 23 கூறுவதாவது:

உயில் எழுதாமல் ஒரு இந்து ஆணோ அல்லது பெண்ணோ இறந்து

விட்டால், அவர்களது வாரிசுகள், முதல் வகுப்பில் கூறப்பட்டவர்களாக இருந்து, இறந்தவரின் சொத்து ஒரு குடியிருக்கும் வீடாக இருந்தால், மற்றும் இறந்தவரின் மொத்த குடும்பமும் அந்த வீட்டை தங்களை முழுமையான உடைமையில் கொண்டிருந்தால், அப்போது பெண் வாரிசுகளுக்கு சில சூழ்நிலைகளில்தான் அந்த வீட்டில் பாகப்பிரிவினை கோர முடியும். (1) அதாவது இறந்தவரின் ஆண் வாரிசுகள் அந்த வீட்டை தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்ள முன் வர வேண்டும். (2) இவ்வாறு ஆண் வாரிசுகள் தங்களுக்குள் அந்த குடியிருக்கும் வீட்டைப் பங்கிட்டுக் கொள்ள முன்வராத பொழுது, பெண் வாரிசுகள் அதில் பாகம் கோர இயலாது. ஆனால் வசிக்கலாம். (3) இவ்வாறு வசிக்கும் உரிமை கூடத் திருமணமான மகளுக்குக் கிடையாது. ஆனால் அந்த மகள் திருமணமாகாமல் இருந்தாலோ, விதவையாக இருந்தாலோ, கணவனால் கைவிடப்பட்டவராக இருந்தாலே அல்லது கணவனிடமிருந்து பிரிந்து தனித்து வாழ்பவராக இருந்தாலோதான் அந்த பெண் வாரிசுக்கு (மகளுக்கு) அந்த குடியிருக்கும் வீட்டில் வசிக்கும் உரிமை உண்டு.

23-வது பிரிவின்படியான நிபந்தனைகள்:

1. இறந்த நபர் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் உயில் எழுதாது இறந்திருக்க வேண்டும்.
2. வாரிசுகள் பின்னிணைப்புப் பட்டியலின் முதல் வகுப்பில் உள்ளவர் களாக இருக்க வேண்டும்.
3. இறந்துபோன நபரின் சொத்தில் குடியிருக்கும் வீடும் (dwelling House) இருக்க வேண்டும்.
4. அந்த வீட்டில் இறந்து போன நபரின் குடும்பத்தார் குடியிருக்க வேண்டும்.
5. ஆண் வாரிசுகள் அவ்வீட்டைப் தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்ள முன்வரும் முன் பெண் வாரிசுகள் பாகப்பிரிவினை கேட்க முடியாது.
6. பிரிக்கப்படும் வரை அவ்வீட்டில் இருக்க பெண் வாரிசுக்கு உரிமை உண்டு. அப்பெண் வாரிசு மகளாயிருந்தால் அவள் திருமணம் ஆகாதவளாக அல்லது விதவையாக அல்லது கணவனை விட்டுத் தனியாக வாழ நேரிட்டவளாக இருக்க வேண்டும்.

விளக்கவுரை:

ஓர் இந்து ஆணோ அல்லது பெண்ணோ உயில் எழுதாது இறந்து போனால்தான் இந்தப் பிரிவு அமலாகும்.

ஒரு ஆண் உயில் எழுதாது இறந்து போனால், அவர் விட்டுச் சென்ற

குடியிருக்கும் வீட்டில் குடியிருக்கப் பாத்தியதை உள்ள முதல் வகுப்பு பெண் வாரிசுகள் அவனுடைய மகள், விதவை, தாயார் முன்னதாக இறந்துவிட்ட மகனுடைய மகள், முன்னதாக இறந்துவிட்ட மகளுடைய மகள், முன்னதாக இறந்துவிட்ட மகனின் விதவை, முன்னதாக இறந்துவிட்ட மகளுடைய முன்னதாக இறந்த மகனின் மகள் ஆகியோர் ஆவர்.

ஒரு பெண் உயில் எழுதாது இறந்து போனால், குடியிருக்க பாத்தியத்தை உள்ள பெண் வாரிசுகள் மகள்கள், முன்னதாக இறந்துவிட்ட மகனுடைய மகள்கள், முன்னதாக இறந்துவிட்ட மகளுடைய மகள்கள் ஆகியோர் ஆவர்.

இறந்து போனவனின் ஆண் வாரிசுகள் அக்குடியிருக்கும் வீட்டை தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்ள முன்வரும் பொழுது மட்டுமே, அதில் இறந்து போனவனின் முதல் வகுப்பு பெண் வாரிசுகள் பாகப் பிரிவினை கோர முடியும். அவர்கள் அவ்வாறு முன் வரவில்லையெனில், அதில் அவர்கள் வெறுமனே வசித்து வரலாம். அதற்கு மேல் எவ்வுரிமையும் இல்லை.

எனினும், இதில் திருமணமாகாத மகள் கற்பு நெறி தவறியிருந்தவளாக இருந்தாலும், குடியிருக்கும் உரிமையைக் கேட்கலாம்; ஆனால் திருமணம் ஆகாத மகள், திருமணம் செய்து கொண்டதும் குடியிருக்கச் கோரும் உரிமையை இழந்து விடுவாள். அதைப் போலவே விதவை மகள், மறுமணம் புரிந்து கொண்டதும் அவ்வுரிமையை இழந்து விடுவாள்.

29. State the rules relating to the grounds of exclusion from inheritance prior to the Hindu Succession Act 1956 and compare the same with the postion obtainable after the passing of the Act. (1956–ஆம் ஆண்டில் இந்து வாரிசுரிமைச் சட்டம் வருவதற்கு முன்பு இறங்குரிமை பெறுவதிலிருந்து தள்ளப்படுவதற்குண்டான அடிப்படையில் தொடர்பான விதிகளை விளக்கி அவற்றை மேற்படி சட்டம் இயற்றப்பட்ட பிறகு ஏற்பட்டுள்ள நிலையுடன் ஒப்பிடுக.)

(அல்லது)

Discuss fully the law relating to exclusion from inheritance prior to the Hindu Succession Act. (இந்து வாரிசுரிமைச் சட்டத்திற்கு முன்பு இறங்குரிமையிலிருந்து விலக்கி வைத்தல் தொடர்பான சட்டத்தினைப் பற்றி முழுவதும் விவாதிக்க.)

(அல்லது)

Discuss the legislative changes brought about by the Hindu Succession Act in regard to the grounds of disqualifications from inheritance. (வாரிசுரிமை பெறத் தகுதியின்மைக்கான காரணங்களில் இந்து உரிமை இறக்கச் சட்டம் ஏற்படுத்திய சட்ட முறை

மாற்றங்களை எடுத்துரைக்க.)

(அல்லது)

Explain the disqualifications from inheritance in Hindu law and the changes made by the Hindu Succession Act. 1956.
(இந்து சட்டத்திலுள்ள மரபுரிமை பெற தகுதியின்மையையும் மற்றும் 1956–ம் ஆண்டு சட்டம் செய்த மாற்றங்களையும் விளக்குக.)

இறங்குரிமையிலிருந்து விலக்கி வைக்கப்படுதல் (Exclusion) அல்லது இறங்குரிமை பெறத் தகுதியின்மைகள் (Disqualifications):

இறந்தவர் ஒருவரின் சொத்துக்களை இறங்குரிமையின் வாயிலாக பெற வேண்டுமெனில், இந்துச் சட்டம் சில தகுதிகளை வரையறுத்துள்ளது. இத்தகுதிகள் இல்லாதவர்கள், இறங்குரிமை பெறுவதிலிருந்து விலக்கி வைக்கப் படுகின்றனர். ஆனால் இவ்வாறு தகுதியின்மையின் அடிப்படையில் விலக்கி வைக்கப்படும் முறையானது. 1956–ல் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப் படுவதற்கு முன்பும், அதற்குப் பின்பும் மாறுபட்டு உள்ளது. இச்சட்டம் இயற்றப் படுவதற்கு முன்பு தீவிரமாக கடைபிடிக்கப்பட்டு வந்த தகுதியின்மைகள், மேற்படி சட்டத்திற்கு பிறகு பெருமளவில் தளர்த்தப்பட்டன. இவை குறித்து சற்று விரிவாக பின்வருமாறு காண்போம்.

1956-ஆம் ஆண்டில் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பிருந்த தகுதியின்மைகள் (Exclusions or disqualifications prior to the Act):

மேற்படி சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பிருந்த இந்து தரும சாத்திரங்கள், குறிப்பிட்ட சிலரை இறங்குரிமை பெறுவதிலிருந்து விலக்கி வைத்திருந்தது அவர்களை வருமாறு.

1. உடல் ஊனமுடையவர்கள் (Physical disqualification).
2. மனநலம் குன்றியவர்கள் (Mental disqualification).
3. ஒழுக்க நெறி தவறியவர்கள் (Moral Disqualification).
4. மதத்தகுதி இழந்தவர்கள் (Religious disqualification).
5. நேர்மை நெறி தவறியவர்கள் (Equitable disqualification)

1. **உடல் ஊனமுடையவர்கள் :** பிறவிக் குருடர்கள், பிறவிச் செவிடர்கள், பிறவி ஊமைகள், பிறவியிலேயே கை கால் இல்லாதவர்கள், தீர்க்கமுடியாத தொழு

நோய் உடையவர்கள், இவர்கள் அனைவருமே இறங்குரிமை பெறத் தகுதியற்ற வர்கள் ஆவர். ஆனால் **1928–ல் ஏற்படுத்தப்பட்ட இந்து மரபுமுறை இறங்குரிமைச் (தகுதியின்மைக் களைதல்) சட்டத்தினால் [The Hindu Inheritence (Removal of Disablities), Act 1928]** மேற்கண்ட அனைத்துத் தகுதியின்மைகளும் நீக்கப்பட்டுவிட்டன.

2. மனநலம் குன்றியவர்கள்: பிறவி மந்தர்கள், பிறவிப் பித்தர்கள் இவர்கள் இறங்குரிமை பெறுவதிலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருந்தனர். பிறவிப் பித்தர்களைக் கணக்கிடும் பொழுது, வாரிசுரிமை ஏற்படும் சமயத்தில் அவர் பித்தராக இருந்தால், இறங்குரிமையின் அடிப்படையில் சொத்து பெற முடியாது. ஆனால் 1928–ஆம் ஆண்டின் மேற்படிச் சட்டம் பிறவிலேயே மந்தனாகவோ அல்லது பித்தனாகவோ இருந்தால் மட்டுமே சொத்துரிமை பெறுவதிலிருந்து விலக்கி வைக்கப்பட வேண்டுமெனக் கூறுகிறது.

3. ஒழுக்க நெறி தவறியவர்கள்: கற்பு நிலை தவறிய பெண்கள் மட்டுமே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு பெண் கற்பு நெறியில் இருந்து வழுவினால், அவள் சொத்துரிமை பெறுவதில் இருந்து விலக்கி வைக்கப்படுவாள். தாயபாக முறையில் அவள் எந்த அளவுக்கு இறந்தவனுக்கு நெருங்கிய உறவினராக இருந்தாலும், அவள் கற்பு நெறி தவறும் பொழுது அவனுடைய சொத்தில் இருந்து அவள் பங்கு பெற முடியாது. மிதாக்ஷரா முறைப்படி இறந்தவனின் மனைவி கற்பு நெறியிலிருந்து தவறினால், அவள் கணவனின் சொத்தில் இருந்து பங்கு பெற முடியாது; ஆனால் இறந்தவனுடைய மனைவி ஒரு முறை சொத்துரிமையை பெற்றுவிட்டால், பின்னாளில் கற்பு நெறியிலிருந்து தவறினாள் என்ற காரணத்தை காட்டி, அவள் முன்னர் பெற்ற சொத்தை திரும்ப எடுத்துக் கொள்ள இயலாது என மிதாக்ஷரா முறை கூறுகிறது. இதுவே மிதாக்ஷரா முறைக்கும் தாயபாக முறைக்கும் உள்ள முக்கிய வேறுபாடாகும். இருப்பினும் தாயபாக முறைக்கும் மிதாக்ஷரா முறைக்கும் உள்ள ஒற்றுமை யாதெனில், ஒரு பெண் இன்னொரு பெண்ணிடமிருந்து சொத்தை பெறும் பொழுது கற்பு நிலையைக் காரணமாகக் காட்டி அவளை சொத்துரிமை பெறுவதிலிருந்து தடுக்க முடியாது என்பதே. ஆனால் **1856–ம் ஆண்டு விதவைகள் மறுமண சட்டம் (The Hindu Widows Remarriage Act, 1856) பிரிவு 2–ல்** ஒரு விதவை மறுமணம் செய்து கொண்டால், அவள் முன்னர் பெற்ற கணவனின் சொத்தையும், தனது கணவனின் நேர்வாரிசுகளிடமிருந்து (lineal heirs) பெற்ற சொத்தையும் இழக்க வேண்டியதாகும் எனக் கூறப்பட்டுள்ளது.

4. மதத் தகுதி இழந்தவர்கள்: இந்து மதத்திலிருந்து வேறு மதத்திற்கு மாறினால் அவ்வாறு மதம் மாறியவர், சொத்துரிமையை பெற இயலாது. ஆனால் **1880–ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட வகுப்பு தகவின்மை நீக்கச் சட்டப்படி (Caste Disabilities Removal Act, 1880)** ஒருவன் இந்து மதத்தை விட்டு

வேறு மதத்திற்கு மாறினாலும் அவனுக்குச் சொத்தில் பங்கு பெற உரிமை உண்டு.

5. நேர்மை நெறி பிறழ்ந்தவர்கள்: கொலையாளி கொலை செய்யப் பட்டவனின் சொத்தில் இருந்து பங்கு பெற முடியாது. ஏனெனில் தவறு செய்வதனுக்கு அத்தவறின் அடிப்படையில் பலன் கிடைக்கக் கூடாது. (A man cannot take advantage of his wrong) என்பது பொது விதியாகும்.

1956-ஆம் ஆண்டில் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு உள்ள நிலை (After the Act):

1956-ன் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் **24,25,26,27,28** ஆகிய பிரிவுகளின் வழியாக, சொத்தை பெறுவதில் உள்ள மேற்கண்ட தகுதியின்மைகளில் சில மாற்றங்களைச் செய்தன. அப்பிரிவுகள் வருமாறு.

பிரிவு 24, மறுமணம் செய்து கொண்ட சில வகை விதவைகளுக்கு சொத்துரிமை கிடைக்காது (Certain widows re-marrying may not inherit as widows): முன்னதாக இறந்துவிட்ட மகனுடைய விதவை (widow of a pre-deceased son), முன்னதாக இறந்துவிட்ட மகனின் முன்னதாக இறந்துவிட்ட மகனின் விதவை (widow of a pre-deceased son of a pre-deceased son), சகோதரனின் விதவை ஆகியோர் வாரிசுரிமை பெறும் நாளில் மறுமணம் புரிந்திருந்தால் அவர்களைச் சொத்துரிமையிலிருந்து மேற்படி பிரிவு 24 தள்ளி வைக்கிறது. ஆனால் தந்தையின் விதவை (மாற்றாத்தாய்) மறுமணம் செய்தால், அவளுக்கு இறந்தவனின் சொத்தில் பங்கு பெற உரிமை உண்டு எனக் கூறுகிறது. கற்பு நெறி தவறினாலும் அவர்களுக்கு சொத்துரிமை உண்டு (Unchaste widow may now inherit) என்றும், ஆனால் அவர்கள் மறுமணம் செய்தால் அவ்வுரிமையை இழப்பார்கள் என்றும் கூறுகிறது.

பிரிவு 25, கொலையாளி தகுதியிழந்தவன் (Murderer disqualifed): கொலையாளி ஒருவன், தன்னால் கொலை செய்யப்பட்டவனின் (commission of murder) சொத்திலிருந்து பங்கு பெற முடியாது என்றும், அதுபோல் அக்கொலைக்கு உடந்தையாக (abated the commission of the murder) இருந்தாலும், கொலை செய்யப்பட்டவனின் எந்தச் சொத்தையும் இறங்குரிமையில் அடைய முடியாது என்றும் கூறுகிறது.

பிரிவு 26, மதம் மாறியவர்களின் வழித்தோன்றல்கள் தகுதியிழந் தவர்கள் (Convert's descendants disqualified): ஒரு இந்து, வேறு மதத்திற்கு மாறியதால், ஒரு இந்துவாக இல்லாமல் போய்விட்டாலும், அவன் இறந்தவனின் சொத்திலிருந்து உரிமை பெறத் தகுதி உடையவனே என்று இப்பிரிவு கூறுகிறது. ஆனால் அவனுடைய வழித்தோன்றல்கள் (வாரிசுகள்) இந்து உறவினர்களிட மிருந்து சொத்துரிமை பெற முடியாது என்றும், ஆனால் அவனுடைய வாரிசுகள்

சொத்தைப் பிரிக்கும் தேதியில் மீண்டும் இந்து மதத்திற்கே மாறியிருந்தால் அப்போது அவர்கள், தங்களின் இந்து உறவினர்களிடமிருந்து சொத்தை பெற உரிமை உண்டு என்றும் இப்பிரிவு கூறுகிறது.

பிரிவு 27, வாரிசு தகுதியற்றவராக இருக்கும் பொழுது வாரிசுமை (Succession when heir disqualified): 1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் கீழ் சொத்தை இறங்குரிமையில் அடைய எவரேனும் தகுதியற்றவர்களாக இருந்தால், அவர் உயிலின்றி இறந்து போனவருக்கு முன்னதாகவே இறந்துபோனதாகக் கருதி, அச்சொத்தை மற்ற வாரிசுகள் பிரித்துக் கொள்ளுதல் வேண்டும் என்று மேற்படி பிரிவு 27 கூறுகிறது.

பிரிவு 28, பிணி, உடல் குறைபாடு போன்றவை வாரிசுரிமை பெறத் தகுதியற்றதாக்கக் கூடாது (Disease, defect etc. not to disqualify): இப்பிரிவு பிணி, உடல் குறைபாடு அல்லது ஊனம் ஆகியவற்றின் அடிப்படையில் எவரையும் சொத்துரிமை பெறுவதிலிருந்து தகுதியற்றவர்களாக்கக் கூடாது என்று கூறுகிறது.

30. Write a short notes on Escheat. (அரசுடை பொருள் – சிறுகுறிப்பு வரைக.)

இந்து ஒருவர் உயில் எதுவும் எழுதி வைக்காமல் இறந்து போனால், அவரது சொத்து, 1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் கூறப் பட்டுள்ள வாரிசு முறைப்படி முதல் வகுப்பு அல்லது இரண்டாவது வகுப்பு வாரிசு தாரர்களுக்கோ அல்லது அவர்கள் இல்லையென்றால் தாயாதிகளுக்கோ அல்லது பெண் வழி உறவினர்களுக்கோ சென்றடையும். இதை நாம் ஏற்கனவே முன் சென்ற வினாக்களின் விடைகளின் மூலம் விரிவாக அறிந்துள்ளோம்.

ஆனால் உயில் எழுதாது இறந்த ஒருவனுக்கு மேற்படி வாரிசுகள் யாருமே இல்லையென்றால், அவரது சொத்து யாரைச் சென்றடையும் என்ற வினா இங்கு அடுத்து எழுகிறது. ஏனெனில் வாரிசின்றி யாரும் இருக்கக் கூடாது என்பது பொதுவிதி.

ஆகவே, இவற்றிற்கெல்லாம் மேற்படி சட்டத்தின் **29–வது பிரிவு** விடை பகிர்கிறது. அதன்படி வாரிசற்ற, உயில் எழுதாமல் இறந்து போன இந்து ஒருவரின் சொத்திற்கு அரசே (Government) வாரிசாகும். அரசே அச்சொத்தை எடுத்துக் கொள்ளும். அது அரசின் பொதுச் சொத்தாகிவிடும். அவ்வாறு எடுத்துக் கொள்ளும் பொழுது வாரிசு ஒருவருக்கு இருக்கும் அனைத்து கடமைகளுக்கும், பொறுப்புகளுக்கும் உட்பட்டே அரசாங்கம் அச்சொத்தை எடுத்துக் கொள்ளும். அதாவது இறந்தவனுக்கு அந்திமக்கிரியைகள் செய்வது, அவன் விட்டுச் சென்ற கடனை அடைப்பது போன்று. இதுவே **'அரசுடை பொருள்' (Escheat)** எனப் படுகிறது.

31. "A Coparcener may renounce his interest in the coparcenary property in favour of the coparceners in several; but not in favour of one or more of them" - Comment. ("ஒரு பங்குரிமையர் சொத்தில் தனக்குள்ள பற்றினை எல்லப் பங்குரிமையருக்கும் சாதகமாக பொதுவாக அல்லாமல் ஒருவருக்கோ அல்லது அவர்களில் சிலருக்கு சாதகமாகவோ விட்டுக் கொடுக்க இயலாது" – விமர்சிக்க.)

(அல்லது)

" Section 30 of the Hindu Succession Act opens a new chapter in the history of the testamentary capacity of a Hindu" - Elucidate this statement. ("ஒரு இந்துவின் உயிலியற்றுத் தகுதி வரலாற்றில் இந்து இறங்குரிமைச் சட்டத்தின் 30–வது பிரிவு ஒரு புதிய பகுதியைத் துவக்குகிறது" – இக்கூற்றிற்கு விளக்கவுரை வரைக.)

முன்னுரை:

மிதாக்ஷரா முறையில், எஞ்சுநர் உரிமையின் (Survivorship) அடிப்படையில் சொத்துரிமை இறக்கம் அமைகின்றது. அதாவது மிதாக்ஷரா கூட்டுக் குடும்பத்தின் பங்குரிமையர் ஒருவர் இறந்து விட்டால், அவரது பங்குச் சொத்தானது எஞ்சியுள்ள பங்குரிமையர்களுக்குச் சென்றடையும். வேறுவிதத்தில் கூறுவதானால் அவரது பங்குச் சொத்தானது எல்லாப் பங்குரிமையர்களுக்கும் பொதுவாக சென்றடையுமே தவிர, யாரேனும் ஒரு குறிப்பிட்ட பங்குரிமையரை மட்டும் சென்றடையாது. ஒரு பங்குரிமையர் பங்குரிமைச் சொத்தில் தனக்குள்ள பற்றினை விட்டுக் கொடுக்க முடியும். மாறாக அவர்களில் யாரேனும் ஒருவருக்கோ அல்லது ஒரு சிலருக்கோ விட்டுக் கொடுக்க இயலாது. ஆனால் இந்நிலை 1956–ஆம் ஆண்டில் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பிருந்ததாகும்.

1956-ல் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு:

மேற்படி சட்டம் இயற்றப்பட்ட பிறகு இந்நிலை நீக்கப்பட்டுவிட்டது. மேற்படி சட்டத்தின் **30–வது பிரிவானது,** ஒரு இந்து ஆண் தனக்கு கூட்டுக் குடும்பச் சொத்தின் மீதுள்ள பற்றினை யார் ஒருவருக்கும் உயில் மூலமோ அல்லது வேறு ஆவணங்கள் மூலமோ விட்டுக் கொடுக்கலாம். இப்பிரிவை சற்று விளக்கமாக பின்வருமாறு காண்போம்.

பிரிவு 30 கூறுவதாவது:

"இந்துவாக இருப்பவர் எவரும் 1925–ஆம் ஆண்டின் இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் வகைமுறைகளின்படியோ அல்லது தற்போது அமலிலிருந்து வருவதும், இந்துக்களுக்கு பிரயோகமாவதுமான வேறெந்தச்

சட்டப்படியோ அவரால் வழிவகை செய்யப்படத்தக்கதாக (disposal) உள்ள எந்தச் சொத்தையும், உயில் மூலமாகவோ அல்லது வேறுவிதமான உயிலியற்று ஆவணங்கள் மூலமாகவோ வழிவகை செய்யலாம்." என பிரிவு 30 கூறுகிறது.

எனவே, முன்பிருந்த சட்டத்தின்படி ஒரு மிதாக்ஷரா பங்குரிமையர் தனக்கு அக்கூட்டுக் குடும்பச் சொத்திலுள்ள பற்றினை எவ்வகையிலும் யாருக்கு கொடுக்கவியலாது. அவர் இறந்து போனால், அவரது பங்குச் சொத்து மற்ற எஞ்சியுள்ள பங்குரிமையர்களுக்கு பொதுவாகச் சென்றடையும். ஆனால் மேற்படி பிரிவு 30–ஆனது அந்நிலையை நீக்கி, உயில் அல்லது வேறு உயிலியற்று ஆவணங்கள் மூலம், தனது சொத்தை யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்க ஒரு இந்துவுக்கு அதிகாரமளித்துள்ளது.

Surendra Pal v. Saraswati[1] – எனும் வழக்கில் மேற்படி பிரிவின்படி, ஒரு இந்து, கூட்டுக் குடும்ப சொத்தில் தனக்குள்ள பற்றினை, தான் இறந்த பிறகு மற்றவர்களை அடையுமாறு மட்டுமே வழிவகை செய்து வைக்க இயலும். தான் உயிருடன் உள்ள பொழுதே அச்சொத்தில் தனக்குள்ள பற்றினை வேறு எவருக்கும் எழுதி வைக்க இயலாது. எனவே மேற்படி பிரிவு 30 ஆனது உயிருடன் உள்ள பொழுது ஏற்படும் சொத்து மாற்றாக்கத்திற்கு பொருந்தாது, என மேற்படி வழக்கில் கூறப்பட்டது (Section 30 does not apply to dispostions inter vivos).

முடிவுரை:

இவ்வாறு பிரிவு 30, ஒரு புதிய முன்னேற்றமான மாற்றத்தை கொண்டு வந்துள்ளது. இதனால் ஒருவன் தனக்கிருக்கும் சொத்துரிமையை காப்பாற்றி, தான் விரும்பும் மற்றவர்களுக்கு தனக்குப்பின் சென்றடையும்படி கொடுக்க ஏதுவாகிறது. எனவே, "ஒரு இந்துவின் உயிலியற்றுத் தகுதி வரலாற்றில் இந்து இறங்குரிமைச் சட்டத்தின் 30–வது பிரிவு ஒரு புதிய பகுதியைத் துவக்குகிறது" என்பதற்கு மாற்றுக் கருத்து ஏதுமில்லை.

-o0o-

1. (1979) 2 SCC 600.

பின்னிணைப்புப் பட்டியல்
[Schedule]

வாரிசுகள்

முதல் வகுப்பு வாரிசுகள் (Class - I heirs)

(1) மகன்

(2) மகள்

(3) விதவை

(4) தாயார்

(5) முன்னதாக இறந்து விட்ட மகனின் மகன்

(6) முன்னதாக இறந்து விட்ட மகனின் மகள்

(7) முன்னதாக இறந்து விட்ட மகளின் மகன்

(8) முன்னதாக இறந்து விட்ட மகளின் மகள்

(9) முன்னதாக இறந்து விட்ட மகனின் விதவை

(10) முன்னதாக இறந்து விட்ட மகனுடைய முன்னதாக இறந்து விட்ட மகனின் மகன் (Son of a pre-deceased son of a pre-deceased son).

(11) முன்னதாக இறந்து விட்ட மகனுடைய முன்னதாக இறந்துவிட்ட மகனின் மகள் (Daughter of a pre-deceased son of a pre-deceased son).

(12) முன்னதாக இறந்து விட்ட மகனுடைய முன்னதாக இறந்துவிட்ட மகனின் விதவை (Window of a pre-deceased son of a pre-deceased son).

இரண்டாம் வகுப்பு வாரிசுகள் (Class - II heirs)

I. தந்தை

II. (1) மகனின் மகளின் மகன்
(2) மகனின் மகளின் மகள்
(3) சகோதரன்
(4) சகோதரி

III. (1) மகளின் மகனின் மகன்
(2) மகளின் மகனின் மகள்
(3) மகளின் மகளின் மகன்
(4) மகளின் மகளின் மகள்

IV. (1) சகோதரனின் மகன்
(2) சகோதரியின் மகன்
(3) சகோதரனின் மகள்
(4) சகோதரியின் மகள்

V. (1) தந்தையின் தந்தை
(2) தந்தையின் தாய்

VI (1) தந்தையின் விதவை
(2) சகோதரனின் சகோதரி

VII. (1) தந்தையின் சகோதரன்
(2) தந்தையின் சகோதரி
(2) தாயின் தாய்

XI. (1) தாயின் சகோதரன்
(2) தாயின் சகோதரி

விளக்கம்: இந்த பின்னிணைப்புப் பட்டியலில் சகோதரர் அல்லது சகோதரி எனும் குறிப்புகளில், தாய்வழி சகோதரர் அல்லது சகோதரி (brother or sister of uterine blood) எனும் குறிப்புகள் உள்ளடங்காது.

-oOo-

பகுதி - II

இசுலாமியர் சட்டம்

[Muslim Law]

- கொடை (அல்லது)
  ஹிபா
- உயில் (அல்லது)
  வசிய்யத்
- வக்பு
- சொத்து நிருவாகம்
- அண்டைச் சொத்தில்
  முற்படு விலை கொள் உரிமை
  (அல்லது) ஷுஃபா
- இசுலாமியர்களின் மரபுமுறை
  இறங்குரிமைச் சட்டம்
  - மரபுரிமை குறித்த பொது விதிகள்
  - ஹனபி சட்டத்தில் மரபுரிமை இறக்கம்
    (அல்லது)
    சுன்னீ சட்டத்தில் மரபுரிமை இறக்கம்
  - ஷியா சட்டத்தில் மரபுரிமை இறக்கம்

1 கொடை (அல்லது) ஹிபா [Gift (or) Hiba]

1. What are the essential requirements of a "Hiba" under the Mohammedan law? Under what circumstances can a gift by a Muslim be revoked? (முகம்மதிய சட்டத்தின் கீழ் 'ஹிபா' (கொடை)வின் அத்தியாவசியமான கூறுகள் யாவை? எந்த சூழ்நிலைகளில் ஒரு முகமதியர் அளித்த கொடையை இரத்து செய்ய முடியும்?)

(அல்லது)

What is 'Hiba'? What are the essentials of Hiba? When Hiba may be revoked? ('ஹிபா' என்றால் என்ன? ஹிபாவின் ஆக்கக் கூறுகள் யாவை? எப்போது ஹிபா மறுத்தளிக்கப்படலாம்?)

(அல்லது)

What are the essentials of a Hiba? What can be the subject of Hiba? (முசுலிம் கொடையின் (ஹிபா) முக்கிய விதிகள் யாவை? எதை கொடைப் பொருளாகக் கொடுக்கலாம்?)

(அல்லது)

Define 'Hiba'. Can a gift be revoked? If so under what circumstances? ('ஹிபா' வரையறு. கொடையை ரத்து செய்ய முடியுமா? அவ்வாறெனில் எச்சந்தர்ப்பங்களில் அப்படிச் செய்ய முடியும்?)

(அல்லது)

What are the essentials of a gift under Muslim Law? (முகமதிய சட்டத்தில் "கொடையின்" முக்கிய கூறுகள் யாவை?)

(அல்லது)

Hiba - Write short notes. (ஹிபா – சிறு குறிப்பு வரைக.)

'ஹிபா' அல்லது 'கொடை' - வரையறை:

இசுலாமிய மொழியில் 'ஹிபா' என்றால் 'கொடை' எனப் பொருள்படும். ஒருவர் ஒரு பொருளை மறுபயன் எதிர்பாராது வேறு ஒருவருக்கு வழங்க, அதை அவர் ஏற்றுக் கொண்டால், அதைக் 'கொடை' (Gift) என்று கூறலாம். இசுலாமியச் சட்டப்படி ஒரு பொருளையோ (இதில் சொத்துக்களும் உள்ளடங்கும்), அப்

பொருளின் அனுபவ உரிமையையோ ஒருவர் மற்றொருவருக்கு கொடுக்கலாம். பொருளையோ அல்லது சொத்தையோ ஒருவர் கொடையாக அளிப்பது **'ஹிபா' (Hiba)** என்றும், **அனுபவ உரிமையை** (சொத்தின் நலன்) **(Interest)** மட்டிலும் கொடையாக கொடுப்பது **'அரீ அத்' (Areeat)** என்றும் அழைக்கப்படுகிறது.

ஹிபாவின் இலக்கணப்படி, ஒருவன் தன்னுடைய சொத்தைப் பிரதிபலன் எதுவும் பெறாமல் அல்லது எதிர்பார்க்காமல் பிறருக்குக் கொடுப்பது 'ஹிபா' ஆகும். அங்ஙனம் கொடுத்தவுடன், அது அவரின் சொத்தாகி விடும்.

ஹிபாவின் ஆக்கக் கூறுகள்:

பின்வரும் நான்கு முக்கிய ஆக்கக் கூறுகளை பூர்த்தி செய்தவுடன் இசுலாமிய சட்டப்படி 'ஹிபா' நிறைவேற்றப்படுகிறது. அவை,–

(1) கொடுப்பவர், கொடை கொடுக்கும் தனது எண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும்.

(2) பெறுபவர் அதை ஏற்றுக் கொண்டதாக சம்மதம் அல்லது இசைவு தெரிவித்தல்.

(3) கொடை பெறுபவரிடமிருந்து மறுபயன் எதையும் பெறக் கூடாது.

(3) கொடை பெறுபவர் வசம் பொருள் உடனடியாக ஒப்படைக்கப்படல்.

கொடையாகக் கொடுக்கப்படும் சொத்து, அசையாச் சொத்தாக (immovable property) இருக்கும் பட்சத்தில், அதற்கென்று தக்க முத்திரைத் தாளில் (Stamp papers) ஆவணமாக எழுதப் பெற்று, கொடையளிப்பவர் அதில் இரண்டு சாட்சிகள் முன்னிலையில் கையெழுத்திட்டு இரண்டு சாட்சிகளும் அதில் சான்றுக் கையெழுத்திட்டு ஆவணத்தை பதிவு செய்ய வேண்டும். கொடைச் சொத்து, அசையும் சொத்தாக (movable) இருக்கும் சமயத்தில் அதைக் கொடை பெறுபவரிடம் உடனடியாக ஒப்படைப்பதன் (possession) மூலம், கொடையை நிவேற்றலாம். மேற்கண்ட மூன்று ஆக்கக் கூறுகளைத் தவிர பின்வரும் மூன்று முக்கிய நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அஃதாவது,–

1. கொடை கொடுப்பவர் தகுதி (Capacity of the Donor):

கொடை கொடுப்பவர் உரிமை வயது எய்தப் பெற்றவராயும், சித்தம் தெளிந்தவராயும் இருக்க வேண்டும். 18 வயதைப் பூர்த்தி செய்தவரே, உரிமை வயதை எய்தப் பெற்றவராகக் கருதப்பட வேண்டும். கொடுப்பவர், கொடுக்கும் பொருளுக்குச் சொத்துரிமை (ownership) உடையவராக இருக்க வேண்டும்.

2. கொடை ஏற்பவர் தகுதி (Capacity of the Donee):

கொடை ஏற்பவர் உரிமை வயது எய்தப் பெற்றவராய் இருக்க வேண்டும் என்பதோ, சித்தம் தெளிந்தவராய் இருக்க வேண்டும் என்பதோ அவசியம் இல்லை.

கொடை ஏற்பவர் இழப்பெதுவும் இன்றிப் பயனை பெறுதலால், எந்தக் கட்டுப்பாடும் அவர் மீது விதிக்கப்படவில்லை. ஆனால், கொடை ஏற்போர், சட்டப்படி சொத்தை ஏற்றுக் கொள்ளத் தகுதியுடைய ஒரு 'நபர்'–ஆக இருக்க வேண்டும். எனவே உண்மை நபரோ, புனைவு நபரோ (artificial person) கொடை ஏற்றுக் கொள்ளத் தகுதியுடையவராவர். ஏற்றுக் கொள்வோர் சார்பாக, பிறிதொருவரும் அதை ஏற்றுக் கொண்டதாக இசைவு தெரிவிக்கலாம்.

மேலும், நல்லெண்ணத்துடன் கொடை கொடுக்கப்பட வேண்டும். ஒருவன் தன்னுடைய கடன்காரர்களை ஏமாற்றுவதற்காக தன்னுடைய சொத்துக்களை மற்றொருவனுக்கு கொடையாக கொடுத்தால், அக்கொடை செல்லாது.

3. எதை எதை கொடைப் பொருளாகக் கொடுக்கலாம் (Subject Matter of 'Hiba'):

சட்டத்தின் மூலம் உரிமை கோரத்தக்க நிலைமையிலுள்ள பொருள் எதுவாயினும், அவற்றை கொடைப் பொருளாகக் கொடுக்கலாம். அசையும் பொருட்கள் (Movable property), அசையாப் பொருட்கள் (Immovable property) முதலானவைகளும் சட்ட உரிமை கோரத்தக்க பொருட்களே. ஆகவே, அவற்றையும் கொடைப் பொருளாகக் கொள்ளலாம். உருவநிலை பெறாத வாணிக நற்பெயரும் (Good will), வழக்குரிமைப் பொருளும் (Chose-in-action), வாணிபக் குறியும் (Trade Mark) கொடைப் பொருளாக அமையும்.

இந்துச் சட்டத்தில் உள்ளதைப் போன்று பரம்பரைச் சொத்து (Ancestral property) என்றோ அல்லது சுயசம்பாத்திய சொத்து (self - acquired property) என்றோ, இசுலாமிய சட்டத்தில் வேறுபாடு கிடையாது. ஆகவே ஒரு இசுலாமியர் தன்னுடைய வாரிசுகளுக்கு என்று எதையும் விட்டு செல்லாது, சொத்து முழுவதையும் முற்றிலும் ஒர் அன்னியனுக்கே வேண்டுமானாலும் கொடையளிக்க உரிமை பெற்றவனாவார். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் வாரிசுகள் கொடை அளிப்பதை எதிர்த்து நிற்க முடியாது.

கருங்கக்கூறின், (1) கொடைப் பொருள் கொடை கொடுக்கும் நேரத்தில் கொடுப்பவரிடம் அவரது நிலையான அனுபவத்தில் இருக்க வேண்டும். வருங்காலத்தில் தனக்கு வந்த சேரப்போகும் பொருளை, ஒருவன் கொடையாக கொடுக்க முடியாது. (2) கொடைப் பொருள் சட்டப்படி மதிப்புடையதாக இருக்க வேண்டும். உதாரணமாக அன்பும், பாசமும் கொடைப் பொருளாக அமையாது. எனினும் இவை கொடை கொடுப்பதற்கு முக்கிய காரணங்களாக அமையலாம்.

பின்வரும் சில சிறப்புப் பொருள்களையும் கொடைப் பொருளாக கொடுக்க முடியும் :

1. அரசாங்கக் கடன் பத்திரங்களைக் (Government Securities)

கொடைப் பொருளாகக் கொடுக்கலாம். அவற்றில் முடக்கப்பட்ட பணம் மூலப் பொருளாகவும் (Corpus), அதிலிருந்து கிடைக்கும் வட்டி வருவாயாகவும் அமைகிறது.

(2) குடியிருப்போர் அனுபவத்தில் இருக்கும் சொத்தை, அதன் சொந்தக் காரர் கொடைப் பொருளாக கொடுக்க முடியும்.

(3) காணிக்கைப் பொருள்களில் பங்கு பெறும் உரிமையைக் கொடையாகக் கொடுக்க முடியும்.

(4) பாகம் பிரிக்காத நிலங்களில் இருந்து வரும் வருமானத்திலுள்ள பங்கை (குடக்கூலி, குத்தகைப் பாட்டம் முதலியவற்றில் பங்குபெறும் உரிமையைக்) கொடைப் பொருளாகக் கொடுக்கலாம்.

(5) ஆண்டுப் பணமோ (Annuity), அவ்வப்போதைய வருமானமோ பொருட்பிணைப் பொறுப்பாக (Charge) நிலையியல் சொத்தின் மீது செலுத்தப்பட்டிருந்தால், அதைக் கொடைப் பொருளாகக் கொடுக்க முடியும்.

(6) அடைமான மீட்புரிமையைக் (Equity of redemption) கொடைப் பொருளாகக் கொடுக்கலாம்.

(7) கொடுத்த கடனைத் திரும்பப் பெறாது, கடன் பெற்றவருக்கே கொடையாகக் கொடுப்பது, ஹனபி சட்டப்படி செல்லுடைமையாகும். ஆனால் 'ஷியா'ச் சட்டப்படி செல்லுடைமையாகாது.

(8) வழக்குரிமைப் பொருள்களும் நுண்ணியல் பொருள் உரிமைகளும் (incorporal rights) கொடைப் பொருள்களாக அமையும்.

கொடையாகக் கொடுக்கப்படும் பொருள், கொடுப்பவரின் நேரடி உடைமையிலோ (Actual Possession) கொள்நிலை உடைமையிலோ (Constructive Possession) இருக்க வேண்டும். அத்துமீறிக் கவர்ந்து பொருள் வைத்திருப்பவர் (Tresspasser) அப்பொருளைக் கொடைப் பொருளாய் வழங்க முடியாது. ஏனெனில் அதில் அவருக்குச் சொத்துரிமை இன்மையே காரணம் ஆகும்.

கொடையை இரத்து செய்ய முடியுமா? (Revocation of Gift):

கொடை கொடுத்தவருக்கு அதை இரத்து செய்யும் உரிமை, இசுலாமிய சட்டப்படி உண்டு. கொடை கொடுக்கும் எண்ணத்தை கொடை பெறுபவருக்கு தெரியப்படுத்திவிட்டு, ஆனால், கொடைப் பொருளை அவரிடம் ஒப்படைக்காமல், கொடை கொடுப்பவரே வைத்திருக்கும் பட்சத்தில், அது முற்றுப் பெறாத

கொடையாகும். அச்சமயத்தில் கொடை கொடுப்பவர், அதனை இரத்து செய்யலாம். இவ்வாறு செய்ய அவருக்கு சட்டப்படி உரிமை உண்டு. அப்படியே, கொடைப் பொருளை கொடை கொடுப்பவர், கொடை பெறுபவரிடம் ஒப்படைப்பு செய்து விட்டால் (அதாவது முற்றுப் பெற்ற கொடையினை) அதனையும் சில விதிமுறை களுக்குட்பட்டு, அவர் இரத்து செய்யலாம். ஆயினும் சில முற்றுப் பெற்ற கொடைகளை இரத்து செய்யும் உரிமை, அக்கொடை கொடுத்தவருக்கே கிடையாது. அவையாவன:

(1) கொடை அளித்தவர் இறந்து போனால், அதை இரத்து செய்யும் உரிமை அவர் வாரிசுகளுக்கு கிடையாது.

(2) கொடை பெற்றவர் இறந்தாலும் அதை அவரது வாரிசுகள் இரத்து செய்ய முடியாது.

(3) கொடை பெற்றவருக்கும், கொடுத்தவருக்கும் இடையே திருமண உறவு கொள்ள தடையான இரத்த தொடர்பிருந்தால், அக்கொடையினை இரத்து செய்ய முடியாது.

(4) கணவன் மனைவியரிடையே நிகழ்வுற்ற கொடையை இரத்து செய்ய முடியாது.

(5) கொடை பெற்றவர், அதை பராதீனம் செய்தபின் கொடையை இரத்து செய்ய முடியாது.

(6) கொடுக்கப்பட்ட கொடைப் பொருள் தொலைந்து விட்டாலோ, அழிந்து விட்டாலோ அல்லது அடையாளம் கண்டு கொள்ள முடியாதபடி உருமாற்றம் அடைந்திருந்தாலோ, கொடை கொடுத்தவர் அக்கொடையினை இரத்து செய்ய முடியாது.

(7) எக்காரணத்தைக் கொண்டும், கொடுக்கப்பட்ட கொடைப் பொருளின் விலைமதிப்பு அதிகரித்தால், அதனை இரத்து செய்ய முடியாது.

(8) இசுலாமியச் சட்டத்தில் 'சதக்கா' என்று சொல்லப்படுகின்ற மற்றொரு வகைக் கொடையினை ஒருவர் கொடுத்திருந்தால், அதனை இரத்து செய்ய இயலாது.

(9) 'ஹிபா–பில்–இவாசு' என்று இசுலாமியச் சட்டத்தில் சொல்லப் பட்டிருக்கிற கொடையை ஒருவர் கொடுத்தால், அவரால் அதனை இரத்து செய்ய இயலாது.

மேற்கூறிய ஒன்பது காரணங்களின் அடிப்படையிலும் முற்றுப்பெற்ற ஒரு கொடையை இரத்து செய்ய முடியாது. இந்த ஒன்பது காரணங்களுக்கும் உட்படாத முற்றுப்பெற்ற கொடையைக் கொடுத்தவர் இரத்து செய்ய முடியும். அப்படி இரத்து

செய்தால் நீதிமன்ற ஆணை பெற்று அந்த இரத்து செய்தலை உறுதி செய்து கொள்ள வேண்டும். நீதிமன்றம் மேற்கூறிய ஒன்பது காரணங்களின் அடிப்படையிலும் இரத்து செய்தலுக்கான தீர்ப்பாணையை பிறப்பிக்காது.

2. Explain the various kinds of 'Hiba' under Muslim Law. **(இசுலாமியச் சட்டத்தின்படியிலான கொடையின் வகைகளை விளக்குக.)**

(அல்லது)

State the essentials of "Hiba" and its various kinds under Islamic law. **(இசுலாமியச் சட்டத்தின் "ஹிபா"வின் முக்கியக் கூறுகள் மற்றும் பல்வேறு வகைகளை எடுத்துரைக்க.)**

(அல்லது)

Distinguish between Hiba -bil- iwaz and Hiba-ba-shart-ul-iwaz. **(பயன் பெறும் கொடையையும் பயன் விரும்பும் கொடையையும் வேறுபடுத்திக் காட்டுக.)**

1. சதக்கா அல்லது ஈகை (Sadakha):

அன்பின் அடிப்படையில் கைம்மாறு கருதாது ஒருவன் மற்றொருவனுக்கு கொடையளிப்பது 'ஹிபா' என்று கண்டோம். ஆண்டவன் அருள் கிடைக்கும் என்று எதிர்நோக்கி, ஏழை எளியவர்பால் இரக்கம் கொண்டு, ஒருவன் தன் பொருளை அவர்களுக்கு ஈவது 'சதக்கா' எனப்படும். எனவே 'சதக்கா'–வும் கொடை வகைகளுள் ஒன்று என்று கருதப்படுகிறது. 'ஹிபா' என்னும் கொடையை அளிக்கும்போது, கொடுப்பவருக்கு எந்த நோக்கமும் கிடையாது. ஆனால் 'சதக்கா' என்னும் கொடையை அளிப்பவர், பெறுபவரிடமிருந்து எதையும் எதிர்பார்க்கவில்லை என்றாலும், அவருடைய நோக்கம் ஆண்டவனது அருளைப் பெறுவதாகும். எனவே, 'சதக்கா' கொடுப்பவருக்கு அந்தரங்கத்தில் ஒரு நோக்கம் இருக்கிறது. 'சதக்கா' என்னும் கொடையைக் கொடுப்பதிலும், (1) உடைமை ஒப்படைப்பு உடன் நிகழ வேண்டும் (2) மறுபயன் எதிர்பாராது கொடுக்கப்பட வேண்டும். இவை இரண்டும் 'ஹிபா'வின் இலக்கணங்களை ஒத்திருக்கின்றன. ஆனால் ஹிபாவின் இலக்கணத்திற்கு எதிராக:

(1) 'சதக்கா' ஒரு நோக்கம் கருதிக் கொடுக்கப்படுகிறது.

(2) 'சதக்கா' என்னும் கொடை முற்றுப் பெற்றுவிட்டால், அதை எக் காரணத்தைக் கொண்டும் இரத்து செய்யமுடியாது.

2. ஹிபா-பில்-இவாசு (Hiba-bil-iwaz) அல்லது பயன்பெறு கொடை:

கொடை பெற்றவர் தாம் பெற்ற கொடைக்குப் பதிலாகக் கொடை

கொடுத்தவருக்கு கொடை கொடுத்தால், அதை **'ஹிபா–பில்–இவாசு'** என்றும் **'கொடைக்கு கொடை'** அல்லது **'பயன்பெறு கொடை'** என்றும் சொல்லலாம். இசுலாமியச் சட்டப்படி இதுவும் ஒரு வகைக் கொடையே. இதில், ஒரே கொடையில் இரு கொடைகள் உள்ளடங்கி இருக்கின்றன. கொடை கொடுத்தவரும் ஏற்றவரும், மாறிமாறிக் கொடை ஏற்றவரும் கொடுத்துவருமாக செயல்படுவர். 'ஹிபா'வின் அடிப்படைத் தத்துவமான 'உடைமை ஒப்படைப்பு' இரு கொடைகளிலும் முறையே நிகழ வேண்டும். இல்லையென்றால் அவை செல்லுடைமை ஆகா. ஹிபாவிற்கும் ஹிபா–பில்–இவாசுக்கும் உள்ள ஒரே வேற்றுமை என்னவென்றால், பதில் கொடை நிகழ்வுற்ற பின், இரண்டு கொடைகளையும் இரத்து செய்ய இருவராலும் முடியாது.

இந்தியாவில் 'ஹிபா–பில்–இவாசு': தூய இசுலாமியச் சட்ட அடிப் படையிலான 'ஹிபா–பில்–இவாசு' இந்தியாவில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இந்தியாவில் ஹிபா–பில்–இவாசு என்பது இரு கொடையன்று; ஆனால், ஒரே கொடையில் உள்ள தொடர்செயல் என்று கருதப்படுகிறது. அதாவது, முதற் கொடையும், பதில் கொடையும் ஒரே நிகழ்ச்சியின் இரு அங்கங்களென்றே கருதப் படுகின்றன. எனவே, இதைச் சொத்துப் பரிமாற்றம் (Exchange) என்றோ, சொத்து விற்பனை என்றோதான் கருத வேண்டும். கொடை என்றழைப்பது பிறழ் பெயராகும் என்று கருதப்படுகிறது.

3. 'ஹிபா-பெ-ஷர்த்துல்-இவாசு' அல்லது பயனை விரும்பும் கொடை (Hiba-ba-shart-ul-iwaz):

கொடை கொடுப்பவர் எதிர் கொடை வேண்டி நின்றால், அதை **'ஹிபா–பெ–ஷர்த்துல்–இவாசு'** அல்லது **'பயனை விரும்பும் கொடை'** என்று கூறலாம். இதிலும் 'உடைமை ஒப்படைப்பு' உடனடியாக நிகழ வேண்டும். கொடை கொடுத்தவர், தாம் விரும்பி வேண்டி நிற்கும் எதிர்கொடை வழங்கப்பெற்று, முற்றுப் பெறுவது வரையில், அவர் தாம் கொடுத்த மேற்படி கொடையை இரத்து செய்ய முடியும். விரும்பி எதிர்பார்க்கப்பட்ட எதிர்க் கொடை கொடுக்கப்பட்ட பின்னர், இரண்டு கொடைகளையும் இரத்து செய்ய முடியாது.

4. அரீ அத் அல்லது கொடை உரிமம் (Areeat):

சொத்தின் மூலப் பொருளைக் கொடையாகக் கொடுக்காமல், அதன் பயனை (நலனை) மட்டிலும் கொடையாகக் கொடுப்பதை **'அரீ அத்'** அல்லது **'கொடை உரிமம்'** என்று அழைக்கலாம். கொடையளிப்பவர் மூலப் பொருளின் பயனை மட்டிலும் கொடையளிப்பதால், பயன்படுத்தும் கால வரையறையைக் குறிப்பிடவோ, நீட்டிக் கொடுக்கவோ அவர் உரிமம் உடையவராயிருக்கிறார். மூலப் பொருளின் சொத்துரிமை கொடுத்தவரிடமே இருக்க, அதனுடைய பயன் உரிமை மட்டிலும், குறிப்பிடப்பட்ட காலத்திற்கு பெற்றவரிடம் இருக்கும். கொடை பெற்றவர் இறந்த பின்னர் அவருடைய வாரிசுகளுக்கு அதைக் கோரும் உரிமை கிடையாது.

இங்கு குறிப்பிடப்பட்ட காலத்திற்கு ஒரு சொத்தின் பயனை அனுபவிக்க 'உரிமம்' வழங்கப் பெற்றிருப்பதே 'அரீ அத்' (Licence) என்னும் கொடையாகும். இதுவும் இசுலாமியச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொடை வகைகளில் ஒன்றாகும்.

3. Life Estate - Write short notes. (ஆயுள் சொத்துரிமைக் கொடை – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Amree or Umree - Write short notes. (அம்ரீ அல்லது உம்ரீ – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

"The creation of a life estate does not seem to be consistent with Mohammedan usage"- Comment. ("ஆயுள் சொத்துரிமை உருவாக்குவது, முகம்மதிய வழக்காற்றுடன் பொருந்தி வருவதாகத் தோன்றவில்லை"–விமர்சிக்க.)

(அல்லது)

Can "Life estate" be the subject matter of a gift under Mohammedan Law. Refer to leading cases. (முகம்மதியர் சட்டத்தின் கீழ் 'ஆயுள் சொத்து' கொடை குறித்த விதிகளுக்குட்பட்டதா? பிரபலமான வழக்குகளை எடுத்துக் காட்டுக.)

முன்னுரை:

ஆங்கில சட்டப்படியான ஆயுள் சொத்துரிமைக்கும், இசுலாமிய சட்டப் படியான 'அம்ரீ' அல்லது 'உம்ரீ'–க்கும் இடையே சில முரண்பாடான கருத்துகள் நிலவுகின்றன. ஆங்கில சட்டப்படி ஆயுள் சொத்துரிமையை உருவாக்குவது என்பது இசுலாமிய வழக்காற்றுடன் பொருத்தி வருவதாகத் தோன்றவில்லை என்ற கூற்று உண்மைதான். சற்று விரிவாக வருமாறு.

ஆயுள் சொத்துரிமை (அல்லது) அம்ரீ (அல்லது) உம்ரீ:

இசுலாமிய சட்டப்படி, மூலப்பொருளையோ, அதனின்று பெறும் பயனையோ கொடையாகக் கொடுக்கலாம். இவ்வாறு கொடுக்கும் பொழுது அது நிபந்தனையற்றதாக இருக்க வேண்டும். ஒரு சொத்தினை கொடை பெறுபவர் தனது ஆயுள் உள்ளவரை மட்டும் அனுபவிக்கலாம் என்றும், அதை அவர் வேறு பாராதீனம் எதையும் செய்ய இயலாது என்றும், அவரது ஆயுளுக்குப் பிறகு, அச்சொத்து வேறு எவருக்காவது செல்லக் கூடியது என்றும் நிபந்தனை விதித்து அச்சொத்து கொடையாக வழங்கப்பட்டால், அது அம்ரீ அல்லது உம்ரீ எனப்

படுகிறது. ஆனால் தூய இசுலாமிய சட்டப்படி நிபந்தனைகளுடன் அளிக்கப்படும் கொடை செல்லாது.

ஹனபி கூறும் கோட்பாடு: இசுலாமியர்களின் 'ஹனபி' பிரிவினரின் கோட்பாட்டின்படி, ஒரு சொத்தினை ஆயுள் முழுவதும் முழுவதும் அனுபவிக்கலாம் என்று அதில் ஆயுள் சொத்துரிமையை மட்டும் கொடையாகக் கொடுத்து, கொடை பெறுபவரின் ஆயுள் காலத்திற்குப் பிறகு அச்சொத்தின் முழுச் சொத்துரிமையும் வேறு எவருக்காவது போய்ச் சேரும் என்று கொடை அளித்தவர் நிபந்தனை விதித்திருந்தால், அந்நிபந்தனை செல்லாததாகி, ஆயுள் சொத்துரிமை பெற்றவர் முழுச் சொத்துரிமையும் பெற்றவராகிவிடுவார். இங்கு 'வேறு எவருக்காவது' எனும் சொல்லிற்கு இடமே இல்லை.

ஆங்கிலச் சட்டப்படி: ஆயுள் சொத்துரிமைக் கொடையை ஆங்கிலச் சட்டம் அங்கீகரிக்கிறது. இச்சட்டத்தின்படி, ஒரு சொத்தை, ஆயுள் உள்ளவரை அனுபவிக்கலாம் என்று அச்சொத்தின் ஆயுள் சொத்துரிமையை மட்டும் ஒருவருக்குக் கொடையாகக் கொடுத்து, அக்கொடையைப் பெற்றவர் இறந்த பின்னர், எஞ்சுரிமையாக அச்சொத்தின் முழுச் சொத்துரிமையையும் வேறு எவருக்காவது சென்று சேரும் வண்ணம் கொடை கொடுத்தவர் நிபந்தனை விதித்திருந்தால், அது செல்லத்தக்கதே. அவர் இறந்த பின்னர், அச்சொத்தின் முழுச் சொத்துரிமையும் அதன் அனுபவ உரிமையும் சேர்ந்து எஞ்சுரிமை பெற்றவருக்கோ, அவருடைய வாரிசுகளுக்கோ போய்ச்சேரும். ஆனால் தூய இசுலாம் சட்டப்படியான அம்ரீ அல்லது உம்ரீ இதற்கு முரணானது. எனவே, பொதுவாக ஆங்கில சட்ட அடிப்படையில் உருவாக்கப்பட்ட இசுலாமியர்களின் கொடை ஆவணங்களை மிகவும் எச்சரிக்கையோடு பொருள் காண வேண்டும். ஏனெனில், அத்தகு ஆங்கில அடிப்படைத் தத்துவ ஆயுள் சொத்துரிமையும், முழுச் சொத்துரிமையும் இசுலாமியச் சட்டத் தத்துவங்களுக்கு ஒத்து வராததாகும். இதை பின்வரும் ஒரு சுவையான வழக்கு விளக்கும்.

முக்கிய வழக்கு:

Amjad Ali Khan v. Ashraf Khan[1] – ஹனபி இசுலாம் ஒருவர் தனது முழுச் சொத்தையும் தம்முடைய மனைவிக்குக் கொடையாகக் கொடுத்து, அதை 1/3 என்றும் 2/3 என்றும் இரு கூறுகளாகப் பிரித்து, அவற்றுடன் ஒரு நிபந்தனையும் விதித்தார். அதன்படி 1/3 பாகத்தைப் பொறுத்தமட்டில் அவள் விரும்பியபடி பராதீனம் செய்யும் உரிமை வழங்கப்பட்டிருந்தது. ஆனால் 2/3 பாகத்தைப் பொறுத்தமட்டில், அவள் அதைப் பராதீனம் செய்யக்கூடாது என்று நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. அவளுடைய வாழ்நாளுக்குப் பிறகு, எஞ்சியிருக்கும் சொத்து கொடையளித் தவரின் சகோதரருக்கு எஞ்சுரிமையாக முழுச் சொத்துரிமையுடன் போய்ச் சேர வேண்டும் என்று அக்கொடை ஆவணத்தில் கூறப்பட்டிருந்தது.

1. 31 Bom. L.R. 809

மேற்கூறிய ஆவணத்தின் சொற்றொடரிலிருந்து இருவிதமாகப் பொருள் கொள்ள முடியும். கொடையளித்த முழுச் சொத்திலும் ஆயுள் சொத்துரிமை கொடுத்து, 1/3 பாகத்தைப் பொறுத்தமட்டில் அதைப் பராதீனம் செய்யும் உரிமையைக் கூடுதலாக வழங்கியிருக்கிறார், என்பது ஒரு பொருள். மற்றொரு வகையில் பார்த்தால், கொடை அளிக்கப்பட்ட முழுச் சொத்திலும் அவர் மனைவிக்கு முழுச் சொத்துரிமையைக் கொடுத்து, அதில் 2/3 பாகத்தைப் பொறுத்தமட்டில் பராதீனம் செய்யும் உரிமையைப் பறித்துவிட்டார் என்று பொருள் கொள்ளலாம். இரண்டாவது கருத்துப்படி பார்க்கும்பொழுது, கொடையளித்தவர் முழுச் சொத்துரிமையையும் கொடுத்துக் கொடை பூர்த்தி பெறாவண்ணம் நிபந்தனை விதித்திருப்பதால், அதை நிபந்தனை விதிக்கப்படாத கொடையாகக் கருதி மனைவி முழுச் சொத்தையும் எடுத்துக் கொள்ள வேண்டும்; எஞ்சுரிமை பெற்ற சகோதரருக்கு எதுவும் கிடைக்காது.

ஆனால், முதல் கருத்துப்படி பார்த்தால் கணவன் மனைவிக்குக் கொடுத்த முழுச் சொத்தில் ஆயுள் சொத்துரிமையையும், அதில் 1/2 பாகத்தைப் பொறுத்த மட்டில், கூடுதலாகப் பராதீனம் செய்யும் உரிமையையும் வழங்கியிருப்பதாக கொள்ள வேண்டும். இப்படி பொருள் கொள்வதையே பிரிவி கவுன்சில் ஏற்றுக் கொண்டது. எனவே, நிபந்தனை, ஆயுள் சொத்துரிமை சம்பந்தப்பட்டதே தவிர, முழுச் சொத்துரிமை சம்பந்தப்பட்டதாகாது. ஆயுள் சொத்துரியையைக் (Life Estate) கொடையாகக் கொடுத்து, அதில் நிபந்தனை விதித்திருந்தால், நிபந்தனையும் செல்லும்; கொடையும் செல்லும். மாறாக, முழுச் சொத்துரிமையை வழங்கி, அதனுடன் முரணான நிபந்தனை விதித்திருந்தால், நிபந்தனை செல்லாது; கொடை செல்லும் என்று பிரிவி கவுன்சில் தீர்ப்பு வழங்கியது.

4. Define Mushaa and explain when the gift of Mushaa is valid. State the exceptions to the rule regarding Mushaa. (மூசா என்பதை வரையறு. எப்பொழுது மூசாவைக் கொடையாக கொடுத்தால் செல்லும்? மூசா தொடர்பாக விதிமுறைகளில் உள்ள விதிவிலக்குகளைக் குறிப்பிடுக.)

(அல்லது)

Doctrine of Mushaa - Write short Notes. (மூசா கோட்பாடு – சிறு குறிப்பு வரைக.)

'மூசா' – வரையறை :

சொத்தில் பாகம் பிரிக்கப்படாத பங்கு 'மூசா' (Mushaa) என்று சொல்லப்படுகிறது. பாகம் பிரியாத பங்கு அல்லது 'மூசா' (Undivided Share) அசையாச் சொத்திலோ அல்லது அசையும் சொத்திலோ இருக்கலாம். பாகம் பிரிக்க இயலக்கூடிய பொருளில், பாகம் பிரியாத தன்னுடைய பங்கை ஒரு இசுலாமியர் கொடையளித்தரல், அது செல்லுடைமையாகாது. காரணம் என்னவெனில்,

பிரிக்கப்படாமல் கொடுக்கப்படும் பங்கு எது என்பதில் சச்சரவும், பிணக்கும், குழப்பமும், தெளிவின்மையும் ஏற்பட இடமிருப்பதே ஆகும்.

எடுத்துகாட்டாக, ஒரு ஏக்கர் நிலத்தில் 1/3 பாகம் A–க்குச் சேர வேண்டும். அவர் அப்பங்கை, அந்த ஒரு ஏக்கர் நிலப்பரப்பிலிருந்து பிரித்து எடுக்காமல் அப்படியே B–க்கு கொடையளிக்கிறார். அவர் இறந்து போனால், ஒரு ஏக்கரில் உள்ள எந்தப் பங்கை அல்லது பகுதியை அவர் கொடையளித்தார், என்பது எவருக்குமே தெரியாமல் போகிறது. அதுமட்டுமன்று; கொடை பெற்றவருக்கும், இறந்தவரின் சொத்துரிமை பெற்றவர்களுக்கும் இடையே பிணக்கு ஏற்படவும் காரணமாக இருக்கிறது. கொடுத்தவருக்கு ஒரு ஏக்கரில் மூன்றில் ஒரு பங்கு என்பது வடக்கில் விழுகிறதா, தெற்கில் விழுகிறதா, அல்லது நடுவில் வருமா என்பன போன்ற அய்யப்பாடுகளும் கிளம்பி விடுகின்றன. எனவே தான், பிரிக்கக்கூடிய சொத்தாயிருந்தால், முதலில் அதைப் பிரித்து, கொடை பெற்றவருக்கு உடைமை ஒப்படைப்புச் செய்க என்கிறது இசுலாம் சட்டம். மேலும், கொடை முற்றுப் பெற வேண்டுமானால் உடைமை ஒப்படைப்பு உடனடியாக நிகழ வேண்டுமல்லவா? பாகம் பிரிக்கப்படாத பங்கைக் கொடையாக அளித்து, அதனை உடைமை ஒப்படைப்புச் செய்வது என்பது ஒத்துவராததாகையாலும், கொடை பெற்றவருக்குத் தாம் பெற்ற கொடைப் பொருள் எது என்று தெரியாமற் போவதாலும், மேலும் மேலும் குழப்பம் விளையக் காரணமாயிருக்கிறது. இந்தக் காரணங்களைக் கருத்திற்கொண்டே **"பாகம் பிரிக்கப்படாத பங்கை ஒருவன் கொடையாக அளிப்பதை இசுலாமியச் சட்டம் அனுமதிக்கவில்லை".**

எப்பொழுது மூசாவைக் கொடையாக கொடுத்தால் செல்லும்?

'பாகம் பிரியாத பங்கைக் கொடையளிக்கக் கூடாது' எனும் மூசா தத்துவத்தை இன்றைய சமுதாயம் எல்லா விஷயங்களிலும் பின்பற்றுவதில்லை. தற்பொழுது இத்தத்துவம் ஓரளவு தளர்த்தப்பட்டுள்ளது. அதாவது கொடையாகக் கொடுக்கப்படும் சொத்து பிரிவுபடக் கூடியதாக இருக்க வேண்டும். அவ்வாறு பிரிப்பதன் மூலம் சொத்திற்கு நஷ்டமோ, சேதமோ ஏற்படக்கூடாது. மேலும் எக்குழப்பமும் விளையக்கூடாது. இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் 'மூசா' தத்துவத்தை சற்றே தளர்த்தி பயன்படுத்தலாம். அக்கொடை செல்லுபடியாகும். இதற்கு எடுத்துகாட்டாக பின்வரும் இரண்டு நிகழ்வுகளைக் காண்போம்.

(1) A என்பவர் தமது சொத்தில் பாதியை B-க்கும், மறு பாதியை C- க்கும் கொடுக்கிறார் எனக் கொள்வோம். இங்கு தனது முழுச் சொத்தையும் A இழக்கிறார். இதில் அய்யப்பாடு ஏதுமில்லை. ஆனால் B-க்கும், C-க்கும் இடையே எந்தப் பாதியை எடுத்துக் கொள்வது என்ற குழப்பம் உள்ளது. எனினும் A- தமது முழுச் சொத்தையும் B,C இருவருக்கும் உடைமை ஒப்படைப்புச் செய்ததால், 'மூசா' தத்துவத்தால் இக்கொடை பாதிக்கப்படாது.

(2) A-யும், B-யும் சேர்ந்து C-க்கு ஒரு சொத்தைக் கொடையாகக் கொடுக்கிறார்கள். இங்கு பிரிவினை போன்ற குழப்பங்கள் ஏதுமில்லை. எனவே இதுவும் 'மூசா' தத்துவத்தில் பாதிக்கப்படாது.

அதாவது ஒரு சொத்தை இரண்டுக்கு மேற்பட்டவர்களுக்குக் கொடை அளிக்கும் பொழுது, சொத்துப் பிரிக்கப்படக்கூடியதேயாயினும், அவரவர் பங்கைப் பிரித்துக் கொடுக்காமல் எல்லோர்க்கும் சொத்து முழுமையாகக் கொடுத்தாலும், கொடை கொடுத்தவர் முழுமையாக உடைமை ஒப்படைப்புச் செய்திருந்தால், பாகம் பிரிக்கப்படாத பங்குகளாயிருப்பினும், அது செல்லுடைமையாகும். முன்னர் இதில் மாறுபட்ட கருத்து நிலவியபோதிலும், கொடை பெற்றவர்கள் அவரவர் பங்கைப் பிரித்து எடுத்துக் கொண்டால், அது செல்லுடைமையாகும் என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது.

ஆனால், பாகம் பிரிப்பதில் குழப்பம் ஏற்படலாம் எனக் கூடிய சொத்தினை கொடையாகக் கொடுத்தால். அது மூசா தத்துவத்தின்படி செல்லுடைமையாகாது. இதற்கு பின்வரும் ஒரு எடுத்துக்காட்டைக் காணலாம்.

(உ.ம்) A என்பவர் தமது சொத்தில் 1/3 பாகத்தை B–என்பவருக்குக் கொடையாகக் கொடுத்தால் A–ன் 2/3 பாகமும், B- ன் பாகமும் பாகப்பிரிவினை ஆகாத வரையில் எவை என்று தெரியாமல், அவை இறுதியில் குழப்பத்தை விளைவிக்கக்கூடும். எனவே, 'மூசா' தத்துவத்தின் அடிப்படையில் பாகப் பிரிவினையாகாத வரையில் கொடை செல்லுடைமையாகாது.

மூசா தொடர்பான விதிமுறைகளில் உள்ள விதிவிலக்குகள்:

கீழே குறிப்பிடப்பட்டவைகளுக்கு 'மூசா' தத்துவத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பதால், பாகம் பிரிக்கப்படாத நிலையில் அவை கொடையாக அளிக்கப்பட்டிருப்பினும், அக்கொடை செல்லுடைமையாகும். அவையாவன,–

(அ) பிரிக்க முடியாத சொத்தில் பாகம் பிரியாத பங்காயிருப்பினும் அது மூசா தத்துவத்திலிருந்து விலக்குப் பெறுகிறது. (எ.டு) கொடைச் சொத்தையும் அண்டைச் சொத்தையும் பிரிக்கும் ஒரே மாடிப்படி.

(ஆ) வாரிசுகளிடையே, ஒருவர் மற்றொருவருக்குப் பாகம் பிரியாத பங்கைக் கொடையளித்தால் 'முசா' தத்துவம் பொருந்தாது.

(இ) நிறுவனத்தின் பங்குகளையோ, அடுக்குமாடிக் கட்டிடங்களிலிருந்து வரும் வருமானத்தின் பங்கையோ, பாகம் பிரிவினையாகாத பங்குகளாகக் கொடையளித்தால், அது செல்லும்.

(ஈ) எஸ்டேட் அல்லது ஜமீன்தாரி, தாலுகா ஆகியவற்றின் பாகம் பிரிவுறாத பங்கைக் கொடையாகக் கொடுத்தால், அது 'மூசா' தத்துவத்தால் பாதிக்கப் படாது. காரணம் இதில் கொடை என்பது அந்த நிலங்களின் வருமானத்தில் உள்ள உரிமையில் பங்கு பெறுவதைத் தவிர வேறொன்றுமில்லை.

2 உயில் (அல்லது) வசிய்யத் [Will (or) Vassiyath]

1. Explain the essentials of a valid will under Muslim Law. (முசுலிம் சட்டத்தில் செல்லுபடியாகும் உயிலுக்கான தேவைகளை விளக்குக.)

(அல்லது)

Describe the testamentary powers of a Mohammedan. (முகமதியர் ஒருவரின் உயில் வழிக் கொடை அளிக்கும் சட்டத்திறனை விளக்குக.)

(அல்லது)

Discuss fully, the law relating to making of wills under Muslim personal law. (முகமதிய சட்டத்தின் கீழ் உயில்கள் செய்வது குறித்த சட்ட விதிகளை முழுவதும் விவாதிக்க.)

(அல்லது)

"The power of a Mohanmmedan to dispose his property by will is limited in two ways" -Discuss. ("ஒரு முசுலிம் தன்னுடைய சொத்தை உயில் எழுதி வைக்கும் அதிகாரம் இரண்டு வழிகளில் கட்டுப் படுத்தப்பட்டு உள்ளது" – விவாதிக்க.)

(அல்லது)

"A Mohammedan testator has not an unlimited power of dispostion by will" - Comment. ("உயில் மூலம் ஒரு முகம்மதியர் விருப்பாவணம் செய்வதற்கு வரம்பற்ற சொத்து அளிக்கும் உரிமை கிடையாது" – விளக்குக).

(அல்லது)

Explain the modes in which a Muslim will may be revoked. (ஒரு முசுலிம் உயிலை இரத்து செய்வதற்கான முறைகளை விளக்குக.)

இசுலாமியச் சட்டப்படி 'உயில்' – விளக்கம் :

'உயில்' என்பது இசுலாமியச் சட்டத்தில் 'வசிய்யத்' (Vassiyath) என அழைக்கப்படுகிறது. அதாவது ஒரு ஆவணத்தின் வாயிலாக, ஒருவன் தான்

இறந்த பிறகு தன்னுடைய சொத்தைப் பராதீனம் செய்யும் முறையை வெளிப் படுத்துவது 'உயில்' ஆகும். இது, இயல்பாகவே மாற்றக்கூடியதும், கூட்டிக் குறைக்க வல்லதும், இரத்து செய்யக்கூடியதும் ஆகும். உயில் பூர்த்தியாக பின்வரும் இரண்டு முக்கிய அம்சங்கள் தேவை. அவை,

(1) உயில் வழிக் கொடுப்பவர் தமது கொடுக்கும் எண்ணத்தையும் கருத்தையும் தெள்ளத்தெளிய வெளிப்படுத்தி இருக்க வேண்டும்.

(2) கொடுக்கும் நிகழ்ச்சி, தம்முடைய வாழ்நாளிற்குப் பிறகு நடைபெற வேண்டும் என்றும், உயில் வழிக் கொடுப்பவர் வெளிப்படுத்தி இருக்க வேண்டும்.

உயிலுக்கும் கொடைக்குமுள்ள வேறுபாடு:

உயிலின் மேற்படி இலக்கணப்படி, உயில் எழுதி வைப்பவர் இறந்த பிறகே உயில் வழி கெர்டுக்கும் சொத்தின் உரிமையும், உடமையும், உயில்வழி பெறுபவருக்கு சேர்ந்தடைகிறது. ஆனால் கொடையில் கொடை கொடுப்பவர் இருக்கும் பொழுதே கொடைப் பொருளின் உரிமையும், உடமையும் கொடை பெறுபவருக்கு மாறிவிடுகிறது. கொடுப்பவர் கொடுத்தது கொடையா, உயில்வழிச் சொத்தா எனும் அய்யம் எழும்பொழுது, கொடுத்தவரால் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் எண்ணத்தையும் கருத்தையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அவருடைய எண்ணம் சொத்துக்களை உடனடி உடைமை ஒப்படைப்புச் செய்வதே எனக் கண்டால், அது கொடையாகும். மாறாக, உடைமை ஒப்படைப்பு எதிர்காலத்தில், சொத்து கொடுத்தவர் இறந்த பிறகு நிகழ்வுற வேண்டிய ஒன்று என்று கண்டால், அஃது உயிலாகும். எனவே, உயிலைப் பொறுத்தமட்டில் உடைமை ஒப்படைப்பு (Delivery of possession) உயில் அளித்தவர் இறந்த பின்னரே நிகழ்வுறும்.

செல்லுபடியாக்கும் உயிலுக்கான தேவைகள்:

இசுலாமியச் சட்டப்படி, உயில் எழுத்து மூலமாக அல்லது வாய்மொழியாக இருக்கலாம். குறிப்பிட்டுச் சொல்லத்தக்க சம்பிரதாயம் எதுவும் இன்றி ஒரு இசுலாமியர் உயில் எழுதி வைக்க முடியும். இந்தியாவில் உள்ள இசுலாமியர்கள் எழுதி வைக்கும் உயில் இந்திய இறங்குரிமைச் சட்டத்தின் விதிமுறைகளுக்கு (Provisions of Indian Succession Act) உட்பட்டிருக்க வேண்டிய அவசியமில்லை. எனவே இசுலாமியச் சட்ட அடிப்படையில் உயில் எழுதி வைக்க இசுலாமியர்களுக்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது.

இசுலாமியச் சட்டப்படி, உயில் அளிப்பவர் தம்முடைய எண்ணத்தைத் திட்டவட்டமாக வெளிப்படுத்தியிருந்தால், அதை 'உயில்' எனக் கொள்ளலாம். உயில் எழுதி வைக்கப்பட்டிருந்தால், அந்த ஆவணத்தில் உயிலளித்தோரின் கையொப்பம் இருக்க வேண்டும் என்கின்ற அவசியம் இல்லை. அவர் கையெழுத்திட்டு இருந்தாலும், அதை சாட்சிகள் சான்றுக் கையெழுத்திட்டு உறுதி செய்ய வேண்டும் எனும் அவசியம் இல்லை.

இசுலாமியர் ஒருவர் தம்முடைய முகவருக்கு (Agent), தம்முடைய வாழ்நாளிற்குப் பிறகு தம்முடைய சொத்துக்களை எப்படிப் பராதீனம் செய்ய வேண்டும் என்று ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அந்தக் கடிதம் அவருடைய உயிலாக ஒரு வழக்கில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உயில் எழுதி வைப்பவர் தம் கருத்தை அய்யமறத் தெளிவாக்கி இருக்க வேண்டும். எனக்குக் குழந்தைகள் இல்லாததால், என்னுடைய சொத்துக்களுக்கும் உரிமைகளுக்கும் என்னுடைய வளர்ப்பு மகன் உரியவனாவான் என்று ஒருவர் ஆவணம் எழுதி வைத்திருந்தார். வளர்ப்பு மகன் இன்னவன் என்று அது சுட்டிக் காட்டாததாலும், தெளிவாக இல்லாததாலும், அந்த ஆவணம் அவருடைய உறுதிமொழியே தவிர, அதை ஓர் உயிலாகக் கருத முடியாது என்று ஒரு வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

கீழ்க் குறிப்பிடப்படும் வரம்புக்கு (Limitation) உட்பட்டு, உரிமை வயது எய்தப் பெற்ற, சித்தம் தெளிந்த எந்த ஒரு இசுலாமியரும் தம்முடைய சொத்தையோ, பொருளையோ, உயில்வழிக் கொடுக்கத் தகுதியுடையவராவார். இந்திய வயது வந்தோர் சட்டப்படி, அவர் 18 வயது நிரம்பப் பெற்றவராயிருக்க வேண்டும். சொத்து, உயிலளிப்பவருக்கு உரிமை உடையதாயிருக்க வேண்டும்.

'ஷியா'ச் சட்டப்படி, தற்கொலை எண்ணம் மேற்கொண்டிருக்கும் ஒருவர் தற்கொலை முயற்சியைத் தொடங்கிய பின்னர் 'உயில்' எழுதி வைத்தால் அது செல்லுடைமை ஆகாது. ஆனால், ஒருவர் தற்கொலை முயற்சியை மேற்கொள்ளும் முன் எழுதிவைக்கும் உயில் செல்லுடைமையாகும். அதாவது, ஒருவர் தற்கொலை செய்து கொள்வதற்காக விஷத்தை வாங்கிவந்த பின்னர் உயில் எழுதி வைத்தால், அந்த உயில் செல்லுடைமையாகாது என்றும், உயில் எழுதி வைத்த பின்னர் விஷம் வாங்கி வந்திருந்தால் அது செல்லுடைமையாகும் என்றும் கொள்ளலாம்.

உயில் எழுதி வைப்பதில் இரண்டு முக்கிய கட்டுப்பாடுகள்:

(1) உயில் எழுதி வைப்பவர் தம்முடைய முறையான சொத்துரிமை பெற்ற வாரிசுகளுக்கு உயில் வழி சொத்து அளிக்கக்கூடாது.

(2) உயில் எழுதி வைப்பவர் தமது முழுச் சொத்தில் மூன்றில் ஒரு பங்கை மட்டிலுமே உயில் வழியாக கொடுக்க உரிமை படைத்தவராவார். ஆகவே, ஒரு இசுலாமியர் உயில் வழியாக சொத்து அளிப்பதில் இவ்விரண்டு கட்டுப்பாடு களுக்கும் உட்பட்டே செயல்பட வேண்டும். இவ்விரண்டு கட்டுப்பாடுகளும் விதிக்கப் பட்டிருப்பதின் அடிப்படைத் தத்துவம் என்ன என்பதை பின்வருமாறு காணலாம்.

மேற்படி கட்டுப்பாடுகளின் அடிப்படைத் தத்துவம்:

'ஹிபா' என்னும் கொடையைக் கொடுப்பவர், அவர் விரும்பினால் தமது

முழுச் சொத்தையும் அந்நியர் ஒருவருக்கு கொடுக்கலாம். விரும்பினால் வாரிசுகளுக்கும் கொடுக்கலாம். ஆனால் உயில் வழியாக சொத்தளிப்பதில் மட்டும், ஏன் மேற்கண்ட இரு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது? இவ்வினாவிற்கு விடை உடைமை ஒப்படைப்பில்தான் (Delivery of possession) அடங்கியுள்ளது. 'ஹிபா' கொடையில் சொத்தின் 'உடைமை ஒப்படைப்பு' உடனடியாக நிகழ்கிறது. உயில் வழியாக சொத்தளிப்பதில் 'உடைமை ஒப்படைப்பு' உயில் எழுதி வைத்தவர் இறந்த பின்னரே நிகழ்கிறது.

இசுலாமியச் சட்டப்படி, ஒருவர் இறந்ததும், அக்கணமே அவருடைய சொத்தில், அவரது வாரிசுகள் உரிமை பெற்றுவிடுகின்றனர். அவர் இறந்த பின்னர் அவருடைய வாரிசுகளுக்கும் சொத்து உரிமையாகி விடுகின்றது. ஒரு இசுலாமியர் தனது சொத்துக்களை உயில் மூலம் தன்னுடைய வாரிசுகளில் ஒருவருக்கு மட்டுமே கொடுத்தால், அது மற்ற வாரிசுகளுடைய சொத்து பெறும் உரிமையை பறிப்பது போலாகிவிடும்.

எடுத்துக்காட்டாக, A என்ற ஒரு இசுலாமியருக்கு B,C மற்றும் D – என்ற மூன்று மகன்கள் இருப்பதாகக் கொள்வோம். அவர்களில் B என்ற ஒரு மகனுக்கு மட்டுமே A-தனது சொத்துக்களை உயில் மூலம் எழுதி வைத்தால், C மற்றும் D ஆகிய மீதமுள்ள இரு மகன்களுக்கு சொத்து கிடைக்காது போய்விடும். ஆகவே ஒரு இசுலாமியர் தனது சொத்துக்களை தன்னுடைய முறையான சொத்துரிமை பெற்ற வாரிசுகளுக்கு உயில் மூலம் எழுதி வைக்கக் கூடாது என்பதற்காக **முதற் கட்டுப்பாடு** விதிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது கட்டிப்பாட்டிற்கும் ஒரு அடிப்படை விளக்கம் உண்டு. அஃதாவது ஒரு இசுலாமியர் உயில் மூலம் தனது சொத்தை எழுதி வைக்கும் பொழுது அது அவர் இறந்த பிறகே அவனுக்கு வருகிறது. உயிலில் கண்ட சரத்துக்களின்படி சொத்து கைம்மாறுகிறது. ஆகவே உயில் எழுதி வைப்பவர் எதைப்பற்றியும் சிந்திக்காமல் தமது முழுச் சொத்தையுமே மற்றொருவருக்கு உயில் எழுதி வைத்து விடக்கூடும். அச்சமயத்தில் அவரது வாரிசுகளுக்கு எச்சொத்தும் கிடைக்காது போய்விடும். ஆகவே, உயில் எழுதி வைப்பவர்களுக்கு தங்களுடைய வாரிசுகளைப் பற்றி ஒரு பொறுப்பை வர வைக்க வேண்டும் என்ற எண்ணத்தினாலேயே, "ஒரு இசுலாமியர் தம்முடைய சொத்துக்களில் மூன்றில் ஒரு பங்கை மட்டுமே உயில் மூலமாக எழுதி வைக்க முடியும்" என்ற ஒரு கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டது.

ஒரு இசுலாமியர் தன்னுடைய சொத்தினை தன்னுடைய வாரிசுகளில் ஒருவருக்கு உயில் மூலம் எழுதி வைக்க வேண்டுமெனில், அதற்கு மற்ற வாரிசுகளின் சம்மதம் தேவை. அதேபோன்று தன்னுடைய சொத்துக்களில் மூன்றில் ஒரு பங்கிற்கு அதிகமாக உயில் எழுதி வைக்க வேண்டுமெனில், அதற்கு அனைத்து வாரிசுகளின் சம்மதமும் தேவை. ஒரு இசுலாமியருக்கு வாரிசுகளே இல்லையெனில், அவர் முழுச் சொத்தையும் உயில் எழுதி வைக்கும் உரிமையைப் பெறுகிறார்.

உயில் அழிவு (அல்லது) உயிலை இரத்து செய்தல் (Revocation of Will):

உயில் வழியாக சொத்து கொடுப்பவர், தமது வாழ்நாளில் எந்த நேரத்திலும் அவ்வுயிலினை இரத்து செய்யலாம். இது வெளிப்படையானதாக அல்லது உட்கிடையானதாக இருக்கலாம். சொத்தை முழுமையாக அழித்துவிடவோ, அதனை உருத் தெரியாதபடி மாற்றி விடவோ, வேறு ஒருவருக்கு அதை உரிமையாக்கித் தரவோ நேர்ந்தால், உயில் உட்கிடையாக இரத்தானதாக ஊகித்துக் கொள்ளலாம். உயில் வழியாக சொத்து பெறுபவர், அதனை அளிப்பவருக்கு முன்பே இறந்து விட்டால், அவ்வுயில் தானாகவே இரத்தாகிவிடும். அச்சொத்து மீண்டும் உயில் எழுதி வைத்தவரின் கைகளுக்கே போய்ச் சேர்ந்து விடும். அதில் உயில் வழி சொத்து பெறுபவரின் வாரிசுகள் எவ்வித உரிமைக் கோரலையும் செய்ய இயலாது.

முடிவுரை:

இசுலாமிய சட்டப்படி, உயிலை எழுதி வைப்பதில், வாரிசுகளின் சொத்துரிமை பறிபோய்விடாதவாறு இரண்டு கட்டுப்பாடுகளின் வாயிலாக அவ்வுரிமை பாதுகாக்கப்பட்டுள்ளது. எனவே, **"இசுலாமியர் ஒருவர் உயில் மூலம் தனது சொத்தை எழுதி வைக்க, அவருக்கு வரம்பற்ற உரிமை கிடையாது"** எனும் கூற்று முற்றிலும் உண்மையே.

2.Death bed gift - Write short notes. (மரணப் படுக்கையில் கொடை – சிறுகுறிப்பு வரைக.)

(அல்லது)

Marz-ul-Maut - Write short notes. (மார்ஸ்–உல்–மாவ்த் – சிறுகுறிப்பு வரைக.)

விளக்கம்:

மரணப் பிணியால் ஆட்கொள்ளப்பட்ட மனிதன், 'சாவின் வயப்பட்டு விட்டோம். இனி இதிலிருந்து மீள மாட்டோம்' என்று எண்ணி எண்ணி, எதிலும் ஈடுபாடின்றி, தன் மரணத்தையே எதிர்பார்த்த வண்ணம் இருப்பான். இறந்து போய்விடுவோம் என்பதைத் தானே உணர்தல் ஒன்று. அதைப் பார்த்து கொண்டிருப்பவர்கள் உணர்வது மற்றொன்று. 'மார்ஸ்–உல்–மாவ்த்' அல்லது 'மரலுல் மௌத்' அல்லது 'மரண நோய்' என்பது, அந்த மரணப்பிணியில் சிக்கியிருப்பவர் உணர்தலையே குறிக்கும்.

மரணப்படுக்கை கொடை – கூறுகள்:

மரண நோய் வயப்பட்ட ஒரு இசுலாமியர் வேறொருவருக்குத் தன்னுடைய

சொத்தையோ, பொருளையோ கொடை அளிக்கிறான் என்றால், அது இசுலாமியச் சட்டப்படியுள்ள கொடை இலக்கணங்களுக்குக் கட்டுப்பட்டதாகவும், இசுலாமியச் சட்டப்படி உயில்வழிச் சொத்து அளிப்பதில் சுமத்தப்பட்ட இரு வரம்புகளுக்கும் உட்பட்டதாகவும் இருக்க வேண்டும்.

அதாவது, கொடையின் இலக்கணப்படி, உடனடியாக அச்சொத்தின் உடைமையானது கொடை பெறுபவர் வசம் ஒப்படைக்கப்பட வேண்டும். உயில்வழிச் சொத்தளிப்பில் விதிக்கப்பட்ட வரம்புகளான மூன்றில் ஒரு பங்குக்கு மேற்பட்ட சொத்தைக் கொடுக்கவோ அல்லது அதனை சொத்துரிமை பெற்ற வாரிசுகளுக்குக் கொடுக்கவோ கூடாது. எனவே, மரணப் பிணியின் வயப்பட்டவர் அளிக்கும் ஹிபா என்னும் கொடை, இசுலாமியக் கொடை இலக்கணத்திற்கும் உயில் இலக்கணத்திற்கும் கட்டுப்பட்டதாகிவிடுகிறது.

மரணப் பிணியை மெய்ப்பிக்கும் அறிகுறிகள்:

மரணப் பிணியை மெய்ப்பிப்பதற்குக் கீழ்வரும் அறிகுறிகளைச் சான்றுகளாக எடுத்துக் கொள்ளலாம். (1) மரணப்பிணியின் வயப்பட்டுவிட்டோம். இனிச் சாவிலிருந்து மீட்சி இல்லை என்று நினைத்துக் செயலற்றிருத்தல்; (2) மரணப்பிணியின் கூறுகள் அதன் வயப்பட்டவரைச் செயலற்றிருக்கச் செய்தல்; (3) மரணப்பிணி வயப்பட்டவரின் செயல்களும் கூட அதற்குச் சான்றாக அமையும். (எ.டு) தன்னிச்சையாகச் செய்யும் காரியங்களை இயல்பாகச் செய்யமுடியாது தவித்தல். மற்ற பொருண்மைகளை (Facts) மெய்ப்பிப்பது போல் மரணப் பிணியையும் மெய்ப்பிப்பது அவசியமாகும்.

இக்கொடையை அளித்தவர் இறக்கவில்லையானால்:

மரணப் பிணியின் வயப்பட்டதாக நினைத்துக் கொடை அளித்த பின்னர், எதிர்பார்த்தபடி, அவர் இறக்கவில்லையானால், அதை அவர் இசுலாமியச் சட்டப்படி அளித்த 'ஹிபா' என்னும் கொடையாகக் கொள்ளவேண்டும். அதை 'மரலுல் மௌத்' கொடையாகக் கருதக்கூடாது.

ஏதோ ஒரு கொடிய நோய்வாய்ப்பட்டுக் கொடையளித்தவர் சட்டென்று இறந்து விடுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் மரணப் பிணி வயப் பட்டுக் கொடையளிக்கவில்லை என்று மெய்ப்பிக்க வேண்டுமானால், அவர் கொடையளித்த சமயத்தில் அவருக்கு மரண அச்சத்தை விளைவிக்காத ஒரு கொடிய நோயால், அவர் பாதிக்கப்பட்டிருந்தார் என்றும், அந்த நோயின் காரணமாகத்தான் அவர் இறக்க நேர்ந்தது என்றும் மெய்ப்பிக்க வேண்டும்.

-oOo-

3 வக்பு [Wakf]

1. Define wakf and point out of the essentials of a wakf
(வக்பினை வரையறை செய்து வக்பின் கூறுகளை எடுத்துரைக்க.)

(அல்லது)

Define a wakf and state whether it can be created by a will
(வக்பினை வரையறுத்து அதனை ஒரு உயில் மூலம் உருவாக்க முடியுமா என்பதைக் குறிப்பிடுக.)

(அல்லது)

Wakf - Write short notes. (வக்பு – சிறு குறிப்பு வரைக.)

வக்ப் – வரையறை :

'வக்ப்' என்ற சொல்லின் நேரடிப் பொருளைக் கண்டோமானால், அதற்கு 'நிறுத்துவது', 'தடை செய்வது', 'நிலைக்கு கொண்டுவருவது' என்று கூறலாம்.

பொதுவாக, சொத்துக்கள் கைமாறும் இயல்புடையன. அதாவது ஒரு சொத்தின் உரிமை, மனிதனிடம் இருக்கும் வரையில் அது பல காரணங்களால் கைமாறிக் கொண்டேயிருக்கும். மனிதனிடம் உள்ள சொத்துரிமை அழிக்கப் பட்டாலன்றி, அந்தச் சொத்து கைமாறும் தன்மையை இழக்காது. இங்ஙனம் கைமாறும் தன்மையுடைய சொத்தினை ஒரு நிலைக்கு கொண்டு வருவதை "வக்பு" என்று இசுலாமியச் சட்டம் கூறுகிறது.

அச்சொத்து எங்ஙனம் ஒரு நிலைக்கு கொண்டு வரப்படுகிறதெனில், அச் சொத்தின் சொத்துரிமை இறைவனுக்கு அளிக்கப்படுவதன் மூலம், மனிதனின் சொத்துரிமை அழிக்கப்பட்டு, சொத்து கை மாறுவதிலிருந்து தடுக்கப்படுகிறது.

இங்கு 'வக்பு' என்பது ஒரு சொத்தின் சொத்துரிமையை ஆண்டவனுக்கு அர்ப்பணிப்பதை சுட்டிக் காட்டுகிறது என்றாலும், அதன் உட்பொருள் மனிதனின் சொத்துரிமை அந்தச் சொத்திலிருந்து அழிக்கப்பட்டு, அது கைக்கு கை மாறுவது தடுக்கப்பட்டு ஒரு நிலைக்கு கொண்டுவரப்படுவதுதான் ஆகும்.

எனவே, ஒரு சொத்தை 'வக்பு' செய்தவன் மூலம், சொத்தின் உரிமையை ஆண்டவனுக்கு அளித்து, அதன் வருவாயையும் பயனையும் மட்டும் மக்களின் நலன் கருதிச் செலவு செய்ய வழி வகுக்கப்படுகிறது.

1913–ஆம் ஆண்டின் வக்பு செல்லுடைமையாக்கும் சட்டத்தின் (The Wakf Validating Act, 1913) 2–வது பிரிவு, "வக்பு" என்பது இசுலாம் இசைவு தருகின்ற மதம், திருப்பணி, தருமம் ஆகிய காரியங்களுக்காக இசுலாமியர் ஒருவரால் அவருடைய எச்சொத்தையும் நிலையாக அர்ப்பணிப்பதாகும், என்று கூறுகிறது. முத்தாவல்லி (Mutawalli) என்பவர் வக்பு சொத்தை பராமரித்து வருபவராவார்.

வக்பின் கூறுகள் (Essentials of a Wakf) :

பின்வருவன ஒரு 'வக்பு' முற்றுப் பெறுவதற்குத் தேவையான கூறுகளாகும்.

1. நிலையான அர்ப்பணம் (Permanent Dedication) :

இசுலாம் அனுமதிக்கும் மதம், தருமம், திருப்பணி ஆகியவற்றிற்குச் சொத்தை நிலையாக அர்ப்பணிப்பது என்பது முதற்கண் தேவைப்படும் ஒரு முக்கியக் கூறாகும். வக்பு அளிக்கப்படும் சொத்தை உடனடியாக வரையறுத்து அதை ஒதுக்குதல் வேண்டும். மேலும் வக்பு அளிப்பவரின் சொத்துரிமை அத்துடன் முற்றுப் பெற வேண்டும்.

இமாம் முஹம்மது அவர்களின் கருத்துப்படி வக்பிற்கான நிலைக் கட்டளையை (endowment) உறுதிப்படுத்தி வெளிப்படுத்துவதோடு, அதை பராமரிப்பதற்கு முத்தாவல்லியையும் உடனடியாக நியமித்து அவரிடம் சொத்தை உடைமை ஒப்படைப்பு செய்த உடன், வாழ்வோரிடையே வக்பு முற்றுப்பெறுகிறது. வக்பு அளிப்பவர் தம்மையே முதல் முத்தாவல்லியாக நியமித்துக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட பதிவேடுகளில் பெயர் மாற்றம் செய்து உடைமை ஒப்படைப்பு நிகழ்ந்ததாக காண்பிக்க வேண்டிய அவசியமில்லை. வக்பு ஆவணம் (Wakf Deed) எழுதி அதைப் பதிவு செய்வதன் மூலம் 'வக்பு' ஏற்படுத்தப்பட்டிருப்பதை அவர் வெளிப்படுத்தலாம்.

2. நிலைக்கட்டளையை அறிவித்தல் (Declaration of Endowment):

வக்பு அளிப்பவர் நிலைக் கட்டளையை உறுதிப்படுத்தி, தம்முடைய நிலையான அர்ப்பண எண்ணத்தை அறிவிக்க வேண்டும். நிலையான அர்ப்பணமும் அறிவிப்பும் (Declaration) ஒருமித்து நடைபெற வேண்டும். சொத்தைத் தருமத்தின் பொருட்டுக் கொடுக்க வேண்டும் எனும் விருப்பம் (intention) மட்டிலும் அவருக்கு இருந்தால் போதாது. அவ்விருப்பத்தை வெளிக் கொணர்ந்து உலகுக்கு அறிவிப்பதன் மூலம், அவர் நிலையான அர்ப்பணமும் செய்தல் வேண்டும். வாய்மூலமாகவோ, எழுத்து மூலமாகவோ, 'வக்பு' செய்யும் விருப்பத்தை அவர் அறிவிக்கலாம். சந்தேகமற விருப்பத்தை ஒருவர் வெளிப்படுத்துவதன் மூலம் நிலையான வக்பை ஏற்படுத்தலாம். குறிப்பிட்ட சொல்லையோ, சொற்றொடரையோ

பயன்படுத்தி, இப்படித்தான் அறிவிக்க வேண்டும் என்ற நியதியொன்றும் இல்லை. 'வக்பு' என்னும் சொல்தான் பயன்படுத்தப்படவேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. ஆனால், சந்தேகமற நிலைக்கட்டளை உறுதிப்பாட்டோடு அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும். 'வக்பு' என்னும் சொல் பயன்படுத்தப்படாமலும் சொத்தை 'வக்பு' செய்ய முடியும். வக்பு ஏற்படுத்தப்பட்ட சொத்திற்கு ஆண்டவனே சொத்துரிமை படைத்தவன் என்று வெளிப்படையாகக் கூற வேண்டும் என்ற நியதியும் இல்லை. காலகாலமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் முறையிலிருந்தும் 'வக்பு' ஏற்படுத்தப்பட்டிருப்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

3. உயில் மூலம் வக்பு ஏற்படுத்துதல் (Wakf by will):

வாழ்வோரிடையே வக்பு (Wakf intervivios) ஏற்படுத்தப்படுவது போல், வக்பு அளிப்பவரின் உயில் மூலமாகவும் வக்பு ஏற்படுத்தப்படலாம். 'வக்பு' வாழ்வோரிடையே ஏற்படுத்தப்படும்பொழுது, வக்பு அளிப்பவர் தமது முழுச் சொத்துக்களையும் விரும்பினால் வக்பு செய்ய முடியும். ஆனால், உயில் மூலம் வக்பு ஏற்படுத்தும்பொழுது, அவர் தமது சொத்தில் மூன்றில் ஒரு பங்கையே வக்பாக வழங்க முடியும். அதேபோல், மரணப்பிணி அல்லது 'மரலுல் மௌத்' வயப்பட்டவரும், தமது சொத்தில் மூன்றில் ஒரு பங்கையே வக்பு ஏற்படுத்த உரிமை பெற்றவர் ஆவார். உயில் மூலம் வக்பு அளிப்பவர் தமது இறப்பிற்கு முன்னர், அவர் விரும்பினால் அதை மறுத்தழிக்க (இரத்து செய்ய) உரிமை பெற்றவராவார். ஆனால், வாழ்வோரிடையே ஏற்படுத்தப்படும் வக்பில், வக்பு அளிப்பவர் வக்பு சொத்தில் தமக்கென எந்த சொத்துரிமையையும் ஒதுக்கி வைத்துக் கொள்ள முடியாது. அப்படி ஒதுக்கி வைத்தால், 'வக்பு' செல்லுடைமை ஆகாது. ஆனால் வக்பு வழிப் பயன் பெறுவோரை மாற்றுகிற அதிகாரத்தையோ, வக்பு சொத்தின் பயனைக் கூட்ட அல்லது குறைக்கச் செய்யும் அதிகாரத்தையோ அவர் தம்மிடம் வைத்திருக்கலாம்.

4. நிரந்தரமானது (Perpetuity):

சொத்து அர்ப்பணம் நிலையானதும், நிரந்தரமானதும், காலவரையறை இல்லாததுமாய் இருத்தல் வேண்டும். அர்ப்பணம் செய்வதும், செய்யப்படும் சொத்தும், அதன் நோக்கமும், அதற்கான காலவரையறை இன்மையும் நிரந்தரமான அர்ப்பணத்திற்கான கூறுகளாக அமைகின்றன. எனவே, அர்ப்பணம் நிபந்தனை யற்றதாகவும், வருநிகழ்வைச் (Contingent) சாராததாயும் இருத்தல் அவசியமாகும். காலக் கெடுவோடு கூடிய அர்ப்பணம் செல்லத்தக்கதன்று. (எ.டு) 'அய்ந்தாண்டு காலத்திற்கு' என்று வக்பின் காலத்தை வரையறுத்துக கூறின், அது செல்லுடைமையாகாது. எதிர்காலத்தைய முத்தவல்லியின் (Mutawalli) நியமனம் குறித்து எதுவும் கூறப்படவில்லையானாலும் வக்பு செல்லுடைமையாகும். வக்பு அளித்தவர் வக்புக்குரிய சொத்தை வரையறுத்து ஒதுக்கி அதை வேறு ஒருவருக்கு உரிமையாக்கி, அவருடைய வாழ்நாள்களுக்குப் பின்னர், வக்பு நடைமுறைக்கு வர

வேண்டும் என்று நிபந்தனை விதித்திருந்தால், அந்த நிலைக்கட்டளை (Endowment) செல்லுடைமையாகாது. அதில் குறிப்பிடப்பட்டவர் இறந்ததும் 'வக்பு' செயல்படுவது நிச்சயமே என்றாலும், வக்பு சொத்தை உடனடி வரையறுத்து ஒதுக்காததால் அது செல்லுடைமை ஆகாது.

5. அசையும் மற்றும் அசையா சொத்து (Movable and Immovable property):

சொத்திலிருந்து வருமானமும், பயனும் வர வேண்டும் என்று கூறப் பட்டிருப்பதால் வக்பிற்காக அர்ப்பணிக்கப்படும் சொத்து, அசையா சொத்தாக இருப்பது அவசியமாகிறது.

'ஹிதாயா'–வின் கருத்திற்கிணங்க பொதுவாக அசையும் சொத்துக்களை வக்பு செய்தால் பொருந்தாது. ஆயினும், பழக்க வழக்கத்தில் அசையும் சொத்துக்களையும் வக்பு செய்து கொடுப்பது, ஹிதாயாவின் காலத்திற்கும் முன்னரே நடைமுறையில் இருந்து வந்திருக்கிறது. எடுத்துக்காட்டாக, திருக்குர் ஆனின் கையெழுத்துப் பிரதி ஒன்று 'வக்பு' செய்யப்பட்டதன் மூலம், எல்லோரும் அதைப் பயன்படுத்தும் உரிமை அளிக்கப்பட்டதற்குச் சான்றுகள் உள்ளன. உழவுக்குப் பயன்படுத்தப்படும் ஏர் கலப்பை முதலான கருவிகளும், தானியங்களும் 'வக்பாக' அளிக்கப்பட்டதற்குச் சான்றுகள் உள்ளன.

பணத்தை 'வக்பு' செய்து கொடுக்க முடியாது என்ற ஒரு கருத்து நிலவியது. ஆனால் இன்றைய நாளில், நிறுவனங்களில் பணத்தை முதலீடு செய்வதன் மூலம் ஒருவர் தம்முடைய பங்கை 'வக்பு' செய்து கொடுக்க முடியும். பாகப் பிரிவினையாகாத பங்கை 'வக்பு' செய்து வைத்தால், அதுவும் செல்லுடைமை ஆகும். ஆனால், பாகப்பிரிவினையாகாத பங்கை (Mushaa) 'வக்பாக' அளித்தால், அது செல்லுடைமையாகாது.

பாகம் பிரிக்கப்படாத பங்கை வக்பு செய்வதில் ஒரு கட்டுப்பாடு விதிக்கப் பட்டிருக்கிறது. அய்ங்காலமும் இசுலாமியர்களின் தொழுகைக்கென பள்ளிவாசல் கட்டுவதற்கோ, புதைக்குழியாகப் பயன்படுத்துவதற்கோ ஒதுக்கப்படும் நிலத்தை, பாகம் பிரிக்கப்படாத பங்கில் வக்பு செய்து கொடுத்தால், அது செல்லுடைமை ஆகாது. எனினும், இருக்கின்ற ஒரு பள்ளி வாசலை பராமரிப்பதற்காக ஒதுக்கப்படும் வருமானம், பாகம் பிரிக்கப்படாத பங்கை வக்பு செய்து கொடுக்கப் பட்டதிலிருந்து வருமாயின், அது செல்லுடைமையாகும்.

நீதிமன்ற தீர்ப்பாணையோ, மஹர்க் கடனோ வக்பு சொத்தாக அமையாது. 1913–ல் இயற்றப்பட்ட வக்பு செல்லுடைமையாக்கும் சட்டம் (Wakf Validating Act, 1913) பிரிவு 2–ல் "எந்த பொருளையும்" அர்ப்பணம் செய்யலாம் என்று கூறப்பட்டிருப்பதால், அது அசையும் பொருளையும் உள்ளடக்கியதே என்று தமிழ்நாடு, பம்பாய் உயர் நீதிமன்றங்கள் தங்கள் நீதித் தீர்ப்பில் சுட்டிக் காட்டியுள்ளன. 'எந்தப் பொருளும்' என்பதால், அது முழுப்பொருளாக இருக்க

வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஒரு பொருளின் சிறு பாகத்தைக் கூட வக்பு செய்து கொடுக்கலாம்.

வக்பு அளிப்பவர் அல்லது 'வகிப்' (Wakif) :

இசுலாமியச் சட்டப்படி 'வக்பு' ஏற்படுத்துபவர், உரிமை வயது எந்தப் பெற்ற இசுலாமியராக இருக்க வேண்டும். மேலும் அவர் சித்தம் தெளிந்தவராகவும் இருக்க வேண்டும். உரிமை வயது எய்தப் பொறாதாவர் வக்பு ஏற்படுத்த முடியாது.

இசுலாமியர் அல்லாதவர் 'வக்பு' ஏற்படுத்தினால் அது செல்லுடைமை ஆகும் என்று லாகூர் உயர் நீதிமன்றம் ஒரு வழக்கில் தீர்ப்பளித்துள்ளது. ஆனால், இசுலாமியர் அல்லாத ஒருவர், சமயச் சார்பான தொழுகைக்குரிய இடமான மசூதி (Mosque) கட்டுவதற்கு வக்பு ஏற்படுத்தினால், அது செல்லுடைமை ஆகாதென்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

வக்பு ஏற்படுத்துவதன் நோக்கம் (Purpose):

'வக்பு' ஏற்படுத்துவதன் நோக்கம், அர்ப்பணிக்கப்பட்ட பொருளின் பயனை இசுலாம் அங்கீகரிக்கும் மதம், தருமம், திருப்பணி ஆகிய காரியங்களின் பொருட்டுப் பயன்படுத்துவதற்கே ஆகும். 1913–ஆம் ஆண்டு வக்பு செல்லுடைமை யாக்கும் சட்டம் பிரிவு 3–ல் உள்ள வரம்புரை வாசகத்தில் (proviso) கூறப் பட்டிருக்கும் நோக்கங்கள் இசுலாமியச் சட்டப்படி வக்பு ஏற்படுத்துவதன் நோக்கங்கள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளன என்று கூற முடியாது.

கொடையளிப்பவரின் நெருங்கிய உறவினர்களின் நலனையோ, வாரிசுகளின் நலனையோ கருத்தில் கொண்டும் வக்பு ஏற்படுத்தப்படலாம். ஒரு ஹனபி இசுலாமியர் தாம் 'வக்பு' ஏற்படுத்தும் சொத்து, தமது வாழ்நாள் முழுவதும் தமக்குப் பயனளிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடும் வக்பு ஏற்படுத்த முடியும். ஒரு ஹனபி இசுலாமியர் தமது வாழ்நாளில் பட்ட கடன்களைத் தீர்ப்பதையும் நோக்கமாகப் கொண்டு வக்பு ஏற்படுத்த முடியும். ஆயினும், எதை நோக்கமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டாலும், 'வக்பு ஏற்படுத்தப்பட்டதன் இறுதி நோக்கம் ஏழைகளுக்கும், இசுலாம் அனுமதிக்கும் மதம், தருமம், திருப்பணி ஆகிய காரியங்களுக்குமாய் இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

2. (a) " The subject matter of a wakf must be property of a reasonably permanent character; but it is not absolutely necessary that the property dedicated should be immovable property". Comment.

(b) State the circumstances which led to the passing of the Wakf Act 1913 and the Wakf Validating Act, 1930.

(அ) "வக்பின் கருப்பொருள் கூடுமானவரை நிரந்தரத் தன்மை கொண்ட சொத்தாக இருத்தல் வேண்டும். ஆனால் பொது உரிமை ஆக்கும் சொத்து

அசையாச் சொத்தாக இருத்தல் முழுமையான தேவையில்லை" – விளக்கவும்.

(ஆ) 1913– ஆம் ஆண்டு வக்ப் சட்டம் மற்றும் 1930–ஆம் ஆண்டு வக்பு செல்லுபடியாக்கும் சட்டம் இவைகள் இயற்றப்படுவதற்கு காரணமான சூழ்நிலைகளை எடுத்துக் கூறுக.

(அல்லது)

Define wakf. Trace briefly the development of the law relating to private wakf before the passing of the Muslim wakf validating Act of 1913. (வக்பினை வரையறுக்க. 1913–ஆம் ஆண்டின் வக்ப் செல்லுடைமையாக்கும் சட்டம் நிறைவேற்றப்படும் முன்னர், தனியார் வக்ப் சம்பந்தப்பட்ட சட்டத்தின் வளர்ச்சியை சுருக்கமாக ஆய்ந்தறிக.)

(அல்லது)

Define "wakf". What are the changes brought about by the Wakf Acts of 1913 and 1954. (வக்பினை வரையறு.1913 மற்றும் 1954–ஆம் ஆண்டின் வக்ப் சட்டங்களால் கொண்டு வரப்பட்ட மாற்றங்கள் யாவை?)

(அ) இவ்வினாவிற்குண்டான விடையை, இதற்கு முந்திய வினாவின் விடையில், "நிரந்தரமானது" மற்றும் "அசையும் – அசையா சொத்து" எனும் தலைப்புகளின் கீழ் உள்ளவற்றை படித்துக் கொள்க.

(ஆ) 1913 மற்றும் 1930–ஆம் ஆண்டின் வக்ப் செல்லுபடியாக்கும் சட்டம் இயற்றப்படுவதற்கு காரணமான சூழ்நிலைகள்:

முன்னுரை:

1913 மற்றும் 1930–ஆம் ஆண்டின் வக்ப் செல்லுபடியாக்கும் சட்டம் சட்டங்கள் இயற்றப்படுவதற்கு காரணமாக இருந்த சூழ்நிலைகளை காண வேண்டுமெனில், "வக்பு–அலல்–அவுலாது" என்றழைக்கப்படும் உற்றார் உறவினர் நலன் கருதி ஏற்படுத்தப்படும் தனியார் வக்பிலிருந்து தொடங்குதல் அவசியம்.

வக்பு – அலல் – அவுலாது – விளக்கம்:

வக்பில் இரண்டு விதம் உள்ளன. அவை (1) குடும்ப வக்பு அல்லது தனியார் வக்பு (Private Wakf); (2) பொது வக்பு.

"குடும்ப வக்பு அல்லது தனியார் வக்பு" என்பது உற்றார் உறவினர் நலனை முன்னிறுத்தி ஏற்படுத்தப்படுவதாகும். "பொது வக்பு" என்பது, பொதுவான காரியங்களுக்கு உடனடியாகப் பயனாகும்படி ஏற்படுத்தப்படுவதாகும்.

பொதுவாக, இசுலாமியச் சட்டப்படி சொத்துரிமையை ஆண்டவனுக்கு அர்ப்பணித்து, அதன் பயனையும் வருவாயையும் இசுலாம் இசைவு தரும் மதம்,

தருமம், திருப்பணி ஆகியவற்றிற்காக, மக்கள் குலத்திற்கே பயன்படுத்துவதுதான் 'வக்பு' ஆகும். ஆனால், வக்பு–அலல்–அவுலாது எனும் குடும்ப வக்பில், ஒரு இசுலாமியர் வக்பு ஏற்படுத்தி அதன் பயனை உற்றார் உறவினர் நலனுக்கு உடனடியாகக் கொடுக்கிறார். பின்னிட்டு, அவர்கள் இல்லாமற் போகும்பொழுது அதை இசுலாம் அனுமதிக்கும் காரியங்களுக்காகப் பயன்படுத்துமாறு அறிவிக்கிறார். இங்கு வக்பு ஏற்படுத்தப்படும் பயனும் நோக்கமும் ஒன்றே. வக்பு–அலல்–அவுலாதில் பயன் காலங் கடந்து விளைகிறது. அதாவது, முதலில் வக்பு செய்தவரின் குடும்பத்தவர்கள் பயன் பெற வழி செய்யப்படுகிறது. ஆனால் குடும்பத்தவர்களே வக்பு சொத்தின் பயனை அனுபவிக்க வேண்டும் என்று அறிவித்தால் அது 'வக்பு' ஆகாது; செல்லாது. எவ்வளவு காலம் கடந்தாலும் மக்கள் குலத்திற்கு அதன் பயன் வந்து சேர வேண்டும். இல்லையென்றால் அது 'வக்பு' ஆகாது. ஆகவே வக்பினை "குடும்ப வக்பு அல்லது தனியார் வக்பு", "பொது வக்பு" என்று" இரண்டாக பிரித்துக் கூறவேண்டிய அவசியமில்லை. இரண்டும் ஒன்றே. முன்னதில் பயன் காலங்கடந்து விளைகிறது. பின்னதில் உடனடியாக விளைகிறது. இவ்வளவே வேறுபாடு.

இசுலாமியர் ஒருவர், தன்னுடைய குடும்பத்தவரின் சுயநலனைக் கருதி 'வக்பு–அலல்–அவுலாது' ஏற்படுத்துவது செல்லுடைமை ஆகுமா, எனும் ஒரு வினா காலப்போக்கில் எழுந்தது. இவ்வினா குறித்து விளக்கமளிக்க 1913–ஆம் ஆண்டில் **இசுலாமியர்கள் வக்ப் செல்லுடைமையாக்கும் சட்டம் (Mussalman Wakf Validating Act of 1913)** இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் முக்கிய நோக்கமே, குடும்பத்தவர் பயனடைந்த பின்னர், தரும காரியங்களுக்குப் பயன்படுத்துமாறு ஏற்படுத்தப்பட்ட வக்புகளை செல்லுடைமையாக்குவதே ஆகும். ஆனால் இவ்வாறு இச்சட்டம் இயற்றப்படுவதற்கு, இடையில் எழுந்த ஒரு முக்கிய வழக்கே காரணமாகும் எனில் அது மிகையன்று. அவ்வழக்கு வருமாறு.

முக்கிய வழக்கு:

Abdul Fata v. Rasamaya[1] – இவ்வழக்கின்படி இரு இசுலாமியச் சகோதரர்கள் ஒரு வக்பு ஆவணத்தை எழுதி வைத்தனர். அதன்மூலம் அவர்களுடைய அசையா சொத்துக்களை வக்பு செய்து வைத்து, அவற்றிலிருந்து வரும் வருமானத்தை அவர்களுடைய குழந்தைகளுக்கும், அதன்பின் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் என தலைமுறை தலைமுறையாக அனுபவித்து வரும் படியும், அப்படி தலைமுறையினர் சந்ததி இல்லாது போனால், விதவைகள், அனாதைகள் மற்றும் ஏழைகளுக்கும் அவை பயன்படுத்தப்படவேண்டும் என்றும் வழி செய்தனர்.

இங்கு தருமம் என்ற பேச்சே, குடும்பத்தினர் சந்ததி இல்லாமல் போகும் பொழுதுதான் ஏற்படுகிறது. குடும்பத்தினரின் தலைமுறையினர் இருக்கின்ற

1. (1894) 22 Cal. 619 P.C.

வரையில் தருமம் என்ற பேச்சே எழாது. சுருங்கக்கூறின், தருமம் என்பது இங்கு வெகு தொலைவில் உள்ளது. எனவே இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட 'வக்பு' இசுலாமியச் சட்டப்படி செல்லாது என்று வாதிடப்பட்டது.

இசுலாமிய கோட்பாட்டின்படி, 'தனக்கு மிஞ்சித்தான் தருமம்' என முகம்மது நபியே நல்லுரை வழங்கியுள்ளார்கள். எனவே, இந்த வக்பு இஸ்லாமிய சட்டப்படி தரும சிந்தையோடு ஏற்படுத்தப்பட்டதே என எதிர்வாதம் செய்யப்பட்டது.

ஆனால் பிரிவி கவுன்சில் மேற்கண்ட எதிர்வாதத்தினை ஏற்றுக் கொள்ளவில்லை. சொத்தின் பயனை சுற்றத்தாருக்கும், அவர்களுடைய குழந்தைகளுக்கும், அவரது வழித்தோன்றல்களுக்கும் தலைமுறை தலைமுறையாக உரித்தாக்கி, இறுதியில் சந்ததியற்றுப் போனால், அதை ஏழைகளுக்கும் அநாதைகளுக்கும் பயன்படுத்த வக்பு ஏற்படுத்துவதன் மூலம் தரும காரியம் என்பதை நெடுங்காலத்திற்குத் தள்ளி வைத்ததாகவும், நிகழ்வு பெறாத ஒன்றோ என்ற சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் இருப்பதாலும், பிரிவி கவுன்சில் மேற்படி வக்ப் செல்லுடைமையாகாது எனத் தீர்ப்பளித்தது.

இப்படிக் கூறப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பு, தூய இசுலாமியச் சட்டத்திற்கு முரண்பட்ட கருத்தாகையால், தங்கள் குடும்பத்தவர்களுக்குச் சொத்தின் பயனை முன்னிறுத்தி 'வக்பு' ஏற்படுத்த வழிவகை செய்யுமாறு இசுலாமியர்கள் அரசாங்கத்தை கேட்டுக் கொண்டனர். இதன் பயனாக, 1913–ஆம் ஆண்டில் **"இசுலாமியர்கள் வக்பு செல்லுடைமையாக்கும் சட்டம்" (Massalman Wakf Validating Act 1913)** இயற்றப்பட்டது. சொத்தின் பயனை குடும்பத்தவருக்கு முதலில் அளித்து விட்டு, அதன் பின்னர் தரும காரியங்களுக்கு பயன்படுத்துமாறு ஏற்படுத்தப்பட்ட வக்புகளை செல்லுடைமையாக்குவதே இச்சட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

1913-ஆம் ஆண்டின் வக்பு செல்லுடைமையாக்கும் சட்டத்தின் முக்கிய சட்டப் பிரிவுகள்:

பிரிவு 2–ல், வக்பு என்பது, "இசுலாம் இசைவு தரும் மதம், திருப்பணி, தருமம் ஆகிய காரியங்களுக்காக இசுலாமியர் ஒருவர் அவருடைய எந்தச் சொத்தையும் நிலையான அர்ப்பணம் செய்வதாகும்" என்று வக்பின் வரையறை கூறப்பட்டுள்ளது.

பிரிவு 3–ல், 'கீழே குறிப்பிடப்படும் நோக்கங்களைச் சேர்த்து, இசுலாம் அனுமதிக்கும் மற்ற எல்லா நோக்கங்களுக்கும் இசுலாமியர் ஒருவர் வக்பு ஏற்படுத்துவது சட்டத்திற்கு உகந்ததாகும்.' என்று கூறப்பட்டுள்ளது.

(அ) குடும்பத்தினருடைய, அவர்தம் குழந்தைகளுடைய, வருங்காலத் தலைமுறையினருடைய பராமரிப்பிற்கும், பாதுகாப்பிற்கும், முழுமையாகவோ பகுதியாகவோ பயனடையும்படி 'வக்பு' ஏற்படுத்தப்பட்டிருந்தாலும்;

(ஆ) 'வக்பு' ஏற்படுத்துபவர் ஹனபி பிரிவு இசுலாமியராக இருந்தால், வாழ்நாள் முழுவதும் அவர் தம்முடைய பராமரிப்பிற்கும் பாதுகாப்பிற்கும் அல்லது அவர் பட்ட கடனைத் தீர்ப்பதற்கும் வக்பில் இடமளித்திருந்தாலும்;

(இ) வக்பின் இறுதிப்பயன் வெளிப்படையாகவோ உட்கிடையாகவோ ஏழைகளுக்கென ஒதுக்கப்பட்டிருந்தாலும் அல்லது இசுலாம் அனுமதிக்கும் தரும காரியங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தாலும், அங்கு ஏற்படுத்தப்பட்ட 'வக்பு' செல்லுடைமையாகும்.

மேற்படி 1913-ஆம் ஆண்டின் வக்ப் செல்லுடைமையாக்கும் சட்டத்தினால் ஏற்பட்ட விளைவுகள் அல்லது மாற்றங்கள்:

(1) மேற்கூறப்பட்ட **அப்துல் ஃபாதா – எதிர் – ராசாமாயா** வழக்கில் குடும்பத்தவர் நலனை முன்னிறுத்தி ஏற்படுத்தப்பட்டது போன்ற 'வக்பு' இப்பொழுது சட்டவரம்பிற்கு உட்பட்டதாகிவிட்டது.

(2) பயனை இறுதியாக ஏழைகளுக்கென்று ஒதுக்குவது வெளிப் படையாகவோ உட்கிடையாகவோ (Expressly or Impliedly) இருக்கலாம்.

(3) ஹனபி பிரிவு இசுலாமியராயின், அவருடைய வாழ்நாளில் தம்மைப் பராமரித்துக் கொள்ளவும், பாதுகாத்துக் கொள்ளவும் பயனை ஏற்படுத்தித் தரும் 'வக்பு' செல்லுடைமையாகும் என அய்யமறக் கூறப்பட்டுள்ளது.

(4) வக்பு அளித்தவர் ஹனபி பிரிவு இசுலாமியராக இருந்தால், வக்பு சொத்தின் வருமானத்திலிருந்து அவர் பட்ட கடனைத் தீர்க்க வழி செய்யும் 'வக்பு' செல்லுடைமையாகும்.

(5) **பிரிவு 2–ல்** வக்பின் இலக்கணம் வகுக்கப் பெறும் பொழுது, 'எந்தச் சொத்தாயினும்' (Any property) என்று கூறப்பட்டிருப்பதால், அசைவியல் சொத்தையும் (Movable property) வக்பு அளிக்கலாம்.

(6) மதம், திருப்பணி, தருமம் என்பன இசுலாமியச் சட்டம் அங்கீகரிக்கும் நோக்கங்களுக்கு உட்பட்டு இருக்க வேண்டும் என்பதும் தெளிவாக்கப்பட்டுள்ளது.

(7) எதிர்காலத்தில், பிறக்கும் குழந்தைகளுக்கும் தலைமுறை தலை முறையாக வக்பு சொத்தைப் பயனடையச் செய்ய வழிகோலியதன் மூலம், வரையறையிலா நிலையின் எதிர்விதிக்கு (Rule against Perpetuity) முரண்பட்ட வக்பு செல்லுடைமையாகும் என்பதும், ஆயுள் சொத்துரிமை காலா காலத்திற்கு அளிக்கப்பட முடியும் என்பதும் தெளிவாகின்றன.

(8) வக்பு சொத்தில், வாரிசுகள் ஹனபி சட்டப் பரம்பரைச் சொத்துரிமைப் படி தலைவிகித இறக்கம் (Succession percapita) பெறாமல், கிளைவிகித இறக்கம் (Succession per stirpes) பெறுவர்.

1930-ஆம் ஆண்டின் இசுலாமியர்கள் வக்பு செல்லுடைமை யாக்கும் சட்டம் (Mussalman Wakf Validating Act, 1930):

1913-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இசுலாமியர்கள் வக்பு செல்லுடைமை யாக்கும் சட்டத்திற்கு 'முன்மேவு அதிகாரம்' (Retrospective effect) இல்லையாதலால் 1913-ம் ஆண்டிற்கு முன் ஏற்படுத்தப்பட்ட வக்பானது, குடும்பத்தவர் நலனை முன்னிறுத்தி நின்றால், அது செல்லுடைமையாகாது என்றும், 1913-ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட வக்புகளே அச்சட்டத்தின் மூலம் செல்லுடைமையாகும் என்றும் நீதிமன்றங்கள் தீர்ப்பளித்தன.

இந்நிலையைக் களையும் பொருட்டு 1930-ஆம் ஆண்டில், மற்றொரு 'வக்பு செல்லுடைமையாக்கும் சட்டம்' நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம், 1913-ஆம் ஆண்டிற்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட வக்புகளுக்கும், இச்சட்டம் அங்கீகாரம் அளிக்கிறது. எனவே, 1913-ஆம் ஆண்டிற்கு முன்னரும் பின்னரும் ஏற்படுத்தப்பட்ட வக்புகள், இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டிருந்தால், அவை செல்லுடைமையாகும்.

1954-ஆம் ஆண்டின் வக்பு சட்டம் (The Wakf Act, 1954):

நாட்டிலுள்ள வக்புகளை நன்முறையில் நிருவகிப்பதற்கும் பராமரிப்பதற்கும் 1954-ஆம் ஆண்டில் வக்பு சட்டம் ஒன்று இயற்றப்பட்டு, இன்னும் அதுவே நடைமுறையில் இருந்தும் வருகிறது.

ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள எல்லா வக்புகளையும் கணக்கெடுத்து, அவற்றைச் சரிவர நிருவகித்து வருவதற்கு **'வக்பு வாரியம்' (Wakf Board)** ஒன்று ஏற்படுத்த மேற்படி சட்டத்தின் மூலம் வழி வகை செய்யப்பட்டது. மேலும் அச்சட்டத்தில் 1984-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டத் திருத்தத்தின் வாயிலாக, **"மத்திய வக்பு குழுமம்" (Central Wakf Council)** ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது.

மாநிலத்தில் உள்ள வக்பு வாரியத்திற்கு மாநிலத்திலுள்ள 'சுன்னீ வக்பு', 'ஷீயா வக்பு' இரண்டையும் பிரித்து, வக்பின் குறிக்கோள், தன்மை, மொத்த வருமானம், மொத்தம் செலுத்தப்பட வேண்டிய வரித்தொகை, வருமானத்தை வசூலிப்பதற்கான செலவு, முத்தாவல்லியின் ஊதியம், சம்பளம், மற்றும் தேவையான விவரங்களையும் கணக்கெடுத்து, வக்புகளின் அட்டவணையைத் தயாரித்து அதை அரசிதழில் பிரசுரிக்க உரிமை அளிக்கப்பட்டுள்ளது.

மத்திய வக்பு குழுமத்தில் 21 நபர்கள் இருப்பார்கள். இது மாநிலங் களிலுள்ள வக்பு வாரியத்திற்க்கு ஆலோசனை வழங்கி வருவதோடு, மத்திய அரசின் வக்பு காரியங்களையும் கவனித்து வரும்.

தமிழ்நாட்டில் பதினோரு உறுப்பினர்களைக் கொண்ட வக்பு வாரியம் ஒன்று 1958–ல் நிறுவப்பட்டது. 1960–ல் அது கலைக்கப்பட்டு, 1971–ல் திரும்பவும் நிறுவப்பட்டு இயங்கி வருகிறது.

3. Distinguish between

(a) Sunni wakf and Shia wakf

(b) Private wakf and Public wakf

வேறுபடுத்துக.

(அ) சுன்னீ வக்பு மற்றும் ஷீயா வக்பு

(ஆ) தனியார் வக்பு மற்றும் பொது வக்பு

(அ) சுன்னீ வக்பு மற்றும் ஷீயா வக்பு - வேறுபாடுகள்:

(1) சுன்னீ வக்பின்படி, 'வக்பு' ஏற்படுத்துவதன் மூலம் வக்பு அளிப்பவரின் சொத்துரிமைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது. எனவே ஒரு சொத்தை ஒரு முறை வக்பு செய்தால், அளித்தவர் சொத்துரிமை இழந்து விடுவதால் அதை இரத்து செய்ய அவர் உரிமையற்றவராகிறார்.

ஷீயா வக்பின்படி, வக்பு அளித்தவருக்கு 'வக்பை' இரத்து செய்யும் உரிமை கிடையாது. ஏனெனில் சொத்துரிமை (Ownershi) அறுதி ஆவணம் (Settlement) பெற்றவருக்கு மாற்றப்படுகிறது.

(2) சுன்னீ வக்பு ஒன்று, அது நிபந்தனையுடன் கூடியதாக இருக்கலாம். அதாவது, ஒரு ஹனபி முசுலிம், அவருடைய வாழ்நாளில் தம்மை பராமரித்துக் கொள்ளவும், பாதுகாத்துக் கொள்ளவும் வக்பு ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

ஷீயா வக்பின்படி, வக்பு அளிப்பவர், வக்பு சொத்தின் மீது தாம் வைத்திருக்கும் முழுச் சொத்துரிமையையும் துறந்து விடவேண்டும்.

(3) சுன்னீ வக்பின்படி, வக்பு சொத்தின் உடைமையை உடனடியாக தரும காரியங்களுக்கு ஒப்படைக்க வேண்டுமென்ற அவசியமில்லை. முதலில் உறவினர்களுக்கும், பிறகு தரும காரியங்களுக்கும் பயன்படுத்தலாம்.

ஷீயா வக்பின்படி, வக்பு சொத்தின் உடைமை ஒப்படைப்பு உடனடியாக நிகழ வேண்டும். அது நேரடியாக தரும காரியங்களுக்காக இருக்க வேண்டும்.

(3) தனியார் வக்பு மற்றும் பொது வக்பு - வேறுபாடுகள்:

(1) 'தனியார் வக்பு' என்பது குடும்ப வக்பு என்றும் அழைக்கப்படுகிறது. 'தனியார் வக்பு' என்பது உற்றார் உறவினர் நலனை முன்னிறுத்தி வக்பு ஏற்படுத்துவதாகும்.

'பொது வக்பு' என்பது பொதுவான காரியங்களுக்கு உடனடியாக பயனளிக்கும் வகையில் 'வக்பு' ஏற்படுத்துவதாகும்.

(2) தனியார் வக்பில், ஒரு வக்பின் பயனை, அதனை ஏற்படுத்தியவரின் உற்றார் உறவினர்களின் நலனுக்கு உடனடியாக கொடுத்து, அவர்கள் இல்லாமல் போகும் பொழுது அதை இசுலாம் அங்கீகரிக்கும் காரியங்களுக்காக பயன்படுத்தப் படுகிறது. இது 'வக்பு–அலல்–அவுலாது' என்றும் அழைக்கப்படுகிறது.

பொது வக்பில் அவ்வக்பின் பயன் பொதுக் காரியங்களுக்கும், ஏழைகளுக்கும், தருமங்கள் செய்வதற்கும் உடனடியாக பயன்படுத்தப்படுகிறது.

(3) 'தனியார் வக்பில் பயன் காலங்கடந்து விளைகிறது. அதாவது, முதலில் வக்பு செய்தவரின் குடும்பத்தவர்களே பயன்பெற வழி செய்யப்படுகிறது.

'பொது வக்பில்' பயன் உடனடியாக மக்கள் குலத்தினை அடைந்து விடுகிறது.

(4) 'தனியார் வக்பு' முதலில் செல்லுடைமையாகாது என பிரிவி கவுன்சிலால் கூறப்பட்டது. ஆனால், இதையொட்டி 1913–ல் இயற்றப்பட்ட வக்பு செல்லுடைமையாக்கும் சட்டம், மேற்கண்டவாறு உண்டாக்கப்பட்ட வக்புகள் செல்லும், என அறிவித்தது.

'பொது வக்பினை' ஆரம்பம் முதற்கொண்டே இசுலாம் சட்டம் அங்கீகரித்தது.

4. Doctrine of Cypres- Write Short notes. (சீப்ரோ கொள்கை அல்லது இயன்ற அளவுக் கோட்பாடு – சிறுகுறிப்பு வரைக.)

வக்பு அளிப்பவர் வக்பு ஏற்படுத்துவதன் நோக்கத்தைச் சந்தேகமற தெளிவுபடக் கூற வேண்டும். நோக்கம் தெளிவற்றதாகவோ, பொருள் விகற்பம் கொள்ளத்தக்கதாகவோ இருப்பின், ஆங்கில சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 'சீப்ரே' கொள்கையைப் பயன்படுத்தி, குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்கு இயன்றபடி பொருள் காண வேண்டியது நீதிமன்றங்களின் பொறுப்பாகும்.

அறுதியாவணம் எழுதி வைத்தவருக்குப் (Settlor) பொதுவாகத் தருமம் அளிக்கும் எண்ணமிருந்தது என்று ஆவணத்திலிருந்து தெரியவந்தால்,

(1) அவரால் குறிப்பிட்டுச் சொல்லப்பட்ட நோக்கங்களில் ஒன்றிரண்டு ஒவ்வாதவையாக இருந்தாலும், நீதிமன்றம் அவையொத்த சமய காரியங்களுக்கோ, தரும காரியங்களுக்கோ வக்பு சொத்தைப் பயன்படுத்தக் உத்தரவிடலாம்.

(2) அறுதியாவணத்தில் நோக்கம் எதுவும் குறிப்பிட்டுச் சொல்லப்படாமல் இருந்தாலோ, குறிப்பிட்டுச் சொல்லப்பட்ட நோக்கம் நடைமுறைக்கு ஒவ்வாததாக அல்லது செயற்படுத்தப்பட முடியாததாக இருந்தாலோ, 'சீப்ரோ' கொள்கையைப் பயன்படுத்தி வக்பு ஏற்படுத்தப்பட்ட சொத்தின் வருமானத்தை அதனுடன் நெருங்கிய நோக்கங்களுக்கோ, தொடர்புடைய நோக்கங்களுக்கோ இயன்ற அளவு பயன்படுத்த ஆணையிடலாம்.

(3) சொல்லப்பட்ட நோக்கங்களில் ஒன்று செயல்படத்தக்கதாயும், மற்றொன்று செயல்பட முடியாததாயும் கருதப்பட்டால், மொத்த வருமானத்தையும் செயல்படத்தக்க காரியத்திற்கே பயன்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிடலாம்.

5. How is a Mutawalli appointed? Discuss the powers of a Mutawalli to deal with the wakf property. Compare the postion of a Mutawalli with that of a Sajjadanashin. (முத்தாவல்லி எவ்வாறு நியமிக்கப்படுகிறார்? வக்பு சொத்தை கையாளுவதற்கு அவருக்குள்ள அதிகாரங்களை ஆராய்க. முத்தாவல்லியின் நிலையினை சஜ்ஜாதனுஷின் நிலையுடன் ஒப்பிடுக.)

(அல்லது)

Define wakf and point out of the essentials of a wakf. How is Mutawalli appointed? (வக்பினை வரையறை செய்து வக்பின் கூறுகளை சுட்டிக் காட்டுக. முத்தவல்லி நியமனம் எப்படி நிகழ்கிறது?)

(அல்லது)

Who is Mutawalli? Examine the scope of his powers over wakf property. (முத்தாவல்லி என்பவர் யார்? வக்ப் சொத்தின் மீது அவருக்குள்ள அதிகாரத்தின் அளவுகையை ஆராய்க.)

(அல்லது)

"A Muthawalli is not a trustee but merely a superintendent or manager" - Explain. ("முத்தாவல்லி என்பவர் பொறுப்பாண்மையர் அல்லர். அவர் ஒரு மேலாளர் அல்லது கண்காணிப்பாளர் மட்டுமே" – விளக்குக.)

(அல்லது)

Explain the power of a Mutawalli over wakf property. Is the office of Mutawalli transferable? How can a Mutawalli be removed? (வக்ப் சொத்தின் மீது முத்தாவல்லிக்கு உள்ள அதிகாரத்தை விளக்குக. முத்தாவல்லி பதவி மாற்றப்படக் கூடியதா? ஒரு முத்தாவல்லி எவ்வாறு நீக்கப்படுவார்?)

(அல்லது)

Powers of Mutawalli - Write short notes.

(அல்லது)

Mutawalli - Write short notes. (முத்தாவல்லி – சிறு குறிப்பு வரைக.)

முத்தாவல்லி என்பவர் யார்?

'வக்ப்' சொத்தை மேற்பார்வை செய்து, அதனை பராமரித்து வரும் பொறுப்பை உடையவரே, 'முத்தாவல்லி' எனப்படுகிறார்.

முத்தாவல்லி எவ்வாறு நியமிக்கப்படுகிறார்?

வக்பு அளிப்பதற்குண்டான அறுதியாவணம் எழுதி வைப்பவரே (Settlor) முத்தாவல்லியை நியமிப்பது வழக்கம். ஆவணத்தில் முத்தாவல்லியாக எவர் எவர் தொடர்ந்து வர வேண்டும் என்று கூறப்படாதிருந்தால் வக்பு அளித்தவரோ, அவருடைய வாரிசுகளோ, குடும்பத்திலுள்ள பிற உறவினர்களோ முத்தா வல்லியாக நியமிக்கப்படலாம். இசுலாமியர் அல்லாத ஒரு நபரையும் முத்தா வல்லியாக நியமிப்பதில் தடையேதும் இல்லை.

வக்பு சொத்தின் மீது முத்தாவல்லிக்குள்ள அதிகாரத்தின் அளாவுகை:

1. இசுலாமியச் சட்டப்படி 'வக்பு' ஏற்படுத்தப்பட்டவுடன் வக்பின் உரிமை அனைத்தும் ஆண்டவனைச் சேர்ந்தடைகிறது. அதன் பின்னர் எக்காரணத்தைக் கொண்டும் மூலப் பொருளின் சொத்துரிமை மாறுவதில்லை. அதனால் பயனடையும் உரிமை மட்டும் அவ்வப்போது மாறிக் கொண்டிருக்கும். வக்பு சொத்தைப் பராமரித்து வரும் நபரை முத்தாவல்லி, சஜ்ஜாதாநஷின், முஜாவர் என்று எந்தப் பெயர் சூட்டி அழைத்தாலும் அவருக்கு வக்பு சொத்தை பராமரிக்கும் உரிமையைத் தவிர, வேறெந்த உரிமையும் கிடையாது. முத்தாவல்லி, ஆங்கிலச் சட்டத்தில் கூறப் பட்டுள்ள 'பொறுப்புரிமையர்' (தருமகர்த்தா) (Trustee) ஆகார். இருவர் உரிமைகளும் வேறுபட்டதாகும்.

2. முத்தாவல்லிக்கு வக்பு சொத்தைப் பராதீனம் செய்யும் உரிமை கிடையாது. அதாவது, வக்பு ஆவணத்தில் வக்பு சொத்தைப் பராதீனம் செய்யும் உரிமை வழங்கப்பட்டிருந்தாலோ, நீதிமன்ற ஆணை பெற்று இருந்தாலோ அல்லாமல் வக்பு சொத்தைப் பராதீனம் செய்யும் உரிமை முத்தாவல்லிக்குக் கிடையாது. ஒருக்கால் வக்பு சொத்தை உரிமை பெறாது பராதீனம் செய்திருந்தால், பராதீனம் செய்வதைத் தவிர வேறு வழி ஏதும் கிடையாது என்று மெய்ப்பித்து அதை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டால், முன்மேவு (Retrospective) அனுமதி வழங்கலாம். வக்பு சொத்தை அடைமானம் வைக்கும் உரிமையும் முத்தாவல்லிக்குக் கிடையாது. எனினும் வேளாண்மை செய்யும் நிலமாயின் அதை மூன்றாண்டுகளுக்கும், தரிசு நிலமாயின் அதை ஓராண்டிற்கும் குத்தகைக்கு (lease) அளிக்க அவர் உரிமை பெற்றவராவார். மேற்குறிப்பிடப்பட்ட காலவரையறைக்கும் அதிகமான ஒரு காலவரையறைக்கு குத்தகைக்குக் கொடுக்க வேண்டுமானால், வக்பு ஆவணத்தில் அதற்குரிய அதிகாரம் வழங்கப்பட்டிருந்தாலோ, நீதிமன்ற ஆணை இருந்தாலோ மட்டுமே அவர் அவ்விதம் செயல்பட உரிமை பெற்றவராவார்.

3. அறுதி ஆவணத்தில் அதிகார மாற்றத்திற்கு உரிமை வழங்கப்பட்டிருந் தாலன்றி, முத்தாவல்லி தம்முடைய அதிகாரத்தைப் பிறருக்கு மாற்றித்தர உரிமையற்றவராவார். முத்தாவல்லியின் பொறுப்பு, பரம்பரையாகக் கை மாறக்

கூடியதன்று. ஆயினும், வக்பு ஆவணத்தில் அதற்கு உரிமை வழங்கப்பட்டிருந் தாலோ, அது வட்டார வழக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டுவந்தாலோ முத்தாவல்லி எனும் பதவி பரம்பரை பரம்பரையாகக் கை மாறலாம்.

4. முத்தாவல்லி தாம் புரியும் ஊழியங்களுக்குத் தக்கபடி 'வக்பு' ஆவணத்தில் குறிப்பிட்டபடியோ, நீதிமன்ற ஆணையின் பேரிலோ சம்பளம் பெறத் தகுதியுடையவர் ஆவார். முத்தாவல்லியின் தகாத செயல்களுக்காக, வக்பு சொத்தின் மூலப் பொருளையோ, அதன் பயனையோ நீதிமன்ற ஆணையின் மீது 'ஜப்தி' செய்ய முடியாது. ஆனால், அதிலிருந்து கிடைக்கப்பெறும் முத்தாவல்லியின் சம்பளத்தை ஜப்தி செய்யலாம்.

5. வக்பு சொத்தின் பாதுகாப்பிற்காக முத்தாவல்லி தம்மாலியன்ற எல்லாக் காரியங்களையும் தக்க முறையில் முன்னெச்சரிக்கையோடு செய்து கொள்ளலாம்.

6. முத்தாவல்லியின் கைவசமோ, அவருடைய வாரிசுகளின் கைவசமோ இருக்கும் வக்பு சொத்தை மீட்பிப்பதற்குக் காலவரையறை இல்லை.

7. முத்தாவல்லி தம்முடைய செயல் அதிகாரத்தை வேறு ஒருவருக்கு அளித்திருந்தால், முத்தாவல்லியின் மரணத்தாலோ, மாற்றத்தாலோ அவர் அளித்த அதிகாரம் முடிவடைந்துவிடும்.

8. தம்முடைய கடமைகளைச் சரிவரச் செய்து வருவதன் பொருட்டு, முத்தாவல்லி தக்க வேலையாள்களையும், முகவர்களையும் (Agents) நியமித்துக் கொள்ளலாம்.

9. முத்தாவல்லி வக்பு சொத்தை அதிகாரமின்றிப் பராதீனம் செய்ய நேர்ந்தால் சட்டம் நிருணயிக்கும் காலக்கெடுவுக்குள்ளாக, அவர்மீது வழக்குத் தொடர்ந்து அதை மீட்பிக்க வேண்டும். அசையும் சொத்தாயிருப்பின் மூன்று ஆண்டுகளுக்குள்ளாகவும், அசையா சொத்தாயிருப்பின் மாற்றம் செய்யப்பட்டதி லிருந்து பன்னிரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவும் வழக்குத் தொடர வேண்டும்.

6. Write a short note on Mosques and other Religious Institutions recognised by Islam. (பள்ளியும் இசுலாம் அங்கீகரிக்கும் வேறு தரும நிலையங்களும் பற்றி ஒரு குறிப்பு வரைக.)

1. பள்ளி (மசூதி) (Mosque):

பள்ளி என்பது இறைவனை இறைஞ்சும் தூய்மையான இடமாகும். இப்பள்ளியைக் கட்டுவதற்கென்று நிலத்தை வக்புச் செய்தால், அந்த இடத்தைத் தனியாகப் பிரித்துக் கொடுப்பதுடன், பாதை ஒன்றும் ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். ஒருமுறை பள்ளிக்கென்று ஒதுக்கப்பட்ட இடம் அது என்றென்றும் இறைவனின் திருத்தலமாகவே கருதப்படும் இங்கு எல்லா இசுலாமியர்களும் (சுன்னீ, ஷீயா) வேறுபாடின்றி ஆண்டவனைத் தொழுகை செய்யலாம்.

2. தைக்கா (Takia):

'தைக்கா' என்றால் 'உறையுள்', 'கொள்ளுமிடம்' எனப் பொருள்படும். தைக்கா என்பது பொதுவாக சமாதியையோ அல்லது புதைக்குழி உள்ள இடத்தையோ குறிக்கிறது. உலக இன்ப துன்பங்களுக்கு அப்பாற்பட்டு, இறைவனின் அருளையே நாடும் அடியார்களை **'ஃபக்கீர்' (Fakir)** என்பர். அத்தகையவர் தங்கி, தங்களின் திருப்பணிகள் மூலமும் பாமர மக்களைக் கவர்ந்து, அவர்கள் திரளாகக் கூடி அடியார்களின் கருத்துக்களைக் கேட்பதற்காக உள்ள இடத்தில் அமைக்கப்பட்ட கட்டிடத்தைத் தைக்கா எனலாம். தைக்கா, இசுலாம் ஏற்றுக் கொள்ளும் ஒரு தரும அமைப்பாகும். இதன் பொருட்டு வக்பு ஏற்படுத்தலாம்.

3. காங்க்காவும் தர்காவும் (Kankha and Dargha):

காங்காவும், தர்காவும் இசுலாம் அங்கீகரிக்கும் தரும அமைப்புகளாகும். காங்க்கா என்பது இந்து மதம் கூறும் **'மடம்'** என்பதை ஒத்து நிற்கிறது. அடியார் களின் திருப்பணிகளால் இசுலாமியப் பொதுமக்கள் ஈர்க்கப்பட்டு, அவர்களின் சமய அறிவுரைகளாலும், ஞானோபதேசங்களாலும் கவரப்பட்டு வருங்கால், அவர்கள் அனைவரும் பயன்பெற்றுச் செல்ல இடமளிக்கும் மடமே காங்க்கா ஆகும். ஆண்டவரின் அடியார் ஒருவர் தமது வாழ்நாளுக்குப் பிறகு இந்த இடத்தில் அடக்கம் செய்யப்பட்டால் அது **'தர்கா'** எனப்படும். இவை இரண்டின் பொருட்டு வக்பு ஏற்படுத்தலாம்.

4. இமாம் பாரா (Imambara):

ஒருவர் தம் வீட்டின் ஒரு பகுதியை மதச் சம்பந்தமான காரியங்களுக்கு அளித்திருந்தால், அப்பகுதி 'இமாம்பரா' எனப்படும். இது தனிப்பட்ட வக்பு ஆகும். பொதுமக்கள் அடிக்கடி இங்கு வரத் தொடங்கினால், இது 'பொது வக்பு' ஆகிவிடும்.

5. ஸூஜ்ஜாதா - நஷீன் (Sujjada - nishin):

பொதுவாக, 'காங்க்கா' ஸூஜ்ஜாதா–நஷீனுடைய கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவரும். ஸூஜ்ஜாதா–நஷீன் என்றால் 'தொழுகைப் பாயில் இருப்பவர்' என்று பொருள்படும். இவரையே முத்தாவல்லியாகவும் நியமிக்கலாம். ஆனால் முத்தா வல்லி, ஸூஜ்ஜாதா–நஷீனாக மாட்டார். ஸூஜ்ஜாதா–நஷீன் சமயத் திருப்பணி களின் பொருட்டு நியமிக்கப்படுவதால், தெளிந்த சமய அறிவு பெற்றவராகவும், இசுலாமியச் சட்டத்தை நன்கு அறிந்தவராகவும் இருப்பார். பெண்கள் இப் பொறுப்பை வகிக்க இயலாது.

6. முஜாவர் (Mujawar):

பள்ளி நிலங்களையும், தர்க்காவின் இடத்தையும் கவனித்து அவற்றின் சுற்றுப் புறங்களைத் தூய்மைப்படுத்தி, விளக்கேற்றி, சாம்பிராணி இடல் முதலான

அன்றாடப் பணிகளைச் செய்பவர்களே 'முஜாவர்' ஆவர். இவர்கள் முத்தாவல்லி மற்றும் ஸஜ்ஜாதா–நஷீன் ஆகியோர்களிடமிருந்து வேறுபட்டவர்கள். இப்பணிக்குப் பெண்களும் நியமிக்கப்படலாம்.

7. இமாம்:

ஆண்டவனை இறைஞ்சும் இடமான பள்ளிகளில் ஒன்றுக்கு மேற்பட்டவர் கூடிநின்று தொழுகை செய்யும் பொழுது, ஒரு தலைமையானவர் மற்றவர்களுக்கு முன்னின்று தொழுகை நடத்தினால் அவரே **'இமாம்'** எனப்படுவார். இவரன்றி ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு வழிகாட்டியாக இருந்து அவர்களுக்குக் கொள்கை விளக்கம் வழங்கி வருபவரையும், இசுலாமியக் கல்வி கேள்விகளில் தலைசிறந்த ஒருவரைப் பலரும் பின்பற்றினால், அவரையும் இமாம் என்றே அழைப்பர்.

8. முல்லா (Mulla):

பொதுவாகச் சமயத் திருப்பணிகளை முன்னின்று நடத்தி வைப்பவர் **'முல்லா'** எனப்படுவார். இவர் திருமணம், பிறப்பு இறப்பு ஆகியவற்றின் சடங்குகளை நடத்தி வைப்பார்.

9. காஜி (Kazhi):

முஹம்மது நபி (சல்) அவர்களுக்கும், கலீபாக்களுக்கும் பின், நீதித்தீர்ப்பு அளிக்கும் பொருட்டு, அரச பரம்பரையினரால் நியமிக்கப்பட்டவர்களே காஜி எனப் பட்டனர். இவர்கள் இசுலாமியச் சமய ஞானமும், சட்ட நுணுக்கமும் பெற்று, தூய்மையான மனத்தவராய், நேர்மை நெறி பிறழாமல் செயல்பட்டு வந்தனர். இசுலாமியச் சமய சம்பந்தமான துறைகளில் கருத்துத் தெரிவிக்கத்தக்கவர் என்றே இவர்கள் இன்றும் கருதப்படுகின்றனர்.

10. கப்ருஸ்தான்:

கப்ருஸ்தான் என்பது இறந்தவர்களைப் புதைக்குமிடம் என்று பொருள் படும். இவ்விடங்களில் சமாதி எதுவும் எழுப்பக் கூடாது என்று சமயக் கட்டளை இருந்தபோதிலும், பழக்க வழக்கத்தின் காரணமாக சமாதிகளும், நினைவுக் கம்பங்களும் இவ்விடங்களில் எழுப்பப்பட்டு வருகின்றன.

11. முஃப்தி (Mufte):

இவர்கள் இசுலாமியச் சட்ட வல்லுநர்கள் ஆவர். இஸ்லாமியச் சட்ட அடிப்படையில் இவர்களால் வழங்கப்படும் தீர்ப்பு (ஃபத்வா) உலக அங்கீகாரம் பெற்றதாகும்.

-oOo-

4 சொத்து நிருவாகம் [Administration of Estate]

Write an essay on Administration of Estate under Islam Law.
(முகம்மதியர் சட்டத்தின் கீழ் சொத்து நிருவாகம் பற்றி கட்டுரை ஒன்றினை வரைக.)

சொத்து நிருவாகம் - விளக்கம்:

இறந்தவர் விட்டுச் சென்ற சொத்திலிருந்து அவர் பட்ட கடனைத் தீர்த்தது போக மீதி இருப்பதைச் சொத்துரிமை இறக்கம் பெற்ற வாரிசுகளுக்கு அவரவருக்குரிய விகிதப்படி பங்கு பிரிக்கப்பட வேண்டும். இறந்தவர் சொத்தை விட்டுச் சென்ற நாளிலிருந்து அதை வாரிசுகளுக்குப் பங்கிட்டு அளிக்கும் நாள் வரை அச்சொத்தை நிருவகித்து வருவதைச் 'சொத்து நிருவாகம்' என்கிறோம்.

சொத்தை நிருவகிக்கும் முறை:

I. சொத்திலிருந்து முதலில் கடன்களைத் தீர்த்தல் வேண்டும்:

இறந்தவர் விட்டுச் சென்ற சொத்திலிருந்து, அவரால் விட்டுச் செல்லப் பட்ட கடன்களை முதலில் தீர்க்க வேண்டும். பின்வரும் முறைப்படி அவரது கடன்கள் தீர்க்கப்பட வேண்டும்.

1. இறுதிச் சடங்கின் பொருட்டு ஏற்பட்ட செலவுகளும், மரணப் படுக்கையில் அவர்பட்ட கடன்களும் முதலில் தீர்க்கப்படவேண்டும்.

2. இறந்தவருக்குப் பின் உயில் மெய்பிதழ் (Probate), நிருவாக அதிகாரப் பத்திரம் (Letters of Administration) ஆகியவற்றைப் பெறுவதில் ஏற்பட்ட செலவுகளுக்குண்டான தொகையைக் கொடுத்து தீர்க்க வேண்டும்.

3. மரணமடைந்தவர் உயிர் வாழ்ந்த இறுதி மூன்று மாதங்களுக் குள்ளாக அவருக்குப் பணிவிடை செய்தவர்களுடைய கூலி கொடுக்கப்பட வேண்டியிருந்தால், அது கொடுக்கப்பட வேண்டும்.

4. இறந்தவரால் விட்டுச் செல்லப்பட்ட கடன்களைத் தீர்க்க வேண்டும்.

5. இறந்தவர் உயில் மூலம் தமது சொத்தில் மூன்றில் ஒரு பங்கைக் கொடையளித்திருந்தால், அது கொடுக்கப்படவேண்டும்.

II. பின்னர் சொத்தைப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும்:

மேற்கூறிய கடன்கள் தீர்க்கப்பட்ட பின், மீதமுள்ள சொத்தை, சொத்தில்

உரிமை பெற்ற வாரிசுகளுக்கு அவரவருக்குரிய விகிதத்தைப் பொறுத்து, இறந்தவர் சுன்னீ இசுலாமியராக இருந்தால் அவர்களது சட்டப்படியும், அவர் ஷீயா இசுலாமியராக இருந்தால் அவர்களின் சட்டப்படியும் பங்கு பிரித்துக் கொடுக்க வேண்டும்.

சொத்தை நிருவகிப்பதில் நிறைவேற்றாளர்களின் இடம்:

இறந்தவர் ஒரு செல்லும் புள்ளியாக (Solvent) இருந்தால், அவருடைய சொத்தில் உரிமை பெற்ற வாரிசுகளுக்கு அவரவர் விகிதப்படியான பங்கின் உரிமை அவர் இறந்ததுமே வந்தடைகிறது. இறந்தவர் பட்ட கடன்களை தீர்ப்பதற்கு முன்னதாகவே அவரின் வாரிசுகள் தங்களுக்குரிய விகிதப்படி அவரின் சொத்திற்கு உரிமையுடைவர் ஆகிவிடுகின்றனர். அவர்கள் பங்குபெறும் விகிதத் திற்கேற்ப, இறந்தவர் விட்டுச் செல்லும் கடன்களையும் தீர்ப்பதற்குக் கடமைப் பட்டவர்களாவர். இசுலாமியச் சட்டப்படி நிறைவேற்றாளர்கள் (Executors) நியமிக்கப்பட்டு, அவர்களே இப்பணியைச் செய்யலாம். ஆயினும் ஆங்கிலச் சட்டம் கூறுவதுபோல், நிருவாக அதிகாரப்பத்திரம் (Letter of Administration) பெறுதல் இசுலாமியச் சட்டத்தில் இல்லை. இச்சட்டப்படி நிறைவேற்றாளர் சொத்தைப் பராமரிக்கும் அதிகாரம் பெற்றவராவார். இவரை 'வாசி' **(Wasi)** என்றும் அழைப்பர்.

ஆனால் 1925–ஆம் ஆண்டின் இந்திய இறங்குரிமைச் சட்டத்தின் (Indian Succession Act, 1925) 316 முதல் 331 வரை உள்ள பிரிவுகளின் கீழ்க் கூறப்பட்டுள்ள உரிமையும், அதிகாரங்களும் இசுலாமியச் சட்டப்படி நியமிக்கப்பட்ட நிறைவேற்றாளர்களுக்கும் பொருந்துமாதலால், அவர் உயில் மெய்ப்பிதழ் பெற்றாலும் பெற்றாவிட்டாலும், இறந்தவர் விட்டுச் சென்ற சொத்து அவர்களிடம் வந்து சேர்கிறது. எனவே இவர் உயில் மெய்ப்பிதழ் பெறாமலும், வாரிசுகளின் இசைவு பெறாமலும் இன்றியமையாத் தேவையின் பொருட்டு அச்சொத்தைப் பராதீனம் செய்யும் உரிமையை மேற்படி இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் மூலம் பெற்றவராகிறார்.

இறந்தவருக்கு கடன் கொடுத்தவர்கள் தங்கள் கடனைத் திரும்பப் பெறுதல்:

இறந்தவருக்குக் கடன் கொடுத்தவர்கள் இருந்தால் அவர்கள் அனைத்து வாரிசுகளின் மீதும் வழக்குத் தொடர்ந்து கடனைத் திரும்பப் பெற முடியும். கடன் கொடுத்தவர் ஒரு சில வாரிசுகளின் மீது மட்டிலும் வழக்குத் தொடர்ந்து நீதிமன்ற ஆணை பெற்றால், அது மற்ற வாரிசுகளையும் கட்டுப்படுத்துமா என்பதில் நீதிமன்றங்கள் மாறுபட்ட தீர்ப்பை அளித்துள்ளன. இருப்பினும் பெரும்பாலான நீதிமன்றங்கள், கடன் கொடுத்தவர் சில வாரிசுகள் மீது மட்டுமே வழக்குத் தொடர்ந்து தீர்ப்பாணை பெற்றால், அது அந்த ஒரு சிலரை மட்டுமே கட்டுப் படுத்தும் என்றும், அவர்களும் தமக்கு பிரித்து அளிக்கப்பட்ட பங்கு விகிதப்படியே கடனைக் கட்ட வேண்டியவர்கள் ஆவர் என்றும் தீர்ப்பளித்துள்ளன.

இசுலாமியச் சட்டத்தில் இந்து மதச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது போல் பிரதிநிதித்துவ வாரிசு முறை (Representation) ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆகவே இறந்தவரின் சொத்தில் பங்கு கொடுக்கப்படாதிருந்த போதிலும், ஒரு வாரிசின் செயல்கள் மற்றவர்களைக் கட்டுப்படுத்தாது.

பொதுச் சொத்து பராமரிப்பவர் சட்டம் (The Administrator General Act):

இறந்தவர், பெருநகர் பிரிவுக்குள்ளாகச் சொத்துக்களை விட்டுச் சென்றிருந்தால், அவற்றைப் பொதுச் சொத்து பராமரிப்பவர் சட்டத்தின் கீழ் நிருவகிக்க முடியும். சொத்தில் உரிமை பெற அக்கறை கொண்டவர்களோ, கடன் காரர்களோ, உயில் வழியாகச் சொத்து பெற்றவர்களோ, இறந்தவரின் உறவினர்களோ, நண்பர்களோ அல்லது பொதுச் சொத்தைப் பராமரிக்கும் பொது அதிகாரியோ அச்சொத்துக்களைப் பராமரிப்பதற்கான அதிகாரம் கேட்டு நீதிமன்றத்திற்கு மனு செய்யலாம்.

உயில் மெய்ப்பிதழும், நிருவாக அதிகாரப் பத்திரமும் (Probate and Letters of Administration):

இசுலாமியர் ஒருவர் எழுதி வைத்துள்ள உயிலுக்கு உயில் மெய்பிதழ் (Probate) நீதிமன்றத்திலிருந்து பெற வேண்டியதில்லை. இருப்பினும் உயில் தக்க முறையில் நிரூபிக்கப்பட வேண்டும். உயில் நிறைவேற்றாளர் நியமனம் பெற்றிருந்தால் இறந்தவர் விட்டுச் சென்ற சொத்து அவரைச் சார்ந்து விடுவதால், நிரூபணச் சான்று இல்லாமலும், மற்ற வாரிசுகளின் சம்மதமில்லாமலும் விற்கலாம். இறந்தவர் உயில் எழுதி வைக்கவில்லையென்றால், நிருவாக அதிகாரப் பத்திரம் (Letters of Administration) நீதிமன்றத்திலிருந்து பெற வேண்டியதில்லை. ஆனால் இறந்தவருக்குப் பிறரிடம் இருந்து கடன் எதுவும் வரவேண்டியிருந்தால் அந்நிலையில் உயில் மெய்ப்பிதழ் அல்லது நிருவாக அதிகாரப் பத்திரம் அல்லது வாரிசுரிமைச் சான்றிதழை (Succession Certificate) நீதிமன்றத்திலிருந்து பெற வேண்டும்.

-o0o-

5 அண்டைச் சொத்தில் முற்படு விலை கொள் உரிமை (அல்லது) ஷுஃபா [Pre-emption (or) Shufaa]

What is Shuffa or Pre-emption? Who are all entitled to the right of Pre-emption? (ஷுஃபா அல்லது அண்டைச் சொத்தில் முற்படு விலை கொள்உரிமை என்ன என்பதை பற்றி கூறி யார் யார் அவ்வுரிமை பெற தகுதியுடையவர்கள் என்பதை விளக்கவும்.)

(அல்லது)

What is Pre-emption in Muslim law? Explain the procedure to claim the pre-emptory right. (முகம்மதிய சட்டத்தில் சொத்தை வாங்கும் முன்னுரிமை என்றால் என்ன? சொத்தை வாங்கும் முன்னுரிமையைப் பெறுவதற்கான நடைமுறையை விளக்குக.)

(அல்லது)

Pre - emption - Write short notes. (வாங்கு முன்னுரிமை – சிறுகுறிப்பு வரைக.)

அண்டைச் சொத்தில் முற்படு விலைகொள் உரிமை (அல்லது) ஷுஃபா - விளக்கம்:

ஒரு சொத்து வேறு ஒரு மூன்றாவது நபருக்கு விற்கப்பட்டால் அதனுடைய அண்டைச் சொத்துக்காரர், அதே சொத்தை அதே விலைக்குத் தமக்குத் தருமாறு கேட்கும் உரிமை பெற்றவராவர். இந்த உரிமை இசுலாமிய விற்பனைச் சட்டத்தில் 'அண்டைச் சொத்தில் முற்படு விலைகொள் உரிமை' அல்லது 'ஷுஃபா' என்றழைக்கப்படுகிறது. இசுலாமிய விற்பனைச் சட்டம் இந்தியாவில் முழுமையாக நீக்கப்பட்டுவிட்டு போதிலும், சில மாநிலங்களில் இந்த உரிமை அண்டைச் சொத்துக்காரர்களுக்கு அளிக்கப்படுகிறது. அண்டைச் சொத்தில் சொத்துரிமை பெற்றிருக்கும் காரணத்தால், விற்கப்பட்ட அண்டைச் சொத்தை விற்கப்பட்ட அதே விலைக்கே தமக்குத் தருமாறு கேட்கும் உரிமையை இசுலாமியச் சட்டம் அனுமதிக்கிறது.

இந்தியாவில் இந்த உரிமையானது, பொதுச் சட்டமாக ஏற்றுக் கொள்ளப்

படவில்லையாதலால், சில மாநிலங்களிலுள்ள உயர் நீதிமன்றங்கள், சொத்தை விற்றவரும், அதை வாங்கியவரும், அண்டைச் சொத்தில் முற்படு விலைகொள் உரிமை கோருபவரும் இசுலாமியர்களாக இருந்தாலும், இந்த உரிமையை வழங்குவதில்லை.

ஆனால், சில மாநிலங்களிலுள்ள நீதிமன்றங்கள் நீதி, நியாய, நேர்மை, மனசாட்சி அடிப்படையில் இந்த உரிமையை இசுலாமியர்களுக்கு வழங்கி வருகின்றன. மேலும் சில மாநில உயர் நீதிமன்றங்கள் இந்தச் சலுகையை இசுலாமியர்களுக்கு மட்டுமின்றி, எல்லோருக்குமே ஒருசேர வழங்கி வருகின்றன.

எனினும் தனி நபரிடையே சொத்து மாற்றம் இயல்பாய் நடைபெற முட்டுக் கட்டையாக இருப்பதால், தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள நீதிமன்றங்களில் நீதி, நியாய, நேர்மை, மனசாட்சி அடிப்படையில் இந்த உரிமை ஏற்றுக் கொள்ளப் படுவதில்லை.

ஆனால், குஜராத் மாநிலத்தில் இந்துக்களுக்கும் இசுலாமியர்களுக்கும் இந்த உரிமை ஒருசேர வழங்கப்பட்டு, நீதி வழங்கப்படுகிறது. பஞ்சாப் மாநிலத்தில் மேற்கண்ட உரிமைக்கு சட்ட அங்கீகாரம் அளிப்பதற்காக தனியாக ஒரு சட்டமே இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் மூலம் மேற்கண்ட உரிமை, இந்துக்களுக்கும் இசுலாமியர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

யார் யார் இவ்வுரிமை பெறத் தகுதியுடைவர்கள்?

ஹனபிச் சட்டப்படி, கீழ்க் குறிப்பிடப்பட்டவர்கள் அண்டைச் சொத்தில் முற்படு விலைகொள் உரிமைப் பெறத் தகுதியுடைவர்களாவர்.

1. ஒரே சொத்தில் உடன் பங்குதாரராய் (Co-Shared) இருப்பவர்கள்.

2. பல ஆண்டுகளாக ஒங்கு சொத்து வைத்திருப்பவர் (Dominant Owner), ஒடுங்கு சொத்து வைத்திருப்பவர் (Servient Owner) மீது இவ்வுரிமையைப் பெற்றிருப்பர்.

3. அண்டைச் (பக்கத்து) சொத்தின் முழு உரிமையாளர்கள்.

இம்மூன்று பிரிவினரும் ஒருவர்பின் ஒருவராய் அடுத்தடுத்து வரிசையாய் உரிமை பெறத் தகுதியுடையவர்களாவர். இதில் ஒரே பிரிவில் ஒன்றுக்கு மேற் பட்டவர்கள் இருந்தால், அவர்கள் சமமாய்ப் பங்கு பெற உரிமையுடைவர்கள் ஆவர்.

மூன்றாவதாகக் கூறப்பட்ட பிரிவு அனைத்துச் சொத்திற்கும் பொருந்தாது. ஜமீன்தாரி நிலம், எஸ்டேட் போன்ற நிலங்களுக்கு இதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

அதுபோல், அசையா சொத்துக்களில் மீது மட்டுமே இந்த உரிமை கோர முடியுமே தவிர, அசையும் சொத்துக்களில் இந்த உரிமையைக் கோர முடியாது.

மேலும், அண்டைச் சொத்து விற்கப்பட்டாலன்றி, இந்த உரிமை (அண்டைச் சொத்து முற்படு விலைகொள் உரிமை) கோருபவருக்கு எழாது, அண்டைச் சொத்து விற்கப்பட்டு, அதை வேறொருவர் வாங்கிய பின்னரே, இந்த உரிமை எழுகிறது.

சொத்தை விற்றவரும், அண்டைச் சொத்தில் முற்படு விலை கொள் உரிமை கோருபவரும் இசுலாமியர்களாக இருக்க வேண்டும் என்பதில் நீதிமன்றங் களிடையே கருத்து வேற்றுமை காணப்படுகிறது.

நடைமுறை (Procedure):

1. அண்டைச் சொத்தில் முற்படு விலைகொள் உரிமை கோருபவர், முதல் தடவையாக உடனடியாக உரிமை கோர வேண்டும். காலதாமதம் செய்தல் கூடாது.

2. அண்டைச் சொத்தை விலைகொடுத்து வாங்கியிருப்பவர்கள் பலராயிருப்பின், ஒரு இசுலாமியர், தான் அண்டைச் சொத்து முற்படு விலைகொள் உரிமையின் காரணமாய் விலை தரத் தயார் என்பதை எல்லோருக்கும் தெரிவிக்க வேண்டும். கடிதம் மூலமாகவும் தெரிவிக்கலாம்.

3. இரண்டு சாட்சிகள் முன்னிலையில் விற்றவரிடம், வாங்கியவரிடம் அல்லது விற்கப்பட்ட சொத்திலிருந்து, அவர் இந்த உரிமையைக் கோர வேண்டும்.

4. முதல் தடவையாகக் கேட்டுக் கிடைக்கவில்லையானால், இரண்டாவது முறை கேட்க வேண்டும். இருமுறை கேட்டும் கிடைக்கவில்லை யானால், மூன்றாவது முறையாக அவர் வழக்குத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட அண்டைச் சொத்தை தனக்கு விற்கும்படி கோர உரிமை பெற்றவராவார்.

-oOo-

6 இசுலாமியர்களின் மரபு முறை இறங்குரிமைச் சட்டம் [The Mohammedan Law of Inheritance]

அ. மரபுரிமை குறித்த பொது விதிகள்
A. General Principles of Inheritance

1. Discuss the general principles with regard to Mohammedan law of Inheritance (இஸ்லாமியரின் மரபுமுறை இறங்குரிமைச் சட்டம் குறித்த பொதுவிதிகளை விவாதிக்க.)

முன்னுரை:

இசுலாமியச் சட்ட மரபுமுறை இறங்குரிமை பற்றி நுணுக்கமாக தெரிந்து கொள்ளுமுன், அது தொடர்பான சில பொது விதிகளை அறிந்துகொண்டால், அது பின்வரும் வினாக்களின் விடைகளை எளிதில் புரிந்து கொள்வதற்கும், பங்குகளைப் பிரிப்பது தொடர்பான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் (Solving Problems) உதவியாக இருக்கும்.

பொது விதிகள்:

1. தனியான சட்டங்கள் கிடையாது:

இசுலாமியச் சட்டமானது, இந்துச் சட்டம் கூறுவதுபோல் அசையும் சொத்திற்கோ (Movable Property), அசையாச் சொத்திற்கோ (Immovable Property), மூதாதையர் சொத்திற்கோ (Ancestral Property) என்று தனிச் சட்ட விதிகள் எதையும் கூறவில்லை.

2. பிறப்பால் சொத்துரிமை இல்லை:

ஒருவன் ஒரு குடும்பத்தின் உறுப்பினராகப் பிறந்த காரணத்தால் மட்டுமே அவனுக்கு மூதாதையர் சொத்து கிடைப்பதில்லை. சொத்து பிரிக்கப்படும்பொழுது சொத்தைப் பெறுபவன் உயிருடன் இருக்க வேண்டும்.

3. பிரதிநிதித்துவக் கோட்பாடு (Doctrine of Representation):

பிரதிநிதித்துவக் கோட்பாட்டை இசுலாமியச் சட்டம் ஏற்றுக் கொள்ள வில்லை. **எடுத்துக்காட்டாக,** ஒரு சுன்னீ இசுலாமியர் தனக்குப் பின்னர் ஒரு

மகனையும், முன்னதாக இறந்துவிட்ட மற்றொரு மகனின் இரு பேரக் குழந்தைகளையும் விட்டுவிட்டு இறந்தால், **உயிருடன் இருக்கும் மகனே** தந்தையின் சொத்துக்கு உரியவனாவான். இரு பேரப்பிள்ளைகளுக்கும் பாட்டனின் சொத்தில் எவ்வித உரிமையும் கிடைக்காது. ஏனெனில் பாட்டன் உயிருடன் இருக்கும் பொழுதே இந்த இரு குழந்தைகளின் தந்தை இறந்து போனதால், சொத்துரிமை ஏற்படுவதற்கு முன்னரே, இக்குழந்தைகளின் தந்தை இறந்து போனதாக ஆகிறது. எனவே, அவன் உயிருடன் இருந்திருந்தால் அவனுக்கு என்ன பங்கு கிடைக்குமோ அதை அவனுடைய பிரதிநிதிகளாக நின்று இப்பேரக் குழந்தைகள் கேட்க முடியாது. இதை பின்வரும் வரைபடம் விளக்கும்.



சுன்னிக் கோட்பாட்டின்படி பிரதிநிதித்துவம் அங்கீகரிக்கப்படாததால், வாரிசுகள் தலைவிகித (தலா) முறையில் (Per-capita) சொத்துரிமை இறக்கப் பெறுவரே தவிர, கிளை விகித முறையில் (Per-stripes) அன்று.

4. தலைவிகித இறக்கம் (Succession per-capita):

ஹனபி சட்டத்தில் பிரதிநிதித்துவம் இல்லாததால், அங்கு தலை விகித இறக்கம்தான் பொருந்தும். **எடுத்துக்காட்டாக,** Z என்பவர் இறப்பதற்கு முன்னர் அவருடைய இரு மகன்களான A-யும், B-யும் இறந்து விடுகின்றனர். A-க்கு C,D,E என்ற மூன்று மகன்களும், B-க்கு F,G என்ற இரு மகன்களும் எஞ்சி இருந்தனர். பின்னர் Z இறந்து போகிறார். அவருடைய சொத்து ஹனபி சட்டம் அங்கீகரிக்கும் தலைவிகித இறக்கத்தை அனுசரித்து C,D,E,F,G என்ற 5 பேரக் குழந்தைகளும், சமமாகப் பங்கு பிரித்து, ஒவ்வொருவரும் 1/5 பாகம் பெறுவர்.



5. கிளைவிகித இறக்கம் (Succession per-stripes):

சுன்னீ சட்டத்தில் பிரதிநிதித்துவம் அங்கீகரிக்கப்படவில்லையென்றாலும் ஷியாச் சட்டத்தில் ஒரு குறிப்பிட்ட வரம்புக்கு உட்பட்டு அது அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது. சுன்னீ சட்டத்தில் உள்ளது போலவே ஷியாச் சட்டத்தின்படியும் பேரக் குழந்தைகள் உயிரோடு இருக்கின்ற மற்ற மகனோடு சேர்ந்து தங்கள் பாட்டனின் சொத்தில் சொத்துரிமை பெறமுடியாது. ஆனால் பாட்டனுக்கு அந்த இரண்டு மகன்களும் இறந்து போயிருந்தால், இருவரின் குழந்தைகளும் தத்தம் தந்தையின் பங்கில் பிரதிநிதிகளாக நின்று சொத்துரிமை பெறுவர். எனவே காலஞ் சென்ற இருவரின் குழந்தைகளும் கிளைவிகிதப்படி (Per-stripes) இறங்குரிமை பெற்றவராய், தந்தையின் பங்கை பிரதிநிதிகளாக நின்று பகிர்ந்து கொள்வர். அதாவது ஒரு மகன் பெற்ற பாகம், அவனது மகன்களின் எண்ணிக்கையைப் பொறுத்து மீண்டும் கிளை கிளையாகப் பிரிந்து செல்லலாம். இதுவே கிளைவிகித இறக்கமாகும்.



ஷியாச் சட்டப்படி கிளைவிகித இறக்கம் பெற்று, A-ன் 1/2 பங்கை C,D,E என்பவர்கள் சமமாய்ப் பங்கிட்டு (1/2 x 1/3) ஒவ்வொருவரும் 1/6 பங்கும், B-ன் 1/2 பங்கை F,G என்பவர்கள் சமமாய்ப் பங்கிட்டு (1/2 x 1/2) தலா 1/4 பங்கும் பெறுவார்கள்.

6. ஆயுள் சொத்துரிமையும் எஞ்சுரிமையும் (Life-estate and Vested Remainder):

ஆயுள் சொத்துரிமை (Life-estate) என்பது உதாரணமாக A-என்பவர் தன்னுடைய வீட்டையோ அல்லது வேறு சொத்தையோ B-என்பவருக்குக் கொடையாகக் கொடுத்து அவருடைய (B) வாழ்நாள் முழுவதும் அனுபவித்துவிட்டு அவர் இறந்த பின் அச்சொத்து C என்பவருக்குப் போய்ச் சேர வேண்டும் என்று கொடையில் குறிப்பிட்டிருந்தால், அந்நிலையில் B என்பவருக்கு A- ன் சொத்தில் ஆயுள் சொத்துரிமை இருக்கிறது என்பதை தெரிந்து கொள்ளலாம். C என்பவர், B இறந்தபின் A–யின் சொத்தை அடைபவர் என்பதால் C எஞ்சுரிமையர் (Vested remainder) எனப்படுவார்.

2. What are the grounds of disqualification from inheritance under Mohammedan law. (முகம்மதிய சட்டத்தின் கீழ் இறங்குரிமைப் பெறுவதிலிருந்து தகுதியின்மை அடைவதற்கான காரணங்கள் யாவை?)

முன்னுரை:

இறந்தவரின் சொத்துரிமை பெறும் வாரிசுகளாக இருந்தாலும், பின்வரும் காரணங்களைக் கொண்டு அவர்கள் அத்தகுதியை இழந்தவர்களாகக் கருதப் பட்டு, சொத்துரிமை இறக்கம் பெறாது முழுமையாக தள்ளப்படுவர்.

தகுதியின்மை அடைவதற்கான காரணங்கள்:

1. மரணம் விளைவித்தல் (Homicide): சுன்னீ (ஹனபி) சட்டப்படி ஒருவன் தெரிந்தோ, தெரியாமலோ, கவனக்குறைவாகவோ (Negligence), எதிர்பாராமலோ (Accident) மற்றொருவருடைய இறப்புக்குக் காரணமாக இருந்திருந்தால், இறந்தவருடைய சொத்தில் அவர் வாரிசுரிமை பெறும் தகுதியை இழந்து விடுவார்.

ஆனால் ஷீயா (Shia) சட்டப்படி ஒருவன் வேண்டுமென்றோ (Intentional) அல்லது தெரிந்தே ஒருவருடைய இறப்பிற்குக் காரணமாக இருந்தால் மட்டுமே அவன் இறந்தவருடைய சொத்தில் வாரிசுரிமை பெற முடியாது.

2. முறையிலா மணப்பிறப்பு (Illegitimacy): சுன்னி சட்டப்படி, முறையிலா மணப்பிறப்புக் குழந்தைகள், தாயின் சொத்தில் மட்டுமே சொத்துரிமை பெறத் தகுதியுடையவராவர். முறையிலா மணப்பிறப்புக் குழந்தை, தன்னுடைய தந்தையாக அனுமானிக்கப்படும் நபரின் (Putative Father) சொத்தில் சொத்துரிமை பெறாது பகுதியாக தள்ளப்படும். ஆனால் ஷீயாச் சட்டப்படி, முறையிலா மணப்பிறப்புக் குழந்தைகள் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவதால் தாயின் சொத்திலும், அனுமானத் தந்தையின் சொத்திலும் சொத்துரிமை கிடைக்கப் பெறாது முழுமையாகத் தள்ளப்படுவர்.

3. வழக்கம் (Custom): கிளையில் மூத்தானே தலைவாரிசு (Rule of Primogeniture) என்னும் விதியைக் குடும்ப வழக்கம் (Custom) காரணமாகப் பின்பற்றி வந்தால், இறந்தவரின் முழுச் சொத்துக்கும் மூத்தோனே பூரணமான உரிமையுடையவனாய்க் கொள்ளப்பட்டு, மற்றவர்கள் அனைவரும் முழுமையாகத் தள்ளப்பட்டு விடுவர்.

4. இயற்றப்பட்ட சட்டங்கள் (Statutes): இசுலாமியச் சட்டத்தில் சொத்துரிமைக்குத் தடையாகக் கருதப்படும் செயல்கள், இந்தியாவில் இயற்றப்பட்ட சட்டங்களின் மூலம் அங்கீகாரம் பெற்றுத் தடை நீக்கப்பட்டனவாகக் கருதப்படுகின்றன. இசுலாமியச் சட்டம் ஏற்படுத்திய தடைகளை, இயற்றப்பட்ட சட்டங்கள் நீக்கும் வல்லமை உடையன என்றால், அங்ஙனமே புதிய தடைகளை

ஏற்படுத்தவும் இயற்றப்பட்ட அந்தச் சட்டங்களுக்கு வல்லமை உண்டு. (எ–டு) 1886–ஆம் ஆண்டின் பம்பாய் வாட்டன்ஸ் சட்டம் (Watons Act, 1886).

5. ஹனபி மற்றும் ஷியாச் சட்டப்படி ஒரு மாற்றான் குழந்தை (Step-Child), மாற்றான் தந்தையிடமோ (Step-Father) மாற்றான் தாயிடமோ (Step-Mother) எவ்வித உரிமையும் கொண்டாட முடியாது.

6. இசுலாமியரல்லாதவர், ஒரு இசுலாமியருக்கு வாரிசாக முடியாது.

ஆ. ஹனபி சட்டத்தில் மரபுரிமை இறக்கம் (அல்லது) சுன்னீ சட்டத்தில் மரபுரிமை இறக்கம்
B. Hanafi (or) Sunny Law of Inheritance

3. Critically examine the rights of inheritance of the three principle classes of heirs under Sunny Law. (சுன்னிச் சட்டத்தின் கீழ் மூன்று முக்கிய வாரிசுப் பிரிவினர்களின் இறங்குரிமை குறித்து திறனாய்வு செய்க.)

(அல்லது)

Discuss the rules under the Hanafi law of Inheritance. (ஹனபி சட்டத்தின் கீழான இறங்குரிமை குறித்த விதிகளை விவாதிக்க.)

(அல்லது)

State the rules of Succession among sharers under Hanafi law. (ஹனபி சட்டத்தின்படி பங்குதாரர்களின் உரிமை இறக்க விதிகளை கூறுக.)

(அல்லது)

Describe the sharers and the extent of their respective shares under the Sunni Law. (சுன்னிச் சட்டத்தின் கீழ் பங்குதாரர்களையும் அவர்களுக்குண்டான பங்குகளின் அளவையும் விவரிக்க.)

(அல்லது)

Discuss the rules under the Hanafi law of Inheritance as applied to primary heirs. (முதல் நிலை வாரிசுகள் குறித்தான ஹனபி இறங்குரிமைச் சட்டத்தின் விதிகளை பற்றி விவாதிக்க.)

(அல்லது)

State the rights of Inheritance of the three classes of heirs under Hanafi Law. (ஹனபி சட்டத்தின் கீழ் மூன்று வகையான வாரிசு தாரர்களின் மரபுரிமையின் உரிமைகளைக் கூறுக.)

(அல்லது)

What are the three classes of heir under Hanafi Law of inheritance and state the rules of priority among them. (ஹனபி இறங்குரிமைச் சட்டத்தின் கீழ் உள்ள வாரிசுகளின் மூன்று வகைகள் யாவை? மேலும் அவர்களுக்குள்ள முன்னுரிமையின் விதிகளைக் கூறவும்.)

பொது விளக்கம்:

இறந்தவர் விட்டுச்சென்ற சொத்தை வாரிசுகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்கும்போது, இறந்தவர் இசுலாமிய மதத்தின் எந்தப் பிரிவினைச் சார்ந்தவர் என்று பார்த்து, அந்தப் பிரிவின் இறங்குரிமைச் சட்ட அடிப்படையில் பங்கு பிரித்துக் கொடுக்க வேண்டும். வாரிசுகள் எந்தப் பிரிவைச் சார்ந்தவர்கள் என்று ஆராய வேண்டிய அவசியம் இல்லை. ஒரு இசுலாமியர் இறக்கும்பொழுது 'சுன்னி' பிரிவைச் சார்ந்த இசுலாமியராக இறந்தால், அவருடைய சொத்தைச் சுன்னீச் சொத்துரிமைச் சட்ட அடிப்படையில் பங்கு பிரித்து வாரிசுகளுக்குக் கொடுக்க வேண்டும். சுன்னீப் பிரிவினரில் உள்ள ஹனபி சிறுபிரிவினரின் மரபுமுறை இறக்க சட்ட விதிகளே பொதுவாக பின்வருமாறு தரப்பட்டுள்ளது. பிரதிநிதித்துவக் கோட்பாடு கன்னீப் பிரிவினர்களுக்கு பொருந்தாது என்றும், தலைவிகித சொத்துரிமை இறக்கமே பொருந்தும் என்று முன்னரே கண்டோம்.

மூன்று முக்கிய பிரிவினர் :

ஹனபி (சுன்னி) சட்டப்படி இறந்தவர், சொத்தில் சொத்துரிமை பெறும் வாரிசுகளை பின்வரும் மூன்று வகையினராக பிரிக்கலாம். அவர்கள்,

1. பங்குதாரர்கள் (Sharers) (அஸ்ஹாபுல் பராயிலு)
2. எச்சதாரர்கள் (Residuaries) (அசஃபா)
3. தூரத்து உறவினர்கள் (Distant Kindred) (சவுல் அர்ஹாம்)

இவர்கள் பங்கு பெறும் முறையினையும், பங்கு பெறாமல் அரைகுறையாக அல்லது முழுமையாக தள்ளபடுவதையும், எஞ்சியதைப் பெறுவதையும், தூரத்து உறவினராகப் பங்கு பெறும் முறையினையும் பின்வருமாறு காணலாம்.

1. பங்குதாரர்கள் (Sharers)

பங்குதாரர்கள் என்பவர்கள் இறந்தவரின் சொத்தில் தமக்குச் சேர வேண்டிய குறிப்பிட்ட பங்கினைப் பெறுபவர்கள் ஆவர். இவர்கள் தமக்கென, திருக்குர் ஆன் வரையறுத்திருக்கும் குறிப்பிட்ட பங்கினை, இறந்தவர் சொத்தில் முதன்

முதலாகப் பெறுவதற்கு உரிமையுடையவர்கள் ஆவர். இறந்தவர் சொத்தினின்றும், வாரிசுகளுள் பங்குதாரர்களின் பங்கினை முதலில் கொடுத்துவிட வேண்டும். அதாவது பங்குதாரர்களுக்குச் சட்டம் வரையறுத்துக் கூறும் குறிப்பிட்ட பங்கினைக் கொடுத்த பின்னர், சொத்து எஞ்சியிருந்தால் அதை எச்சதாரர்கள் பெற முடியும். எனவே, பங்குதாரர்களின் பங்கு வரையறுக்கப்பட்ட, குறிப்பிட்ட பங்காகும். எச்சதாரர்களின் பங்கு எஞ்சியிருப்பதைப் பொறுத்து கூடலாம் அல்லது குறையலாம்.

ஹனபி சொத்துரிமைச் சட்டத்தின்படி, இறந்து போன இசுலாமியர் ஒருவர் விட்டுச் சென்ற சொத்தில் வாரிசுகளாகக் குறிப்பிடப்பட்ட பங்கினைப் பெறும் பங்கு தாரர்கள் மொத்தம் 12 பேர். அவர்களில் ஆண்கள் நால்வர். பெண்கள் எண்மர். அவர்கள் வருமாறு.

ஆண் பங்குதாரர்கள்:

1. கணவன் (Husband)
2. தந்தை (Father)
3. பாட்டன் (எ.த.மு.செ.) (True Grand Father)
4. தாய்வழிச் சகோதரன் (Uterine Brother)

பெண் பங்குதாரர்கள்:

5. மனைவி (Wife)
6. தாய் (Mother)
7. பாட்டி (எ.த.மு.செ.) (True Grandmother h.h.s.)
8. மகள் (Daughter)
9. மகனின் மகள் (எ.த.பி.செ.) (Son's Daughter)
10. தாய்வழிச் சகோதரி (Uterine Sister)
11. உடன் பிறந்த சகோதரி (Full Sister)
12. தந்தை வழிச் சகோதரி (Consanguine Sister)

மேற்கூறிய உறவுமுறை, இறந்தவருடன் ஒருவர் கொண்ட உறவு முறையாகும். (உ–ம்) இறந்தவரின் கணவன், இறந்தவரின் மனைவி எனக் கொள்ள வேண்டும்.

மேற்கண்டவர்களில் (1) கணவன், (2) மனைவி, (3) தந்தை, (4) தாய், (5) மகள் ஆகிய அய்வரும் எக்காரணத்தைக் கொண்டும் இறந்தவரின் சொத்தில் பங்கு பெறுவதிலிருந்து முழுமையாகத் தள்ளப்படமாட்டார்கள். இவர்கள் உயிருடன் இருந்தால், இறந்தவர் சொத்தில் நிச்சயம் தங்களுக்குரிய பங்கினைப் பெறுவார்கள். அதே சமயத்தில் இறந்தவருடைய மகன் உயிருடன் இருந்தால், அவர் ஒரு எச்சதாரராக இருப்பினும், எக்காரணத்தைக் கொண்டும், பங்கு பெறாது தள்ளப்படமாட்டார். மகன் உயிருடன் இருந்தால் இறந்தவர் சொத்தில் எச்சதாரராய் நின்று நிச்சயம் பங்கு பெறுவார். எனவே இவ்வாறு நிச்சயமாக பங்கு

பெறும் உரிமையுடைய மேற்கண்ட ஆறு வாரிசுகளை, **'முதல் நிலை வாரிசுகள்' (Primary Heirs)** என இசுலாமியச் சட்டம் அழைக்கிறது.

1. கணவன் :

கணவன் பங்குதாராராக மட்டுமே வருவான். இறந்தவருக்குக் (மனைவிக்கு) குழந்தை அல்லது மகனின் குழந்தை இருக்கும் பொழுது கணவனுக்கு இறந்தவரின் சொத்தில் 1/4 பங்கு கிடைக்கும். குழந்தை அல்லது மகனின் குழந்தை இல்லாத பொழுது கணவனுக்கு இறந்தவரின் சொத்தில் 1/2 பங்கு கிடைக்கும்.

2. தந்தை :

இறந்தவரின் தந்தை பங்குதாராராய் 1/6 பங்கு பெறுவார். சில சமயங்களில் எச்சதாராராய் எஞ்சியிருப்பதைப் பெறுவார். இன்னும் சில சமயங்களில் பங்குதாராராயும், எச்சதாராராயும் (இரு வழிகளில்) பங்கு பெறுவார். சற்று விளக்கமாக வருமாறு. அதாவது (1) இறந்தவருக்குக் குழந்தைகளோ, மகனின் குழந்தைகளோ (எ.த.பி.செ.) இருந்தால், இறந்தவரின் தந்தை பங்குதாராராய் 1/6 பங்கு பெறுவார். (2) அவ்வாறு குழந்தைகளோ, மகனின் குழந்தைகளோ இல்லாதிருந்து, மற்றப் பங்குதாரர்கள் இருந்தால், அவர்களுக்குரிய பங்கைக் கொடுத்துவிட்டு, எஞ்சியிருப்பதை எச்சதாராராய் நின்று தந்தை எடுத்துக் கொள்வார். மேலும் இறந்தவரின் தாயுடன் பங்கு பெறும் பொழுது, எச்சதாராராய் எஞ்சியிருப்பதை எடுத்துக் கொள்வார். (3) இறந்தவரின் மகளுடன் தந்தை வாரிசாக நிற்கும் பொழுது, பங்குதாராராயும் எச்சதாராராயும் இரு வழிகளில் பங்கு பெறுவார். இறந்தவரின் மகளோ, மகனின் மகளோ மட்டும் வாரிசாக நிற்கும் பொழுது, தந்தை இரு வழிகளிலும் பங்கு பெறத் தகுதி பெறுகிறார்.

3. பாட்டன் (True Grand Father):

இறந்தவருக்குக் குழந்தையோ (மகன், மகள்) அல்லது மகனின் குழந்தையோ (Child of a Son) இருந்து, தந்தை இல்லாத பொழுது பாட்டன் பங்குதாராராக வருவார். அவருக்கு இறந்தவரின் சொத்தில் 1/6 பங்கு கிடைக்கும். இறந்தவருக்கு குழந்தையோ அல்லது மகனின் குழந்தையோ இல்லாத பொழுது, பாட்டன் பங்குதாராராக இல்லாமல் எச்சதாராராக வருவார்.

குறிப்பு : தந்தையும், பாட்டனும் மட்டுமே இறந்தவரின் சொத்தில் பங்குதாராராகவும், எச்சதாராராகவும் ஒரே நேரத்தில் பங்கு பெற முடியும்.

4. மனைவி - விதவை (Wife - Widow):

மனைவி – விதவை பங்குதாராராக மட்டுமே வருவாள். இறந்தவருக்குக் குழந்தை அல்லது மகனின் குழந்தை இருக்கும்போது மனைவிக்கு இறந்தவரின் சொத்தில் 1/8 பங்கு (அதாவது கணவனுக்குக் கிடைப்பதில் பாதி அளவு)

கிடைக்கும். குழந்தை அல்லது மகனின் குழந்தை இலலாத பொழுது மனைவிக்கு இறந்தவரின் சொத்தில் 1/4 பங்கு கிடைக்கும்.

இசுலாமியச் சட்டப்படி, ஒருவர் நான்கு பெண்களை தனது மனைவி யாகக் கொள்ள முடியும். ஆனால் நான்கு பேருமே, மனைவி என்ற தகுநிலைக்குக் (status) கிடைக்கும் 1/8 அல்லது 1/4 பங்கைச் சரிசமமாகப் பிரித்துக் கொள்வர்.

5. தாய் (Mother):

தாய் இறந்தவரின் சொத்துக்குப் பங்குதாரராக மட்டுமே வரமுடியும். இறந்தவருக்குக் குழந்தை அல்லது மகனின் குழந்தை இருக்கும்பொழுது தாய்க்கு இறந்தவரின் சொத்தில் 1/6 பங்கு கிடைக்கும். மேலும் இறந்தவருக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சகோதரர்கள் இருக்கும்பொழுது அல்லது ஒரு சகோதரரும், ஒரு சகோதரியும் இருக்கும்பொழுது தாய்க்கு இறந்தவரின் சொத்தில் 1/6 பங்கு கிடைக்கும்.

இறந்தவருக்குக் குழந்தையோ, மகனின் குழந்தையோ, சகோதரனோ அல்லது சகோதரியோ இல்லாதவிடத்து, தாய்க்கு இறந்தவரின் சொத்தில் 1/3 பங்கு கிடைக்கும்.

மேலே கூறிய சூழ்நிலையில் கணவனோ, மனைவியோ அல்லது தந்தையோ இருக்கும்பொழுது, அவர்களுடைய பங்கு போக மீதம் உள்ளதில் 1/3 பங்குதான் தாய்க்குக் கிடைக்கும்.

6. பாட்டி (True grand Mother) :

இறந்தவரின் பாட்டி, அவரது சொத்தில் 1/6 பங்கைப் பெறுவார். ஒன்றுக்கு மேற்பட்ட பாட்டிகள் இருந்தால் 1/8 பங்கினைச் சமமாகப் பிரித்துக் கொள்வர்.

7. மகள் (Daughter):

மகன் இல்லாதபொழுது மகள் பங்குதாரராக வந்து இறந்தவரின் சொத்தில் 1/2 பங்கைப் பெறுவாள். இந்நிலையில் இரண்டிற்கு மேற்பட்ட மகள்கள் இருந்தால், அவர்கள் பங்குதாரர்களாக இருந்து 2/3 பங்கினைப் பெற்றுத் தங்களுக்குள் சமமாகப் பிரித்துக் கொள்வர்.

மகன் இருக்கும் பொழுது மகள் எச்சதாரராக இருப்பாள். மகன் ஒரு பொழுதும் மகளை இறந்தவரின் சொத்தில் பங்கு பெறுவதில் இருந்து தள்ளி விடுவதில்லை. எனவே இறந்தவருக்கு மகன் இருந்தால், மகன் எச்சதாரராக 2 பங்கும், மகள் 1 பங்கும் பெறுவர்.

8. மகனின் மகள் (Son's Daughter):

மகன் பங்குதாரராக (Sharer) இருக்கும்பொழுது, அவனுடைய

குழந்தைகள் அவனுக்குப் பதிலாக உரிமைக்கு வருவார்கள். மகன் உயிருடன் இருக்கும் பொழுது அவனுடைய குழந்தைகளை உரிமை பெறுவதிலிருந்து தள்ளி விடுவான். ஒருபடி முந்திய அல்லது ஒருபடி பிந்திய மகனின் மகன் (Higher son's son or Lower son's son) அல்லது ஒத்த மகனின் மகன் (Equal son's son) இருந்தாலும், மகனின் மகள் பங்குதாரராய்ப் பங்கு பெறாது தள்ளப்படுவாள். எனினும் ஒத்த மகனின் மகனோடு, மகனின் மகள் எச்சதாரராய் பங்கு பெறுவாள்.

மகன், மகள் மற்றும் மேற்குறிப்பிட்ட வாரிசுகள் எவரும் இல்லாதிருந்து, ஒரே மகனின் மகள் மட்டும் இருந்தால், அவள் 1/2 பாகத்தை பங்குதாரராய் நின்று பெறுவாள். இவளைப் போல் ஒன்றுக்கு மேற்பட்ட மகனின் மகள்கள் இருந்தால் அனைவரும் 2/3 பங்கினைச் சமமாகப் பிரித்துக் கொள்வர்.

இறந்தவருக்கு ஒரே ஒரு மகள் மட்டும் இருக்கும் பொழுது மகனின் மகளின் பங்கு 1/6 பங்காகக் குறைந்துவிடும். ஏனெனில் மகளின் குழந்தைகள் தூரத்து உறவினர்களாக வருவார்கள்.

9 & 10. தாய்வழிச் சகோதரனும், தாய்வழிச் சகோதரியும் (Uterine Brother and Uterine Sister) :

ஒரு பொதுவான தாய்க்கு வெவ்வேறான தந்தையின் மூலம் பிறந்த சகோதரர்கள், சகோதரிகள் இருந்தால் அவர்கள் தாய்வழிச் சகோதரர்கள், தாய்வழிச் சகோதரிகள் என அழைக்கப்படுவர்.

மகன் அல்லது மகனின் குழந்தைகள் (எத்தனை தலைமுறை பிந்திச் சென்றாலும்) தந்தை அல்லது பாட்டன் ஆகியோர்கள் உயிருடன் இருந்தால், தாய்வழிச் சகோதரனுக்கு எப்பங்கும் கிடைக்காது. மேற்படியார்கள் அவனைப் பங்கு பெறுவதிலிருந்து தள்ளி விடுவார்கள். அவ்வாறு தள்ளாதபோது தாய்வழிச் சகோதரனின் பங்கு 1/6 ஆக இருக்கும். இரண்டும் அதற்கு மேற்பட்ட தாய்வழிச் சகோதரர்கள் இருந்தால் அவர்களுக்கு 1/3 பங்கு கிடைக்கும். இதுபோன்றே தாய்வழிச் சகோதரிக்கும் பங்கு கிடைக்கும்.

11. முழுச் சகோதரி (அல்லது) உடன்பிறந்த சகோதரி (Full Sister):

முழுச் சகோதரி மட்டும் இருக்கும்பொழுது அவளுடைய பங்கு 1/2 ஆக இருக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட முழுச் சகோதரிகள் இருக்கும்பொழுது அனைவரும் 2/3 பங்கினைப் பெற்றுத் தங்களுக்குள் சமமாகப் பிரித்துக் கொள்வர்.

இறந்தவனுக்குக் குழந்தை, மகனின் குழந்தை, தந்தை, பாட்டன் மற்றும் முழுச் சகோதரர் (Full Brother) இல்லாத பொழுதுதான், முழுச் சகோதரிக்குப் பங்கு கிடைக்கும். எனினும் முழுச் சகோதரனுடன், முழுச் சகோதரி எச்சதாரராகப் (Residuary) பங்கு பெறுவாள்.

12. தந்தை வழிச் சகோதரி (Consanguine Sister) :

இவள் சில சமயங்களில் பங்குதாரராயும், சில சமயங்களில் எச்சதாரராயும் பங்கு பெறுவாள். சில சமயம் பங்கேதுமின்றி தள்ளப்படுவாள். அதாவது இறந்தவனுக்கு குழந்தைகள், மகனின் குழந்தைகள், தந்தை, தந்தையின் தந்தை, உடன்பிறந்த சகோதரன், உடன் பிறந்த சகோதரி, தந்தை வழி சகோதரி இருந்தால், அவர்கள் தந்தை வழிச் சகோதரியை பங்கு பெறுவதிலிருந்து தள்ளி விடுவார்கள். மேற்கண்ட வாரிசுகள் இல்லையானால், இறந்தவனின் சொத்தில் 1/2 பங்கையும், ஒன்றுக்கு மேற்பட்ட தந்தை வழிச் சகோதரிகள் இருக்கும் பொழுது, அவர்கள் 2/3 பங்கையும் அவள் பங்குதாரராய் (Sharer) நின்று பெறுவாள்.

மேற்கண்ட வாரிசுகள் இல்லாமல் இருந்து, உடன்பிறந்த சகோதரி ஒருத்தி மட்டும் இருந்தால், அவளுக்குக் கொடுக்கப்படும் 1/2 பங்கு போக மீதமுள்ள 1/6 பங்கை தந்தை வழிச் சகோதரி – ஒருத்தி மட்டும் இருந்தால் – அவள் எச்சதாரராய் (Residuray) நின்று பெறுவாள். ஒன்றுக்கு மேற்பட்ட தந்தை வழிச் சகோதரிகள் இருந்தால், அப்பங்கை அவர்கள் தங்களுக்குள் சமமாகப் பங்கிட்டுக் கொள்வர். மேலும் தந்தை வழிச் சகோதரி, தந்தை வழிச் சகோதரனுடன் இறந்தவரின் சொத்தில் எச்சதாரராகப் பங்கு பெறுவாள்.

பிரச்சனைகள் [Problems]

(i) ஒரு கன்னி (ஹனபி) இசுலாமியர் பின்வரும் வாரிசுகளை விட்டுச் சென்றால், அவரவர்களுக்குக் கிடைக்கும் பங்குகளாவன :

(அ)	கணவன்	:	1/2 (இறந்தவருக்குக் குழந்தை இல்லாததால்)
	தந்தை	:	1/2 (எச்சதாரராய் மிஞ்சியதைப் பெறுகிறார்)
(ஆ)	கணவன்	:	1/4 (குழந்தையிருப்பதால்)
	மகன்	:	3/4 (எச்சதாரராய் மிஞ்சியதைப் பெறுகிறார்)

(ii) ஒரு சுன்னீ இசுலாமியர் பின்வரும் வாரிசுகளை விட்டுச் சென்றால், அவர்களுக்குக் கிடைக்கும் பங்குகளாவன.

(அ)	மனைவி	:	1/4 (குழந்தைகளோ மகனின் குழந்தைகளோ இல்லாததால்)
	தந்தை	:	3/4 (மிஞ்சியதை எச்சதாரராய்ப் பெறுகிறார்)
(ஆ)	மனைவி	:	1/8 (இறந்தவருக்கு குழந்தை இருப்பதால்)
	மகன்	:	7/8 (எச்சதாரராய் மிஞ்சியதைப் பெறுகிறார்)
(இ)	4 மனைவிகள்	:	ஒவ்வொரு மனைவியும் 1/16 பங்கு பெறுவர்.
	1/4 X 1/4 = 16		(குழந்தைகள் இல்லை)
	தந்தை	:	3/4 (எச்சதாரர்)

(ஈ) 3 மனைவிகள் : ஒவ்வொரு மனைவியும் 1/24 பங்கு பெறுவர்.
1/8 X 1/3 =1/24 (குழந்தைகள் உள்ளன)
மகன் : 7/8 (எச்சதாரர்)

(iii) ஒரு கன்னீ இசுலாமியர் கீழ்வரும் வாரிசுகளை விட்டுச் சென்றால், அவர்களுக்குக் கிடைக்கும் பங்குகளாவன :

(அ) தந்தை : 1/6 (குழந்தைகள் இருப்பதால் பங்குதாரராய், பங்கு மட்டிலும் பெறுகிறார்)
மகன் : 5/6 X 2/3 = 5/9 (எச்சதாரரர்)
மகள் : 5/6 X 1/3 = 5/18 (எச்சதாரி)

குறிப்பு: ஒரே தலைமுறையில் உள்ள ஆண்களும், பெண்களும் பங்கு பெறும் பொழுது, ஆணுக்கு இரண்டு பங்கும் பெண்ணுக்கு ஒரு பங்கும் கிடைக்கும். அதாவது, மொத்த பங்கு 3 என்றால், ஆணுக்கு 2 பங்கும் பெண்ணுக்கு ஒரு பங்கும் கொடுக்கப் பெறல் வேண்டும் (2 : 1)

(ஆ) தாய் : 1/3 (குழந்தைகள் இல்லை)
தந்தை : 2/3 (குழந்தைகள் இல்லாததால், மிஞ்சியுள்ள 2/3 பங்கையும் எச்சதாரராகப் பெறுகிறார்)

(இ) மகள் : 1/2 (பங்குதாரராய்)
தந்தை : 1/6 (பங்குதாரராய்) } 1/2
: 1/3 (எச்சதாரராய்) }

(iv) ஒரு சுன்னீ இசுலாமியர் கீழ்வரும் வாரிசுகளை விட்டுச் சென்றால், அவர்களுக்குக் கிடைக்கும் பங்குகளாவன :

(அ) தாய் : 1/3 (குழந்தைகள் இல்லை)
தந்தை : 2/3 (குழந்தைகள் இல்லை – எச்சதாரராய்)
தந்தையின்
தந்தை : 0 (குழந்தையால் தள்ளப்பட்டார்)

(ஆ) தந்தையின்
தந்தை : 1/6 (பங்குதாரர் – குழந்தை இருப்பதால்)
மகன் : 5/6 X 2/3 = 5/9 (எச்சதாரர்)
மகள் : 5/6 X 1/2 = 5/18 (எச்சதாரி)

(v) ஒரு சுன்னீ இசுலாமியர் கீழ்வரும் வாரிசுகளை விட்டுச் சென்றால், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பங்குகளாவன :

(அ) தாய் : 1/6 (பங்குதாரர் – குழந்தை இருப்பதால்)
மகன் : 5/6 (எச்சதாரர்)

(ஆ) தாய் : 1/6 (2 சகோதரிகள் இருப்பதால்)
தந்தை : 5/6 (குழந்தைகள் இல்லை – எச்சதாரர்)
2 சகோதரிகள் : 0 (கிளைவழியினர் ஆதலால், தந்தையால் தள்ளப்பட்டனர்).

(vi) ஒரு சுன்னீ இசுலாமியர் கீழ்வரும் வாரிசுகளை விட்டுச் சென்றால், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பங்குகளாவன :

(அ) தந்தையின் தாய்: (தந்தைவழிப் பாட்டி) தாயின் தாய் : (தாய்வழிப் பாட்டி) — 1/2 X 1/2 = 1/12; 1/6 பங்கை இருவரும் பங்கிட்டு தலா 1/12 பங்கு பெறுகின்றனர்.
தந்தையின் தந்தை : 5/6 (எச்சதாரர்)

குறிப்பு: தந்தையின் தந்தை இடைப்பட்ட பாட்டனாக இல்லாமல், தந்தையின் தாயோடு ஒத்த தலைமுறையினராதலால், தந்தைவழிப் பாட்டி பங்கு பெறாது தள்ளப்படவில்லை.

(ஆ) தந்தையின் தாய்: 0 (தந்தைவழிப் பாட்டியாக இருப்பதால், தந்தையால் தள்ளப்பட்டாள்.)
தாயின் தாய் : 1/6 (தாய்வழிப் பாட்டி ஆதலால், தந்தையால் தள்ளப்படவில்லை.)
தந்தை : 5/6 (எச்சதாரர்)

(இ) தந்தையின் தந்தையின் தாய் : 0 (தந்தையின் தந்தையால் தள்ளப்பட்டாள்.)
தந்தையின் தந்தை : 1 (ஒரு பங்கு முழுவதையும் எச்சதாரராய் நின்று பெறுகிறார்.)

குறிப்பு: இறந்தவருக்கும் தந்தைவழி கொள்ளுப்பாட்டிக்கும் (தந்தையின் தந்தையின் தாய்) இடைப்பட்ட பாட்டனாகத் தந்தையின் தந்தை நிற்பதால், தந்தைவழி கொள்ளுப்பாட்டி பங்கு பெறாது (0 பங்கு) அவரால் தள்ளப்பட்டாள். இறந்தவருடன் கொள்ளுப்பாட்டி தொடர்பு ஏற்படுத்திக் கொள்வது, தந்தையின் தந்தையின் (பாட்டனின்) மூலமே. எனவே, தந்தையின் தந்தை மூலம் இறந்தவரோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதால், தந்தையின் தந்தை வாரிசாகப் பங்கு பெறும் பொழுது, இவளுக்குப் பங்கு கிடையாது.

ஆனால் தந்தையின் தந்தையின் தாயினுடைய இடத்தில், தந்தையின் தாயின் தாய் இருந்தால், இவள் தந்தையின் தந்தையால் தள்ளப்படமாட்டாள். ஏனெனில், தந்தையின் தந்தையின் மூலம் இவள் இறந்தவரோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதில்லை. மாறாக, தந்தையின் தாய் மூலமாக இறந்தவரோடு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு நிற்கிறாள்.

(ஈ)	தந்தையின் தாய்: தாயின் தாயின்		0	(தந்தையால் தள்ளப்பட்டவர்.)
	தாய்	:	0	(தந்தையின் தாயால் தள்ளப்பட்டவர்.)
	தந்தை	:	1	(ஒரு பங்கு முழுவதையும் எச்சதாரராய்ப் பெறுவார்.)

(vii) ஒரு சுன்னீ இசுலாமியர் கீழ்வரும் வாரிசுகளை விட்டுச் சென்றால், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பங்குகளாவன :

(அ)	மகள்	:	1/2	(மகன் இல்லை – ஒரே மகள். பங்குதாரர்.)
	தந்தை	:	1/2	(பங்குதாரராய் 1/6 பங்கும், எச்சதாரராய் 1/3 பங்கும் இருவழிகளில் பெறுகிறார்.)
(ஆ)	தந்தை	:	1/6	(பங்குதாரர்)
	தாய்	:	1/6	(பங்குதாரர்)
	2 மகள்கள்	:	2/3	[மகன் இல்லை. ஒவ்வொரு மகளும் பங்குதாரராய் 2/3–ல் சமபங்கு (1/3) பெறுவர். அதாவது, 2/3 × 1/2 = 1/3].
(இ)	மகன்	:	2/3	(எச்சதாரர்)
	மகள்	:	1/3	(எச்சதாரர் – மகன் இருப்பதால்.)
(ஈ)	2 மகன்	:	4/7	(எச்சதாரர்)
	3 மகள்	:	3/7	(எச்சதாரர் – மகன் இருப்பதால்.)

குறிப்பு: ஒவ்வொரு மகனுக்கும் 2 பங்கு வீதம் ஈவு செய்து, 2 மகன்களும் மொத்தம் 4 பங்கும், ஒவ்வொரு மகளுக்கும் 1 பங்கு வீதம் பகிர்ந்து 3 மகள்களுக்கும் 3 பங்கும், ஆக மொத்தம் 7 பங்கு வைத்து, அதில் ஒவ்வொரு மகனுக்கும் 2/7 பாகமும், ஒவ்வொரு மகளுக்கும் 1/7 பாகமும் பிரித்துக் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு பிரித்துக் கொடுப்பது தொடர்பாக சூத்திரம் ஒன்று வழக்கில் உள்ளது. அதாவது, மொத்தமுள்ள மகன்களை இரண்டிரண்டாகப் பெருக்கி, மகள்களை ஒவ்வொன்றாகக் கூட்டி வருகிற தொகை மொத்தப் பங்காகும். உதாரணமாக, 4 மகன்களும், 5 மகள்களும் இருந்தால், மொத்தப் பங்கு (2×4) + 5 = 13 ஆகும். இதில் ஒவ்வொரு மகனும் 2/13 வீதமும், ஒவ்வொரு மகளும் 1/13 வீதமும் பாகம் பெறுவர். இப்படியே எத்தனை மகன் மகள் எண்ணிக்கையையும் பெருக்கிக் கூட்டலாம்.

(viii) ஒரு சுன்னீ இசுலாமியர் கீழ்வரும் வாரிசுகளை விட்டுச் சென்றால், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பங்குகளாவன :

(அ) 2 மகள்கள் : 2/3 (பங்குதாரர்)
மகனின் மகன் : 1/3 (எச்சதாரர்)
மகனின் மகனின் மகள் : 0 (2 மகள்களாலும், ஒருபடி முந்திய மகனின் பங்கு பெறாது தள்ளப்பட்டாள்)

(ஆ) மகனின் மகன் : 2/3 (எச்சதாரர்)
மகனின் மகள் : 4/3 (எச்சதாரி)
மகனின் மகனின் மகன் : 2/3 (எச்சதாரர்)
மகனின் மகனின் மகள் : 1/3 (எச்சதாரி)

குறிப்பு: ஒத்த மகனின் மகன் இருந்தால், மகனின் மகள் பங்குதாரராய் பங்கு பெற முடியாது. ஆனால் எச்சதாரராய் பங்கு பெறுவாள்.

(இ) மகனின் மகள் : 1/2 (இறந்தவருக்கு நாம் முன் கண்ட 8–வது பத்தியில் உள்ள வாரிசுகள் யாரும் இல்லை எனில். மேலும் ஒருத்தி மட்டும் இருந்தால்.)
தந்தை : 1/6 (பங்குதாரராய்) } 1/2
: 1/3 (எச்சதாரராய்) }

(ஈ) தந்தை : 1/6 (பங்குதாரர். மகனின் மகள் இருப்பதால்.)
தாய் : 1/6 (பங்குதாரர். மகனின் மகள் இருப்பதால்.)
இரு மகன்களின் மூன்று மகள்கள்: { 2/3X1/3 = 2/9. ஒவ்வொரு மகளும் 2/9 பங்கைப் பெறுவர் (பங்குதாரர்.)

குறிப்பு: சுன்னீச் சட்டத்தில் பிரதிநிதித்துவக் கோட்பாடு (Doctrine of Representation) அங்கீகரிக்கப்படாததால், தலைவிகித இறங்குரிமையை (Succession per capita) மேற்படி இரு மகன்களின் 3 மகள்களும் பெறுகின்றனர். மேலும் மேற்கண்டதில் 'இரு மகன்களின் மூன்று மகள்கள்' என்று குறிப்பிடப் பட்டிருப்பது, ஒரு மகனின் மகள் ஒருத்தியையும், மற்றொரு மகனின் மகள்கள் இருவரையும் குறிப்பதாகக் கொள்ள வேண்டும்.

(உ) தந்தை : 1/6 (பங்குதாரர்)
தாய் : 1/6 (பங்குதாரர்)
மகள் : 1/2 (பங்குதாரி)
மகனின் 4 மகள்கள் : 1/6X1/4 = 1/24 (பங்குதாரிகள்)

குறிப்பு: இறந்தவருக்கு ஒரே ஒரு மகள் மட்டும் இருப்பதால், மகனின் மகள் பங்கு பெறாது தள்ளப்படாமல், 2/3 பங்கில் மகளுக்கு 1/2 பங்கு கொடுத்தது போக மீதியிருக்கும் 1/6 (2/3 – 1/2 = 1/6) பங்கை, பங்குதாராய் நின்று மகனின் நான்கு மகள்களும் பங்கிட்டு, ஒவ்வொருவரும் 1/24 பங்கு பெறுகின்றனர். மகளுடைய பங்கும், மகனின் மகளுடைய பங்கும் சேர்த்து மொத்தம் 2/3–க்கு மிகாமல் இருக்க வேண்டும். இதே இடத்தில், ஒரே மகளுக்குப் பதிலாக, இறந்தவருக்கு 2 மகள்கள் இருந்தால், மகனின் மகள் பங்கின்றி தள்ளப்படுவாள்.

(ஊ) தந்தை : 1/6 (பங்குதாரர். குழந்தைகள் இருப்பதால்.)
தாய் : 1/6 (பங்குதாரி. குழந்தைகள் இருப்பதால்.)
2 மகள்கள் : 2/3 (பங்குதாரிகள்.)
மகனின் மகள் : 0 (மகள்கள் இருவர் இருப்பதால் அவர்களே 2/3 பாகத்தையும் தீர்த்து விடுவதால், மகனின் மகள் தள்ளப்பட்டாள்.)

(எ) தந்தை : 1/6 (பங்குதாரர்.)
தாய் : 1/6 (பங்குதாரி.)
மகனின் மகள் : 1/2 (பங்குதாரி.)
மகனின் மகனின் மகள் : 1/6 (பங்குதாரி.)

(ஏ) 2 மகள்கள் : 2/3 (பங்குதாரிகள்.)
மகனின் மகனின் மகன் : 1/3×2/4 = 1/6 (எச்சதாரர்.)
மகனின் மகனின் மகள் : 1/3×1/4 = 1/12 (எச்சதாரி.)

குறிப்பு: இறந்தவருக்கு 2 மகள்கள் இருப்பதால், மகனின் மகள் பங்குதாரராய் நின்று பங்கு பெறாது தள்ளப்படுகிறாள். ஆனால், இவள் மகனின் மகனின் மகனோடு (ஒருபடி பிந்திய மகனின் மகள்) எச்சதாரியாகப் பங்கு பெறுகிறாள். மகனின் மகனின் மகளுக்கு, மகனின் மகனின் மகன், ஒத்த மகனின் மகன் ஆதலால், இவள் எச்சதாரியாகப் பங்கு பெற உரிமையுடையவள் ஆவாள். எனவே மகனின் மகளும், மகனின் மகனின் மகளும் (இருவரும்) மகனின் மகனின் மகனோடு எச்சதாரராய், ஒவ்வொருவரும் 1/12 பங்கு பெறுகின்றனர்.

(ix) ஒரு சுன்னீ இசுலாமியர் கீழ்வரும் வாரிசுகளை விட்டுச் சென்றால், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பங்குகளாவன :

(அ) தாய் : 1/6 (பங்குதாரி) (இரு சகோதரிகள் இருப்பதால்.)
தந்தை : 5/6 (எச்சதாரர்)

	2 உடன்பிறந்த சகோதரிகள்	:	0	(தந்தையால் பங்கின்றி தள்ளப்பட்டனர்.)
(அ)	தாய்	:	1/3	(பங்குதாரி.)
	தந்தை	:	2/3	(எச்சதாரர்.)
	உடன் பிறந்த சகோதரி	:	0	(தந்தையால் தள்ளப்பட்டாள்.)
(இ)	கணவன்	:	1/4	(பங்குதாரர்.) 8+3/12 = 11/12. மீதி 1/12
	2 மகள்கள்	:	2/3	(பங்குதாரர்.)
	உடன்பிறந்த சகோதரி	:	1/12	(எச்சதாரி – மீதியைப் பெறுகிறாள்.)
(ஈ)	மகள்	:	1/2	(பங்குதாரர்.)
	மகனின் மகள்	:	1/6	(பங்குதாரர்.)
	உடன்பிறந்த சகோதரி	:	1/3	(எச்சதாரி – 2/3 பங்கு போக மீதி இருக்கும் 1/3 பங்கை எச்சதாரராய்ப் பெறுகிறாள்.)
(உ)	2 மகள்கள் (அல்லது) 2 மகன்களின் மகள்கள்	:	2/3	(பங்குதாரர்.)
	உடன்பிறந்த சகோதரி	:	1/3	(எச்சதாரி)
(ஊ)	கணவன்	:	1/2	(பங்குதாரர்.)
	உடன்பிறந்த சகோதரி	:	1/2	(பங்குதாரி.)

(x) ஒரு சுன்னீ இசுலாமியர் கீழ்வரும் வாரிசுகளை விட்டுச் சென்றால், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பங்குகளாவன :

(அ)	தாய்	:	1/3	(பங்குதாரி – குழந்தையில்லை. ஒரே சகோதரி.)
	தந்தை	:	2/3	(எச்சதாரர்.)
	தந்தைவழிச் சகோதரி	:	0	(தந்தையால் தள்ளப்பட்டாள்.)
(ஆ)	தாய்	:	1/6	(பங்குதாரி. – சகோதரிகளால் 1/6 பங்கு.)
	உடன்பிறந்த சகோதரி	:	1/2	(பங்குதாரி.)

தந்தைவழிச்
சகோதரி : 1/6 (எச்சதாரி.)
தாய்வழிச்
சகோதரி
(அல்லது)
தாய்வழிச்
சகோதரன் : 1/6 (பங்குதாரர்.)

(இ) கணவன் : 1/2 (பங்குதாரர்.)
தந்தைவழிச்
சகோதரி : 1/2 (பங்குதாரி.)

(xi) ஒரு சுன்னீ இசுலாமியர் கீழ்வரும் வாரிசுகளை விட்டுச் சென்றால், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பங்குகளாவன :

(அ) தாய் : 1/6 (பங்குதாரி.)
2 உடன்பிறந்த
சகோதரிகள் : 2/3 (பங்குதாரர்.)
1 தந்தைவழிச்
சகோதரி : 0 (2 உடன்பிறந்த சகோதரிகளாலும் தள்ளப்பட்டார்.)

1 தாய்வழிச்
சகோதரன்
அல்லது
1 தாய்வழிச்
சகோதரி : 1/6 (பங்குதாரர்.)

(ஆ) உடன்பிறந்த
சகோதரி : 1/2 (பங்குதாரி.)
2 தாய்வழிச்
சகோதரர்கள் : 1/6 (தலா 1/12 பங்கு பெறுவர்.)
1 தாய்வழிச்
சகோதரன்
அல்லது
1 தாய்வழிச்
சகோதரி : 1/3 [ஒவ்வொருவரும் 1/6 பங்கு வீதம் இருவரும் சமபங்கு (1/3) பெறுவர்.]

(இ) 2 உடன்பிறந்த
சகோதரர்கள் : 2/3 (தலா 1/3 பங்கு பெறுவர்.)
2 தாய்வழிச்
சகோதரிகள் : 1/3 (தலா 1/6 பங்கு பெறுவர்.)

2. எச்சதாரர்கள் (Residuaries)

இறந்தவரின் சொத்தைப் பங்குதாரர்களான 12 பேர்களுக்கும் பிரித்துக் கொடுத்தது போக, மீதியிருக்கும் சொத்தை எச்சதாரர்கள் அடைவார்கள். பங்குதாரர்களே இல்லையென்றால், எச்சதாரர்கள் இறந்தரின் சொத்தை தங்களுக்குள் பாகம் பிரித்துக் கொள்ள உரிமையுடையவர்கள். பங்குதாரர்கள் இருப்பின், அவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டது போக எஞ்சியுள்ளதை எச்சதாரர்கள் பெறுவார்கள். எனவே இவர்களை 'எச்சதாரர்கள்' என அழைக்கிறோம். எனினும், முன்கூறிய 12 பங்குதாரர்களில் பின்வருபவர்கள் சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் எச்சதாரர்களாகச் செயல்படுவர். அவர்கள் 1. தந்தை, 2. தந்தையின் தந்தை, 3. மகள், 4. மகனின் மகள், 5. உடன் பிறந்த சகோதரி, 6. தந்தை வழிச் சகோதரி ஆகியோர் ஆவர். இவர்கள் எச்சதாரராய் நின்று பங்கு பெறும் விதத்தை நாம் 'பங்குதாரர்' எனும் தலைப்பில் ஏற்கனவே உதாரணங்களுடன் கண்டோம்.

எச்சதாரர்கள் - நான்கு வகுப்பினர்:

எச்சதாரர்கள், 1. முதல் வகுப்பினர், 2. இரண்டாம் வகுப்பினர், 3. மூன்றாம் வகுப்பினர், 4. நான்காம் வகுப்பினர் என நான்கு வகைப்படுவர். இவ்வகுப்பில் எத்தகு உறவு கொண்டோரெல்லாம் எச்சதாரராக வருவர் என்பது வருமாறு.

1. முதல் வகுப்பினர் (First Class) :

இவர்கள் இறந்தவரின் நேர்வழித் தோன்றல்கள் (ஆண்வழித் தோன்றல்கள்) (Male Descendants) ஆவர். எடுத்துக்காட்டாக மகன், மகனின் மகன், ஆண்வழித் தோன்றலோடு உடன்வாழும் பெண்வழித்தோன்றல்கள், சம அந்தஸ்திலுள்ள (equal degree) ஆண்வழித் தோன்றலோடும், சில குழ் நிலைகளில் ஒருபடி பிந்திய அந்தஸ்திலுள்ள (lower degree) ஆண்வழித் தோன்றல்களோடும் எச்சதாரர்களாய் நின்று, எஞ்சியிருப்பதில் பங்கு பெறுவர்.

2. இரண்டாவது வகுப்பினர் (Second Class) :

இறந்தவருக்கு முதல் வகுப்பினர் இல்லாதபொழுது இரண்டாவது வகுப்பினரான இறந்தவரின் ஏறுமுறை மூதாதையராய் இருக்கும் ஆண்கள் (Ascendants) சொத்துரிமை பெறத் தகுதி உடையவர்கள் ஆவர். எடுத்துக்காட்டாக தந்தை, தந்தையின் தந்தை.

3. மூன்றாவது வகுப்பினர் (Third Class) :

முதல் இரு வகுப்பினரும் இல்லாத நிலையில் இறந்தவரின் மூன்றாவது

வகுப்பினராகிய தந்தையின் வழித் தோன்றல்களான கிளை வழியினர், இறந்தவரின் சொத்தில் பங்கு பெறுவர். எடுத்துக்காட்டாக சகோதரன், சகோதரனின் மகன். சில சூழ்நிலைகளில், இறந்தவருடைய தந்தையின் வழித் தோன்றல்களோடு (Descendants of father) உடன் வாழும் உடன் பிறந்த சகோதரிகளும் (Full sisters), தந்தை வழிச் சகோதரிகளும் (Consanguine sisters) எச்சதாரர்களாகப் பங்கு பெறுவர்.

4. நான்காவது வகுப்பினர் (Fourth Class) :

மேற்கூறிய மூன்று வகுப்பினர்களும் இல்லாதபொழுது, நான்காவது வகுப்பினர்களாக தந்தையின் தந்தை வழித் தோன்றல்களான பாட்டனின் கிளை வழியினர் (Descendants of true grand father) சொத்துரிமை பெறத் தகுதி பெற்றவராவர்கள். எடுத்துக்காட்டாக தந்தையின் தந்தையின் தந்தை வழிச் சகோதரனும், அவருடைய மகனும், அவருடைய மகனின் மகனும் எச்சதாரர்களாகப் பங்கு பெறுவர்.

ஒவ்வொரு வகுப்பினரிலும் உள்ள பிரிவினர்களைத் தெரிந்து, சட்ட விதிப்படி பங்கு பிரித்துக் கொடுக்க வேண்டும். ஒரு வகுப்பினரில் சொத்துரிமை பெற எவரும் இல்லையென்றால், அவர்களுக்கு அடுத்துள்ள வகுப்பினர்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ளல் வேண்டும். மேலும் இறந்தவரின் ஆண்வழித் தோன்றல்களான எச்சதாரர்களில் குறிப்பாக இறந்தவரின் மகன், எவ்விதத்திலும் பங்கு பெற வேண்டும். இவர் எச்சதாரராக இருப்பினும், இறந்தவர் சொத்தில் பங்கு பெறாமல் தள்ளப்படமாட்டார்.

இத்தோடு மட்டுமில்லாமல் இறந்தவரின் ஏறுமுறை (ஆண்) மூதாதையர்கள் (தந்தை, பாட்டன்), சில சூழ்நிலைகளில் பங்குதாரராகவும் எச்சதாரராகவும் (இருவழிகளில்) பங்கு பெறுவர். இவர்கள் பங்குதாரராகவும், எச்சதாரராகவும் நின்று பங்கு பெற்ற விதத்தை நாம் சென்ற தலைப்பில் விரிவாகக் கண்டுள்ளோம்.

எச்சதாரர்கள் பெறும் பங்கின் அளவும், விதிகளும்:

1. முதல் வகுப்பினரான நேர்வழித் தோன்றல்களும், அவர்கள் பெறும் பங்கும்:

1. (i) மகன்.

(ii) மகள்; மகன் இருந்தால் அவரோடு மகள் எச்சதாரராகவே பங்கு பெறுவாள். மகன் 2 பங்கும், மகள் 1 பங்கும் பெற உரிமை பெற்றவர் ஆவர். (2:1).

2. (i) மகனின் மகன். (எத்தனை தலைமுறை பின் சென்றாலும்).

(ii) மகனின் மகள். (எத்தனை தலைமுறை பின் சென்றாலும்).

பிரச்சனைகள் [Problems]

(i) ஒரு சுன்னீ இசுலாமியர் கீழ்வரும் வாரிசுகளை விட்டுச் சென்றால், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பங்குகளாவன :

(அ) மகன் : 2/3
மகள் : 1/3 (எச்சதாரர்)

(ஆ) 2 மகள்கள் : 2/3 (பங்குதாரர்)
மகனின் மகனின்
மகன் : 2/4×1/3 = 1/6 (எச்சதாரர்)
மகனின் மகள் : 1/4×1/3 = 1/12 (எச்சதாரர்)
மகனின் மகனின்
மகள் : 1/4×1/3 = 1/12 (எச்சதாரர்)
} 1/3

குறிப்பு: மேற்கண்ட பிரச்சனையில் 2 மகள்களும் 2/3 பாகத்தை எடுத்துக் கொள்வதால், மகனின் மகள் பங்குதாரராய்ப் பங்கின்றித் தள்ளப்படுவாள். ஆனால், இங்கு 'மகன்' எனப்படுபவன் ஒரு படி பிந்திய மகனின் மகன் (மகனின் மகனின் மகன்) ஆனபடியால், அவள் அவனோடு எச்சதாரராகி, ஒத்த நிலையிலுள்ள மகனின் மகளைப் போல் சமபங்கு (1/12) பெறுகிறாள். அதே சமயத்தில் மகனின் மகனின் மகனுக்கு, மகனின் மகனின் மகளைப் போல் 2 மடங்கு பங்கும் (1/6) கிடைக்கிறது.

(இ) 2 மகள்கள் : 2/3 (பங்குதாரர்)
மகனின் மகன் : 1/3×1/3 = 1/9 (எச்சதாரர்)
மகனின் மகனின்
மகன் : 1/3×2/3 = 2/9 (எச்சதாரர்)

(ஈ) 2 மகள்கள் : 2/3
மகனின் மகன் : 1/3
மகனின் மகனின்
மகன் : 0 (மகனின் மகனால் தள்ளப்பட்டார்.)
மகனின் மகனின்
மகள் : 0 (2 மகள்களும், மகனின் மகனும் தள்ளுகின்றனர்.)

குறிப்பு: மேற்கண்டதில் மகனின் மகனின் மகள். 2 மகள்களாலும் பங்குதாரராய் பங்கு பெற முடியாது தள்ளப்பட்டாள்; ஒரு படி முந்திய மகனின் மகன் இருப்பதால், எச்சதாரராக முடியாமலும் தள்ளப்பட்டாள். இவள் ஒத்த மகனின் மகனுடனோ, ஒரு படி பிந்திய மகனின் மகனுடனோ மட்டிலுமே எச்ச தாரராகப் பங்கு பெற முடியும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

2. இரண்டாவது வகுப்பினரான ஏறுமுறை மூதாதையர்களும், அவர்கள் பெறும் பங்கும்:

3. தந்தை.

4. பாட்டன் (எ.த.மு.செ.). இறந்தவரிடமிருந்து எட்டி நிற்பவர் நெருங்கி நிற்பவரால் தள்ளப்படுவார் (Nearer in degree excludes the more remote). இறந்தவருக்குத் தந்தை உயிருடன் இருந்தால், அத்தந்தையின் தந்தை (பாட்டன்) பங்கு பெறாது, தந்தையால் தள்ளப்படுவார்.

பிரச்சனைகள் [Problems]

(ii) ஒரு சுன்னீ இசுலாமியர் கீழ்வரும் வாரிசுகளை விட்டுச் சென்றால், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பங்குகளாவன :

(அ)	மகன்	: 5/6	
	தந்தை	: 1/6	(மகனிருப்பதால் பங்குதாரர்)
(ஆ)	தாய்	: 1/6	(பங்குதாரர்)
	தந்தை	: 5/6	(குழந்தையில்லை; எச்சதாரர்)
	தந்தையின் தந்தை (பாட்டன்)	: 0	(தந்தை இருப்பதால் தள்ளப்படுகிறார்.)
(இ)	மகள்	: 1/2	(பங்குதாரர்)
	தந்தை	: 1/2	(பங்குதாரர் 1/6) + (எச்சதாரர் 1/3) = 1/2
(ஈ)	மகனின் மகள்	: 1/2	
	தந்தை	: 1/2	(பங்குதாரர் 1/6) + (எச்சதாரர் 1/3) = 1/2

குறிப்பு: மகளோடும், மகனின் மகளுடனும் (எ.த.பி.செ.) மட்டிலுமே, தந்தை பங்குதாரராகவும், எச்சதாரராகவும் பங்கு பெறுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

3. மூன்றாவது வகுப்பினரான தந்தைவழித் தோன்றல்களான கிளை வழியினரும், அவர்கள் பெறும் பங்கும்:

5. உடன் பிறந்த சகோதரர்.

6. உடன் பிறந்த சகோதரி. இவள், உடன் பிறந்த சகோதரனோடு எச்சதாரராகப் பங்கு பெறுவாள். ஆணுக்கு இரு பங்கும், பெண்ணுக்கு ஒரு பங்கும் கிடைக்கும்.

7. தந்தைவழிச் சகோதரன்

8. தந்தைவழிச் சகோதரி. இவள், தந்தைவழிச் சகோதரனோடு எச்ச

தாரராய் பங்கு பெறுவாள். சகோதரனுக்கு இரு பங்கும், சகோதரிக்கு ஒரு பங்கும் கிடைக்கும்.

9. உடன் பிறந்த சகோதரனின் மகன் (Full Brother's Son)

10. தந்தைவழிச் சகோதரனின் மகன் (Consanguine Brother's Son).

11. உடன் பிறந்த சகோதரனின் மகனின் மகன் (Full Brother's Son's Son).

12. தந்தைவழிச் சகோதரனின் மகனின் மகன் (Consanguine Brother's Son's Son).

பிரச்சனைகள் [Problems]

(iii) ஒரு சுன்னீ இசுலாமியர் கீழ்வரும் வாரிசுகளை விட்டுச் சென்றால், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பங்குகளாவன :

(அ)	மகள் (அல்லது மகனின் மகள்)	: 1/2	(பங்குதாரர்.)
	உடன் பிறந்த சகோதரி	: 1/2	(எச்சதாரர்.)
	உடன் பிறந்த சகோதரனின் மகன்	: 0	(உடன் பிறந்த சகோதரியால் தள்ளப் பட்டான்.)

குறிப்பு: மகள் இருப்பதால், உடன் பிறந்த சகோதரி பங்குதாரராகப் பங்கு பெற முடியாது. உடன் பிறந்த சகோதரன் இல்லாததால், அவருடன் எச்சதாரராகும் நிலை இல்லாது போய்விடுகிறது. எனவே, மகளுக்குரிய பங்கு நீங்கி, எஞ்சியதைப் பெற வேறு எச்சதாரரும் இல்லாததால், மகளோடு எச்சதாரராகி எஞ்சியதைப் பெறுகிறாள்.

(ஆ)	2 மகனின் மகள்கள்	: 2/3	(பங்குதாரர்)
	உடன் பிறந்த சகோதரி	: 1/3	(எச்சதாரர்)
(இ)	மகள்	: 1/2	(பங்குதாரர்)
	மகனின் மகள்	: 1/6	(பங்குதாரர்)
	கணவன்	: 1/4	(பங்குதாரர்)
	உடன் பிறந்த சகோதரி	: 1/12	(எச்சதாரர்)

4. நான்காவது வகுப்பினரான தந்தையின் தந்தையின் (பாட்டனின்) கிளை வழித் தோன்றல்கள்:

13. தந்தையின் உடன் பிறந்த சகோதரன் (Full Paternal Uncle).

14. தந்தையின் தந்தை வழிச் சகோதரன் (Consanguine Paternal Uncle).

15. தந்தையின் உடன் பிறந்த சகோதரனின் மகன் (Full Paternal Uncle's Son).

16. தந்தையின் தந்தைவழிச் சகோதரனின் மகன் (Consanguine Paternal Uncle's Son).

17. தந்தையின் உடன் பிறந்த சகோதரனின் மகனின் மகன் (Full Paternal Uncle's Son's Son).

18. தந்தையின் தந்தைவழிச் சகோதரனின் மகனின் மகன் (Consanguine Paternal Uncle's Son's Son).

3. தூரத்து உறவினர்கள் (Distant Kindred)

பங்குதாரராகவோ, எச்சதாரராகவோ ஆகமுடியாத இரத்தத் தொடர்புடைய உறவினர்களே 'தூரத்து உறவினர்' ஆவர். பங்குதாரர்களோ, எச்சதாரர்களோ இல்லாத பொழுது, தூரத்து உறவினர்கள் இறந்தவரின் சொத்தில் பங்கு பெற உரிமை பெற்றவர்கள் ஆவர். இதற்கு ஒரு விதிவிலக்குண்டு. பங்குதாரர் கணவனாகவோ, மனைவியாகவோ மட்டிலும் இருந்தால், அவருடைய பங்கு நீங்கலாக எஞ்சியிருப்பதை பெற எச்சதாரர்களும், அவர்களும் இல்லையானால், தூரத்து உறவினர்களும் பெற உரிமை படைத்தவர்கள்.

தூரத்து உறவினர் - நான்கு வகுப்பினர்:

தூரத்து உறவினர்களை பின்வரும் நான்கு வகுப்பினராகப் (classes) பிரிக்கலாம். அவர்கள் (1) வழித் தோன்றல்கள் (Descendants), (2) மூதாதையர் (Ascendants). (3) தாய்வழி, தந்தை வழித் தோன்றல்களான கிளை வழியினர். (Descendants of Parents), 4. பாட்டன், பாட்டியின் வழித் தோன்றல்களான தந்தையின் கிளை வழியினர் (Descendants of Grand Parents). இவ்வகுப்பு களில் வரும் தூரத்து உறவினர்களின் பட்டியல் வருமாறு.

1. முதல் வகுப்பினரில் வரும் தூரத்து உறவினர்கள்:

1. மகளின் குழந்தைகளும், அவர்களுடைய வழித்தோன்றல்களும்.

2. மகனின் மகளின் குழந்தைகளும், அவர்களுடைய குழந்தைகளும்.

2. இரண்டாவது வகுப்பினரில் வரும் தூரத்து உறவினர்கள்:

1. தாய் வழிப் பாட்டன்.

2. தாய் வழிப் பாட்டி.

3. மூன்றாவது வகுப்பினரில் வரும் தூரத்து உறவினர்கள்:

1. உடன் பிறந்த சகோதரனின் மகள்களும், அவர்களின் வழித் தோன்றல்களும்.

2. தந்தை வழிச் சகோதரனின் மகள்களும், அவர்களின் வழித் தோன்றல்களும்.

3. தாய் வழிச் சகோதரனின் குழந்தைகளும், அவர்களின் வழித் தோன்றல்களும்.

4. உடன் பிறந்த சகோதரனின் மகனின் மகள்களும், அவர்களின் வழித் தோன்றல்களும்.

5. தந்தை வழிச் சகோதரனின் மகனின் மகள்களும், அவர்களின் வழித் தோன்றல்களும்.

6. உடன் பிறந்த அல்லது தந்தை வழி அல்லது தாய் வழிச் சகோதரியின் குழந்தைகளும், அவர்களின் வழித் தோன்றல்களும்.

4. நான்காவது வகுப்பினரில் வரும் தூரத்து உறவினர்கள்:

1. தந்தையின் உடன் பிறந்த சகோதரனாகிய சிற்றப்பா அல்லது பெரியப்பாவின் மகள்களும், அவர்களின் வழித் தோன்றல்களும்.

2. தந்தையின் தந்தைவழிச் சகோதரனின் மகள்களும், அவர்களின் குழந்தைகளும்.

3. தந்தையின் தாய் வழிச் சகோதரர்களும், அவர்களின் குழந்தைகளும்.

4. தந்தையின் உடன் பிறந்த சகோதரனின் மகனின் மகள்களும், அவர்களின் வழித் தோன்றல்களும்.

5. தந்தையின் தந்தை வழிச் சகோதரனின் மகனின் மகள்களும், அவர்களின் வழித் தோன்றல்களும்.

6. தந்தையின் உடன் பிறந்த அல்லது தந்தை வழி அல்லது தாய் வழிச் சகோதரிகளும், அவர்களின் வழித் தோன்றல்களும்.

7. தாயின் சகோதரர்களும், சகோதரிகளும், அவர்களுடைய வழித் தோன்றல்களும்.

8. எட்டி இருக்கும் (தூரத்தில் நிற்கும்) மூதாதையரின் வழித் தோன்றல்களும் ஆவர்.

மேற்கண்ட வர்ரிசுகள் யாருமே இல்லாத நிலையில் சொத்துரிமை இறக்கம்

இறந்துவிட்ட இசுலாமியர் ஒருவரின் சொத்தில் பங்கு பெற மேற்கூறிய மூவகை வாரிசுகளான பங்குதாரர்களோ, எச்சதாரர்களோ, தூரத்து உறவினர்களோ யாரும் இல்லையென்றால், பின் குறிப்பிடப்படுவதுபோல அவரின் சொத்துரிமை சென்றடையும்.

1. ஒப்பந்தப்படி வாரிசுரிமை (Succession by Contract) :

இறந்தவருடன் ஒப்பந்தம் செய்து கொண்டதன் வாயிலாக, இறந்தவர் விட்டுச் சென்ற சொத்தில் வாரிசுரிமை ஏற்படும். இவ்வகை ஒப்பந்தங்களினால் சொத்து பெரும்பாலும் தண்டனைக்குரிய குற்றச் செயல்களுக்குப் பிரதிபலனாகக் கொடுக்கப்படுவதால், இத்தகைய ஒப்பந்தப்படி வாரிசுரிமை இந்தியாவில் கடைபிடிக்கப்படுவதில்லை. ஏனென்றால், இவ்வகை ஒப்பந்தங்கள் இல்லாநிலை ஒப்பந்தங்களாகும் (Void Contract).

2. வாரிசாக ஏற்றுக் கொள்ளப்பட்ட உறவினர்கள் (Acknowledged Kinsmen) :

இறந்தவர் தம் சொத்துக்கு வாரிசாக முறைப்படி சொத்துரிமை இறக்கம் கோர இயலாத உறவினர்களை வாரிசாக ஏற்றுக் கொண்டால், அவர்கள் இறந்தவரின் சொத்தில் சொத்துரிமை இறக்கம் பெறுவர். எடுத்துக்காட்டாக, சொத்துக்குரியவருக்கு வாரிசில்லா நிலையில், அவர் வேறு ஒருவரைத் தம் சகோதரராக ஏற்றுக் கொண்டால், அவ்விதம் ஏற்றுக் கொள்ளப்பட்டவர், சொத்தில் உரிமை இறக்கம் பெறுவார்.

3. முழுதளாவிய (ஏகபோக) உயில் கொடை பெற்றவர் (Universal Legatee) :

ஒரு இசுலாமியர் தனது சொத்தில் 1/3 பங்கை மட்டுமே உயில் வழிக் கொடையாக அளிக்க இயலும். ஆனால் ஒரு ஹனபி இசுலாமியருக்கு தனது சொத்தில் பங்குரிமை பெறும் வாரிசுகளோ அல்லது தன்னால் ஏற்றுக் கொள்ளப் பட்ட வாரிசுகளோ இல்லையென்றால், அவர் தம் சொத்து முழுவதையும் யாருக்கு வேண்டுமானாலும் உயில் வழிக் கொடையாக அளிக்கலாம். இவ்வாறு இறந்தவரின் சொத்து முழுவதையுமே உயில் வழிக் கொடையாகப் பெறுபவரே முழுதளாவிய (ஏகபோக) உயில் கொடை பெற்றவர் ஆவார்.

4. அரசு (The State) :

நான் இதுகாறும் விரிவாகக் கண்ட இசுலாமியச் சட்டம் அங்கீகரிக்கும் சொத்துரிமை பெற்ற வாரிசுகளோ, இறந்தவரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வாரிசுகளோ அல்லது முழுதளாவிய உயில்வழிக் கொடை பெறுநரோ இல்லை எனில், இறந்தவரின் சொத்து அரசுரிமைப் பொருளாகக் (Escheat) கருதப்பட்டு அரசைச் சென்றடையும்.

(குறிப்பு : ஹனபி சட்டத்தின் கீழான இறங்குரிமை விதிகள் குறித்த வினாவிற்கு சுன்னீ சட்டத்தின் கீழ்வரும் 'அவுல்' மற்றும் 'ரெட்' விதிகளையும் சேர்த்து குறிப்பிட்டால் கூடுதல் மதிப்பெண்கள் கிட்டும். அவை அடுத்த வினாவில் கொடுக்கப்பட்டுள்ளன. – ஆசிரியர்.)

4. Explain with reference to illustration the Doctrine of Aul and Doctrine of Radd under Sunni Law. (சுன்னீச் சட்டத்தின்படி ஏற்ற விதிக் கொள்கையினையும், இறக்க விதிக் கொள்கையினையும் எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.)

(அல்லது)

Doctrine of Aul - Write short notes. (ஏற்றவிதிக் கோட்பாடு – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Doctrine of Radd - Write short notes. (மீட்டளிப்புக் கோட்பாடு – சிறு குறிப்பு வரைக.)

I. ஏற்ற விதிக் கொள்கை அல்லது 'அவுல்' (Doctrine of Increase or Doctrine of 'Aul')

இசுலாமியச் சட்டப்படி, இறந்தவரின் சொத்தை அவரவர் விகிதப்படி பிரிக்கையில் பின்னங்கள் வரும். அனைத்து பின்னங்களையும் கூட்டும் பொழுது முழு எண். 1 வர வேண்டும். அதாவது பின்னங்களின் மேலே உள்ள எண்களையும், கீழே உள்ள எண்களையும் கூட்டும்பொழுது கூட்டுத் தொகை சமமாக வர வேண்டும். அப்படி கூட்டும் பொழுது மேலே உள்ள எண்களின் கூட்டுத் தொகை, கீழே உள்ள எண்களின் கூட்டுத் தொகையை விட அதிகமாக இருந்தால், குறைவாயுள்ள கீழ் எண்களின் கூட்டுத் தொகையை மேலிலக்கங்களின் கூட்டுத் தொகையின் அளவிற்கு, எண்களை கூடுதலாக ஏற்றிச் சமப்படுத்த வேண்டும். கீழே உள்ள எண்களை இவ்வாறு ஏற்றுவதால், இது 'ஏற்ற விதிக் கொள்கை' அல்லது 'அவுல் தத்துவம்' என்றழைக்கப்படுகிறது.

சமமாக்கப்பட்ட கீழ் எண்களின் கூட்டுத் தொகையை ஒவ்வொரு பின்னத்தின் கீழும் கொண்டு வர வேண்டும். குறைவாக உள்ள கீழ் எண்களின் கூட்டுத் தொகையை மேல் எண்களின் கூட்டுத் தொகையின் அளவிற்குச்

சமமாய்க் கூட்டியதால் பங்குதாரர்களின் பங்கு உண்மையில் ஏற்றம் பெறாது. அதற்கு மாறாகக் குறையும். ஆனால், ஏற்றவிதிக் கொள்கையின் மூலம் பின்னங்களின் கூட்டுத் தொகை சமன்படுத்தப்படுகிறது.

பிரச்சனைகள் [Problems]

(i) ஒரு சுன்னீ இசுலாமியர் கணவன், தனது 2 மகள்கள், தாய் ஆகியோரை விட்டு இறந்து விடுகிறார். அவரது சொத்துப் பிரிக்கப்படும் விதம்.

கணவன் பெறும் பங்கு : 1/4 = 3/12

2 மகள் பெறும் பங்கு : 2/3 = 8/12

தாய் பெறும் பங்கு : 1/6 = 2/12

தற்பொழுது மேற்கண்ட பங்குகளைப் பின்வருமாறு கூட்டுவோம்.

$$3/12 + 8/12 + 2/12 = 3+8+2/12 = 13/12$$

மேற்கண்ட பின்னத்தில் மேலே உள்ள எண்களின் கூட்டுத் தொகை 13. கீழே உள்ள எண் 12 ஆகும். அதாவது கீழ் உள்ள எண்களின் கூட்டுத் தொகை, மேல் எண்களின் கூட்டுத் தொகையை விட குறைவாக உள்ளது. எனவே சமமில்லாமல் உள்ளது. இங்கு ஏற்ற விதிக் கொள்கையைப் பயன்படுத்தி, மேல் எண்களின் கூட்டுத் தொகைக்கு சமமாக கீழ் எண்களின் கூட்டுத் தொகையில் ஒன்று சேர்த்து 13 என ஏற்றி, மேல் எண்களின் கூட்டுத் தொகையுடன் சமன்படுத்த வேண்டும். தற்பொழுது கணவனின் பங்கு 3/13 என்றும், 2 மகள்களின் பங்கு 8/13 என்றும், தாயின் பங்கு 2/13 என்றும் வரும். இவ்வாறு செய்வதனால், மேல் எண்களின் கூட்டுத் தொகையும், கீழ் எண்களின் கூட்டுத் தொகையும் 13/13 என்று சமமாகிவிடுகிறது. அதாவது,

$$3/13 + 8/13 + 2/13 = 3+8+2/13 = 13/13 = 1$$ ஆகும்.

(ii) ஒரு சுன்னீ இசுலாமியர் கணவன், தனது 2 உடன் பிறந்த சகோதரிகள் ஆகியோரை விட்டு இறந்து விட்டால், அவரது சொத்துப் பிரிக்கப்படும் விதம்.

கணவன் பெறும் பங்கு : 1/2 = 3/6

2 உடன் பிறந்த சகோதரிகள் பெறும் பங்கு : 2/3 = 4/6

தற்பொழுது மேற்கண்ட பங்குகளைக் கூட்டுவோம்.

$$3/6 + 4/6 = 3+4/6 = 7/6$$

ஏற்ற விதிக் கொள்கையைப் பயன்படுத்தி கீழ் உள்ள எண்களின் கூட்டுத் தொகையில் ஒன்று சேர்த்தால் 7/7 எனச் சமமாகிவிடுகிறது. இதனால் மேற்படியார்கள் முறையே 3/7 மற்றும் 4/7 பங்கு பெறுவார்கள்.

II. இறக்க விதிக் கொள்கை அல்லது 'ரத்' (Doctrine of Radd or Return) :

ஏற்ற விதிக் கொள்கைக்கு மாறாக இறக்க விதிக்கொள்கை உள்ளது. ஏற்ற விதிக் கொள்கை பயன்படுத்தப்பட்டால், பங்குதாரர்களின் பங்கு குறையும். ஆனால் இறக்க விதிக் கொள்கை பயன்படுத்தப்பட்டால், பங்குதாரர்களின் பங்கு அதிகமாகும்.

இசுலாமியச் சட்டப்படி, பங்குதாரர்களின் பங்கை அவரவர்களின் விகிதப்படி கொடுத்த பின்னர் மீதி இருந்தால் அது எச்சதாரர்களுக்குப் போய்ச் சேரும். எச்சதாரர்கள் எவரும் இறந்தவரின் சொத்துக்கு வாரிசாக இல்லையெனில் மீதமுள்ள பங்கைத் தூரத்து உறவினர்கள் பெற மாட்டார்கள். அதற்கு மாறாக மீதம் உள்ளதை பங்குதாரர்கள் அவரவர் பங்கின் விகிதப்படி கூடுதலாகப் (கூட்டிப்) பெறுவர். இப்படி அவர்களின் பங்கிற்கு மேல் அதிகமாகப் பங்கு இறங்குவதால் (கிடைப்பதால்) இதை இறக்க விதிக் கொள்கை என அழைக்கின்றனர். இதனால் பங்குதாரர்களின் பங்கு அதிகமாகும். இறக்க விதிக் கொள்கையைப் பயன்படுத்தக் கீழ் எண்களின் கூட்டுத் தொகையை மேல் எண்களின் கூட்டுத் தொகையின் அளவிற்குக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

பிரச்சனைகள் [Problems]

(i) ஒரு சுன்னீ இசுலாமியர் தாய், மகள் ஆகியோரை விட்டு இறக்கிறார். அவரது சொத்துப் பிரிக்கப்படும் விதம்.

தாய் பெறும் பங்கு : 1/6 = 1/6

மகள் பெறும் பங்கு : 1/2 = 3/6

தற்பொழுது மேற்கண்ட பங்குகளைப் பின்வருமாறு கூட்டுவோம்.

1/6 + 3/6 = 4/6

மேற்கண்ட பின்னத்தில் (4/6) மேல் எண் 4 ஆகும். கீழ் எண் 6 ஆகும். மேற்கண்ட இறக்க விதிக் கொள்கைப்படி, கீழ் எண்களின் கூட்டுத் தொகையான 6–அய், மேல் எண்களின் கூட்டுத் தொகையான 4–ன் அளவிற்கு குறைத்துக் கொள்ள வேண்டும். இதனால் கிடைக்கும் பங்குகள் 4/4 (1/4+3/4) என சமனாகிறது.

வேறுவிதத்தில் கூறுவதானால், மேற்படி பின்னங்களின் கூட்டுத் தொகை 4/6 ஆகும். இதில் மிஞ்சியிருப்பது, 2/6 பங்காகும். இதைத் தாய்க்கும், மகளுக்கும் அவரவர்களுக்குரிய பங்கு விகிதத்தில் (அதாவது 1 : 3 விகிதத்தில்) பிரித்து கூடுதலாகக் கொடுக்க வேண்டும். இதன்படி, தாய் மிஞ்சியுள்ளதில் 1/4

பாகத்தையும் (2/6X1/4 = 1/12), மகள் மிஞ்சியுள்ளதில் 3/4 பாகத்தையும் (2/6X3/4 = 1/4) பெறுகிறார்கள். எனவே தாயின் பங்கு 1/4 (1/6+1/12 =1/4) (அதாவது பங்குதாரராக 1/6 பங்கும், இறக்க விதியால் 1/12 பங்கும்) ஆகும். அதே போன்று மகளின் பங்கு 3/4 (1/2+1/4 = 3/4) (பங்குதாரராய் 1/12 பங்கும், இறக்கவிதியால் 1/4 பங்கும்) ஆகும். சுருங்கக் கூறின் பங்குகள் இங்கு கூடுகின்றன.

(ii) ஒரு சுன்னீ இசுலாமியர் தாய், மகள், மகனின் மகள் ஆகியோரை விட்டு இறக்கிறார். அவரது சொத்துப் பிரிக்கப்படும் விதம்.

தாய் பெறும் பங்கு : 1/6

மகள் பெறும் பங்கு : 1/2

மகனின் மகள்
பெறும் பங்கு : 1/6

$$1/6 + 1/2 + 1/6 = 1 + 3 + 1/6 = 5/6$$

மேற்கண்டவர்கள் இசுலாமியச் சட்டப்படி பெறும் பங்குகளின் கூட்டுத் தொகை 5/6. இது சமமாக இல்லை. எனவே, இறக்க விதிப்படி மொத்த பங்குகளின் கூட்டுத் தொகை 5/5 என வர வேண்டும். இங்கு அதிகமாக உள்ள பங்கு 1/6 ஆகும். இதை 1 : 3 : 1 என்ற விகிதப்படி அவர்களிடையே பிரித்துக் கொடுக்க வேண்டும். அதாவது அதிகம் உள்ளதில் 1/5 + 3/5 + 1/5 என்ற விகிதப்படி பிரித்துக் கொடுக்க வேண்டும். அப்படியானால்.

தாய் பெறும் பங்கு :

$$1/6 \times 1/5 = 1/30 + 1/6 = 1 + 5/30 = 6/30 = 1/5$$

மகள் பெறும் பங்கு :

$$1/6 \times 3/5 = 3/30 + 1/2 = 3+15/30 = 18/30 = 3/5$$

மகனின் மகள் பெறும் பங்கு :

$$1/6 \times 1/5 = 1/30 + 1/6 = 1+6/30 = 6/30 = 1/5$$

தற்பொழுது இறக்க விதிக் கொள்கைப்படி, மேற்படி பங்குகளின் கூட்டுத் தொகை பின்வருமாறு சமமாகிவிட்டது.

$$1/5 + 3/5 + 1/5 = 1 + 3 + 1/5 = 5/5 = 1$$

5. "A person though excluded from inheritance may exclude others wholly or partially". - Explain and illustrate the above principle of Muslim Law. ("ஒரு நபர் இறங்குரிமை பெறுவதிலிருந்து

தள்ளப்பட்டால், அவர் மற்றவர்களையும் முழுமையாகவோ அல்லது அரைகுறையாகவோ தள்ளிவிடலாம்" – முசுலிம் சட்டத்தின் மேற்படி கொள்கைக்கு உதாரணம் காட்டி விளக்குக.)

(அல்லது)

"A Mohammedan excluded from inheritance may exclude others wholly or partially". Explain this with illustrations.
("இறங்குரிமையிலிருந்து விலக்கப்பட்ட ஒரு நபர் மற்றவர்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ இறங்குரிமையிலிருந்து தள்ளி வைப்பார்". இந்த முகம்மதியச் சட்டக் கோட்பாட்டை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.)

(அல்லது)

Explain the rule of exclusion in Mohammeden inheritance.
(இசுலாமிய இறங்குரிமையில் தள்ளி வைத்தல் விதியை விளக்குக.)

முன்னுரை :

இசுலாமியச் சட்டப்படி ஒருவர் இறந்தவரின் வாரிசாக இருப்பினும், இறந்த போனவர் விட்டுச் சென்ற சொத்தில் அவ்வாரிசு உரிமை பெறத் தகுதியற்றவரென்று ஒதுக்கித் தள்ளலாம். அப்படித் தள்ளப்படுபவர்களை இரு பிரிவினராகப் பிரிக்கலாம். 1. ஒரு பிரிவினர் சொத்துரிமையே பெறாது முழுமையாக (Wholly) தள்ளப்படுபவர்கள் 2. மற்றொரு பிரிவினர், சில பல காரணங்களுக்காக அரைகுறை பங்கினைப் பெற்று அரைகுறையாகத் தள்ளப்பட்டு (Partial Exclusion) நிற்பவர்கள். அதாவது உடன் வாழும் வாரிசுகளின் அதிக உரிமை காரணமாக, தங்கள் உரிமையில் சிறு பங்கை இழந்து நிற்பவர்கள்.

முதல் வகுப்பினர் :

1. முதல் வகுப்பில் உள்ள வாரிசுதாரர்கள் தனக்குப் பிந்தியுள்ள 2,3,4 ஆகிய வகுப்புகளில் உள்ள வாரிசுதாரர்களை இறந்தவரின் சொத்தில் பங்கு பெறுவதில் இருந்து தள்ளி விடுவார்கள். அதே போல இரண்டாவது வகுப்பு வாரிசுதாரர்கள் ஏனைய 3,4 வது வகுப்பு வாரிசுதாரர்களை இறந்தவரின் சொத்தில் பங்கு பெறுவதில் இருந்து தள்ளி விடுவர்.

2. ஒவ்வொரு வகுப்பினரிலும் நெருங்கிய உறவினர் தூரத்து உறவினரை இறந்தவரின் சொத்தில் பங்கு பெறுவதிலிருந்து தள்ளி விடுவர்.

எடுத்துக்காட்டாக, மகளின் மகன் சொத்தில் பங்கு பெறும் பொழுது, மகனின் மகளின் மகளைத் தள்ளி விடுவார்.

3. ஒரே வகுப்பினர்களாகவும், ஒரே நிலையில் உள்ளவர்களாகவும் இருப்பவர்களிடையே பங்குதாரர்களின் குழந்தைகளும், எச்சதாரர்களின் குழந்தைகளும், தூரத்து உறவினர்களின் குழந்தைகளும் இருந்தால், பங்குதாரர்களின் குழந்தைகளுக்கும், எச்சதாரர்களின் குழந்தைகளுக்கும் முக்கியத்துவம் அளித்து முதலில் அவர்களுக்குப் பங்கு வழங்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக, இறந்தவருக்கு, மகனின் மகளின் மகளும், மகளின் மகளின் மகளும் இருப்பதாக வைத்துக் கொண்டால், இங்கு இருவருமே இறந்தவரிடமிருந்து சம நிலையில் (Same Degree) எட்டி நிற்பவர்களே. எனினும், மகனின் மகளின் மகள் என்பவள் பங்குதாரரின் மகள் ஆகையால், அவள் முதலில் பங்கு பெற உரிமை பெற்றவளாவாள். மகளின் மகளின் மகள் என்பவள் தூரத்து உறவினர் ஆகையால், இவளை விடுத்து பங்குதாரரின் மகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு பங்கு கொடுக்கப்படும்.

அதாவது, இங்கு மகனின் மகளின் மகள் (பங்குதாரரின் மகள்), மகளின் மகளின் மகளை (தூரத்து உறவினரின் மகள்) பங்கு பெறுவதிலிருந்து தள்ளி விடுகிறாள்.

மேற்கூறிய விதிகளின்படி, முதல் வகுப்பில் கீழ்க் கண்டவர்கள் முக்கியத்துவம் பெறுவர்.

1. மகளின் குழந்தைகள்

2. மகனின் மகளின் குழந்தைகள்

3. மகளின் பேரக் குழந்தைகள்

4. மகனின் மகனின் மகளின் குழந்தைகள்

5. மகளின் கொள்ளுப் பேரக்குழந்தைகளும் (Daughter's great - grand children), மகனின் கொள்ளுப்பேரக் குழந்தைகளும்.

6. இறந்து விட்டவரின் ஏனைய வழித் தோன்றல்கள்.

மேற்கண்ட ஒவ்வொரு நிலையிலும் உள்ள அனைவரும் இறந்தவரின் சொத்தில் பங்கு பெற்ற பின்னரே, அடுத்த நிலையில் உள்ளவர்கள் பங்கு பெற முடியும்.

இரண்டாவது வகுப்பினர் :

முதல் வகுப்பினர் இல்லாதபோது, இரண்டாவது வகுப்பில் உள்ள தாயின் தந்தைக்கு இறந்தவரின் சொத்துப் போய்ச் சேரும். அவரும் இல்லாதநிலையில் தாய் வழிப் பாட்டிக்குச் (grand mother) சொத்துச் சென்றடையும்.

விதிகள் (Rules) :

1. இறந்தவருக்கு அருகிலுள்ள உறவினர்கள், தூரத்து உறவினரை இறந்தவரின் சொத்தில் பங்கு பெறுவதில் இருந்து தள்ளி விடுவார்கள்.

2. ஒரே வகுப்பில் இருந்து (Same Class) ஒரே நிலையில் (Same degree) இருந்தாலும், இறந்தவரின் பங்குதாரரின் குழந்தைகளே சொத்தில் பங்கு பெறுவதில் முதல் உரிமை பெறுவர்.

3. இறந்தவருக்குத் தந்தை வழி (Paternal) உறவினர்களும், தாய்வழி (Maternal) உறவினர்களும் இருந்தால், தந்தைவழி உறவினர்களுக்கு 2/3 பங்குச் சொத்தும், தாய்வழி உறவினர்களுக்கு 1/3 பங்குச் சொத்தும் கிடைக்கும்.

மூன்றாவது வகுப்பினர் :

தூரத்து உறவினர்களில் முதல் இரு வகுப்பினர் இல்லாத போது, மூன்றாவது வகுப்பினர் இறந்தவரின் சொத்தில் பங்கு பெறுவர். அவர்கள் கீழ்க்காணும் மூன்று விதிகளின்படி சொத்தைப் பிரித்துக் கொள்வர்.

விதிகள் (Rules) :

1. இறந்தவருக்கு அருகிலுள்ள உறவினர்கள் தூரத்து உறவினரை இறந்தவரின் சொத்தில் பங்கு பெறுவதில் இருந்து தள்ளி விடுவார்கள்.

2. ஒரே நிலையில் (Same Degree) இருந்தாலும் எச்சதாரரின் குழந்தைகள் தூரத்து உறவினர்களின் குழந்தைகளை இறந்தவரின் சொத்தில் பங்கு பெறுவதில் இருந்து தள்ளிவிடுவார்கள்.

3. ஒரே நிலையில் உள்ள உறவினர்களும், மேலே கூறப்பட்ட இரண்டாவது விதிப்படி தள்ளப்பட்டவர்களும் இருக்கும்பொழுது, முழுச் சகோதரர்களின் வழித் தோன்றல்கள் (Descendants of full brothers) தந்தை வழிச் சகோதரர்களையும், சகோதரிகளையும் (Consanguine brothers and sisters) இறந்தவரின் சொத்தில் பங்கு பெறுவதில் இருந்து தள்ளி விடுவார்கள்.

நான்காவது வகுப்பினர் :

தூரத்து உறவினர்களில் முதல் மூன்று வகுப்பினர்கள் இல்லாத பொழுது நான்காவது வகுப்பிலுள்ளவர்கள் இறந்தவரின் சொத்தைப் பெறுவர்.

எடுத்துக்காட்டாக, இறந்தவருக்குத் தந்தைவழிச் சகோதரனும், சகோதரியும் (Paternal uncle and aunt) தாய்வழிச் சகோதரனும், சகோதரியும் (Maternal uncle and aunt) இருந்தால், முதலில் தந்தைவழிச் சகோதரனும், சகோதரியும் இறந்தவரின் சொத்தில் 2/3 பங்கையும், மீதம் 1/3 பங்கைத் தாய்வழிச் சகோதரனும், சகோதரியும் பெறுவர்.

இ. ஷீயா சட்டத்தில் மரபுரிமை இறக்கம்
C. Shia Law of Inheritance

6. Explain the Shia Law of Inheritance (ஷீயா சட்டம் கூறும் மரபுரிமை இறக்கத்தை விளக்குக.)

(அல்லது)

Describe the classes of heirs in respect of the estate of deceased Mohammedan and their rights under Shia Law. (ஷீயா சட்டத்தின் கீழ் இறந்த முகமதியரின் சொத்துக்கு வாரிசுரிமை உடையவர் களையும் அவர்களின் உரிமைகளையும் விவரி).

(அல்லது)

Distinguish between Shia and Sunni Law of Inheritance. (ஷீயா மற்றும் சுன்னி சட்ட மரபுரிமை இறக்கத்தை வேறுபடுத்துக.)

முன்னுரை:

சுன்னி சொத்துரிமை இறக்கச் சட்டத்துடன் ஒப்பிடும் பொழுது ஷீயா சொத்துரிமை இறக்கச் சட்டம் மிகவும் எளிமையாக உள்ளது. ஷீயா சொத்துரிமை இறக்கச் சட்டத்தைத் தெரிந்து கொள்ளுமுன், பிரதிநிதித்துவத் தத்துவத்தையும் (Principle of Representation), தலைவிகித உரிமை இறக்கத்தையும் (Succession per capita), கிளை விகித உரிமை இறக்கத்தையும் (Succession perstrips) மீண்டும் ஒரு முறை இங்கு நினைவிற்கு கொண்டு வருதல் நலம்.

சொத்துரிமை இறக்கம் பற்றி ஷீயா, சுன்னி சட்டங்களில் உள்ள முக்கிய வேறுபாடுகள் :

1. இந்தியாவில் பொதுவாக சுன்னி சட்டத்தையே அதிகம் பேர் பின்பற்றுகிறார்கள்.

2. சுன்னி சட்டம் பிரதிநிதித்துவத் தத்துவத்தை ஏற்றுக் கொள்ள வில்லை. ஆனால் ஷீயா சட்டம் இத்தத்துவத்தை ஏற்றுக் கொள்கிறது.

3. சுன்னி சட்டம் கூறும் தூரத்து உறவினர் (Distant Kindred) பற்றி, ஷீயா சட்டம் எதுவும் கூறவில்லை.

ஷீயா சட்டப்படியிலான வாரிசுகள்:

இசுலாமியச் சட்டத்தின் கீழான ஷீயா சட்டப்படி, ஷீயாப் பிரிவைச் சார்ந்த இசுலாமியர் ஒருவர் இறந்து போனால், அவர் விட்டுச் சென்ற சொத்தில் மரபுரிமை

இறக்கம் (சொத்துரிமை) பெறும் வாரிசுகளை பின்வரும் வகைகளாகப் பிரிக்கலாம். அவர்கள்,

1. இரத்தத் தொடர்புடைய வாரிசுதாரர்கள் (Heirs by consanguinity).

2. சிறப்புக் காரணங்களால் உரிமை பெறும் வாரிசுகள் (Heirs by special cause).

மேற்கண்டவர்களில் சிறப்புக் காரணங்களால் உரிமை பெறும் வாரிசுகளை, பின்வருமாறு மேலும் வகைப்படுத்தலாம். அவர்கள்,

(i) திருமணத்தின் மூலமாய் வாரிசுரிமை பெறுபவர்கள் (கணவன், மனைவி).

(ii) விசேஷ உறவு ஏற்படுத்திக் கொண்டதன் மூலம் வாரிசுரிமை பெறுபவர்கள். எடுத்துக்காட்டாக, அடிமையை விடுதலை செய்வதன் மூலமும், பிணை நிற்பதன் மூலமும் (Emancipation and suretyship), சமயவழி காட்டியாய் (Spiritual Headship) எற்றுக் கொள்ளப்பட்டதன் மூலமும் வாரிசுரிமைப் பெறுபவர்கள் என்று பிரிக்கப்படுகிறார்கள். ஆனால் இந்தியாவில் விசேஷ உறவு ஏற்படுத்திக் கொண்டதன் மூலம் ஏற்பட்ட வாரிசுகள் ஏற்கப் படுவதில்லை.

இரத்தத் தொடர்புடைய வாரிசுகள் - மூன்று வகுப்பினர்:

இரத்தத் தொடர்புடைய வாரிசுகளை பின்வரும் மூன்று வகுப்பினராகப் பிரிக்கலாம்.

முதல் வகுப்பினர் :

1. தாய், தந்தை

2. பெற்றெடுத்த குழந்தைகள், அவர்களுடைய நேர்வழித் தோன்றல்கள்.

இரண்டாம் வகுப்பினர் :

1. பாட்டன், பாட்டி அல்லது தாய்வழிப் பாட்டன், தாய்வழிப் பாட்டி.

2. சகோதரன், சகோதரி, அவர்களின் வழித் தோன்றல்கள்.

மூன்றாம் வகுப்பினர் :

1. தந்தையின் சகோதரன், தந்தையின் சகோதரி, அவர்களின் பெற்றோர்களின் பெற்றோர்கள், அவர்களின் வழித் தோன்றல்கள்.

2. தாயின் சகோதரன், தாயின் சகோதரி, அவர்களின் பெற்றோர்கள், அவர்களின் பெற்றோர்களின் பெற்றோர்கள்.

விதிகள் :

1. மேற்கூறிய மூன்று இரத்தத் தொடர்புடைய வாரிசுகளில் முதல்

வகுப்பினர், இரண்டாவது வகுப்பினரையும், இரண்டாவது வகுப்பினர் மூன்றாவது வகுப்பினரையும் இறந்தவரின் சொத்தில் பங்கு பெறுவதில் இருந்து தள்ளி விடுவார்கள்.

எடுத்துக்காட்டாக, ஒரு ஷியா இசுலாமியர் தனது மகளின் மகன், தந்தையின் தாய், முழுச் சகோதரன் ஆகியோரை விட்டு இறந்துவிட்டால், மகளின் மகன் முதலாவது வகுப்பில் வருவதால், அவன் தந்தையின் தாயையும் (பாட்டி), முழுச் சகோதரனையும் (Full Brother) தள்ளிவிட்டு முழுச் சொத்தையும் (பங்கையும்) பெறுவான். ஏனெனில் தந்தையின் தாய் மற்றும் முழுச் சகோதரன் இரண்டாம் வகுப்பில் வருகிறார்கள்.

மேற்கண்டதில் இறந்து போனவர் ஒரு சுன்னீ இசுலாமியராக இருந்தால் மகளின் மகன் தூரத்து உறவினன் என்பதால் தந்தையின் தாயாலும், முழுச் சகோதர னாலும் தள்ளப்பட்டு தந்தையின் தாய் பங்குதாரர் என்று முறையில் 1/6 பாகத்தையும், முழுச் சகோதரன் எச்சதாரர் என்ற முறையில் 5/6 பாகத்தையும் பெறுவார்கள்.

2. ஒவ்வொரு வகுப்பில் உள்ள அனைவரும் ஒரு சேரப்பங்கு பெறுவர். ஒவ்வொரு வகுப்பில் உள்ள பிரிவுகளில் உள்ளவர்களில் இறந்தவருக்கு நெருங்கி நிற்கும் உறவினர்கள், எட்டி நிற்கும் உற உறவினர்களைத் தள்ளி விடுவர்.

3. பங்குதாரர்களின் பங்கு திட்டவட்டமாக உள்ளது. பங்குதாரராய்க் குறிப்பிடப்பட்ட பங்கைப் பெற முடியாதவர்கள், எச்சதாரர் ஆவர். ஹனபி சட்டத்தில் உள்ளதைப் போன்று 'தூரத்து உறவினர்' எனும் மூன்றாவது பிரிவு ஷியாச் சட்டத்தில் இல்லை.

4. இறந்தவருக்கு கணவன் அல்லது மனைவி இருப்பின், அவர்கள் இறந்தவரின் சொத்திலிருந்து பங்கு பெறாமல் தள்ளப்படமாட்டார்கள். இவர்கள் இறந்தவரின் இரத்தத் தொடர்பால் நெருங்கி நிற்கும் உறவினருடன் சேர்ந்து பங்கு பெறுவார்கள். கணவனின் பங்கு 1/4 அல்லது 1/2, மனைவியின் பங்கு 1/8 அல்லது 1/4 ஆகும்.

5. வாரிசுகள் கிளைவிகித இறக்கப்படி (Per strips) இறந்தவரின் சொத்தில் பங்கு பெறுவர்.

6. முழு இரத்தச் சகோதரர்கள் அல்லது சகோதரிகள் தந்தைவழிச் சகோதரர்களையோ, தந்தை வழிச் சகோதரிகளையோ இறந்தவரின் சொத்தில் பங்கு பெறுவதில் இருந்து தள்ளிவிடுவார்கள். ஆனால் தாய் வழிச் சகோதரிகள் தள்ளப்படுவதில்லை.

பிரச்சனைகள் [Problems]

ஒரு ஷியா இசுலாமியர் பின்வரும் வாரிசுகளை விட்டு இறந்து விட்டால், இறந்தவரின் சொத்து பிரிக்கப்படும் விதம்.

(i) 1. கணவன், 2. தாய், 3. தந்தை.

1. கணவன் பெறும் பங்கு : 1/2 (பங்குதாரர்)
2. தாய் பெறும் பங்கு : 1/3 (பங்குதாரர்)
3. தந்தை பெறும் பங்கு : 1/6 (எச்சதாரர்)

$$1/2 + 1/3 + 1/6 = 3 + 2 + 1/6 = 6/6 = 1$$

குறிப்பு : சுன்னீ சட்டப்படி மேற்கண்டவர்கள் பெறும் பங்கு மாறுபடும். அஃதாவது, கணவன் 1/2 பங்கையும், தாய் 1/6 (1/2 பங்கில் 1/3 பங்கு) பங்கையும், தந்தை 1/3 பங்கையும் பெறுவர்.

(ii) 1. மனைவி, 2. தாய், 3. தந்தை.

1. மனைவி பெறும் பங்கு : 1/4 (பங்குதாரர்)
2. தாய் பெறும் பங்கு : 1/3 (பங்குதாரர்)
3. தந்தை பெறும் பங்கு : 5/12 (எச்சதாரர்)

$$1/4+ 1/3 + 5/12 = 3 + 4 + 5/12 = 12/12 = 1$$

குறிப்பு : சுன்னீ சட்டப்படி மனைவி பெறும் பங்கு 1/4, தாய் பெறும் பங்கு (1/3 X 3/4 =) 1/4, தந்தை பெறும் மீதிப் பங்கு 1/2 ஆகும்.

(iii) 1. தந்தை, 2. தாய், 3. மகன்.

1. தந்தை பெறும் பங்கு : 1/6 (பங்குதாரர்)
2. தாய் பெறும் பங்கு : 1/6 (பங்குதாரர்)
3. மகன் பெறும் பங்கு : 2/3 (எச்சதாரர்)

$$1/6 + 1/6 + 2/3 = 1 + 1 + 4/6 = 6/6 = 1$$

(iv) 1. தந்தை, 2. தாய், 3. மகனின் மகன்.

1. தந்தை பெறும் பங்கு : 1/6 (பங்குதாரர்)
2. தாய் பெறும் பங்கு : 1/6 (பங்குதாரர்)
3. மகனின் மகன் பெறும் பங்கு : 2/3 (எச்சதாரர்)

(v) 1. தந்தை, 2. தாய், 3. 2 மகள்கள்.

1. தந்தை பெறும் பங்கு : 1/6 (பங்குதாரர்)
2. தாய் பெறும் பங்கு : 1/6 (பங்குதாரர்)
3. 2 மகள்கள் பெறும் பங்கு : 2/3 (எச்சதாரர்)

(vi) 1. தந்தை, 2. தாய், 3. மகளின் மகன்.

1. தந்தை பெறும் பங்கு	:	1/6 (பங்குதாரர்)
2. தாய் பெறும் பங்கு	:	1/6 (பங்குதாரர்)
3. மகளின் மகன் பெறும் பங்கு	:	2/3 (எச்சதாரர்)

(vii) 1. தந்தை, 2. தாய், 3. மகளின் மகள்கள்.

1. தந்தை பெறும் பங்கு	:	1/6 (பங்குதாரர்)
2. தாய் பெறும் பங்கு	:	1/6 (பங்குதாரர்)
3. மகளின் மகள்கள் பெறும் பங்கு	:	2/3 (எச்சதாரர்)

குறிப்பு: மேற்கண்ட **(vi)**–வது பிரச்சனையில் கண்ட மகளின் மகனும், **(vii)**–வது பிரச்சனையில் கண்ட மகளின் மகள்களும் சுன்னீ சட்டப்படி தூரத்து உறவினர்கள் ஆவர்.

7. Explain the Doctrine of Increase or Aul in Shia Law. (ஷீயா சட்டத்தில் ஏற்ற விதிக்கொள்கையை விளக்குக.)

ஷீயாச் சட்டமானது, சுன்னீ பிரிவால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஏற்ற விதிக் கொள்கையை ஏற்கவில்லை. மாறாக, பின்னத்தின் மேல் எண்களின் கூட்டுத் தொகையும், கீழ் எண்களின் கூட்டுத் தொகையும் சமமில்லாமல் பங்கு அதிகமாக இருந்தால், பின்னத்தின் எஞ்சியிருக்கும் பங்கைப் பின்வரும் வாரிசுகளின் பங்குகளில் இருந்து குறைத்துவிட வேண்டும் என்று கூறுகிறது.

1. மகள் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மகள்களின் பங்குகளிலிருந்து மட்டும் குறைத்து விட வேண்டும். (அல்லது)

2. உடன் பிறந்த சகோதரி அல்லது சகோதரிகளின் பங்கிலிருந்தோ, தந்தை வழிச் சகோதரி அல்லது சகோதரிகளின் பங்கிலிருந்தோ குறைக்க வேண்டும்.

பிரச்சனை:

ஒரு ஷீயா இசுலாமியர் (அ) கணவன், (ஆ) மகள், (இ) தந்தை, (ஈ) தாய் ஆகியோரை விட்டு இறந்தால், அவனது சொத்துப் பிரிக்கப்படும் விதம்.

கணவன் பெறும் பங்கு	:	1/4	=	3/12	=	3/12
மகள் பெறும் பங்கு	:	1/2	=	6/12 – 1/12	=	5/12
தந்தை பெறும் பங்கு	:	1/6	=	2/12	=	2/12
தாய் பெறும் பங்கு	:	1/6	=	2/12	=	2/12

மேற்கண்டவர்கள் சட்டப்படி பெற்ற பங்குகளின் கூட்டுத் தொகை வருமாறு.

$$3/12 + 6/12 + 2/12 + 2/12 = 13/12$$

இக்கூட்டுத் தொகையின்படி 1/12 பங்கு அதிகமாக உள்ளது. எனவே இப்பங்கை மகளின் மொத்தப் பங்கிலிருந்து ஏற்ற விதிக் கொள்கையின்படி கழிக்க வேண்டும். அதாவது, 6/12 – 1/12 = 5/12. இப்பொழுது கூட்டினால் பின்னம் சமமாகிவிடும்.

$$3/12 + 5/12 + 2/12 + 2/12 = 12/12$$

8. Explain the Doctrine of Return of Radd in Shia Law. (ஷியாச் சட்டத்தில் இறக்க விதிக் கொள்கையை விளக்குக.)

ஒரே வகுப்பினரிடையே, பங்குதாரர்களுக்குப் பங்கு கொடுத்தது போக எஞ்சியதைப் பெற எச்சதாரர்கள் இல்லையென்றால், ஷியாச் சட்டத்தில் இறக்க விதிக் கொள்கை பயன்படுத்தப்படுகிறது. இதன்படி,

கணவனோ அல்லது மனைவியோ மட்டுமே பங்குதாரராய் இல்லாமல், இறந்தவருக்கு வேறு பங்குதாரர்களும் இருக்கும் பொழுது இறக்க விதியைப் பயன்படுத்திக் கணவனுக்கோ அல்லது மனைவிக்கோ பங்கை அதிகரித்துத் தரக் கூடாது. மாறாக மீதம் இருக்கும் பங்குதாரர்களுக்கே பங்கை அதிகரித்துத் தர வேண்டும். மனைவி மட்டுமே இறந்தவருக்கு வாரிசாக இருந்தாலும், இறக்க விதி பயன்படுத்தப்பட்டு, அவளுடைய கூடுதல் பங்கான 1/4 பங்கிற்கு மேல் எஞ்சியிருப்பதைப் பெற அவள் உரிமையற்றவளாவாள். 1/4 பங்கு போ மிஞ்சியிருப்பது அரசுறு பொருளாக (Escheat) அரசாங்கத்தைப் போய்ச் சேரும்.

அதுபோல், தந்தையும் ஒரு மகளும் இறந்தவருக்கு இருந்து, அவர்களோடு (1) உடன்பிறந்த சகோதரர்களும் அல்லது (2) தந்தை வழிச் சகோதரிகளும் இருந்தால், இறக்கவிதி பயன்படுத்தப்பட்டு, அதிகம் பங்கு பெறுவதிலிருந்து தாய் தள்ளப்படுவாள்.

மேலும் உடன் பிறந்த சகோதரிகள் உடன் வாழ்ந்தால், தாய்வழிச் சகோதரனும் தாய்வழிச் சகோதரியும், இறக்கவிதி பயன்படுத்தப்பட்டு, பங்கு அதிகம் பெறுவதிலிருந்து தள்ளப்படுவர்.

9. Explain with suitable illustrations the rules of 'Aul' and 'radd' as applicable in Hanafi and Shia laws of inheritance. (ஹனபி மற்றும் ஷியாச் சட்ட மரபுரிமை இறக்கத்திற்குப் பொருந்தக் கூடிய 'அவுல்' மற்றும் 'ரத்து' விதிகளை தகுந்த எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.)

(ஹனபி (சுன்னி) மற்றும் ஷியாச் சட்டத்தின் கீழான 'அவுல்' மற்றும் 'ரத்து' விதிகளைத் தொகுத்து எழுதுக. அவற்றை சென்ற வினாக்களின் விடைகளில் காண்க.)

-oOo-

பகுதி - III

இந்திய வாரிசுரிமைச் சட்டம், 1925

[Indian Succession Act, 1925]

- அறிமுகம்
- வாழ்வகம்
- உயில்இல்வழி வாரிசுரிமை
- உயில் வழி வாரிசுரிமை (அல்லது) உயில்
- உயில் வழிக் கொடை
- இறந்தவரின் சொத்தைப் பாதுகாத்தல்
- இறந்தவரின் சொத்தை நிருவகித்தல்
  - உயில் மெய்ப்பிதழ்
  - நிருவாக உரிமைப் பத்திரம்
  - நிறைவேற்றாளர் மற்றும் நிருவாகியின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள்
- உரிமை இறக்கச் சான்றிதழ் (அல்லது) வாரிசுரிமைச் சான்றிதழ்

இந்திய வாரிசுரிமைச் சட்டம், 1925
[The Indian Succession Act, 1925]

அறிமுகம்

இந்திய வாரிசுரிமைச் சட்டம், 1925–ஆம் ஆண்டில் இயற்றப்பட்டு, 30–09–1925–ஆம் தேதியிலிருந்து அமலுக்கு வந்தது. ஆரம்பத்தில் இச்சட்டத்தின் அளாவுகை (extent) இந்தியாவின் குறிப்பிட்ட சில மாநிலங்களுக்கு மட்டுமே பொருந்தக் கூடியதாக இருந்தது. எனினும் பின்னர் பல்வேறு காலகட்டங்களில் கொண்டு வரப்பட்ட மத்திய நிலப்பரப்பு (சட்டங்கள்) திருத்தச் சட்டங்களால் [The Union Territories (Laws) Amendment Act], இதன் அளாவுகை இந்தியாவின் வேறு பல மாநிலங்களுக்கும் பொருந்தக் கூடியதாக ஆக்கப்பட்டது. இச்சட்டம் மொத்தம் 11 பகுதிகளாகப் (Parts) பகுக்கப்பட்டுள்ளது. இவற்றின் கீழ் 392 சட்டப் பிரிவுகளும், 9 அட்டவணைகளும் (Schedules) உள்ளன.

இச்சட்டத்தின் முதன்மை நோக்கம், உயில்இல்வழி மற்றும் உயில்வழி வாரிசுரிமைக்கு பொருந்தக் கூடிய அனைத்து இந்தியச் சட்டங்களையும் தொகுப்பதாகும். இதனை இச்சட்டத்தின் முகப்புரை (Preamble) தெளிவுபடுத்துகிறது. இச்சட்டம் இந்தியாவை வாழ்வகமாகக் கொண்ட அய்ரோப்பியருக்கும், ஆங்கிலோ–இந்தியருக்கும், கிழக்கிந்தியருக்கும், இந்தியக் கிறுத்தவர்களுக்கும், பார்சிகளுக்கும், இந்து மதத்திலிருந்து கிறுத்தவ மதத்திற்கு மாறியவர்களுக்கும், சிறப்பு திருமணச் சட்டப்படி திருமணம் செய்தவர்களுக்கும் பொருந்தும். எனவே இச்சட்டத்தின் குறிப்பிட்ட சில பகுதிகள் இந்துக்கள், இசுலாமியர்கள், பௌத்தர்கள், சீக்கியர்கள், ஜைனர்கள் ஆகியோர்களுக்குப் பொருந்தாது. எனினும், உயில் குறித்த பொருள்விளக்கங்கள், உயில் வழிக் கொடைகள், நிறைவேற்றாளர், நிருவாகி ஆகியோர்களின் நியமனம், வாரிசுரிமைச் சான்றிதழ் ஆகியவற்றைப் பற்றிக் கூறும் சட்டப் பிரிவுகள் பொதுவாக இந்தியாவில் வாழும் அனைத்துப் பிரிவினருக்கும் பொருந்தும்.

இச்சட்டம் காலத்தின் தேவைக்கேற்ப தற்பொழுது 2002–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்திய வாரிசுரிமைத் (திருத்தச்) சட்டத்தால் [The Indian Succession (Amendment) Act of 2002] திருத்தப்பட்டது.

வாழ்வகம் (அல்லது) உறைவிடம் [Domicile]

1. Domicile - Write Short notes. (வாழ்வகம் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Explain "Domicile" and elucidate its importance under the Indian Succession Act. ("உறைவிடம்" என்பதனை விளக்கி, இந்திய இறங்குரிமைச் சட்டத்தில் அதன் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்துக.)

(அல்லது)

Explain the importance of domicile and distinquish between domicile of origin and domicile of choice. (வாழ்வகத்தின் முக்கியத்துவத்தை விளக்கி, தோற்ற வாழ்வகத்தை தேர்ந்தெடுத்துள்ள வாழ்வகத்திலிருந்து வேறுபடுத்துக.)

(அல்லது)

State the importance of 'domicile' under the Indian succession Act. What are the various types of domicile and how are they acquired ? (இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் "உறைவிடம்" என்பதன் முக்கியத்துவத்தைத் தெரிவி. பலவகை உறைவிடங்கள் யாவை ? அவை எவ்வாறு பெறப்படுகின்றன ?)

வாழ்வகம் (அல்லது) உறைவிடம் (Domicile) - பொருள்:

'வாழ்வகம்' அல்லது "உறைவிடம்" என்பதின் பொருள் இந்திய வாரிசுரிமைச் சட்டத்தில் எங்கும் விளக்கப்படவில்லை. எனினும் 'ஒருவன் தன்னுடைய நிரந்தரக் குடியிருப்பைத் தன்னிச்சையாகவோ, சட்டத்தின் வாயிலாகவோ ஒரு நாட்டில் வைத்திருப்பானேயானால், அதுவே அவனின் வாழ்வகமாகும்' என்று **ஆல்சுபரின் 'சட்டக் களஞ்சியம்'** விளக்குகிறது. சுருங்கக் கூறின், சமுதாயத்தில் ஒரு மனிதனின் தகுதியை நிருணயிக்கும் பொருட்டு, நிரந்தரமாக கொண்டுள்ள அவனது வீடு அமைந்துள்ள நாட்டினையே அவனது வாழ்வகமென அல்லது உறைவிடமெனக் கூறலாம்.

வாழ்வகம் - இரு மூலக் கூறுகள் :

ஆங்கிலச் சட்டப்படி வாழ்வகத்திற்கு இரு மூலக்கூறுகள் தேவை. 1. ஒரு குறிப்பிட்ட வகையான குடியிருப்பு (Factum of Residence - an indefinite

habitation though not a continuous one). 2. அங்கு நிரந்தரமாகக் குடியிருக்கும் தற்பொழுதைய எண்ணம் அல்லது நோக்கம். (Animus - present intention to reside for ever). எனவே நிலையாக குடியிருக்கும் எண்ணமும், அவ்வெண்ணத்தினைச் செயல்படுத்தலும் அவசியம். குடியிருப்பு இடை விடாததாய் இருக்க வேண்டும் என்பதில்லை. ஆனால் தற்காலிகமாக இல்லாமல் முடிவின்றியிருத்தல் வேண்டும். ஒரு நாட்டில் கொண்டுள்ள குடியிருப்பு, அங்கேயே நிரந்தரமாக வாழ வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். ஒரு மனிதனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட குடியிருப்பு இருப்பின், அவைகளில் எந்த இடத்தில் அவனது மனைவி மற்றும் குடும்பத்தினை குடி வைக்கிறானோ, அதுவே அவனது வாழ்வகமாகும். அதாவது ஒருவனின் மனைவியும் மக்களும் குடியுருக்குமிடமே அவனது வாழ்வகம் என்பது மரபு.

வாழ்வகத்தின் முக்கியத்துவம் :

வாழ்வகமின்றி எந்த ஒரு மனிதனும் நிச்சயமாக இருக்க முடியாது. ஏனென்றால், அவன் இறந்தால் அவனது சொத்துக்களை எந்தச் சட்டப்படி வாரிசுகளுக்கு கொடுக்க வேண்டுமெனத் தீர்மானிக்க வாழ்வகம் தேவையான தாகும். வாழ்வகத்தின் அடிப்படையைக் கொண்டுதான் இறந்தவரின் சொத்துக்களின் வாரிசுரிமையை நிருணயம் செய்ய முடியும்.

இறந்தவரின் இந்தியாவிலுள்ள அசையாச் சொத்துக்களின் வாரிசுரிமை, அவர் இறக்கும்போது கொண்டிருந்த வாழ்வகத்தினைக் கருத்தில் கொள்ளாமல், அது இந்திய நாட்டுச் சட்டப்படி நடைமுறைப்படுத்தப்படும். இறந்தவரின் அசையும் சொத்துக்களின் வாரிசுரிமை, அவர் இறக்கும் போது எந்த நாட்டின் வாழ்வகத்தைக் கொண்டிருந்தாரோ அந்த நாட்டின் சட்டப்படி நடைமுறைப் படுத்தப்படும். எனவே, வாரிசுரிமையைச் செயல்படுத்த ஒருவரின் வாழ்வகம் ÃUz a« brŒa¥gLtJ Äf K¡»akhd jhF«.(பிரிவு 5).

எடுத்துக்காட்டுகள்: (1) இந்தியாவை வாழ்வகமாகக் கொண்ட A என்பவர் தனது அசையும் சொத்துக்களை ஃபிரான்சு நாட்டிலும் இங்கிலாந்து நாட்டிலும், அசையும், அசையா என்ற இருவகைச் சொத்துக்களை இந்தியாவிலும் விட்டு விட்டு, ஃபிரான்சு நாட்டில் இறந்து போகிறார். அனைத்துச் சொத்துக்களின் வாரிசுரிமை இந்திய நாட்டுச் சட்டப்படி செயற்படுத்தப்படும்.

(2) ஃபிரான்சு நாட்டைத் தம் வாழ்வகமாகக் கொண்ட A எனும் ஆங்கிலேயர், இந்தியாவிலுள்ள தனது அசையா, அசையும் எனும் இருவகைச் சொத்துக்களையும் விட்டுவிட்டு, இந்தியாவில் இறந்து போகிறார். அசையும் சொத்துக்களின் வாரிசுரிமை ஃபிரான்சு நாட்டுச் சட்டப்படியும், அசையாச் சொத்துக்களின் வாரிசுரிமை இந்திய நாட்டுச் சட்டப்படியும் செயற்படுத்தப்படும். இத்தத்துவம் தனி நாட்டிடைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

வாழ்வகத்தின் வகைகள் - மூவகை:

1. பிறப்பின் மூலமாகப் பெற்ற வாழ்வகம். இதனை **'தோற்ற வாழ்வகம்' (Domicile of origin)** எனவும் கூறலாம். (பிரிவுகள் 7, 8 & 14).
2. தேர்ந்தெடுத்த வாழ்வகம் **(Domicile of choice)** (பிரிவுகள் 10 முதல் 13 வரை).
3. சட்டத்தின் வாயிலாகப் பெற்ற வாழ்வகம் **(Domicile by the operation of law)** (பிரிவுகள் 14 முதல் 18 வரை).

1. பிறப்பிட வாழ்வகம் அல்லது தோற்ற வாழ்வகம் (Domicile of Origin) :

பிரிவு 7–ன்படி, ஒருவன் பிறக்கின்ற பொழுதே ஒரு வாழ்வகத்தை உடையவன் ஆவான். அதுவே அவனுடைய 'பிறப்பிட வாழ்வகம்' ஆகும். முறை மணத்தில் பிறந்த குழந்தையாயின் தந்தையின் வாழ்வகத்தை கொண்டதாகும். **பிரிவு 8–ன்படி,** முறை மணத்தில் அல்லாமல் பிறந்த குழந்தையாயின், அது தாயின் வாழ்வகத்தை கொண்டதாகும்.

'பிறப்பிடம்' என்ற சொல் அவனது பிறந்த இடத்தையும், 'வாழ்வகம்' என்ற சொல் அவனோ அல்லது அவனது தந்தையோ வாழும் இடத்தையும் குறிக்கும். எடுத்துக்காட்டாக, இங்கிலாந்தை தம் வாழ்வகமாகக் கொண்ட ஒருவருக்கு இந்தியாவிலிருக்கும் போது குழந்தை ஒன்று பிறப்பதாகக் கொள்வோம். அக்குழந்தைக்கு வாழ்வகமாக தந்தையின் வாழ்வகமாகிய இங்கிலாந்து நாட்டைத்தான் கூறவியலுமே தவிர, பிறந்த இடமாகிய இந்தியாவைக் கூறவியலாது. இங்கிலாந்தினை வாழ்வகமாகக் கொண்ட ஒருவர் வேற்று நாட்டில் பயணம் செய்யும்போது அவருக்கு அந்நாட்டில் குழந்தை பிறந்தால், அக்குழந்தை பிறந்த நாட்டின் வாழ்வகத்தையல்லாமல், தந்தையின் வாழ்வகத்தைப் பெறும்.

பிறப்பிட வாழ்வகமென்பது, சுயமுயற்சியில்லாமல், சட்டப்பூர்வமாக ஒருவரை வந்தடைவதாகும். தந்தை இறந்தபின் பிறக்கும் குழந்தையின் வாழ்வகம், அக்குழந்தையின் தந்தை இறக்குமுன் எந்நாட்டின் வாழ்வகத்தை உடையவராக இருந்தாரோ, அந்நாட்டைச் சாரும் **(பிரிவு 7).** முறைப்படி திருமணமாகாதவர் களுக்கு பிறந்த குழந்தையை அதன் பெற்றோர்கள் திரும்ப முறைப்படி மணம் செய்து கொள்வதன் மூலம் முறையுடையதாக்கலாம்.

பெற்றோரின் வாழ்வகமே உரிமை வயது அடையாதவரின் பிறப்பிட வாழ்வகமாகும் என்று **பிரிவு 14** கூறுகிறது.

Joph v. Wood - எனும் வழக்கில் ஒருவர் தனது பிறப்பிட வாழ்வகமாக ஸ்காட்லாந்து நாட்டைக் கொண்டிருந்தார். பின்னிட்டு அவர் இந்தியாவில்

(கல்கத்தாவில்) 25 ஆண்டு காலம் வசித்து வந்தார். அந்த காலகட்டத்தில் ஒரே ஒரு முறை ஸ்காட்லாந்து நாட்டிற்குச் சென்று, அங்கு ஓராண்டு தங்கிவிட்டு திரும்பினார். எனினும் தான் ஸ்காட்லாந்திற்கே திரும்பிவிட வேண்டும் எனும் எண்ணத்தை அவர் தெரிவித்தார் என்பதற்குண்டான ஆதாரங்கள், மேற்படி வழக்கில் சமர்ப்பிக்கப்பட்டன. எனவே அவர் தனது ஸ்காட்லாந்து நாட்டின் பிறப்பிட வாழ்வகத்தினை முறித்துக் கொள்ளவில்லை என்று தீர்ப்புரைக்கப்பட்டது.

2. தேர்ந்தெடுத்த வாழ்வகம் (Domicile of Choice) :

ஒருவர் தம்முடைய பிறப்பிட வாழ்வக நாடல்லாத நாட்டில் சென்று நிலையாக குடியேறி, அந்நாட்டினை கால வரையின்றித் தனது தாயகமாக கொள்ளும் நோக்கத்தோடு அங்கு வசிப்பாரேயானால், அவர் தேர்ந்தெடுத்த வாழ்வகத்தினைப் பெறுவதாகச் சொல்லப்படும் **(பிரிவு 10).** தொடர்ந்து வசிப்ப தோடு, அங்கு நிலையாக குடியிருக்கும் நோக்கமும் இருக்க வேண்டும். எனவே செயலும் எண்ணமும் ஒருங்கிணைந்தால்தான் தேர்ந்தெடுத்த வாழ்வகத்தினை அடைய முடியும். 'செயல்' என்பது அங்கு குடியிருத்தல்; 'எண்ணம்' என்பது அவ்வாறு குடியிருத்தலை நிலையாக்கல் ஆகும். எனவே, ஒருவர் "தேர்ந்தெடுத்த வாழ்வகத்தினை" தேர்ந்தெடுத்துக் கொண்டால், அங்கு பிறப்பிட வாழ்வகம் அப்போதைக்கு செயலற்று நிற்கும்; ஆனால் அது முற்றிலும் ஒழிந்து விடாது.

Thomas Edmand v. Hakgara Margan – இவ்வழக்கில் 'A' என்பவர் பிரிட்டிஷ் பெற்றோர்களுக்கு 1854–ல் பிறந்தார். இவர், 1880 ஆம் ஆண்டில் பாதிரியாகச் சேவை புரிய இந்தியாவிற்கு வந்தார். இவர், 1933–ஆம் ஆண்டில் மரணமடையும் வரை கல்கத்தாவில் வாழ்ந்து வந்தார். ஆனால் இடையிடையே (1888 முதல் 1930 ஆம் ஆண்டு வரையிலான இடைபட்ட காலத்தில்) 7 முறை (ஒவ்வொரு முறையும் 6 மாத காலங்கள் இங்கிலாந்தில் வசித்து வந்தார்) இங்கிலாந்து சென்று வந்தார். இவர் தமது உயிலில் மதக் காரியங் களுக்காக சில கொடைகளை எழுதி வைத்தார். ஆனால் நீதிமன்றம் இவரது கொடைகளை ஏற்கவில்லை. ஏனெனில் இவர் இந்தியாவை வாழ்வகமாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டார். இந்தியாவிலேயே மரணமடைந்தார். மேலும் தம்முடைய பிறப்பிட வாழ்வகத்திற்கு திரும்பச் செல்ல வேண்டுமென்ற எண்ணம் இல்லாமல் இருந்தார். ஆகையால் இவர் இந்திய வாரிசுமைச் சட்டத்தின் கீழ் வருகிறார். அதன்படி இவர் எழுதி வைத்த உயில் செல்லாது என்று எனப்பட்டது.

ஒரு நாட்டின் தூதுவரோ (Ambassador) அல்லது கான்சலோ (நாடு கடந்த வாணிப தூதுவர்) தமது அலுவல் நிமித்தமாக ஒரு நாட்டில் வாழ்வதால் அவரும், அவரது குடும்பத்தினரும், மற்றும் அவரது பணியாள்களும், அந்த நாட்டின் வாழ்வகத்தினை பெற முடியாது அல்லது தேர்ந்தெடுக்க முடியாது. ஏனெனில், இவர்களுக்கு அந்த வெளிநாட்டினை தங்கள் தயாகமாகக் கொள்ளும் எண்ணம் கிடையாது. **(பிரிவு 12).**

3. சட்டத்தின் வாயிலாகப் பெற்ற வாழ்வகம் (Domicile by the operation of law):

வேற்று வாழ்வத்தினுடைய ஒரு பெண், திருமணம் புரிந்து கொண்டதால், தன் கணவனின் வாழ்வகத்தினையே பெறுவாள் **(பிரிவு 15)**. இதுவே சட்டத்தின் வாயிலாகப் பெற்ற வாழ்வகம் எனப்படுகிறது. கணவனோ, மனைவியோ அத் திருமணத்தைத் தவிர்த்துக் (முறித்துக்) கொள்ளும் வரை, கணவனின் வாழ்வகமே மனைவியின் வாழ்வகமாகும். ஒரு பெண், விதவையானவுடன், தன் கணவனின் வாழ்வத்தினை இழந்து தனது முந்தய வாழ்வகத்தினைப் பெறுவதில்லை. அதாவது விதவையான பிறகும் கணவனின் வாழ்வகமே, மனைவியின் வாழ்வகமாகும். ஆனால் அவள் அதனை விடுத்துப் புதியதொரு வாழ்வகத்தினை விரும்பித் தேர்ந்தெடுக்க அவளுக்கு உரிமை உண்டு. திருமண முறிவு ஏற்படாத நிலையில் கணவன் எத்தனை முறை தன்னுடைய வாழ்வகத்தை மாற்றினாலும், அத்தனை முறையும் மனைவியின் வாழ்வகமும் மாறும்.

கணவன் தண்டனையின்படி நாடு கடத்தப்பட்டிருந்தால், மனைவியின் வாழ்வகம் கணவனின் வாழ்வகத்தைச் சாராது. அவ்வாறு தண்டிக்கப்படும் பொழுது, சமூகத்தில் தன்னுடைய தகுதியைக் கணவன் இழக்கிறான். எனவே, கணவனின் வாழ்வகத்தை மனைவி சாரும் நிலை முடிவடைகிறது. **(பிரிவு 16)**

புத்தி சுவாதீனமற்ற ஒருவரின் வாழ்வகம் வேறு ஒருவரின் வாழ்வகத்தைச் சார்ந்து செல்லுமேயன்றி, எவ்வழியிலும் அவர் புதிய வாழ்வகத்தினை அடைய முடியாது. ஏனெனில், அவராகவே தம் வாழ்வகத்தினை தேர்ந்தெடுத்துக் கொள்ள இயலாது. அவரது காப்பாளராக இருப்பவரின் வாழ்வகத்தோடு அவரது வாழ்வகமும் மாறும் **(பிரிவு 17 மற்றும் 18)**. அதுபோல் உரிமை வயதை அடையாத இளவர் ஒருவரின் வாழ்வகம், அவரது பெற்றோரின் வாழ்வகமே **(பிரிவு 14)**.

Milathi Anne v. Subbaraya Mudaliar – இவ்வழக்கில் ஃபிரஞ்சு இந்தியாவை வாழ்வகமாகக் கொண்ட ஓர் இந்து விதவை, தன் கணவனின் சொத்தை, பின்னுரிமையராக (Reversioner) அடைந்தாள். பின் பிரிட்டிஷ் இந்தியாவிற்கு வந்து, அதைத் தனது வாழ்வகமாகக் கொண்டாள். அவள் தனது கணவனின் சொத்தை பிரஞ்சு இந்திய வாரிசுரிமை சட்டப்படி பெற்றாள். ஆனால் அவள் பின் பிரிட்டிஷ் இந்தியாவை வாழ்வகமாகக் கொண்டதால், அங்கு நிலவும் சட்டப்படி பின்னுரிமை முறையில் சொத்தை அடைய உரிமை பெற்றவளா எனும் வினா மேற்படி வழக்கில் எழுந்தது. இந்நிலையில் ஓர் இந்து விதவையின் நாட்டுப் பெயர்ச்சியும் (Migration), வாழ்வக மாற்றமும் அவளது சொத்தின் உரிமையை பாதிக்காது என்று நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

வாழ்வகத்தைப் பெறும் வழிகள் (Modes of acquiring a Domicile) :

நாம் இதுகாறும் கண்டவாறு ஒருவர் பிறப்பினாலும், விருப்பத்தினாலும்,

சட்டத்தினாலும் தனது வாழ்வகத்தைப் பெறலாம். குறிப்பாக இளவர்கள் தங்களுடைய பெற்றோர்களின் வாழ்வகத்தினையும், திருமணமான பெண்கள் தங்கள் கணவனின் வாழ்வகத்தினையும், திருமணமாகாத பெண்களும் இளவராக உள்ள பெண்களும் தங்களின் தந்தையின் வாழ்வகத்தையும் பெறுவர். இளவராக உள்ள பெண்கள் திருமணம் முடிந்த பின்னும் பருவ வயதை (Major) அடையும் வரை தனது தந்தையின் வாழ்வகத்தையே அடைவர். புத்தி சுவாதீனமற்றவர்கள் தங்கள் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வாழ்வகத்தைப் பெறுவர். முறையில்லா மணப்பிறப்பில் பிறந்த குழந்தை (Illegitimate child) தனது தாயின் வாழ்வகத்தைப் பெறுமேயன்றித் தனது தந்தையின் வாழ்வகத்தைப் பெறமுடியாது. வெளிநாட்டுத் தூதுவர்கள், தாங்கள் வேலை செய்யும் நாட்டின் வாழ்வகத்தைப் பெற முடியாது.

இந்தியாவில் வாழ்வகத்தைப் பெறுவதற்கான சிறப்பு முறை (Special mode of acquiring domicile in India) :

1925–ஆம் ஆண்டு இந்திய வாரிசுரிமை சட்டத்தின் **11–வது பிரிவு,** ஒருவர் இந்தியாவில் வாழ்வகத்தினை அடைவதற்கான சிறப்பு முறை குறித்து கூறுகிறது. அதன்படி,

இந்தியாவில் ஒரு வாழ்வகத்தை அடைய விரும்பும் எவரும், தங்கள் அத்தகு விருப்பம் கொண்ட விளம்புகை (Declaration) ஒன்றை தங்கள் கைப்பட எழுதி, அதனை மாநில அரசால் இதற்கென நியமிக்கப்பட்டுள்ள அலுவலகத்தில் வைப்பீடு (Deposit) செய்தல் வேண்டும். ஆனால் அத்தகு விளம்புகையை அவர் செய்யும் காலத்திற்கு உடன் முன்னதான ஓராண்டு காலத்திற்கு அவர் இந்தியாவில் வசித்துக் கொண்டிருப்பவராக இருக்க வேண்டும்.

வாரிசுரிமை செயலாகும் வாழ்வகம் குறித்த பொது விதி :

பிரிவு 5–ன்படி, இந்தியாவிலுள்ள அசையாச் சொத்தின் வாரிசுரிமையை, அதன் உரிமையாளர் இறக்கும் பொழுது, அவர் கொண்டிருந்த வாழ்வகத்தினைக் கருதாமல் இந்தியச் சட்டப்படி செயற்படுத்த வேண்டும். இறந்தவரின் அசையும் சொத்தின் வாரிசுரிமையை, அவர் இறக்கும் பொழுது கொண்டிருந்த வாழ்வக நாட்டின் சட்டப்படி செயற்படுத்த வேண்டும்.

பிரிவு 19–ன்படி, ஒருவர் தனது அசையும் சொத்தை இந்தியாவில் விட்டு இறந்துவிடும் நேர்வில், அவரது வேறு எங்காவது தனது வாழ்வகத்தைக் கொண்டிருந்தார் என்பதை மெய்ப்பிக்க இயலவில்லையானால், அச்சொத்தின் வாரிசுரிமை இந்திய நாட்டுச் சட்டப்படி செயற்படுத்தப்படும். அதாவது இங்கு இறந்து போன நபர், தனது வாழ்வகமாக இந்தியாவையே கொண்டிருந்தார் என்று அனுமானம் (Presumption) கொள்ள வேண்டும்.

2 உயில் இல்வழி வாரிசுரிமை [Intestate Succession]

2. Intestate Succession - Write short notes. (உயில் இல்வழி வாரிசுரிமை – சிறு குறிப்பு வரைக.)

வாரிசுரிமை – இரண்டு வகை:

வாரிசுரிமை என்பது, உயில் வழி வாரிசுரிமை என்றும், உயில் இல்வழி வாரிசுரிமை என்றும் இரு வகைப்படும். சொத்தின் உரிமையாளர் தம் வாழ்நாளிலேயே தமக்குப் பிறகு தம்முடைய சொத்துக்கள் எவ்வாறு பங்கிடப்பட வேண்டுமென்று முன் கூட்டி ஆலோசித்து எழுதிக் கையொப்பமிட்டு வைத்திருக்கும் ஆவணம் 'உயில்' எனப்படும். அவர் இறந்தபின் அச்சொத்துக்கள் அவ்வுயிலில் கண்டுள்ளபடி வாரிசுகட்குப் பங்கிடப்படும். இம்முறையே உயில் வழி வாரிசுரிமையாகும்.

அப்படி உயில் எழுதாமல் இறந்திருந்தால், அவரது சொத்து, சட்டம் கூறும் வாரிசுரிமை விதிகளின்படி பங்கிடப்படும். இஃது உயில் இல்வழி வாரிசுரிமை எனப்படும்.

உயில் இல்வழி வாரிசுரிமை – யாது ?

ஒருவர் தமது சொத்துக்கள் தமக்குப் பிறகு எவ்வாறு பிரிக்கப்பட வேண்டுமென எழுதி வைக்காமல் இறந்து போயிருந்தாலும் அல்லது உயில் வைத்திருந்து அதனைச் செயல்படுத்த இயலாமற் போயினும் உயில் இல்வழியில் இறந்துவிட்டார் எனக் கருதப்படுவர்.

எடுத்துக்காட்டு: 'A' என்பவர் உயில் எழுதாமல் சொத்தினை விட்டு விட்டு இறந்துவிட்டார். எனவே அவர் தமது முழுச் சொத்தினையும் விட்டுவிட்டு உயில் இல்வழியில் இறந்துவிட்டார் எனக் கூறலாம்.

உயில் இல்வழியானது முழு உயில் இல்வழி, பகுதி உயில் இல்வழி என இரு வகைப்படும். நாம் முன் சென்ற எடுத்துக்காட்டில் கண்டது 'முழு உயில்இல் வழி' ஆகும். 'பகுதி உயில்இல் வழி' என்பது, ஒருவர் தம்முடைய சொத்தின் ஒரு பகுதியை உயில் மூலமாகவும், மீதியை உயில் இல்வழியிலும் விட்டுவிட்டு இறந்து போதல் ஆகும்.

எடுத்துக்காட்டு: ஒருவர் தம்முடைய உயில் மூலமாக பலருக்கும் பல உயில்வழிக் கொடைகளைக் (Bequest) கொடுத்தார். மீதமுள்ள சொத்துக்களைப் பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. மீதமுள்ள பகுதிக்கு மட்டும் அவர் உயில் இல்வழியில் இறந்துவிட்டார் எனலாம்.

3. Explain how the property of a decesed who died intestate be distributed under Indian Succession Act. (இந்திய வாரிசுரிமைச் சட்டப்படி உயில் இல்வழியில் இறந்த ஒருவருடைய சொத்து எவ்வாறு பங்கிடப்படும் என்பதை விளக்குக.)

(அல்லது)

Examine the rules of Intestate Succession for Christians in India. (இந்திய கிறுஸ்துவர்களுக்கான உயிலிலா இறங்குரிமைக்கான விதிகளை ஆராய்க.)

முன்னுரை :

1925–ஆம் ஆண்டின் இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் அய்ந்தாம் பகுதி (Part V) உயில் இல்வழி வாரிசுரிமை குறித்துக் கூறுகிறது. அதன் கீழ் வரும் பிரிவு 33–A தவிர 29 முதல் 49 வரையிலான பிரிவுகள் இந்தியாவை வாழ்வகமாகக் கொண்ட அய்ரோப்பியர்களுக்கும், இந்தியக் கிறுத்தவர்களுக்கும் பொருந்தக் கூடிய உயில் இல்வழி வாரிசுரிமை குறித்த விதிகளைக் கூறுகின்றன. அதுபோல் 50 முதல் 56 வரையிலான பிரிவுகள் பார்சி இனத்தவருக்கான உயில் இல்வழி வாரிசுரிமை குறித்த சிறப்பு விதிகளைக் கூறுகின்றன. பிரிவு 33–A இந்தியக் கிறுத்தவரல்லாத ஆங்கிலோ இந்தியக் கிறுத்தவர்களுக்கு பொருந்தக் கூடிய உயில்இல்வழி வாரிசுரிமை குறித்த சிறப்பு வகைமுறைகளைக் கூறுகிறது. நாம் மேற்கண்ட வினாவிற்கு காண இருப்பது, இந்தியக் கிறுத்தவர்களுக்கு பொருந்தக் கூடிய உயில் இல்வழி வாரிசுரிமையைக் குறித்து மட்டுமே. அதன்படி சொத்து பிரிக்கப்படுவதற்கான விதிகள் வருமாறு.

விதிகள்:

உயில் இல்வழியில் இறந்தவரின் சொத்து, அவரது மனைவி அல்லது கணவன், அல்லது இறந்துபோனவருக்கு நெருங்கிய இரத்தத் தொடர்புடைய உறவினருக்கு பின்வரும் விதிகளின்படி சென்றடையும் என பிரிவு 32 கூறுகிறது. அவ்விதிகள் வருமாறு.

முதலாவது விதி :

உயில்இல்வழியில் இறந்து போனவர் தனது மனைவியையும் (விதவை), தனது நேர்வழித் தோன்றல்களான (Lineal Descendants) குழந்தைகளையும். குழந்தைகளின் குழந்தைகளையும் விட்டுவிட்டு இறந்திருந்தால், அவரது மனைவிக்கு அவரது சொத்தில் மூன்றில் ஒரு பங்கும், மீதமுள்ள மூன்றில் இரண்டு பங்கு அவரது நேர்வழித் தோன்றல்களுக்கும் சென்றடையும், என **பிரிவு 33(a)** கூறுகிறது.

இரண்டாவது விதி :

உயில்இல்வழியில் இறந்தவருக்கு நேர்வழித் தோன்றல்கள் எவரும் இல்லாமல், நெருங்கிய இரத்தத் தொடர்புடைய உறவினர்கள் (kindred) இருந்தால், அவரது மனைவிக்கு (விதவை) அவரது சொத்தில் பாதி பங்கு கிடைக்கும். மீதியுள்ள பாதி பங்கு, அந்நெருங்கிய உறவினர்களைச் சென்றடையும், என்று **பிரிவு 33(b)** கூறுகிறது.

மூன்றாம் விதி :

உயில்இல்வழியில் இறந்தவருக்கு நேர்வழித் தோன்றல்களோ, நெருங்கிய இரத்த தொடர்புடைய உறவினர்களோ இல்லையெனில் அவரது முழுச் சொத்தும் அவரது மனைவியைச் சென்றடையும் என்று **பிரிவு 33(c)** கூறுகிறது.

நான்காம் விதி :

உயில்இல்வழியில் இறந்தவருக்கு மனைவி இல்லாதிருந்தால், அவரது சொத்து அவரது நேர்வழித் தோன்றல்களை சென்றடையும். நேர்வழித் தோன்றல்களும் இல்லாதபட்சத்தில், அவரது சொத்து அவரது நெருங்கிய இரத்தத் தொடர்புடைய உறவினர்களைச் சென்றடையும். இவர்களில் யாரும் இல்லாத பொழுது, அவரது சொத்து அரசைச் சென்றடையும் என்று **பிரிவு 34** கூறுகிறது.

அய்ந்தாம் விதி :

மேற்கண்ட நான்கு விதிகளிலும் இறந்தவர் கணவராக உள்ளார். தற்பொழுது இறந்தவர் மனைவியாக இருந்தால், மேற்கண்ட விதிகளே அவரது கணவருக்கும் (Widower) பொருந்தும். அதாவது மனைவியின் இடத்தில் கணவன் வைக்கப்படுவார்; மனைவிக்குரிய அதே சொத்து இறக்க உரிமைகளே கணவனுக்கும் பொருந்தும் என்று **பிரிவு 35** தெளிவுபடுத்துகிறது.

ஆறாம் விதி :

நேர்வழித் தோன்றல்களிடையே இறந்தவரின் சொத்து பிரிக்கப்படும் விதம் குறித்து **36 முதல் 38 வரையிலான பிரிவுகள்** கூறுகின்றன. அதுபோல் நேர்வழித் தோன்றல்கள் இல்லாத பொழுது இறந்தவரின் சொத்து எவ்வாறு பிரிக்கப்பட வேண்டும் என்று **41 முதல் 49 வரையிலான பிரிவுகள்** கூறுகின்றன.

மேற்கண்ட பிரிவுகளின்படியிலான சொத்து பிரிவினை விதிகளை நாம் **'கிறுத்தவ மரபுமுறை இறக்கம்'** எனும் அடுத்த பகுதியில் விரிவாகக் காண உள்ளோம். எனவே அங்கு காண்க.

-o0o-

3 உயில் வழி வாரிசுரிமை (அல்லது) உயில் [Testamentary Succession (or) Will]

4. Explain the object and characteristics of a will with reference to testamentary succession under the Indian Succession Act. (இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் கீழ் உயில்வழி வாரிசுரிமை பற்றி உயிலின் நோக்கம் மற்றும் அதன் இயல்புகளுடன் விளக்குக.)

(அல்லது)

What is a Will? Who can make a Will and What are the methods of revoking a Will? (உயில் என்றால் என்ன? உயில் எழுதுபவருக்கு வேண்டிய தகுதிகள் யாவை ? உயிலை ரத்து செய்யும் முறைகள் யாவை?)

(அல்லது)

Define Will. Explain the main characteristics of a Will. (உயில் என்பதை வரையறு. ஒரு உயிலின் முக்கிய அம்சங்களை விளக்குக.)

உயில் - வரையறை:

ஒருவர், தான் இறப்பிற்கு பிறகு தன்னுடைய சொத்து எப்படிப் பிரிக்கப்பட வேண்டும் எனும் விருப்பத்தை அவர் எழுதி வைக்கும் ஆவணமே உயிலாகும். இது அவரது சொத்தைக் குறித்த எண்ணத்தை வெளிப்படுத்தும் சட்டமுறைப்படியான விளம்புகை (legal declaration of the intention) ஆகும். இவ்வாறு எழுதி வைத்தவர், 'விருப்பாவணமளித்தவர்' அல்லது 'உயிலினை உருவாக்கியவர்' (Testator) என்று குறிப்பிடப்படுவார். [பிரிவு 2(h)].

உயிலின் நோக்கம் :

1. விருப்பாவணம் கொடுத்தவர் இறந்தபின் அவரது சொத்துக்களைப் பங்கிடவும், அவரது விருப்பத்தினை நிறைவேற்ற நிறைவேற்றாளர் (executor) நியமிக்கவும்;

2. உயில் வழி காப்பாளரை நியமிக்கவும் (Testamentary Guardian),

3. அடுத்த வாரிசினை நியமிக்கும் அதிகாரத்தினை செயல்படுத்தவும்;

4. முன்பு எழுதிய உயிலினை இரத்து செய்யவும் அல்லது மாற்றுவதற்கும், உயில் பயன்படுகிறது.

உயிலின் இயல்புகள் :

1. விருப்பாவணம் கொடுத்தவரின் எண்ணத்தினைச் சட்டமுறைப்படி விளம்புகை செய்வதாக ஒரு உயில் இருக்க வேண்டும் (legal declaration of the intention of the testator with respect to his property);

2. அவ்விளம்புகை, விருப்பாவணம் கொடுத்தவரின் சொத்தினைப் பற்றியதாக இருக்க வேண்டும் (Dispositions of property);

3. அவ்விளம்புகை விருப்பாவணம் கொடுத்தவர் இறந்த பிறகு செயற் படுத்தப்பட வேண்டியதாக இருக்க வேண்டும். அதாவது, அவர் தம்முடைய வாழ்நாளில் அவ்விளம்புகையை இரத்து செய்யலாம். இதன் மூலம் அவர் எழுதி வைத்த உயில் இரத்தாகிறது (Revocation of Will) (பின்னர் விரிவாகக் காண்க).

4. உயில் இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட சாட்சிகளின் (two witness) முன்பு எழுதப்பட வேண்டும். அச்சாட்சிகள் அதில் கையொப்பம் அல்லது இடது கை பெருவிரல் ரேகையிட வேண்டும்.

5. உயில் எழுதியவர் அதில் தனது கையொப்பம் அல்லது இடது கை பெரு விரல் ரோகையை சாட்சிகளின் முன்னிலையில் இட்டிருக்க வேண்டும் **(பிரிவு 63).**

6. அவ்வுயிலை எழுத, உயில் எழுதி வைப்பரை எவரும் தூண்டுதல் அல்லது வற்புறுத்தல் செய்திருக்கக் கூடாது. அதை எழுதி வைப்பவர் தனது முழு மனச் சம்மதம் மற்றும சுய விருப்பத்தின் பேரில் எழுதி வைக்க வேண்டும். ஒரு உயில் அல்லது அதன் ஒரு பகுதியானது மோசடி, வலுக்கட்டாயம் அல்லது விடாமல் தொந்தரவு (importunity) செய்ததன் காரணமாக எழுதப்பட்ட ஒன்றாக இருப்பின், அவ்வுயில் இல்லா நிலையதாகும் **(பிரிவு 61).**

இவ்வாறு இயல்புகளில் ஒன்று குறைவுபட்டாலும், அந்த விளம்புகையை தாங்கிய ஆவணத்தை உயிலெனக் கருத முடியாது.

உயிலின் அமைப்பு :

ஓர் உயில் எவ்வகை வடிவத்திலும் அல்லது அமைப்பிலும் இருக்கலாம். ஆனால், உயில் பயனுடையதாயிருக்க இச்சட்டத்தில் கூறிய முறைப்படி கையொப்பமிடப்பட்டுச் சான்றளிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். உயில் செயற் படுவதற்கு ஆவணத்தின் வடிவத்தில் இருக்க வேண்டும் என்று தேவையில்லை. அந்த ஆவணம் உயிலாகச் செயல்பட வேண்டும் என்ற எண்ணமிருந்தால், அதுவே போதுமானது. வாய் மொழி உயில் செல்லாது.

உயிலின் மொழி :

ஓர் உயில் எந்த மொழியில் வேண்டுமானாலும் எழுதப்பட்டிருக்கலாம். குறிப்பிட்ட கலைச் சொற்களைத்தாம் பயன்படுத்தியிருக்க வேண்டுமென்பதில்லை. பயன்படுத்தியுள்ள சொற்களினின்று விருப்பாவணம் கொடுத்தவரின் எண்ணத்தைத் தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும். ஓர் உயில், மையினாலோ, எழுதுகோலினாலோ எழுதப்பட்டிருக்கலாம் அல்லது தட்டச்சு செய்யப்பட்டிருக்கலாம். உயிலினை உருவாக்கியவரேதான் அதனை எழுதியிருக்க வேண்டுமென்பதில்லை. அவர் சார்பில் யார் வேண்டுமானாலும் எழுதலாம்.

உயில் உருவாக்கத் (எழுதத்) தகுதியுடையவர் - பிரிவு 59:

இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் 59–வது பிரிவின்படி, பதினெட்டு வயதினைக் கடந்த, திட சித்தம் உடைய எவரும் தம் சொத்துக்களை வகை செய்ய உயில் உருவாக்கலாம். அதாவது உயில் செல்லுபடியாவதற்கு, அத்தனை உருவாக்கியவர் திடமான மனமும், ஞாபக சக்தியும், புரிந்து கொள்ளும் ஆற்றலும் உடையவராயிருப்பது இன்றியமையாதது.

திருமணமான ஒரு பெண் தன்னுடைய வாழ்நாளில், தனது சொந்த செயற்பட்டால் பாரதீனம் செய்யக் கூடிய எச்சொத்தையும் உயில் வழியாக வகை செய்யும் தகுதியுடையவர் ஆவர். இங்கு கணவனின் இசைவு தேவையில்லை. **(பிரிவு 59–ன் கீழான முதல் விளக்கம்).**

காது கேளாதவரும், வாய் பேச முடியாதவரும், பார்வையற்றவரும் உயில் எழுதி வைப்பதன் மூலம் அவர்கள் என்ன செய்கிறார்கள், அதன் விளைவுகள் யாவை, என்று அறியக் கூடுமானால், அவர்களும் உயிலினை உருவாக்கத் தகுதியுடையவர்கள். **(பிரிவு 59 கீழான இரண்டாம் விளக்கம்).**

சாதாரணமாக பித்து நிலையில் உள்ள ஒருவர், திட மனதுடன் இருக்கும் இடைப்பட்ட காலத்தில் ஒரு உயிலை உருவாக்கலாம். **(பிரிவு 59–ன் கீழான மூன்றாம் விளக்கம்).**

ஒருவர் குடிபோதையினாலோ, நோயின் கொடுமையினாலோ அல்லது பிற காரணங்களினாலோ தாம் செய்வது இன்னதென்று அறியாத மன நிலையில் இருக்கும் போது உயிலினை உருவாக்க முடியாது. **(பிரிவு 59 கீழான நான்காம் விளக்கம்).**

உயில் உருவாக்கத் (எழுதத்) தகுதியற்றவர்:

உரிமை வயதடையாத இளவர், குணப்படுத்த முடியாத பித்து நிலையில் உள்ளவர், தாம் செய்வது இன்னதென்று அறிய இயலாத நிலையில் உள்ளவர், உயில் உருவாக்கத் தகுதியற்றவர்கள் ஆவர்.

5. Codicil - Write short notes. (உயிலிணைப்பு – சிறு குறிப்பு வரைக.)

இந்திய வாரிசுமைச் சட்டத்தின் பிரிவு 2(b)–ஆனது, 'உயிலிணைப்பு' எனும் பதத்திற்கு வரையறை தருகிறது. அதன்படி, எழுதப்பட்ட உயிலில் வகை செய்யப்பட்டுள்ள சரத்துக்களை விளக்கி, மாற்றி அல்லது கூட்டி அவ்வுயில் தொடர்பாக உருவாக்கப்படும் ஓர் ஆவணம் 'உயிலிணைப்பு' எனப்படுகிறது. இது அவ்வுயிலின் ஒரு பகுதியாகக் கருதப்படும்.

அதாவது, உயிலை உருவாக்கிய பின்னர், அதிலுள்ள சரத்துகளை விளக்கியோ, மாற்றியோ அல்லது அதில் நிபந்தனைகள் விதித்தோ வேறோர் ஆவணம் எழுதி, இது முன்னர் எழுதப்பட்ட உயிலோடு சேர்த்து அமலுக்கு வர வேண்டியது என்று அதில் கூறப்பட்டிருந்தால், அவ்வாவணம் **'உயிலிணைப்பு' (Codicil)** எனப்படும்.

உயிலிணைப்பு ஒரு உயிலாகவே கருதப்படும். இதற்கும் இரண்டு அல்லது அதற்கு சாட்சிகளின் கையொப்பம் அவசியம் தேவை. மேலும் ஒரு உயிலிற்கு தேவைப்படும் பிற இயல்புகளையும் அது கொண்டிருக்க வேண்டும். மேலும் பிரிவு 59–ல் கூறப்பட்டுள்ள தகுதிகளை உயிலிணைப்பை உருவாக்குபவரும் கொண்டிருத்தல் வேண்டும். அவற்றை இதற்கு முன் சென்ற வினாவின் விடையில் காண்க. (அவற்றைத் தேர்வில் குறிப்பிடுக – ஆசிரியர்.)

6. State the law laid down under the Indian Succession Act, 1925 relating to construction of a Will. (1925 ஆம் ஆண்டு இந்திய இறங்குரிமைச் சட்டத்தின் கீழ் ஓர் உயிலின் பொருள் விளக்கம் குறித்து இயற்றப்பட்டுள்ள சட்டத்தினை எடுத்துரைக்க.)

(அல்லது)

Arm chair rule - Write short notes. (சாய்வு நாற்காலி விதி – சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

உயிலை உருவாக்கியவர் தனது வாழ்க்கையின் இறதிக்கட்டத்திலோ அல்லது மரணத்தின் தறுவாயிலோதான் உயிலினை எழுத முற்படுவார். முன்னெச்சரிக்கையாக உயிலினைத் தயார் செய்து வைத்திருப்பவர்கள் மிகக் குறைவு. உயிரைவிடப் போகும் நேரத்தில் அவர் உயில் எழுதுவதற்கு ஒரு வழக்கறிஞரை தேடச் செல்வது இயலாது. அப்படி சமயமிருப்பினும் எல்லோரும் வழக்கறிஞரைக் கொண்டு உயில் எழுதுவார்கள் என்றும் கூறிவிட இயலாது. ஆகவே, விருப்பாவணம் கொடுத்தவர் தமக்குத் தெரிந்த வழக்கத்திலிருக்கும் சொற்களைக் கொண்டே உயிலினை உருவாக்கியிருப்பார். அப்படி உருவாக்கப் பட்ட உயிலின் பொருள் விளக்கத்தினை நன்கறிந்த பிறகு, உயிலில் கண்டுள்ளபடி

சொத்துக்களைப் பிரிக்க முற்படுவதுதான், சிறப்புடையதாகும். எனவே ஒருவர் உருவாக்கிய உயிலுக்குப் பொருள் விளக்கம் கொள்ளுதல் மிகவும் அவசியமாகும். அவ்வாறு பொருள் கொள்வதற்கு சில விதிகளுண்டு. அவ்விதிகளை இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் **74 முதல் 111 வரையிலான சட்டப் பிரிவுகள்** கூறுகின்றன. அவற்றையெல்லாம் தொகுத்து பின்வருமாறு சுருக்கமாகக் காண்போமா?

உயிலின் பொருள் விளக்க விதிகள்:

1. ஒரு உயிலை கலைச் சொற்களை அல்லது நுட்மான சொற்களைப் பயன்படுத்தி எழுத வேண்டும் என்ற எந்த அவசியமும் இல்லை. ஆனால் உயிலை உருவாக்கியவரின் எண்ணத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அவ்வுயிலில் கண்டுள்ள வாசகங்கள் இருந்தால் அதுவே போதுமானது, என்று **பிரிவு 74** குறிப்பிடுகிறது. அதாவது ஒரு உயில் எச்சொற்களை பயன்படுத்தி எழுதப் பட்டுள்ளது என்பது முக்கியமல்ல; மாறாக, ஒரு குறிப்பிட்ட ஆவணம் உயிலாக பாவிக்கப்பட வேண்டும் எனும் எண்ணமே முக்கியம். எனவே, ஒரு உயிலிற்கு பொருள் விளக்கம் காண்பதில் நீதிமன்றத்தின் தலையான கடமை யாதெனில், அவ்வுயிலினை முழுவதுமாகப் படித்து, அதனை உருவாக்கியவரின் சரியான எண்ணத்தை (நோக்கத்தை) அறிந்து அதனைச் செயல்படச் செய்தல் ஆகும். உயிலில் வெளிப்படையாகவோ, குறிப்பாகவோ தெரிவித்திருக்கும் எண்ணங்களை மட்டுமே நீதிமன்றம் செயல்படுத்த முடியும்.

2. **சாய்வு நாற்காலி விதி:** விருப்பாவணம் கொடுத்தவரின் எண்ணங்களை அறிந்த பின்னர், உயிலில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு யார் யாருக்கு என்னென்ன சொத்துக்களைக் கொடுக்க விரும்பினார் என்பதை ஆராய்ந்தறிதல் வேண்டும். உயிலின் சொற்களைக் கொண்டு விருப்பாவணம் கொடுத்தவரின் குடும்பச் சூழ்நிலையையும், உறவினர்களையும், சொத்துக்களின் மதிப்பினையும் நீதிமன்றம் தெரிந்து கொள்ள வேண்டும். அப்படி தெரிந்து கொள்ளுதலைத்தான் **'சாய்வு நாற்காலி விதி' (Arm Chair Rule)** என்பர். நீதிமன்றம் தன்னை விருப்பாவணம் கொடுத்தவராகப் (உயில் எழுதியவராகப்) பாவித்து, அவரது சாய்வு நாற்காலியிலிருந்து அவர் மனத்திற் கொண்ட கருத்துக்களை உணர வேண்டும். **(பிரிவு 75).**

3. ஒரு உயிலில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள் அவ்வுயில் வழியாகக் கொடை பெறுபரின் அல்லது கொடை பெறும் வகுப்பினரின் பெயரையும் விபரத்தையும் போதுமான வகையில் விளக்குவதாக இருப்பின், அப்பெயரில் அல்லது விபரத்தில் தவறு உள்ளது என்பதால், அவ்வுயில்வழிக் கொடை செயலாக்கம் பெறாமல் போய்விடாது. அதாவது மேற்படியார்கள் உயிலின் பயனைப் பெறாது போய்விடமாட்டார்கள். **[பிரிவு 76(1)].**

4. விருப்பாவணமளித்தவர் உயில் வழி கொடை பெறுபவரின் பெயரைத்

தவறாகக் குறிப்பிட்டிருப்பின், அதனை அவரது விபரங்களைக் கொண்டு நீதிமன்றம் சரி செய்து கொள்ளலாம். அதே சமயத்தில் அவரது விபரங்கள் தவறாகக் குறிப்பிடப்பட்டிருப்பின், அதனை அவரது பெயரைக் கொண்டு நீதிமன்றம் சரி செய்து பொருள் விளக்கமளிக்கலாம். **[பிரிவு 76(2)].**

5. உயிலின் பொருளுக்குண்டான முழு வாசகத்திற்கு முக்கியமானதாக உள்ள சொல் எதுவும் உயிலில் விட்டுவிடப்பட்டிருப்பின், அந்த இடத்திற்கு தேவையான சொல்லைப் புகுத்தி பொருள் விளக்கமளிக்க நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு . **எடுத்துக்காட்டாக,** ஒருவர் தனது உயிலின் வாயிலாக 'அ' எனும் தனது மகளுக்கு 'அய்ந்நூறும்', 'ஆ' எனும் தனது மற்றொரு மகளுக்கு 'அய்ந்நூறு ரூபாய்களையும்' கொடையாக கொடுப்பதாக வைத்துக் கொள்வோம். இங்கு 'அ' எனும் மகளுக்கு கொடுக்கப்பட்ட 'அய்ந்நூறு' எனும் பதத்துடன் 'ரூபாய்' எனும் பதத்தை நீதிமன்றம் சேர்த்து பொருள் விளக்கம் அளிக்கலாம். இதன்படி அவள் அய்ந்நூறு ரூபாய்கள் பெற உரிமையுடையவள். **(பிரிவு 77).**

6. விருப்பாவணம் கொடுத்தவர், தாம் உயில்வழிக் கொடையாக கொடுக்க எண்ணிய சொத்தினை அவ்வுயிலில் அவர் கொடுத்துள்ள அதன் விபரங்களிலிருந்து போதுமான வகையில் அடையாளம் காண முடியும் பொழுது, அச்சொத்தின் விபரம் குறித்த வேறு சில பகுதிகள் அச்சொத்திற்கு பொருந்தாததாக இருப்பின், அத்தகு பொருந்தாப் பகுதியை நீதிமன்றம் நிராகரித்துவிட்டு, அவ்வுயில்வழிக் கொடைக்கு செயலாக்கம் அளிக்க வேண்டும். **(பிரிவு 78).**

7. விருப்பாவணம் கொடுத்தவர் உயில்வழிக் கொடையாகக் கொடுக்க எண்ணியிருந்த சொத்தினை உயிலில் பல விதத்தில் விவரித்திருக்கலாம். அனைத்து விவரங்களும் பொருந்துகின்ற சொத்தினையே, அவர் கொடையாக கொடுக்க விரும்பினார் எனக் கொள்ள வேண்டும். அவ்விபரங்கள் பொருந்தாத வேறு சொத்து, விருப்பாவணம் கொடுத்தவருக்கு உள்ளது எனும் காரணத்தால், அவ்விபர்ங்களின் எப்பகுதியையாவது நிராகரிப்பது சட்ட முறையன்று. **(பிரிவு 79).**

8. உயிலினைப் பொருள் கொள்ள விழைகையில் சில சமயம் பொருள் மயக்கம் அல்லது அய்யப்பாடுகள் (Ambiguities) தோன்றலாம். உயிலினைப் படித்துப் பார்க்கும்போது எவ்வித அய்யமுமின்றித் தெளிவாகத் தோன்றும். ஆனால், அதனை நிறைவேற்றச செல்லுகையில் அதில் பொருள் மயக்கம் அல்லது அய்யப்பாடு தோன்றும். இதனையே உட்கிடைப் பொருள் மயக்கம் அல்லது மறைமுக அய்யப்பாடு (Latent Ambiguity) என்பர். உயிலில் வார்த்தைகள் விடுபட்டு வாசிக்கும் போது இதுவா, அதுவா என்ற அய்யம் தோன்றலாம். இதனையே வெளிப்படைப் பொருள் மயக்கம் அல்லது நேர்முக அய்யப்பாடு (Patent Ambiguity) என்பர்.

உயிலில் காணப்படும் சொற்களில் அய்யப்பாடுகள் எழும் பொழுது,

அதற்கு பொருள் விளக்கமளிக்க நீதிமன்றம் புறநிலைச் சான்றை (Extransic Evidence) கருத்தில் எடுத்துக் கொள்ளலாம். அதாவது வேறு சான்றுகளிலிருந்து உயில் எழுதியவரின் எண்ணத்தைக் கண்டறிதலாகும். ஒருவேளை உயிலில் கண்ட வாசகங்கள் எவ்வித அய்யப்பாட்டிற்கும் இடமின்றி தெளிவாக இருக்கலாம். ஆனால் அதை நிறைவேற்றச் செல்கையில், அதற்கு இரு பொருள் தோன்றக் கூடும். அப்பொழுது, அவற்றில் எந்த ஒரு பொருள் உயில் எழுதியவரின் எண்ணத்தைப் பிரதிபலிக்கிறது என்பதற்கு புறநிலைச் சான்றை அனுமதிக்கலாம்.

எடுத்துக்காட்டாக, 'அ' என்பவர் தனது உயிலில் 'சுல்தான்பூர் குர்டு என்றழைக்கப்படும் எனது தோட்டத்தை' என்று குறிப்பிட்டு அதனை 'ஆ' என்பவருக்கு விட்டுச் செல்கிறார். இங்கு அவர் சுல்தான்பூர் குர்டு என்றழைக்கப் படும் இரண்டு தோட்டங்களை வைத்திருந்தார் என்று மாறிவிடுகிறது. எனவே எத்தோட்டத்தை உயில் மூலம் அளிக்க விரும்பினார் என்பதைக் காட்ட புறநிலைச் சான்றை அனுமதிக்கலாம். **(பிரிவு 80)**

9. ஒரு உயிலைப் பார்த்த மாத்திரத்திலேயே அதில் நேர்முக அய்யப்பாடு அல்லது குறைபாடு இருப்பின், உயில் எழுதியவரின் எண்ணத்தைச் சுட்டிக்காட்ட புறநிலைச் சான்றை அனுமதித்தல் கூடாது. சுருங்கக் கூறின் விருப்பாவணம் கொடுத்தவர் உயிலில் இடைவெளிவிட்டிருப்பின், அதனைச் சாட்சிகளின் விளக்கத்தைக் கொண்டு நிரப்ப முடியாது. ஆனால், உயிலின் மற்ற பகுதியில் கூறப்பட்டுள்ளவைகளைக் கொண்டு இடைவெளியினை நிரப்பக் கூடுமானால் அதற்கு மட்டும் வாய்மொழிச் சான்றினை (Oral Evidence) அனுமதிக்கலாம்.

எடுத்துக்காட்டாக, 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு ..... ரூபாய்களை அளிப்பதாக அல்லது '..... உள்ள எனது தோட்டம்' என்று குறிப்பிட்டு அதனை அளிப்பதாக உயிலில் குறிப்பிடுகிறார். இங்கு எத்தொகையை அல்லது எந்த இடத்தில் உள்ள தோட்டத்தை அளிக்க அவர் எண்ணம் கொண்டிருந்தார் என்பதற்கு புறநிலைச் சான்றளிப்பது அனுமதிக்கப்படாது. **(பிரிவு 81)**

10. உயிலில் கண்டுள்ள சரத்து எதனின் பொருளை, அந்த உயில் ஆவணம் முழுவதையும் படித்து, அதிலிருந்து திரட்டி அறிய வேண்டும். உயிலின் ஒவ்வொரு பகுதியும் மற்றொரு பகுதியைச் சுட்டுவதன் மூலம் பொருள் கொள்ள வேண்டும். **(பிரிவு 82).**

11. ஒருவர் தனது உயிலில் கண்ட சொற்களை குறுகிய பொருளில் பயன் படுத்த வேண்டும் எனக் கருதியுள்ளார் என்பதை அவ்வுயிலிருந்து அறியும் பொழுது, அவ்வுயிலில் கண்ட பொதுவான சொற்களையும், அக்குறுகிய பொருளிலேயே புரிந்து கொள்ள வேண்டும். அதுபோல் ஒருவர் தனது உயிலில் கண்ட சொற்களை பரந்த பொருளில் பயன்படுத்த வேண்டும் எனக் கருதியுள்ளார் என்பதை அவ்வுயிலிருந்து அறியும் பொழுது, அவ்வுயிலில் கண்ட சொற்களையும்

பரந்த பொருளிலேயே புரிந்து கொள்ள வேண்டும். மாறாக அதற்குரிய வழக்கமான பொருளை கொள்ளக் கூடாது. **(பிரிவு 83).**

12. உயிலின் ஒரு சரத்திற்கு இரு பொருள் விளக்கங்களை அளிக்க வாய்ப்பு ஏற்பட்டு, அவற்றில் ஒரு பொருளுக்கு ஓரளவு செயல்விளைவு இருந்து, மற்றொரு பொருளுக்கு எச்செயல் விளைவும் (effect) இல்லையானால், செயல் விளைவு உடைய முந்தய பொருளையே கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது இரண்டில் எது உயில் எழுதியவரின் எண்ணத்திற்கு நெருங்கி நிற்கிறதோ, அப்பொருள் விளக்கத்தையே உரியதெனக் கொள்ள வேண்டும். **(பிரிவு 84).**

13. நியாயமான பொருள் விளக்கம் அளிக்க இயலுமானால், உயிலின் எப்பகுதியையும், அது பொருளில்லாதது என நிராகரித்தல் கூடாது. **(பிரிவு 85).**

14. ஒரே உயிலின் பல்வேறு பகுதிகளில் ஒரே சொற்கள் திரும்பத் திரும்ப வந்தால், முரணான எண்ணம் தோன்றாதவிடத்து, அவை அவ்வுயிலில் எங்கும் ஒத்த பொருளுடன் பயன்படுத்தப்பட்டிருப்பதாக எடுத்துக் கொள்ள வேண்டும். **(பிரிவு 86).**

15. உயில் முழுவதையும் படிப்பதன் மூலம் விருப்பாவணம் கொடுத்தவரின் நோக்கத்தினை அறிய முடியும். அப்படியறிந்த பின் அவர் நோக்கத்தினைச் சட்டத்தின் நடைமுறையில் முழுவதும் நிறைவேற்ற இயலாவிட்டால், உயிலுக்குப் பொருள் விளக்கம் காண முற்படும் நீதிமன்றம் அவரது நோக்கத்தினை இயன்ற வரையில் நிறைவேற்ற முயல வேண்டும். **(பிரிவு 87).**

16. ஒரு உயிலில் குறிப்பிடப்பட்ட கொடைகளின் இரண்டு சரத்துக்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாக இருந்து, அதனால் அவை இரண்டும் இயைந்து நிற்க இயலவில்லையானால், இறுதியாக கூறப்பட்ட சரத்தே மேலோங்கி நிற்கும்.

எடுத்துக்காட்டாக, விருப்பாவணம் அளிப்பவர் தனது உயிலின் முதல் சரத்தின் வாயிலாக ராம்நகரில் உள்ள தனது தோட்டத்தை "அ–க்கு" ("to A") அளிக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார். ஆனால் அவ்வுயிலின் இறுதி சரத்தில் அதனை "ஆ–க்கு அளிப்பதாகவும் 'அ'–க்கு அல்ல" ("to B and not to A") என்றும் குறிப்பிடுகிறார். இங்கு 'ஆ'–க்கு அளிக்கப்பட்ட கொடையே மேலோங்கி நிற்கும். **(பிரிவு 88).**

17. ஒரு உயில் அல்லது உயில்வழிக் கொடையானது, அதனைச் செய்பவரின் தெளிவான எண்ணம் எதையும் வெளிப்படுத்தவில்லையானால், அவை நிச்சயமற்றது எனும் அடிப்படையில் இல்லாநிலையதாகும். **(பிரிவு 89).** அதாவது, உயில் வழிக் கொடையாகக் கொடுக்கப்படும் சொத்துக்கள் எவையென்றும், அதனைப் பெறுபவர் எவரென்றும் தெளிவாக விருப்பாவணம் கொடுத்தவர் தெரிவிக்காவிட்டால், அவ்வுயில் தெளிவின்மையால் இல்லா நிலையதாகிவிடும்.

18. உயில் ஒன்றில் கண்டுள்ள சொத்தின் விபரம், அவ்வுயிலில் அதற்கு முரண்பட்ட எண்ணம் தோன்றாதவிடத்து, உயில் எழுதியவரின் இறப்பின் பொழுது அந்த விபரத்திற்கு பதிலிறுத்தும் முகமாக உள்ள சொத்தை உள்ளடக்கியது என்றும், அதனைக் குறிப்பதாகும் என்றும் பொருள் கொள்ள வேண்டும். **(பிரிவு 90).**

19. உயில்வழியாக சொத்தொன்று கொடையாகக் கொடுக்கப்படும் பொழுது, அச்சொத்தில் உயில் எழுதி வைத்தவருக்கு எத்தகு பாத்தியங்கள் இருந்தனவோ அவை முழுவதையும் அடைய அச்சொத்தைக் கொடையாகப் பெற்றவருக்கு உரிமை உண்டு. ஆனால் அச்சொத்தில் வரம்புடைய பாத்தியம் மட்டுமே உண்டு எனும் முரண்பாடான எண்ணம் ஏதும் அவ்வுயிலில் இருத்தல் கூடாது. **(பிரிவு 95).**

20. ஒரு நபருக்கு சொத்தொன்று உயில்வழியாகக் கொடுக்கப்பட்டு, அத்துடன் நபர்களின் ஒரு வகுப்பினரை விவரிக்கும் சொற்களும் சேர்க்கப்பட்டு, ஆனால் தனி மற்றும் குறிப்பிட்ட கொடைக்குரிய நேரடி நபர்களாக அவர்களைக் குறிப்பிடாமல் இருக்குமிடத்து, உயில் எழுதியவருக்கு அச்சொத்தில் எத்தகு பாத்தியங்கள் இருந்தனவோ அவை முழுவதையும் அடைய அத்தகு நபருக்கு உரிமையுண்டு. ஆனால் இதற்கு முரண்பட்ட எண்ணம் அவ்வுயிலில் இருத்தல் கூடாது.

எடுத்துக்காட்டாக, 'அ'-க்கும் அவரது குழந்தைகளுக்கும் உயில்வழிக் கொடையாக சொத்தொன்று கொடுக்கப்படுகிறது. இங்கு உயில் எழுதியவருக்கு அச்சொத்தில் இருந்த பாத்தியங்கள் அனைத்தையும் அடைய 'அ' உரிமை பெற்றவர் ஆவார். **(பிரிவு 97).**

21. 'குழந்தை', 'மகன்', 'மகள்' ஆகிய சொற்களும், உறவுமுறையை வெளிப்படுத்தும் வேறு சொற்களும் ஒரு உயிலில் கண்டிருந்தால், அவை முறைமணப் பிறப்பினால் விளைந்த உறவுமுறையைக் குறிப்பிடுவதாகவே அறிந்து கொள்ள வேண்டும். அத்தகு முறைமணப் பிறப்பு உறவுமுறை இல்லாத பொழுது, அவ்வுயில் தேதியின் பொழுது, அத்தகு உறவுமுறையாக இருக்கும் தகுதியை அடைந்த ஒருவனை குறிப்பிடுவதாகக் கொள்ள வேண்டும். **(பிரிவு 100).**

22. உயில்வழிக் கொடை பெற்றவர், உயில் எழுதி வைத்தவருக்கு முன்னதாக இறந்து போய்விட்டால், அவ்வுயில்வழிக் கொடை செல்திறம் பெறாது (செல்லாது). **(பிரிவு 105).**

23. உயில்வழிக் கொடை ஒன்று, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்து, அவர்களில் ஒருவர் உயில் எழுதி வைத்தவருக்கு முன்னதாக இறந்து போய்விட்டதன் அக்கொடை செல்லாமல் போய்விடாது. மாறாக, உயில்வழிக் கொடை பெறும் உயிருடன் உள்ள மற்றவர்கள் அக்கொடை முழுவதையும் அடைவார்கள். **(பிரிவு 106).**

7. Distinguish between a privileged will and unprivileged will. How are they executed ? (சிறப்புரிமை கொண்ட ஒரு உயிலுக்கும், சிறப்புரிமையற்ற ஒரு உயிலுக்குமிடையேயுள்ள வேறுபாடுகளைக் கூறுக. அவை எவ்வாறு நிறைவேற்றப்பட வேண்டும் ?)

(அல்லது)

Privileged Will - Write short notes (தனிச்சலுகை உயில் – சிறு குறிப்பு வரைக.)

உயிலின் வகைகள் (Kinds of Will) :

உயிலின் வகைகளென இரு வகை உயில்கள் மட்டுமே இந்திய வாரிசுரிமைச் சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ளன. அவை, 1. தனிச் சலுகையற்ற உயில் (Unprivileged Will); 2. தனிச் சலுகை உயில் (Privileged Will). இவை தவிர பிற உயில்கள் வருமாறு. 1. வாய்மொழி உயில்; 2. உரியவர் கையெழுத்து ஆவண உயில்; 3. பரஸ்பர உயில்; 4.நிபந்தனை உயில்; 5. பணிக்கடனற்ற உயில், 6. இரு பிரதி உயில். இவற்றில் நாம் தனிச் சலுகையற்ற மற்றும் தனிச் சலுகை உயிலைக் காண உள்ளோம்.

தனிச் சலுகையற்ற உயில் (Unprivileged Will) – பிரிவு 63:

இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் **63–வது பிரிவு** தனிச் சலுகையற்ற உயில் குறித்து விளக்குகிறது. அதன்படி, போரிலீடுபட்டுள்ள இராணுவ வீரரோ, விமானப்படை வீரரோ, கப்பற்படை வீரரோ அல்லாத எவரும் இப்பிரிவின் கீழ் தனிச் சலுகையற்ற உயிலினை உருவாக்கலாம். அதாவது மேற்கண்டவர் அல்லாத சாதாரண நிலையில் உள்ள எவரும் வழக்கமாக எழுதி வைக்கும் உயில் 'தனிச் சலுகையற்ற உயில்' எனப்படும். ஏனெனில் இங்கு ஒரு உயிலை உருவாக்குவதற்கு எவ்வித சலுகைகளையும் சட்டம் கொடுப்பதில்லை. எனவே பிரிவு 63–ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள விதிகளை கண்டிப்பாக உயில் எழுதுபவர் பின்பற்றி உயில் எழுதி வைத்தல் வேண்டும். அவ்விதிகள் வருமாறு.

(1) தனிச் சலுகையற்ற உயிலை எழுதி வைப்பவர், தனது கையொப்பத்தை அவ்வுயிலில் இட வேண்டும். அவர் கல்வியறிவற்றவராக இருப்பின், அவரது இடது கை பெருவிரல் ரேகையை அதில் பதிக்க வேண்டும். அல்லது அவரது உத்தரவுபடி அவரது முன்னிலையில் மற்றொருவரும் அவ்வுயிலில் கையொப்பமிடலாம்.

(2) உயில் எழுதி வைத்தவரின் கையொப்பம் அல்லது கைரேகை அல்லது அவருக்காகக் கையொப்பமிட்டவரின் கையொப்பம் உயிலின் ஆரம்பத்திலோ இறுதியிலோ இருக்கலாம். அதன் மூலம் அவ்வாவணம் உலிலெனக் கொண்டு செயல்படுத்தப்பட வேண்டுமென்ற எண்ணத்தோடு உருவாக்கப்பட்டது என்று தெளிவுறும்படி கையொப்பமிட்டிருக்க வேண்டும் அல்லது கைரேகை பதியப் பட்டிருக்க வேண்டும்.

(3) உயில் எழுதி வைத்தவரின் கையொப்பத்திற்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சாட்சிகள் சான்றளித்திருக்க வேண்டும். (i) ஒவ்வொரு சாட்சியும் உயில் எழுதி வைத்தவர் கையொப்பமிட்டதை அல்லது கைரேகை பதித்ததை கண்டிருத்தல் வேண்டும்; அல்லது (ii) உயில் எழுதி வைத்தவரின் உத்தரவின் பேரில் அவரது முன்னிலையில் அவருக்காக மற்றொருவர் உயிலில் கையொப்பமிட்டதை கண்டிருத்தல் வேண்டும்; அல்லது (iii) அவ்வுயிலில் கண்ட கையொப்பம் அல்லது கைரேகை அல்லது உயில் எழுதி வைத்தவருக்காக மற்றவர் செய்ய கையொப்பம் குறித்து உயில் எழுதி வைத்தவரின் சொந்த ஒப்புகையை (personal acknowledgement) அச்சாட்சிகள் பெற்றிருத்தல் வேண்டும். மேலும அச்சாட்சிகள் ஒவ்வொருவரும் உயில் எழுதி வைத்தவரின் முன்னிலையில் அவ்வுயிலில் கையொப்பமிட வேண்டும். ஆனால் ஒரே நேரத்தில் இரண்டு சாட்சிகளும் ஆஜராகியிருக்க வேண்டுமென்ற அவசியமேதுமில்லை. அதுபோல், சான்றளிப்பிற்கென குறிப்பிட்ட படிவம் ஏதுமில்லை.

சுருங்கக் கூறின் ஒரு சாதாரண உயிலுக்கு என்னென்ன இயல்புகள் பொருந்துமோ, அவையனைத்தும் தனிச் சலுகையற்ற ஒரு உயிலுக்கும் பொருந்தும். (அத்தகு இயல்புகளை நாம் ஏற்கனவே வினா எண். 4–ன் விடையில் விரிவாகக் கண்டுள்ளோம்.)

தனிச் சலுகை உயில் (Privileged Will) - பிரிவு 65:

உயில் எழுதி வைப்பதற்கென சில நிபந்தனைகளை நாம் மேலே கண்டோம். அவற்றிலிருந்து எந்நேரத்திலும் மரணத்தை தழுவலாம் எனும் நிலையில் உள்ள முப்படை வீரர்களுக்கு சில விதிவிலக்குகள் அளிக்கப்பட்டுள்ளன. எனவே அவர்கள் அந்நிபந்தனைகளை பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. அச்சலுகைகளின் காரணமாக, அவர்கள் எழுதி வைக்கும் உயில், 'தனிச் சலுகை உயில்' எனப்படுகிறது. யாரெல்லாம் இத்தகு உயிலை எழுதி வைக்கலாம் என்பது குறித்து இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் **65–வது பிரிவு** கூறுகிறது.

அதன்படி, பதினெட்டு வயதையடைந்த போரிலீடுபட்டுள்ள இராணுவ வீரரோ, விமானப்படை வீரரோ, கப்பற்படை வீரரோ தனிச் சலுகை உயில் எழுத தகுதி பெற்றவராவார். அவ்வுயிலை உருவாக்க அவர்கள் எவ்விதங்களில் சலுகை பெற்றவர்கள் என்பது குறித்து **66–வது பிரிவு** விளக்குகிறது.

தனிச் சலுகை உயிலை உருவாக்கும் முறைகள் - பிரிவு 66:

(1) தனிச் சலுகை உயிலை எழுத்து மூலமாக அல்லது வாய் மொழிச் சொற்கள் மூலமாகக் கூட உருவாக்கலாம்.

(2) விருப்பாவணம் அளிப்பவர் (உயில் எழுதி வைப்பவர்) அவ்வுயில் முழுவதையும் தனது கைப்பட எழுதி வைக்கலாம். அத்தகு நேர்வில் அவரது கையொப்பமோ, சாட்சிகளின் கையொப்பமோ தேவையில்லை.

(3) பிறிதொரு நபர் அவ்வுயில் முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியை மட்டும் எழுதி, அதில் உயில் எழுதுபவர் கையொப்பமிடலாம். அத்தகு நேர்வில் சாட்சிகளின் கையொப்பம் தேவையில்லை.

(4) உயிலாகக் கருதப்பட வேண்டிய ஒரு ஆவணம், பிறிதொரு நபரால் முழுவதுமாக அல்லது பகுதியாக எழுதப்பட்டு, அதில் விருப்பாவணம் அளிப்பவர் கையொப்பமிடாத பொழுது, அவ்வுயில் விருப்பாவணமளித்தவரின் உத்தரவின் பேரில் அவ்வாறு எழுதப்பட்டது என்றோ அல்லது அவர் அதை தனது உயிலாக அங்கீகரித்துள்ளர் என்றோ காட்டப்பட்டால், அந்த ஆவணம் அவரது உயிலாகக் கருதப்பட வேண்டும்.

(5) விருப்பாவணமளித்தவர் எண்ணிய முறையில் அவ்வுயில் எழுதி வைக்கப்பட்ட முறை பூர்த்தியாகவில்லை என்று அந்த ஆவணத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே தோன்றினால், அச்சூழ்நிலையின் காரணமாக, அந்த ஆவணம் செல்லாததாக்கப்படல் கூடாது.

(6) இராணுவ வீரர், விமானப்படை வீரர் அல்லது கப்பற்படை வீரர் ஒருவர் தனது உயிலைத் தயாரிப்பதற்கான குறிப்புகளை எழுதி வைத்திருந்து, அது அவ்வாறு தயாரிக்கப்பட்டு செயல்படுத்துவதற்கு முன்பாக இறந்துவிட்டிருந்தால், அத்தகு குறிப்புகள் அவரது உயிலை உருவாக்கியதாக கருதப்படுதல் வேண்டும்.

(7) இராணுவ வீரர், விமானப்படை வீரர் அல்லது கப்பற்படை வீரர் ஒருவர் தனது உயிலைத் தயாரிப்பதற்கான குறிப்புகளை சாட்சிகளை முன்னிலையில் வாய் மொழியாக அளித்திருந்து, ஆனால் அக்குறிப்புகள் ஒரு உயிலாக தயாரிக்கப்பட்டு செயல்படுத்துவதற்கு முன்பாக அவர் இறந்து விட்டிருந்தால், அத்தகு குறிப்புகள் அவர் முன்னிலையில் எழுத்து வடிவில் எழுதப் படாமல் இருந்தாலும் அல்லது அவருக்கு படித்துக் காட்டப்படாமல் இருந்தாலும், அவை அவரது உயிலை உருவாக்கியதாகவே கருதப்படுதல் வேண்டும்.

(8) இராணுவ வீரர், விமானப்படை வீரர் அல்லது கப்பற்படை வீரர் ஒருவர் அந்த நேரத்தில் முன்னிலையாகியுள்ள இரண்டு சாட்சிகளின் முன்னிலையில் வாய் மொழி சொற்களின் மூலமாக தனது எண்ணங்களை விளம்பி உயில் ஒன்றைச் செய்யலாம்.

(9) வாய் மொழிச் சொற்களின் மூலமாக செய்யப்பட்ட உயில் ஒன்று, அதனைக் கூறிய விருப்பாவணமளித்தவர் ஒரு மாதத்திற்கு பின்னிட்டும் உயிருடன் இருந்தால் அது செல்லாததாகும். மேலும் அவர் தனிச் சலுகை உயில் ஒன்றை உருவாக்கும் உரிமையை இழந்தவர் ஆவார்.

தனிச் சலுகை உயில், தனிச் சலுகையற்ற உயில் - வேறுபாடுகள் (Distinctions between Privileged and Unprivileged Will):

தனிச் சலுகை உயில்	தனிச் சலுகையற்ற உயில்
1. பதினெட்டு வயதையடைந்த போரில் ஈடுபட்டிருக்கும் இராணுவ வீரரோ, விமானப் படை வீரரோ, கப்பற் படை வீரரோ தனிச் சலுகை உயிலை உருவாக்கலாம்.	போரில் ஈடுபட்டுள்ள இராணுவ வீரரோ, விமானப் படை வீரரோ, கப்பற் படை வீரரோ அல்லாத எவரொருவரும் தனிச் சலுகையற்ற உயிலை உருவாக்கலாம்.
2. இவ்வுயில் வாய் மொழியானதாகவோ, எழுத்து வடிவிலோ இருக்கலாம்.	இவ்வுயில் எழுத்தால் எழுதப்பட்டிருக்க வேண்டும். வாய் மொழி உயில் செல்லாது.
3. இவ்வுயிலை எழுத்தால் உருவாக்கியவர் அதில் கையொப்பமிட்டிருக்க வேண்டிய அவசிமில்லை.	இவ்வுயிலினை உருவாக்கியவர் அதில் கையொப்பமிட்டிருக்க வேண்டும்.
4. இராணுவ வீரர், விமானப் படை வீரர் அல்லது கப்பற் படை வீரர் ஒருவர் உயில் எழுதுவதற்கான குறிப்புகளை வைத்திருத்து, அது அவ்வாறு ஒரு உயிலாக தயாரிக்கப்பட்டு செயல்படுத்துவதற்கு முன்பாக அவர் இறந்துவிடின், அக்குறிப்புகளையே அவரது உயிலாகக் கொள்ளலாம்.	இங்கு குறிப்புகளை, உயிலாகக் கொள்ள முடியாது.
5. போரிலீடுபட்டிருப்பவர்கள்தாம், தனிச் சலுகை பெற்ற உயிலை உருவாக்க முடியும். போர்க் காலத்தில் போரில் ஈடுபடாத வீரர். இவ்வுயிலை உருவாக்க முடியாது.	போரில் ஈடுபடாத முப்படை வீரர் அல்லாத ஒருவர்தான் இவ்வுயிலை உருவாக்க முடியும்.
6. வாய் மொழி உயிலை உருவாக்கிய பின்னர், அதனை உருவாக்கியவர் ஒரு மாதத்திற்கு பின்னிட்டும் உயிருடன் இருந்தால், அவ்வுயில் செல்லாது. பின்னிட்டு அவர் தனிச் சலுகை உயிலை உருவாக்க முடியாது.	இதில் அவ்வாறு இல்லை.

8. What are the methods by which a will can be revoked? (ஓர் உயில் இரத்து செய்யப்படுவதற்கான முறைகள் யாவை ?)

(அல்லது)

Revocation of will - Write short notes. (உயிலை இரத்து செய்தல் – சிறு குறிப்பு வரைக.)

உயிலை இரத்து செய்தல்:

ஒரு உயிலினை உருவாக்கிய பின்னர் அதனை உருவாக்கியவர் அதனை அவரது வாழ்நாளில் எப்போது வேண்டுமானாலும் இரத்து செய்ய முடியும்; மாற்றியமைக்க முடியும். இது குறித்த நடைமுறைகளை இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் 70–வது பிரிவு விளக்குகிறது.

உயிலை இரத்து செய்வதற்கான முறைகள்:

உயிலினை இரு விதங்களில் இரத்து செய்ய முடியும். அவை, (1) சட்டத்தின் நடைமுறையில் இரத்து செய்தல், (2) ஆவணத்தில் ஈடுபாடு உடையோர் செயல் முறையில் இரத்துச் செய்தல். இந்த இரண்டாம் வகையில் இரு உட்பிரிவுகள் உள்ளன. அவை, (அ) புதியதோர் உயிலின் அல்லது உயிலிணைப்பின் வழியாக இரத்துச் செய்தல். (ஆ) அழித்தலின் மூலம் இரத்து செய்தல்.

1. சட்டத்தின் நடைமுறையில் இரத்துச் செய்தல் :

ஒரு உயிலினை உருவாக்கியவர் அதனை எப்போது வேண்டுமானாலும் இரத்துச் செய்யலாம். உயிலினை உருவாக்கிய ஆணோ, பெண்ணோ அதன் பின்னர் திருமணம் செய்து கொண்டால், அவர் உருவாக்கிய உயிலினைச் செயற் படுத்த முடியாது. அது இரத்துச் செய்தலுக்கு அல்லது அழித்தலுக்கு சமானமாகும். இதுவே சட்டத்தின் நடைமுறையில் இரத்துச் செய்தலாகும்.

2. ஆவணத்தில் ஈடுபாடுடையோர் செயல்முறையில் இரத்துச் செய்தல்:

(i) புதியதோர் உயிலின் அல்லது உயிலிணைப்பின் வழியாக இரத்துச் செய்தல் : பின்னர் உருவாக்கும் புதிய உயில் அல்லது உயிலிணைப்பின் மூலமாக, முன்னர் உருவாக்கிய உயிலினை இரத்து செய்யலாம். புதிய உயில் அல்லது உயிலிணைப்பு, பழைய உயிலினை இரத்து செய்கிறது என்பதற்குண்டான எண்ணத்தை அதில் தெளிவாகக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். உருவாக்கியவரின் கடைசி உயிலே முந்திய முரணான உயில்களைத் தள்ளிவிட்டு செயல்படும் என்பதும், ஒருவன் இரு உயில்களை விட்டுவிட்டு இறக்கவியலாது என்பதும் பொதுவிதி.

(ii) அழித்தலின் மூலம் இரத்துச் செய்தல் : உயிலினை அழிக்கும் அல்லது இரத்துச் செய்யும் எண்ணத்தோடு அதனை உருவாக்கியவரோ அல்லது

அவரது உத்தரவின் பேரில் அவரது முன்னிலையில் மற்றொருவரோ உயிலை தீயிட்டு கொளுத்தினாலோ, கிழித்தாலோ அவ்வுயில் இரத்தாகிவிடும். தீயிட்டுக் கொளுத்துவது என்றால் உயில் முழுவதும் எரித்து விடவேண்டுமென்பதில்லை. தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளது என்பதைக் காட்டுமளவிற்கு எரித்திருந்தாலே போதுமானது. அதேபோல் கிழித்தல் என்றால் சுக்கு நூறாக கிழிக்க வேண்டியதில்லை. அழிக்கும் நோக்குடன் சிறிது கிழித்தாலே போதும். உயிலினை உருவாக்கியவர் அதனை அழிக்கும் நோக்கத்தோடு தம்முடைய கையொப்பத்தை அல்லது சாட்சிகளின் கையொப்பத்தை வெட்டி எடுத்தால் உயில் முழுவதும் இரத்து செய்யப்பட்டதாகக் கருத வேண்டும். வெட்டுதலும் கிழித்தலுக்கு சமானமாகும்.

9. Doctrine of Dependent Relative Revocation - Write short notes. (முதல் நிலை உயிலைத் தழுவி இரத்துச் செய்யும் தத்துவம் – சிறு குறிப்பு வரைக.)

முன்பு உருவாக்கிய உயிலினை உறுதிப்படுத்தும் நோக்கத்தோடு பிந்திய உயிலினை இரத்துச் செய்தால், அந்நோக்கம் ஒரு நிபந்தனைக்குட்பட்டதாகும். உறுதிப்படுத்தவிருக்கும் உயிலின் செல்லுதன்மையே அந்நிபந்தனையாகும். பிந்திய உயில் சரிவர உருவாக்கப்படாமலிருந்தால் முந்திய உயிலினை இரத்து செய்யவியலாது. முந்திய உயில் சட்டப்படி உருவாக்கப்பட்டிருந்தாலொழிய பிந்திய உயிலினை இரத்துச் செய்வதன் மூலம் அதனை உறுதிப்படுத்த இயலாது. இதனை முதல்நிலை உயிலைத் தழுவி இரத்து செய்யும் தத்துவம் எனக் கூறுவர். இத்தத்துவத்தின் விதியினை இருவகையில் பயன்படுத்தலாம்.

முதலாவதாக, முந்திய உயிலினை இரத்துச் செய்தல் அதற்கு மாற்றாக உருவாக்கவிருக்கும் உயிலினை சார்ந்தது அல்லது முந்திய உயிலின் செல்லு தன்மையைப் பற்றிய தவறான எண்ணத்தைச் சார்ந்தது. அதாவது, முந்திய உயிலை உறுதிப்படுத்தும் நோக்கத்தோடு பிந்திய உயிலினை இரத்துச் செய்தால், அது இரத்து செய்யப்பட்டதாகாது.

இரண்டாவதாக, புதியதோர் உயிலினை உருவாக்கும் பொருட்டு முந்திய உயிலினை அழிக்கும் எண்ணத்தோடு அழித்திருந்து, புதிய உயில்முறைப்படி உருவாக்கப்படாததாலும் அல்லது சான்றளிக்கப்படாததாலும் சட்டப்படி செல்லாது போனால் முந்திய உயில் இன்னமும் செயலில் இருந்து கொண்டுதான் உள்ளது எனக் கொள்ள வேண்டும். ஏனெனில், முந்திய உயிலின் செயலிழக்கும் தன்மை புதிய உயிலின் செயலாற்றும் தன்மையினைச் சார்ந்தது என்பதே உட்கருத்தாகும்.

10. State the law relating to revocation of wills and the doctrine of dependent relative revocation. (உயில்கள் ரத்து செய்தல் சம்மந்தமான சட்டத்தையும் மற்றும் இரத்து செய்தல் தொடர்பான தழுவுதல் கோட்பாட்டையும் கூறுக.)

(முந்தைய இரண்டு வினாக்களின் விடைகளையும் சேர்த்து எழுதுக.)

4 உயில் வழிக் கொடை [Bequest]

உயில்வழிக் கொடை குறித்து பொதுவாகத் தெரிந்து கொள்ள வேண்டியவை

ஒருவர் தனது சொத்து, மற்றொருவரை (ஒரு குறிப்பிட்ட நபரை) சேர வேண்டியது என உயில் எழுதி வைத்தால் அது **'உயில்வழிக் கொடை' (Bequest)** எனப்படுகிறது. இது மற்ற கொடைகளைப் போல் அல்லாமல், உயில் எழுதி வைத்த நபர் இறந்த பிறகுதான் அச்சொத்தின் உடைமையும், உரிமையும் கொடை பெறுபவரை வந்தடைகிறது. ஏனெனில் ஒரு உயிலின் சரத்துக்கள், அதை எழுதி வைத்தவர் இறந்த பின்னர்தான் அமலுக்கு வருகிறது. அதாவது உயில் எழுதி வைத்தவர் இறந்த தேதியிலிருந்து உயில் அமலுக்கு வருகிறது. உயில் வழிக் கொடைகளும் அந்நாளிலிருந்தே அமலுக்கு வருகின்றன. உயில் எழுதி வைத்தவரை 'விருப்பாவணம் கொடுத்தவர்' எனவும் கூறுவர். அதாவது, தனது சொத்து குறித்த விருப்பத்தை ஆவணம் மூலம் தெரிவிப்பதால் அப்பெயர் வழங்கலாயிற்று.

11. Explain the circumstances which renders a bequest void. **(ஒரு உயில் வழிக்கொடையை இல்லாநிலை ஆக்கக்கூடிய சூழ்நிலைகளை விளக்குக.)**

(அல்லது)

Void Bequest - Write short notes. (இல்லாநிலை உயில் வழிக் கொடை – சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் 67, 89,' 112–118, 126, 127 ஆகிய பிரிவுகள் இல்லாநிலை உயில்வழிக் கொடைகள் பற்றிக் கூறுகின்றன (Of Void Bequests). ஒரு உயில்வழிக் கொடை முறையாக உருவாக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அது சில சூழ்நிலைகளில் இல்லாநிலையதாகி விடும். அவை வருமாறு:

உயில்வழிக் கொடை, இல்லாநிலையதாகும் சூழ்நிலைகள்:

1. விருப்பாவணம் கொடுத்தவரின் கையொப்பத்திற்குச் சான்றளிக்கும் சாட்சிக்கு கொடுக்கப்பட்ட உயில் வழிக்கொடை இல்லாநிலையதாகும். உயிலுக்கு யார் வேண்டுமானாலும் சான்றொப்பம் இடலாம். ஆனால் அவர் அவ்வுயில்வழிக் கொடை பெறுநராகவோ, பயனடைபவராகவோ இருத்தல் கூடாது. அதுபோல் உயிலுக்குச் சான்றொப்பமிடுபவரின் மனைவிக்கோ, கணவனுக்கோ அல்லது அவர்கள் இருவர் வழியாக உரிமை பெறும் எவருக்கும் கொடுக்கப்பட்ட கொடை இல்லா நிலையதாகும். **(பிரிவு 67).**

2. விருப்பாவணம் கொடுத்தவரின் தெளிவான எண்ணத்தைத் தெரிவிக்காத எந்தக் கொடையும் இல்லா நிலையதாகும். (பிரிவு 89).

3. விருப்பாவணம் கொடுத்தவர் இறந்த தேதியில் உயிரோடில்லாத ஒருவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த கொடை இல்லாநிலையதாகும். **(பிரிவு 112).**

(எ–கா) 'அ' என்பவர் 'ஆ'வின் மூத்த மகனுக்கு ரூ. 1000/–த்தை உயில் வழிக் கொடையாகக் கொடுத்தார். ஆனால் 'அ' இறக்கும்போது 'ஆ'க்கு மகன் இல்லை. அவ்வுயில்வழிக் கொடை இல்லாநிலையதாகும்.

ஆனால், மேற்படி பிரிவு 112–க்கு ஒரு விதிவிலக்குண்டு. அதாவது கொடை கொடுப்பவர் தம் வாழ்நாளுக்குப் பின் பிறக்கவிருக்கும் ஒருவருக்கு உயில் வழிக் கொடை கொடுக்க விரும்பினால், தம் வாழ்நாளில் உயிரோடிருக்கும் ஒரு நபருக்கு கொடை அளித்து அவர் மூலம், அவருக்கு பிறக்கவிருக்கும் குழந்தைக்கு கொடை சென்று சேரும்படி செய்யலாம். (உ–ம்) தன்னுடைய பேரனுக்கு தன் மகன் மூலமாகக் கொடை கொடுக்கலாம்.

4. விருப்பாவணம் கொடுத்தவரின் இறந்த தேதியில் உயிருடன் இல்லாத ஒருவருக்கு உயில்வழிக் கொடை கொடுக்கப்பட்டிருக்குமிடத்து, அவ்வுயிலில் அடங்கியுள்ள ஒரு முந்தய உயில்வழிக் கொடை க்கு உட்பட்டு, பிந்தய உயில்வழிக் கொடையானது, அக்கொடைப் பொருளில் விருப்பாவணம் அளித்தவரிடம் இருக்கும் பாத்தியங்கள் அனைத்தும் அக்கொடையில் அடங்கியிரா விட்டால், இல்லாநிலையதாகும். **(பிரிவு 113).**

மேற்கண்ட குழப்பமான சட்டப் பிரிவை பின்வரும் எடுத்துக்காட்டு ஒன்று தெளிவாக்குகிறது. அதன்படி, ஒரு சொத்து A என்பவருக்கு அவருடைய ஆயுள் முழுவதும் அனுபவிக்கும் பாத்தியத்துடனும், அவரது இறப்பிற்குப் பின் அவரது மூத்த மகனுக்கு அவருடைய ஆயுள் முழுவதும் அனுபவிக்கும் பாத்தியத்துடனும், அம்மூத்த மகனின் இறப்பிற்குப் பிறகு அவரது மூத்த மகனையும் அடைய வேண்டும் என்று உயில்வழிக் கொடையாகக் கொடுக்கப்படுகிறது. ஆனால் மேற்கண்டவாறு விருப்பாவணமளித்தவர் இறந்த தேதியில், மேற்படி A- க்கு மகன் இல்லை. எனவே

இங்கு A-யின் மூத்த மகனுக்கு அளிக்கப்பட்ட உயில்வழிக் கொடையானது, விருப்பாவணமளித்தவர் இறந்த தேதியில் உயிருடன் இல்லாத ஒரு நபருக்கு அளிக்கப்பட்ட கொடையாகும். இக்கொடை, விருப்பாவணமளித்தவரிடம் இருக்கும் பாத்தியங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய கொடையன்று. எனவே A-யின் மூத்த மகனுக்கு அவரது ஆயுள் முழுவதும் அனுபவிக்கும் பாத்தியத்துடன் அளிக்கப்பட்ட கொடை இல்லாநிலையதாகும்.

5. வரையிலா நிலைக்கு எதிரான விதியின் (Rule against perpetuity) கால வரம்பைக் கடந்த உயில்வழிக் கொடை செல்லாது. **பிரிவு 114–ன்படி,** விருப்பாவணமளித்தவரின் இறப்பின் பொழுது உயிருடன் உள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் ஆயுட் காலம் மற்றும் அவர்களது வாழ்நாள் முடிவுறுமுன் பிறந்து வாழ்பவர், முழு வயதினை அடைந்தவுடன் கொடை அவரைச் சேரும் என்று குறிக்கப்பட்டவர் உரிமை வயதையடையும் கால வரம்பிற்கு அப்பால் கொடையின் சேர்ந்தடையுரிமை காலந் தாழ்த்தப்பட்டால், அக்கொடை செல்லாது.

அதாவது சொத்து என்பது கைமாறக் கூடிய இயல்புடையது. அப்படி கை மாறிச் செல்லக் கூடிய எண்ணத்துடன் சொத்தைக் கொடுத்துவிட்டு, அதன் கை மாறும் காலத்தை வரையறையில்லாமல் காலந்தாழ்த்தி வைத்தால், அவ்வரையறை செல்லாது. சுருங்கக் கூறின் 'கொடை கொடுக்கிறேன்' என்று கூறிவிட்டு, அதனை கொடை பெறுநர் அடைவதற்கான காலத்தை நியாயமற்ற முறையில் நிருணயித்தால் அக்கொடை செல்லாது. இந்தியாவில் உயில்வழிக் கொடைச் சொத்துக்கள், கொடை பெறுநரை சேர்ந்தடைதலை, விருப்பாவணமளித்தவரின் வாழ்நாளில் வாழ்பவர்களோடு 18 ஆண்டுகள் வரைதான் காலந்தாழ்த்தலாம். அதற்கும் மீறி காலந்தாழ்த்தினால், அக்கொடை செல்லாது.

6. ஒரு வகுப்பினருக்கு கொடுக்கப்பட்ட கொடையில், மேற்கண்ட பிரிவுகள் 113 மற்றும் 114–ன் காரணமாக அவ்வகுப்பினரில் சிலவரைப் பொறுத்து அக்கொடை செயற்படாமல் போனால், அவ்வுயில்வழிக் கொடை அவர்களைப் பொறுத்து மட்டும் இல்லா நிலையதாகும். செயற்படும் நிலையில் உள்ள மற்றவர்களைப் பொறுத்து, அக்கொடை செல்லும். **(பிரிவு 115).**

7. முந்திய உயில் வழிக் கொடை செல்லாமல் செயலிழக்கும் சமயத்தில், செயல்படும்படியாக அதே உயிலில் கொடுக்கப்பட்ட பிந்திய உயில்வழிக் கொடையும் செல்லாது. **(பிரிவு 116).**

8. நெருங்கிய உறவினர்களுடைய ஒருவர், அவர் இறந்த நாளுக்கு முன் 12 மாதங்களுக்குள் உயில் வழியாகச் சமய அல்லது அறப்பயன்களுக்கென உயில் வழிக் கொடையினைக் கொடுத்திருந்தால், அக்கொடை செல்லாது போகும். ஆனால் இவ்விதி பார்சி இனத்தவரைக் கட்டுப்படுத்தாது. **(பிரிவு 118).**

9. நடைமுறை சாத்தியமில்லாத நிபந்தனை விதித்து அதன் பேரில் கொடுக்கப்பட்ட கொடை இல்லாநிலையது. (உ–ம்) ஒருவர் மணிக்கு 100 மைல் நடக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில், சொத்து எதனையும் உயில் வழியாக அவருக்குக் கொடை கொடுத்தால் அது இல்லாநிலையதாகும். **(பிரிவு 126).**

10. சட்டத்திற்கு புறம்பான அல்லது நெறி கெட்ட நிபந்தனையின் பேரில் கொடுக்கப்பட்ட கொடை இல்லாநிலையது. (உ–ம்) A என்பவர் B-யைக் கொலை செய்தால் தன்னுடைய உயில் வழிக் கொடையான ரூ. 1000/–த்தைப் பெற முடியும் என்று கொடை கொடுக்கப்பட்டிருந்தால், அக்கொடை இல்லாநிலையது. **(பிரிவு 127).**

12. Universal Legatee - Write short notes. (உலகளாவிய கொடை பெறுநர் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Universal Legatee - Write short notes. (முழுதளாவிய உயில்வழி உரிமையர் – சிறு குறிப்பு வரைக.)

கொடை பெறுநர்களைப் பொதுவாக இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். 1. எஞ்சிய கொடை பெறுநர் (Residuary Legatee) 2. முழுதளாவிய கொடை பெறுநர் (Universal Legatee). எஞ்சிய கொடை பெறுநர் என்பவர் கழிவுறும் கொடைகளும் (Lapsing of Legacies), செயல்படா எல்லாக் (இல்லாநிலைக்) கொடைகளும் (Void Bequest) போக எஞ்சியிருப்பதைப் பெறுபவர் ஆவார். எடுத்துக்காட்டாக, A என்பவர் கொடுத்த உயில் வழிக் கொடையில் ஒன்று பிரிவு 118–ன்படி இல்லாநிலையதாகிவிட்டது. மற்றொன்று கொடை பெறுநர் இறந்து விட்டதால் கழிவுற்றது. எஞ்சியவற்றை B என்பவருக்குக் கொடையாகக் கொடுத்தார். உயில் உருவாக்கிய நாளுக்குப் பின் பண்ணை ஒன்றினை A வாங்கி அவர் இறக்கும் வரை அது அவருக்குச் சொந்தமாக இருந்தது. இங்கு அவரது எஞ்சிய சொத்துக்களுடன், மேற்படி பண்ணையும் ஒரு எஞ்சிய சொத்தாக B-யைச் சென்றடையும். ஆனால் அதே சமயத்தில் விருப்பாவணமளித்தவர் இறக்கும்போது விட்டுச் செல்லும் சொத்துக்கள் அனைத்தையும் பெறுபவர் 'முழுதளாவிய உயில்வழி உரிமையர்' அல்லது 'உலகளாவிய கொடை பெறுநர்' (Universal Legatee) என அழைக்கப்படுவர்.

13. Contingent Bequest - Write short notes. (வரு நிகழ்வுக் கொடை – சிறு குறிப்பு வரைக.)

இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் **120–வது பிரிவின்படி**, ஒரு கொடை, கொடை பெறுபரை அடைவதற்கு முன் ஒரு குறிப்பிட்ட நிச்சயமற்ற ஒரு

வருநிகழ்ச்சி நடைபெறுவதையோ அல்லது நடைபெறாதிருப்பதையோ சார்ந்திருந்தால், அது 'வரு நிகழ்வடைக் கொடை' எனப்படும். ஏனெனில் ஒரு உயில் வழிக் கொடை, குறிப்பிட்டதொரு நிச்சயமற்ற சம்பவம் நடைபெற வேண்டுமென்ற நிபந்தனையுடன் கொடுக்கப்பட்டு இருந்தால், அச்சம்பவம் நடைபெறும் வரை அக்கொடைச் சொத்து, கொடை பெறுநரைச் சென்றடையாது. அதேபோல், ஓர் உயில் வழிக் கொடை குறிப்பிட்ட நிச்சயமற்ற சம்பவம் நடைபெறக் கூடாது என்ற நிபந்தனையுடன் கொடுக்கப்பட்டிருந்தால் அச்சம்பவம் நடைபெற இயலாமல் போகும் வரை அக்கொடை, அதைப் பெறுபவரைச் சென்றடையாது.

எடுத்துக்காட்டுகள்: (i) பதினெட்டு வயதை அடைந்தவுடன் கொடுத்து விட வேண்டும் எனும் நிபந்தனையுடன் ஒரு தொகை உயில்வழிக் கொடையாக A என்பவருக்குக் கொடுக்கப்பட்டது. இங்கு அக்குறிப்பிட்ட வயதை அடைய வேண்டுமென்ற நிபந்தனை நிறைவேறும் வரையில், அக்கொடை A – யைச் சென்றடையாது. அதற்கு பின்தான் சென்றடையும். எனவே இது ஒரு வரு நிகழ்வுக் கொடையாகும்.

(ii) A, B, C ஆகிய மூவரும் அவர்களது பதினெட்டு வயதிற்குள் இறந்து விட்டால் D–க்கு சொத்து சென்றடையும் எனும் நிபந்தனையுடன் உயில்வழிக் கொடை கொடுக்கப்படுகிறது. இங்கு மேற்கண்ட A, B, C ஆகிய மூவரும் பதினெட்டு வயதிற்குள் இறந்துவிட்டால், அச்சொத்தை D அடையலாம். அவ்வாறு அவர்கள் இறக்காமல் பதினெட்டு வயதை அடைந்துவிட்டால், அச்சொத்து D–யை சேர்ந்தடையாது. எனவே D–க்கு மேற்படி உயில்வழிக் கொடையில் உள்ள உரிமை, வருநிகழ்வுரிமை ஆகும்.

(iii) A என்பவர் திருமணம் செய்து கொள்ளும் வரை அவருக்கும், அவர் திருமணம் செய்து கொண்ட பின்னர் B–யையும் சென்றடைய வேண்டும் என்று ஒரு உயில்வழிக் கொடை கொடுக்கப்படுகிறது. இங்கு A திருமணம் செய்து கொள்ளும் வரை அவ்வுயில்வழிக் கொடையில் B–க்கு உள்ள உரிமை, வரு நிகழ்வுரிமையாகும்.

இக்கொடைக்கு ஒரு விதிவிலக்குண்டு. அதாவது ஒருவர், பதினெட்டு வயதை அடைந்த பின் அவருக்கு ஒரு தொகையை உயில்வழிக் கொடையாக கொடுக்க வேண்டும் என்றும், அதுவரையில் அத்தொகையிலிருந்து வரும் வருமானத்தை அவரது நலனுக்காக பயன்படுத்த வேண்டும் என்றும் ஒரு உயிலில் கண்டிருந்தால், அது வருநிகழ்வு உயில்வழிக் கொடையாகாது.

13. Conditional Bequests - Write short notes. (நிபந்தனைக் கொடைகள் – சிறு குறிப்பு வரைக.)

ஒருவர் தனது சொத்தைத் தன் விருப்பம் போல் யாருக்கு வேண்டுமானாலும் கொடையாகக் கொடுக்கலாம். அவ்வாறு கொடுக்கும் பொழுது

கொடை கொடுப்பவர் சில நிபந்தனைகளை விதிக்கலாம். ஆனால் அந்த நிபந்தனைகள் சட்டத்திற்குப் புறம்பானதாகவோ, சமுதாயத்தில் நிலவிவரும் பொதுக் கொள்கைக்கு மாறானதாகவோ, நிச்சமற்றதாகவோ இருக்கக் கூடாது. இவ்வாறு கொடுக்கப்படும் கொடை நிபந்தனைக் கொடைகள் என்று பெயர். நிபந்தனைகள் இப்படிவத்தில் தான் இருக்க வேண்டும் என்று இல்லை. மதம் மாறக்கூடாது அல்லது குறிப்பிட்ட பதவியினை வசிக்கக் கூடாது என்பன போன்ற நிபந்தனைகளையும் விதிக்கலாம். நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டாலன்றிக் கொடை பெறுநரைச் சேர்ந்தடையாது.

நிபந்தனைக் கொடை வரு நிகழ்வடைக் கொடையிலிருந்து மாறுபட்டதாகும். வரு நிகழ்வடைக் கொடை ஒரு குறிப்பிட்ட சம்பவம் நடை பெறுவதைச் சார்ந்துள்ளது. ஆனால் நிபந்தனைக் கொடை, கொடை பெறுநரின் செயலைச் சார்ந்துள்ளது.

14. Distinguish between conditional bequest and contingent bequest. (நிபந்தனையுடைய உயில் வழிக் கொடையையும், நிகழ்வடைவான உயில் வழிக் கொடையையும் வேறுபடுத்திக் காட்டுக.)

(முந்தய இரண்டு வினாக்களின் விடைகளையும் ஒப்பிட்டு எழுதவும்)

15. Onerous Bequests - Write short notes. (சுமை சேர்ந்த உயில் வழிக் கொடைகள் சிறு குறிப்பு வரைக.)

ஒருவர் தன்னுடைய சொந்தச் சொத்தினைத் தன் விருப்பம் போல் சட்டத்திற்கும், சமுதாயத்திற்கும், நடைமுறைக்கும் முரண்படாமல் யாருக்கு வேண்டுமானாலும் உயில் மூலம் கொடையாகக் கொடுக்கும் உரிமையைப் பெற்றவர் ஆவார். அதே சமயத்தில் சில பொறுப்புகளையும் கொடை பெறுநரின் மேல் சுமத்தலாம். அவ்வாறு கொடை பெறுபவர், அப்பொறுப்புச் சுமைகளையும் நிறைவேற்றக் கட்டுப்பட்டவர் ஆவார். இத்தகைய கொடைகளை 'சுமை சேர்ந்த உயில் வழிக் கொடை' (Onerous bequest) என்பர். இதை இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் **122, 123 ஆகிய பிரிவுகள்** பின்வருமாறு விளக்குகின்றன.

பிரிவு 122–ன்படி, ஒரு உயில் வழிக் கொடையில் ஒரு பொறுப்புச் சுமையும் விதிக்கப்பட்டு, அது கொடை பெறுநருக்குக் கொடுக்கப்படும்பட்சத்தில், அச்சுமை முழுவதையும் அவர் ஏற்றுக் கொள்ளும் வரையில், அக்கொடையிலிருந்து அவர் எப்பயனையும் பெறவியலாது.

அதாவது, பயனுடன் ஒரு பொறுப்புச் சுமையையும் விதித்து உயில்வழிக் கொடை கொடுக்கப்பட்டால், கொடை பெறுநர் அப்பொறுப்புச் சுமையினை ஒதுக்கி விட்டு அக்கொடையின் பயனை மட்டும் பெற முடியாது.

ஆனால் **பிரிவு 123–ன்படி,** விருப்பாவணமளித்தவர் வெவ்வேறான இரு

கொடைகளை ஒரே உயிலில் ஒரே நபருக்குக் கொடுத்திருந்து, அவைகளில் ஒன்றில் பயனுடன் கூடிய பொறுப்புச் சுமையையும், மற்றொன்று அச்சுமை இல்லாமல் பயனை மட்டும் அடையக் கூடியதாக இருப்பின், கொடை பெறுநர் சுமையற்ற கொடையை ஏற்றுக் கொண்டு, சுமையுடன் கூடிய கொடையை ஏற்க மறுத்துவிட உரிமை பெற்றவர். இது பிரிவு 122–ல் கூறப்பட்டுள்ள விதிக்கு ஒரு விதிவிலக்காகும்.

16. Doctrine of Acceleration- Write short notes. (உரிமை விரைவுத் தத்துவம் சிறு குறிப்பு வரைக.)

ஓர் உயில் வழிக் கொடையினை முதலில் ஒருவருக்குக் கொடுத்து அக்கொடை கழிவுறும்பட்சத்தில் (அதாவது அது உயில்வழிக் கொடை பெறுநரைச் சேர்ந்தடையாது தோல்வியுறும்பட்சத்தில்), அதனை மற்றொருவருக்குக் கொடுக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தால், விருப்பாவணமளித்தவர் குறிப்பிடாத முறையில் முதல் கொடை கழிவுறாத பொழுதும் கூட, பிந்தய கொடை செயற்படும். சுருங்கக் கூறின் முந்தய கொடை உயிரிழந்தவுடன், அதே சொத்து குறித்த பிந்தய கொடை விரைந்து சென்று செயற்படுகிறது. இதுவே 'உரிமை விரைவுத் தத்துவம்' எனப்படுகிறது. இவ்வாறு இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் **129–வது பிரிவு** குறிப்பிடுகிறது.

எடுத்துக்காட்டாக, விருப்பாவணமளித்தவர் தம்முடைய சொத்தினை தன் மகனுக்கும், மகன் 21 வயது அடையும் முன் இறந்துவிட்டால் தன்னுடைய மகளுக்கும் அச்சொத்து போய்ச் சேர வேண்டும் என்று உயில் எழுதி வைத்திருந்தார். தற்பொழுது, அவருடைய மகன் 21 வயதடையும் முன்னரே இறந்து விட்டதால், அங்கு இரண்டாவது கொடை விரைவாகச் செயல்பட்டு, அவருடைய மகளுக்கு சொத்து சென்றடைகிறது.

ஆனால் முதல் உயில்வழிக் கொடையானது விருப்பாவணமளித்தவர் தனது உயிலில் குறிப்பிட்ட முறையின்படி கழிவுற்றால்தான், பிந்தய உயில்வழி கொடை விரைந்து செயல்படும் என்று அவ்வுயிலில் கண்டிருந்து, அவர் கூறிய முறைப்படி முதல் உயில்வழிக் கொடை கழிவுறவில்லையானால், அங்கு பிந்தய உயில்வழிக் கொடை விரைந்து செயற்படாது என **பிரிவு 130** குறிப்பிடுகிறது.

17. Explain the law relating to the specific and demonstrative legacies. (வரையறுத்துக் குறிக்கப்பட்ட மற்றும் சுட்டியில் உயில் கொடைகள் தொடர்பான சட்டங்களை விளக்குக.)

முன்னுரை:

இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின்படி உயில்வழிக் கொடைகள் மூவகைப்படும். அக்கொடைகளின் தன்மையைக் கொண்டு, கொடை பெறுநரின் உரிமைகளை நிருணயிக்கலாம். அவை வருமாறு.

(1) பொதுத் தன்மையிலான உயில்வழிக் கொடைகள் (General Legacies);

(2) வரைறுத்துக் குறிக்கப்பட்ட உயில்வழிக் கொடைகள் (Specific Legacies);

(3) சுட்டிக் காட்டும் அல்லது சுட்டியில் உயில்வழிக் கொடைகள் (Demonstrative Legacies);

பொதுத் தன்மையிலான உயில்வழிக் கொடை:

இக்கொடையினைச் சொத்தாகவோ, பணமாகவோ கொடுக்கலாம். கொடையளிப்பவரின் சொந்தச் சொத்திலிருந்துதான் இக்கொடையினை கொடுக்க வேண்டுமென்பதில்லை. அவரது வேறு சொத்துக்களிலிருந்தும் கொடுக்கலாம். எடுத்துக்காட்டாக 'என்னுடைய வைர மோதிரத்தைக் கொடையாகக் கொடுக்கிறேன்' என்று உயிலில் எழுதி வைக்கலாம். இங்கு ஏதாவதொரு வைர மோதிரத்தைக் கொடுப்பதன் மூலம் இக்கொடையினை நிறைவேற்றலாம். எனவே இது பொதுத் தன்மையிலான உயில்வழிக் கொடை எனப்படுகிறது. ஆனால் வரையறுத்துக் குறிக்கப்பட்ட உயில்வழிக் கொடை இதிலிருந்து மாறுபட்டதாகும்.

வரையறுத்துக் குறிக்கப்பட்ட உயில்வழிக் கொடை (Specific Legacies) - பிரிவு 142 கூறும் வரையறை:

வரையறை: இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் **142–வது பிரிவு** வரையறுத்துக் குறிக்கப்பட்ட உயில்வழிக் கொடை குறித்து விளக்குகிறது. அதன்படி, 'விருப்பாவணமளித்தவர் தனது சொத்தின் மற்றெல்லா பகுதி களிலிருந்து வேறுபட்டு உள்ள ஒரு குறிப்பிட்ட பகுதியை, உயில்வழிக் கொடையாக எவருக்காவது கொடுத்தால், அவ்வுயில்வழிக் கொடை, வரையறுத்துக் குறிப்பிட்ட உயில்வழிக் கொடையாகும்.'

நிபந்தனைகள்: (1) கொடைச் சொத்து விருப்பாவணமளித்தவரின் சொத்துக்களிலிருந்து கொடுக்கப்பட வேண்டும்; (2) அச்சொத்து அவரது மற்ற சொத்துக்களிலிருந்து எளிதில் அடையாளம் காணத்தக்கதாக இருக்க வேண்டும்; அதாவது மற்ற சொத்துக்களிலிருந்து பிரித்து அறியக் கூடியதாக இருக்க வேண்டும். (3) அச்சொத்து விருப்பாவணமளித்தவரின் மொத்தச் சொத்துக்களாக அல்லது எஞ்சிய சொத்துக்களாக இருக்கக் கூடாது; (4) அச்சொத்து எந்நிலையில் உள்ளதோ அதே நிலையில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

எடுத்துக்காட்டுகள்: A என்பவர் B என்பவருக்கு (1) தனக்கு C என்பவரால் அன்பளிப்பாக கொடுக்கப்பட்ட வைர மோதிரத்தை உயில்வழிக்

கொடையாக அளிக்கிறார்; (2) அவரது தங்கச் சங்கிலியை உயில்வழிக் கொடையாக அளிக்கிறார்; (3) கொல்கெத்தா–வில் அவரது இல்லத்தில் உள்ள அனைத்து மரச் சாமான்களையும் உயில்வழிக் கொடையாக அளிக்கிறார். மேற்கண்டவை யாவும் 'வரையறுத்துக் குறிக்கப்பட்ட உயில்வழிக் கொடையாகும்'.

மேற்கண்டதில் முதல் எடுத்துக்காட்டில் தனக்கு **அன்பளிப்பாக** கொடுக்கப்பட்ட வைர மோதிரத்தை ஒருவர் மற்றொருவருக்கு கொடையாகக் கொடுக்கிறார். இங்கு அன்பளிப்பாக கொடுக்கப்பட்ட அந்த குறிப்பிட்ட வைர மோதிரத்தை கொடையாகக் கொடுப்பதன் மூலம் மட்டுமே அவ்வுயில்வழிக் கொடையினை நிறைவேற்ற இயலும். விருப்பாவணமளித்தவர் இறந்த பிறகு, அக்குறிப்பிட்ட மோதிரத்தை, உயிலில் எழுதி வைக்கப்பட்டபடி கொடையாக அளிக்கும்படி கொடை பெறுநர் வலியுறுத்தும் உரிமை பெற்றவர். இதுவே வரையறுத்துக் குறிக்கப்பட்ட உயில்வழிக் கொடையின் சிறப்பம்சமாகும்.

பின்வருபவை வரையறுத்துக் குறிக்கப்பட்ட உயில்வழிக் கொடையாகாது. அவை, A என்பவர் B என்பவருக்கு (1) ஒரு வைர மோதிரத்தை உயில்வழிக் கொடையாக அளித்தல்; (2) ஒரு குதிரையை அளித்தல்; (3) ரூ.10,000 மதிப்புள்ள அரசுக் காப்புறுதிகளை (Government Securities) அளித்தல்; (4) ரூ.2000/–த்தை ரொக்கமாக அளித்தல்.

மேற்கண்ட எடுத்துக்காட்டுகளில் முறையே எந்த வைர மோதிரம் என்றோ, எக்குதிரை என்றோ, எந்த எண்களுடைய ரூபாய் தாள்கள் என்றோ எதுவும் வரையறுத்துக் குறிக்கப்படவில்லை. இவையெல்லாம் பொதுவான தன்மையில் அமைந்துள்ளன. எனவே இதனை வரையறுத்துக் குறிக்கப்பட்ட உயில்வழிக் கொடை எனக் குறிப்பிட முடியாது. மாறாக இவையெல்லாம் பொதுத் தன்மையிலான உயில்வழிக் கொடையாகும்.

முதலீடு செய்யப்படும் ஒரு குறிப்பிட்ட தொகை, வரைறுத்துக் குறிக்கப்பட்ட உயில்வழிக் கொடையாகாது: பிரிவு 143–ன்படி, ஒரு குறிப்பிட்ட தொகை, பங்கு மூலதனத்தில் (stock), நிதியங்களில் (funds) அல்லது காப்புறுதிகளில் (securities) முதலீடு செய்யப்பட்டுள்ளது என உயிலில் விவரிக்கப்பட்டுள்ளது எனும் காரணத்தால் மட்டுமே, அது ஒரு வரையறுத்துக் குறிக்கப்பட்ட உயில்வழிக் கொடையாகாது. அதாவது ஒரு குறிப்பிட்ட தொகை எதில் மூதலீடு செய்யப்பட்டுள்ளது என்றாலும், அது வரையறுத்துக் குறிக்கப்பட்ட உயில்வழிக் கொடையாகாது. அது பொதுத் தன்மையிலான உயில்வழிக் கொடையே.

எடுத்துக்காட்டாக, 'தற்பொழுது கிழக்கிந்திய இரயில்வே நிறுவனத்தின் பங்குகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள ரூ.10,000/–த்திற்கான எனது சொத்து', ஒரு வரையறுத்துக் குறிக்கப்பட்ட உயில்வழிக் கொடையாகாது.

பிரிவு 144–ன்படி, எவ்வகையிலான பங்கு மூலதனத்திற்கும் உரிய ஒரு குறிப்பிட்ட தொகையை பொதுவான சொற்களில் குறிப்பிட்டு ஒரு உயில்வழிக் கொடை அளிக்கப்படுமிடத்து, விருப்பாவணமளித்தவர், அவர் விருப்பாவணமளித்த தேதியில், உயில்வழிக் கொடையாக அளிக்கப்படும் தொகைக்குச் சமமான அல்லது அதை விட அதிகமான ஒரு தொகைக்குரிய ஒரு குறிப்பிட்ட வகையான பங்கு மூலதனத்தைக் கொண்டிருக்கிறார் எனும் காரணத்திற்காக மட்டும், அது ஒரு வரையறுத்துக் குறிக்கப்பட்ட உயில்வழிக் கொடையாகாது.

எடுத்துக்காட்டாக, A என்பவர் அரசுக் காப்புறுதிகளான ரூ.5,000/–த்தையும் அய்ந்து சதவீதத்தையும் உயில்வழிக் கொடையாக B என்பவருக்கு அளிக்கிறார். உயில் தேதியில், மேற்படி A என்பவருக்கு அய்ந்து சதவீதம் இருந்தது. அரசுக் காப்புறுதிகள் ரூ.5,000/–த்திற்கு இருந்தது. ஆனாலும், இக்கொடை, வரையறுத்துக் குறிக்கப்பட்ட உயில்வழிக் கொடையாகாது.

பிரிவு 145–ன்படி, ஒரு பணத் தொகையை செலுத்துதலானது, விருப்பாவணமளித்தவரின் சொத்தின் சில பகுதி மற்றொரு வடிவத்தில் மாறும் வரை அல்லது ஒரு குறிப்பிட்ட இடத்தில் திருப்பி வைக்கப்படும் வரை காலந் தாழ்த்துமாறு உயிலில் வகை செய்யப்பட்டிருப்பதன் காரணமாக மட்டும், அப்பணத் தொகை ஒரு வரையறுத்துக் குறிக்கப்பட்ட உயில்வழிக் கொடையாகாது. அதாவது கொடைப் பொருளைப் பணமாகக் கூறி, அப்பணம் வர வேண்டியிருப்பதால், அல்லது விருப்பாவணமளித்தவரின் சொத்து, பணமாக மாற வேண்டியிருப்பதால், அக்கொடை செயற்படுதலைக் காலந்தாழ்த்துவதன் காரணமாக மட்டும், அக்கொடையினைக் வரையறுத்துக் குறிக்கப்பட்ட உயில்வழிக் கொடை எனக் கூறவியலாது.

எடுத்துக்காட்டாக, A என்பவர் ரூ.10,000/–த்தை உயில்வழிக் கொடையாக B என்பவருக்கு அளிக்கிறார். மேலும் அவ்வுயில்வழிக் கொடை இந்தியாவில் உள்ள A–யின் சொத்து இங்கிலாந்தில் பணமாக மாற்றப்பட்டு பெறப்பட்டவுடன் செலுத்தத்தக்கது என்று அவரது உயிலில் குறிப்பிடுகிறார். இக்கொடை, வரையறுத்துக் குறிக்கப்பட்டதாகாது.

சில பொதுவான சட்டப் பிரிவுகள்:

பிரிவு 146–ன்படி, விருப்பாவணமளித்தவரின் சொத்தில் எஞ்சியுள்ள வற்றுடன், முன்பே உயில்வழிக் கொடையாக அளிக்கப்படாத சொத்தின் சில இனங்களை வரிசைப்படுத்தி உயில்வழிக் கொடையாக அளிப்பதாக உயிலில் கண்டிருந்தால், அவ்வாறு வரிசைப்படுத்தப்பட்ட சொத்தினங்கள் வரையறுத்துக் குறிக்கப்பட்ட வகையில் உயில்வழிக் கொடையாக அளிக்கப்பட்டதாகாது.

பிரிவு 147–ன்படி, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு வாரிசுரிமையின் அடிப்படையில் பெறத்தக்கவாறு, சொத்தொன்று வரையறுத்துக்

குறிக்கப்பட்ட விதத்தில் உயில்வழிக் கொடையாக அளிக்கப்படுமிடத்து, அச்சொத்தின் மதிப்பு தொடர்ந்து குறைந்து வரக் கூடிய தன்மையுடையதாக இருந்தாலும், விருப்பாவணமளித்தவர் எந்நிலையில் அச்சொத்தினை விட்டுச் சென்றாரோ அதே நிலையில் அதனை வைத்திருத்தல் வேண்டும்.

பிரிவு 148–ன்படி, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு வாரிசுரிமையின் அடிப்படையில் பெறத்தக்கவாறு, சொத்தொன்று வரையறுத்துக் குறிக்கப்படாத விதத்தில் உயில்வழிக் கொடையாக அளிக்கப்படுமிடத்து, அவ்வுயிலில் முரணாக ஏதும் வகை செய்யப்படாத பொழுது, அச்சொத்தினை விற்று, அதன் விற்பனைத் தொகையை உயர் நீதிமன்றம் பொதுவான விதியின்படி அதிகாரமளிக்கும் அல்லது உத்தரவிடலாகும் அத்தகு காப்புறுதிகளில் முதலீடு செய்யப்படுதல் வேண்டும். மேலும் இவ்வாறு உருவாக்கப்பட்ட அத்தொகை அவ்வுயிலில் கண்ட சரத்துக்களின்படி வாரிசுரிமையின் அடிப்படையில் தொடர்ந்து வரும் கொடை பெறுநர்களால் அனுபவிக்கப்படுதல் வேண்டும்.

பிரிவு 149–ன்படி, உயில்வழிக் கொடையை செலுத்துவதற்கு சொத்துக்கள் பற்றாக்குறையாக இருப்பின், வரையறுத்துக் குறிக்கப்பட்ட உயில்வழிக் கொடையானது, பொதுத் தன்மையிலான கொடையுடன் குறைத்துக் கொண்டுச் செல்ல பொறுப்பானதாகாது. பொதுத் தன்மையிலான உயில்வழிக் கொடைக்கு ஏற்படும் சொத்துப் பற்றாக்குறையை சரிசெய்ய, வரையறுத்துக் குறிக்கப்பட்ட உயில்வழிக் கொடையைக் குறைத்தல் கூடாது. வரையறுத்துக் குறிக்கப்பட்ட விதத்தில் உயில்வழிக் கொடையாக அளிக்கப்பட்ட சொத்து, கொடை பெறுநரை அப்படியே சென்றடைய வேண்டும்.

சுட்டிக்காட்டும் அல்லது சுட்டியில் உயில்வழிக் கொடை (Demonstrative Legacies) - பிரிவு 150-ன் வரையறை:

பொது விளக்கம்: ஒரு குறிப்பிட்ட நிதியத்திலிருந்து (fund) அல்லது இருப்பைச் (stock) சுட்டிக்காட்டி, அதிலிருந்து முறையே ஒரு குறிப்பிட்ட தொகையை அல்லது பொருளை உயில்வழிக் கொடையாக அளித்தல், சுட்டிக்காட்டும் உயில்வழிக் கொடை எனப்படும். இதற்கு பிரிவு 150 பின்வருமாறு வரையறை தருகிறது.

வரையறை: இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் **150–வது பிரிவின்படி,** ஒரு குறிப்பிட்ட நிதியம் அல்லது இருப்பைச் சுட்டிக்காட்டி, அவற்றை ஒரு முதன்மை நிதியம் அல்லது இருப்பாக உருவாக்கி அதிலிருந்து ஒரு குறிப்பிட்ட பணத் தொகை அல்லது ஒரு குறிப்பிட்ட அளவிலான பொருள் எதுவும் செலுத்தப்பட வேண்டுமென உயில்வழிக் கொடை அளிக்கப்படுமிடத்து, அது சுட்டிக்காட்டும் உயில்வழிக் கொடை எனப்படுகிறது.

வரையறுத்துக் குறிக்கப்பட்ட மற்றும் சுட்டிக்காட்டும் உயில்வழிக்

கொடைக்கிடையே உள்ள முக்கிய வேறுபாடு: வரையறுத்துக் குறிக்கப்பட்ட சொத்தொன்று, கொடை பெறுநருக்கு அளிக்கப்படுமிடத்து, அக்கொடை வரையறுத்துக் குறிக்கப்பட்டதாகும். ஆனால் வரையறுத்துக் குறிக்கப்பட்ட சொத்திலிருந்து உயில்வழிக் கொடை செலுத்தப்பட வேண்டுமென்று ஒரு உயில்வழிக் கொடையில் கண்டிருந்தால், அது சுட்டிக்காட்டப்பட்ட உயில்வழிக் கொடையாகும்.

எடுத்துக்காட்டாக, W என்பவரிடமிருந்து தனக்கு வர வேண்டிய **கடன் கணக்கின் ஒரு பகுதியான** ரூ.1,000/–த்தை A என்பவர் B என்பவருக்கு உயில் வழிக் கொடையாக அளிக்கிறார். அதே சமயத்தில் W என்பவரிட்மிருந்து தனக்கு வர வேண்டிய **கடன் கணக்கிலிருந்து** ரூ.1,000/–த்தை அவர் C என்பவருக்கும் உயில்வழிக் கொடையாக அளிக்கிறார். இங்கு B–க்கு அளிக்கப்பட்ட உயில்வழிக் கொடை வரையறுத்துக் குறிக்கப்பட்டதாகும். C–க்கு அளிக்கப்பட்ட உயில்வழிக் கொடை, சுட்டிக்காட்டும் உயில்வழிக் கொடையாகும்.

இதுபோல், A என்பவர் 'ராம்நகரில் உள்ள எனது தோட்டத்திலிருந்து ரூ.10,000/–த்தை' B என்பவருக்கு உயில்வழிக் கொடையாக அளிக்கிறேன் என்பதும், 'ஒரு குறிப்பிட்ட வணிகத்தில் முதலீடு செய்துள்ள எனது மூலதனமான ரூ.10,000/–த்தை' B என்பவருக்கு உயில்வழிக் கொடையாக அளிக்கிறேன் என்பதும், சுட்டிக் காட்டும் உயில்வழிக் கொடைகளே.

பிரிவு 151–ன்படி, நிதியமொன்றின் (fund) ஒரு பகுதி வரையறுத்துக் குறிக்கப்பட்ட விதத்தில் உயில்வழிக் கொடையாக அளிக்கப்படுமிடத்தும், அதே நிதியத்திலிருந்து மற்றொரு உயில்வழிக் கொடை செலுத்தப்பட வேண்டுமென்று வகை செய்யப்பட்டிருக்குமிடத்தும், வரையறுத்துக் குறிக்கப்பட்ட விதத்தில் உயில்வழிக் கொடையாக அளிக்கப்பட்ட அச்சொத்தின் பகுதி, கொடை பெறுநருக்கு முதலில் கொடுக்கப்பட வேண்டும். பின்னர் அந்நிதியத்தின் எஞ்சியவற்றிலிருந்து சுட்டிக் காட்டும் உயில்வழிக் கொடை அளிக்கப்பட வேண்டும். மேலும் அவ்வாறு எஞ்சியவை பற்றாக்குறையாக இருப்பின், விருப்பாவணமளித்தவரின் பொதுச் சொத்துக்களிலிருந்து அளிக்கப்பட வேண்டும்.

சுருங்கக் கூறின், ஒரே சொத்தினின்றும் வரையறுத்துக் குறிக்கப்பட்ட உயில்வழிக் கொடையும், சுட்டிக்காட்டும் உயில்வழிக் கொடையும் கொடுக்கப்பட வேண்டுமென அவ்வுயிலில் கண்டிருந்தால், முதலில் வரையறுத்துக் குறிக்கப்பட்ட உயில்வழிக் கொடையையே கொடுக்க வேண்டும். எஞ்சியுள்ளதில் சுட்டிக் காட்டும் உயில்வழிக் கொடையினை கொடுக்க வேண்டும். எஞ்சியுள்ள சொத்து, சுட்டிக் காட்டும் உயில்வழிக் கொடையினைக் கொடுப்பதற்கு பற்றாக்குறையாக இருப்பின், அதனை விருப்பாவணமளித்தவரின் பொதுச் சொத்துக்களிலிருந்து சரி செய்ய வேண்டும்.

18. Ademption of Legacies - Write short notes. (கொடைகளை வறிதாக்கல் – சிறு குறிப்பு வரைக.)

இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் **152–வது பிரிவு** கொடைகளை வறிதாக்கல் குறித்து பின்வருமாறு விளக்குகிறது. அதன்படி, குறித்த வகையில் உயில்வழிக் கொடையாகக் கொடுக்கப்பட்ட ஏதேனும், விருப்பாவணமளித்தவரின் இறப்பின் பொழுது அவருக்குச் சேர்ந்ததாக இல்லையென்றால், அல்லது மற்றொரு வகையான சொத்தாக மாற்றப்பட்டிருந்தால், அவ்வுயில்வழிக் கொடை வறிதானதாகும் (adeemed); அதாவது உயிலின் செயலாக்கத்திலிருந்து அதன் கருப் பொருள் (உயில்வழிக் கொடைச் சொத்து) திரும்பப் பெறப்பட்டதன் காரணமாக, அவ்வுயில்வழிக் கொடை செயற்படாது போதலாகும்.

மேற்கண்ட விளக்கத்திலிருந்து 'கொடைகளை வறிதாக்கல்' என்பது கொடுத்த கொடையினைச் செயலிழக்கச் செய்தல் என நாமறியலாம்.

வறிதாக்கல் வகைகள்: வறிதாக்கல் இரு வகைப்படும். அவை 1. விருப்பாவணமளித்தவரின் எண்ணத்தினாலோ செயலினாலோ கொடை வறிதாகுதல்; 2. இயற்கையின் செயலினால் கொடை வறிதாகுதல்.

எடுத்துக்காட்டுகள்: (1) A என்பவர் வைர மோதிரம் ஒன்றை B என்பவருக்குக் கொடையாக விருப்பாவணம் (உயில்) எழுதி வைக்கிறார். ஆனால் அவர் அதனை அவரது வாழ்நாளில் C என்பவருக்கு விற்றுவிடுகிறார் அல்லது கொடுத்து விடுகிறார். இங்கு மேற்படி C என்பவர் அவ்வைர மோதிரத்தை உயில் வழிக் கொடையாக அடைய முடியாது. ஏனெனில் இங்கு விருப்பாவணமளித்த A–யின் செயலினால் அக்கொடை வறிதாகிவிட்டது. அதாவது செயலிழந்துவிட்டது.

(2) A என்பவர் சரக்குகள் அடங்கிய சில மூட்டைகளை B என்பவருக்கு உயில்வழிக் கொடையாக அளிக்கிறார். ஒரு கடற் பயணத்தின் பொழுது, அவற்றை A தம்முடன் எடுத்துச் செல்கிறார். அவர் சென்ற கப்பலும், அம்மூட்டைகளும் கடலில் மூழ்கி தொலைந்து போகின்றன; A–ம் கடலில் மூழ்கி விடுகிறார். இங்கு அவர் கொடுத்த உயில்வழிக் கொடை இயற்கைச் செயலினால் வறிதாகிறது.

19. Doctrine of Election - Write short notes. (தேர்ந்து கொளல் வரைவுக் கோட்பாடு – சிறு குறிப்பு வரைக.)

சட்டப்பிரிவு: தேர்ந்து கொளல் வரைவுக் கோட்பாடு குறித்து இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் **180–வது பிரிவு** பின்வருமாறு விளக்குகிறது. அதன்படி.

கோட்பாட்டின் விளக்கம்: விருப்பாவணம் கொடுத்தவர், தம்முடைய உயிலின் மூலமாகத் தம்முடையதல்லாத வேறொருவருடைய சொத்திற்கு வகை செய்து (dispose of), அவ்வேறொருவருக்கு அவ்வுயிலின் மூலமாகவே தம்முடைய சொத்தொன்றின் பயனைக் கொடுத்தால், அவ்வேறொருவர் அவ்வுயில்

வழிப் பயனைப் பெற்றுக் கொண்டு, தம்முடைய சொத்தினை விருப்பாவணம் கொடுத்தவர் தமது உயிலில் வகுத்தமைத்துள்ளபடி, கைவிட வேண்டும் அல்லது அவ்வுயில்வழிப் பயனைப் பெற்றுக் கொள்ளாமல் தம்முடைய சொத்தினையே வைத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு இவ்விரண்டிலொன்றை அவர் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். இதைத்தாம் நாம், **'தேர்ந்து கொளல் வரைவுக் கோட்பாடு'** என்றுரைக்கிறோம்.

நிபந்தனைகள்: இக்கோட்பாடு செயல்பட பின்வரும் இரண்டு நிபந்தனைகள் பூர்த்தியாகியிருக்க வேண்டியது அவசியமாகும். அவை (1) இரண்டு சொத்துகள் இருக்க வேண்டும்; (2) அவைகளில் ஒன்று விருப்பாவணமளிப்பவருக்கு சொந்தமாகவும், மற்றொன்று உயில் வழிப் பயனடைபவருக்குச் சொந்தமாக இருக்க வேண்டும்.

எடுத்துக்காட்டு: இராமன் என்பவர் **கிருஷ்ணன்** என்பவருக்குச் சொந்தமான ஒரு சொத்தை **முருகன்** என்பவருக்கு தனது உயில் வழியாகக் கொடுக்கிறார். அதே உயிலில் தனக்குச் சொந்தமான ஒரு சொத்தை **கிருஷ்ணன்** என்பவருக்குக் கொடுக்கிறார். இங்கு மேற்படி **கிருஷ்ணன்** என்பவருக்கு உயில் வழியாக அளிக்கப்படும் சொத்தினை அவர் தன்னுடைய சொத்தை **முருகன்** என்பவருக்கு விட்டுக் கொடுத்தால்தான் பெற வேண்டும் என்ற நிபந்தனை அவ்வுயிலில் விதிக்கப்படுகிறது. எனவே அவரது உயிலின்படி **கிருஷ்ணன்** என்பவர் தமக்குக் கொடுக்கப்பட்ட சொத்தை எடுத்துக் கொண்டு, தம் சொத்தை **முருகன்** என்பவருக்குக் கொடுப்பதா அல்லது தம் சொத்தை தாமே வைத்துக் கொண்டு **இராமன்** என்பவரால் அளிக்கப்படும் சொத்தை வேண்டாம் என்று விட்டுவிடுவதா என்பதை அவரே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

20. Donatio Mortis Causa - Write short notes. (இறக்குந் தறுவாயில் செய்யப்பட்ட கொடை – சிறு குறிப்பு வரைக.)

பொது விளக்கம்: 'கொடை' என்பது உயிரோடிருக்கும் இரு நபர்களிடையே எவ்வித மறுபயனுமின்றி ஒரு சொத்தை அவர்களில் ஒருவர் மற்றொருவருக்கு கொடுக்கும் செயலாகும். இறக்கப் போகும் நாள் இன்றோ, நாளையோ என்று மரணத்தின் விளிம்பில் (அதாவது இறக்குந் தறுவாயில்) நின்றிருக்கும் ஒரு நபர் கூட தனது அசையும் சொத்துக்களை கொடையாகக் கொடுக்கலாம். இதுவே இறக்குந் தறுவாயில் செய்யப்பட்ட கொடை எனப் படுகிறது. இதனை இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் **191–வது பிரிவு** பின்வருமாறு விளக்குகிறது.

பிரிவு 191 கூறும் விளக்கம்: (1) மரணத்தை எதிர்நோக்கியுள்ள ஒரு மனிதன் உயில் மூலம் வகை செய்ய இயலக் கூடிய தன்னுடைய அசையும் சொத்து எதையும் கொடையாகக் கொடுக்கலாம்.

(2) நோய்வாய்பட்டு, அதன் காரணமாக இறப்பை விரைவில் எதிர் நோக்கியிருக்கும் ஒரு மனிதன், அந்த நோயினால் இறக்கும் நேர்வில் ஒரு கொடையாக வைத்துக் கொள்ளும் பொருட்டு தனது அசையும் சொத்து எதனின் உடைமையையும் மற்றொருவருக்கு மாற்றிக் கொடுத்தால், அது இறக்குந் தறுவாயில் செய்யப்பட்ட கொடை எனப்படுகிறது.

(3) அத்தகு கொடையானது, அதனை கொடுத்தவரால் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படலாம்; மேலும் எந்நோயின் பொழுது கொடை கொடுக்கப்பட்டதோ, அதிலிருந்து அவர் மீண்டு வந்துவிட்டால் அல்லது யாருக்கு கொடை அளிக்கப்பட்டதோ அவர் கொடை கொடுத்தவருக்கு முன்னதாக இறந்துவிட்டால், அக்கொடை அமலுக்கு வராது. அதாவது செயலிழக்கும்.

இறக்குந் தறுவாயில் இருப்பவர் அளிக்கும் கொடையினை உரோம் நாட்டுச் சட்டத்தில் ***'Donatio Mortis Causa'*** என்றழைப்பர்.

நிபந்தனைகள்: இறக்குந் தறுவாயில் உள்ள ஒருவர் கொடுக்கும் கொடை அமலுக்கு வர பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தியாகியிருக்க வேண்டும்.

1. கொடையாளி உயில்வழியாக (அதாவது விருப்பாவணத்தின் மூலம்) வகுத்தமைக்கக் கூடிய அசையும் சொத்தாக, அச்சொத்து இருக்க வேண்டும்.

2. இறக்குந் தறுவாயில் இருக்கும் ஒருவர் கொடையினைக் கொடுக்க வேண்டும்.

3. கொடையாளி இறந்த பின்னர்தான் கொடை செயல்படும் என்ற நிபந்தனையோடு அக்கொடை கொடுக்கப்பட வேண்டும். கொடையாளி இறக்க வேண்டும். அந்நோயிலிருந்து நலமடைந்தாலோ, கொடை பெறுநரைக் காட்டிலும் நீண்ட காலம் வாழ்ந்தாலோ அல்லது கொடையாளி இறப்பதற்கு முன் கொடை பெறுநர் இறந்துவிட்டாலோ அக்கொடை செயல்படாது.

4. கொடைப் பொருள் கொடை பெறுநரின் வசத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும். கொடையாளி கொடைப் பொருளை ஒப்படைக்கும் போது உடைமையை மட்டும் கொடுப்பதல்லாமல், அதன் மீது தான் கொண்டிருந்த உரிமையையும் கொடுத்துவிட வேண்டும்.

5. கொடையாளி நோய் நீங்கி நலம் பெற்றால், கொடைப் பொருளைத் திரும்பக் கொடுத்துவிட வேண்டும் என்ற நிபந்தனையோடு கொடை கொடுக்கப்பட வேண்டும்.

வாய்ச்சொல் மூலமாக அல்லது எழுத்து மூலமாக இறக்குந் தறுவாயில் கொடையினை பதிவின்றிக் கொடுக்கலாம். உடைமை ஒப்படைப்பு மட்டும் மிகமிக இன்றியமையாததாகும்.

-oOo-

5 இறந்தவரின் சொத்தைப் பாதுகாத்தல் [Protection of Property of the Deceased]

21. Protection of Property of the Deceased - Write short notes. (இறந்தவரின் சொத்துக்களைப் பாதுகாத்தல் – சிறு குறிப்பு வரைக.)

இறந்தவரின் சொத்தை எம்முறையில் பாதுகாப்பது என்பது குறித்து இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் **192 முதல் 210 வரையுள்ள பிரிவுகள்** விளம்புகின்றன.

இறந்தவரின் வாரிசுகளைக் குறித்துச் சந்தேகம் தோன்றினால் அப்பிரச்சனை தீரும்வரை இறந்தவரின் சொத்தினை அவர்களுக்குப் பிரித்துத் தர இயலாது. ஆகையால் நீதிமன்றத்தின் ஆணைப்படி தற்காலிகமாக யாராவது ஒருவர் அச்சொத்தின் பாதுகாப்புப் பொறுப்பை ஏற்று, இறுதித் தீர்ப்பு வரும்வரை அதனைப் பாதுகாத்து வரலாம்.

இறந்தவரின் அசையும், அசையாச் சொத்துக்களை அடைய, அச் சொத்துக்கள் அமைந்துள்ள மாவட்டத்தின் நீதிபதிக்குச் (District Judge), அது பற்றி விண்ணப்பிக்க வேண்டும். யாராவது இறந்தவருடைய சொத்தினை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தால், அது பற்றி நீதிமன்றம் விசாரித்துத் தீர்ப்பளிக்கும். இத்தீர்ப்பே இறுதியானதாகும். இதற்கு மேல்முறையீடு இல்லை.

இறந்தவரின் வாரிசுகளுக்குச் சொத்தை பிரித்துத் தருவதில் காலதாமதம் ஏற்படுமென்றால், நீதிமன்றம் சொத்துக்களை பாதுகாக்க ஒரு பொறுப்பாளரை (Curator) நியமிக்கலாம். இவரது நியமனம் வேண்டி, சொத்தின் உரிமையாளர் இறந்து போன தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் மாவட்ட நீதிபதியிடம் விண்ணப்பிக்க வேண்டும். இந்தப் பொறுப்பாளர் அச்சொத்துக்களைப் பாதுகாக்க அதிகாரம் பெற்றவராவார். அவருக்கு அச்சொத்தின் மீது கடமைகளும் ஏற்படுகின்றன. இதற்கு ஊதியமாக மேற்படி சொத்தின் ஆண்டு வருமானத்தின் 5 சதவீதம் அவருக்கு ஊதியமாக அளிக்கப்படும். அவர், மேற்படிச் சொத்தின் எல்லாக் கணக்குகளையும் அச்சொத்து அமைந்துள்ள மாவட்ட நீதிபதியின் முன் வைக்க வேண்டும். இவ்வாறு கணக்குகளை முன் வைப்பதில் அப்பொறுப்பாளர் தவறுகை ஏதும் புரிந்தால், அத்தகு தவறுகை ஒவ்வொன்றுக்கும் அவருக்கு ரூபாய் 1000/– வரையிலான அபராதத்தை மாவட்ட நீதிபதி விதிக்கலாம்.

-oOo-

6 இறந்தவரின் சொத்தை நிருவகித்தல் [Administration of Assests of the Deceased]

பொதுவாகத் தெரிந்து கொள்ள வேண்டியவை

உயில்வழி வாரிசுரிமை அல்லது உயில்இல்வழி வாரிசுரிமை எதுவாக இருப்பினும், விருப்பாவணம் கொடுத்தவர் இறந்தவுடன் சொத்துக்களின் உரிமை வாரிசுகளைச் சென்றடையும். ஆனால் அவற்றின் உடைமை பின்புதான் தரப்படும். வாரிசுகளிடம் உடைமை ஒப்படைப்புச் செய்யப்படும் வரை அச்சொத்துக்கள் பராமரிக்கப்பட்டு நிருவகிக்கப்பட வேண்டும். அப்படிச் செய்யப்படாவிட்டால் அச்சொத்துக்கள் வாரிசுகளைச் சென்றடைய முடியாது. எனவே சொத்து நிருவாகம் அவசியமானதாகும்.

இறந்தவர் விட்டுச் சென்ற சொத்துக்களின் நிருவாகப் பொறுப்பை ஏற்பவர்களை பின்வரும் இரு வகையாகப் பிரிக்கலாம். அவர்கள் 1. நிறைவேற்றாளர்கள் (Executors); 2. நிருவாகிகள் (Administrators). இவர்களை இறந்தவரின் பிரதிநிதிகள் என்றும் கூறலாம். ஒருவர் இறந்தவுடன் அவரது சொத்துக்கள் அனைத்தும் இப்பிரதிநிதிகளைத்தான் முதலில் சென்றடையும். சொத்துக்களை விட்டு இறந்தவர் ஓர் உயிலையும் எழுதி, அவ்வுயிலில் ஒரு நிறைவேற்றாளரையும் நியமித்திருந்தால் சொத்துக்கள் அந்நிறைவேற்றாளரைச் சென்றடையும். இறந்தவர் உயில் எழுதாமல் இறந்திருப்பின், நீதிமன்றம் நியமிக்கும் நிருவாகியைச் சென்றடையும்.

ஒன்றுக்கு மேற்பட்ட நிறைவேற்றாளர்கள் இருப்பின் சொத்துக்கள் அனைத்தும் முழுமையாக எல்லா நிறைவேற்றாளர்களையும் சேர்த்துச் சென்றடையும். இறந்தவரின் சொத்தை நிருவகிக்க நிறைவேற்றாளர் **உயில் மெய்ப்பிதழ் (Probate)** பெற வேண்டும். உயிலில் எவரையும், அதனை எழுதி வைத்தவர் நிறைவேற்றாளராக நியமிக்கப்படாதபட்சத்தில், நீதிமன்றம் ஒரு நிருவாகியை நியமித்து, அவருக்கு **நிருவாக உரிமைப் பத்திரம் (Letters of Administration)** வழங்கும். மேற்கண்ட இருவருக்கும் சில உரிமைகளும், கடமைகளும், அதிகாரங்களும் உள்ளன. இவையனைத்தையும் நாம் அடுத்து வரும் வினாக்களில் விரிவாகக் காண உள்ளோம்.

[i] உயில் மெய்ப்பிதழ் [Probate]

22. What is probate? To whom it can be granted? State the effects of the grant of probate. (உயிலின் மெய்ப்பிதழ் என்பது யாது? யாருக்கு உயிலின் மெய்ப்பிதழ் வழங்கலாம்? அப்படி வழங்குவதின் விளைவுகளை கூறுக.)

(அல்லது)

What is probate? To whom probate could be granted? (உயில் மெய்ப்பிதழ் என்றால் என்ன? யாருக்கு உயிலின் மெய்ப்பிதழ் வழங்கப் படுகிறது?)

(அல்லது)

"Probate shall be granted to an executor appointed in will"- Explain. ("உயில் மெய்ப்பிதழ், உயிலில் நியமிக்கப்பட்ட நிறை வேற்றாளருக்கே வழங்கப்படல் வேண்டும்" – விளக்குக.)

(அல்லது)

What is a Probate and who cannot be given Probate? (உயில் மெய்ப்பிதழ் என்றால் என்ன? உயில் மெய்ப்பிதழ் யாருக்கு கொடுக்க வியலாது?)

(அல்லது)

Grant of Probate - Write short notes. (உயில் மெய்ப்பிதழ் வழங்குதல் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Probate - Write short notes. (உயில் மெய்ப்பிதழ் – சிறு குறிப்பு வரைக.)

உயில் மெய்ப்பிதழ் - விளக்கம்:

உயில் வழியில் இறந்து போனவர் விட்டுச் சென்ற சொத்துக்களை நிருவகிக்கும் உரிமையளித்து, நீதிமன்றத்தின் முத்திரையிட்டுக் கொடுக்கப்படும் சான்றளிக்கப்பட்ட உயிலின் நகலே, உயில் மெய்ப்பிதழாகும்.

உயில் மெய்ப்பிதழை யாருக்கு வழங்கலாம்?

நிறைவேற்றாளருக்கே கொடுத்தல் வேண்டும்: ஒருவர் தனது உயிலில், தனது இறப்பிற்குப் பிறகு, அந்த உயிலில் கண்டுள்ள சரத்துக்களை எவர் நிறைவேற்ற வேண்டும் என்று அவரது பெயரைக் குறிப்பிட்டு எழுதுவரானால்,

அவர் **'நிறைவேற்றாளர்' (Executor)** என்றழைக்கப்படுகிறார். இவர் இறந்து போனவரின் உயிலில் கண்டுள்ள சரத்துக்களின்படி, அவரது சொத்துக்களை அவ்வுயில்வழி உரிமை பெறுபவர்களுக்கு பிரித்து அளிப்பார்; அவ்வாறு பிரித்துக் கொடுக்கும் வரையில் அவரது சொத்தை நிருவாகம் செய்வார். ஆனால் இவ்வாறு செயல்படும் முன்பாக, நிறைவேற்றாளர் மாவட்ட நீதிபதி நீதிமன்றத்தில் மனுச் செய்து, **'உயில் மெய்ப்பிதழ்' (Probate)** ஒன்றைப் பெற வேண்டும். இந்த ஆவணம்தான் நாம் முன் சென்ற பத்தியில் கண்டவாறு, அவர் எவ்வுயிலின் வாயிலாக நியமனம் செய்யப்பட்டுள்ளரோ, அவ்வுயிலையும், அவரது நியமனத்தையும் அதிகாரபூர்வமாக ஊர்ஜிதம் செய்கிறது. எனவே உயிலில் நியமனம் செய்யப் பட்டுள்ள நிறைவேற்றாளருக்கே, உயில் மெய்ப்பிதழ் வழங்கப்பட வேண்டும் என்பது தெளிவாகிறது. இதைத்தான் இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் **222–வது பிரிவு** பின்வருமாறு கூறுகிறது. அதன்படி,

(1) உயில்வழியாக நியமனம் செய்யப்பட்டுள்ள நிறைவேற்றாளருக்கு மட்டுமே உயில் மெய்ப்பிதழ் வழங்கப்படுதல் வேண்டும். (Probate shall be given only to an executor appointed by the Will).

(2) அந்நியமனம் அவ்வுயிலில் வெளிப்படையாக அல்லது அவசியத்தின் காரணமாக உட்கிடையாக செய்யப்பட்டிருக்கலாம். (The appointment may be expressed or by necessary implication).

எடுத்துக்காட்டாக, A என்பவர் தனது உயிலில் B என்பவர் நிறை வேற்றாளராக செயல்படாவிட்டால், C என்பவரே தனது நிறைவேற்றாளர் என்று குறிப்பிடுகிறார். இங்கு B என்பவர் அவசியத்தின் காரணமாக உட்கிடையாக நிறைவேற்றாளராக நியமனம் செய்யப்பட்டவர் ஆவார்.

எனவே, உயில் மூலமாக நியமிக்கப்பட்ட நிறைவேற்றாளருக்கே உயில் மெய்ப்பிதழ் அளிக்கப்படுதல் வேண்டும் (Probate shall be granted to an executor appointed in will). ஏனெனில் மேற்சொன்னவாறு, உயிலிலேயே தெளிவாக அல்லது உட்கிடையாக இன்னார்தான் நிறைவேற்றாளராக நியமிக்கப் பட வேண்டும் என விருப்பாவணம் அளித்தவர் (உயில் எழுதியவர்) தம் விருப்பத்தினை குறிப்பிட்டிருக்கும் பொழுது, மற்றொருவரை நிறைவேற்றாளராக நியமித்தல் கூடாது.

பலர் நிறைவேற்றாளராக நியமிக்கப்பட்டிருப்பின்: விருப்பாவணம் அளித்தவர் பலரை தனது உயிலுக்குரிய நிறைவேற்றாளராக நியமித்திருந்தால், அவர்கள் அனைவருக்கும் ஒரே நேரத்தில் அல்லது வேறுபட்ட பல நேரங்களில் உயில் மெய்ப்பிதழ் வழங்கப்படலாம், என்று **பிரிவு 224** கூறுகிறது.

உயிலிணைப்பு (Codicil) இருப்பின்: (1) உயில் மெய்ப்பிதழ் வழங்கப் பட்ட பின்னர் உயிலிணைப்பு ஒன்று கண்டறியப்பட்டால், அவ்வுயிலிணைப்பிற்கென

தனியாக ஒரு உயில் மெய்ப்பிதழ் ஒன்றை மூல உயிலின் வழியாக நியமனம் செய்யப்பட்டுள்ள நிறைவேற்றாளருக்கு வழங்கலாம். ஆனால் அவ்வுயிலிணைப்பின் வழியாக அந்நிறைவேற்றாளரின் நியமனம் இரத்து செய்யப்பட்டிருத்தல் கூடாது.

(2) மூல உயிலின் வழியாக நியமனம் செய்யப்பட்ட நிறைவேற்றாளர் களிலிருந்து மாறுபட்ட நிறைவேற்றாளர்கள் உயிலிணைப்பில் நியமனம் செய்யப் பட்டிருந்தால், மூல உயிலுக்காக வழங்கப்பட்ட உயில் மெய்ப்பிதழ் இரத்து செய்யப்படும். உயில், உயிலிணைப்பு ஆகிய இரண்டிற்கும் சேர்த்து ஒரு புதிய உயில் மெய்ப்பிதழ் வழங்கப்படும். இவ்வாறு **பிரிவு 225** கூறுகிறது.

பல நிறைவேற்றாளர்களில் ஒருவர் இறந்துவிட்டால்: பல நிறை வேற்றாளர்களுக்கு உயில் மெய்ப்பிதழ் வழங்கப்பட்டு, அவர்களில் ஒருவர் இறந்து விட்டால், விருப்பாவணமளித்தவரின் பிரதிநிதித்துவம் முழுவதும் உயிருடன் உள்ள நிறைவேற்றாளர் அல்லது நிறைவேற்றாளர்களைச் சென்றடையும் என்று **பிரிவு 226** கூறுகிறது.

உயில் மெய்ப்பிதழை யாருக்கு வழங்குதல் கூடாது?

உரிமை வயது அடையாத இளவர் மற்றும் சித்தம் கலங்கியவருக்கு உயில் மெய்ப்பிதழ் வழங்கப்படக் கூடாது; அதுபோல், நிறுவனமல்லாத பல நபர்கள் அடங்கிய சங்கத்திற்கும் வழங்கப்படக் கூடாது என்று **பிரிவு 223** கூறுகிறது.

உயில் மெய்ப்பிதழை வழங்க காலவரையறை :

விருப்பாவணமளித்தவர் அல்லது உயில் இல்வழியில் இறந்தவர், இறந்த தினத்திலிருந்து ஏழு முழு தினங்கள் முடிவுறும் வரை உயில் மெய்ப்பிதழ் வழங்கப்படக் கூடாது. அதாவது அவர் இறந்த தினத்திலிருந்து ஏழு தினங்கள் முடிவுற்ற பின்னரே உயில் மெய்ப்பிதழ் வழங்கப்பட வேண்டும், என்று **பிரிவு 293 –ன் முதற்பகுதி** குறிப்பிடுகிறது.

உயில் மெய்ப்பிதழ் வழங்குவதால் ஏற்படும் விளைவு :

ஓர் உயிலின், உயில் மெய்ப்பிதழ் அவ்வுயிலை விருப்பாவணமளித்தவர் இறந்த சமயத்தினின்று நிரூபித்து நிலை நிறுத்திச் செயல்படச் செய்கிறது. விருப்பாவணமளித்தவரின் சொத்துக்கள் அனைத்தும் உடனடியாக நிறை வேற்றாளரைச் சென்றடைகிறது. இடைப்பட்ட நாளில் சொத்துக்களை நிருவகிப்ப தால் அவர் செய்த இடைச் செயல்கள் அனைத்தையும் உயில் மெய்ப்பிதழ் செல்லுபடியாக்குகிறது என **பிரிவு 227** கூறுகிறது.

பிரிவு 264–ன்படி, உயில் மெய்ப்பிதழைப் பெற, அவ்வுயிலில் நியமனம் செய்யப்பட்ட நிறைவேற்றாளர் மாவட்ட நீதிபதியிடம் மனுச் செய்ய வேண்டும். அந்நீதிபதிக்குத்தான் அதை வழங்க அல்லது இரத்து செய்ய அதிகாரவரம்பு உண்டு.

23. *Executor-de-son-tort* - Write short notes. (தான் தோன்றி நிறைவேற்றாளர் – சிறு குறிப்பு வரைக.)

விளக்கம்: தான் தோன்றி நிறைவேற்றாளர் என்பவர் தாமாகவே முன் வந்து நிறைவேற்றாளர் பொறுப்பினை ஏற்றுக் கொள்பவர்.

இவரது நியமனம்: விருப்பாவணமளித்தவர் இவரை தனது உயிலுக்குரிய நிறைவேற்றாளராக நியமனம் செய்வதில்லை. மேலும் இவர் நீதிமன்றத்தின் வாயிலாக அதிகாரம் பெற்றவருமல்லர். இறந்தவரின் சொத்துக்களில் தலையிடுவதன் மூலம் தம் மீது நிறைவேற்றாளரின் பொறுப்பினைச் சுமத்திக் கொள்பவர். இறந்தவரின் சொத்துக்களில் தலையிடும் அனைவரையும் தான் தோன்றி நிறைவேற்றாளர் எனக் கூறிவிட இயலாது. இதற்கு சில விதிவிலக்குகள் உண்டு.

விதிவிலக்குகள்: (1) இறந்தவரின் சொத்துக்களைப் பாதுகாக்கவும், அவரது குடும்பத்தினருக்கு வேண்டிய உடனடித் தேவைகளைக் கவனிப்பதற்கும், இறந்தவரின் ஈமச் சடங்குகளைச் செய்யவும் முன் வருபவரைத் தான் தோன்றி நிறைவேற்றாளர் எனக் கூறவியலாது;

(2) மற்றவர்களிடமிருந்து இறந்தவருக்கு வரும் சொத்துக்களை நடைமுறையில் கையாளும் ஒருவரை தான் தோன்றி நிறைவேற்றாளர் என்று கூற முடியாது.

யார்தான் தான் தோன்றி நிறைவேற்றாளர்? : ஒருவர் இறந்தவரின் சொத்துக்களைப் பயன்படுத்தினாலோ, அவற்றை யாருக்காவது கொடுத்து விட்டாலோ, விற்றுவிட்டாலோ, இறந்தவரிடமிருந்து தனக்கு வர வேண்டிய கடன்களுக்காக அல்லது உயில்வழிக் கொடைக்காக எடுத்துக் கொண்டாலோ, இறந்தவருக்கு வர வேண்டிய கடன்களை வசூலித்தாலோ, அவர் 'தான் தோன்றி நிறைவேற்றாளர்' எனப்படுவார்.

பொறுப்புகள்: (1) தனது வசத்தில் வந்த இறந்தவரின் சொத்துக்களுக்கு, தான் தோன்றி நிறைவேற்றாளர் கணக்கு ஒப்படைக்கப் பொறுப்புடையவர் ஆவார். (2) சொத்தினை நிருவாகம் செய்வதில் ஏற்பட்ட செலவினங்களையும், நியாயப்படி அவர் செய்த செலவினங்களையும் இறந்தவரின் சொத்தினின்று அவர் எடுத்துக் கொள்ளலாம். (3) அவர் வசத்திலிருக்கும் இறந்தவரின் சொத்துக்களின் மதிப்பீட்டளவிற்கு இறந்தவரின் கடன்காரர்களும், கொடை பெறுநரும் தங்களுக்குச் சேர வேண்டிய தொகைகளுக்காக, தான் தோன்றி நிறைவேற்றாளர் மீது வழக்குத் தொடரலாம்.

இவ்வாறு தான் தோன்றி நிறைவேற்றாளருக்கு பொறுப்புகள் உள்ளதே தவிர, எவ்வித சலுகைகளும் கிடையா.

[ii] நிருவாக உரிமைப் பத்திரம் [Letters of Administration]

24. To whom should the letters of administration be granted? Under what circumstances can such a grant be revoked or annulled? (நீதிமன்றம் அளிக்கும் நிருவாக உரிமைப் பத்திரம் யாருக்கு வழங்கப்படுதல் வேண்டும்? என்ன சூழ்நிலைகளில் அது நீக்கப்படவோ அல்லது இரத்து செய்யப்படவோ முடியும் ?)

(அல்லது)

Letters of Administration - Write short notes. (நிருவாக உரிமைப் பத்திரம் – சிறு குறிப்பு வரைக.)

நிருவாகியும், நிருவாக உரிமைப் பத்திரமும் :

ஒருவர் உயிலை எழுதி வைத்து, அதில் சொத்துக்களை நிருவகிக்க ஒரு நிறைவேற்றாளரை நியமித்திருந்தால், அவரது சொத்துக்களைப் பிரிப்பதில் எவ்வித பிரச்சனையும் கிடையாது. ஆனால், அவர் உயில் ஏதும் எழுதாமல் இறந்து போனால் அல்லது உயில் எழுதி வைத்து நிறைவேற்றாளரை நியமிக்காமல் இறந்து போனால், பிரச்சனைகள் பல தோன்றும். இம்மாதிரியான தருணத்தில், இறந்து போனவருடைய சொத்துக்களை நிருவகிக்கும் பொருட்டு நிருவாக உரிமைப் பத்திரமளித்து (Letters of Administration) நீதிமன்றம் ஒருவரை அவரது மனுவின் பேரில் நியமிக்கும். அவரே நிருவாகி (Administrator) எனப்படுவார்.

நிருவாக உரிமைப் பத்திரம் யாருக்கு வழங்கப்படலாம் ?

இறந்து போனவர், ஒரு இந்துவாக, இசுலாமியராக, பௌத்தராக, சீக்கியராக அல்லது ஜைனராக அல்லது விலக்களிக்கப்பட்ட நபராக இருக்கும் நேர்வில்:

இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் **278**–வது பிரிவு, இது குறித்து விளக்குகிறது. அதன்படி,

1. ஒருவர் உயில் இல்வழியில் இறந்து போயிருந்து, அவர் ஒரு இந்துவாக, இசுலாமியராக, பௌத்தராக, சீக்கியராக அல்லது ஜைனராக அல்லது விலக்களிக்கப்பட்ட நபராக இருப்பின், அத்தகு இறந்தவரின் நேர்விற்குப் பொருந்தக் கூடிய சொத்து பங்கீட்டு விதிகளின்படி, அவரது சொத்து முழுவதையும் அல்லது அதன் பகுதியைப் பெற உரிமையுடைய எந்நபருக்கும் அவரது சொத்தின் நிருவாக உரிமைப் பத்திரத்தை வழங்கலாம்.

2. அத்தகு நபர்கள் பலர் நிருவாக உரிமைப் பத்திரம் வேண்டி

நீதிமன்றத்திடம் மனுச் செய்யும் பொழுது, அவர்களில் ஒருவருக்கு அல்லது அதிகமானவர்களுக்கு நிருவாக உரிமைப் பத்திரத்தை வழங்குதல் நீதிமன்றத்தின் தன்விருப்புரிமைக்குட்பட்டதாகும். (in the discretion of the Court). அதாவது அவர்களில் யாருக்கு வேண்டுமானலும் நிருவாக உரிமைப் பத்திரத்தை நீதிமன்றம் தன்உசிதம் போல் வழங்கலாம்.

3. மேற்கண்டவாறு யாரும் மனுச் செய்யாது போனால், இறந்தவருக்கு கடன் கொடுத்த ஒருவருக்கு நிருவாக உரிமைப் பத்திரம் வழங்கப்படலாம்.

இறந்து போனவர், ஒரு இந்துவாக, இசுலாமியராக, பௌத்தராக, சீக்கியராக அல்லது ஜைனராக அல்லது விலக்களிக்கப்பட்ட நபராக இல்லாதிருக்கும் நேர்வில்:

இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் 279–வது பிரிவு, இது குறித்து விளக்குகிறது. அதன்படி,

1. ஒருவர் உயில் இல்வழியில் இறந்து போயிருந்து, அவர் ஒரு இந்துவாக, இசுலாமியராக, பௌத்தராக, சீக்கியராக அல்லது ஜைனராக அல்லது விலக்களிக்கப்பட்ட நபராக இல்லாதிருப்பின், திருமணத்தின் மூலம் அல்லது இரத்தத் தொடர்பின் மூலம் அவருடன் தொடர்புடைய எவரும், அவரது சொத்தின் நிருவாக உரிமைப் பத்திரத்தைப் பெற உரிமையுடையவர்கள். இவ்வுரிமை, பின்வரும் விதிகளின்படியிலான வரிசைக்கிரமத்தின்படி செயலாகிறது.

(a) இறந்து போனவரின் விதவைக்கு முதலில் வழங்கப்பட வேண்டும். ஆனால் அவள், அவளது சில தனிப்பட்ட தகுதியின்மை காரணமாக அல்லது இறந்து போனவரின் சொத்தில் அவளுக்கு பாத்தியம் ஏதுமில்லை எனும் காரணத்தால், நிருவாக உரிமைப் பத்திரம் பெறுவதிலிருந்து விலக்கப்பட வேண்டியவள் எனும் முடிவிற்கு நீதிமன்றம் வருதல் கூடாது.

(i) அவ்விதவை திட சித்தமற்றவள் அல்லது பிறன்மனைப் புணர்ச்சி புரிந்தவள் அல்லது அவளது கணவரின் சொத்தில் உள்ள அனைத்து பாத்தியமும் அவளது திருமணத்தின் வாயிலாக தீர்க்கப் பெற்றவள் என்பதால் தடை செய்யப் பட்டவள் ஆகியவை அவளுக்கு நிருவாக உரிமைப் பத்திரம் வழங்குவதிலிருந்து விலக்கி வைப்பதற்குரிய காரணங்களாகும்.

(ii) அவ்விதவை மறுமணம் புரிந்து கொண்டவள் என்பது அவளுக்கு நிருவாக உரிமைப் பத்திரம் வழங்குவதிலிருந்து விலக்கி வைக்க ஒரு சிறந்த காரணமாகாது.

(b) நீதிபதி உகந்ததெனக் கருதினால், விதவை யாரும் இல்லையெனில், அங்கு எந்நபர்கள் இறந்தவரின் சொத்து முழுவதையும் நிருவாகம் செய்யும் உரிமை பெற்றவர்களாக இருப்பார்களோ அவர்களை அவ்விதவைக்கு துணையாக செயலாற்றும்படிச் செய்யலாம்.

(c) அங்கு இறந்தவருக்கு விதவை யாரும் இல்லையெனில், அல்லது நிருவாக உரிமைப் பத்திரம் வழங்குவதிலிருந்து விதவையை விலக்குவதற்குண்டான காரணத்தை நீதிமன்றம் அறியுமானால், உயில்இல்வழியில் இறந்து போன ஒருவரின் சொத்துப் பங்கீட்டு விதிகளின்படி அச்சொத்திற்கு பயனடைய உரிமை பெற்ற எந் நபர்களுக்கும் நீதிமன்றம் நிருவாக உரிமைப் பத்திரத்தை வழங்குதல் வேண்டும்.

இருப்பினும் அவ்வாறு உரிமை பெற்றவர்வர்களில் இறந்து போனவரின் தாயாரும் ஒருவராக இருப்பின், அவளே அச்சொத்து முழுவதையும் நிருவகிக்கும் உரிமை பெற்றவள் ஆவாள்.

(d) இறந்தவருடன் சம நிலையில் நெருங்கிய உறவினராக இருப்பவர்கள், இறந்து போனவரின் சொத்தை நிருவகிக்க சம அளவில் உரிமை பெற்றவர்கள்.

(e) கணவனை விட்டு இறக்கும் மனைவியின் சொத்தை, அவளது கணவனே நிருவகிக்க உரிமை பெற்றவன். இங்கு கணவனின் சொத்தை நிருவகிக்க அவனது விதவைக்குப் பொருந்தும் அதே உரிமைகள், கணவனுக்கும் பொருந்துகிறது.

(f) திருமணம் அல்லது இரத்தத் தொடர்பின் மூலம் இறந்தவருடன் தொடர்புடைய, நிருவாக உரிமைப் பத்திரம் பெற உரிமை படைத்த மற்றும் நிருவாகியாக செயல்பட விருப்பமுடைய எவரும் அங்கு இல்லையெனில், அப்பத்திரம் இறந்தவருக்கு கடன் கொடுத்தவருக்கு வழங்கப்படலாம்.

(g) உயில்வழி மற்றும் உயில் இல்வழி வாரிசுரிமை தொடர்பான சட்டமானது, இந்திய நாட்டின் அத்தகு சட்டத்துடன் வேறுபட்டு நிற்கும் ஒரு நாட்டை, இறந்து போனவர் தனது வாழ்வகமாகக் கொண்டிருந்த போதிலும், அவர் இந்தியாவில் சொத்தை விட்டு இறந்திருந்தால், மேற்சென்ற விதிகளின்படியே நிருவாக உரிமைப் பத்திரம் வழங்கப்படும்.

நிருவாக உரிமைப் பத்திரத்தை யாருக்கு வழங்குதல் கூடாது?

உரிமை வயது அடையாத இளவர் மற்றும் சித்தம் கலங்கியவருக்கு நிருவாக உரிமைப் பத்திரம் வழங்கப்படக் கூடாது; அதுபோல், நிறுவனமல்லாத பல நபர்கள் அடங்கிய சங்கத்திற்கும் வழங்கப்படக் கூடாது என்று பிரிவு 236 கூறுகிறது.

நிருவாக உரிமைப் பத்திரம் வழங்க காலவரையறை :

விருப்பாவணமளித்தவர் அல்லது உயில் இல்வழியில் இறந்தவர், இறந்த தினத்திலிருந்து பதினான்கு முழு தினங்கள் முடிவுறும் வரை நிருவாக உரிமைப் பத்திரம் வழங்கப்படக் கூடாது. அதாவது அவர் இறந்த தினத்திலிருந்து

பதினான்கு தினங்கள் முடிவுற்ற பின்னரே நிருவாக உரிமைப் பத்திரம் வழங்கப்பட வேண்டும், என்று **பிரிவு 293–ன் இரண்டாம் பகுதி** குறிப்பிடுகிறது.

நிருவாக உரிமைப் பத்திரம் வழங்குவதன் விளைவு :

உயில் இல்வழியில் ஒருவர் இறந்த நாளன்றே அவரது சொத்துக்களை நிருவகிக்க உரிமை அளித்ததைப் போன்று, இறந்தவருகிருந்த உரிமைகள் அனைத்தையும் அடைய நிருவாகி உரிமை படைத்தவர் ஆகிறார், என்று **பிரிவு 220** கூறுகிறது.

இங்கு ஒன்றைக் கவனத்தில் கொள்வது அவசியம். அதாவது சொத்தின் உரிமையாளர் இறந்த நாளன்றே, அவருக்கு அச்சொத்தின் மீது இருந்த உரிமைகள் அனைத்தும் நிருவாகியைச் சென்றடையும் என்பதால், அவர் இறந்த தினத்திற்கும், நிருவாக உரிமைப் பத்திரம் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தினத்திற்கும் இடையில் வரும் தினங்களில், அந்நிருவாகி செய்த அனைத்து இடைச் செயல்களும் (intermediate acts) செல்லுபடியாகத் தக்கதே என்று கருதவியலாது. எனவே அவ்விடைப்பட்ட தினங்களில் இறந்தவரின் சொத்திற்குப் பயனளிக்கும் நிருவாகியின் செயல்கள் மட்டுமே அவரது சொத்தைக் கட்டுப்படுத்தும்; செல்லுபடியாகும். சொத்தின் மதிப்பை குறைக்கும் அல்லது சொத்திற்கு கேடு விளைவிக்கும் அவரது ஏனைய செயல்கள் செல்லுபடியாகாது, என்று **பிரிவு 221** கூறுகிறது.

ஆனால் உயில் மெய்ப்பிதழ் (Probate) ஒன்று, நிறைவேற்றாளரின் அத்தகு இடைச் செயல்கள் அனைத்தையும் செல்லுபடியாக்குகிறது என்று பிரிவு 227 குறிப்பிட்டதை நாம் முன்பே கண்டோம். இவ்வேறுபாட்டிற்கு காரணம் யாதெனில், நிருவாகி என்பவர் சொத்து நிருவாகத்திற்குரிய தனது அதிகாரத்தையும் உரிமையையும் நீதிமன்றத்தின் வாயிலாகப் பெறுகிறார். ஆனால் நிறைவேற்றாளரோ, அவற்றை உயிலினின்று பெறுகிறார்.

நிருவாக உரிமைப் பத்திரம் இரத்து செய்யப்படும் சூழ்நிலைகள் (Revocation or annulment):

நிருவாக உரிமைப் பத்திரம் வழங்கப்பட்ட பின்னர், அது **நியாயமான காரணத்திற்காக (for just cause)** இரத்து அல்லது நீக்கறவு செய்யப்படலாம், என்று **பிரிவு 263** கூறுகிறது.

பின்வருவனவற்றை நியாயமான காரணமாக கருதப்படுதல் வேண்டும் என்று அப்பிரிவிலேயே மேலும் கூறப்பட்டுள்ளது. அவை,

(a) நிருவாக உரிமைப் பத்திரம் பெறுவதற்காக எடுக்கப்பட்ட நீதிமன்ற நடவடிக்கைகள், அடிப்படையிலேயே குறைபாடுடையதாக இருப்பின்;

(b) நிருவாக உரிமைப் பத்திரத்தை பொய்யான கருத்துத் தூண்டுதல்

செய்தன் மூலமாக மோசடியாக அல்லது வழக்கிற்கு அவசியமாக உள்ளவற்றை நீதிமன்றத்திடமிருந்து மறைத்ததன் மூலம் பெறப்பட்டிருப்பின்;

(c) நிருவாக உரிமைப் பத்திரம் வழங்குதலை நியாயப்படுத்தக் கூடிய சட்ட விஷயத்திற்கு முக்கியத்துவமாக உள்ள ஒரு பொருண்மை குறித்த உண்மையல்லாத சாட்டுரை ஒன்றின் வாயிலான அப்பத்திரம் பெறப்பட்டிருப்பின்;. இங்கு அச்சாட்டுரை அறியாமை அல்லது கவனக்குறைவினால் செய்யப்பட்டதாக இருப்பினும், அது ஒரு பொருட்டல்ல.

(d) வழங்கப்பட்ட நிருவாக உரிமைப் பத்திரமானது, சூழ்நிலைகளின் நிமித்தமாக பயனற்றதாக அல்லது செயல்படாததாக ஆகிவிட்டால்;

(e) யாருக்கு நிருவாக உரிமைப் பத்திரம் வழங்கப்பட்டதோ அவர் வேண்டுமென்றே அல்லது நியாயமான காரணம் ஏதுமின்றி சொத்துக்களின் மதிப்பீட்டையும், கணக்குகளையும் ஒப்படைக்கத் தவறினால் அல்லது முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றில் உண்மையல்லாத விதத்தில் அம்மதிப்பீட்டையும் அல்லது கணக்கு களையும் அவர் காட்டினால், நிருவாக உரிமைப் பத்திரம் இரத்து செய்யப்படும்.

நிருவாக உரிமைப் பத்திரம் பெற செய்யப்படும் மனுவில் குறிப்பிட வேண்டிய விபரங்கள்:

பிரிவு 278(1)–ன்படி, நிருவாக உரிமைப் பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பம் ஒன்றை மனுவின் வடிவில் மாவட்ட நீதிபதியிடம் அல்லது மாவட்ட பிரதிநிதியிடம் (District Delegate) தாக்கல் செய்தல் வேண்டும். அதில் பின்வரும் விபரங்கள் குறிப்பிடப்பட வேண்டும். அவை,

(a) இறந்தவரின் இடமும், நேரமும்;

(b) இறந்தவரின் உறவினர்களும், அவர்களது முகவரியும்;

(c) நிருவாக உரிமைப் பத்திரம் பெற மனுதாரருக்குள்ள உரிமை;

(d) மாவட்ட நீதிபதியிடம் மனுச் செய்யும் பொழுது, இறந்து போனவர், அவர் இறக்கும் சமயத்தில் அந்நீதிபதியின் அதிகாரவரம்பிற்குள் ஒரு நிலையான வசிப்பிடத்தை அல்லது சில சொத்துக்களை கொண்டிருந்தார் என்று குறிப்பிடல் வேண்டும்;

(e) மாவட்ட பிரதிநிதியிடம் மனுச் செய்யும் பொழுது, இறந்து போனவர், அவர் இறக்கும் சமயத்தில் அப்பிரதிநிதியின் அதிகாரவரம்பிற்குள் ஒரு நிலையான வசிப்பிடத்தை கொண்டிருந்தார் என்று குறிப்பிடல் வேண்டும்;

(2) மனுதாரரின் கைகளில் அநேகமாக வரவிருக்கும் சொத்துக்கள் மற்றொரு மாநிலத்தில் அமைந்திருந்தால், அம்மனுவில் அச்சொத்துக்களின் மதிப்புத் தொகையை குறிப்பிட்டு, அவை எந்த மாவட்ட நீதிபதியின் அதிகார வரம்பிற்குள் அமைந்துள்ளன என்பதையும் குறிப்பிட வேண்டும்.

[iii] நிறைவேற்றாளர் மற்றும் நிருவாகியின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் [Powers and Duties of Executor and Administrator]

25. Summarise the provisions of Indian Succession Act relating to the duties of Executors and Administrators. (நிறைவேற்றுபவர்கள் மற்றும் நிருவகிப்பவர்களுடைய கடமைகள் தொடர்பான இந்திய இறங்குரிமைச் சட்டத்தின் கூறுகளை சுருக்கிக் கூறுக.)

(அல்லது)

Duties of an executor of a Will - Write short notes. (உயிலை நிறைவேற்றுபவரின் கடமைகள் – சிறு குறிப்பு வரைக.)

நிறைவேற்றுபவர் (Executor) :

விருப்பாவணமளித்தவர் தனது உயிலில் கண்ட சரத்துக்களை தனது இறப்பிற்கு நிறைவேற்றுவதற்காக எவரை அவ்வுயில் வழியாகவே நியமனம் செய்கிறாரோ, அவரே நிறைவேற்றாளர். இவர் உயில் வழியாக நியமிக்கப் படுவதால், இவரது கடமைகளும், அதிகாரங்களும் அவ்வுயிலில் குறிப்பிட்டுள்ள படியே அமைகிறது. இவ்வாறு உயில் மூலமாக நியமிக்கப்பட்ட நிறைவேற்றாளருக்கு மட்டுமே உயில் மெய்ப்பிதழ் அளிக்கப்படும். நிறைவேற்றாளராக நியமிக்கப்பட்ட ஒருவர் அப்பொறுப்பினை ஏற்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. அப்பொறுப்பினை ஏற்காமல் நியாயமான காலத்திற்குள் அவர் அதை தள்ளி விடலாம். இவற்றை எல்லாம் நாம் இந்த அத்தியாயத்தின் முதல் தலைப்பின் கீழ் போதுமான அளவிற்கு விரிவாகக் கண்டோம்.

நிருவாகி (Administrator) :

ஒருவர் உயில் இல்வழியில் இறந்து போனாலும், உயில் எழுதி வைத்து நிறைவேற்றாளரை நியமிக்காமல் இறந்து போனாலும் அவரது சொத்துக்களை நிருவகிக்கும் பொருட்டு நிருவாக உரிமைப் பத்திரமளித்து நீதிமன்றம் ஒருவரை நியமிக்கும். அவரே நிருவாகி எனப்படுவார். நிறைவேற்றாளர் பொறுப்பேற்க மறுக்கும் போதும், திடீரென இறந்து போனாலும் சொத்துக்களை நிருவகிக்க, நிருவாகியை நியமிக்கலாம். இவற்றையும் நாம் ஏற்கனவே கண்டோம்.

நிறைவேற்றாளர் மற்றும் நிருவாகியின் அதிகாரங்கள்:

இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் 9–வது பகுதியில் வரும் ஆறாவது அத்தியாயம் நிறைவேற்றாளர் மற்றும் நிருவாகியின் அதிகாரங்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறது. அவை வருமாறு.

(1) இறந்து போனவர் வழக்காடும் உரிமை பெற்ற அனைத்து வழக்கு மூலங்களிலும் (causes of action) அவர் சார்பில் பிரதிநிதியாக நின்று வழக்கிட நிறைவேற்றாளரும், நிருவாகியும் அதிகாரம் பெற்றவர்கள். மேலும் இறந்து போனவர் உயிருடன் இருக்கும் சமயத்தில் அவருக்கு சேர வேண்டிய கடன்களை வசூலிக்கும் அதிகாரம் பெற்றவர்கள். **(பிரிவு 305).**

(2) ஒரு நிறைவேற்றாளர் அல்லது நிருவாகி இறந்து போனவரின் சொத்துக்களை முழுவதுமாக அல்லது பகுதியாக அவர் பொருத்தமெனக் கருதும் வகையில் பாராதீனம் செய்ய அதிகாரம் பெற்றவர். **(பிரிவு 307).**

(3) ஒரு நிறைவேற்றாளர் அல்லது நிருவாகி பின்வரும் காரணங்களுக்காக செலவுகளைச் செய்யலாம். அவை,

(a) தன்னால் நிருவகிக்கப்படும் சொத்து எதனையும் உரிய முறையில் கவனித்துக் கொள்ள அல்லது மேலாண்மை செய்ய அவசியமாக உள்ள அத்தகு செயல்களுக்காக செலவு செய்யலாம்.

(b) அத்தகு சொத்திற்கு முறையானதாகவும் நியாயமானதாகவும் உள்ள அத்தகு மேம்பாடுகளுக்காகவும் மற்றும் அத்தகு மத, அறப்பணி மற்றும் வேறு நோக்கங்களுக்காகவும் உயர் நீதிமன்றத்தின் அனுமதியுடன் செலவு செய்யலாம். **(பிரிவு 308).**

(4) நிறைவேற்றாளர்களும், நிருவாகிகளும் பலர் இருக்குமிடத்து, அங்கு முரணான ஏவுரை ஏதும் இல்லாதிருக்குமானால், அனைவரது அதிகாரங்களும், அவர்களில் எவர் உயிலை மெய்ப்பித்துள்ளாரோ அல்லது நிருவாகத்தைக் கோரிப் பெற்றுள்ளாரோ, அவர் செயற்படுத்தலாம். **(பிரிவு 311).**

(5) நிறைவேற்றாளர்கள், நிருவாகிகள் பலர் இருந்து அவர்களில் ஒருவர் அல்லது அதற்கும் மேற்பட்டோர் இறந்து போனால், அனைத்து அதிகாரங்களும் எஞ்சியுள்ளோர்களை அல்லது எஞ்சியுள்ளோரை சென்றடையும். **(பிரிவு 312).**

(6) திருமணமான பெண்மணி ஒருத்திக்கு உயில் மெய்ப்பிதழ் அல்லது நிருவாக உரிமைப் பத்திரம் வழங்கப்படுமிடத்து, ஒரு சாதாரண நிறைவேற்றாளர் அல்லது நிருவாகி எத்தகு அதிகாரங்களைக் கொண்டிருப்பாரோ அத்தகு அதிகாரங்கள் அனைத்தையும் அப்பெண்மணியும் கொண்டவராக இருப்பார். **(பிரிவு 315).**

நிறைவேற்றாளர் மற்றும் நிருவாகியின் கடமைகள்:

இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் 9–வது பகுதியில் வரும் ஏழாவது அத்தியாயம் நிறைவேற்றாளர் மற்றும் நிருவாகியின் கடமைகளைப் பட்டியலிட்டுக் காட்டுகிறது. அவை வருமாறு.

(1) இறந்தவர் போதுமான சொத்தை விட்டுச் சென்றிருப்பின், அவரது நிலைப்பாட்டிற்குப் பொருத்தமான முறையில் அவரது அந்திமக் கிரியைகளை செய்வதற்காக, தொகை அளித்தல் வேண்டும். **(பிரிவு 316).** இது நிறை வேற்றாளருக்கு மட்டுமே உரிய கடமையாகும்; நிருவாகிக்குப் பொருந்தாது. ஏனெனில் நிறைவேற்றாளர் உயிலின் வாயிலாக நிறைவேற்றப்படுபவர். எனவே உயில் எழுதியவர் இறந்தவுடன் நிறைவேற்றாளர் யார் என்பதை அறிந்து கொள்ளலாம். ஆனால் ஒருவர் நிருவாக உரிமைப் பத்திரம் பெறும் பொழுதுதான், அவர் சட்டப்படி இறந்தவரின் சொத்திற்குரிய நிருவாகியாக அங்கீகரிக்கப் படுகிறார்.

(2) உயில் மெய்ப்பிதழ் அல்லது நிருவாக உரிமைப் பத்திரம் முறையே நிறைவேற்றாளருக்கு அல்லது நிருவாகிக்கு வழங்கப்பட்ட ஆறு மாதங்களுக்குள் அல்லது நீதிமன்றம் நீட்டித்தளிக்கும் அத்தகு காலகட்டத்திற்குள், இறந்து போனவரின் அசையா, அசையும் சொத்துகள், அவருக்கு வரவேண்டிய மற்றும் அவர் கொடுக்க வேண்டிய கடன்கள் ஆகியவற்றை மதிப்பீட்டு, ஒரு முழுமையான மற்றும் உண்மையான மதிப்பீட்டுப் பட்டியலை நீதிமன்றத்திடம் நிறைவேற்றாளர் அல்லது நிருவாகி சமர்ப்பித்தல் வேண்டும். அதுபோல் உயில் மெய்ப்பிதழ் அல்லது நிருவாக உரிமைப் பத்திரம் வழங்கப்பட்டு ஓராண்டிற்குள் அல்லது நீதிமன்றம் நீட்டித்தளிக்கும் அத்தகு காலகட்டத்திற்குள், நிறைவேற்றாளர் அல்லது நிருவாகியின் கைகளில் வந்துள்ள இறந்து போனவரின் சொத்துடைமைகளைக் காட்டும் சொத்து குறித்த கணக்கையும், அச்சொத்துடைமைகள் எம்முறையில் பயன் படுத்தப்பட்டுள்ளன அல்லது பாரதீனம் செய்யப்பட்டுள்ளன என்பதையும் நீதிமன்றத்திடம் சமர்பித்தல் வேண்டும். **[பிரிவு 317(1)].**

(3) இறந்து போனவருக்கு இந்தியாவில் பல மாநிலங்களிலும் அசையும், அசையா சொத்துக்கள் இருப்பின், ஒவ்வொரு மாநிலத்திலும் அவருக்குள்ள சொத்துக்களின் மதிப்பையும் தனித்தனியாக கணக்கிட்டு, மதிப்பீட்டுப் பட்டியலில் அவற்றை நிறைவேற்றாளர் அல்லது நிருவாகி குறிப்பிட வேண்டும். **(பிரிவு 318).**

(4) இறந்து போனவருக்கு உள்ள சொத்துக்கள் மற்றும் அவர் இறந்து போன சமயம் அவருக்கு வர வேண்டியதாக இருந்த கடன்கள் ஆகியவற்றை நிறைவேற்றாளர் அல்லது நிருவாகி உரிய கவனத்துடன் திரட்ட வேண்டும். **(பிரிவு 319).**

(5) இறந்து போனவரின் தகுதி மற்றும் தன்மைக்கேற்ற வகையில் அவரது அந்திமக் கிரியைகளை செய்வதற்கான ஒரு நியாயமான தொகை, மருத்துவ உதவிக்கான கட்டணங்கள், அவரது மரணத்திற்கு ஒரு மாதம் முன்பாக அவர் தங்கி வாழ்ந்ததற்கான செலவுகள், மரணப் படுக்கைக்குரிய கட்டணங்கள் ஆகியவற்றை இறந்து போனவருக்கு இருந்த அனைத்து கடன்களுக்கு முன்பாக முதலில் செலுத்தப்பட வேண்டும். **(பிரிவு 320).**

(6) உயில் மெய்ப்பிதழ் அல்லது நிருவாக உரிமைப் பத்திரம் பெறுவதற்கான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குரிய செலவுத் தொகைகளை, இறந்தவரின் சொத்திலிருந்து அடுத்ததாக செலுத்த வேண்டும். **(பிரிவு 321).**

(7) இறந்து போனவருக்காக, அவர் இறந்து போவதற்கு மூன்று மாதங்கள் முன்பு வரை பணிபுரிந்த பணியாட்களுக்கு பாக்கி நிற்கும் ஊதியங்களை அடுத்ததாக கொடுக்க வேண்டும். மேற்கண்டவைகளுக்குப் பின்னிட்டுத்தான், இறந்து போனவரின் கடன்கள் செலுத்தப்பட வேண்டும். **(பிரிவு 322).**

(8) மேற்கண்டவைகளுக்குப் பின்னிட்டுதான் உயில் வழிக் கொடைகளை (Legacies) அளிக்க வேண்டும். **(பிரிவு 325).**

26. Distinquish between an Executor and Administrator. (நிறைவேற்றாளர் மற்றும் நிருவாகிக்கும் இடையே உள்ள வேறுபாட்டைக் கூறுக.)

(1) நிறைவேற்றாளர், உயிலினை உருவாக்கியவரால் நியமிக்கப்படுகிறார். நிருவாகி, நீதிமன்றத்தால் நியமிக்கப்படுகிறார்.

(2) நிறைவேற்றாளர், உயிலினின்று எல்லா அதிகாரங்களையும் பெறுகிறார். நிருவாகி, நிருவாக உரிமைப் பத்திரத்தினின்று நீதிமன்றத்திடமிருந்து அதிகாரங்களைப் பெறுகிறார்.

(3) உயில் மெய்ப்பிதழ் பெறக்கூடிய உயில் நிறைவேற்றாளர் விருப்பாவணம் கொடுத்தவர் இறந்த நாளினின்று அவரது சட்டபூர்வமான பிரதி நிதியாவார். நிருவாகி, நிருவாக உரிமைப் பத்திரம் அளிக்கப்பட்ட பின்னர்தான் அவர் இறந்தவரின் பிரதிநிதி ஆவார்.

(4) நிறைவேற்றாளர் உயில் மெய்ப்பிதழ் பெறும் முன்னரே சொத்துக்களின் நிருவாகத்தை எடுத்துக் கொண்டு எல்லாப் பணிகளையும் புரியலாம். நிருவாகி அவ்வாறு செய்யவியலாது.

(5) விருப்பாவணம் கொடுத்தவர் இறந்த நாளினின்று ஏழு தினங்கள் சென்ற பின்தான் நிறைவேற்றாளருக்கு உயில் மெய்ப்பிதழ் கொடுக்கப்படும். உயில் இவ்வழியில் ஒருவர் இறந்தால், அவர் இறந்த நாளின்று பதினான்கு தினங்கள் சென்ற பின்தான் நிருவாகிக்கு நிருவாக உரிமைப் பத்திரம் வழங்கப்படும்.

(6) ஒன்றுக்கு மேற்பட்ட நிறைவேற்றாளர்கள் இருப்பின், அவர்கள் கூட்டாகவும், தனித்தனியாகவும் செயல்பட பொறுப்புடையவர்கள். எல்லா நிறைவேற்றாளரையும் ஒன்று சேர்த்துத்தான் உயில் மெய்ப்பிதழ் அளிக்கப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட நிருவாகிகள் இருப்பின் அவர்களது பொறுப்பு கூட்டானது ஆகும். ஆனால் நடைமுறையில் எவருக்கு அதிகப்பங்குள்ளதோ, அவருக்குத் தான் நிருவாகப் பொறுப்பளிக்கப்படும்.

நிறைவேற்றாளர், நிருவாகி ஆகியோரின் இறப்பினால், அவர்களது அதிகாரங்கள், கடமைகள் அவர்களது வாரிசுகளைச் சென்றடையாது.

7 உரிமை இறக்கச் சான்றிதழ் (அல்லது) வாரிசுரிமைச் சான்றிதழ் [Succession Certificate]

27. Summarise the provisions of Indian Succession Act regarding the grant of Succession Certificate ? (உரிமை இறக்கச் சான்றிதழ் வழங்குதல் குறித்த இந்திய உரிமை இறக்கச் சட்டத்தின் கூறுகளை சுருக்கிக் கூறுக.)

(அல்லது)

What is meant by Succession Certificate? When can a Succession Certificate be granted ? (வாரிசுரிமைச் சான்றிதழ் என்றால் என்ன ? வாரிசுரிமைச் சான்றிதழ் எப்பொழுது வழங்க முடியும் ?)

(அல்லது)

Succession Certificate - Write short notes. (வாரிசுரிமைச் சான்றிதழ் – சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் 10–ஆம் பகுதி (Part X), 'வாரிசுரிமைச் சான்றிதழ்' தொடர்பான வகைமுறைகளைக் கொண்டதாக உள்ளது. இப்பகுதியின் கீழான 370 முதல் 390 வரையிலான பிரிவுகள், வாரிசுரிமைச் சான்றிதழைப் பற்றிக் கூறுகின்றன.

வாரிசுரிமைச் சான்றிதழ் – விளக்கம் :

இறந்தவருக்குச் சேர வேண்டிய கடன்களையும் (Debts), காப்புறுதிகளையும் (Securities) மேலும் அவருக்கு வர வேண்டிய அனைத்தையும் அவரது பிரதிநிதியாக இருந்து வசூலிக்க நீதிமன்றம் ஒருவருக்கு வழங்கும் அதிகாரத்தைக் கொண்டதொரு ஆவணமே, வாரிசுரிமைச் சான்றிதழ் எனப்படும்.

வாரிசுரிமைச் சான்றிதழின் பயன்:

இறந்து போனவரிடம் வாங்கிய கடனை திருப்பிக் கொடுக்க விழையும் கடனாளிகள், மேற்கண்ட வாரிசுரிமைச் சான்றிதழை பெற்றுள்ளவர்களிடம் கொடுத்து, அக்கடனிலிருந்து விடுவிப்பு பெறலாம் (discharge from debt).

வாரிசுரிமை சான்றிதழ் எப்பொழுது வழங்க முடியும் ? :

இறந்தவரின் சொத்தின் பேரில் உரிமையுடைய, திடசித்தமுடைய, வயது வந்த எவரும் வாரிசுரிமைச் சான்றிதழ் பெற ஒரு மனுவின் வடிவில் விண்ணப்பிக்கலாம்.

இறந்தவர் இறக்கும் சமயத்தில் வாழ்ந்த மாவட்டத்தின் மாவட்ட நீதிபதியோ, இறந்தவரின் சொத்துக்களிருக்கும் மாவட்டத்தின் மாவட்ட நீதிபதியோ அச்சொத்துக்களுக்கு வாரிசுரிமைச் சான்றிதழ் வழங்கலாம் **(பிரிவு 371).** மேலும் மாநில அரசினால் மாவட்ட நீதிபதியின் அதிகாரமளிக்கப்பட்ட எந்தக் கீழ் நீதிமன்றங்களும் வாரிசுரிமைச் சான்றிதழ் வழங்கலாம். அதாவது மேற்கண்ட நீதிமன்றத்தில் வாரிசுரிமைச் சான்றிதழ் பெற விண்ணப்பிக்க வேண்டும்.

வாரிசுரிமைச் சான்றிதழ் கோரி விண்ணப்பிப்பவருக்கு, இறந்தவரின் சொத்தின் பேரில் உரிமையுண்டு என அறிந்த பின்னர் அவ்வாவணம் வழங்கப் படும். அதாவது இறந்தவரின் சொத்தின் மீது விண்ணப்பதாரருக்கு முதற் தோற்றத்திலேயே சிறந்த உரிமை மூலம் (prima facie best title) உள்ளது எனக் கண்ட பின்னர் வாரிசுரிமைச் சான்றிதழ் வழங்கப்படும். **[பிரிவு 373(3)].**

இறந்து போனவருக்குச் சேர வேண்டிய கடன் அல்லது காப்புறுதியைப் பெறும் உரிமையானது, இந்திய வாரிசுரிமைச் சட்டப்படி நிருவாக உரிமைப் பத்திரம் அல்லது உயில் மெய்ப்பிதழின் வாயிலாக மெய்ப்பிக்கப்பட வேண்டியதாக இருப்பின், அங்கு வாரிசுரிமைச் சான்றிதழ் வழங்கப்படாது:

இருப்பினும், இந்திய வாரிசுரிமைச் சட்டத்தில் உள்ள எதுவும், இறந்து போன இந்தியக் கிறுத்தவர் ஒருவருக்குச் சேர வேண்டிய கடன் அல்லது காப்புறுதிக்கு உரிமையிருப்பதாக கோரும் எவருக்கும், அத்தகு உரிமை இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் கீழ் நிருவாக உரிமைப் பத்திரத்தினால் மெய்ப்பிக்கப்பட வேண்டும் என்ற காரணத்திற்காக, வாரிசுரிமைச் சான்றிதழ் வழங்குவதைத் தடுப்பதாகக் கருதுதல் கூடாது. **(பிரிவு 370).**

வாரிசுரிமைச் சான்றிதழ் பெற விண்ணப்பம் :

இறந்தவருக்குச் சேர வேண்டிய எந்தக் கடனுக்காகவும் அல்லது காப்புறுதிக்காகவும் வாரிசுரிமைச் சான்றிதழ் கேட்டு விண்ணப்பிக்கலாம். அதற்கான விபரங்களைக் கொடுத்து, ஒரு மனுவின் வடிவில் மாவட்ட நீதிபதியிடம் தாக்கல் செய்தல் வேண்டும். அம்மனு, உரிமையியல் நடைமுறைச் சட்டத்தில் வகுத் துரைக்கப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரரால் சரிபார்க்கப்பட்டு, கையொப்பமிடப் பட வேண்டும். மனுவிற்குரிய நீதிமன்ற முத்திரைக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். மனுவில் கொடுக் வேண்டிய விபரங்களாவன.

(1) இறந்து போனவர் எப்பொழுது இறந்தார் எனும் விபரம்;

(2) அவர் இறக்கும் பொழுது, அவர் இயல்பாக வசித்த இடம் மற்றும் அந்த வசிப்பிடம் விண்ணப்பம் செய்யப்பட்ட நீதிபதியின் அதிகாரவரம்பிற்குள் வர வில்லையானால், அந்த அதிகாரவரம்பிற்குள் உள்ள அவரது சொத்து உள்ள இடம்;

(3) இறந்து போனவரின் குடும்பத்தினர் அல்லது பிற நெருங்கிய உறவினர்களின் விபரம் மற்றும் அவர்களது இருப்பிடம்;

(4) விண்ணப்பதாரர் எத்தகு உரிமையில் வாரிசுரிமைச் சான்றிதழ் கோருகிறார் என்பதற்கான விபரம்;

(5) வாரிசுரிமைச் சான்றிதழ் வழங்கப்பட சட்டப்படி எந்தத் தடைகளும் இல்லை என்பதற்கான விபரம்;

(6) வாரிசுரிமைச் சான்றிதழ் வேண்டி விண்ணப்பம் செய்ததற்கான கடன்கள் மற்றும் காப்புறுதிகளின் விபரங்கள்.

மேற்படி விபரங்களைப் பொய்யென அறிந்து வேண்டுமென்றே கொடுத்தால், மனுதாரர் இந்தியத் தண்டனைச் சட்டம் 198–வது பிரிவின் கீழ் தண்டிக்கப்படுவார்.

வாரிசுரிமைச் சான்றிதழின் விளைவு - பிரிவு 381:

மாவட்ட நீதிபதி வழங்கும் வாரிசுரிமைச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள கடன்கள் மற்றும் காப்புறுதிகளைப் பொறுத்து, அத்தகு கடன்களைத் திருப்பித் தர வேண்டிய அல்லது அத்தகு காப்புறுதிகளுக்குப் பொறுப்புடைய நபர்களுக்கு எதிராக மேற்படி வாரிசுரிமைச் சான்றிதழ் அறுதியானதாகும். அதாவது வாரிசுரிமைச் சான்றிதழ் பெற்றுள்ளவரிடம், இறந்து போனவருக்குக் கடன் பட்டுள்ளவர்கள் மற்றும் காப்புறுதிகளின் அடிப்படையில் பொறுப்புடையவர்கள் தங்கள் கடன் தொகையைச் செலுத்தலாம் அல்லது காப்புறுதிகளை திரும்ப ஒப்படைக்கலாம். இச்சான்றிதழ், நல்லெண்ணக் கடன்காரர்களின் கடன் தொகை செலுத்தலுக்கு பாதுகாப்பளிக்கிறது.

வாரிசுரிமைச் சான்றிதழை இரத்து செய்தல் :

ஒரு நிருவாக உரிமைப் பத்திரம், எத்தகு காரணங்களை முன்னிட்டு இரத்து செய்யப்படுமோ, அத்தகு காரணங்களுக்காக வாரிசுரிமைச் சான்றிதழும் இரத்து செய்யப்படலாம். **(பிரிவு 383)** (வினா எண். 24–ன் விடையில் இறுதியில் காண்க.)

வாரிசுரிமைச் சான்றிதழ் எப்போது செல்லாது ?

(1) ஒரு கடனுக்கு வாரிசுரிமைச் சான்றிதழ் முன்னரே அளிக்கப்பட்டு அது அமலில் இருந்தால், பின்னர் கொடுக்கப்பட்ட சான்றிதழ் செல்லாது.

(2) இறந்தவரின் சொத்துகட்கு உயில் மெய்ப்பிதழோ நிருவாக உரிமைப் பத்திரமோ, அளிக்கப்பட்டு அமலில் இருந்தால், பின்னர் கொடுக்கப்பட்ட வாரிசுரிமைச் சான்றிதழ் செல்லாது. **(பிரிவு 385).**

-o0o-

பகுதி - IV
கிறுத்தவ மரபு முறை இறங்குரிமைச் சட்டம் [Christian Law of Inheritance]

பொதுவாகத் தெரிந்து கொள்ள வேண்டியவை

இதற்கு முன் நாம் கண்ட 1925–ஆம் ஆண்டின் இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் (Indian Succession Act, 1925) அய்ந்தாம் பகுதி (Part V) உயில் இல்வழி வாரிசுரிமை (Intestate Succession) குறித்துக் கூறுகிறது. அதன் கீழ் வரும் பிரிவு 33–A தவிர **29 முதல் 49 வரையிலான பிரிவுகள் இந்தியாவை வாழ்வக மாகக் கொண்ட அய்ரோப்பியர்களுக்கும், இந்தியக் கிறுத்தவர் களுக்கும் பொருந்தக் கூடிய உயில் இல்வழி வாரிசுரிமை** குறித்த விதிகளைக் கூறுகின்றன. அதுபோல் 50 முதல் 56 வரையிலான பிரிவுகள் பார்சி இனத்தவருக்கான உயில் இல்வழி வாரிசுரிமை குறித்த சிறப்பு விதிகளைக் கூறுகின்றன. பிரிவு 33–A இந்தியக் கிறுத்தவரல்லாத ஆங்கிலோ இந்தியக் கிறுத்தவர்களுக்கு பொருந்தக் கூடிய உயில் இல் வழி வாரிசுரிமை குறித்த சிறப்பு வகைமுறைகளைக் கூறுகிறது. **நாம் மேற்கண்ட வினாவிற்கு காண இருப்பது, இந்தியக் கிறுத்தவர் களுக்கு பொருந்தக் கூடிய உயில் இல்வழி வாரிசுரிமையைக் குறித்து மட்டுமே.** (பார்சி இனத்தவருக்கான உயில் இல்வழி வாரிசுரிமை நமது பாடத்திட்டத்தில் இல்லை என்பதை அறிக.)

பல்கலைக்கழக தேர்வில் 'கிறுத்தவ மரபுமுறை இறங்குரிமைச் சட்டம்' என தனியாக வினா கேட்கப்படுவதால், குழப்பத்தை தவிர்க்கும் பொருட்டு இந்திய வாரிசுரிமைச் சட்டத்திலிருந்து மேற்படி பகுதி தனியாகப் பிரிக்கப்பட்டு, கூடுதல் விபரங்களுடன் இங்கு சிறப்பாக கொடுக்கப்பட்டு உள்ளது. எனவே இந்தியக் கிறுத்தவர் களுக்கான இறங்குரிமை குறித்து தனிப்பட்ட விதத்தில் சட்டம் ஏதும் தொகுக்கப்படவில்லையென்பதையும், இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் வகைமுறைகளே அவர்களுக்குப் பொருந்தும் என்பதையும் மாணவர்கள் அறியவும். மேலும் இந்திய வாரிசுரிமைச் சட்டத்தில் கண்ட பிரிவு 33–யும் மாணவர்கள் சேர்த்து படித்தல் நன்று. சென்ற பகுதியில் வினா எண். 3–க் காண்க – ஆசிரியர்.

How is the property distributed to the heirs of a Christian Male died intestate ? (உயிலின்றி இறந்து போன கிறிஸ்தவ ஆண் ஒருவரின் சொத்தானது அவரது வாரிசுகளுக்கு எவ்வாறு பிரித்தளிக்கப்படும் ?)

(அல்லது)

Enumerate the rules of intestate succession for Christians in India. (இந்தியாவிலுள்ள கிறுத்துவர்களுக்கான உயில் இல்வழி இறங்குரிமையின் விதிகளை கூறுக.)

(அல்லது)

Explain the legal heirs and their rights of a male Christian dying intestate. (உயில் இல்வழியில் இறந்து போன ஒரு கிறுத்தவ ஆணின் சட்ட வாரிசுகள் மற்றும் அவரது உரிமைகளை விளக்குக.)

உயிலின்றி இறந்து போன இந்தியக் கிறுத்தவ ஆணின் சொத்தில் யார் யார் எவ்வளவு பங்கினைப் பெறுவர் ?

1. விதவை

உயில் இல்வழியில் இறந்து போன ஓர் இந்திய கிறுத்தவ ஆணிற்கு நேர்வழித் தோன்றல்களோ (Lineal Descendants), நெருங்கிய இரத்தத் தொடர்புடைய உறவினர்களோ (who are Kindered) இல்லையெனில் அவரது முழுச் சொத்தும் அவரது விதவை மனைவியைச் சென்றடையும் என்று **பிரிவு 33(c)** கூறுகிறது.

உயில் இல்வழியில் இறந்தவருக்கு நேர்வழித் தோன்றல்கள் எவரும் இல்லாமல், நெருங்கிய இரத்தத் தொடர்புடைய உறவினர்கள் (kindred) இருந்தால், அவரது மனைவிக்கு (விதவை) அவரது சொத்தில் பாதி பங்கு மட்டும் கிடைக்கும். மீதியுள்ள பாதி பங்கு, அந்நெருங்கிய உறவினர்களைச் சென்றடையும், என்று **பிரிவு 33(b)** கூறுகிறது-

உயில் இல்வழியில் இறந்து போனவர் தனது மனைவியையும் (விதவை), தனது நேர்வழித் தோன்றல்களான குழந்தைகளையும், குழந்தைகளின் குழந்தைகளையும் விட்டுவிட்டு இறந்திருந்தால், அவரது மனைவிக்கு அவரது சொத்தில் மூன்றில் ஒரு பங்கும், மீதமுள்ள மூன்றில் இரண்டு பங்கு அவரது நேர்வழித் தோன்றல்களுக்கும் சென்றடையும், என **பிரிவு 33(a)** கூறுகிறது.

2. நேர்வழித் தோன்றல்கள் (Lineal Descendants) :

மேலே கண்ட பிரிவு **33(a)**-ன்படி, உயிலின்றி இறந்து விட்ட ஒரு கிறித்தவ ஆணிற்கு, வாரிசாக அவரது விதவையும், நேர்வழித் தோன்றல்களும் (குழந்தைகள், குழந்தைகளின் குழந்தைகள்) இருப்பின், அவரின் சொத்தில் நேர்

வழித் தோன்றல்கள் மூன்றில் இரண்டு (2/3) பங்கையும், விதவை மீதமுள்ள மூன்றில் ஒரு பங்கையும் (1/3) பெறுவர்.

விதவை உயிருடன் இல்லாவிட்டால் இறந்தவரின் முழுச் சொத்தும் நேர்வழித் தோன்றல்களையே சென்றடையும் என்று **பிரிவு 34** கூறுகிறது.

இறந்தவரின் குழந்தைகள் ஒரே தலைமுறையில் உள்ளவர்களாக (Same Degree) இருக்கும் பொழுது, இறந்தவரின் சொத்தை அவர்கள் சமமாகப் (Equal) பிரித்துக் கொள்வார்கள் (Per-capita). இறந்தவரின் சொத்தைப் பிரிப்பதில், அவரது குழந்தைகளை முதல் தலைமுறை வாரிசுகளாகவும் (First Degree), அவரது குழந்தைகளின் குழந்தைகளை இரண்டாவது தலைமுறை (Second Degree) வாரிசுகளாகவும் கொண்டு கணக்கிட வேண்டும்.

இறந்தவருக்குக் குழந்தைகளும், இறந்த குழந்தைகளின் குழந்தைகளும் (child of pre deceased children) இருந்தால், அவரது சொத்தைக் கிளை விகித (Per-stripes) இறக்கப்படி பிரித்துக் கொடுக்க வேண்டும்.

எடுத்துக்காட்டுகள் (Illustrations):

(i) **தலைவிகித (Per-capita) இறக்கப்படி** சொத்தைப் பிரிப்பதில் எல்லோரும் சம பங்கைப் பெறுவர்.



மேலே உள்ள வரைபடத்தில் இறந்தவரின் (X) சொத்தை அவரது குழந்தைகள் (A, B, C) ஆகியோர் சரி சமமாகப் பிரித்துக் கொள்வர். ஒவ்வொருவரும் சொத்தில் 1/3 பாகத்தைப் பெறுவர்.

(ii) இறந்தவரின் சொத்தைப் குழந்தைகளும், இறந்த குழந்தைகளின் குழந்தைகளும் பின்வருமாறு **கிளை விகித (Per-stripes) இறக்கப்படி** பிரித்துக் கொள்வர்.



மேலே உள்ள வரைபடத்தில் இறந்தவரின் (X) சொத்தை அவரது குழந்தைகளான A, B, C மூவரும் சரிசமமாகப் (1/3) பெறுவர். B இறந்து விட்டதால் அவரின் சொத்தின் பங்கான 1/3–ல் அவரது (B) குழந்தைகளான D-யும், E-யும் தலா 1/6 பங்கைப் பெறுவர். மேலும் இங்கு C-யும் இறந்து விட்டதால், அவரின் (C) சொத்தான 1/3 பங்கில் அவரது (C) குழந்தைகளான F, G, H மூவரும் தலா 1/9 பங்கைப் பெறுவர்.

A-ன் பங்கு = 1/3

D,E-ன் பங்கு = 1/6 + 1/6 = 1 + 1/6 = 2/6 = 1/3

F,G,H-ன் பங்கு = 1/9 + 1/9 + 1/9 = 1 + 1 +1/9 = 3/9 = 1/3

இ. தந்தை (Father):

உயிலின்றி இறந்து போன ஒரு கிறுத்தவ ஆணிற்குக் குழந்தைகளும், குழந்தைகளின் குழந்தைகளும் (Lineal Descendants) இல்லாத நிலையில், அவர் விட்டுச் சென்ற சொத்தில், அவரது விதவை உயிருடன் இருப்பின் அவளுக்கு 1/2 பங்கும், மீதமுள்ள 1/2 பங்கு இறந்தவரின் தந்தைக்கும் சென்றடையும். (பிரிவு 41 மற்றும் 42). விதவை இல்லையெனில், தந்தை முழுப் பங்கைப் பெறுவார்.

ஈ. தாய் (Mother):

உயிலின்றி இறந்து போன ஒரு கிறுத்தவ ஆணின் தந்தை இறந்து போயிருந்து, அவருக்கு சகோதரர்களோ, சகோதரிகளோ அல்லது அவர்களது குழந்தைகளோ யாரும் இல்லையெனில், அவரது தாய் உயிருடன் இருப்பின், அவரது சொத்து அத்தாய்க்கு சென்றடையும். (பிரிவு 46)

உ. சகோதரர்கள், சகோதரிகள் மற்றும் அவரது குழந்தைகள் (Brothers, Sisters and their children):

உயிலின்றி இறந்து போன ஒரு கிறுத்தவ ஆணின் தந்தை இறந்து போயிருந்து, ஆனால் அவரது தாய், சகோதரர்கள், சகோதரிகள் உயிருடன் இருந்து, முன்னதாக இறந்து போன சகோதரரின் அல்லது சகோதரியின் குழந்தைகள் எவரும் உயிருடன் இல்லாதபட்சத்தில், அத்தாயும், உயிருடன் உள்ள சகோதரர் அல்லது சகோதரி இறந்தவரின் சொத்தை தங்களுக்குள் சரிசமமாக பங்கிட்டுக் கொள்வர். (பிரிவு 43).

உயிலின்றி இறந்து போன ஒரு கிறித்தவ ஆணிற்கு நேர்வழித் தோன்றல்களோ, தந்தையோ, தாயோ உயிருடன் இல்லையெனில், அவரது சொத்தை அவரது சகோதரர்களும், சகோதரிகளும் தங்களுக்குள் சரி சமமாகப் பிரித்துக் கொள்வர். இறந்தவருக்கு விதவை உயிருடன் இருப்பின் அவளது 1/2

பங்கு போக மீதியுள்ள 1/2 பங்கை தங்களுக்குள் சரிசமமாகப் பிரித்துக் கொள்வர். மேற்கூறிய சகோதரனும், சகோதரியும் முன்னதாக இறந்துவிட்டிருந்தால், அவர்களுக்குரிய பங்குச் சொத்தை, அவர்களது குழந்தைகள் தங்களுக்குள் சமமாகப் பிரித்துக் கொள்வர். **(பிரிவு 47)**

ஊ. வழித்தோன்றலன்றி ஏனைய நெருங்கிய இரத்த உறவினர் (Nearest Kindred) :

உயிலின்றி இறந்து விட்ட ஒரு கிறித்தவ ஆணிற்கு நேர்வழி உறவினரோ, பெற்றோர்களோ, சகோதர சகோதரிகளோ அல்லது அவர்களது குழந்தைகளோ உயிருடன் இல்லாத நிலையில், விதவை மட்டும் இருந்தால் விதவையின் பங்கு போக மீதமுள்ள சொத்தை நெருங்கிய இரத்த உறவினர் தங்களுக்குள் சரி சமமாகப் பங்கிட்டுக் கொள்வர். விதவையும் இல்லாத பொழுது, இறந்தவரின் முழுச் சொத்தையும், அந்நெருங்கிய உறவினர்கள் தங்களுக்குள் சரி சமமாகப் பங்கிட்டுக் கொள்வர். **(பிரிவு 48).**

எ. சொத்துக்களை ஒன்றாகச் சேர்த்தல் கிடையாது (No Hotchpot):

ஒருவர் தம்முடைய வாழ்நாளின் பொழுது, தம்முடைய குழந்தைகளுக்கு அல்லது அவர்களின் முன்னேற்றத்திற்காக ஏதாவது பணம் அல்லது சொத்தினைக் கொடுத்திருந்தால், அவர் உயில் இல்வழியில் இறந்த பின் அவரது சொத்தினை மதிப்பிட்டுப் பங்கு பிரிக்கும் பொழுது, மேற்கண்டவாறு முன்பு கொடுக்கப்பட்ட சொத்தினை பங்குக் கணக்கில் கொண்டு வர வேண்டியதில்லை, என்று **பிரிவு 49** குறிப்பிடுகிறது. அதாவது உயிலின்றி இறந்த ஒருவர், அவர் உயிருடன் உள்ள பொழுது தனது குழந்தைகளுக்கு கொடுத்த சொத்தை, அவர் இறந்த பிறகு செய்யப்படும் சொத்துப் பிரிவினையில் மீண்டும் ஒன்று சேர்த்தலை இந்திய வாரிசுரிமைச் சட்டம் அங்கீகரிக்கவில்லை.

ஆங்கிலச் சட்டப்படி, உயில் இல்வழியில் ஒருவர் இறந்துவிட்டால், அவரிடமிருந்து அவரது குழந்தை தன்னுடைய சுய முன்னேற்றத்திற்காக பணம் அல்லது சொத்து பெற்றிருந்தால், இறந்தவரின் சொத்திலிருந்து தன்னுடைய பங்கினைப் பெறுமுன், தான் பெற்ற பணத்தை அல்லது சொத்தினைத் திருப்பிக் கொடுத்துவிடல் வேண்டும். ஆனால் இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் மேற்படி பிரிவின்படி, அப்பணத்தை அல்லது சொத்தை திருப்பித் தர வேண்டியதில்லை.

உயிலின்றி இறந்து போன ஒரு இந்தியக் கிறுத்தவப் பெண்ணின் சொத்து பிரிக்கப்படும் விதம்:

முன்னர் கூறிய சொத்துப் பங்கீட்டு முறையில் விதவை பெற்றிருந்த இடத்தில் கணவன் இருப்பான். அதே முறையிலேயே உயிலின்றி இறந்துபோன

ஒரு கிறுத்தவப் பெண்ணின் சொத்தையும் பிரிக்க வேண்டும். **(பிரிவு 35).**

இந்தியக் கிறுத்தவர் அல்லாத பிற கிறுத்தவர்களைப் பொறுத்தவரை சொத்து பிரிக்கப்படும் விதம் :

இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 33–A-யின்படி இந்தியக் கிறுத்தவர் அல்லாத பிற கிறுத்தவர்களைப் பொறுத்தவரை, உயில் இல்வழியில் இறந்தவரின் சொத்தை வாரிசுரிமையில் அடைவதில் சிறிது மாற்றங்கள் ஏற்படுகின்றன.

அஃதாவது, உயில் இல்வழியில் இறந்தவரின் நிகரச் சொத்துக்களின் நிகர மதிப்பு ரூ.5000/–க்கு மிகாமல் இருந்து, இறந்தவருக்கு நேர்வழித் தோன்றல்கள் எவரும் இல்லையெனில், சொத்து முழுவதும் அவரது விதவைக்குச் சேரும். **[பிரிவு 33–A (1)].**

ரூ.5000/–க்கு அதிகமாக இருந்தால், முதல் ரூ.5,000/–த்தை விதவைக்கு அளிக்க வேண்டும். மீதிச் சொத்தினை முன்னர் கண்ட பிரிவு 33–ன் படியும் பிரிக்க வேண்டும். அதாவது அவ்விதவைக்கு மற்றவர்களுடன் கொடுக்கப்படும் பங்கோடு, ரூ.5000/– கூடுதலாகக் கொடுக்கப்படுகிறது. இவ்வாறு ரூ.5000/–த்தைக் கொடுக்கும் வரையில் முழுச் சொத்தின் பேரிலும் அவளுக்குப் பிணைப் பொறுப்பு (charge) உண்டு. கணவன் இறந்தது முதல், சொத்துக்களைப் பிரித்துக் கொடுக்கும் வரை ரூ.5000/–க்கு 4 சதவீத வட்டியுண்டு. வட்டியுடன் கொடுக்க வேண்டும். **[பிரிவு 33–A (2) மற்றும் (3)].**

நிகரச் சொத்து என்பது, இறந்தவரின் இறுதிச் சடங்குகளுக்கான செலவுகளும், கடன்களும், சொத்து நிருவாகத்திற்கான செலவுகளும் மொத்த சொத்தின் மதிப்பிலிருந்து கழிக்கப்பட்ட பிறகு மீதமுள்ளதேயாகும். **[பிரிவு 33–A(4)].**

மேற்கண்ட **பிரிவு 33–A** ஆனது, (i) இந்தியக் கிறுத்தவர் எவரது சொத்திற்கும் பொருந்தாது. அதுபோல், (ii) ஒரு ஆண் இறக்கும் பொழுது அல்லது அதன் பிறகு அவருடைய குழந்தை அல்லது குழந்தையின் குழந்தை எதுவும் ஒரு இந்தியக் கிறுத்தவராக இருப்பின், அக்குழந்தைகளுக்குப் பொருந்தாது. மேலும் (ii) இந்து, பௌத்த, சீக்கிய அல்லது ஜைன மதத்தைப் பின்பற்றுபவர்களாக இருக்கும் எந்நபரின் சொத்தின் வாரிசுரிமையும் 1872–ஆம் ஆண்டின் சிறப்புத் திருமணச் சட்டத்தின் 24–வது பிரிவின் கீழ் இந்திய வாரிசுரிமைச் சட்டத்தால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட வேண்டுமோ அந்நபருக்கு இப்பிரிவு பொருந்தாது. **[பிரிவு 33–A (5) (a)].**

இறந்து போனவர் தன்னுடைய அனைத்துச் சொத்திற்கும் உயில் எழுதி வைக்காமல் இறந்து போயிருக்க வேண்டும். அப்பொழுதுதான் இப்பிரிவு

பொருந்தும். தனது ஏதேனுமொரு சொத்திற்கு அல்லது சொத்தின் பகுதிக்கு உயில் எழுதி வைத்திருப்பின், அங்கு மேற்படி பிரிவு பொருந்தாது. **[பிரிவு 33–A (5) (b)].**

முடிவுரை:

ஒருவர் உயில் இல்வழியில் விதவையின்றி இறந்து போயிருந்தால், அவரது நேர்வழித் தோன்றல்களுக்கு மட்டும் அவரது சொத்துக்கள் சேரும். அந்நேர்வழித் தோன்றல்கள் எவரும் இல்லாதபட்சத்தில், அவரது இரத்தத் தொடர்புடைய நெருங்கிய உறவினர்களுக்கு அவரது சொத்து சென்றடையும். அவ்வுறவினர்களும் இல்லாத பொழுது, அவரது சொத்து அரசாங்கத்தைச் சென்றடையும்.

மனைவி இறந்து கணவன் மட்டுமே உயிரோடு இருந்தால், பிரிவு 33–ல் கூறப்பட்டது போல், கணவனுக்கு மனைவியின் சொத்தில் உரிமையுண்டு. மேலும் **பிரிவு 33–A**–ல் கூறப்பட்டது போல் ரூ.5000/–க்கு பிணைப் பொறுப்பும் (charge) கணவனுக்கு உண்டு. அதாவது விதவையின் இடத்தில், மனைவியை இழந்த கணவன் (widower) வைக்கப்படுகிறான்.

-oOo-

பகுதி - V

பிரச்சனைகளும் தீர்வுகளும்

[Problems and Solutions]

- இந்து மரபுமுறை இறங்குரிமைச் சட்டம்
  - உயிலின்றி இறந்து போன ஒரு இந்து ஆண் விட்டுச் சென்ற சொத்திற்கு வாரிசுரிமை
    - 1 முதல் 15 வரையிலான பிரச்சனைகள்
  - உயிலின்றி இறந்து போன ஒரு இந்து பெண் விட்டுச் சென்ற சொத்திற்கு வாரிசுரிமை
    - 16 முதல் 21 வரையிலான பிரச்சனைகள்
- இசுலாமிய மரபுமுறை இறங்குரிமைச் சட்டம்
  - சுன்னீ (அல்லது) ஹனபி பிரிவு இசுலாமியர்கள் விட்டுச் சென்ற சொத்தைப் பொறுத்து பங்கீடு
    - 22 முதல் 28 வரையிலான பிரச்சனைகள்
- கிறுத்தவ மரபுமுறை இறங்குரிமைச் சட்டம்
  - 29 முதல் 42 வரையிலான பிரச்சனைகள்

[i] இந்து மரபுமுறை இறங்குரிமைச் சட்டம் [Hindu Law of Inheritance]

உயிலின்றி இறந்து போன ஒரு இந்து ஆண் விட்டுச் சென்ற சொத்திற்கு வாரிசுரிமை

1. A Hindu dies intestate leaving widow, son, mother, father, sister and brother's son. Divide the estate among them.

இந்து ஒருவர் தன்னுடைய விதவை, மகன், தாயார், தகப்பனார், தங்கை மற்றும் சகோதரரின் மகன் ஆகியவர்களை விட்டுவிட்டு உயில் குறிக்காமல் இறக்கிறார். அவருடைய சொத்தை அவர்களிடையே பிரித்துக் கொடுக்கவும்.

தீர்வு:

மேற்கண்ட பிரச்சனையில் இறந்தவரின் விதவை, மகன், தாயார் ஆகியோர் மட்டுமே முதல் வகுப்பு வாரிசுதாரர்கள் (Class I heirs) ஆவர். தகப்பனார், தங்கை மற்றும் சகோதரரின் மகன் இரண்டாம் வகுப்பு வாரிசுதாரர்கள் (Class II heirs) ஆவர். 1956–ன் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் 8–ஆம் பிரிவின் படி, முதல் வகுப்பு வாரிசுகள் இரண்டாம் வகுப்பு வாரிசுதாரர்களை சொத்துரிமை பெறுவதிலிருந்து தள்ளி விடுகிறார்கள். ஆகவே உயில் எழுதாது இறந்த இந்து ஒருவரின் சொத்தில் மேற்படி பிரச்சனையை பொறுத்தவரை விதவை, மகன், தாயார் ஆகியோர் மட்டுமே வாரிசுரிமை பெற முடியும். அவர்களுக்கு இறந்தவரின் சொத்தில் தலா ஒரு பங்கு (மூன்றில் ஒரு பாகம்) கிடைக்கும். அதாவது,

விதவை	–	1 பங்கு	–	1/3
மகன்	–	1 பங்கு	–	1/3
தாயார்	–	1 பங்கு	–	1/3
தகப்பனார்	–	0 (பங்கில்லை)		
தங்கை	–	0 (பங்கில்லை)		
சகோதரரின் மகன்	–	0 (பங்கில்லை)		

∴ 1/3 + 1/3 + 1/3 = 1+1+1/3 = 3/3 = 1

2. A dies leaving behind his wife, mother, father and two brothers. How will his properties be divided among them.

'அ' என்பவர் தனது மனைவி, தாய், தந்தை, இரு சகோதரர்கள் இவர்களை விட்டு இறக்கின்றார். அவரது சொத்தை அவர்களிடையே எவ்வாறு பிரித்துக் கொடுப்பது ?

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் மனைவி, தாய் ஆகிய முதல் வகுப்பு வாரிசுகள், இரண்டாம் வகுப்பு வாரிசுகளான தந்தை, சகோதரர்களை 'அ'–வின் சொத்தில் பங்கு பெறுவதிலிருந்து தள்ளி விடுகிறார்கள். எனவே 'அ'–வின் சொத்தில் அரை பங்கு மனைவிக்கும், அரை பங்கு தாய்க்கும் சென்றடையும். அதாவது,

மனைவி	–	1/2 பங்கு
தாய்	–	1/2 பங்கு
தந்தை	–	0 (பங்கில்லை)
சகோதரர்கள்	–	0 (பங்கில்லை)

∴ 1/2 + 1/2 = 2/2 = 1

3. A dies in 1970 leaving his widow, mother, two daughters, three sons and his father. Distribute the estate among them.

'அ' என்பவர் 1970–ஆம் ஆண்டில் தனது மனைவி, தாய், இரு மகள்கள், மூன்று மகன்கள் மற்றும் தனது தந்தை ஆகியோரை விட்டு இறக்கிறார். அவரது சொத்தை அவர்களிடையே பங்கிட்டுக் கொடுக்கவும்.

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் இறந்தவரின் தந்தையைத் தீவிர மீதம் உள்ள 7 வாரிசுகளும் முதல் வகுப்பு வாரிசுகள் ஆவர். இவர்கள் இரண்டாம் வகுப்பு வாரிசான மேற்படி தந்தையை சொத்துரிமை பெறுவதிலிருந்து தள்ளி விடுவார். ஆகவே, மேற்படி 7 வாரிசுகளும் இறந்தவரின் சொத்தில் ஏழில் ஒரு பாகம் (1/7) பெறுவார்கள்.

மனைவி	–	1/7 பங்கு
தாய்	–	1/7 பங்கு
இரு மகள்கள்	–	1/7 + 1/7 பங்கு
மூன்று மகன்கள்	–	1/7 + 1/7 + 1/7 பங்கு
தந்தை	–	0 (பங்கில்லை)

∴ 1/7 + 1/7 + 1/7 + 1/7 + 1/7 + 1/7 + 1/7 = 7/7 = 1

4. A dies leaving his widow W1 and W2, his mother M and two sons S1 and S2 and two daughters D1 and D2. Who are entitled to A's property under the Hindu Succession Act and to what extent ?

'A' என்பவர் தனது மனைவிகளான W1 மற்றும் W2 மற்றும் S1 மற்றும் S2யும், D1 மற்றும் D2 என்ற இரண்டு மகள்கையும் விட்டு இறக்கிறார்.

Aயின் சொத்துக்கு இந்து வாரிசுரிமைப்படி யார் எந்த அளவிற்கு உரிமையுடையவர் ஆவர் ?

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் உள்ள அனைவரும் முதல் வகுப்பு வாரிசு தாரர்கள் (Class I heirs) ஆவர். தற்பொழுதைய சிக்கல் யாதெனில், யாருக்கு எந்த அளவிற்கு A-யின் சொத்தில் பங்கு கிடைக்கும் என்பதே. பங்குகள் வருமாறு:

இரு விதவைகளான W1 & W2–ப் பொறுத்தவரை : இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 10–ன் கீழான விதி 1–ன்படி, விதவை மனைவிக்கு இறந்தவரின் சொத்தில் 1 பங்கு உண்டு. ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகள் இருப்பின், அந்த பங்கு பிரித்தளிக்கப்படும். மேற்படி பிரச்சனையில் W1 மற்றும் W2 என்ற இரண்டு விதவைகள் உள்ளனர். ஆகவே அவர்கள் இருவரும் மேற்படி 1 பங்கில் சரிபாதியாக அரை பங்கு வீதம் பெற்றுக் கொள்வார்கள்.

தாயாரான M–ப் பொறுத்தவரை: தாயாரான M என்பவருக்கு, A-யின் சொத்தில் 1 பங்கு கிடைக்கும்.

இரு மகன்களான S1& S2–ப் பொறுத்தவரை: மேற்கண்ட இரு மகன்களுக்கும், A-யின் சொத்தில் தலா ஒரு பங்கு கிடைக்கும்.

இரு மகள்களான S1& S2 –ப் பொறுத்தவரை: இரு மகன்களுக்குக் கிடைத்ததைப் போன்றே, D1 மற்றும் D2 எனும் இரு மகள்களுக்கும் A-யின் சொத்தில் தலா ஒரு பங்கு கிடைக்கும். இறந்து போன A-யின் மொத்த சொத்தில் மேற்கண்டவர்களின் பங்குகளின் அளவை பின்வருமாறு பட்டியலிடலாம்.

இரு விதவைகள்	–	1 பங்கில் தலா பாதி பங்கு (1/12 + 1/12)
தாய்	–	1 பங்கு (2/12)
இரு மகன்கள்	–	தலா ஒரு பங்கு (2/12 + 2/12)
இரு மகள்கள்	–	தலா ஒரு பங்கு (2/12 + 2/12)

∴ 1/12 + 1/12 + 2/12 + 2/12 + 2/12 + 2/12 + 2/12 = 1+1+2+2+2+2+2/12

∴ 12/12 = 1

5. A dies leaving X, the widow of a predecessed son, Y, his daughter's son. How will his properties be divided among them.

முன் இறந்த மகனின் கைம்பெண் 'X' தன் மகளின் மகள் 'Y' இவர்களை விட்டு 'A' இறக்கிறார். அவரது சொத்தை அவர்களிடையே பங்கிட்டுக் கொடுப்பது எவ்வாறு ?

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் முன் இறந்த மகனின் கைம்பெண் 'X'-ம், மகளின் மகள் 'Y'-ம் முதல் வகுப்பு வாரிசுகள். எனவே A வின் சொத்தில் இருவருமே சரிபாதி பங்கை பெற்றுக் கொள்வர். இதில் முன்னதாக இறந்துவிட்ட மகனுக்குச் சேர வேண்டிய பங்கு கிளை விகிதப்படி அவனுடைய கைம்பெண் X-க்கும், அவ்வாறே மகளுக்குச் சேர வேண்டிய பங்கு கிளை விகிதப்படி அவளது மகன் Y க்கும் சென்றடைகிறது.

X - 1/2 பங்கு; Y - 1/2 பங்கு ∴1/2 + 1/2 = 2/2 = 1

6. A Hindu dies leaving behind his legitimate son, widowed daughter-in-law, concubine and illegitimate son. Discuss their right to the estate.

ஒரு இந்து தனது முறை மணப்பிறப்பு மகன், விதவையாகிப் போன மருமகள், வைப்பாட்டி மற்றும் முறைமணப்பிறப்பிலா மகள் ஆகியோரை விட்டுவிட்டு இறக்கிறார். சொத்திற்கு அவர்களுக்குள்ள உரிமையை விவாதிக்க.

தீர்வு :

மேற்படி பிரச்சனையில், 1956–இன் இந்து வாரிசுரிமைச் சட்டப்படியும், பேரா. ஜி.சி.வி.சுப்பாராவ் அவர்களின் 'Family Law in India' புத்தகப்படியும் வைப்பாட்டிக்கும் முறைமணப்பிறப்பிலா மகனுக்கும் சொத்தில் வாரிசுரிமை கிடையாது. ஏனெனில் அச்சட்டத்தின் பிரிவு 3(1)(j)–ஆனது 'உறவு' என்றால் 'சட்ட முறைப்படியான மண உறவினால் ஏற்பட்ட சுற்றம்' ('related' means related by legitimate kinship) என்று கூறுகிறது. எனவே இறந்து போன தந்தையின் சொத்தில் உறவு கொண்டாட விழையும் மகன், முறையான திருமணத்தின் வாயிலாகப் பிறந்தவனாக இருக்க வேண்டும். இதனால் வைப்பாட்டி என்பவளும் இறந்தவனுடன் முறையான திருமண பந்தம் உடையவள் அல்லள். எனவே முதல் வகுப்பு வாரிசுதாரர்களாகிய மேற்படி முறைமணப் பிறப்பு மகனும், விதவையாகிப் போன மருமகளும், இறந்தவரின் சொத்தில் சரிபாதி பங்கு பெறுவார்கள். அதாவது,

முறைமணப்பிறப்பு மகன்– 1/2 பங்கு; விதவை மருமகள் – 1/2 பங்கு;
வைப்பாட்டி – 0 (பங்கில்லை); முறைமணப் பிறப்பிலா மகன் – 0 (பங்கில்லை).

எனினும் இந்து திருமணச் சட்டத்தின் 16–ஆம் பிரிவானது, இல்லாநிலை மற்றும் தவிர்தகுநிலை திருமணத்தின் வாயிலாகப் பிறந்த குழந்தைகள் முறை மணப்பிறப்புக் குழந்தைகளே ஆவர் என்று கூறுகிறது. (Notwithstanding that a marriage is null and void under section 11, any child of such marriage who would have been legitimate if the marriage had been valid, shall be legitimate...- Sec. 16 of the Hindu Marriage Act, 1955). அதாவது திருமணம் என்ற உறவு ஏற்பட்ட பிறகு அது பின்னிட்டு இல்லா

நிலை அல்லது தவிர்தகு நிலை திருமணமாக நீதிமன்றத்தால் விளம்பப்பட்டு தீர்ப் பாணை வழங்கப்பட்டிருந்தாலும், அத்திருமணத்தின் வாயிலாக குழந்தைகள் ஏதும் பிறந்திருப்பின் அவை முறைமணப்பிறப்பு குழந்தைகளாகவே கருதப்படுவர். எனவே இக்குழந்தைகளுக்கு பங்குண்டு. ஆனால் திருமண உறவு ஏற்படாமல் வெறுமனே வைப்பாட்டியாக இருந்த ஒருவளுக்குப் பிறந்த குழந்தைகள் முறைமணப்பிறப்பு குழந்தைகள் ஆகா. எனவே பங்கில்லை. இது சற்று நுணுக்கமான வேறுபாடு.

7. A Hindu dies leaving behind his mother, son's daughter, daughter and an illegitimate son. Distribute the estate according to Hindu Succession Act, 1956.

ஒரு இந்து தன்னுடைய தாய், விதவை, மகனுடைய மகள், மகள் மற்றும் முறையில்லா திருமணத்தில் பிறந்த மகன் ஆகியவர்களை விட்டுவிட்டு இறக்கிறார். அவருடைய சொத்தை இந்து இறங்குரிமைச் சட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்க.

தீர்வு :

இப்பிரச்சனையில் தாய், விதவை, மகனுடைய மகள், மகள் ஆகியோர் முதல் வகுப்பு வாரிசுகள். இவர்கள் இந்து இறங்குரிமைச் (வாரிசுரிமைச்) சட்டத்தின் பிரிவு 9–இன்படி ஏகாகாலத்தில் இறந்தவரின் சொத்தில் பங்கு பெற உரிமையுடைய வர்கள். இங்கு மகனுக்குச் சேர வேண்டிய ஒரு பங்கு, அவன் இல்லாததால் கிளைவழியில் அவனது மகளுக்கு சென்றடைகிறது. மேலும் மேற்கண்டவர்கள் அனைவரும் இறந்தவரின் சொத்தில் சரிசம பங்கைப் பெறுவார்கள். அஃதாவது,

தாய் – 1 பங்கு; விதவை – 1 பங்கு; மகனுடைய மகள் – 1 பங்கு
மகள் – 1 பங்கு

நாம் முன்சென்ற பிரச்சனையில் கண்டபடி, முறையில்லா திருமணத்தில் பிறந்த மகனுக்கு எவ்விதப் பங்கும் கிடையாது (எனினும் முந்தைய பிரச்சனையில் கண்ட வேறுபாட்டையும் தேர்வில் சுட்டிக்காட்டுக). எனவே மேற் கண்ட நான்கு வாரிசுகள், இறந்தவரின் சொத்தில் தலா நான்கில் ஒரு பங்கு (1/4) பெறுவார்கள்.

$$\therefore 1/4 + 1/4 + 1/4 + 1/4 = 4/4 = 1$$

8. Mohan died leaving his concubine, father and mother. Distribute Mohan's separate property under the Hindu Succession Act, 1956.

தன்னுடைய காமக்கிழத்தி, தந்தை, தாய் ஆகியோரை விட்டு மோகன் இறந்தார். மோகனின் தனிச் சொத்தை இந்து உரிமை இறக்கச் சட்டம் 1956–ன் கீழ் பங்கிடுக.

தீர்வு :

மேற்படி பிரச்சனையில் வரும் தாய் இந்து வாரிசுரிமைச் சட்டப்படி முதல் வகுப்பு வாரிசு ஆவார். அதுபோல் தந்தை இரண்டாம் வகுப்பு வாரிசு ஆவார். நாம்

ஏற்கனவே கண்டபடி முதல் வகுப்பு வாரிசு, இரண்டாம் வகுப்பு வாரிசை பங்கு பெறுவதிலிருந்து தள்ளி விடுவார். எனவே மோகனின் தனிச் சொத்து முழுவதும், அவனது தாய்கே சென்றடையும். தந்தைக்கு பங்கில்லை. அதுபோல் நாம் பிரச்சனை எண். 6-ன் தீர்வில் கண்ட விளக்கத்தின்படி மோகனின் காமக் கிழத்திக்கு (வைப்பாட்டி), மோகனின் சொத்தில் பங்கு பெற உரிமையில்லை.

9. 'B' and 'C' are the two sons of 'A'. 'B' got divided from 'A' in 1986. 'A' died in 1987 leaving 'B', 'C', his wife and a daughter. Divide 'A's coparcenary and separate property.

'ஆ' மற்றும் 'இ' இருவரும் 'அ' என்பவரின் இரண்டு மகன்கள். 1986-ல் 'ஆ' என்பவர் 'அ'விடமிருந்து பாகம் பெற்று பிரிந்து சென்றார். 'ஆ', 'இ', தன் மனைவி மற்றும் ஒரு மகள் ஆகியோரை விட்டுவிட்டு 'அ' 1987-ல் இறந்தார். அவரின் பங்குரிமை மற்றும் தனிப்பட்ட சொத்தைப் பங்கிடுக.

தீர்வு:

பங்குரிமைச் சொத்தைப் பொறுத்தவரை: 'அ' என்பவர் விட்டுச் சென்ற பங்குரிமைச் சொத்தைப் பொறுத்த பிரச்சனைக்குத் தீர்வு காண, நாம் 1956-ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் 6-வது பிரிவை சற்று கவனித்தல் அவசியம்.

பிரிவு 6-ன்படி, 1956-ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டம் வந்ததற்குப் பிறகு மிதாக்ஷராப் பங்குரிமைச் சொத்தில், இறக்கும் காலத்தில் உரிமையுள்ள ஒருவர் இறந்து போனால், சொத்திலுள்ள அவனுடைய உரிமை எஞ்சுநர் உரிமைப்படி (Survivorship) உயிரோடு இருக்கும் பிற பங்குரிமையருக்குச் செல்லும். அதாவது இச்சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் விதிகளின்படி செல்லாது.

இருப்பினும் (Proviso) இறந்துபோன பங்குரிமையர் பின்னிணைப்பு பட்டியலில் முதல் வகுப்பில் (Class I of the Schedule) சொல்லப்பட்டிருக்கும் பெண் உறவினரையோ அல்லது அதே வகுப்பில் சொல்லப்பட்டிருக்கும் பெண் உறவினர் வழியாக உரிமை கொண்டாடும் ஆண்களையோ விட்டுவிட்டு இறந்திருந்தால், மிதாக்ஷராப் பங்குரிமையில் அவருக்கு இருக்கும் உரிமை, உயில் எழுதியிருந்தால் அதன்படி அல்லது உயில் எழுதாது இருந்தால் (intestate) உயில் இல்லாத நிலையில் உரிமை இறக்கம் எவ்வாறு செல்லுமோ அவ்வாறு இச் சட்டத்தின் கீழ் செல்லும். மாறாக எஞ்சுநர் உரிமைப்படி செல்லாது.

மேற்படி பிரிவு 6-ன் கீழ் இரு விளக்கங்கள் (Explanation) கொடுக்கப் பட்டுள்ளன. அவை வருமாறு.

விளக்கம் 1 : மேற்படி மிதாக்ஷராப் பங்குரிமையர் இறப்பதற்கு முன்னர் உடனடியாக ஒரு பாகப்பிரிவினை ஏற்பட்டிருந்தால், அந்தப் பாகப்பிரிவினையில்,

அவருக்கு என்ன பங்கு ஒதுக்கப்பட்டிருக்குமோ, அதை அவருடைய பங்கிற்கான உரிமையாகக் கொள்ள வேண்டும்.

விளக்கம் 2: பங்குரிமையர் இறப்பதற்கு முன்பு, ஒருவர் பங்குரிமை அமைப்பை விட்டு (பாகம் பிரித்துக் கொண்டு) தனியாகப் போயிருந்தால், அவரோ அல்லது அவரது வாரிசுதாரர்களோ, அப்பங்குரிமையர் உயில் எழுதாது இறக்கும் காலத்தில் அவருடைய சொத்தில் பங்கு கேட்க முடியாது.

இனி நமது மேற்படி பிரச்சனைக்கு தீர்வு காண வருவோம். அதன்படி, 'ஆ' மற்றும் 'இ' இருவரும் 'அ' என்பவரின் இரண்டு மகன்கள். 1986-ல் 'ஆ' என்பவர் 'அ'விடமிருந்து பாகம் பெற்று பிரிந்து சென்றார். எனவே 'ஆ' எனும் மகன் மேற்படி பிரிவு 6-ன் கீழான விளக்கம் 2-ன்படி, 'அ' என்பவரின் பங்குரிமைச் சொத்தில் பாகம் ஏதும் கோர முடியாது.

ஆனால் மற்றொரு மகனான 'இ' என்பவரும், இறந்தவரின் மனைவியும், மகளும் மேற்படி பிரிவு 6-ன் வரம்புரைப் (proviso) பத்தியின்படி இறந்தவரின் பங்குரிமைச் சொத்தில் பாகம் பெற உரிமை படைத்தவர்கள்.

எடுத்துக்காட்டாக, இறந்து போன 'அ' என்பவருக்கு 90 ஏக்கர் நிலம் (பங்குரிமைச் சொத்து) இருந்தால், அதில் 30 ஏக்கர் நிலத்தை 'ஆ' எனும் மகன் பாகம் பிரித்துக் கொண்டு தனியே சென்றுவிடுகிறார். மீதமுள்ளது 60 ஏக்கர் நிலமாகும். இதில் 'இ' எனும் மற்றொரு மகனின் பங்கு 30 ஏக்கர் நிலமாகும். அதுபோல் மற்றொரு 30 ஏக்கர் நிலம், இறந்து போன 'அ' என்பரின் பங்காகும். இதுவே, பிரிவு 6-ன் கீழான விளக்கம் 1-ன்படி இறந்து போன 'அ' என்பவரின் பங்குரிமைச் சொத்தாகும்.

இங்கு இறந்தவருக்கு பிரிவு 6-ன் கீழான வரம்புரை பத்தியின்படி முதல் வகுப்பு வாரிசுகளான மனைவியும், மகளும் உள்ளனர். எனவே இறந்தவரின் பங்குரிமைச் சொத்திற்கான வாரிசுரிமை இச்சட்டத்தின்படியே செல்லும். மாறாக எஞ்சுநர் உரிமைப்படி 'இ'-க்கு முழுமையாகச் செல்லாது. அதாவது இறந்து போன 'அ'-வின் பங்குரிமைச் சொத்தான 30 ஏக்கர் நிலம் மீண்டும் மூன்றாகப் பிரிகிறது. அவற்றில் 10 ஏக்கர் நிலம் 'இ' எனும் மகனுக்கும், மற்றொரு 10 ஏக்கர் நிலம் இறந்தவரின் மனைவிக்கும், பிறிதொரு 10 ஏக்கர் நிலம் மகளுக்கும் கிடைக்கிறது. மொத்தத்தில் 'இ' எனும் மகனுக்கு அவர் ஒரு பங்குரிமையர் எனும் அடிப்படையில் கிடைத்த 30 ஏக்கர் நிலத்துடன், அவரது தந்தை 'அ' இறந்த காரணத்தால் வாரிசுரிமையின் அடிப்படையில் கிடைத்த 10 ஏக்கர் நிலமும் சேர்ந்து 'இ'க்கு 40 ஏக்கர் நிலம் கிடைக்கிறது. மனைவிக்கும் மகளுக்கும் முன்கண்டது போல் தலா 10 ஏக்கர் நிலம் கிடைக்கிறது. பங்குகளின் அடிப்படையில் இதை விளக்கினால், பின்வருமாறு ஒவ்வொருவருக்கும் பங்குகள் கிடைக்கும்.

மனைவியின் பங்கு – 1/9 (1/3 x 1/3 = 1/9)

மகளின் பங்கு	–	1/9 (1/3 x 1/3 = 1/9)
'இ' எனும் மகனின் பங்கு	–	1/3 + 1/9 = 3+1/9 = 4/9
'ஆ' எனும் மகனின் பங்கு	–	1/3 = 3/9

மேற்கண்டவற்றில், 'இ' எனும் மகனுக்கு தந்தையுடன் (அ) பங்குரிமையர் எனும் முறையில் அவர் விட்டுச் சென்ற மொத்த பங்குரிமைச் சொத்தில் 1/3 பங்கும், மேலும் தந்தை (அ) இறந்து, அவருக்கு பெண் வாரிசுகளான மனைவியும், மகளும் இருப்பதால், பிரிவு 6–ன் வரம்புரைப் பத்தியின்படி, தந்தைக்குரிய பங்குச் சொத்தில் 1/9 பங்கும் (1/3 x 1/3 = 1/9) கூடுதலாகச் சேர்ந்து, 4/9 பங்கு கிடைக்கிறது. 'ஆ' எனும் மகன், முன்பே பாகம் பிரித்துக் கொண்டு சென்றுவிட்ட படியால், தந்தைக்குரிய பங்குச் சொத்தில் பாகம் இல்லை. எனவே 'ஆ'–க்கு 3/9 = 1/3 பங்கு மட்டுமே கிடைக்கத்தக்கது. இவ்வாறு 'அ'–வின் **பங்குரிமைச் சொத்தில்** சொத்து பங்கிடப்படுகிறது.

தனிப்பட்ட சொத்தைப் பொறுத்தவரை: மேற்படி பிரச்சனையில் இருந்து 'அ' என்பவர் தனது தனிப்பட்ட சொத்தையும் (separate property) விட்டுவிட்டு இறந்துள்ளார் என்பதை அறிகிறோம். அச்சொத்து இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் 8, 9 மற்றும் 10–வது பிரிவுகளில் கூறப்பட்டுள்ள வாரிசு முறைப்படி செல்லும். அதாவது மேற்படி பிரச்சனையில் உள்ள 'ஆ', 'இ' ஆகிய இரு மகன்கள், மனைவி, மகள் ஆகியோர் முதல் வகுப்பு வாரிசுகள் ஆவர். எனவே இவர்கள் நால்வரும் இறந்துபோன 'அ'–வின் சொத்தில் தலா நான்கில் ஒரு பங்கு (1/4) பெறுவர். அதாவது 'ஆ' என்பவர் 'அ'–விடமிருந்து பாகம் பெற்று பிரிந்து சென்றுவிட்டதால், அவருக்கு 'அ'–விற்குரிய பங்குரிமைச் சொத்தில் பாகம் இல்லை. ஆனால் 'அ'–வின் தனிப்பட்ட சொத்தில் மற்ற வாரிசுகளுடன் நான்கில் ஒரு பங்கு பாகம் உண்டு.

(இப்பிரச்சனையின் மேற்படி தீர்விற்கு ஆதாரம், சட்டவியல் அறிஞர் **திருமிகு. முல்லா** எழுதிய 'இந்துச் சட்டம்' எனும் நூலின், 15–வது பதிப்பில் பக்கம் எண். 934–ல் கொடுக்கப்பட்டுள்ள முதல் எடுத்துக்காட்டாகும். – ஆசிரியர்.)

10. A dies leaving his adopted son and his brothers. Divide his estate among them.

'A' என்பவர் தனது தத்தெடுக்கப்பட்ட மகனையும், சகோதரனையும் விட்டு இறக்கிறார். அவரது சொத்தை அவர்களிடையே பிரிக்க.

தீர்வு:

தத்தெடுக்கப்பட்ட மகனும், சொந்த மகனும் ஒரே நிலையில் உள்ளனர். இது இந்துத் தத்தெடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டத்தின் மூலம் தெளிவாகும். எனவே தத்தெடுப்பு மகன் முதல் வகுப்பு வாரிசாக கருதப்படுகிறான். இவன்,

மேற்படி பிரச்சனையில் உள்ள இரண்டாம் வகுப்பு வாரிசான சகோதரனை சொத்துரிமை பெறுவதிலிருந்து தள்ளி விடுகிறான். ஆகவே, A-ன் சொத்துக்கள் அனைத்திற்கும், மேற்படி தத்தெடுக்கப்பட்ட மகனே ஏகபோக வாரிசாவான்.

11. A dies leaving his father, brother, daughter's daughter, sister's son. Divide the estate among them.

'A' என்பவர் தனது தந்தையாரையும், சகோதரனையும், மகளின் மகளின் மகளையும், சகோதரனின் மகனையும் விட்டு இறக்கிறார். அவர்களிடையே சொத்தைப் பிரித்துக் கொடுக்கவும்.)

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் உள்ள அனைவரும் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் 8–ன் கீழான இரண்டாம் வகுப்பு வாரிசுகள் (Class II heirs) ஆவர். இருப்பினும், தந்தை முதல் வரிசையிலும், சகோதரன் இரண்டாம் வரிசையிலும், மகளின் மகளின் மகள் மூன்றாவது வரிசையிலும், சகோதரியின் மகன் நான்காவது வரிசையிலும் வருகிறார்கள். எனவே இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் 9–ஆம் பிரிவின்படி, முதல் வரிசையில் வரும் தந்தை அவருக்கு அடுத்த வரிசையில் வரும் அனைவரையுமே இறந்தவரின் (A–யின்) சொத்தில் பங்கு பெறுவதிலிருந்து தள்ளி விடுகிறார்.

தந்தை	–	முழுப்பங்கு
சகோதரர் மகளின் மகளின் மகள் சகோதரியின் மகன்	–	பங்கில்லை

12. A male Hindu died leaving behind the mother, father, a son, a daughter and a daughter of a predeceased son. Distribute the property of A among them.

தாய், தந்தை, ஒரு மகன், ஒரு மகள், முன்பே இறந்து போன ஒரு மகனின் மகள் இவர்களை விட்டுவிட்டு ஒரு இந்து இறந்து விட்டார். அவருடைய சொத்துக்களை இவர்களிடையே பிரித்துக் கொடுக்க.

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் வரும் தந்தையைத் தவிர தாய், ஒரு மகன், ஒரு மகள், முன்பே இறந்து போன ஒரு மகனின் மகள் ஆகியோர் முதல் வகுப்பு வாரிசுகள். தந்தை இரண்டாம் வகுப்பு வாரிசாவார். எனவே இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 8(a)–ன்படி, முதல் வகுப்பு வாரிசுகள், முதலில் பங்கு பெறுவர். அவர்கள் பிரிவு 9–ன்படி, இரண்டாம் வகுப்பு வாரிசை பங்கு பெறுவதிலிருந்து

தள்ளிவிடுவர். மேற்படி முதல் வகுப்பு வாரிசுகளில் முன்னதாக இறந்து போன மகனுக்குரிய ஒரு பங்கை அவனது மகள் கிளைவழியில் அடைவாள். அவர்கள் அனைவரும் இறந்தவரின் சொத்துக்களில் நான்கில் ஒரு பங்கை சமமாக அடைவார்கள். அதாவது,

தாய்	–	1 பங்கு
ஒரு மகன்	–	1 பங்கு
ஒரு மகள்	–	1 பங்கு
முன்னதாக இறந்து போன மகனின் மகள்	–	1 பங்கு
தந்தை	–	0 (பங்கில்லை)

∴ 1/4 + 1/4 + 1/4 + 1/4 = 4/4 = 1

13. A Hindu dies leaving behind his mother, father, brother and the uterine sister. Distribute the estate.

ஒரு இந்து தன் தாய், தந்தை, சகோதரன் மற்றும் தாய்வழி சகோதரி ஆகியோரை விட்டுவிட்டு இறந்து விடுகிறார். சொத்தைப் பங்கிடுக.

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் வரும் தாய் என்பவள் இந்து வாரிசுரிமைச் சட்டப்படி முதல் வகுப்பு வாரிசு ஆவாள். தந்தை, சகோதரன் ஆகியோர் இரண்டாம் வகுப்பு வாரிசு ஆவர்கள். முதல் வகுப்பு வாரிசு, இரண்டாம் வகுப்பு வாரிசுகளை பங்கு பெறுவதிலிருந்து தள்ளிவிடுவார். எனவே தாய்கே இறந்தவரின் முழுச் சொத்தும் கிடைக்கும். தாய்வழிச் சகோதரிக்கு எப்பங்கும் கிடைக்காது. ஏனெனில் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் முதல் வகுப்பு மற்றும் இரண்டாம் வகுப்பு வாரிசு ப் பட்டியலின் இறுதியில் வரும் விளக்கத்தின்படி, சகோதரர் அல்லது சகோதரி எனும் பதங்கள், தாய்வழிச் சகோதரர் அல்லது சகோதரியை உள்ளடக்காது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தாய்வழிச் சகோதரி என்பவள், ஒரே தாய்க்கு மற்றொரு தந்தையால் பிறந்தவள் ஆவாள்.

14. A Hindu dies leaving mother, father, brother, two sons, the widow and daughter of a deceased son. Distribute the estate.

ஒரு இந்து பின்வரும் உறவினர்களைப் பிரிந்து இறக்கிறார். (i) தாய் (ii) தந்தை (iii) சகோதரன் (iv) இரண்டு மகன்கள் (v) விதவை (vi) முன்னதாக இறந்து போன மகனின் மகன். அவரது சொத்தைப் பங்கிடுக.

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் வரும் தாய், இரண்டு மகன்கள், விதவை மற்றும் இறந்து போன மகனின் மகன் ஆகியோர் மட்டுமே முதல் வகுப்பு வாரிசுகள்.

தந்தை, சகோதரன் ஆகியோர் இரண்டாம் வகுப்பு வாரிசுகள். எனவே இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 8(a)–ன்படி, முதல் வகுப்பு வாரிசுகள், முதலில் பங்கு பெறுவர். அவர்கள் பிரிவு 9–ன்படி, இரண்டாம் வகுப்பு வாரிசுகளை பங்கு பெறுவதிலிருந்து தள்ளிவிடுவர். மேலும் அவர்கள் அனைவரும் இறந்தவரின் சொத்தில் சம பங்கு பெறுவர். அதாவது,

தாய்	–	1 பங்கு
இரண்டு மகன்கள்	–	தலா 1 பங்கு
விதவை	–	1 பங்கு
முன்னதாக இறந்து போன மகனின் மகன்	–	1 பங்கு

∴ 1/5 + 1/5 + 1/5 + 1/5 + 1/5 = 5/5 = 1

அதாவது, இறந்தவரின் சொத்தில் அனைவரும் தலா 1/5 பங்கு பெறுவர்.

15. A Hindu died leaving his son's widow, father's widow and brother's widow. - Divide the properties.

ஒரு இந்து தன்னுடைய மகனின் விதவை, அப்பாவின் விதவை மற்றும் சகோதரனின் விதவை ஆகியோரை விட்டுவிட்டு இறக்கிறார். சொத்துக்களைப் பகிர்ந்தளிக்கவும்.

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் உள்ள மகனின் விதவை என்பவள், இந்து வாரிசுரிமைச் சட்டத்தின்படி, முதல் வகுப்பு வாரிசு ஆவாள். அப்பாவின் விதவை, சகோதரனின் விதவை என்பவர்கள் இரண்டாம் வகுப்பு வாரிசுகளில் ஆறாவது வரிசையில் (Entry VI) வருபவர்கள். முதல் வகுப்பு வாரிசு, இரண்டாம் வகுப்பு வாரிசுகளை இறந்தவரின் சொத்தில் பங்கு பெறுவதிலிருந்து தள்ளிவிடுவார். எனவே இறந்தவரின் முழுச் சொத்தும், மகளின் விதவைக்கே சென்றடையும்.

மேற்படி பிரச்சனையில் 'அப்பாவின் விதவை' என்பவள், இறந்து போனவரின் மாற்றாந் தாய் (Step-mother) ஆவாள். **(ஆதாரம் : டீருமிகு. முல்லா எழுதிய இந்துச் சட்டம், 15–ம் பதிப்பு, பக்கம் எண். 958)**. இதனால் அப்பாவின் விதவை என்றவுடன், இறந்தவரின் தாய் என்றும், எனவே அவள் முதல் வகுப்பு வாரிசு என்றும் கொண்டு அவளுக்கு பங்கு ஒதுக்கிவிடக் கூடாது. இறந்தவருக்கு முதல் வகுப்பு வாரிசுகள் எவரும் இல்லாதிருந்து, இரண்டாம் வகுப்பு வாரிசுகளில் முதல் அய்ந்து வரிசைகளில் வரும் வாரிசுகள் எவரும் இல்லாத பட்சத்தில்தான் இறந்தவரின் சொத்தில் அப்பாவின் விதவையும், சகோதரனின் விதவையும் பிரிவு 11–ன்படி சமபங்கு பெறுவார்கள். இங்கு அந்நிலை கிடையாது. எனவே, முன்னதாக இறந்து போன மகளின் விதவைக்கே முழுப் பங்கும் சென்றடையும்.

உயிலின்றி இறந்து போன ஒரு இந்து பெண் விட்டுச் சென்ற சொத்திற்கு வாரிசுரிமை

16. A, a female Hindu, died intestate in 1980 leaving behind a daughter, husband and mother. Divide the estate among them.

'A' என்கிற இந்துப் பெண் ஒருவர், 1980–ல் மகன், கணவன் மற்றும் தாய் ஆகியவர்களை விட்டுவிட்டு, உயில் குறிக்காமல் இறந்து விட்டார். இறந்து போனவரின் சொத்தை அவர்களிடையே பிரித்துக் கொடுக்கவும்.

தீர்வு:

மேற்கண்ட பிரச்சனையில் இறந்து போன A என்ற இந்துப் பெண், சொத்துக்களை சுயமாக சம்பாதித்தாரா அல்லது வேறு வழியில் வந்ததா என்பது குறிப்பிடப்படவில்லை. ஆகவே அச்சொத்துக்களை A என்ற அப்பெண் சுயமாக சம்பாதித்தாகவே கொள்வோம். இதனால், அவளுடைய சொத்தின் வாரிசுரிமையை 1956–ன் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 15(1)தான் கட்டுப்படுத்தும். பிரிவு 15(2) கட்டுப்படுத்தாது.

பிரிவு 15(1)–ன்படி பின்வருவோர் அவளது சொத்தை வரிசைப்படி (Entry) பிரித்துக் கொள்வோம். அவர்கள்

(a) மகன்கள், மகள்கள் (இறந்து போன மகனின்/மகளின் குழந்தைகள்) மற்றும் கணவன்.
(b) கணவனின் வாரிசுகள்.
(c) தாய், தந்தை.
(d) தந்தையின் வாரிசுகள்.
(e) தாயின் வாரிசுகள்.

அதே சமயத்தில் பிரிவு 16–ன் கீழான 1–வது விதியின்படி, பிரிவு 15(1)–ல் கூறப்பட்டுள்ள வாரிசுகள், அதாவது முதல் வரிசையில் உள்ளவர்கள் சொத்து பெறுவதில், அவர்களுக்கு அடுத்துள்ள வரிசைகளில் உள்ளவர்களை தள்ளி விடுவார்கள். முதல் வரிசையிலுள்ளோர்கள், சொத்தைத் தமக்குள் சமமாகப் பிரித்துக் கொள்வார்கள்.

மேற்படி பிரச்சனையில் மகள், கணவன் மற்றும் தாயார் உள்ளனர். மகளும் கணவனும் பிரிவு 15(1)–ல் முதல் வரிசையில் வருகின்றனர். தாயார் மூன்றாவது வரிசையில் வருகிறார். எனவே A எனும் இந்துப் பெண்ணின் சொத்தைப் பெறுவதில் அவளது மகளும், கணவனும் மூன்றாவது வரிசையில் உள்ள தாயைத் தள்ளி விடுகின்றனர். இதனால் A எனும் இந்துப் பெண்ணின் சொத்தில் மகளும் கணவனும் சரிபாதி பாகத்தை பின்வருமாறு அடைகின்றனர்.

மகள்	–	1/2
கணவன்	–	1/2
தாய்	–	0 (பங்கில்லை)

17. A Hindu female dies leaving mother, father, one son and two daughters. Distribute the estate.

ஒரு இந்துப் பெண் தனக்குப் பின் தன் கணவன், தாயார், தந்தை, ஒரு மகன், இரண்டு மகள்கள் ஆகியவர்களைப் பிரித்து இறக்கிறார். சொத்தைப் பங்கிடுக.

தீர்வு:

1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின்பிரிவு 15(1)–ன்படி, ஒரு இந்துப் பெண்ணுக்கு முதல் வரிசை வாரிசுதாரர்கள், அவளது மகன்கள், மகள்கள் மற்றும் கணவன் ஆவர். இவர்கள் இருக்கும்பொழுது பிற வாரிசுகள் சொத்தில் உரிமை கொண்டாட முடியாது. மேற்படி பிரச்சனையின்படி இறந்து போன இந்துப் பெண்ணிற்கு முதல் வரிசை வாரிசுதாரர்களாக கணவன், ஒரு மகன் மற்றும் இரண்டு மகள்கள் உள்ளனர். இவர்கள் மேற்படி பிரிவு 15(1)–ன் கீழ் மூன்றாவது வரிசையில் வரும் தாயார் மற்றும் தந்தையை அப்பெண்ணின் சொத்தில் பங்கு பெறுவதிலிருந்து தள்ளி விடுகின்றனர். எனவே பின்வருமாறு பங்கு பிரிக்கப்படுகிறது.

கணவன்	–	1/4 பங்கு
ஒரு மகன்	–	1/4 பங்கு
இரண்டு மகள்கள்	–	தலா 1/4 பங்கு (1/4 + 1/4 = 1/2)

$\therefore$ 1/4 + 1/4 + 1/2 = 1 + 1 + 2/4 = 4/4 = 1

எனவே இறந்து போன இந்துப் பெண்ணின் மொத்த சொத்தில் மேற்படியோர் தலா 1/4 பங்கு பெறுவர்.

18. A Hindu woman dies leaving behind her mother, her husband, a son and a daughter. How will you divide the property of the deceased?

ஒரு இந்து பெண் தனது தாய், கணவன், ஒரு மகன் மற்றும் ஒரு மகள் ஆகியோரை விட்டு இறந்து விடுகிறார். இறந்த பெண்ணின் சொத்துக்களை எவ்விதம் பிரிக்க வேண்டும்?

தீர்வு:

1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின்பிரிவு 15(1)–ன்படி, ஒரு இந்துப் பெண்ணுக்கு முதல் வரிசை வாரிசுதாரர்கள், அவளது மகன்கள், மகள்கள் மற்றும் கணவன் ஆவர். இவர்கள் இருக்கும்பொழுது பிற வாரிசுகள்

சொத்தில் உரிமை கொண்டாட முடியாது. மேற்படி பிரச்சனையின்படி இறந்து போன இந்துப் பெண்ணிற்கு முதல் வரிசை வாரிசாக கணவன், ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர். இவர்கள் மேற்படி பிரிவு 15(1)–ன் கீழ் மூன்றாவது வரிசையில் வரும் தாயை அப்பெண்ணின் சொத்தில் பங்கு பெறுவதிலிருந்து தள்ளி விடுகின்றனர். எனவே பின்வருமாறு பங்கு பிரிக்கப்படுகிறது.

கணவன்	–	1/3 பங்கு
ஒரு மகன்	–	1/3 பங்கு
ஒரு மகள்	–	1/3 பங்கு

∴ 1/3 + 1/3 + 1/3 = 1 + 1 + 1/3 = 3/3 = 1

19. A married women obtained by way of gift two sums of Rs. 10,000/- from her father and father-in-law respectively. She died in 1962 and is survived by her husband's sister and her own sister. On which of them will the property devolve ?

ஒரு திருமணமான பெண், தனது தந்தையிடமிருந்தும், மாமனாரிடமிருந்தும் தலா ரூ. 10,000/–த்தை கொடையாகப் பெறுகிறாள். அவள் 1962–ஆம் ஆண்டு வாக்கில் தனது கணவனின் சகோதரியையும், தனது சொந்த சகோதரியையும் விட்டு இறக்கிறாள். அவர்களில் யாருக்கு சொத்து சென்றடையும் ?

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் அப்பெண் தனது தந்தையிடமிருந்தும், மாமனாரிடமிருந்தும் தலா ரூ. 10,000/–த்தை பெற்றுக் கொண்டுள்ளாள். அதுவும் கொடையாக (Gift) பெற்றுக் கொண்டுள்ளாளே தவிர, இறங்குரிமையில் பெறவில்லை. ஆகவே அத்தொகை அவளுடைய சுயசம்பாத்தியச் சொத்தாகவே கருதப்படும். எனவே அத்தொகைக்குண்டான வாரிசுரிமைக்கு, 1956–ன் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 15(1)–தான் பொருந்துமே தவிர, பிரிவு 15(2) பொருந்தாது.

மேற்படி பிரச்சனையில் அப்பெண்ணுக்கு குழந்தைகளும் கணவனும் இல்லை. எனவே அவள் விட்டுச் சென்ற மேற்படி தொகையை பிரிவு 15(1)(b)–ன் கீழ் வரும் இரண்டாவது வரிசை வாரிசுகளான, அவளது கணவனின் வாரிசுகள் அடைய உரிமை படைத்தவர்கள். இங்கு கணவனின் சகோதரி உள்ளாள். இவள் கணவனின் வாரிசு ஆவார். எனவே அப்பெண்ணின் மேற்படி தொகை முழுவதும், அவளது கணவனின் சகோதரிக்கே சென்றடையும். அப்பெண்ணின் சகோதரிக்கு எப்பங்கும் கிடையாது.

20. A Hindu woman gets a sum of Rs.5000/- by way of

inheritance and another sum of Rs.10,000 by way of gift from her father. Further she gets a sum of Rs.15,000 by way of inheritance from her father-in-law. She died intestate leaving the above properties. She has her brother and her husband's brother as relatives. How will you divide her properties?

ஒரு இந்துப் பெண்ணிற்கு தன் தந்தையிடமிருந்து ரூ. 5,000/– மரபுரிமை இறக்கத்தின் மூலமாகவும், ரூ.10,000/– கொடையாகவும் கிடைக்கிறது. மேலும் அவளது மாமனாரிடமிருந்து மரபுரிமை இறக்கத்தால் ரூ. 15,000/– கிடைக்கிறது. அப்பெண் உயில் எழுதாமல், தனது மேற்கண்ட சொத்துக்களை விட்டு இறந்து விடுகின்றாள். அவளுக்கு அவளின் சகோதரன், கணவனின் சகோதரன் ஆகிய உறவினர் உள்ளனர். இந்நிலையில் அவளது சொத்து எப்படி பிரிக்கப்படும் ?

தீர்வு:

மேற்படி பிரச்சனையில், இறந்து போன இந்துப் பெண் இருவகையில் தன் சொத்துக்களைப் பெற்றுள்ளாள். அதாவது, மரபுரிமை இறக்கத்தின் மூலம் கிடைத்த சொத்து ரூ. 5,000 + ரூ. 15,000 = ரூ. 20,000/–. கொடையாகக் கிடைத்த சொத்து – ரூ. 10,000/–.

ஒரு இந்துப் பெண் மரபுரிமை இறக்கத்தில் பெற்ற சொத்தை அவளுக்கு மகனோ, மகளோ அல்லது இறந்த மகனின் அல்லது மகளின் குழந்தைகளோ இல்லாததால், 1956–ன் இந்து வாரிசுரிமைச் சட்டம் பிரிவு 15(2)–ப் பயன்படுத்தி பங்கு பிரிக்க வேண்டும். அதாவது,

(i) பிரிவு 15(2) (a)–ன்படி ஒரு இந்துப் பெண் தனது தந்தையிடமிருந்து மரபுரிமை இறக்கத்தால் பெற்ற சொத்து, தந்தையின் வாரிசுகளுக்கே செல்லுமே தவிர, பிரிவு 15(1)–ல் குறிப்பிடப்பட்ட பிற வாரிசுகளுக்குச் செல்லாது. இங்கு தந்தையின் வாரிசாக உள்ளவர், அப்பெண்ணின் சகோதரன் ஆவார். எனவே அப்பெண் தனது தந்தையிடமிருந்து இறங்குரிமையில் அடைந்த ரூ. 5,000/– த்தை அவளுடைய சகோதரன் பெறுவார்.

(ii) பிரிவு 15(2) (b)–ன்படி ஒரு இந்துப் பெண் தனது மாமனாரிடமிருந்து மரபுரிமை இறக்கத்தால் பெற்ற சொத்து, கணவனின் வாரிசுகளுக்கே செல்லுமே தவிர, பிரிவு 15(1)–ல் குறிப்பிடப்பட்ட பிற வாரிசுகளுக்குச் செல்லாது. இங்கு கணவனின் வாரிசாக உள்ளவர், அக்கணவனின் சகோதரன் ஆவார். எனவே அப்பெண் தனது மாமனாரிடமிருந்து இறங்குரிமையில் அடைந்த ரூ. 15,000/– த்தை அவளுடைய கணவனின் சகோதரன் பெறுவார்.

(iii) கொடையாகப் பெற்ற ரூ. 10,000/–த்தை மேற்படி பிரிவு 15(2) கட்டுப்

படுத்தாது. ஏனெனில் அத்தொகை அவளுடைய சுய சம்பாத்தியச் சொத்தாகிறது. எனவே, இங்கு அப்பெண்ணிற்கு பிரிவு 15(1) (a)–ன்படியிலான முதல் வரிசை வாரிசுகள் (மகன், மகள், கணவன்) எவரும் இல்லாததால், அத்தொகை பிரிவு 15 (1)(b)–ன்படியிலான இரண்டாம் வரிசை வாரிசுகளுக்கே சென்றடையும். அதாவது கணவனின் வாரிசுகளுக்கு சென்றடையும். மேற்படி பிரச்சனையில் கணவனின் வாரிசாக உள்ளவர், அக்கணவனின் சகோதரன் ஆவார். எனவே மேற்படி ரூ.10,000–த்தை கணவனின் சகோதரன் முழுமையாக அடைவார்.

21. A Hindu woman dies leaving her son, daughter and brother; son and daughter of her deceased husband by another wife. She has property inherited from her mother. Distribute the propery.

ஒரு இந்து பெண் தனது மகன், மகள் மற்றும் சகோதரையும், தனது கணவருக்கு மற்றொரு மனைவி மூலம் பிறந்த மகன் மற்றும் மகளையும் விட்டு விட்டு இறக்கிறாள். அவளுக்கு அவளது தாயாரிடமிருந்து இறங்குரிமையில் பெற்ற சொத்து உள்ளது. அச்சொத்தைப் பங்கிடுக.

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் இறந்து போன அப்பெண்ணிற்கு மகனும், மகளும் உள்ளனர். எனவே இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 15(2)–ன்படி யாரிடமிருந்து அவள் சொத்தை இறங்குரிமையில் பெற்றாள் என்பதைக் கவனிக்கத் தேவை இல்லை. பிரிவு 15(1)–ன்படி அவளது சொத்தின் வாரிசுரிமை அமையும். அவளது சொத்தைப் பின்வருமாறு பிரித்தல் வேண்டும். அஃதாவது,

இங்கு அவளது கணவனுக்கு மற்றொரு மனைவியின் மூலம் பிறந்த மகனும், மகளும் மாற்றாந்தாய் குழந்தைகளாக உள்ளனர். இவர்கள் மேற்படி பிரிவு 15(1) (a)–ன் கீழ் 'மகன்' மற்றும் 'மகள்' எனும் பதத்தின் கீழ் வருபவர்களல்ல. இவர்கள், பிரிவு 15(1)(b)–ன் கீழ் கணவனின் வாரிசுகளாக மட்டுமே வருகின்றனர். மேலும் அப்பெண்ணின் சகோதரர் பிரிவு 15(1)(d)–ன் கீழ் தந்தையின் வாரிசாக வருகிறார்.

எனவே பிரிவு 15(1)(a)–ன்படி, அப்பெண்ணுக்குப் பிறந்த மகனும், மகளும் அவர்களுக்கு அடுத்த வரிசையில் வரும் வாரிசுகளான மேற்படியார்களை தள்ளி விட்டு, அப்பெண்ணின் சொத்தை சம பங்கில் அடைவர். அதாவது அப்பெண்ணின் சொத்தில் அப்பெண்ணின் மகனும் மகளும் தலா 1/2 பங்கு அடைவர்.

மகன் – 1/2 பங்கு
மகள் – 1/2 பங்கு

∴ 1/2 + 1/2 = 2/2 = 1

-oOo-

[ii] இசுலாமிய மரபுமுறை இறங்குரிமைச் சட்டம் [Mohammaden Law of Inheritance]

சுன்னீ (அல்லது) ஹனபி பிரிவு இசுலாமியர்கள் விட்டுச் சென்ற சொத்தைப் பொறுத்து பங்கீடு

22. A Hanafi Muslim dies leaving his wife, mother and an daughter. Distribute the estate among themselves.

ஒரு ஹனபி முஸ்லீம் தனது மனைவி, தாய் மற்றும் ஒரு மகளை விட்டுவிட்டு இறக்கிறார். அவர்களிடையே சொத்தினைப் பிரிக்கவும்.

தீர்வு:

மேற்படி பிரச்சனைக்குத் தீர்வளிக்க நாம் ஹனபி இசுலாமியர்களுக்குப் பொருந்தக் கூடிய 'ரத்' (Radd) எனப்படும் **'இறக்க விதிக் கொள்கையை' [Doctrine of Radd (or) Return]** நாம் ஒரு முறை நினைவிற்கு கொண்டு வர வேண்டும்.

இசுலாமியச் சட்டப்படி, பங்குதாரர்களின் பங்கை அவரவர்களின் விகிதப் படி கொடுத்த பின்னர் மீதி இருந்தால் அது எச்சதாரர்களுக்குப் போய்ச் சேரும். எச்சதாரர்கள் எவரும் இறந்தவரின் சொத்துக்கு வாரிசாக இல்லையெனில் மீதமுள்ள பங்கைத் தூரத்து உறவினர்கள் பெற மாட்டார்கள். அதற்கு மாறாக மீதம் உள்ளதை பங்குதாரர்கள் அவரவர் பங்கின் விகிதப்படி கூடுதலாகப் (கூட்டிப்) பெறுவர். இப்படி அவர்களின் பங்கிற்கு மேல் அதிகமாகப் பங்கு இறங்குவதால் (கிடைப்பதால்) இதை இறக்க விதிக் கொள்கை என அழைக்கின்றனர். இதனால் பங்குதாரர்களின் பங்கு அதிகமாகும். இறக்க விதிக் கொள்கையைப் பயன் படுத்தக் கீழ் எண்களின் கூட்டுத் தொகையை மேல் எண்களின் கூட்டுத் தொகையின் அளவிற்குக் குறைத்துக் கொள்ள வேண்டும், என்பதே இறக்க விதிக் கொள்கையாகும்.

ஒருவேளை இறந்து போன இசுலாமியர் ஒருவருக்கு கணவனோ, மனைவியோ பங்குதாரராய் இருந்து, இறந்தவரின் சொத்தில் வேறு பங்கு தாரர்களும் பங்கு பெற்றால், மேற்படி இறக்க விதிக் கொள்கையைப் பயன்படுத்தி அக்கணவனுக்கு அல்லது மனைவிக்கு பங்கை அதிகரித்துத் தரக் கூடாது. கணவன் அல்லது மனைவிக்குரிய பங்கு நீங்கலாக எஞ்சியிருக்கும் பங்கு தாருக்கே, இறக்க விதிக் கொள்கையை பயன்படுத்திப் பங்கை அதிகரித்துத் தர வேண்டும்.

மேற்படி பிரச்சனையில் இறந்து போனவருக்கு மனைவி, தாய், மகள் ஆகியோர் வாரிசாக உள்ளனர். இவர்களின் இயல்பான பங்கு பின்வருமாறு.

மனைவி பெறும் பங்கு : 1/8 (1 – 1/8 = 7/8)

தாய் பெறும் பங்கு : 1/6

மகள் பெறும் பங்கு : 1/2 (3/6)

மேற்கண்ட பங்குகளைக் கூட்டினால், பின்னத்தின் மேல் எண்களும், கீழ் எண்களும் சமமாக வராது.

∴ 1/8 + 1/6 + 1/2 = 3 + 4 + 12/24 = 19/24 (சமமில்லை)

எனவே இதை இறக்கவிதிக் கொள்கையைப் பின்பற்றி, சமப்படுத்த வேண்டும். இங்கு மனைவியுடன் வேறு பங்குதாரர்களும் உள்ளதால், மனைவியின் பங்கை இறக்க விதிக் கொள்கையைப் பயன்படுத்தி அதிகரித்தல் கூடாது. அவளது பங்கு எவ்வித மாற்றமுமின்றி அப்படியே இருத்தல் வேண்டும். எனவே மீதியுள்ள பங்குதாரர்களின் பங்கை மட்டிலும் அதிகப்படுத்த வேண்டும். அதாவது தாய் மற்றும் மகளின் பங்குகளைச் சமப்படுத்த வேண்டும். இதற்கு மனைவி பெறும் பங்கிலிருந்து எஞ்சியுள்ள பங்கை (7/8) கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதாவது, தாய் மற்றும் மகளின் பங்குகள் முறையே 1/6 என்றும் 1/2 என்றும் வருகிறது. இதில் கீழ் இலக்க எண்கள் சமமாக இல்லை. எனவே கீழ் இலக்க எண்ணை சமப்படுத்த, பொதுவான பகுவெண் (common denominator) (பின்னத்தின் கீழ் இலக்க எண்) ஒன்றை எடுத்துக் கொள்ள வேண்டும். பொதுவான பகுவெண் கொண்டு வரும் பொருட்டு, தாய்க்கு அளிக்கப்பட்ட 1/6 பங்கு என்பதற்கு விகிதாச்சாரமாக மகளின் பங்கான 1/2–அய், 3/6 என மாற்றிக் கொள்ள வேண்டும். (3/6 எனும் பின்னத்தைப் பகுப்பின் மீண்டும் 1/2 எனும் பின்னம் வந்துவிடும் என்பதை கவனத்தில் கொள்க. கீழ் இலக்க எண், இரண்டு பின்னங்களுக்கும் பொதுவாக இருப்பதற்காக இந்த ஏற்பாடு. எனவே 3/6 எப்படி வந்தது என்று குழம்பிக் கொள்ள வேண்டாம்– ஆசிரியர்).

தற்பொழுது தாய் மற்றும் மகளின் மேற்படி பங்குகளைக் கூட்டுவோம். 1/6 + 3/6 = 4/6. இங்கு இருவரின் பங்குகளின் எண்ணிக்கை 1 + 3 = 4 ஆகும். எனவே பொதுவான பகுவெண்ணாக மேற்படி 4–அய் கணக்கில் கொள்ள வேண்டும். தாய் மற்றும் மகளின் பங்கு 1 : 3 எனும் விகிதத்தில் உள்ளது. இந்த விகிதத்தின் அடிப்படையில் தாயின் பங்கான 1/6 என்பதை **1/4**–ஆகவும், மகளின் பங்கான 3/6 =1/2 என்பதை **3/4**–ஆகவும் கொண்டு பங்குகளை அதிகரிக்கலாம். இவர்கள் மேற்கண்ட பங்குகளை, மனைவியின் 1/8 பங்கு போக மீதம் உள்ள 7/8 பங்கிலிருந்து அடைகிறார்கள். இதனை பின்வருமாறு கணக்கிடுவோம்.

தாய் 1/6 – **1/4** (பங்கு அதிகரிப்பு) X 7/8 (எஞ்சியது) = 7/32

மகள் 1/2 – **3/4** (பங்கு அதிகரிப்பு) X 7/8 (எஞ்சியது) = 21/32

இனி மனைவி பெற்ற மாறாத பங்கையும், தாயும், மகளும் இறக்க விதிக் கொள்கைப்படி மேற்கண்டவாறு பெற்ற அதிகரிக்கப்பட்ட பங்கையும் தற்பொழுது பின்வருமாறு கூட்டுவோம்.

1/8 + 7/32 + 21/32 = 4 + 7 + 21/32 = 32/32 = 1 (சமமாகிவிட்டது)

எனவே மேற்படியார்களின் பங்கு பின்வருமாறு அமைகிறது.

மனைவி பெறும் பங்கு : 4/32

தாய் பெறும் பங்கு : 7/32

மகள் பெறும் பங்கு : 21/32

23. A Hanafi Mohammedan dies leaving her husband, mother and daughter. Distribute the estate.

ஹனபி முகமதியர் ஒருவர் தன் கணவர், தாய், மகள் ஆகியோர்களை விட்டுவிட்டு இறக்கிறார். சொத்தினை பகிர்ந்தளிக்க.

தீர்வு:

கணவன் பெறும் பங்கு : 1/4 (மகள் உள்ளதால் குறைவு)

தாய் பெறும் பங்கு : 1/6 (மகள் உள்ளதால் குறைவு)

மகள் பெறும் பங்கு : 1/2 (மகன் இல்லாததால் அதிகம்)

இனி இப்பங்குகளை பின்வருமாறு கூட்டுவோம்.

1/4 + 1/6 + 1/2 = 3 + 2 + 6/12 = 11/12 (சமமில்லை)

இங்கு 1/12 பங்கு மீதமுள்ளது. மேற்படி பிரச்சனையில் இந்த எஞ்சிய பங்கைப் பெறுவதற்கு எச்சதாரர் எவரும் இல்லை. எனவே மேற்படி பின்னத்தை (11/12) சமன் செய்ய, இறக்க விதிக் கொள்கையை (Doctrine of Radd) நாம் பயன்படுத்த வேண்டும்.

மேற்படி பிரச்சனையில் இறந்து போனவருக்கு கணவன் வாரிசாக உள்ளார். இறக்க விதிக் கொள்கையின்படி, இறந்து போன இஸ்லாமியர் ஒருவருக்கு கணவனோ, மனைவியோ பங்குதாரராய் இருந்து, இறந்தவரின் சொத்தில் வேறு பங்குதாரர்களும் பங்கு பெற்றால், அக்கொள்கையைப் பயன் படுத்தி அக்கணவனுக்கு அல்லது மனைவிக்கு பங்கை அதிகரித்துத் தரக் கூடாது. கணவன் அல்லது மனைவிக்குரிய பங்கு நீங்கலாக எஞ்சியிருக்கும் பங்கு தாரருக்கே, இறக்க விதிக் கொள்கையை பயன்படுத்திப் பங்கை அதிகரித்துத் தர வேண்டும். அவரது பங்கு, மாறாமல் அப்படியே இருக்க வேண்டும். இதனால், அதிகரிக்கப்பட்ட பங்கைப் பெற உரிமையுடைய வாரிசுகள், தாயும், மகளும் ஆவார்.

இவர்களுக்கு பங்கு கொடுக்க, கணவனின் பங்கு போக எஞ்சியுள்ள பங்கை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். ∴ 1 – 1/4 = 3/4 (எஞ்சியுள்ள பங்கு).

இங்கு, தாய் மற்றும் மகளின் பங்குகள் முறையே 1/6 என்றும் 1/2 என்றும் வருகிறது. இதில் கீழ் இலக்க எண்கள் சமமாக இல்லை. எனவே கீழ் இலக்க எண்ணை சமப்படுத்த, பொதுவான பகுவெண் (common denominator) (பின்னத்தின் கீழ் இலக்க எண்) ஒன்றை எடுத்துக் கொள்ள வேண்டும். பொதுவான பகுவெண் கொண்டு வரும் பொருட்டு, தாய்க்கு அளிக்கப்பட்ட 1/6 பங்கு என்பதற்கு விகிதாச்சாரமாக மகளின் பங்கான 1/2–அய், 3/6 என மாற்றிக் கொள்ள வேண்டும். (3/6 எனும் பின்னத்தைப் பகுப்பின் மீண்டும் 1/2 எனும் பின்னம் வந்துவிடும் என்பதை கவனத்தில் கொள்க. கீழ் இலக்க எண், இரண்டு பின்னங்களுக்கும் பொதுவாக இருப்பதற்காக இந்த ஏற்பாடு. எனவே 3/6 எப்படி வந்தது என்று குழம்பிக் கொள்ள வேண்டாம்– ஆசிரியர்).

தற்பொழுது தாய் மற்றும் மகளின் மேற்படி பங்குகளைக் கூட்டுவோம். 1/6 + 3/6 = 4/6. இங்கு இருவரின் பங்குகளின் எண்ணிக்கை 1 + 3 = 4 ஆகும். எனவே பொதுவான பகுவெண்ணாக மேற்படி 4–அய் கணக்கில் கொள்ள வேண்டும். தாய் மற்றும் மகளின் பங்கு 1 : 3 எனும் விகிதத்தில் உள்ளது. இந்த விகிதத்தின் அடிப்படையில் தாயின் பங்கான 1/6 என்பதை **1/4**–ஆகவும், மகளின் பங்கான 3/6 =1/2 என்பதை **3/4**–ஆகவும் கொண்டு பங்குகளை அதிகரிக்கலாம். இவர்கள் மேற்கண்ட பங்குகளை, கணவனின் 1/4 பங்கு போக மீதம் உள்ள 3/4 பங்கிலிருந்து அடைகிறார்கள். இதனை பின்வருமாறு கணக்கிடுவோம்.

தாய் 1/6 – **1/4** (பங்கு அதிகரிப்பு) X 3/4 (எஞ்சியது) = 3/16

மகள் 1/2 – **3/4** (பங்கு அதிகரிப்பு) X 3/4 (எஞ்சியது) = 9/16

இனி கணவன் பெற்ற மாறாத பங்கையும், தாயும், மகளும் இறக்க விதிக் கொள்கைப்படி மேற்கண்டவாறு பெற்ற அதிகரிக்கப்பட்ட பங்கையும் தற்பொழுது பின்வருமாறு கூட்டுவோம்.

1/4 + 3/16 + 9/16 = 4 + 3 + 9/16 = 16/16 = 1 (சமமாகிவிட்டது)

எனவே மேற்படியார்களின் பங்கு பின்வருமாறு அமைகிறது.

கணவன் பெறும் பங்கு	:	4/16
தாய் பெறும் பங்கு	:	3/16
மகள் பெறும் பங்கு	:	9/16

24. A Hanafi Mohammedan died leaving his wife, mother, full sister and daughter - Divide the properties.

ஒரு ஹனபி முகம்மதியர் மனைவி, தாய், முழு இரத்த உறவு சகோதரி

மற்றும் மகளை விட்டுவிட்டு இறக்கிறார். சொத்துக்களை பகிர்ந்தளிக்கவும்.

தீர்வு:

மேற்படி பிரச்சனைக்குத் தீர்வு காணும் முன், முழு இரத்த உறவு சகோதரி எவ்விதம் தனது பங்கை அடைவாள் என்பதை முதலில் அறிதல் வேண்டும். முழு இரத்த உறவு சகோதரி என்பவள், உடன் பிறந்தவள் என்று பொருள்.

இறந்தவருக்கு குழந்தை, மகனின் குழந்தை, தந்தை, பாட்டன் மற்றும் முழு இரத்த உறவுச் சகோதரர் (full brother) உயிருடன் இல்லாத சமயத்தில் முழு இரத்த உறவுச் சகோதரிக்கு பின்வருமாறு பங்கு கிடைக்கும். அதாவது அவளுக்கு இறந்தவர் விட்டுச் சென்ற சொத்தில் 1/2 பங்கு கிடைக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட முழுச் சகோதரிகள் இருப்பின், அவர்கள் 2/3 பங்கினை தங்களுக்குள் சமமாகப் பங்கிட்டுக் கொள்வர். ஆனால் மேற்படியார்களில் எவரேனும் உயிருடன் இருப்பின், அவர்கள் அடைந்த பங்கு போக எஞ்சியிருக்கும் பங்கை, முழு இரத்த உறவு சகோதரி எச்சதாரராக (Residuary) அடைவாள். இனி மேற்படியார்களின் பங்களவைக் காண்போம்.

மனைவி பெறும் பங்கு : 1/8 (மகள் உள்ளதால் குறைவு)

தாய் பெறும் பங்கு : 1/6 (மகள் உள்ளதால் குறைவு)

மகள் பெறும் பங்கு : 1/2 (மகன் இல்லாததால் அதிகம்)

இவர்களின் பங்கை முதலில் பின்வருமாறு கூட்டுவோம்.

∴ 1/8 + 1/6 + 1/2 = 3 + 4 + 12/24 = 19/24

மேற்படி 19/24 பங்கில், எஞ்சியுள்ள பங்கு 5/24 ஆகும். இப்பங்கை முழு இரத்த உறவு சகோதரி, எச்சதாரராக அடைவாள். எனவே மேற்படியார்களின் பங்களவு பின்வருமாறு அமைகிறது.

மனைவி பெறும் பங்கு : 3/24 (பங்குதாரர்)

தாய் பெறும் பங்கு : 4/24 (பங்குதாரர்)

மகள் பெறும் பங்கு : 12/24 (பங்குதாரர்)

முழுச் சகோதரியின் பங்கு : 5/24 (எச்சதாரர்)

∴ 3/24 + 4/24 + 12/24 + 5/24 = 3 + 4 + 12 + 5/24 = 24/24 = 1

25. A Hanafi Mohammedan dies leaving a son, two daughters, mother and a brother. Distribute the estate of the deceased among them.

ஒரு ஹனபி முகம்மதியர் ஒரு மகன், இரண்டு மகள்கள், தாய் மற்றும்

ஒரு சகோதரர் ஆகியவர்களை விட்டுவிட்டு இறக்கிறார். அவரின் சொத்தை பங்கீடு செய்க.

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் வரும் சகோதரர் (உடன் பிறந்தவர் - full brother) எனக் கொண்டால், அவர் ஒரு எச்சதாரராக மட்டுமே பங்கு பெறுவார். மற்றவர்கள் அடைந்த சொத்து போக, எஞ்சியிருப்பதை அவர் அடைவார். இனி மேற்படியார்களிடையே சொத்தைப் பிரிப்போம்.

தாய் பெறும் பங்கு : 1/6 (பங்குதாரர்) (குழந்தைகள் உள்ளதால்)

தாயின் பங்கு போக எஞ்சியுள்ள பங்கு 1 – 1/6 = 5/6 ஆகும். இப்பங்கை மகனும் இரு மகள்களும் தங்களுக்குள் அடைவார்கள்.

மகன் பெறும் பங்கு : .2/4 X 5/6 = 10/24 (எச்சதாரர்)

2 மகள்கள் கூட்டாக
பெறும் பங்கு : 2/4 X 5/6 = 10/24 (எச்சதாரர்)

(2 மகள்களில் தலா ஒவ்வொருவரும் பெறும் பங்கு 1/4 X 5/6 = 5/24)

இனி இப்பங்குகளைக் கூட்டுவோம்.

1/6 + 10/24 + 5/24 + 5/24 = 4+ 10 + 5 + 5/24 = 24/24 = 1

இங்கு பங்குகள் எதுவும் எஞ்சியிருக்கவில்லை. எனவே சகோதரருக்கு பங்கில்லை.

குறிப்பு: ஹனபி (சுன்னீ) சட்டப்படி மகனுக்கு இரு மடங்கு பங்குகள், மகள் எஞ்சியுள்ள ஒரு பங்கைப் பெறுவார். இங்கு ஒரு மகனும், இரு மகள்களும் உள்ளனர். மகனின் பங்கு 2 + இரு மகள்களின் பங்கு 1 +1 = ஆக மொத்தம் 4 பங்கு. இந்த 4 எனும் இலக்கத்தை மகனுக்கும், மகளுக்கும் பங்கு கணக்கிடும் பின்னத்தின் கீழ் இலக்க எண்ணாகக் கொண்டுள்ளோம் என்பதை கவனத்தில் கொள்க. எனவே எஞ்சியுள்ள 5/6 பாக சொத்தை மொத்தம் நான்கு பாகங்களாக்கி கொண்டு, பங்கு பிரிக்க வேண்டும்.

26. A Sunni Mohammedan died leaving her husband, mother, father, daughter and brother. Distribute her properties to those heirs.

ஒரு சுன்னி முஸ்லீம் தன் கணவர், தாய், தந்தை, மகள் மற்றும் சகோதரர் ஆகியோரை விட்டுவிட்டு இறக்கிறார். அவருடைய சொத்துக்களை அவ்வாரிசுகளுக்கு பங்கிடுக.

தீர்வு:

கணவர் பெறும் பங்கு : 1/4 = 3/12 (மகள் உள்ளதால்)

தாய் பெறும் பங்கு : 1/6 = 2/12 (மகள் உள்ளதால்)

தந்தை பெறும் பங்கு : 1/6 = 2/12 (மகள் உள்ளதால்)

மகள் பெறும் பங்கு : 1/2 = 6/12 (மகன் இல்லாததால்)

தற்பொழுது மேற்கண்ட பங்குகளைப் பின்வருமாறு கூட்டுவோம்.

3/12 + 2/12 + 2/12 + 6/12 = 3+2+2+6/12 = 13/12

மேற்கண்ட பின்னத்தில் மேலே உள்ள எண்களின் கூட்டுத் தொகை 13. கீழே உள்ள எண் 12 ஆகும். அதாவது கீழ் உள்ள எண்களின் கூட்டுத் தொகை, மேல் எண்களின் கூட்டுத் தொகையை விட குறைவாக உள்ளது. எனவே சமமில்லாமல் உள்ளது. இங்கு ஏற்ற விதிக் கொள்கையைப் (Doctrine of Aul) பயன்படுத்தி, மேல் எண்களின் கூட்டுத் தொகைக்கு சமமாக கீழ் எண்களின் கூட்டுத் தொகையில் ஒன்று சேர்த்து 13 என ஏற்றி, மேல் எண்களின் கூட்டுத் தொகையுடன் சமன்படுத்த வேண்டும். தற்பொழுது கணவரின் பங்கு 3/13 என்றும், தாயின் பங்கு 2/13 என்றும், தந்தையின் பங்கு 2/13 என்றும், மகளின் பங்கு 6/13 என்றும் வரும். இவ்வாறு செய்வதனால், மேல் எண்களின் கூட்டுத் தொகையும், கீழ் எண்களின் கூட்டுத் தொகையும் 13/13 என்று சமமாகிவிடுகிறது. அதாவது,

∴ 3/13 + 2/13 + 2/13 + 6/13 = 3+2+2+6/13 = 13/13 = 1 ஆகும்.

சகோதரர் என்பவர் இறந்தவரின் மேற்படி வாரிசுகள் பங்கு பிரித்துக் கொண்டது போக எஞ்சியிருப்பதை எச்சதாரராக பெற உரிமை படைத்தவர். இங்கு எப்பங்கும் எஞ்சியில்லை. எனவே சகோதரருக்கு பங்கில்லை. மேற்படியார்களின் பங்களவு பின்வருமாறு அமைகிறது.

கணவர் பெறும் பங்கு : 3/13

தாய் பெறும் பங்கு : 2/13

தந்தை பெறும் பங்கு : 2/13

மகள் பெறும் பங்கு : 6/13

சகோதரர் பெறும் பங்கு : 0 (பங்கில்லை)

27. A Sunni Mohammedan dies leaving mother, daughter and his son's daughter. Divide the estate among them.

தாயார், மகள் மற்றும் ஒரு மகனின் மகள் இவர்களை விட்டு ஒரு சுன்னி முகமதியர் இறக்கிறார். சொத்தை இவர்களிடையே பங்கிடுக.

தீர்வு:

தாய் பெறும் பங்கு	:	1/6
மகள் பெறும் பங்கு	:	1/2 (மகன் இல்லாததால் கூடுதல் பங்கு)
மகனின் மகள் பெறும் பங்கு	:	1/6 (மகன் இல்லாத நிலையில், மகள் 1/2 பங்கு பெறுவதால், மகனின் மகளின் பங்கு 1/6–ஆக குறைகிறது.)

1/6 + 1/2 + 1/6 = 1 + 3 + 1/6 = 5/6 **(சமமில்லை)**

மேற்கண்டவர்கள் இசுலாமியச் சட்டப்படி பெறும் பங்குகளின் கூட்டுத் தொகை 5/6. இது சமமாக இல்லை. எனவே, இறக்க விதிப்படி (Doctrine of Radd) மொத்த பங்குகளின் கூட்டுத் தொகை 5/5 என வர வேண்டும். இங்கு அதிகமாக உள்ள பங்கு 1/6 ஆகும். இதை 1 : 3 : 1 என்ற விகிதப்படி அவர்களிடையே பிரித்துக் கொடுக்க வேண்டும். அதாவது அதிகம் உள்ளதில் 1/5 + 3/5 + 1/5 என்ற விகிதப்படி பிரித்துக் கொடுக்க வேண்டும். அப்படியானால்.

தாய் பெறும் பங்கு :

1/6 X 1/5 = 1/30 + 1/6 = 1 + 5/30 = 6/30 = 1/5

மகள் பெறும் பங்கு :

1/6 X 3/5 = 3/30 + 1/2 = 3+15/30 = 18/30 = 3/5

மகனின் மகள் பெறும் பங்கு :

1/6 X 1/5 = 1/30 + 1/6 = 1+6/30 = 6/30 = 1/5

தற்பொழுது இறக்க விதிக் கொள்கைப்படி, மேற்படி பங்குகளின் கூட்டுத் தொகை பின்வருமாறு சமமாகிவிட்டது.

1/5 + 3/5 + 1/5 = 1 + 3 + 1/5 = 5/5 = 1 **(சமம்)**

28. A Hanafi muslim dies leaving behind his mother, wife son and two daughters. Divide his estate among them.

ஒரு ஹனபி முஸ்லீம் தனது தாய், மனைவி, மகன் மற்றும் இரு மகள்கள் ஆகியவர்களை விட்டுவிட்டு இறக்கிறார். இறந்தவரின் சொத்தை அவர்களிடையே பிரித்துக் கொடுக்கவும்.

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் இறந்தவருக்கு குழந்தைகள் (மகன் மற்றும் இரு

மகள்கள்) இருப்பதால், அவரது தாய்க்கு அவர் விட்டுச் சென்ற சொத்தில் 1/6 பங்கு கிடைக்கும். அதுபோல் குழந்தைகள் இருப்பதால், அவரது மனைவிக்கு 1/8 பங்கு கிடைக்கும். இப்பங்குகள் போக எஞ்சியுள்ளதில், மகனும், மகளும் தங்கள் பங்கை அடைவார்கள். மேலும் இங்கு மகன் இருப்பதால், இரு மகள்களும் எச்ச தாரர்களாவர். அவர்கள் மகன் அடைந்தது போக எஞ்சியுள்ள பங்கைப் பெறுவார்கள். மேலும் மகனுக்கு இரு மடங்கு பங்குகள் கிடைக்கும். இனி இவர்களிடையே இறந்தவரின் சொத்தைப் பிரித்துக் கொடுப்போமா?

தாய் – 1/6 பங்கு (குழந்தைகள் இருப்பதால்)

மனைவி – 1/8 பங்கு (குழந்தைகள் இருப்பதால்)

மொத்தம் – 1/6 + 1/8 = 4+3/24 = 7/24

மேற்கண்ட 7/24–ல் எஞ்சியுள்ள பங்கு 17/24 ஆகும். இதிலிருந்து மகனுக்கும் மகளுக்கும் பிரித்துக் கொடுக்க வேண்டும். ஹனபி சட்டப்படி மகனுக்கு இரு மடங்கு பங்குகள், மகள் எஞ்சியுள்ள ஒரு பங்கைப் பெறுவார். இங்கு ஒரு மகனும், இரு மகள்களும் உள்ளனர். மகனின் பங்கு 2 + இரு மகள்களின் பங்கு 1 +1 = ஆக மொத்தம் 4 பங்கு. எனவே எஞ்சியுள்ள 17/24 பாக சொத்தை மொத்தம் நான்கு பாகங்களாக்கி கொண்டு, பங்கு பிரிக்க வேண்டும்.

மகன் (இருமடங்கு) – 2/4 X 17/24 = 34/96 பங்கு.

மகன் பெற்ற 2/4 பங்கில் எஞ்சியுள்ளது, 2/4 பங்காகும். அதை இரு மகள்கள் அடையத்தக்கவர்கள். அவர்கள் பெறும் பங்கு வருமாறு.

இரண்டு மகள்கள்
சேர்ந்து பெறும் பங்கு – 2/4 X 17/24 = 34/96 பங்கு.

இங்கு தலா ஒவ்வொரு மகளுக்கும் கிடைக்கும் பங்கு வருமாறு.
1/4 X 17/24 = 17/96.

இனி மேற்படியார்கள் பெறும் பங்குகளைக் கூட்டுவோம்.

1/6 + 1/8 + 34/96 + 17/96 = 16 + 12 + 34 + 34/96 = 96/96 = 1

எனவே மேற்படியார்களின் பங்கு பின்வருமாறு அமைகிறது.

தாய் – 16/96 பங்கு

மனைவி – 12/96 பங்கு

மகன் – 34/96 பங்கு

இரு மகள்கள் – 34/96 பங்கு

-o0o-

[iii] கிறுத்தவ மரபுமுறை இறங்குரிமைச் சட்டம் [Christian Law of Inheritance]

29. 'X' a Christian died leaving a wife, 2 sons and 3 daughters. Distribute his estate.

ஒரு மனைவி, இரண்டு மகன்கள் மற்றும் மூன்று மகள்கள் ஆகியோர்களை விட்டுவிட்டு 'X' என்னும் கிறுத்தவர் இறந்தார். அவர் சொத்தைப் பங்கிடுக.

தீர்வு:

1925–ஆம் ஆண்டின் இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் 33(a)–வது பிரிவு பின்வருமாறு கூறுகிறது. அதன்படி, இறந்துபோன கிறுத்தவர் ஒருவருக்கு நேர்வழித் தோன்றல்கள் (Lineal Descendants) (குழந்தைகள், குழந்தைகளின் குழந்தைகள்) எவரேனும் இருப்பின், அவரது விதவை (மனைவி) அவர் விட்டுச் சென்ற சொத்தில் மூன்றில் ஒரு பங்கையும் (1/3), எஞ்சியுள்ள மூன்றில் இரண்டு பங்கை (2/3) அவரது நேர்வழித் தோன்றல்களும் அடைவர்.

மேற்படி பிரச்சனையில் இறந்து போன கிறுத்தவருக்கு நேர்வழித் தோன்றல்களாக அவரது இரண்டு மகன்களும், மூன்று மகள்களும் உள்ளனர். எனவே மேற்கண்ட பிரிவின்படி, விதவை (மனைவி) பெறும் பங்கு : **1/3 பங்கு**

மீதமுள்ள 2/3 பங்கை இரண்டு மகன்களும், மூன்று மகள்களும் ஆக மொத்தம் உள்ள அய்வரும் பின்வருமாறு தலை விகித இறக்கப்படி (Per-capita) தங்களுக்குள் சமமாகப் பிரித்துக் கொள்வர். அதாவது

ஒரு மகன் 2/3 X 1/5 = 2/15 X 2 மகன்கள் = 4/15

ஒரு மகள் 2/3 X 1/5 = 2/15 X 3 மகள்கள் = 6/15

எனவே ஒவ்வொரு மகனும், மகளும் தங்களுக்குள் 2/3 பங்கை சமமாகப் பிரித்துக் கொண்டதில், அவர்கள் அய்வரும் தலா 2/15 பங்கைப் பெறுகிறார்கள். இனி இவர்கள் பெற்ற பங்குகளைக் கூட்டுவோம்.

2/15 + 2/15 + 2/15 + 2/15 + 2/15 = 2+2+2+2+2 /15 = 10/15 = **2/3 பங்கு**

எனவே மேற்படியார்கள் அனைவரும் தங்களுக்குரிய பங்காக பெறும் பங்குகளைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

மனைவி	:	1/3 (குழந்தைகள் உள்ளதால்)
இரண்டு மகன்கள்	:	2/15 X 2 மகன்கள் = 4/15
மூன்று மகள்கள்	:	2/15 X 3 மகள்கள் = 6/15

∴ 1/3 + 4/15 + 6/15 = 5+4+6/15 = 15/15 = 1

30. A Christian dies intestate leaving property of the nett value of Rs.9,000/- He is survived by his widow and son. Distribute the property.

ஒரு கிறுத்தவர் உயில் இல்வழியில் ரூ.9,000/– பெறுமானமுள்ள சொத்தை விட்டு இறக்கிறார். அவருக்கு ஒரு மனைவியும் மகனும் உண்டு. சொத்தைப் பிரிக்க.

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் இறந்து போன கிறுத்தவரை, ஒரு இந்தியக் கிறுத்தவராகக் கருத்தில் கொண்டால், அவரது சொத்தை பின்வருமாறு பிரித்துக் கொடுக்க வேண்டும். இங்கு இறந்தவருக்கு நேர்வழித் தோன்றலாக ஒரு மகள் உள்ளதால், அவரது விதவைக்கு (மனைவிக்கு) அவரது சொத்தில் 1/3 பங்கு மட்டுமே இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 33(a)–ன்படி கிடைக்கும். அவர் விட்டுச் சென்றுள்ள சொத்தின் மதிப்பு ரூ.9,000/– ஆகும். இதைப் பின்வருமாறு மனைவிக்கு பிரித்துக் கொடுக்கலாம்.

மனைவி (விதவை) பெறும் பங்கு

ரூ.9,000/–த்தில் விதவையின் பங்கு = 9000 X 1/3 பங்கு = 3,000/–

இங்கு இறந்தவருக்கு ஒரு மகன் மட்டும் இருப்பதால், விதவை அடைந்த பங்கு போக எஞ்சியுள்ள 2/3 பங்கு முழுவதும் அம்மகனுக்கே கிடைக்கும். அதாவது

மகனின் பெறும் பங்கு

ரூ.9,000/–த்தில் மகனின் பங்கு = ரூ.9,000 X 2/3 பங்கு = 6,000/–

இந்தியக் கிறுத்தவர் அல்லாத பிற கிறுத்தவர்களைப் பொறுத்த வரை: மேற்படி தொகையான ரூ.9,000/–த்தை விட்டு, இந்தியக் கிறுத்தவர் அல்லாத ஒரு கிறுத்தவர் உயிலின்றி இறந்துவிட்டால், அத்தொகை இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 33–A–ன்படி பின்வருமாறு பிரிக்கப்படும்.

மனைவிக்கு (விதவை) கிடைக்கும் பங்கு : பிரிவு 33–A (2)–ன்படி, மேற்படி தொகையான ரூ.9,000/–த்தில் முதல் ரூ.5,000/–த்தை மனைவிக்கு கொடுத்துவிட வேண்டும்.

மீதமுள்ள தொகையான ரூ.4,000–த்தை (ரூ. 9,000 – ரூ. 5,000 = ரூ. 4,000), நாம் ஏற்கனவே கண்ட பிரிவு 33(a)–ன்படி பிரித்துக் கொடுக்க வேண்டும், என்று **பிரிவு 33–A(3)** கூறுகிறது. எனவே ரூ.4,000/–த்தில் 1/3 பங்கை விதவைக்கும், இப்பங்கு போக மீதமுள்ள 2/3 பங்கை மகனுக்கும் கொடுக்க வேண்டும். பங்குகளின் கணக்கீடு பின்வருமாறு அமைகிறது.

விதவையின் 1/3 பங்கு = ரூ. 4,000 X 1/3 = ரூ. 1333.33

விதவைக்கு கிடைக்கும்மொத்த பங்கு வருமாறு
= ரூ. 5000 + 1333.33 = ரூ. 6333.33

மகனின் 2/3 பங்கு = 4000 X 2/3 = 8000/3 = ரூ.2666.67

31. A Christian dies leaving property of the nett value of Rs.3,000/- He is survived by his widow and son. Distribute the property.

ஒரு கிறிஸ்தவர் ரூ.3,000/–நிகர மதிப்புள்ள சொத்தை விட்டு இறக்கிறார். அவருக்கு ஒரு விதவையும் மகனும் வாரிசாவார். சொத்தை பிரிக்க.

தீர்வு:

இப்பிரச்சனையும், இதற்கு முன் சென்ற பிரச்சனையும் ஏறத்தாழ ஒன்று தான். சொத்தின் மதிப்பு மட்டும் மாறுபடுகிறது. எனவே சென்ற பிரச்சனையின் தீர்வில் நாம் பின்பற்றிய இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவுகளின்படி மேற்படி ரூ.3,000/–த்தை பிரித்துக் கொடுக்கலாம். இங்கு இறந்தவர் ஒரு இந்தியக் கிறுத்தவர் எனக் கொண்டால்,

மகன் உள்ளதால் விதவையின் (மனைவி) பங்கு = 1/3

∴ 3000 X 1/3 = ரூ. 1,000/–

மகனுக்குரிய எஞ்சியுள்ள பங்கு = 2/3

∴ 3000 X 2/3 = 6000/3 = ரூ. 2,000/–

இந்தியக் கிறுத்தவர் அல்லாத பிற கிறுத்தவர்களைப் பொறுத்த வரை: இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் **பிரிவு 33–A (1)**–ன்படி, உயிலின்றி இறந்துவிட்ட இந்தியக் கிறுத்தவர் அல்லாத பிற கிறுத்தவர் ஒருவரின் நிகர சொத்து மதிப்பு ரூ.5000/–த்திற்கு மிகாமல் இருப்பின், அம்மதிப்புடைய சொத்து முழுவதும் விதவைக்கே சேர வேண்டும். இங்கு இறந்தவர் விட்டுச் சென்ற சொத்தின் நிகர மதிப்பு ரூ.3,000/– மட்டுமே. அதாவது ரூ.5,000/–த்திற்கு மிகாமல் உள்ளது. எனவே ரூ.3000/– மதிப்புடைய சொத்து முழுவதையுமே விதவையே பெற உரிமை படைத்தவள். மகனுக்கு எப்பங்கும் கிடையாது.

32. An Indian Christian dies leaving two sons and four daughters. Distribute the property of the deceased.

ஒரு இந்தியக் கிறுத்தவர் இரண்டு மகன்களையும், நான்கு மகள் களையும் விட்டு இறக்கிறார். அவரது சொத்தைப் பிரித்தளிக்கவும்.

தீர்வு:

இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் **பிரிவு 37–ன்படி,** இறந்தவருக்கு நேர்வழித் தோன்றல்கள் (அதாவது குழந்தைகள்) மட்டும் இருப்பின், அவர் விட்டுச் சென்ற சொத்தை அவர்கள் தங்களுக்குள் சமமாக பிரித்துக் கொள்வர்.

மேற்படி பிரச்சனையில் இறந்தவருக்கு குழந்தைகள் மட்டுமே உள்ளனர். அதாவது இரண்டு மகன்களும், நான்கு மகள்களும் உள்ளனர்; மனைவி இல்லை. எனவே அவரது சொத்தை அவர்களிடையே சமமாகப் பிரித்தளிக்க வேண்டும். இரண்டு மகன்களும், நான்கு மகள்களும் சேர்த்து மொத்தம் ஆறு பங்கு வருகிறது. எனவே அனைவரும் தலா 1/6 பங்கைப் பெறுவர்.

33. A has three sons X,Y,Z. The three sons predeceased A. X leaves two children, Y four and Z two surviving A. What are the rights to each of the grand children in A's property.

A என்பவருக்கு X,Y,Z என்ற மூன்று மகன்கள். அவர்கள் அனைவரும் A-க்கு முன்னரே காலமாகிவிட்டனர். அதில் X என்பவர் 2 குழந்தைகளையும், Y என்பவர் நான்கு குழந்தைகளையும், Z என்பவர் இரண்டு குழந்தைகளையும் வாரிசுகளாக விட்டுச் சென்றார். தற்பொழுது A-யின் சொத்தில் அவர்களுக்கு தலா எவ்வளவு உரிமை உள்ளது ?

தீர்வு:

இதில் வரும் அனைத்து குழந்தைகளும் A-யின் பேரக்குழந்தைகள் ஆவர். இவர்கள் அனைவரும் ஒரே நிலையில் (Same Degree) இருப்பவர்கள். எனவே இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு **38–ன்படி,** A-யின் சொத்தை 8 (2+4+2) சமபங்குக்ளாக்கி, பேரக்குழந்தைகள் அனைவரும் தலா 1/8 பங்கைப் பெறுவர்.

$\therefore 1/8 \times 8 = 8/8 = 1$

34. A Christian dies leaving a widow, two sons and one daughter. Distribute the estate of the deceased.

ஒரு கிறிஸ்துவர், ஒரு விதவை, இரண்டு மகன்கள், ஒரு மகள் ஆகியோரை விட்டு இறக்கிறார். இறந்தவருடைய சொத்தை பங்கீடு செய்க.

தீர்வு:

குழந்தைகள் (நேர்வழித் தோன்றல்கள்) உள்ளதால், இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு **33(a)–ன்படி** விதவை பெறும் பங்கு : **1/3**

மீதமுள்ள 2/3 பங்கை இரண்டு மகன்களும், ஒரு மகளும் சமமாகப்

பிரித்துக் கொள்வர். அதாவது 2/3 பங்கை மூன்று பேரும் தலா 2/9 பங்காக எடுத்துக் கொள்வர். (2/3 x 1/3 = 2/9)

∴ 2/9 + 2/9 + 2/9 = 2+2+2/9 = 6/9 = **2/3**

எனவே மேற்படியார்கள் அனைவரும் தங்களுக்குரிய பங்காக பெறும் பங்குகளைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

விதவை	:	1/3 (குழந்தைகள் உள்ளதால்)
இரண்டு மகன்கள்	:	2/9 x 2 மகன்கள் = 4/9
ஒரு மகள்	:	2/9

∴ 1/3 + 4/9 + 2/9 = 3+4+2/9 = 9/9 = 1

35. A Christian dies leaving his widow, two sons, daughter of predeceased son, mother and father. Distribute estate among them.

ஒரு கிறுத்தவர் தன் மனைவி, இரண்டு மகன்கள், முன்னதாக இறந்துவிட்ட மகனின் மகள் மற்றும் தாய், தந்தையர் ஆகியோரை விட்டுவிட்டு இறந்துவிடுகிறார். அவர்களிடையே சொத்தைப் பிரித்துத் தருக.

தீர்வு:

இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு **33(a)**–ன்படி இறந்துபோன கிறுத்தவர் ஒருவருக்கு நேர்வழித் தோன்றல்கள் (குழந்தைகள், முன்னதாக இறந்து போன குழந்தைகளின் குழந்தைகள்) இருக்கும் பொழுது, அவர் விட்டுச் சென்ற சொத்தில் அந்நேர்வழித் தோன்றல்களும், அவரது மனைவி உயிருடன் இருப்பின், அவளும் மட்டுமே பங்கு பெற முடியும். மற்றவர்கள் பங்கு ஏதும் பெறவியலாது. எடுத்துக்காட்டாக, மேற்படி பிரச்சனையில் வரும் தாய், தந்தையர் இறந்து போனவர் விட்டுச் சென்ற சொத்தில் எவ்வுரிமையும் கொண்டாட முடியாது. எனவே மேற்படியார்களின் பங்குகள் பின்வருமாறு அமைகிறது.

நேர்வழித் தோன்றல்கள் உள்ளதால் மனைவியின் பங்கு : 1/3

மீதமுள்ள 2/3 பங்கை இரண்டு மகன்கள் தங்களுக்குள் தலை விகித (Per-capita) இறக்கப்படியும், முன்னதாக இறந்துவிட்ட மகனுக்குச் சேர வேண்டிய பங்கை, அவரது மகள் கிளைவிகித இறக்கப்படியும் (Per-strips) அடைவர். அதாவது மேற்கண்ட மூவரும், இறந்தவர் விட்டுச் சென்ற சொத்தை பின்வருமாறு தங்களுக்குள் சமமாகப் பிரித்துக் கொள்வர். அதாவது

ஒரு மகன் 2/3 x 1/3 = **2/9** x 2 மகன்கள் = 4/9

முன்னதாக இறந்துவிட்ட மகனின் மகள் 2/3 x 1/3 = **2/9**

எனவே மேற்கண்ட இரு மகன்களும், முன்னதாக இறந்துவிட்ட மகனின் மகளும் தங்களுக்குள் 2/3 பங்கை சமமாகப் பிரித்துக் கொண்டதில், அவர்கள் மூவரும் தலா 2/9 பங்கைப் பெறுகிறார்கள். இனி இவர்கள் பெற்ற பங்குகளைக் கூட்டுவோம்.

$$2/9 + 2/9 + 2/9 = 2+2+2/9 = 6/9 = \mathbf{2/3}$$

எனவே மேற்படியார்கள் அனைவரும் தங்களுக்குரிய பங்காக பெறும் பங்குகளைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

மனைவி	:	1/3 (குழந்தைகள் உள்ளதால்)
இரண்டு மகன்கள்	:	2/9 X 2 மகன்கள் = 4/9
மு.இ.விட்ட மகனின் மகள்	:	2/9
தாய்	:	0 (பங்கில்லை)
தந்தை	:	0 (பங்கில்லை)

$$\therefore 1/3 + 4/9 + 2/9 = 3+4+2/9 = 9/9 = 1$$

36. A Christian dies leaving his father, mother, wife a son and two daughters. Distribute the property of the deceased.

ஒரு கிருத்துவர் தன் தந்தை, தாய், மனைவி ஒரு மகன் மற்றும் இரண்டு மகள்கள் ஆகியோரை விட்டுவிட்டு இறக்கிறார். அவரின் சொத்துக்களை பகிர்ந்தளிக்க.

தீர்வு:

இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு **33(a)–ன்படி** இறந்துபோன கிறுத்தவர் ஒருவருக்கு நேர்வழித் தோன்றல்கள் குழந்தைகள், முன்னதாக இறந்து போன குழந்தைகளின் குழந்தைகள்) இருக்கும் பொழுது, அவர் விட்டுச் சென்ற சொத்தில் அந்நேர்வழித் தோன்றல்களும், அவரது மனைவி உயிருடன் இருப்பின், அவளும் மட்டுமே பங்கு பெற முடியும். மற்றவர்கள் பங்கு ஏதும் பெறவியலாது. எடுத்துக்காட்டாக, மேற்படி பிரச்சனையில் வரும் தந்தை இறந்து போனவர் விட்டுச் சென்ற சொத்தில் எவ்வுரிமையும் கொண்டாட முடியாது. எனவே மேற்படியார்களின் பங்குகள் பின்வருமாறு அமைகிறது.

நேர்வழித் தோன்றல்கள் (மகன் மற்றும் மகள்)
உள்ளதால் மனைவி (விதவை) பெறும் பங்கு : 1/3

மீதமுள்ள 2/3 பங்கை ஒரு மகனும், இரண்டு மகள்களும் தங்களுக்குள் சமமாகப் பங்கிட்டுக் கொள்வர். அதாவது 2/3 பங்கை மூன்று பேரும் தலா 2/9 பங்காக எடுத்துக் கொள்வர். (2/3 X 1/3 = 2/9)

$$\therefore 2/9 + 2/9 + 2/9 = 2+2+2/9 = 6/9 = \mathbf{2/3}$$

எனவே மேற்படியார்கள் அனைவரும் தங்களுக்குரிய பங்காக பெறும் பங்குகளைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

விதவை	:	1/3 (குழந்தைகள் உள்ளதால்)
ஒரு மகன்	:	2/9
இரண்டு மகள்கள்	:	2/9 X 2 மகள்கள் = 4/9
தந்தை	:	0 (பங்கில்லை)
தாய்	:	0 (பங்கில்லை)

∴ 1/3 + 2/9 + 4/9 = 3+2+4/9 = 9/9 = 1

37. An Indian Christian died leaving his wife, father and son. Divide the properties.

ஒரு இந்திய கிருத்துவர் மனைவி, தந்தை மற்றும் மகனை விட்டுவிட்டு இறக்கிறார். சொத்துக்களை பகிர்ந்தளிக்கவும்.

தீர்வு:

இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு **33(a)**–ன்படி இறந்துபோன கிறுத்தவர் ஒருவருக்கு நேர்வழித் தோன்றல்கள் (குழந்தைகள், முன்னதாக இறந்து போன குழந்தைகளின் குழந்தைகள்) இருக்கும் பொழுது, அவர் விட்டுச் சென்ற சொத்தில் அந்நேர்வழித் தோன்றல்களும், அவரது மனைவி உயிருடன் இருப்பின், அவளும் மட்டுமே பங்கு பெற முடியும். மற்றவர்கள் பங்கு ஏதும் பெறவியலாது. எடுத்துக்காட்டாக, மேற்படி பிரச்சனையில் வரும் தந்தை இறந்து போனவர் விட்டுச் சென்ற சொத்தில் எவ்வுரிமையும் கொண்டாட முடியாது. எனவே மேற்படியார்களின் பங்குகள் பின்வருமாறு அமைகிறது.

நேர்வழித் தோன்றல் (மகன்) உள்ளதால்

விதவை பெறும் பங்கு	:	1/3
மகன் பெறும் பங்கு (மீதமுள்ளது)	:	2/3

38. A Christian died leaving his wife, mother, father, one son, two grand daughters through predeceased daughter and three grandsons through predeceased son. Distribute his estate.

தன் மனைவி, தாய், தந்தை, ஒரு மகன், முன்னால் இறந்த மகள் மூலம் பிறந்த இரண்டு பேத்திகள், முன்னால் இறந்த மகன் மூலம் பிறந்த மூன்று பேரன்கள் ஆகியோரை விட்டுவிட்டு ஒரு கிறுத்தவர் இறந்தார். அவர் சொத்தைப் பங்கிடுக.

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் இறந்து போன கிறுத்தவருக்கு நேர்வழித் தோன்றல்கள் (குழந்தைகள் மற்றும் முன்னால் இறந்து போன குழந்தைகளின் குழந்தைகள்) உள்ளனர். எனவே தாய், தந்தையருக்கு பங்கு ஏதுமில்லை. மேலும் நேர்வழித் தோன்றல்கள் உள்ளதால், இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் **பிரிவு 33(a)–ன்படி** அவரது மனைவிக்கு கிடைக்கும் பங்கு 1/3 ஆகும். மீதமுள்ள 2/3 பங்கை அவரது நேர்வழித் தோன்றல்கள் தங்களுக்குள் சமமாகப் பங்கிட்டுக் கொள்வர்.

இங்கு நேர்வழித் தோன்றல்கள் என்பதில் அசலில் 2 மகன்களும், ஒரு மகளும் உள்ளனர். மேற்கண்ட 2 மகன்களில் ஒருவர், தனது மூன்று மகன்களை (பேரன்கள்) விட்டுவிட்டு முன்னதாக இறந்து போய்விட்டார். மேற்கண்டவர்களில் உள்ள ஒரு மகளும், தனது இரண்டு மகள்களை (பேத்திகள்) விட்டுவிட்டு முன்னதாக இறந்து போய்விட்டார். இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் **40–வது பிரிவின்படி,** முன்னதாக இறந்து போன நேர்வழித்தோன்றல்களின் குழந்தைகள் (அதாவது குழந்தைகளின் குழந்தைகள்), தங்கள் பெற்றோருக்குரிய பங்கை தங்களுக்குள் சமமாகப் பங்கிட்டுக் கொள்வர்.

எனவே மனைவி அடைந்த 1/3 பங்கு போக மீதியுள்ள 2/3 பங்கை முதலில் உயிருடன் உள்ள மற்றும் முன்னதாக இறந்து போன நேர்வழித்தோன்றல்களின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு பங்கு பிரித்துக் கொள்ள வேண்டும். இங்கு 2 மகன்களும், ஒரு மகளும் இறந்து போன நேர்வழித் தோன்றல்களாக உள்ளனர். எனவே 2/3 பங்கை மூன்று பாகங்களாகப் பின்வருமாறு பிரிக்க வேண்டும்.

2/3 (மீதமுள்ள பங்கு) X 1/3 (மூன்று குழந்தைகள்) = 2/9

எனவே மேற்கண்டோர் அடையும் பங்குகள் பின்வருமாறு அமைகின்றன.

மகன் : 2/9
முன்னால் இறந்த மகள் : 2/9
முன்னால் இறந்த மகன் : 2/9

இவர்களில் முன்னால் இறந்த மகளின் மூலமாகப் பிறந்த இரண்டு பேத்திகள், தங்கள் தாய்க்குரிய 2/9 பாகத்தை தங்களுக்குள் சமமாகப் பிரித்துக் கொள்வர்.

மகள் வயிற்றுப் பேத்திகள் இருவர்
கூட்டாகப் பெறுவது : 2/9
ஒவ்வொரு பேத்தியும் தலா பெறும் பங்கு : 2/9 X 1/2 = 2/18

அதுபோல் முன்னால் இறந்த மகனின் மூலமாகப் பிறந்த மூன்று பேரன்கள், தங்கள் தந்தைக்குரிய 2/9 பாகத்தை தங்களுக்குள் சமமாகப் பிரித்துக் கொள்வர்.

மகன் வயிற்றுப் பேரன்கள் மூவர்
கூட்டாகப் பெறுவது : 2/9
ஒவ்வொரு பேரனும் தலா பெறும் பங்கு : 2/9 X 1/3 = 2/27

இனி மேற்படியார்கள் அடைந்த பங்கை பின்வருமாறு கூட்டுவோம்.

தாய்	:	1/3
மகன்	:	2/9
முன்னால் இறந்த மகளின் மூலமாகப் பிறந்த 2 பேத்திகளில் தலா ஒவ்வொருவரும் அடைவது	:	2/18 + 2/18
முன்னால் இறந்த மகனின் மூலமாகப் பிறந்த 3 பேரன்களில் தலா ஒவ்வொருவரும் அடைவது	:	2/27 + 2/27 + 2/27

∴ 1/3 + 2/9 + 2/18 + 2/18 + 2/27 + 2/27 + 2/27

= 18 + 12 + 6 + 6 + 4 + 4 + 4/54 = 54/54 = 1

இப்பங்குகளின் அடிப்படையில் மேற்கண்டவர்களின் பங்குகள், இறந்து போனவர் விட்டுச் சென்ற மொத்தச் சொத்தில் பின்வருமாறு அமைகின்றன.

தாய்	:	18/54	(1/3)
மகன்	:	12/54	(2/9)
முன்னால் இறந்த மகளின் மூலமாகப் பிறந்த 2 பேத்திகளில் தலா ஒவ்வொருவரும் அடைவது	:	6/54 + 6/54	(2/18 + 2/18)
முன்னால் இறந்த மகனின் மூலமாகப் பிறந்த 3 பேரன்களில் தலா ஒவ்வொருவரும் அடைவது	:	4/54 + 4/54 + 4/54	(2/27 + 2/27 + 2/27)

39. A Christian died leaving his widow, one daughter and three grandsons through one predeceased son. Distribute the estate.

ஒரு கிறிஸ்தவர், தன் மனைவி, ஒரு மகள், முன்னால் இறந்த மகன் மூலம் பிறந்த மூன்று பேரன்கள் ஆகியோரை விட்டுவிட்டு இறந்து விடுகிறார். அவருடைய சொத்துக்களை அவ்வாரிசுகளுக்கு பங்கிடுக.

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் இறந்தவருக்கு நேர்வழித்தோன்றல்கள் (குழந்தைகள், குழந்தைகளின் குழந்தைகள்) உள்ளனர். மேலும் விதவையும் உள்ளார். எனவே இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் **பிரிவு 33(a)-ன்படி**

விதவைக்கு இறந்தவர் விட்டுச் சென்ற சொத்தில் 1/3 பங்கு கிடைக்கும்.

மீதியுள்ள 2/3 பங்கை இறந்தவரின் ஒரு மகளும், முன்னதாக இறந்து விட்ட மகனும் தங்களுக்குள் சமபங்காக அடைவார்கள். அதாவது 2/3 பங்கை மேற்கண்ட இருவரும் தலா 2/6 பங்காக எடுத்துக் கொள்வர். (2/3 × 1/2 = 2/6). இதனால் மகளுக்கு 2/6 பங்கு கிடைக்கிறது. இங்கு இறந்தவரின் மகன் அவருக்கும் முன்னதாக இறந்துவிட்டதால், அவருக்குரிய 2/6 பங்கை அவர் மூலம் பிறந்த மூன்று மகன்கள் (இறந்தவருக்கு பேரன்கள்) தங்களுக்குள் சமமாக அடைந்து கொள்வர்.

அதாவது, முன்னதாக இறந்துவிட்ட மகனின் 2/6 பங்கை இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் 40–வது பிரிவின்படி, அவர் மூலம் பிறந்த மூன்று பேரன்கள் கிளை விகித இறக்கப்படி (Per-strips) தங்களுக்குள் சமமாகப் பங்கிட்டுக் கொள்வர். எனவே மேற்படி மூன்று பேரன்கள் பெறும் பங்கு வருமாறு.

முன்னால் இறந்து போன மகன்
மூலம் பிறந்த மூன்று பேரன்கள்
கூட்டாக அடையும் பங்கு : 2/6 (1/3)

அவர்கள் ஒவ்வொரும் தலா பெறும் பங்கு : 2/6 × 1/3 = 2/18

இனி மேற்படியார்கள் அடைந்த பங்கை பின்வருமாறு கூட்டுவோம்.

தாய் : 1/3

மகள் : 2/6 (1/3)

முன்னால் இறந்த மகனின் மூலமாகப்
பிறந்த 3 பேரன்களில் தலா
ஒவ்வொருவரும் அடைவது : 2/18 + 2/18 + 2/18

∴ 1/3 + 2/6 + 2/18 + 2/18 + 2/18 = 6 + 6 + 2 + 2 + 2/18 = 18/18 = 1

இப்பங்குகளின் அடிப்படையில் மேற்கண்டவர்களின் பங்குகள், இறந்து போனவர் விட்டுச் சென்ற மொத்தச் சொத்தில் பின்வருமாறு அமைகின்றன.

தாய் : 6/18 (1/3)

மகன் : 6/18 (1/3)

முன்னால் இறந்த மகனின் மூலமாகப்
பிறந்த 3 பேரன்களில் தலா
ஒவ்வொருவரும் அடைவது : 2/18 + 2/18 + 2/18
(2 + 2 +2/18 = 6/18 = 1/3)

∴ 1/3 + 1/3 + 1/3 = 3/3 = 1

40. A Christian woman dies leaving her husband, mother, two sons and two daughters. Distribute the estate of the deceased among them.

ஒரு கிருத்துவ பெண் தனது கணவன், தாய், இரண்டு மகன்கள் மற்றும் இரண்டு மகள்கள் ஆகியவர்களை விட்டுவிட்டு இறக்கிறார். இறந்தவருடைய சொத்தைப் பிரித்துத் தருக.

தீர்வு:

1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் கீழ், இறந்து போன ஒரு இந்து ஆணுக்குரிய வாரிசுகளும், ஒரு இந்து பெண்ணுக்குரிய வாரிசுகளும் மாறுபட்டவர்கள். ஆனால் கிறுத்தவ மரபுமுறை இறங்குரிமையைக் குறிப்பிடும் இந்திய வாரிசுரிமைச் சட்டத்தில் வாரிசுகளிடையே வேறுபாடு ஏதும் இல்லை. அதாவது ஒரு கிறுத்தவ ஆண் உயில்இல்வழியில் இறந்துவிட்டால், அவருக்கு யாரெல்லாம் வாரிசுகளாக வருவார்களோ, அவர்களே, ஒரு கிறுத்தவ பெண்மணி இறந்துவிட்டாலும் வாரிசுகளாக வருவார்கள்.

B.L. DEGREE EXAMINATION, MAY 2015

FAMILY LAW - II

PART A - (3 X 12 = 36 marks)

Answer any THREE of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. (a) "The Hindu Joint family is purley a creature of Hindu Law" - Explain.

"இந்துக் கூட்டு குடும்பம் என்பது இந்துச் சட்டத்தினால் உருவானதொன்று"– விளக்குக.

(b) State the difference between the Mitakshara and the Dayabhaga schools regarding Succession.

இறங்குரிமை குறித்த மிதாக்ஷர மற்றும் தாயபாக குழாமிற்கிடையேயான வேறுபாடுகளை எடுத்துரைக்கவும்.

2. What is "Hiba"? What are the essentials of Hiba? When Hiba may be revoked?

'ஹிபா' என்றால் என்ன? ஹிபாவின் ஆக்கக்கூறுகள் யாவை? எப்போது ஹிபா மறுத்தளிக்கப்படலாம்?

3. What are Avyavaharikha debts? On what grounds can such debts be challenged and by whom?

அவ்யஹாரிகக் கடன்கள் என்றால் என்ன? என்ன காரணங்களால் அத்தகைய கடன்கள் யாரால் எதிர்க்கப்படலாம்?

4. Explain the rules of succession of property among the legal heirs of a female Hindu under the Hindu Succession Act, 1956.

1956–ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டத்தின்கீழ் ஒரு இந்து பெண்ணின் வாரிசுகளிடையே சொத்து இறங்குரிமைக்கான விதிகளை விளக்குக.

5. Examine the rules of Intestate Succession for christian in India.

இந்திய கிறிஸ்துவர்களுக்கான உயிலிலா இறங்குரிமைக்கான விதிகளை ஆராய்க.

PART B - (8 X 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each:

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடை எழுதுக.

(a) Obstructed heritage.

தடுக்கப்பட்ட இறங்குரிமை.

(b) Codicil.

உயிலிணைப்பு.

(c) Sajjadanasin.

சஜ்ஜீதாநாசின்

(d) Antecedent debt.

முன்கடன்

(e) Doctrine of Aul.

ஏற்ற விதி கோட்பாடு

(f) Pious obligations.

அறக் கடப்பாடு.

(g) Pre-emption.

வாங்கு முன்னுரிமை.

(h) Powers of Mutawalli.

முத்தவல்லியின் அதிகாரங்கள்.

(i) Nawashish Alikhan Vs. Ali Raza Khan.

நவாசிஸ் அலிகான் எதிர் அலிராசாகான்

(j) Wakf

வக்ப்

PART C - (4 X 4 = 16 Marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to relevant provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கு இரண்டு பக்கங்கள் மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை மேற்கோளிட்டு தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. A Sunni Mohammedan dies leaving mother, daughter and his son's daughter. Divide the estate among them.

ஒரு சுன்னி முகமதியர் தாயார், மகள் மற்றும் தன் மகனின் மகள் இவர்களை விட்டு இறக்கிறார். சொத்தை இவர்களிடையே பங்கீடு செய்க.

8. A female Christian died leaving her husband two sons of a pre-deceased son and four sons of another pre-deceased son. Distribute the estate.

ஒரு கிறித்துவ பெண் தன் கணவன், இறந்துவிட்ட மகனின் இரு மகன்கள் மற்றும் ஒரு இறந்துவிட்ட மகனின் 4 மகன்கள் ஆகியோரை விட்டு இறந்து விடுகிறார். சொத்தை பங்கிடுக.

9. A Hindu dies leaving behind his father, widow, son, daughter's daughter and a illegitimate son. Distribute the property according to Hindu Succession Act, 1956.

ஒரு இந்து தன்னுடைய தந்தை, மனைவி, மகன், மகளின் மகள் மற்றும் முறையில்லாத திருமணத்தில் பிறந்த மகன் ஆகியோரை விட்டுவிட்டு இறக்கிறார். அவருடைய சொத்தை 1956–ம் ஆண்டு இறங்குரிமை சட்டத்தின்கீழ் பகிர்ந்தளிக்கவும்.

10. A Hindu dies leaving behind his mother, father, brother and the uterine sister. Distribute the estate.

ஒரு இந்து தன் தாய், தந்தை, சகோதரன் மற்றும் தாய்வழி சகோதரி ஆகியோரை விட்டுவிட்டு இறந்து விடுகிறார். சொத்தை பங்கிடுக.

11. A Christian dies leaving a widow, two sons, two daughters, father and mother. Distribute his estate.

தனது மனைவி, இரண்டு மகன்கள் மற்றும் இரண்டு மகள்கள் ஆகியோரை விட்டுவிட்டு ஒரு கிறித்துவர் இறக்கிறார். அவர் சொத்தை பங்கிடுக.

12. A Hanafi Muslim dies leaving his father, mother, 2 daughters and son's laughter. Distribute the property among the heirs.

ஒரு ஹனபி முகமதியர் தனது தந்தை, தாய், இரண்டு மகள்கள் மற்றும் மகனின் மகளை விட்டுவிட்டு இறக்கிறார். அவர்களிடையே சொத்தினை பங்கீடு செய்க.

B.L. DEGREE EXAMINATION, NOVEMBER 2015

FAMILY LAW - II

PART A - (3 X 12 = 36 marks)

Answer any THREE of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Mention the class I heirs under the Hindu Succession Act, 1956. If any state legislation is made mention it.

1956–ம் ஆண்டு இந்து இறங்குரிமை சட்டத்தின்படி முதல் வகுப்பு வாரிசுதாரர்களை குறிப்பிடுக. மாநில சட்டம் ஏதேனும் செய்திருந்தால் அதனை குறிப்பிடுக.

2. Examine the powers of a Muslim to make a will of his property.

உயில் உருவாக்கும் முகமதியர் ஒருவரின் சொத்து தொடர்பான அதிகாரங்களை ஆய்க.

3. How is a Wakf created and explain the powers of Mutawalli over the Wakf property.

வக்ப் என்பது எவ்விதம் உருவாக்கப்படுகிறது மற்றும் வக்ப் சொத்தின்மீது முத்தாவல்லிக்கு உள்ள அதிகாரங்களை விவரி.

4. Explain the rules of inheritance for Stridhana Property before the passing of the Hindu Succession Act, 1956.

"1956–ஆம் ஆண்டு இந்து இறங்குரிமைச் சட்டத்தின்கீழ் ஒரு இந்துப் பெண்ணின் உரிமைகள் விரிவுப்படுத்தப்பட்டுள்ளன"–விவாதிக்க.

5. Explain succession certificate and how is it obtained.

வாரிசுரிமைச் சான்றிதழ் என்பதனை விவரி மற்றும் அதனை எவ்விதம் பெற வேண்டும்.

PART B - (8 X 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exeeeding 2 pages each:

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடை எழுதுக.

(a) Arreat.

அரியட்

(b) Bequest.

உயில்வழிக் கொடை.

(c) Coparcenary Property.

பங்குரிமைச் சொத்து

(d) Dwelling house.

குடியிருக்கும் வீடு

(e) Executor.

நிறைவேற்றாளர்.

(f) Saprathibandha Daya.

தடையுள்ள இறங்குரிமை.

(g) Doctrine of Radd.

இறங்குவிதி கோட்பாடு.

(h) Lapse of Legacy.

உயில்வழிக் கொடை செல்லாநிலை அடைதல்.

(i) Pre-emption.

வாங்கும் முன்னுரிமை

(j) Mitakshara Joint Family.

மிதாக்ஷரா கூட்டுக்குடும்பம்

PART C - (4 X 4 = 16 Marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by

referring to relevant provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கு இரண்டு பக்கங்கள் மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை மேற்கோளிட்டு தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. A male hindu dies intestate leaving his divorced wife, two sons, brother and sister. Distribute his property.

ஒரு இந்து ஆண்மகன் உயில் எழுதாமல் இறக்கும் பொழுது தனது விவாகரத்து பெற்ற மனைவி, இரண்டு மகன்கள், சகோதரன் மற்றும் சகோதரியை விட்டு வட்டு செல்கிறார். அவரது சொத்தினை பகிர்ந்தளிக்கவும்.

8. A female Hindu died intestate leaving behind her husband, father, mother, one legitimate son, one illegitimate son and two daughters. Distribute her own self acquired property among them.

உயில் எழுதாமல் இறந்த ஒரு இந்து பெண் தனது கணவன், தந்தை, தாய், ஒரு முறைமணப்பிறப்பு மகன், ஒரு முறையிலா பிறப்பு மகன் மற்றும் இரண்டு மகள்கள் ஆகியோரை விட்டு இறந்து விடுகிறார். அவரது தானே சம்பாதித்த சொத்துக்களை அவர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கவும்.

9. A female Christian died intestate leaving behind her husband, father, mother and sister. Distribute her own self acquired property among them.

உயில் எழுதாமல் இறந்த ஒரு பெண் கிறித்தவர் தனது கணவன், தந்தை, தாய் மற்றும் சகோதரி ஆகியோரை விட்டு இறந்து விடுகிறார். அவரது சொத்தை அவர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கவும்.

10. A Sunni Muslim died leaving behind his wife, mother, full sister and daughter. Distribute the estate among them.

ஒரு சன்னி பிரிவினை சார்ந்த முகமதியர் இறக்கும் பொழுது அவரது மனைவி, தாய், முழு சகோதரி மற்றும் மகளை விட்டு விட்டு இறக்கிறார். சொத்தினை அவர்களுக்கு பங்கிடுக.

11. A Hanabi Muslim dies leaving his wife, son and daughter. Divide his property among them.

ஒரு ஹனபி முகமதியர் இறக்கும்பொழுது அவரது மனைவி, மகன் மற்றும் மகளை விட்டு விட்டு இறக்கிறார். அவரது சொத்தினை அவர்களுக்கிடையே பங்கிடுக.

12. A male Christian dies intestate leaving his wife, theree sons, one daughter and two grandsons through predeceased son. Distribute his estate.

ஒரு கிறித்தவ ஆண் உயில் எழுதாமல் இறக்கும்பொழுது தனது மனைவி, மூன்று மகன்கள், ஒரு மகள் மற்றும் இறந்துவிட்ட மகனின் மூலமாக இரண்டு பேரன்களை விட்டுவிட்டு செல்கிறார். அவரது சொத்தினை பங்கிடுக.

B.L. DEGREE EXAMINATION, MAY 2016

FAMILY LAW - II

PART A - (3 X 12 = 36 marks)

Answer any THREE of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Who is a Karta? Examine the powers of the Karta to contract debts and to alienate the joint family property.

கர்த்தா என்பவர் யார்? கடன் வாங்க ஒப்பந்தம் மற்றும் கூட்டுக் குடும்பச் சொத்தைப் பாராதீனம் செய்தல் ஆகியவற்றில் கர்த்தா பெற்றுள்ள அதிகாரங்களை ஆராய்க.

2. What is Wakf? Explain the essential requirement for making a valid Wakf under Muslim law.

வக்ப் என்றால் என்ன? முஸ்லீம் சட்டத்தின்கீழ் செல்லக்கூடிய வக்ப் ஏற்படுத்துவதற்குரிய முக்கிய ஆக்கக்கூறுகளை ஆராய்க.

3. Discuss the rules of succession applicable to female intestate under Christian law of inheritance.

கிறித்துவ இறங்குரிமை சட்டத்தின்கீழ் பெண் உயில் எழுதாமல் இறந்தால் பொருந்தக்கூடிய இறங்குரிமை விதிகளை விவரி.

4. Explain the various provisions for execution of privileged will and unprivileged will.

சிறப்புரிமை பெற்ற உயில்கள் மற்றும் சிறப்புரிமை அற்ற உயில்கள் ஏற்படுத்துவதற்கான சட்ட வகை முறைகளை விளக்குக.

5. Explain the powers of a Muslim to make a will of his property. State the difference between Hanafi and Shia law.

ஒரு முகமதியரின் உயில் உருவாக்கும் அதிகாரங்களை விளக்குக. ஹனபி மற்றும் ஷியா சட்டத்தில் இருக்கும் வேறுபாடுகளை கூறுக.

PART B - (8 X 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exeeeding 2 pages each:

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடை எழுதுக.

(a) Avyavaharika debt.

அவ்யவகாரிக கடன்.

(b) Bequest.

உயில்வழிக் கொடை.

(c) Coparcener.

பங்குரிமையர்

(d) Doctrine of Aul.

ஏற்ற விதி கோட்பாடு

(e) Kinds of legacy.

உயில்வழி கொடையின் வகைகள்

(f) Hiba-bil-Iwaz.

ஹிபா–பில்–இவாஸ்

(g) Partial partition.

பகுதியாக பாகப்பிரிவினை.

(h) Special mode of acquiring a domicile in India.

இந்தியாவில் வாழ்வகம் பெறுவதற்கான தனிப்பட்ட முறை.

(i) Probate and letter of administration.

உயில் மெய்ப்பிதழ் மற்றும் நிர்வாகப் பத்திரம்

(j) Public mosque

பொது மசூதி

PART C - (4 X 4 = 16 Marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to relevant provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கு இரண்டு பக்கங்கள் மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை மேற்கோளிட்டு தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. A male Hindu died intestate leaving his step mother, son, daughter of pre-deceased daughter, daughter of pre-deceased daughter of pre-deceased son and sister. Divide his properties.

ஒரு இந்து ஆண்மகன் உயில் எழுதாமல் இறக்கும்பொழுது தனது மாற்றாந்தாய், மகன், இறந்துபோன மகளின் மகள், இறந்துபோன மகனின் இறந்துபோன மகளின் மகள் மற்றும் சகோதரியை விட்டுவிட்டு இறக்கிறார். அவரது சொத்தினை பங்கிடுக.

8. A female Hindu dies intestate leaving her legitimate son, daughter and illegitimate son. Distribute her properties.

ஒரு இந்துப் பெண்மணி உயில் எழுதாமல் தனது முறையாக பிறந்த மகன், மகள் மற்றும் முறை தவறிப் பிறந்த மகன் ஆகியோரை விட்டு விட்டு இறக்கிறார். அவளது சொத்தினை பகிர்ந்தளிக்கவும்.

9. 'A' bequeaths his legacy to 'B'. 'B' dies before the testator. What happens to the legacy?

'ஹ' என்பவர் தனது சொத்தினை 'க்ஷ' என்பவருக்கு உயில் வழியாக தருகிறார். 'க்ஷ' என்பவர் 'ஹ' விற்கு முன்னால் இறந்து விடுகிறார். உயில் வழிக்கொடைக்கு என்ன நேரிடும்?

10. A Christian female dies leaving her two children of pre-deceased son and three children of pre-deceased daughter. Distribute her property.

கிறிஸ்துவ பெண்மணி ஒருவர் தனது இறந்துவிட்ட மகனின் இரண்டு குழந்தைகள் மற்றும் இறந்துவிட்ட மகளின் மூன்று குழந்தைகளை விட்டு விட்டு இறக்கிறார். அவளது சொத்தினை பங்கிடுக.

11. A Hanafi Muslim dies leaving his widow, son and daughter. Distribute his property.

ஒரு ஹனபி முகமதியர் தனது மனைவி, மகன் மற்றும் மகளை விட்டு விட்டு இறக்கிறார். அவரது சொத்தினை பங்கிடுக.

12. A Shia Muslim dies, leaving his father, mother, wife, a son and a brother. Divide his property.

ஷியா முஸ்லீம் ஒருவர் தன் தந்தை, தாய், மனைவி, ஒரு மகன் மற்றும் ஒரு சகோதரர் ஆகியோரை விட்டு விட்டு இறக்கிறார். அவரது சொத்தினை பங்கிடுக.

B.L. DEGREE EXAMINATION, NOVEMBER 2016

FAMILY LAW - II

PART A - (3 X 12 = 36 marks)

Answer any THREE of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. What is meant by partition according to the Mitakshara Law? Explain how a partition is effected and state when can partition be reopened.

மிதாக்சாரா சட்டப்படி பாகப்பிரிவினை என்றால் என்ன? பாகப்பிரிவினை எவ்வாறு செய்யப்படுகிறது என்பதை விளக்கி அதை எப்பொழுது மீண்டும் திறக்க முடியும் என்பதை கூறுக.

2. State the rules relating to Succession of Male Hindu under the Hindu Succession Act 1956.

இந்து இறங்குரிமைச் சட்டத்தில் உள்ள ஆண்களுக்கான இறங்குரிமை குறித்து விளக்குக.

3. What are the essential requirments for making Wakf? Explain how is private Wakf executed.

இசுலாமிய அறக்கட்டளை ஏற்படுத்துவதற்கான முக்கிய தேவைகள் என்னென்ன? தனியார் இசுலாமிய அறக்கட்டளை எவ்வாறு ஏற்படுத்தப்படுகிறது என்பதை விளக்கவும்.

4. Discuss the rules relating to construction of will under the Indian Succession Act, 1925.

இந்திய இறங்குரிமைச் சட்டம், 1925–ன்கீழ் உள்ள விருப்பாவணத்தின் பொருள் விளக்கம் குறித்த விதிகளை விவாதிக்கவும்.

5. Examine the rules of intestate succession for Christians in India.

விருப்பாவணம் எழுதாமல் இறந்த கிறித்துவர் ஒருவரின் சொத்தின் இறங்குரிமை குறித்தான விதிகளைக் கூறுக.

PART B - (8 X 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2

ages each:

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடை எழுதுக.

(a) Doctrine of Cypres.

இயன்றளவுக் கோட்பாடு.

(b) Void bequests.

இல்லாநிலையாகும் விருப்பாவண வழிக் கொடைகள்.

(c) Impartible Estate.

பிரிக்க முடியாதச் சொத்து

(d) Hindu Women's Right to Property Act, 1937.

1937–ஆம் ஆண்டு இந்து பெண்கள் சொத்துரிமைச் சட்டம்

(e) Sajjadhanashin.

ஸஜ்ஜதாநஷீன்

(f) Marumakkal thayam.

மருமக்கள் தாயம்

(g) Sadga.

சத்கா

(h) Shares under Hanafi law.

ஹனபி சட்டத்தின்கீழ் பங்குதாரர்கள்.

(i) Executor de son tort.

தான் தோன்றி நிறைவேற்றாளர்.

(j) Widow's Estate

விதவையின் சொத்து

PART C - (4 X 4 = 16 Marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to relevant provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கு இரண்டு பக்கங்கள் மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை மேற்கோளிட்டு தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. A Hindu dies leaving behind his mother, widow, daughter, son's daughter and an illegitimate son. Distribute the estate according to the Hindu Succession Act, 1956.

ஒரு இந்துவானவர் தன்னுடைய தாய், விதவை, மகள், மகனுடைய மகள் மற்றும் முறையில்லா திருமணத்தில் பிறந்த மகன் ஆகியவர்களை விட்டுவிட்டு இறக்கிறார். அவருடையச் சொத்தை இந்து இறங்குரிமைச் சட்டம் 1956–இன்கீழ் பகிர்ந்தளிக்கவும்.

8. A Christian woman dies leaving her husband, mother, two sons and two daughters. Distribute the estate of the deceased among them.

ஒரு கிறித்துவ பெண் தனது கணவன், தாய், இரண்டு மகன்கள் மற்றும் இரண்டு மகள்கள் ஆகியவர்களை விட்டுவிட்டு இறக்கிறார். இறந்தவருடையச் சொத்தை பகிர்ந்தளிக்கவும்.

9. A Sunni Muslim died leaving her husband, mother, father, daughter and brother. Distribute her properties to those heirs.

ஒரு சன்னி இசுலாமியர் தன் கணவர், தாய், தந்தை, மகள் மற்றும் சகோதரர் ஆகியோரை விட்டுவிட்டு இறந்து விடுகிறார். அவருடையச் சொத்துக்களை அவரது இறங்குரிமையர்களுக்கு பங்கிடுக.

10. A Hanafi Mohammedan dies leaving a son, two daughters, mother and a brother. Distribute the estate of the deceased among them.

ஒரு ஹனபி இசுலாமியர் ஒரு மகன், 2 மகள்கள், தாய் மற்றும் ஒரு சகோதரர் ஆகியவர்களை விட்டுவிட்டு இறக்கிறார். அவரின் சொத்தைப் பங்கீடு செய்க.

11. A male Hindu died leaving behind the mother, father, a son, a daughter and a daughter of a predeceased son. Distribute the property among them.

தாய், தந்தை, ஒரு மகன், ஒரு மகள், முன்பே இறந்துபோன ஒரு மகனின் மகள் இவர்களை விட்டு ஒரு ஆண் இந்துவானவர் இறந்துவிட்டார். அவருடையச் சொத்துக்களை அவரது இறங்குரிமையர்களுக்கு பங்கிடுக.

12. A Christian died leaving his widow, one daughter and three grand sons through one predeceased son. Distribute the estate.

ஒரு கிறிஸ்தவர் தன் மனைவி, ஒரு மகள், முன்னர் இறந்த மகன் வாயிலாக பிறந்த மூன்று பேரன்கள் ஆகியோரை விட்டுவிட்டு இறந்து விடுகிறார். அவருடைய சொத்துக்களை அவரது இறங்குரிமையர்களுக்குப் பங்கிடுக.

B.L. DEGREE EXAMINATION, MAY 2017

FAMILY LAW - II

PART A - (3 X 12 = 36 marks)

Answer any THREE of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. What is Hindu Joint Family? Distinguish between Hindu Joint Family and Hindu Coparcenary.

இந்துக் கூட்டு குடும்பம் என்றால் என்ன? ஒரு இந்துக் கூட்டுக் குடும்பத்தையும், பங்குரிமையமைப்பையும் வேறுபடுத்திக் காட்டுக.

2. Who are agnates? State the rules regarding the order of succession among agnates under the Hindu Succession Act, 1956.

தந்தை வழியினர் என்பர்கள் யார்? 1956–ம் ஆண்டு இந்து இறங்குரிமைச் சட்டத்தின்கீழ் தந்தை வழியினர்களுக்குள் இறங்குரிமைக் குறித்த விதிமுறைகளைப் பற்றி குறிப்பிடுக.

3. What are the three clases of heirs under the Hanafi Law of Inheritance and state the rules of priority among them?

ஹனஃபி இறங்குரிமைச் சட்டத்தின்கீழ் உள்ள வாரிசுகளின் மூன்று வகைகள் யாவை? மேலும் அவர்களுக்குள்ள முன்னுரிமையின் விதிகளைக் கூறவும்.

4. What is probate? To whom could probate be granted? State the effects of grant of probate.

விருப்பாவண மெய்ப்பிதழ் என்பது என்ன? யாருக்கு விருப்பாவண மெய்ப்பிதழ் வழங்கலாம்? விருப்பாவண மெய்ப்பிதழ் வழங்குவதன் விளைவுகளைக் கூறுக.

5. Examine the rules of pre-emption under the Hindu Law and the Islamic Law.

இந்துச் சட்டம் மற்றும் இசுலாமியச் சட்டப்படி வாங்கும் முன்னுரிமை குறித்த விதிகளை ஆராய்க.

PART B - (8 X 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeeding 2 pages each:

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடை எழுதுக.

(a) Obstructed Heritage

தடுக்கப்பட்ட இறங்குரிமை.

(b) Doctrine of Representation.

பெயராள் முறைக்கோட்பாடு.

(c) Cognates.

பெண் வழியினர்.

(d) Revocation of Hiba.

ஹிபாவைத் திரும்பப்பெறுதல்

(e) Arm Chair Rule.

சாய்வு நாற்காலி விதி.

(f) Escheat.

அரசு உறு பொருள்.

(g) Doctrine of Radd.

மீட்டளிப்புக் கொள்கை

(h) Reunion.

மீண்டும் இணைதல்.

(i) Letter of Administration.

நிர்வாக ஆவணக் கடிதம்.

(j) Marz-ul-Maut.

மர்ஸ்–உல்–மௌத்.

PART C - (4 X 4 = 16 Marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to relevant provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கு இரண்டு பக்கங்கள் மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை மேற்கோளிட்டு தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Mohan dies leaving behind his concubine, father and mother. Distribute Mohan's separate property under the Hindu Succession Act, 1956.

மோகன் என்பவர் தன்னுடைய சட்ட பூர்வமில்லாத மனைவி, தந்தை, தாய் ஆகியோரை விட்டு இறந்தார். மோகனின் தனிச் சொத்தை இந்து இறங்குரிமைச் சட்டம் 1956–ன்கீழ் பங்கிடுக.

8. A Hindu woman dies leaving behind her mother, her husband, a son and a daughter. How will you divide the property of the decease?

ஒரு இந்துப் பெண் தனது தாய், கணவன், ஒரு மகன் மற்றும் ஒரு மகள் ஆகியோரை விட்டு இறந்து விடுகிறார். இறந்த பெண்ணின் சொத்துக்களை எவ்விதம் பிரிக்க வேண்டும்?

9. A Christian died leaving his wife, one son, three daughters and one grand-son through predeceased son. Distribute his estate.

தன் மனைவி, ஒரு மகன், மூன்று மகள்கள், முன்னர் இறந்த மகன்வழி பிறந்த ஒரு பேரன் ஆகியோரை விட்டுவிட்டு ஒரு கிறித்துவர் இறந்தார். அவர் சொத்தைப் பங்கிடுக.

10. A Hanafi Mohammedan dies leaving his mother, daughter and son's daughter. Divide the estate.

ஹனபி இசுலாமியர் ஒருவர் தான் தாய், மகள் மகனின் மகள் ஆகியோரை விட்டு விட்டு இறந்தார். சொத்தினைப் பிரித்திடுக.

11. A Christian dies leaving his father, mother, wife, a son and two daughters. Distribute the property of the deceased.

ஒரு கிறித்துவர் தன் தந்தை, தாய், மனைவி, ஒரு மகன் மற்றும் இரண்டு மகள்கள் ஆகியோரை விட்டுவிட்டு இறக்கிறார். அவரின் சொத்துக்களைப் பகிர்ந்தளிக்க.

12. A Shia Mohammedan died leaving his wife, two sons and one daughter. Divide the properties.

ஒரு ஷியா இசுலாமியர் மனைவி, இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகளை விட்டு விட்டு இறக்கிறார். அவரது சொத்துக்களைப் பகிர்ந்தளிக்கவும்.

B.L. DEGREE EXAMINATION, NOVEMBER 2017

FAMILY LAW - II

PART A - (3 X 12 = 36 marks)

Answer any THREE of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு

விடையளிக்கவும்.

1. What is Mitakshara Hindu joint family? Explain the rights of a co-arcener under Mitakshara law.

மிதாக்ஷார இந்துக் கூட்டுக் குடும்பம் என்றால் என்ன? மிதாக்ஷார சட்டத்தின்கீழ் பங்குரிமையரின் உரிமைகளை விவரிக்கவும்.

2. Describe the testamentary and intestate succession of Christians.

கிறிஸ்தவர்களின் விருப்பாவணக் கொடை அளிக்கும் இறங்குரிமையையும், விருப்பாவணமின்றி இறந்தால் இருக்கக்கூடிய இறங்குரிமையையும் விளக்குக.

3. What is Stridhana property? Explain the law relating to succession to Stridhana Property before and after passing of the Hindu Succession Act, 1956.

சீதனச் சொத்து என்றால் என்ன? 1956–ஆம் ஆண்டின் இந்து இறங்குரிமைச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பும் பின்பும், சீதனச் சொத்தின் இறங்குரிமைகளுக்கான சட்டத்தைப் பற்றி விவரிக்கவும்.

4. Explain the law relating to disqualification of heirs under the Muslim Law of Inheritance.

முகமதிய இறங்குரிமைச் சட்டத்தின்கீழ் இறங்குரிமையரின் தகுதியின்மை பற்றிய சட்டத்தினை விளக்கவும்.

5. Set out the law laid down under the Indian Succession Act, 1925 relating to construction of Wills.

1925–ஆம் ஆண்டு இந்திய இறங்குரிமைச் சட்டத்தின்கீழ் விருப்பாவணங்களுக்குப் பொருள் விளக்கம் குறித்தான சட்ட விதிகளைக் கூறுக.

PART B - (8 X 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exeeeding 2 pages each:

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடை எழுதுக.

(a) Rule of Survivorship.

எஞ்சுநர் விதி.

(b) Notional partition.

கருத்தியலான பாகப்பிரிவினை.

(c) Onerous Bequest.

பொருட்பிணை உயில்வழிக்கொடை

(d) Doctrine of Radd under Shia Law.

ஷியா சட்டத்தின்கீழ் ரத் கோட்பாடு

(e) Mutawalli.

முத்தாவல்லி

(f) Universal legatee.

அண்டமளாவிய கொடை பெறுநர்

(g) Zihar.

ஜிஹார்.

(h) Agnate.

தந்தை வழியர்.

(i) Doctrine of Pious obligation.

கடமைப்பேணும் கடப்பாட்டுக் கோட்பாடு

(j) Obstructed heritage

தடையுடை மரபுரிமை

PART C - (4 X 4 = 16 Marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to relevant provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கு இரண்டு பக்கங்கள் மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை மேற்கோளிட்டு தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. A female Hindu died leaving her husband, two daughters, son's widow, father and mother. Divide her properties.

a) If it is her self acquired property

b) If she has obtained from her Father-in-law.

ஒரு இந்து பெண் தனது கணவன், இரண்டு மகள்கள், மகனுடைய விதவை, தந்தை மற்றும் தாய் ஆகியோரை விட்டு இறந்து விடுகிறார். அவருடைய சொத்தைப் பகிர்ந்தளிக்கவும்.

(அ) அது அவர் ஈட்டிய சொத்தாக இருந்தால்

(ஆ) அது அவருடைய மாமனார் வாயிலாகப் பெற்ற சொத்தாக இருந்தால்

8. 'A' a Hindu Joint Family member studied MBBS. all his expenses for study was paid by the Hindu joint family. He was subsequently employed in a famous Hispital and was paid a High salary of Rs. 2 lakh per month. After some years, he purchased a house property in Chennai worth about Rs. 2 crorers. His joint family claimed the house property as family property. Decide.

'அ' என்ற கூட்டுக் குடும்ப உறுப்பினர் மருத்துவப் பட்டப்படிப்பு படித்தார். அவர் படிப்பிற்கான அனைத்து செலவினையும் கூட்டுக்குடும்பம் செலுத்தியது. பின்னர் அவர் புகழ்பெற்ற மருத்துவமனையில் பணியில் சேர்ந்து மாத ஊதியமாக ரூ.2 லட்சம் பெற்றார். சில ஆண்டுகள் கழித்து, சென்னை நகரில் 2 கோடி ரூபாய் மதிப்பில் ஒரு வீட்டினை வாங்கினார். அவரது கூட்டுக்குடும்பம் அவரது வீட்டினை குடும்பச் சொத்தாக உரிமை கொண்டாடியது. தீர்வு காண்க.

9. A male christian died leaving behind his father, mother, widow, tow grand-sons through 1st predeceased son and three granddaughters through second predeceased son. Distribute his estate.

ஒரு ஆண் கிறித்துவர் தனது தந்தை, தாய், விதவை முன்னதாக இறந்துபோன முதல் மகன்வழி இரண்டு பேரன்கள் மற்றும் முன்னதாக இறந்துபோன இரண்டாவது மகன்வழி மூன்று பேத்திகள் ஆகியோரை விட்டு இறந்து விடுகிறார். அவருடைய சொத்தைப் பகிர்ந்தளிக்கவும்.

10. A Shia Mohammedan woman died leaving her husband, two sons and daughter. Divide her estate.

ஒரு ஷியா முகமதியப் பெண்மணி தனது கணவர், இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகளை விட்டு இறக்கிறார். அவரது சொத்தினை பகிர்ந்தளிக்கவும்.

11. A Hanafi Muslim died leaving behind her father, mother, husband and two daughters. Distribute her properties.

ஒரு ஹனபி முஸ்லீம் பெண் தனது தந்தை, தாய், கணவன் மற்றும் இரண்டு மகள்களை விட்டு இறந்து விடுகிறார். அவருடைய சொத்தைப் பகிர்ந்தளிக்கவும் .

12. 'A' bequeaths his legacy to 'B' and 'C' B dies first and then 'C' dies. Both 'B' and 'C' died before 'A', the testator. What happens to the legacy?

'அ' என்பவர் தனது சொத்தினை 'ஆ' மற்றும் 'இ' என்பவருக்கு விருப்பாவணம் வழியாக வழங்குகிறார். 'ஆ' முதலில் இறந்து விடுகிறார். பின்னர் 'இ' அதற்கு அடுத்து இறந்து விடுகிறார். 'ஆ' மற்றும் 'இ' இருவரும் விருப்பாவணத்தை எழுதிய 'அ' விற்கு முன்னதாக இறந்து விடுகின் றனர். விருப்பாவணக் கொடைக்கு நேரிடுவது என்ன?

-o0o-

1956-ஆம் ஆண்டின் இந்து வாரிசுமைச் சட்டத்தில் மைய அரசு கடந்த 2005-ஆம் ஆண்டில் கொண்டு வந்த முக்கிய சட்டத் திருத்தம் - ஒரு பார்வை

பங்குரிமைச் சொத்தில் அதாவது மூதாதையர் சொத்தில் ஆண் வாரிசுகளைப் போல பெண் வாரிசுகளுக்கும் சம உரிமை அளிக்க வகை செய்வதற்காக மைய அரசு கடந்த 2005–ஆம் ஆண்டில் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் 6–ஆவது பிரிவை முழுமையாகத் திருத்தியது. எனவே மாணவர்கள் 6–ஆம் பிரிவைப் பொறுத்து தேர்வில் வினா எதுவும் வினவப்பட்டால் பின்வரும் விளக்கத்தை எழுதுவது பொருத்தமானதாகும்.

1956–ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 6–இன்படி ஒரு இந்து பங்குரிமைச் (மூதாதையர்) சொத்தில் ஆண் வாரிசுகளுக்கு மட்டுமே உரிமை உள்ளது (Devolution of interest in coparcenary property). இச்சொத்தில் பெண் வாரிசுகளுக்கும் உரிமை கொடுப்பதற்காகவும், இதையொட்டி குறிப்பாக பிரிவு 6–ம், வேறு சில பிரிவுகளைத் திருத்துவதற்காகவும் மைய அரசு "இந்து வாரிசுரிமை (திருத்தச்) சட்டம், 2005'–அய் [The Hindu Succession (Amendment) Act, 2005] இயற்றியது. இது இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளாலும் 2005, ஆகஸ்டு மாதத்தில் நிறைவேற்றப்பட்டு, செப்டம்பர் 5–ஆம் தேதியில் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று, 9–ஆம் தேதி முதல் அமலுக்கு வந்தது.

இத்திருத்தச் சட்டம் கொண்டு வந்த திருத்தங்களின் முக்கிய சாரம் வருமாறு:–

1. இந்து கூட்டுக் குடும்பங்களில் பங்குரிமையர் (மூதாதையர்) சொத்துக்களில் பாகம் பெற உரிமையுள்ள ஒரு பங்காளிக்கு (பங்குரிமையர்) பிறக்கும் மகளும். மகனைப் போலவே தனது பிறப்பினாலேயே, அக்குடும்பத்தில் ஒரு பங்காளி ஆகின்றாள்.

2. இந்து கூட்டுக் குடும்ப பங்குரிமைச் சொத்தில் மகனுக்கு என்ன அளவு உரிமை உள்ளதோ, அதே அளவு உரிமையை மகளும் பெறுகிறாள்.

3. அதுபோல் கூட்டுக் குடும்பத்தினரின் உடைமையில் இருக்கும் வீட்டில் ஆண் வாரிசுகள் பாகப்பிரிவினை செய்து கொள்ள முன் வரும் வரை, பெண் வாரிசுகள் அந்த பாகப்பிரிவினை எதையும் கோர முடியாது என்று கூறும் இந்து வாரிசுமைச் சட்டத்தின் 23–ஆம் பிரிவையே மேற்படி திருத்தச் சட்டம் நீக்கி விட்டது.

4. ஆனால் இத்திருத்தங்கள், இத்திருத்தச் சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்பு திருமணம் செய்து கொண்ட மகளுக்குப் பொருந்தாது.

5. மேலும் 20–12–2004–ஆம் தேதிக்கு முன் செய்து கொண்ட பாகப் பிரிவினைகள் இத்திருத்தங்களால் பாதிப்படையாது.

6. மைய அரசின் இத்திருத்தச் சட்டத்தால் பங்குரிமைச் சொத்தில் வாரிசுரிமை பெறுவதில் மகன் மற்றும் மகளின் சமமாகியுள்ளது.

7. இத்திருத்தச் சட்டம் மூதாதையர் சொத்தில் மகள்களும் பங்கு பெறுவதற்கான உரிமை அளித்து தமிழக அரசு இயற்றிய தமிழ்நாடு சட்டம் 1/1990க்கு ஒப்பானது. இது 25–3–198–ஆம் தேதியிலிருந்து தமிழகத்தில் அமலில் உள்ளது. இது இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் 29–A, 29–B, 29–C ஆகிய மூன்று பிரிவுகளைச் செய்துள்ளது. நாம் இது குறித்து இப்புத்தகத்தின் 107–ஆம் பக்கத்தில் ஏற்கனவே விரிவாகக் கண்டுள்ளோம்.

திருத்தம் செய்யப்பட்ட பிரிவு 6 - ஆங்கில மூலம்

6. Devolution of interest in coparcenary property.-(1) On and from the commencement of the Hindu Succession (Amendment) Act, 2005, in a JointHindu family governed by the Mitakshara law, the daughter of a coparcener shall,-

(a) by birth become a coparcener in her own right in the same manner as the son;

(b) have the same rights in the coparcenary property as she would have had if she had been a son;

(c) be subject to the same liabilities in respect of the said coparcenary property as that of a son,

and any reference to a Hindu Mitakshara coparcener shall be deemed to include a reference to a daughter of a coparcener:

Provided that nothing contained in this sub-section shall affect or invalidated any disposition or alienation including any partition or testamentarydisposition of property which had taken place before the 20th day of December, 2004.

(2) Any property to which a female Hindu becomes entitled by virtue of sub- section (1) shall be held by her with the incidents of coparcenary ownership and shall be regarded, notwithstanding anything

contained in this Act or any otherlaw for the time being in force in, as property capable of being disposed of by her by testamentary disposition.

(3) Where a Hindu dies after the commencement of the Hindu Succession (Amendment) Act, 2005, his interest in the property of a Joint Hindu family governed by the Mitakshara law, shall devolve by testamentary or intestate succession, as the case may be, under this Act and not by survivorship, and the coparcenary property shall be deemed to have been divided as if a partition had taken place and,-

(a) the daughter is allotted the same share as is allotted to a son :

(b) the share of the pre-deceased son or a pre-deceased daughter, as they would have got had they been alive at the time of partition, shall be allotted to the surviving child of such pre-deceased son or of such pre-deceased daughter; and

(c) the share of the pre-deceased child of a pre-deceased son or of a pre- deceased daughter, as such child would have got had he or she been alive at the time of the partition, shall be allotted to the child of such pre-deceased child of the pre-deceased son or a pre-deceased daughter, as the case may be.

Explanation.- For the purposes of this sub-section, the interest of a Hindu Mitakshara coparcener shall be deemed to be the share in the property that would have been allotted to him if a partition of the property had taken place immediately before his death, irrespective of whether he was entitled to claim partition or not.

(4) After the commencement of the Hindu Succession (Amendment) Act, 2005, no court shall recognise any right to proceed against a son, grandson or great-grandson for the recovery of any debt due from his father, grandfather or great-grandfather solely on the ground of the pious obligation under the Hindu law, of such son, grandson or great-grandson to discharge any such debt:

Provided that in the case of any debt contracted before the commencement of the Hindu Succession (Amendment) Act, 2005, nothing contained in this sub-section shall affect-

(a) the right of any creditor to proceed against the son, grandson or great-grandson, as the case may be; or

(b) any alienation made in respect of or in satisfaction of, any such debt, and any such right or alienation shall be enforceable under the rule of pious obligation in the same manner and to the same extent as it would have been enforceable as if the Hindu Succession (Amendment) Act, 2005 had not been enacted.

Explanation.-For the purposes of clause (a), the expression "son", "grandson" or "great-grandson" shall be deemed to refer to the son, grandson or great-grandson, as the case may be, who was born or adopted prior to the commencement of the Hindu Succession (Amendment) Act, 2005.

(5) Nothing contained in this section shall apply to a partition, which has been effected before the 20th day of December, 2004.

Explanation.- For the purposes of this section "partition" means any partition made by execution of a deed of partition duly registered under the Registration Act, 1908 (16 of 1908) or partition effected by a decree of a court.

இந்து வாரிசுரிமை (திருத்தச்) சட்டம், 2005-இன் நோக்கங்கள் மற்றும் காரணகாரியங்களுக்கான அறிக்கை

STATEMENT OF OBJECTS AND REASONS [The Hindu Succession (Amendment) Act, 2005]

Section 6 of the Act deals with devolution of interest of a male Hindu in coparcenary property and recognises the rule of devolution by survivorship among the members of the coparcenary. The retention of the Mitakshara coparcenary property without including the females in it means that the females cannot inherit in ancestral property as their male counterparts do. The law by excluding the daughter from participating in the coparcenary ownership not only contributes to her discrimination on the ground of gender but also has led to oppression and negation of her

fundamental right of equality guaranteed by the Constitution having regard to the need to render social justice to women, the States of Andhra Pradesh, Tamil Nadu, Karnataka and Maharashtra have made necessary changes in the law giving equal right to daughters in Hindu Mitakshara coparcenary property. The Kerala Legislature has enacted the Kerala Joint Hindu Family System (Abolition) Act, 1975.

It is proposed to remove the discrimination as contained in section 6 of the Hindu Succession Act, 1956 by giving equal rights to daughters in the Hindu Mitakshara coparcenary property as the sons have.

மைய அரசின் சட்டத்திருத்தத்திற்கு முன்பிருந்த பிரிவு 6

6. Devolution of interest in coparcenary property.-When a male Hindu dies after the commencement of this Act, having at the time of his death an interest in a Mitakshara coparcenary property, his interest in the property shall devolve by survivorship upon the surviving members of the coparcenary and not in accordance with this Act:

Provided that, if the deceased had left him surviving a female relative specified in class I of the Schedule or a male relative specified in that class who claims through such female relative, the interest of the deceased in the Mitakshara coparcenary property shall devolve by testamentary or intestate succession, as the case may be, under this Act and not by survivorship.

Explanation I.-For the purposes of this section, the interest of a Hindu Mitakshara coparcener shall be deemed to be the share in the property that would have been allotted to him if a partition of the property had taken place immediately before his death, irrespective of whether he was entitled to claim partition or not.

Explanation 2.-Nothing contained in the proviso to this section shall be construed as enabling a person who has separated himself from the coparcenary before the death of the deceased or any of his heirs to claim on intestacy a share in the interest referred to therein.

-o0o-

1956-ஆம் ஆண்டின் இந்து வாரிசுமைச் சட்டத்தில் மைய அரசு கடந்த 2015-ஆம் ஆண்டில் கொண்டு வந்துள்ள சட்ட முன்வடிவு - ஒரு பார்வை

உயில் எழுதி வைக்காமல் இறந்து போகும் ஓர் இந்து பெண்ணின் சொத்து வாரிசு வழியில் யாரைச் சென்றடைய வேண்டும் என்பதைப் பொறுத்து இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் 15–ஆம் பிரிவு கூறுகிறது. இதில் சில முக்கியத் திருத்தங்களை மைய அரசு கடந்த 2015–ஆம் ஆண்டில் கொண்டு வந்தது. அவற்றை ஓர் சட்டமுன்வடிவாக மக்களவையில் கடந்த 2015–ஆம் ஆண்டு நவம்பர் 18–ஆம் தேதியில் அறிமுகப்படுத்தியது. இது இன்னும் விவாதத்தில் உள்ளது. இந்நூல் அச்சேறும் வரை சட்டமாக்கப்படவில்லை. எனினும் ஒரு புரிதலுக்காக இதனடியில் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது.

THE HINDU SUCCESSION (AMENDMENT) BILL, 2015

A

BILL

further to amend the Hindu Succession Act, 1956.

BE it enacted by Parliament in the Sixty-sixth Year of the Republic of India as follows:—

1. Short title and commencement.- (1) This Act may be called the Hindu Succession (Amendment) Act, 2015.

(2) It shall come into force on such date as the Central Government may, by notification in the Official Gazette, appoint.

2.Substitution of new section for section 15.- For section 15 of the Hindu Succession Act, 1956 (hereinafter referred to as the principal Act), the following section shall be substituted, namely:—

"15. General rules of succession in the case of

female Hindus.- (1) The property of a female Hindu dying intestate shall devolve accordingto the rules set out in section 16,—

(a) firstly, upon the sons and daughters (including the c hildren of any pre-deceased son or daughter);

(b) secondly, upon the mother, father and husband;

(c) thirdly, upon the heirs of the husband and the heirs of the father; and

(d) lastly, upon the heirs of the mother.

(2) Notwithstanding anything contained in sub-section (1),—

(a) any property inherited by a female Hindu from her father or mother shall devolve, in the absence of any son or daughter of the deceased (including the children of any pre-deceased son or daughter) not upon the other heirs referred to in sub-section (1) in the order specified therein, but upon the heirs of the father, if inherited from her father and upon the heirs of the mother, if inherited from her mother;

(b) any property inherited by a female Hindu from her husband or from her father-in-law shall devolve, in the absence of son or daughter begotten from the husband from whom or from whose father she inherited the property (including the children of any pre-deceased son or daugher) not upon the other heirs referred to in sub-section (1) in the order specified therein, but upon the heirs of the husband; and

(c) any property self-acquired by a female Hindu during the time of desertion shall devolve, in the absence of any son or daughter of the deceased (including the children of any pre-deceased son or daughter) not upon the other heirs referred to in sub-section (1) in the order specified therein, but upon the heirs of the father and the mother.".

3. Insertion of section 24.- After section 22 of the principal Act, the following section shall be inserted, namely:—

"23. Certain widows remarrying may not inherit as

widows.- Any heir who is related to an intestate as the widow of a pre-deceased son, the widow of a pre-deceased son of a pre-deceased son or the widow of a brother shall not be entitled to succeed to the property of the intestate as such widow, if on the date the succession opens, she has remarried.".

4. Amendment of the Schedule.- (1) In the Schedule to the principal Act—

(i) under the sub-heading "Class I", for the words "mother; son of a pre-deceased son; daughter of a pre-deceased son;", the words "mother; father; son of a pre-deceased son; daughter of a pre-deceased son; son of a pre-deceased son of a pre-deceased daughter; son of a pre-deceased daughter of a pre-deceased son;" shall be substituted.

(ii) for the sub-heading "Class II and entries I to IX thereunder", the following sub-heading and entries thereunder shall be substituted, namely:—

"Class II

I. (1) Brother, (2) sister.

II. (1) Brother's son, (2) sister's son, (3) brother's daughter, (4) sister's daughter.

III. Father's father; father's mother.

IV. Father's widow; brother's widow.

V. Father's brother; father's sister.

VI. Mother's father; mother's mother.

VII. Mother's brother; mother's sister."

இந்து வாரிசுரிமை (திருத்த) சட்டமுன்வடிவு, 2015-இன் நோக்கங்கள் மற்றும் காரணகாரியங்களுக்கான அறிக்கை

STATEMENT OF OBJECTS AND REASONS

[The Hindu Succession (Amendment) Bill, 2015]

The Hindu Succession Act, 1956 provides for certain criteria for the succession of the property of a female Hindu dying intestate. However, the same has not been implemented in its true spurt. The need is that property should not lose the real source from where the deceased female had inherited it.

The rules of inheritance prescribed under the Act are based on the principles of closeness in relationship and love and affection. As parents are as much near as husband, so both should be given equal importance during the succession of property of female Hindus dying intestate.

As female Hindu inherits property from parent as well as husband, therefore, after her death her property should be succeeded by both of them. There is no difference between mother and father as far as love and importance in life is concerned. So both should be treated equally during the succession and distribution of property of the female Hindu.

Moreover, one should not take the benefit of its own wrong. So property can not be given to the delinquent husband who deserted his wife in her lifetime.

The Bill therefore, seeks to amend the Hindu Succession Act, 1956 with a view to provide equal rights to the parents of a female Hindu dying intestate at par with the husband in succession to her property. The Bill also seeks to re-insert the provision pertaining to restriction on the inheritance of the certain widows, who, on the date of opening of succession has got remarried.

NEW DELHI; DUSHYANT CHAUTALA
November 18, 2015.

இது தொடர்பாக இந்து வாரிசுரிமைச் சட்டம், 1956-இல் தற்போதிருக்கும் சட்ட நிலைப்பாடு

15. General rules of succession in the case of female

Hindus.- (1) The property of a female Hindu dying intestate shall develove according to the rules set out in section 16,—

(a) firstly, upon the sons and daughters (including the children of any pre-deceased son or daughter) and the husband;

(b) secondly, upon the heirs of the husband;

(c) thirdly, upon the mother and father;

(d) fourthly, upon the heirs of the father; and

(e) lastly, upon the heirs of the mother.

(2) Notwithstanding anything contained in sub-section (1),—

(a) any property inherited by a female Hindu from her father or mother shall devolve, in the absence of any son or daughter of the deceased (including the children of any pre-deceased son or daughter) not upon the other heirs referred to in sub-section (1) in the order specified therein, but upon the heirs of the fathers; and

(b) any property inherited by a female Hindu from her husband or from her father-in-law shall devlove, in the absence of any son or daughter of the deceased (including the children of any predeceased son or daughter) not upon the other heirs referred to in sub-section (1) in the order specified therein, but upon the heirs of the husband.

THE SCHEDULE

[Section 8]

HEIRS IN CLASS I AND CLASS II

CLASS I

Son; daughter; widow; mother; son of a pre-deceased son; daughter of a pre-deceased son; son of a pre-deceased daughter; daughter of a pre-deceased daughter; widow of a pre-deceased son; son of a pre-deceased son of a pre-deceased

son; daughter of a pre-deceased son of a pre-deceased son; widow of a pre-deceased son of a pre-deceased son.

CLASS II

I. Father.

II. (1) Son's daughter's son, (2) son's daughter's daughter, (3) brother, (4) sister.

III. (1) Daughter's son's son, (2) daughter's son's daughter, (3) daughter's daughter's son, (4) daughter's daughter's daughter.

IV. (1) Brother's son, (2) sister's son, (3) brother's daughter, (4) sister's daughter.

V. Father's father, father's mother

VI. Father's widow; brother's widow.

VII. Father's brother; father's sister.

VIII. Mother's father; mother's mother.

IX. Mother's brother; mother's sister.

Explanation:— In this Schedule, references to a brother or sister do not include references to a brother or sister by uterine blood.

-o0o-

தேர்வில் அடிக்கடி வினாக்கள் கேட்கப்படும் பாடப் பகுதிகள்

குடும்பச் சட்டம் II எனும் பாடம், முக்கியமாக இந்துக்கள், இசுலாமியர்கள், கிறுத்தவர்கள் எனும் மும்மதத்தவரின் மரபுமுறை இறங்குரிமையை மையமாகக் கொண்டதாகும். எனவே இந்து வாரிசுரிமைச் சட்டம், இசுலாமியர்களின் (சுன்னீ மற்றும் ஷீயா பிரிவினரின்) இறங்குரிமைச் சட்டம், கிறுத்தவர்களுக்குப் பொருந்தக் கூடிய இந்திய வாரிசுரிமைச் சட்டம் ஆகியவற்றை தெளிவாகப் படித்தறியவும். இவற்றிலிருந்து நெடு வினாக்கள் கேட்கப்படுகின்றன. அதே சமயத்தில், இவற் றிலிருந்துதான் பிரச்சனைகளுக்கு தீர்வு காண் வினாக்களும் கேட்கப்படுகின்றன.

பிரச்சனைகளைப் பொறுத்தவரை அவரவர் மதத்திற்கு பொருந்தக் கூடிய சட்டப் பிரிவுகளின்படி வாரிசுகளுக்குச் சொத்தைப் பிரித்துக் கொடுக்க வேண்டும். இசுலாமியர்களின் இறங்குரிமைச் சொத்து பங்கீட்டு முறை சற்று கடினமானது. எனவே சற்று கூடுதல் கவனம் கொடுத்து படிக்கவும்.

மேற்கண்டவவை போக, இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பழைய தொகுக்கப் படாத சட்டத்திலிருந்து, மிதாக்ஷரா மறறும் தாயபாக முறைக்கும் உள்ள வேறுபாடுகள் வினவப்படலாம்.

1956–ன் புதிய சட்டத்திலிருந்து பிரிவு 6–ன் கீழான மிதாக்ஷரா பங்குரிமைச் சொத்தின் இறங்குரிமை (குறிப்பாக இந்த பிரிவு 6–இல் மைய அரசு 2005–ஆம் ஆண்டில் கொண்டு வந்த சட்டத் திருத்தம் பற்றி கேட்கப்படலாம். இது பக்கம் 387–இல் கொடுக்கப்பட்டுள்ள. ஒரு முறை படித்துக் கொள்வது நலம்), அலிய சந்தானச் சட்டம், மருமக்கட்தாயச் சட்டம், வாரிசுரிமை இறக்கம் குறித்த பொது விதிகள், சீதனம், இந்து மகளிர் சொத்துரிமை ஆகிய பகுதிகளிலிருந்து வினாக்களை எதிர் பார்க்கலாம்.

இசுலாமியச் சட்டத்தைப் பொறுத்து, அவர்களது கொடையளிக்கும் முறை, உயில் குறித்த சட்ட விதிகள், வக்பு, அண்டைச் சொத்தில் முற்படு விலை கொள் உரிமை ஆகியவற்றிலிருந்து ஒரு நெடுவினாவையும், குறுகிய விடை எழுதுக வினாக்களையும் எதிர்நோக்கலாம்.

இந்திய வாரிசுரிமைச் சட்டத்திலிருந்து, வாழ்வகம், உயில் இல்வழி வாரிசுரிமை, உயிலிணைப்பு, உயிலின் பொருள் விளக்க விதிகள், உயில் வழிக் கொடை, இறந்தவரின் சொத்தை நிருவகித்தல் ஆகியவற்றிலிருந்து வினாக்களை எதிர் நோக்கலாம். அவற்றிலும் குறிப்பாக உயில்மெய்ப்பிதழ், நிருவாக உரிமைப் பத்திரம், வாரிசுரிமைச் சான்றிதழ் எனும் மூன்று தலைப்புகளில் எவையேனும் ஒன்றின் கீழ் நெடுவினா ஒன்றை பெரும்பாலும் எதிர் நோக்கலாம். உயில் வழிக் கொடை எனும் தலைப்பிலிருந்து குறுகிய விடை வினாக்களை எதிர்பார்க்கலாம்.

எப்படித் தேர்வு எழுத வேண்டும்? - சில முக்கிய குறிப்புகள்

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் பல்கலைக்கழக வினாத்தாளின்படி மதிப்பெண் ஒதுக்கீட்டு முறை

Part - A –ல் நெடு வினாக்கள் அய்ந்தில், நீங்கள் எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க வேண்டும். இதற்கு தலா 12 மதிப் பெண்கள். Part - B –ல் உள்ள குறுகிய விடை எழுதுக வினாக்கள் பத்தில், எட்டிற்கு விடையளிக்க வேண்டும். இதற்கு தலா 6 மதிப்பெண்கள். Part - C –ல் உள்ள ஆறு பிரச்சனைகளில், நான்கிற்கு நீங்கள் தீர்வு காண வேண்டும். இதற்கு தலா 4 மதிப்பெண்கள். பிரச்சனை வினா இல்லாத வினாத் தாள்களில், Part - A –ல் நெடு வினாக்கள் அய்ந்தில், நீங்கள் எவையேனும் மூன்றிற்கு விடையளிக்க வேண்டும். இதற்கு தலா 12 மதிப்பெண்கள். Part - B –ல் உள்ள சிறு குறிப்பு எழுதுக வினாக்கள் பத்தில், எட்டுக்கு விடையளிக்க வேண்டும். இதற்கு தலா 6 மதிப்பெண்கள். Part - C –ல் உள்ள சுருக்கமாக விடையளிக்க வினாக்கள் ஆறில், நான்கிற்கு விடையளிக்க வேண்டும். இதற்கு தலா 4 மதிப்பெண்கள்.

வினாத்தாளை கையில் வாங்கியவுடன் செய்ய வேண்டியவை

தேர்வில் வினாத்தாள் கையில் கொடுக்கப்பட்டவுடன், வினாத்தாளை ஒரு முறை நன்கு படித்துக் கொள்ளவும். மறக்காமல் ஆங்கில மொழி பெயர்ப்பு வினாக்களையும் படித்துக் கொள்ளவும். ஏனெனில் ஒரே ஆங்கில சொல்லுக்கு தமிழில் பல சொல்வடிவங்கள் இருப்பதுண்டு. ஆங்கில வினாவை படிக்கும் பொழுது, அதன் சரியான சொல்வடிவத்தை நாம் இனம் கண்டு கொள்ளலாம். பின்னர் நன்கு விடை தெரிந்த வினாக்களை தேர்வு செய்து கொண்டு அதற்கு விடையளிக்க ஆரம்பிக்கவும். குறிப்பாக எத்தனை பக்கங்களுக்குள் விடையளிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளோமோ அதற்குள் உங்கள் விடைகளை எழுதி முடித்துவிடவும்.

நெடு வினாவிற்கு விடையளிக்கும் முறை

ஒரு நெடு வினாவிற்கு விடையளிக்கும் பொழுது முதலில் அந்த வினா குறித்த ஒரு சுருக்கமான **முன்னுரை (Introduction)** கொடுக்கவும். பின்னர், அதற்குரிய **சட்டப் பிரிவுகள் (Legal Provisions)** ஏதேனும் இருப்பின், அவற்றின் விளக்கத்தைக் குறிப்பிடவும் பின்னர், **எடுத்துக்காட்டுகள் (Illustrations)** ஏதேனும் இருப்பின் அவற்றை அடுத்த பத்தியில் குறிப்பிடலாம். அடுத்து, அது குறித்த **முக்கியமான வழக்குகள் (Important Case Laws)** இரண்டு அல்லது மூன்றை குறிப்பிடவும். இதற்கடுத்து, வினாவில் **ஆய்க (Examine), விவாதிக்க (Dicuss), விளக்குக (Explain), திறனாய்வு செய்க (Elucidate)** என்று கேட்கப்பட்டிருந்தால், சம்பந்தப்பட்ட அதே தலைப்பின் கீழ் மேலும் சில கருத்துகளை குறிப்பிடலாம். முடிவாக ஒரு சிறிய **முடிவுரை (Conclusion)** கொடுக்கவும். அது உங்கள் சொந்தக் கருத்தாகவும் இருக்கலாம் அல்லது பரிந்துரையாகவும் இருக்கலாம். தேவைப்படும் இடங்களில் சமீப கால நிகழ்வுகளையும் குறிப்பிடலாம்.

குறுகிய விடை எழுதுக வினாவிற்கு விடையளிக்கும் முறை

குறுகிய விடை எழுதுக வினாவிற்கும் மேற்கண்ட முறையிலேயே விடையளிக்க லாம். ஆனால் விரிவான விடை வேண்டியதில்லை. பொதுவாக தேர்வில் எத்தனை வினாக்களுக்கு விடையளிக்க கூறப்பட்டுள்ளதோ, அத்தனை வினாக்களுக்கும் விடையளித்து விட வேண்டும். எந்த வினாவையும் விட்டுவிடக் கூடாது. அதிலும் குறிப்பாக இந்த குறுகிய விடை எழுதுக வினாவை விட்டுவிடலாகாது. ஏனெனில் மதிப்பெண்களை கணிசமான அளவில் கூட்டித் தருவது, குறுகிய விடை எழுதுக வினாக்களே.

பிரச்சனை வினாக்களுக்கு தீர்வளிக்கும் முறை

அடுத்து பிரச்சனை வினாக்களுக்கு விடையளிக்கும் பொழுது, முதலில் தெளிவாக தீர்வு தெரிந்த வினாக்களுக்கு விடையளிக்கவும். அந்த தீர்வுக்கு உண்டான காரணங்களை அவசியம் குறிப்பிட வேண்டும். அதற்குண்டான சட்ட வகைமுறைகளை குறிப்பிட வேண்டும். மேலும் அந்த பிரச்சனை வடிவிலேயே ஏதேனும் வழக்குகள் ஏற்கனவே முடிவுற்று இருப்பின், அந்த வழக்குகளை அவசியம் குறிப்பிட்டால்தான், நிறைவான மதிப்பெண்கள் கிட்டும். ஒருவேளை, உங்களுக்கு அந்த பிரச்சனைக்குண்டான சரியான தீர்வு தெரியவில்லை என்றால், தயை கூர்ந்து அவ்வினாவை விட்டுவிட வேண்டாம். ஒரு பிரச்சனைக்கு "உண்டு" அல்லது "இல்லை" என்ற இரண்டு தீர்வுகள் உண்டு. அந்த இரண்டு தீர்வுகளுக்காகவும் விவாதம் செய்யலாம். அதற்கு ஓரளவு தெரிந்த மற்றும் தொடர்புடைய சட்ட வகைமுறைகளைக் கொண்டு அப்பிரச்சனையை விவாதித்து எழுதலாம். வேறு வழியில்லை.

பொதுவாக கடைப்பிடிக்க வேண்டியவை

விடைகளை எழுதிய பின்,

(1) ஒருமுறை உங்கள் விடைத்தாளை புரட்டிப் பாருங்கள்.

(2) வினா எண்ணிற்கான விடைதானா என்பதை சரிபாருங்கள்.

(3) பக்கத்திற்குண்டான எண் இடுங்கள்.

முடிவாக, **"எவ்வளவு படித்தோம்"** என்பதை விட, **"எப்படித் தேர்வு எழுதினோம்" (Way of Presentation)** என்பதுதான் முக்கியம். **"எத்தனை பக்கங்கள் எழுதினோம்"** என்பதைவிட **"எத்தனை தொடர்புடைய மற்றும் முக்கியமான விபரங்களைக் குறிப் பிட்டோம்"** என்பது இன்றியமையாதது.

வெற்றி உங்களுக்கே!

இதுகாறும் நாம் கண்டவையே தேர்வு வெற்றியின் திறவுகோல். எனவே நம்பிக்கையுடன் படியுங்கள். நன்றாக தேர்வெழுதுங்கள். பிறகென்ன? வெற்றி உங்கள் கையில். **வாழ்த்துகளுடன்!**

–ஆசிரியர்.